தமிழக வரலாறு

பேராசிரியர்
அறுவர் சொற்பொழிவுகள்

கழக வெளியீடு

கழக வெளியீடு : சுஅ௬

தமிழக வரலாறு

[பேராசிரியர் அறுவர் சொற்பொழிவுகள்]

[24-1-1954-ல் தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தின் எட்டாந் தமிழ்த் திருவிழாவில் நிகழ்த்தியவை.]

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Jan., 1954.

THAMIZHAGA VARALARU

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office:
24. EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

நற்றிணை நல்ல குறுந்தொகை முதலிய எட்டுத் தொகை நூல்கள், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய பத்துப்பாட்டு நூல்களின் மாநாடுகள் நடாத்தி, அம்மாநாடுகளில் முத்தமிழ்த் துறையின் முறைபோகிய தமிழ்ப்புலவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளையெல்லாம் எழுதி வாங்கி, அவ்வவற்றின் பெயரால் ஆறு நூல்கள் வெளியிட்டிருப்பதைத் தமிழகம் நன்கு அறியும். சங்க இலக்கியங்களில் பொதிந்தமைந்துள்ள சீரிய கூரிய தீஞ்சொல் வளங்களையும், அரியபெரிய அஃகி அகன்ற நுண்கருத்துக்களையும் எளிதில் அறிந்து இன்புறற்கு இச் சொற்பொழிவுநூல்கள் பெருந்துணையாக இருக்கின்றன. எனவே தமிழை விரும்பிக்கற்கும் மாணவர்களும் தமிழ்ப் பேரன்பர்களும் அவைகளைப் பெரிதும் பாராட்டுகின்றனர்.

இவைகளை அறிந்த அன்பர்களுக்குத் துணையாக அரசியல் முறையை—கீழ் மேல்நாட்டு அரசியல்களை—நன்கு தெரிந்துகோடற்கு ஏற்றனவாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்று வல்ல பேரறிஞர்கள் ஐவர்களைக்கொண்டு சொற்பொழிவாற்றச்செய்து, அவைகளையும் எழுதி வாங்கிக் கடந்த ஆண்டில் 'அரசியலறிவு' என்னும் பெயரால் தனி நூலாக வெளியிட்டுள்ளோம். அந்நூலும் தமிழ்கூறு நல்லுலகமெங்கணுஞ் சென்று அறிஞர்களால் போற்றுதல் பெற்றுள்ளது.

இச் சீர்த்தகு விழுப்பமிக்க நூல்களைக் கற்றுத் தெளிந்த மக்கட்கு விருந்தாகத் தன்னாட்சிபெற்ற நாட்டில்-குடியரசு நிலவும் நம் நாட்டில்—'வண்புகழ் மூவர் தண்பொழில்வரைப்' பென ஆசிரியர் தொல்காப்பியரால் பாராட்டப்பெற்ற நம் தமிழக வரலாற்றை அறிந்துணர்வது அரியவற்றுளெல்லாம் அரிதன்றோ?

எனவே, இந் நற்கருத்தைத் திட்பமாகக்கொண்டு, நம் பழங்காலத் தமிழகம் எந்நிலையில் இருந்தது; பிற்காலம் எவ்வாறு நிகழ்ந்தது என்பனவற்றை நன்கு அறிந்து கோடற்கு வாய்ப்பாக நூலறிவும் உலகியலறிவும் பேராசிரியக் கிழமையும் நுண்மாண் நுழைபுலச் செம்மையும் வாய்ந்த அறிஞர் அறுவர்களைக்கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தச்செய்து அப்பொழிவுகளை எழுதி வாங்கித் 'தமிழக வரலாறு' என்னும் பெயர் அமைத்து வெளியிட்டுள்ளோம்.

இதன்கண், நம் பழந்தமிழகத்தில் ஆட்சி செலுத்திய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் செங்கோல் மாட்சிச் சிறப்பும், பிற்காலம் பல்லவர், நாயக்கர் ஆட்சிமுறைகளின் நிலைகளையும், அப்பால் ஆங்கிலேயர் ஆட்சித்தன்மைகளையும் அவ்வக்கால நாகரிகமுறை, அறம், மறம், சீர் சிறப்பு முதலிய பலவும் நன்கு விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

இதனுன், இந்நூல் கல்லூரி மாணவர்கட்கும் வித்துவான் தேர்வுக்குப் பயிலும் மாணவர்கட்கும் பாடநூலாக வைக்கும் செப்பமுடையது. இந்நூலின் துணையால் பழங்காலத் தமிழகத்தன்மையையும் அவ்வக்கால வரையறையுடன் தெரிந்து தெளிய ஏதுவாகும்.

தமிழக வரலாற்றுச் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஒப்புக்கொண்டதோடு அவைகளை நூலுருவாக்குதற்கு முன்னரேயே வரைந்துதவிய பேராசிரியர்கள் அறுவர்கட்கும், இச்சொற்பொழிவு நூலுக்கு முன்னுரை வரைந்துதவிய பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை, எம். ஏ., எல். டி. அவர்கட்கும், இச் சொற்பொழிவுகளைத் தமிழ்த் திருவிழாவில் மிகவுஞ் சீர்த்தகுமுறையில் நிகழ்த்த வாய்ப்பளித்த தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தார்க்கும் கழகத்தாரின் உளங்கனிந்த நன்றி உரிமையாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அணிந்துரை

எங்கள் அருணகிரி இசைக்கழகம் 1938-லே தொடங்கியது; தமிழறிவையும் சமயவுணர்வையும் பாதுகாத்து வளர்ப்பது அதன் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் முயற்சியிலே, கழகமேடையில் ஞாயிறுதோறும் ஆராய்ச்சி விரிவுரைகளுக்கு இடம் வகுத்தும், நூலரங்கு, கவிமன்றங்களை நிறுவிப் புதிய நூல்களையும் கவிதைகளையும் வெளியிட்டும் வருகின்றது. நாடோடிப் பாடல்களுக்குப் புத்துயிர் தந்தும், நாடகங்கள் நடித்தும், வருடந்தோறும் தமிழ் விழாக்களை நடத்தியும்—இவ்வாறு முத்தமிழ்த் துறைகளிலும் முயன்று பணிசெய்து வருகின்றது.

எங்கள் நான்காம் தமிழ்த் திருவிழாவிலே (26-1-50) ஒருநாள் சொற்பொழிவுகளைத் தொகுத்துப் புத்தகமாகத் ‘தமிழ்க் கருவூலம்’ என்று வெளியிட்டோம். ‘மாயூரம் வேதநாயகம் பிள்ளை—வரலாறும் நூலாராய்ச்சியும்’ என்ற நூலை, கு. அருணாசலக் கவுண்டரவர்களைக்கொண்டு எழுதுவித்து ஆறாந் திருவிழாவிலே (4-2-52) அரங்கேற்றினோம். ஏழாம் விழாவிலே ‘அரசியலறிவு’ என்ற சொற்பொழிவு நூலை வெளிக்கொணர்ந்தோம். எட்டாவது தமிழ்விழாவிலே (23, 24, 28-1-54) மூன்று நாள் சொற்பொழிவுகளைத் தொகுத்து மூன்று தனி நூல்களாகத் தமிழ் உலகுக்குத் தருகின்றோம். அவையாவன :

௧. வழிகாட்டும் வள்ளுவர்

௨. தமிழக வரலாறு

௩. இந்திய விஞ்ஞானிகள்

இவற்றுள், 'தமிழக வரலாறு' என்பது தமிழ்த் திரு விழாவின் 24-1-54 ஒருநாள் நிகழ்ச்சியிலமைந்த எங்கள் பேராசிரியர்கள் அறுவருடைய ஆராய்ச்சிச் சொற் பொழிவுகளின் தொகுப்பு. இதன் ஆசிரியர்கள் நெல்லை மாவட்டத்திலே பெரும் பெயரும் பிரசித்தியும் பெற்ற வர்கள்; சரித்திர நிபுணர்கள். இவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியுடையோம்.

தமிழகத்துக்கு வரலாறு கணிப்பதிலே இம்முயற்சி முதல் முயற்சி; முன்மாதிரியாய்ப் பின் வருபவர்க்குப் பயன்படவேண்டும் என்ற எங்கள் விருப்பத்திலே சமைந்த இந்த நூலைத் தங்கள் வெளியீடாக ஏற்று விரைந்து அச்சியற்றிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும், கழக ஆட்சி யாளரும் தமிழ்நூற் புரவலரும் எங்கள் தளபதியும் ஆகிய வ. சுப்பையாப் பிள்ளை அவர்களுக்கும் நாங்கள் மிகுந்த கடப்பாடு உடையோம்.

தருமையருள்பெற நெல்லை அருணகிரி இசைக் கழகம், திருநெல்வேலிச் சந்திப்பு 24—1—1954.	இராம. கனகசபாபதி, அமைச்சர்.

உள்ளுறை

படங்கள்



பன்மொழிப் புலவர்,
திரு. கா. அப்பாத்துரை அவர்கள்,
எம்.ஏ., எல்.டி., (விசாரத்)

முன்னுரை

[பன்மொழிப் புலவர், திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை
அவர்கள் எம். ஏ. எல்.டி., (விசாரத்)]

வரலாறுகண்ட முதல் நிலம் தமிழகம். ஆனால் நாம் அதற்கு இன்னும் முழுதுறழ் வரலாறு காணவில்லை. அது எந்நாட்டுக்கும் முற்பட்ட, எந்நாட்டையும்விட நீடித்த, தொடர்ச்சியான வரலாறு உடையது. ஆயினும் உலகில் வரலாற்றாராய்ச்சி எழுந்த காலத்தில், அது நாடிழந்து, எல்லையழிந்து, மொழியாட்சி குலைந்து நின்றது. இன்னும் அது தனிநாடாகவோ, தனிமாகாணமாகவோ கூட அமையவில்லை. ஆயிர, பதினாயிரக் கணக்கான ஆண்டுகளாக, அது தன் மொழி வைத்துத் தன்னை ஆண்டிருக்கிறது. தன்மொழி வைத்து நிலவுலகும் கடலுலகும் ஆண்டிருக்கிறது. இந்நிலையை அது மீண்டும் விரைவில் அடைவது உறுதி. கனவுருவில் அத்தகைய தமிழகம் நம் கண்முன் இப்போதே சுடர் வீசுகின்றது. நனவுருவத் தவிசில் நாம் அதனை விரைவில் ஏற்றப்போவது திண்ணம். அத்தவிசின் தொடக்கப்படிகளில் ஒன்றாகவே, நாம் தமிழகத்தின் வரலாறு காண முனைந்திருக்கிறோம்.

வரலாறு ஒரு நாட்டின் வேர். வாழ்வு அதன் நிலம். வரலாற்று வழிவந்த பண்பு அதன் உரம். நாட்டு வாழ்வின் வளம் இம்மூன்றின் இயைபு. மக்கள் ஆர்வம் என்னும் வான்துளி பெற்று, நாட்டு வாழ்வாகிய பயிர் மேனோக்கி நிமிர்ந்துயர்ந்து மனித நாகரிகம் வளர்க்கிறது. ஒவ்வொரு நாட்டு வாழ்வும் மனித நாகரிகம் என்னும் பேராற்றொழுக்குக்கு வளந்தரும் ஒரு தனி நீரூற்றாய், ஒன்றுடன் ஒன்று இயைந்தும், ஒன்றினை ஒன்று நிரப்பியும் இயல்கின்றது.

வரலாற்றுக்கே ஒரு வரலாறு உண்டு என்னலாம். தொடக்கத்தில் அது கற்பனைக் கதைகளாய், புராண

மரபுகளாய் இயங்கிற்று. இக்கட்டுக்கதைகளை விட்டுத் தொலைத்த பின்னும், அது மன்னர் பெருமக்களின் பட்டியலாய், அவர்கள் போர்கள், வெற்றி தோல்விகள் ஆகிய நிகழ்ச்சிகளின் இணைகோப்பாய் இயன்றது. ஆனல் இன்று உண்மை வரலாறு எந்தத் தனிமனிதர் வாழ்வாகவோ, மன்னர் பெருமக்கள் வாழ்வாகவோ கருதப்படவில்லை. நிகழ்ச்சிகளின் கோவையாகக்கூட அது கணிக்கப்படவில்லை. ஏனெனில் இவை வரலாற்றின் பின்னணி வண்ணம். அதன் சட்டம் அதன் உடல்மட்டுமே. இவை கடந்து அது நாட்டுப் பண்பின் வளர்ச்சி தளர்ச்சிகளை, நாகரிகக் கூறுகளின் தோற்ற வளர்ச்சி ஒடுக்கங்களை உணர்த்துவதாக அமையவேண்டும். நிகழ்ச்சிகளை அது காரண காரியத்தொடர்புபடுத்தி இணைத்து, நாட்டு வாழ்வாகிய ஆற்றொழுக்கின் விளக்க நெறிகளாக்கவேண்டும். ஒரு நாட்டு வாழ்வு இவ்வகையில் அந்நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் பண்பாகவும், பிற நாட்டு வாழ்வுகளுக்கு வளமூட்டும் பண்பாடாகவும் அமையவேண்டும்.

தமிழ்நாட்டு வரலாறு இம்முறையில் எழுதப்பட்டால், அது தமிழகத்தின் வரலாருக மட்டும் அமையாது. அது உலக வரலாற்றின் ஒரு தலையூற்ருக, உலக நாகரிகத்தின் ஒரு வளர்ப்புப் பண்ணையாக, உலகின் வருங்காலத்துக்குரிய ஒப்பற்ற ஒருவழிகாட்டியாக அமையும். அத்தகைய வரலாற்றுக்குரிய தசையும் குருதியும் நம்மிடம் உண்டு. தமிழரின் பண்பும் பண்பாடும் வளர்ந்து தளர்ந்து மறுமலர்ச்சி பெற்றுப் புத்துயிர் பெற்றோங்குவதைக் கண்ணாடி போல நமக்குக் காட்டும் திறமுடைய, இரண்டாயிர ஆண்டுக்கு மேற்பட்ட தொடர்ச்சியுடைய தமிழ் இலக்கியமே அது. ஆயினும் இத்தசைக்கு உருவும், குருதிக்கு விசையும் ஊட்டவல்ல வரலாற்றின் சட்டத்தை நாம் அமைத்தாகவேண்டும். இச்சட்டத்தில் காலவரையறையும் முன்பின் வரிசை முறையும் தலைமையான இடம்பெறுவன. இலக்கியத்தால் நாம் அறியும் செய்திகளுக்கு இன்னும்

இச்சட்டம் முழுவதும் கிட்டாததாலேயே நாம் முழுதுறழ் வரலாறு காணமுடியவில்லை. பழம் பொருளாராய்ச்சியும், கல்வெட்டுக்களும், பட்டயங்களும், வெளிநாட்டுத் தொடர்பு ஆதாரங்களும், நாணய ஆராய்ச்சியும், மொழியாராய்ச்சியும், இன ஆராய்ச்சியும் பிறவும் படிப்படியாக இச் சட்டத்தை நமக்கு அளித்து வருகின்றன. நாம் காணவிருக்கும் வரலாறு அச்சட்டத்தின் முழுநிறைவு நாடிய முதல் தொகுப்பேயாகும். தமிழகம் தன்னாட்சி பெற்றபின், அரசியலும் மக்களும், அறிஞரும் கலைஞரும், ஆராய்ச்சியாளரும் தொகுப்பாளரும் இவ்வரலாற்றுச் சட்டத் தொகுப்பு வேலையிலும், அதன் விரியும் விளக்கமுமான மெய் வரலாற்று வேலையிலும் பேரூக்கம் காட்டப்போவது உறுதி.

இன்றைய தமிழகம் சென்னை மாகாணம் அல்லது சென்னை அரசியலில், ஆந்திரம் நீங்கிய 'எஞ்சிய' பகுதியில், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை உள்ளிட்ட திருச்சிராப்பள்ளி, தஞ்சை, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய முழு மாவட்டங்களாகவும்; ஃபிரஞ்சு ஆட்சிப்பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால் ஆகிய துணுக்குகளாகவும்; பிரிந்த ஆந்திரத்தில் சித்தூர் மாவட்டத்தின் சில வட்டங்களாகவும்; திருவாங்கூர் கொச்சியரசின் தெற்கு, நடு, வடகிழக்கு, வடக்குப்பகுதிகளிலுள்ள சில வட்டங்களாகவும்; கன்னடநாட்டு மைசூர்ப் பகுதியிலும், ஆந்திரநாட்டு நெல்லூர்ப்பகுதியிலும் உள்ள சில துண்டுத் துணுக்குகளாகவும் சிதறுண்டு பிரிந்து இயல்கின்றது. மற்றும் பண்டை நாளிலிருந்தே தமிழகத்தின் ஒரு கடல் கடந்த பகுதியாக வடஇலங்கையும், கடல் கடந்த தமிழர் வாழ்பகுதிகளாக இலங்கை, மலாயா, பர்மா, தென் ஆபிரிக்கா, கயானா போன்ற நிலங்களும்; மோரிசு, ஃவிஜி, ஜமைக்கா, அந்தமான் முதலிய தீவுகளும் இயங்குகின்றன. தமிழ், தமிழிலக்கியம், தமிழகம், தமிழ்ப்பண்பு ஆகியவற்றின் வரலாற்றில் இவ்வெல்லாப்பகுதிகளிலுமுள்ள மக்களுக்கும் தனி ஆர்வம் உண்டு.

தமிழகம் கடந்து விந்தியமலை வரையிலும் அதற்கப்பாலும் தமிழின மொழிகளும் தமிழினக்கலைகளும் பண்பாடுகளும் பரவியுள்ளன. தமிழகத்தின் கலையியக்கங்களும் சமயப் பண்பாட்டியக்கங்களும் அரசியலியக்கங்களும் பல தடவை தென்னாடு கடந்து பொங்கிப் பொதுளிச் சிந்து கங்கைவெளிகளில் அலைபாய்ந்ததுண்டு. வங்கநாடும் மராடமும், கூர்ச்சரமும் கலிங்கமும் இவ்வியக்கங்களால் கலையுயிர்ப்புப் பெற்றதுண்டு. தென்கிழக்காசியாவிலும் கிழக்காசியாவிலும், மேலை ஆசியாவிலும் நடுக்கடல் சூழ் உலகிலும், ஆபிரிக்க, ஐரோப்பியத் தலைநிலங்களிலும் அதன் வாணிக, தொழில், பண்பாட்டு ஒளியலைகள் சென்று மோதித் தம் தடம் பொறித்ததுண்டு.

தமிழகம் சூழ்ந்த நிலங்களின் வரலாற்றுச் செறிவையும், பண்பாட்டுச் செறிவையும் நாம் தமிழக வரலாற்றிலேயே காணலாம். அதன் தொகை வகை விரிகளைத் தென்னாட்டு வரலாற்றிலும், இந்தியா - பாகிஸ்தான் வரலாறுகளிலும், மாநில எல்லை கடந்த பூநில வரலாறுகளிலும் காணலாம். வரலாறு தரும் இவ் ஒளியே அணிமைக் காலங்களில் பல வரலாற்றாசிரியர்களின் வரலாற்றுக் கண் பார்வையை மறைத்து மழுங்கவைத்துள்ளது. தமிழகம் ஒரு தனிநாடு என்பதை அவர்கள் காண்பதில்லை. அதுமட்டுமன்று. தமிழகம் பலநாடு கொண்ட ஒரு மாநிலத்தின் உயிர்ப்பகுதியாகக் கூட அவர்கள் கண்களில் மிளிர்வதில்லை. இந்திய வரலாறு எழுதுவோர் அவ்வரலாற்றில் அதற்கு முதலில் இடந்தரவே மறந்தனர். இடந்தர எண்ணியபோதும், அதை ஒட்டாத ஒரு வாலாக ஒட்டவைக்கவே முனைந்தனர். தலையை வாலாக்கி, வாலைத் தலையாக்கி, வாலாட ஆடும் தலையாக அதைக் கருதினால், அது எவ்வாறு ஒட்டும்! இதனால் வரலாற்று மாணவர்க்குக் கால வரிசைகூடக் குழப்பமடைகிறது. ஏனென்றால், தமிழகத்தின் தொடக்க வரலாறு சிதைக்கப்பட்டும் வேண்டாவெறுப்புடனும் பிறபுலங்களின் வரலாற்றிறுதியுடன் இணைக்கப்படுகிறது. தமிழகம் ஒருநாடு

அன்று என்பதைச் சொல்லாமல் சொல்லி, விள்ளாமல் கொள்ளவைக்கும் இம்மாயத்திறங் கண்டு வருங்கால உலகம் நகைக்காமல் நகைக்கும் என்பது உறுதி.

தமிழகத்தின் வரலாறு காண்பவர் அது ஒரு தனி நாடு, முழுமுதல் நிறைவுடைய முழுநிறை நாடு என்பதைக் கருத்தில் கொண்டாலன்றி, தமிழக வரலாறும் பொய்யாகிவிடும்; சூழ்புல வரலாறுகள்கூட விளக்கம் பெறமாட்டா! ஏனென்றால் தமிழகத்துக்குத் தொன்று தொட்டு ஒரு நாட்டுமொழி உண்டு. அது தென்னாட்டுமொழிகளுக்கு நடுநாயகமான மொழி. இந்திய மாநில மொழிகளுக்கும் தென் ஆசிய மொழிகளுக்கும் அது அடிப்படையான மூல முதன்மொழி. அதற்கு ஓர் இலக்கியம் உண்டு. அது தென்னாட்டின் பழம் பேரிலக்கியம். இந்திய மாநிலத்தின் முதல் இலக்கியமும் முதன்மை வாய்ந்த நிறை இலக்கியமும் அதுவே. அசோகனுக்கு முன்பிருந்தே ஒடியாடிக் காந்தியடிகளுக்குப் பின்னும் நின்று ஊடாடும் பீடுடைய இலக்கியம் அது. பதினாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல் கடல்சூழ் உலகாண்ட பழந்தமிழன் காலமுதல், வீறுடன் இந்நாள் கப்பலோட்டிய வீரத் தமிழன் வ. உ. சிதம்பரனார் காலம்வரை இடையறா உயிர்த் துடிப்புடன் அது உலவி வருகின்றது.

மற்றும் தமிழகத்துக்கென்று ஒரு தனிச் சமயநெறி, சைவ சித்தாந்தநெறி உண்டு. அதனுடன் நெருங்கிய தொடர்புடைய அன்னைநெறி, திருமால் நெறி முதலியன உண்டு: தமிழகத்துக்கென்று ஒரு தனி மருத்துவமுறை, சித்த முறை உண்டு; தமிழகத்துக்கென்று ஒரு தனிக் காலக் கணிப்புநெறி, வெங்கதிர்—தண்கதிர் இரண்டும் சார்ந்த வான்காட்சி நெறி உண்டு. தனிக் கோயிலமைப்பு, வழிபாட்டு முறை, வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள், கருத்து மரபுகள், பண்புகள் உண்டு. தமிழகத்துக்கென்று ஒரு தனிப் பண்பற்ற வாழ்க்கைப் பகுதியையோ, பண்புப் பகுதியையோ தமிழர் யாங்கணும் காணமுடியாது.

தமிழ் இன மொழி பரப்பெல்லைகள்



பல தமிழ்க் கூறுகள் தென்னாட்டுக் கூறுகவோ, இந்திய மாநிலக் கூறுகவோ, உலகக் கூறுகவோ பரவிவிட்ட போதிலும், தாய்நிலத்தின் தனித்தன்மைகள் அதன் உயிர்வளர்ச்சியின் பயனாக முனைப்பாகவே ஓங்கி உயர்ந்து வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழகத்தின் பதின் கூற்று எண்மானம் (Decimal System) உலகத்துக்கு இன்று பொதுவாய்விட்டது. ஆனல், அதன் கீழ்வாய் மானம் (Fraction System) தமிழகத்துக்குத் தனி உயர் சிறப்பாகவும், தென்னாட்டுக்கும் குஜராத்துக்கும்மட்டும் அரைகுறைப் பொதுச்சிறப்பாகவும் அமைந்துள்ளது. ஏழிசைமுறை நாகரிக உலகின் பெரும் பகுதிக்குப் பொது வாயினும், அதன் வட்டணைப் பாகுபாடும், பண், பண்ணிய வகுப்பும், பாலைநிலைகளும் தமிழிசைக்கே சிறப்பாயுள்ளது. மருத்துவத்தில் ஒரு பெரும்பகுதி கீழ்த்திசைக்கே பொது வாயினும், நாடித்திட்பம், நீற்றுமுறை, சுண்ணமுறை, கற்பமுறை, புடமுறை, தனிக்குணம், வைப்புமுறை முதலியன தமிழ்ச்சித்தர் நெறிக்குச் சிறப்பாகவே உள்ளன. இன்னோரன்னபிற விரிப்பின் பெருகும். ஆகவே இவற்றை விடுத்துத் தமிழக வரலாற்றின் பொதுப் போக்கிலும் மொத்த நோக்கிலும் பண்பிலும் படிப்பினைகளிலும் கருத்துச் செலுத்துவோம்.

தமிழகத்து மக்களில் கிட்டத்தட்ட அனைவரும், உடற்கூற்றுவண்ணத்தாலும் மொழியாலும் பண்பாலும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். மாநில அரசினர் கட் கணிப்பின்படி, விந்தியமலைக்குத் தெற்கிலுள்ள தென்னாட்டிலும் அதன் வடக்கிலுள்ள நடு இந்தியாவிலும், வடமேற்கு, வடகிழக்குமூலைகள் நீங்கலான பகுதி தூய திராவிட இனச் சார்புடையனவேயாகும். வடமேற்கு மூலையில் (பம்பாய், குஜராத்து, சிந்து மாகாணங்களில்) சிதியருடனும், வடகிழக்கு மூலையில் (ஒரிசா, பீகார், வங்காளம், அசாம் பகுதிகளில்) மங்கோலியருடனும், கங்கை வடகரையில் ஆரியருடனும் இத்திராவிட இனத்தவர் கலந்து காணப்படுகின்

றனர். கிட்டத்தட்டத் தூய மங்கோலியர் இமயமலை அடிவாரத்திலும், அதேபோலக் கிட்டத்தட்டத் தூய ஆரியர் மேலைப் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாபிலும் காசுமீரத்திலுமே உள்ளனராகக் குறிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்திய மாநிலத்தின் அடிப்படை இனம் தமிழினத்தின் விரிவாகிய திராவிட இனமே என்பது போதரும். இலங்கையில் தமிழருடன் வாழும் சிங்களரும், பர்மியரும், மலாய் மக்களும் பண்பாட்டிலும் பிறவகைகளிலும் தமிழருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது தேற்றம். ஆனால் அவர்கள் எந்த அளவு, எந்தெந்த இனங்களுடன் கலந்துள்ளனர், எந்த அளவு தமிழினத் தொடர்புடையவர் என்பது இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை.

தமிழகத்திலும் தமிழகம் சூழ்ந்த நிலவக, கடலகப் பகுதிகளிலும் மலைப்பகுதிகளில் உள்ளவர்கள் நாகர் என்ற தனி இனத்தவராயிருக்கவேண்டும் என்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சிங்களராவோர், நாகரும் தமிழரும் கூர்ச்சரம் அல்லது வங்கத்திலிருந்து சென்ற கலப்புத் தமிழினத்தவரும் சேர்ந்த கலப்பினத்தவரே எனவும், வங்கக் கடல் தீவுகளிலும் தமிழக, நடு இந்திய, அசாம் பகுதிகளிலும் வாழ்பவர் பலபடச் சிதறிய நாகரே எனவும் கருதப்பெறுகின்றனர். வேறு சில வரலாற்றாசிரியர் இவர்கள் பண்படாத, அல்லது பண்பாடிழந்த, அல்லது பண்பாட்டில் முன்னேறாத திராவிட இனத்தவரே என்று கருதுகின்றனர். இவ் வகுப்பினரில் திராவிட மொழி பேசுபவரும் உண்டு; கிமேரிய அதாவது 'ஆஸ்திரிக' மொழி பேசுபவரும் உண்டு.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் கங்கைநாட்டிலிருந்து வந்து குடியேறிய மக்களும் சிறுபான்மையாகத் தமிழகத்தில் உண்டு. அணிமைக் காலங்களில் தென்னாட்டின் பிறபகுதிகளிலிருந்தும் அராபியா முதலிய மேலைநாடுகளிலிருந்தும் சிறுபான்மைக் குழுவினரான மக்கள் வந்து குடியேறியுள்ளனர். இவர்கள் பண்பாடுகளும் பழக்க வழக்கங்

களும் ஓரளவு தமிழகப் பண்பாடுகளிடையிலும், பழக்க வழக்கங்களிடையிலும் கலந்துள்ளன. தமிழருடன் தமிழராக இவர்கள் ஒன்றுபட்டும் வந்துள்ளனர்.

வடக்கிருந்து வந்த மக்களில் தமிழகப் பண்பாட்டைப் பெரிதளவு மாற்றியவர்கள் ஆரிய இனத்தவர் அல்லது ஆரிய இனக் கலப்போ பண்பாட்டுக்கலப்போ உடைய மக்களே. இந்தக் கலப்பினத்தின் மூல முதல்வர்களான ஆரியர்கள் நடு ஆசியாவிலிருந்தோ வடதுருவப் பகுதியிலிருந்தோ தென்உருசியா அல்லது ஜெர்மனியிலிருந்தோ பரவிவந்தவர்கள் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஆரியர் இந்தியாவில் கி. மு. 1500-லிருந்தும் தென்னாட்டில் கி. மு. 700-லிருந்தும் தமிழகத்தில் கி. மு. 300-லிருந்தும் பரவியிருக்கலாம் என்று கருதப் பெறுகிறது. திராவிடர் அஃதாவது தமிழினத்தவரும் இதுபோல, இன்னும் பழமையான காலத்தில் பரவியிருக்கலாம் என்றும், அவர்களே நாகரை மலைப்பகுதிகளுக்குத் துரத்தியிருக்கவேண்டும் என்றும் சிலர் கருதுகின்றனர்.

புதைபொருளாராய்ச்சிகளால், ஆரியர் வருமுன் மாநில முழுவதும் வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தவரே என்பது இப்போது வலியுறுத்தப் பெற்றுள்ளது. ஆரியர் வருவதற்குமுன் பல்லாயிர ஆண்டுகளாக அவர்களே மாநிலத்தில் நீடித்து வாழ்ந்து, எகிப்தியர், சுமேரியர் ஆகிய வரலாற்றுக்கு முற்பட்ட நாகரிகங்களுடன் சமகாலத்தவராகவோ, அவற்றுக்கு முற்பட்டவராகவோ வாழ்ந்து வந்திருக்கவேண்டும் என்பதும் தெளிவாகி வருகின்றது. திராவிட அல்லது தமிழின நாகரிகமே இன்றைய உலக நாகரிகத்துக்கும், பண்டைய உரோம, கிரேக்க, வடஇந்திய நாகரிகங்களுக்கும், இவற்றுக்கும் முற்பட்ட எகிப்திய சுமேரிய ஃவினீசிய நாகரிகங்களுக்கும் முன்னோடியா யிருக்கக்கூடும் என்று பழம்பொருளாராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தமிழின நாகரிகம் அல்லது திராவிட நாகரிகம் எவ்வளவு பழமையானது என்பதை வரலாற்றாராய்ச்

சியோ, வரலாற்றுக்கு முற்பட்ட பழம்பொருளாராய்ச் சியோ இன்னும் முடிவு செய்யக்கூடவில்லை. ஆயினும் அதைப்பற்றிய இரண்டு செய்திகளை நாம் நுனித்துணர முடிகிறது.

தமிழ், தமிழினப் பழங்குடியினரின் மூதாதையர் வடக்கிருந்தோ மேற்கிருந்தோ தமிழகம் போந்தவரல்லர். அவர்கள் தமிழகத்திலிருந்தும் தமிழகத்திற்குத் தெற்கில் பண்டு நிலவிய குமரிக்கண்டம் அல்லது இலெமூரியாப் பகுதியிலிருந்தும் வடக்கும் மேற்கும் வடமேற்கும் போந்து, நாகரிக உலகெங்கும் அலையலையாய்ப் பரவியவரே யாவர். வரலாற்றின் இவ்வலைகளே இன்று உலகத்தின் நாகரிகப்படிகளின் அலைகளாய் இயல்கின்றன. தமிழகமும் தென்னாடும் குமரிக்கண்டப் பகுதியாக நிலவியகாலத்தில், சிந்து கங்கை ஆறுகளோ, சிந்து கங்கைச் சமவெளியோ கிடையாது. இமயமலை கூட அன்று மலையாயில்லை. அது கடலடியிலுள்ள மண்கட்டியாய் இருந்தது. பன்னூறாயிர ஆண்டுகளாகக் கடலடி அகநில நெருக்கத்தால் உயர்ந்து மலையாகி, சின்னூறாயிர ஆண்டுகளாக அதிலிருந்து ஒழுகிய ஓடைகள் சிந்து கங்கை ஆறுகளாகி அவற்றின் வண்டல்மண் சிந்து கங்கை சமவெளியாக நடுநிலக் கடல் தூர்க்குமளவும், மனித நாகரிகம் தெற்கிலேயே வளர்ந்து பீடுற்றது. தமிழினமும் தமிழின நாகரிகமும் இமயமலைக் கப்பாலுள்ள நிலவுலகில் பரவுவதற்குச் சிந்து கங்கை சமவெளி இடைக்காலங்களில் ஒரு பாலமா யமைந்தது. உலக நாகரிகத்தில் சிந்து கங்கை சமவெளி கொண்ட முன்னிடத்துக்கான வாய்ப்பு இதுவே.

தமிழகத்தின் தனி இனப் பண்பாகவும் தென்னாட்டின் மூல இனப் பண்பாகவும் தமிழ்ப்பண்பு அமைந்துள்ளது. இந்திய மாநிலமுழுமைக்கும் தென் ஆசியா முழுமைக்கும் இன்றும் இதுவே அடிப்படைப் பண்பு ஆகும். ஆனால் தமிழகத்தில் மட்டுமே நாம் இதன் தூய உயிர்ப் பண்பையும் உயிர்வளர்ச்சியையும் காண்கிறோம். தமிழகங் கடந்த தென்னாட்டுப்பகுதியிலும் விந்தியமலைக் கப்பா

ளுள்ள பகுதிகளிலும் பிற இனக் கலப்புக்களாலும் பண்பாட்டுக் கலப்புக்களாலும் இது பெரிதும் சிறிதும் மாறுபட்டோ, தளர்ச்சியுற்றோ வந்துள்ளது. இக்காரணத்தால் நாம் தமிழகத்தைத் தனி நாடாக மட்டுமன்றி, இந்திய மாநிலத்தின் சேமப் பண்ணையாகவும் கருத இடமுண்டு. போர்ப்புயல்களும், படையெடுப்புக்களும், அயலார் ஆட்சிகளும் மாநிலத்தின் வடபாலின் வாழ்வில் குழப்பமேற்படுத்தி அதன் அடிப்படைப் பண்பாட்டை அலைக்கழித்த போதெல்லாம், தமிழகம் தூய மாநிலப் பண்பாட் டியக்கங்களை வளர்த்து மாநிலத்தின் பண்பாட்டைக் காத்தது என்று காண்கிறோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழின நாகரிகத்தின் வளர்ச்சி முகட்டை நாம் வரலாற்று வாயிலில் காண்கிறோம். தமிழகக் கோயில்களின் மிக உயர்ந்த, மிக வீறமைந்த கட்டட அமைப்பை நாம் இன்று அதன் வாயிற் கோபுரத்திலேயே பார்க்க முடிகிறது. இதுபோலவே, சிந்துவெளியில் கண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ள நாகரிகம் தமிழின நாகரிகத்தின் பாரிய, சீரிய முகப்புக் கோபுரமாக நமக்குக் காட்சியளிக்கின்றது.

சிந்துவெளியில் அகழ்ந்து காணப்பட்ட புதையுண்ட நகரங்கள் ஹாரப்பா, மோகெஞ்சதரோ, சான்ஹூதரோ முதலியவை. இவற்றை ஒத்த புதையுண்ட நகரங்களும் புதைப்பொருள்களும் இந்தியா முழுவதும் காணப்படுகின்றன. ஆனால் சிந்துவெளி நகரங்களால்தான் நாம் அந்நாகரிகத்தின் வெளியுலகத் தொடர்புகளையும், காலவரையறையையும் உணர்கிறோம். இந்நகரங்களில் ஒன்றன்கீழ் ஒன்றாக ஏழடுக்குகளைக் காண்கிறோம். இன்னும் பல அடுக்குகள் நீர்மட்டத்துக்குக் கீழே இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. அகழ்ந்த அளவிலேயே அவை கி. மு. 3200-க்கும் கி. மு. 2500-க்கும் இடைப்பட்ட காலத்தவை என்று அறிகிறோம். அதற்குமுன்னும் அது பல்லாயிர ஆண்டு தொடர்ந்த வளர்ச்சியுடையதாயிருந்திருக்க வேண்டும் என்று அறிஞர் கணிக்கின்றனர். இதுவரை உலகின் மிகப்

பழமையான மூல முதல் நாகரிகங்கள் என்று கருதப்பட்டு வந்த எகிப்திய, சால்டிய, சுமேரிய நாகரிகங்களை விட இது தொல் பழமைமிக்கது என்றும், நாகரிகத்தில் மேம்பட்டது என்றும் நமக்குத் தெரியவருகிறது.

சிந்துவெளியின் திட்டமிட்ட நகரமைப்பு, பன் மாடிகள் அடுக்கிய வீட்டமைப்பு, தொழிலாளர் மனை வரிசை அமைப்பு, செங்கல் பாவிய தெருக்களின் ஒழுங் கமைதி, கழிவுநீர் வாய்க்கால்கள், வடிகால் வாய்ப்பு நலங்கள், குளிப்பறைகள், பூசை அறைகள், கேணிகள், தெப்பக்குளங்கள், சுட்ட செங்கல், பச்சைச் செங்கல்களா லான சுவர்கள், தளங்கள், மழிக்கும் கத்தி, கண்ணுக்குத் தீட்டும் மை, எலிப்பொறி, குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள், மைக்கூடுகள், பொன் வெள்ளி தந்த அணிமணிகள், செம்பு, வெண்கலக் கருவிகள், அழகிய வேலைப்பாடமைந்த மட்பாண்டங்கள், பருத்தி நூலாலான மென் துகில் வகைகள், ஓவிய எழுத்தினின்றும் தோன்றி வடிவெழுத்துப் பொறித்த முத்திரைகள் ஆகிய யாவும் இன்றைய வரலாற்றறிஞரையும் நுணுக்கத்துறையறிஞரை யும் வியப்பார்வத்திலாழ்த்தி இறும்பூதெய்துவிக்கின்றன.

இந்திய நாகரிகத்தின் வரலாறு, மனிதஇன நாகரி கத்தின் தோற்றம் ஆகியவை பற்றி இருபதாம் நூற்றாண் டின் தொடக்கம்வரை நிலவியிருந்த கருத்துக்கள் அத் தனையிலும் சிந்துவெளிப் புதைபொருளாராய்ச்சி புரட்சி கரமான பெருத்த மாறுபாடுகளை உண்டுபண்ணியுள்ளது. கிரேக்க நாகரிகத்தின் பழமையும் இருக்குவேத ஆரியரின் பழமையும் இப்போது நேற்றைய, இடைக்காலப் புதுமை களாய்விட்டன. கிரேக்க, சால்டிய, சுமேரிய நாகரிகங்கள் இவற்றுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டு முற்பட்ட பழமையும் பெருமையும் உடையன. தமிழின நாகரி கத்தின் மூலவடிவமான திராவிட நாகரிகமோ இத் தொல்பழ நாகரிகங்களின் தலைமூத்த நாகரிகமாய், அவற்றி லும் ஆயிர பதினாயிரக்கணக்கான ஆண்டுப் பழம்பெருமை யுடையதென்பதை இன்றைய அறிஞருலகம் திட்டவட்ட

மாக எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவின் அரசியல், சமுதாய, சமயப் பண்பாடுகள் அத்தனைக்கும் மூல முதல் கருநிலையை இப்போது யாரும் இருக்குவேதத்திலோ, புராண இதிகாசங்களிலோ தடவித் தேடவேண்டியதில்லை. ஏனெனில் திராவிட நாகரிகத்தில் அவையெல்லாவற்றின் மூலமுதலைமட்டுமன்றி, உலக நாகரிகத்தின் மூலமுதலையே தேடிக் காணலாம்.

தமிழ்நூல்கள், தமிழறிஞர்கள் கோட்பாடுகளை இருட்டடித்து, ஒன்றுபட்ட கூட்டுச்சதியினால் பன்னூறாண்டுகளாக இந்தியாவின் போலி அறிஞர்குழுவொன்று எதிர்ப்பிரசாரம் செய்து மாயக்கோட்டை எழுப்பிவந்தது. இது வெளியுலகத்தாரின் ஆராய்ச்சிக் கண்களைக்கூட நெடுநாள் மறைத்துவந்திருக்கிறது. இப்போது அதே அறிஞர்களில் பலர் புதிய உண்மைகள்கண்டு தங்கள் பழைய கருத்துக்களைத் திருத்திவருகின்றனர்.

"வேதநெறி திராவிடர் போன்ற பழங்குடியினரின் சமுதாய வாழ்விலிருந்து பேரளவான கூறுகளை மேற்கொண்டது. ஆகவே ஆரியரின் மூலக்கூறுகள் இவை, அவர்கள் மேற்கொண்டவை இவை என்று பிரித்துக்கூற முடியாததாகின்றது," என்பர் அறிஞர் சர். சர்வபள்ளி இராதாகிருட்டிணன் அவர்கள். இத்துடன் அறிஞர் திருத்தந்தை ஹீராஸ் கூற்றை ஒப்புநோக்குக: "வெண்ணிறமுடைய பிராமணர்களைவிடக் கறுப்பு நிறமுடைய பிராமணர்கள் அறிவிற் சிறந்தவர்களாயிருந்ததாகப் பிரம்மணங்கள் கூறுகின்றன. பதஞ்சலி வகுத்துக் கூறுபடுத்தும் முறையில், இந்தக் கறுப்புநிறப் பிராமணர்கள் பிறப்பால் பிராமணர்கள் அல்லர். நோன்புகளாலும் வேதம் பற்றிய அறிவாலுமே பிராமணராக ஏற்றுக்கொள்ளப்பட்டவராவர்." இருக்குவேதத்தில் பிறபகுதிகளைவிட அறிவாராய்ச்சியும் ஆன்மிகத்துறைத் தெளிவும் உடைய முதல் மண்டலமும் கடைசி மண்டலமும் திராவிடரான கறுப்புநிறப் பிராமணர்களால் இயற்றிச் சேர்க்கப்பட்டவையே என்று திருத்தந்தை ஹீராஸ் கருதுகின்றார்.

திராவிடரிடமிருந்து ஆரியர் மேற்கொண்ட நாகரிக, சமய, பண்பாட்டுக் கருத்துக்கள் பற்றிப் பேராசிரியர் சுநீதிகுமார் சாட்டர்ஜி கூறுவது காண்க:—"வினைப்பயன் பற்றிய கோட்பாடு, பிறப்பிறப்புப்பற்றிய கோட்பாடு, சிவம், அன்னை, திருமால் ஆகிய முத்தெய்வங்களை மையமாகக்கொண்ட ஆன்மிகக்கருத்துக்கள், தீவேள்விக்கு மாறான வினைமுறைகளையுடைய பூசை என்ற வழிபாட்டு முறை ஆகியவையும்; நம் உலகியல் வாழ்வையும் சமுதாய வாழ்வையும் பற்றிய மிகப் பெரும்பாலான கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் திராவிடரிடமிருந்து மேற்கொள்ளப்பட்டவையே. அத்துடன் நெற்பயிர், தென்னைமரம், காய்கறி பழங்கள் ஆகியவை சார்ந்த தொழில்கள், வெற்றிலைப் பழக்கம், மக்கள் சார்பான வழிபாட்டு முறைகள், நாட்டுப்புறக் கலைகள், கப்பல் தொழில், இன்றைய இந்துக்களின் ஆடையணிவகைகள் (வேட்டி, சேலை முதலியன); திருமணங்களில் மஞ்சள் குங்குமம் வழங்கும் பழக்கம் முதலிய யாவும் ஆரியர் வரவுக்கு முன்னிருந்தே இந்தியாவில் வழங்கியவை ஆகும்."

சமஸ்கிருத இலக்கியத்தின் பெரும்பகுதியும் புராண இதிகாசங்களும்கூடத் திராவிடரின் மறைந்த பழம் பேரிலக்கியப் பகுதிகளிலிருந்து ஆரியர் தமக்கேற்பத் திரித்து மொழிபெயர்த்துக் கொண்டவையே என்று அறிஞர் ஹீராஸ் கருதுகிறார்.

தமிழின, திராவிட நாகரிகத்தின் தொல்பழமைகள் வருங்காலத்தில் இந்திய மாநில ஆராய்ச்சியாகவோ, கீழ் நாட்டு ஆராய்ச்சியாகவோ அமையமாட்டா. அவை உலக ஆராய்ச்சியாய்விடத் தக்கன. இவ்வகையில் "இந்திய-நடுநிலக்கடல்-மூலமுதல் நாகரிக ஆராய்ச்சிகள்" என்ற நூலின் முதல் ஏட்டில் திருத்தந்தை ஹீராஸ் வெளியிட்டுக் கூறும் கூற்றுக்கள் தமிழர் அறிவுக்கண்களைத் திறக்கத்தக்கன.

"அணிமைவரை, தென் இந்தியாவின் திராவிட மக்கள் தென் ஐரோப்பாவில் பரிதிக்கல் வழிபாட்டைப்

பின்பற்றிய நடுநிலக்கடல் மக்களினத்தவரே என்றும், அவர்கள் கடல்வழியாக இந்தியாவில் குடியேறி, முன்பிருந்த மற்றப் பழங்குடியினருடன் கலந்தனர் என்றும் மட்டுமே நம்பப்பட்டுவந்தது. ஆனால் பழைய நாகரிகங்களின் ஒப்பீட்டாராய்ச்சியால், அவர்கள் குடிபெயர்ச்சி எதிர் திசையிலிருந்தே நிகழ்ந்தது என்பது வரவரத் தெளிவாகின்றது. அதாவது திராவிடர் தென் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வந்தவர்களல்லர். இந்தியாவிலிருந்தே தென் ஐரோப்பா சென்று குடியேறியவர்கள் ஆவர்.” (பக். 20-21)

“இந்தியாவில் நீண்டகாலமிருந்து நாகரிகம் வளர்த்த பின் திராவிடர்கள் மேற்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர். மெசபொட்டேமியா முதல் பல நாடுகளிலும் தங்கி, அவர்கள் பிரிட்டிஷ் தீவுகள்வரை தங்கள் நாகரிகத்தைப் பரப்பினர்” (பக். 21)

“இன்றைய ஐரோப்பிய நாகரிகத்தின் மூலமுதல் தாயகம் கீழ்நாடுதான் என்பது நெடுங்காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. துருயிதர், ஐபீரியர், எத்ருஸ்கானர், மினோவர், முசேனியர் ஆகியவர்கள் மூலமாக அதன் தொடர்பு நடுநிலக்கடலின் கீழ்க்கோடிவரை சென்று காணப்பட்டது. பின் சிரியா, மெசபொட்டேமியா, கிழக்காப்பிரிக்காவரை அதன்வேர் ஆராயப்பட்டது. இப்போது சிந்து ஆற்றங்கரையில் அதன் தொலைவான மூலவேரைக் காண்கிறோம்.”

“இன்றைய ஐரோப்பிய நாகரிகம் பெரிதும் உலகியல் சார்பானது. அதன் ஆன்மீக மூலத்தை நாம் ஏபிரேயரிடமிருந்து பெற்றோம். ஆனால் நம் உலகியல் நாகரிகம் ஆன்மிக நாகரிகம் ஆகிய இரண்டு கூறுகளின் மூலமுதலும் திராவிட நாகரிகமே என்று நாம் இப்போது அறியத் தொடங்கியுள்ளோம். நம் நாகரிகத்தை இந்தோ ஐரோப்பிய நாகரிகம் என்பதைவிட இனி இந்தோ-நடுநிலக்கடல் நாகரிகம் என்பதே பொருந்தும்.” (பக். 22-23)

தற்காலத் தமிழக நாகரிகத்திலும் இந்திய நாகரிகத்திலும் ஆரியர் பங்கு ஒன்றே ஒன்றுதான். அவர்கள் தம் பிறப்பு உயர்வு தாழ்வுக் கருத்தையும் தம் மொழியையும் நாட்டுமக்கள்மீது புகுத்தினர். ஆரியமொழி பேசியவர்களும் அம் மொழிச்சொல் கலந்துபேசியவர்களும் உயர்வு பெற்றனர். இதனுல் வட இந்தியா முழுமையும் மொழிகள் ஆரியமயமாயின. தென் இந்தியாவில் மொழியை ஆரியமயமாக்கப் பாடுபட்டவர் உயர்வகுப்பினர் ஆயினர். இம் முயற்சிகளால் சமயவாழ்வில் குழப்பமும், சமுதாயவாழ்வில் வேற்றுமைகளும் வேறுபாடுகளும், அரசியல்வாழ்வில் அடிமைச் செறிவும் ஏற்பட்டன. ஆனுல் மொழித்துறையிலும் இலக்கியத்துறையிலும் மட்டுமாவது தமிழகம் தன் தனிப்பண்பைக் காத்துப் புதிய உலகின் மறுமலர்ச்சிக்கு மற்றத் துறைகளிலும் வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

தமிழகத்தின் தொல்பழமையைச் சிந்துவெளி காலத்திலிருந்தோ, அதற்கு முற்பட்டோ காட்டவல்ல தமிழர்களின் முத்தமிழ்ப் பழம்பேரிலக்கியத்தில் பெரும்பகுதி இன்று நமக்குக் கிட்டவில்லை. கிட்டிய பகுதியிலும் தொல்காப்பியத்தின் காலத்தையோ திருக்குறள் போன்ற கடைச்சங்ககால இலக்கியப் பகுதிகளின் காலத்தையோ நாம் வரையறுத்து இன்னும் கூறமுடியவில்லை. அவற்றின் பின் எல்லை கி. மு. 5-ஆம் நூற்றுண்டுக்கும் கி. பி. 3-ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்டது என்றுமட்டுமே கூற முடிகிறது. இந்நிலையில் சிந்துவெளியாராய்ச்சி தமிழகத்துக்கு ஒரு பேரொளி விளக்கம் என்பதில் ஐயமில்லை. தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்ருல் நாம் அறியும் தமிழினத்தின் சமயம், நாகரிகம், கலைகள் ஆகியவை வேதங்களுக்கு நீண்டநாள் முற்பட்ட பழமையும், தமிழகங் கடந்த உலகப் பெருமையும் உடையன என்பதை அவ்வாராய்ச்சி நமக்கு விளக்குகிறது.

சமயத்துறையில் இலிங்க வழிபாடு, பசுபதியாகிய சிவவழிபாடு, அன்னைவழிபாடு ஆகியவை பதினுயிரக்

கணக்கான ஆண்டுப் பழமையும் உலகெங்கும் பரந்த பெருமையும் உடையன. கலைத்துறையில் இன்றிருக்கும் இந்திய எழுத்து முறைகளுக்குமட்டுமன்றி, உலகில் உள்ள எல்லா எழுத்து முறைகளுக்கும் தமிழின எழுத்துக்களே மூலம் என்று நாம் அறிகிறோம். மேலும் தொழில்துறையில் உரோமருக்கு நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே செங்கல் தொழிலையும், ஐரோப்பியருக்கு ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே நெசவுத்தொழிலையும் எகிப்தியருக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னிருந்தே சுரங்கத் தொழிலையும் தொழிலாளருக்கு வீடுகட்டித்தரும் உயர் பண்பையும் திராவிடர் பெற்றிருந்தனர்.

சிந்துவெளியின் மொழியாராய்ச்சி இன்னும் முழுவதும் முற்றுப்பெறவில்லை. ஆயினும் ஆராய்ந்த அளவிலே சிந்து வெளியின்மொழி திராவிடமொழியே என்பதும், அது இன்றைய தமிழுக்கும் பழங் கன்னடத்துக்கும் அணிமையுடைய பழமைவாய்ந்த நிலையினது என்பதும் விளங்குகின்றன. ஆகவே தொல்பழந்தமிழ் அல்லது மூல திராவிடம் மொகெஞ்சதரோ காலத்தில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, குடகு என்ற ஆறுமொழிகளாகப் பிரியவில்லை என்றும், அது இமயம்வரை பரந்து வழங்கிற்று என்றும் அறிய இடம் இருக்கிறது.

தமிழகத்தின் வரலாற்றை நாம் ஏழுகாலக் கூறுகளாகப் பிரித்துணரலாம். அவை முத்தமிழ் மூவேந்தர் காலம் அல்லது சங்ககாலம் (கி. மு. 3000—கி. பி. 300); பாண்டிய பல்லவப் பேரரசர்காலம் (கி. பி. 300—900); சோழப் பேரரசுக்காலம் (900—1279); பிற்காலப் பாண்டியப் பேரரசுக்காலம் (1190—1310); நாயக்க மன்னர் காலம் (1358—1736); பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் (1600—1947); இன்றைய புதுமலர்ச்சிக் காலம் (1947—) என்பன.

மனித நாகரிகத்தின் தொடக்ககால ஊழியை வரலாற்றறிஞர் பழங்கற்காலம், புதுக்கற்காலம், செம்பு

வெண்கலக் காலங்கள், இரும்புக்காலம் எனப் பகுப்ப துண்டு. இது மனிதன் படிப்படியாக வழங்கிய கருவிகளை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடு. பழங்கற்காலத்தில் அவன் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்து, முரட்டுக் கற்கருவிகளை வழங்கினான். புதுக்கற்காலத்தில் அவன் செப்பம் செய்த கற்கருவிகளையும், செம்பு வெண்கல இரும்புக் காலங்களில் உலோகக் கருவிகளையும் ஆக்கக் கற்றுக் கொண்டான்.

தொல்காப்பியரும் தமிழரும் இதே மனித நாகரிக வளர்ச்சியைத் திணை வளர்ச்சியாகக் கொண்டனர். மலை நாகரிகத்தை அவர்கள் குறிஞ்சி என்றும், காட்டு நாகரி கத்தை முல்லையென்றும், நாட்டு நாகரிகத்தை மருதம் என்றும், கடல் நாகரிகத்தை நெய்தல் என்றும் வகுத் தனர். நாட்டு நாகரிகம் நகரத்தையும் கடல் நாகரிகம் பட்டினம் அல்லது துறைமுக நகரத்தையும் அடிப்படை யாகக் கொண்டது. ஊர், நகரம், பட்டினம் என்பன மூன்று நாகரிகப்படிகளைக் காட்டுகின்றன.

சிந்துவெளி காலத்திற்கு (கி. மு. 3200—2500) நீண்ட நாளைக்கு முன்பே தமிழினம் பட்டின நாகரிக எல்லை யையும் வெண்கல நாகரிக எல்லையையும் அடைந்திருந்தது. இரும்பு முதன்முதல் தென்னாட்டிலேயே வழங்கப்பட்டுப் பின் உலகெங்கும் பரவிற்று. சிந்துவெளி நாகரிக காலத்தி லேயே தமிழகத்தில் கோலாரில் தங்கம் வெட்டியெடுக்கப் பட்டது. புதுக்கற்காலத்திலிருந்தே (கி. மு. 40,000—4000) பருத்தி ஆடை நெய்யப்பட்டு வந்தது.

சங்ககால முத்தமிழரசர்களுள் பாண்டியன் மாகீர்த்தி என்ற நிலந்தருதிருவிற் பாண்டியன் கடல்கடந்து சாவகம் அல்லது சயநாட்டில் (சுமாத்ரா) தன் ஆட்சியை நிறுவி யிருந்தான். இவன் முதற்சங்க காலத்தவன். தொல் காப்பியம் அரங்கேற்றியவன். புராணங்களில் இவனே உலகின் முதல் அரசனாகிய மனு என்றும், இவன் பெயர் சத்தியவிரதன் என்றும் குறிப்பிடப்படுகிறான். இவனே கடல்கொண்ட தமிழகத்துக்கு ஈடாக, சிந்து கங்கைச்

சமவெளியைப் புதுநாடாக்கி அதில் தமிழரைக் குடியேற்றி ஞன் என்றும் சில அறிஞர் கருதுகின்றனர். இவன் காலம் அறுதியிடப்படின் இவனே இந்திய மாநில முதற் பேரரசும் கடல்கடந்த முதற்பேரரசும நாட்டியவன் என்பது தெளியக்கூடும். ஆயிர ஆண்டுகளுக்குப்பின் சோழர் காலத்திலும் இன்றும் பாண்டிநாட்டுப் பெயர்களும் தமிழ்க் கல்வெட்டுக்களும் பாண்டியர் குடிப்பெயர்களும் அங்கே நிலவுவது காண்கிறோம். இக்குறிப்புக்கள் உறுதியாகத் தெரியப்பட்டால் இக்காலப் பாண்டிய அரசை நாம் முதற் பாண்டியப் பேரரசு என்று கூறலாம்.

பாண்டியருள் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும், சேரருள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், செங்குட்டுவனும், சோழருள் கரிகாலனும் இமயம்வரை ஆணை செலுத்தியிருந்தனர். செங்குட்டுவனால் முறியடிக்கப்பட்ட கனகவிசயருள் கனகன் புத்த பேரரசனான கனிஷ்கனே என்று சில வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். செங்குட்டுவன் காலமும் கனிஷ்கன் காலமும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டே ஆகும்.

ஆரியப் பண்பாடு தமிழகத்தில் தலையிடத் தொடங்கிய காலம் கி. மு. 5 அல்லது 3-ஆம் நூற்றாண்டிலேயே ஆகும். தொல்காப்பியம் இதற்கு முற்பட்ட தனித் தமிழ் நூல். அது தலைச்சங்க காலத்தது. தலைச்சங்கம், இடைச் சங்கம் இரண்டும் கடல்கொண்ட தமிழகத்திலேயே இருந்தன. இன்று நமக்குக் கிட்டியுள்ள திருக்குறள் உள்ளிட்ட பெரும்பாலான கடைச்சங்க நூல்களும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கி. மு. 5-ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 3-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை.

ஆரியப் பண்பாளர் மூவகையினராகத் தமிழகத்தில் புகுந்தனர். முதலில் வந்தவர் புத்தர்களும் சமணர்களும் ஆவர். அவர்களை அடுத்து வேதநெறியினரும் வந்தனர். புத்தருக்கும் சமணருக்குமே முதலில் தமிழகத்தில் மிகுதி வரவேற்புக் கிடைத்தது. இதற்குக் காரணம் அவர்களும்

தமிழ் அறவோரைப்போலக் கொல்லாநெறியினராயிருந்த னர் என்பதே. ஆனால் மூவர் வழிக்கும் இடந்தந்து பல மன்னர் வேள்விகள் ஆற்றினர். பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி ஆகிய மன்னர் பெயர்களே இதற்குச் சான்று பகர் கின்றன.

கடைச்சங்கப் பாடல்களில் சிலவும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் புத்த சமண சமய வழக்கத் திற்குச் சான்றுகள் தருகின்றன.

கடைச்சங்கத்தின் இறுதிக்காலத்தில் சிந்து கங்கைச் சமவெளியில் ஊணர், சகர் படையெடுப்பும், அவர்கள் தாக்குதலால், தமிழகத்தில் வடுகநாட்டிலிருந்து களப்பிரர் படையெடுப்பும் ஏற்பட்டன. களப்பிரர் சமணராதலால் தமிழகத்தில் சமண் சமயம் தலைதூக்கிற்று. பாண்டிய சோழ மரபுகள் சிலகாலம் தடமில்லாதழிந்தன. சோழர் இருந்த இடத்தில் வடபால் பல்லவர் எழுந்தனர். பாண் டியர் ஆண்ட இடத்தில் களப்பிரரே ஆண்டனர்.

பல்லவர் மூன்றும் நூற்றாண்டுமுதல் ஒன்பதாம் நூற் றாண்டுவரை பேரரசராயினர். தொடக்கத்தில் அவர்கள் சமணராகவும் ஏழாம் நூற்றாண்டிலிருந்து சைவராகவும் விளங்கினர். அவர்கள் முதலில் பாளி மொழியையும் பின் சமஸ்கிருத மொழியையும் வளர்த்தனர். இந்திய மாநிலத் தில் சமஸ்கிருத மொழியைத் தமிழ்மொழியைப் போன்ற ஓர் இலக்கிய மொழியாக்கிய பெருமையிற் பெரும்பகுதி அவர்களையே சாரும். சைவரானபின் சிறிதளவு தமிழிலக் கியத்தையும் அவர்கள் பேணினர். ஆனால் அது சைவ சமய வளர்ச்சியின் ஒருபகுதியே.

பாண்டியர் ஆறும் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சியி லிருந்து விடுபட்டு மீண்டும் ஆற்றல் சான்ற மன்னராயினர். விரைவில் பேரரசராய், வடக்கே காஞ்சியிலிருந்து ஆண்ட பல்லவப் பேரரசருடன் அவர்கள் கடும் போட்டியிட்டுப் போராட்டம் நடத்தினர். இப் போராட்டங்களால் இரு

பேரரசுகளுமே 9-ஆம் நூற்றாண்டில் நலிவுற்றன. அவ்விரண்டையும் விழுங்கிச் சோழர் பேரரசராக எழுந்தனர்.

பல்லவ பாண்டியர்காலத்துப் பாண்டியரும் தொடக்கத்தில் தமக்குமுன் ஆண்ட களப்பிரரைப்போலச் சமணராகவே இருந்தனர். இவர்கள் காலத்தில் தமிழ் தழைத்தது. ஆனால், அரசர் பேரளவில் சமண சமயத்துக்கே ஆதரவு தந்தனர். சேந்தன்திவாகரம் போன்ற சமண நூல்கள் இக்காலத்தவை. புத்தமதத்தையே பெரிதும் எதிர்த்த மாணிக்கவாசகரும் கல்லாடரும் இக்காலத்தவர்களே என்பது ஆசிரியர் மறைமலையடிகளார் துணிபு.

சங்ககாலத்தினிறுதியிலிருந்தே புத்த சமண சமயங்களை எதிர்த்துச் சைவ வைணவ பக்தியியக்கங்கள் தோன்றின. தமிழகம் கடந்து இந்தியா முழுவதும் பக்தியலைகளை எழுப்பிய இயக்கம் இதுவே. இது தமிழகத்தில் 3-ஆம் நூற்றாண்டில் தொடங்கி, 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவெங்கும் பரவி, 18-ஆம் நூற்றாண்டுவரை ஆற்றல்சான்ற மாநில இயக்கமாய் விளங்கிற்று. தமிழிலக்கியத்துக்கு அது திருவாசகம், தேவாரம், நாலாயிரப்பிரபந்தம் முதலிய மறைநூல்களையும் பிற அறிவுக்கலை நூல்களையும் தந்தது. மற்ற இந்திய மொழிகளிலோ 18-ஆம் நூற்றாண்டுவரையுள்ள இலக்கியத்தின் மிகப் பெரும்பகுதியும் இப் பேரியக்கம் மாநிலத்துக்குத் தந்த பரிசுகளே.

சோழப் பேரரசர் 9-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டுவரை தமிழகம் மட்டுமன்றித் தென்னாடு முழுவதும் தம் ஆட்சி பரப்பினர். இராசேந்திர சோழன் ஆட்சியில் அது வடக்கே இமயம்வரைக்கும் கிழக்கே கடல்கடந்து தென்கிழக்காசியாவின் கோடிவரைக்கும் பரவிற்று. சோழப் பேரரசு தமிழ்ப்பண்பாட்டுக்கும் கலைக்கும் செய்தபணி சிறிதன்று. அவர்கள் தமிழ்ப்பண்பாட்டை இந்தியாவெங்கும் தென்கிழக்காசியாவெங்கும் பரப்பி, அதையே இந்தியப் பண்பாடாகவும் தென்கிழக்காசியப்

பண்பாடாகவும் தோன்றும்படி செய்தனர். இலக்கியத்தில் புவிச்சக்கரவர்த்திகளாகிய சோழப் பேரரசர்களே சேக்கிழார், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி முதலிய கவிச்சக்கரவர்த்திகளைத் தோற்றுவித்தனர். சைவ வைணவச்சார்பான அறிவுநூல் துறையை இந்தியாவெங்கும் பரப்பிய சங்கரரும் இராமானுசரும் சோழர்காலத்தை ஒட்டித் தமிழகத்தில் வாழ்ந்தவர்களே.

தமிழகப் பக்தியியக்கத்தையும் சமயத்தையும் இந்தியாவெங்கும் பரப்பி அதையே இன்றைய இந்தியாவின் சமயவாழ்வின் அடிப்படை ஆக்கியதும் சோழப்பேரரசேயாகும். சிறப்பாக, வங்காளத்தில் சைவம் வளர்த்துக் கலை பேணிய சேனமரபினர் சோழர் படையுடன் வங்கம் சென்ற ஒரு வீரத் தமிழ் மரபினரேயாவர் என்று அறிகிறோம்.

12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பாண்டியர் மீண்டும் சோழப் பேரரசை விழுங்கித் தமிழகப் பேரரசராயினர். அவர்கள் பேரரசு மேல்கரையில் மங்களூர்வரையும், கீழ் கரையில் நெல்லூர்வரையும், நடுவில் மைசூரை உள்ளடக்கியும் இருந்தது. அவர்களும் சோழரைப்போலச் சிலகாலம் இலங்கையை அடக்கி ஆண்டனர்.

தமிழர் சைவநெறிக்கு அரண்செய்து சித்தாந்தநெறி வகுத்த மெய்கண்டார் முதலிய குரவர்கள் வாழ்வுக்கும், மடங்களுக்கும் சோழரும் பாண்டியரும் பேராதரவளித்தனர்.

பதினாலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி அரசன் அலாவுதீனின் படைத்தலைவனான மாலிக்காபூர் தமிழகத்தின்மீது படையெடுத்தான். அவன் கொள்ளையடித்து மீண்டான். அதனால் தமிழகத்தின் அரசியல் வாழ்வு சீரழிந்தது.

திருவாங்கூர் அல்லது வேணாட்டு மன்னனான வீர கேரளன் இச்சமயம் சேர சோழ பாண்டிய நாடு முழுவதும் ஒரு சில ஆண்டுகளுள் வென்று கொல்லத்திலும் சீகாழி

யிலும் காஞ்சியிலும் முடிசூடிக் கொண்டான். ஆனால் விரைவில் மைசூரை ஆண்ட ஹொய்சளரால் அவன் வீழ்ச்சியுற்றான். ஹொய்சளப் படைத்தலைவன் ஒருவன் புதிதாக விசயநகரப் பேரரசுக்கு அடிகோலினான்.

விசயநகரப் பேரரசர் ஆட்பெயர்களாக ஆளத் தொடங்கிய தலைவர்கள் விரைவில் மதுரை நாயக்கமன்னர் ஆயினர். இவர்கள் 15-முதல் 17ஆம் நூற்றாண்டு முடிய தமிழகத்தில் மீண்டும் சமயமும் கலையும் வளர்த்தனர். ஆனால் 18-ஆம் நூற்றாண்டிற்குள் அவர்கள் ஆட்சி கவிழ்ந்தது.

16-ஆம் நூற்றாண்டில் வேரூன்றிய பிரிட்டிஷ் வாணிக ஆட்சி 18-ஆம் நூற்றாண்டிறுதியில் தமிழக முழுவதும் கைக்கொண்டது. தமிழகம் பிரிட்டிஷ் ஆட்சியின் மூலதள மாயிற்று.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வீரபாண்டியக் கட்டப்பொம்மன் வீரப்போராட்டம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த தமிழர் கடைசிப் போராட்டமாகவும், தமிழகத் துக்கும் இந்திய மாநிலத்துக்கும் கீழ்த்திசை உலகுக்கும் விடுதலை ஆட்சி தரும் முதற் போராட்டமாகவும் அமைந்தது.

20-ஆம் நூற்றாண்டில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் வீரக் கப்பல்போர் பண்டைப் பாண்டியர் புகழை நினைவூட்டுவது.

பிரிட்டிஷ் ஆட்சி 1947-ல் முடிவுற்றுவிட்டது. இது மீண்டும் தமிழ் ஆட்சிக்கும் தமிழக மறுமலர்ச்சிக்கும் ஒரு கொடியேற்று விழாவாய் நிலவும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

பல்லவ, பாண்டியப் பேரரசுகள்





திருவாளர்,
பண்டித, வித்துவான்.
தா. மாசில்லாமணி நாடார்




திருவாளர்,
வ. பொன்னுசாமி பிள்ளை,
எம். ஏ.




திருவாளர்,
ரெ. சேஷாசலர், எம். ஏ.



திருவாளர்,
ஔ. துரைசாமி பிள்ளை,
எம்.ஏ., எல்.டி.



திருவாளர்,
ஆ. செயரத்தினம், எம்.ஏ.



திருவாளர்,
சிவ. இராமச்சந்திரன்,
பி.ஏ., (ஆனர்ஸ்)

க. சங்ககாலம் [கி. மு. 3000—கி. பி. 100]

[பேராசிரியர், தா. மாசில்லாமணி நாடார் அவர்கள்]

இறை வணக்கம்

பன்னிரு வருக்குப் பரமமெய்ஞ் ஞானந்
துன்ன வளித்தோற் றொழுகு தூஉம்
மன்னியஃ தெம்முளும் வளர்தரற் பொருட்டே.

தமிழகமும் அதன் எல்லைகளும்

"விண்ணுலகமும் மண்ணுலகமும் விளம்பிய முறையே படைக்கப் பெற்றன" என விளம்புகின்றது விவிலியமறை. அம்முறை பண்டைப் பரிபாடற்கண்ணே பயின்றுள்ள முறையை யொத்த தென்க. அது வருமாறு :—

"விசும்பி னூழி யூழுழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
உந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீ டாகிய விருநிலத் தூழியும்" (பரிபாடல்: உ.)

வானும், வளியும், நெருப்பும், நீரும், நிலமும் முறையே தோன்றின. பின்னர் உயிர்கள் தோன்றின. நிலம் தோன்றிய காலத்தே உடன் தோன்றியது தமிழகம்.

அதற்கு நாவலந்தீவு, நாவலம்பொழில் முதலாய பெயர்கள் முற்காலத்தே வழங்கப் பெற்றன. இக்காலத்தினர் அதனை இலெமூரியா, குமரிக்கண்டம், தென்புலம், தென்னாடு, தென்னிந்தியா முதலாய பெயரான் வழங்குகின்றனர். தமிழகம் முதற்கண் நாற்புறமும் நீர்சூழ்ந்த தீவாக இருந்தமையின் தீவு எனவும், வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர் மிக்குண்மையின் பொழில் எனவும் பெயர் பெற்றது. அது குமரிமுனைக்குத் தெற்கே கடலுள் எழுநூற்றுக்காவதம் தொலை பரந்து, மேற்கே ஆவ்பிரிக்காவின் கீழ்கரை வரைக்கும், தெற்கே ஆஸ்திரேலியா வரைக்கும், கிழக்கே சாவக முதலான தீவுகள் வரைக்கும் விரிந்து நின்றது. அதனுள் முன்னர்க் கடல்கொண்ட நாற்பத்தொன்பது நாடுகளும் பிறவும் நிலைபெற்றிருந்தன. கங்கையாறு போன்ற குமரிப் பேரியாறும், பஃறுளியாறு முதலிய ஏனை யாறுகள் பலவும், இமயம்போன்ற குமரிப் பெருமலையும், மகேந்திர முதலான மலைகள் பிறவும், ஆங்கு நிலவின. நெடுமலைப் பெருந்தொடர் ஒன்று மேல்கரையில் மிளிர்ந்தது. தெற்கண் நின்ற அம்மலைகளினால் அவற்றிற்கு வடக்கண் தோன்றிய பொதியை முதலியன வடமலை எனப் பெயர் வழங்கின. தென்மதுரை, கபாடபுரம் முதலிய பேரூர்கள் ஆங்குப் பெருஞ் சிறப்புற்று விளங்கின. விந்தியமலை நாவலந்தீவின் வடகரையில் அமைந்திருந்தது. அதற்கு வடக்கிலுள்ள நிலப்பகுதியும், இமயம் முதலான மலைகளும் கடல்மூடிக் கிடந்தன. கந்தபுராணக் கதை நிகழ்ந்த இடம் தென்புலமே. சூரபதுமனது அரசிருக்கை ஆகிய வீரமகேந்திரம் அதன் தென்புறத்தே ஒரு தீவினிடை அமைந்திருந்தது. இச் செய்திகட்கெல்லாம் பண்டைத் தமிழ்நூல்கள் சான்றுவன. இக் காலத்தே நிலநூல் ஆராய்ச்சியாளர் துணிபும் இவற்றிற்கு அரண் செய்வன. அவற்றுட் சில வருமாறு:

பேராசிரியர் ஹெக்கேல் கூறுவது :—"அப்பெருநிலப் பகுதி, ஆசியாவின் கரைவழியே சந்தாத் தீவுகள் முதல் ஆவ்பிரிக்காவின் கீழ்கரை வரைக்கும் விரிந்து கிடந்தது.

அதுவே மக்கள் இனத்தின் பிறப்பிடம் என்னும் பெருமை எய்தியது" (History of Creation.)

பெருமகனார் உவாற்றர் இராலே இயம்புவது;—"ஊழிப் பெருவெள்ளத்திற்குப் பின்னர் இந்தியப் பெருநாட்டிடையே மக்கள் இனம் தோன்றி வளர்ந்து பெருகியது. அதுவே அவர் பிறப்பிடம்" (History of the World)

'மக்கள் விஞ்ஞானம்' என்னும் திங்கள் வெளியீடு விளம்பியுள்ளது:—"அண்மையில் தோன்றியுள்ள மிக்க நுணுகிய ஆராய்ச்சியின் வழியே, முதன்முதல் மக்கள் இனம் தோன்றிய இடம் இன்று இந்து மாக்கடலுள் அமிழ்ந்து கிடக்கின்றது எனக் காண்கின்றோம்" (The Science of Man, December-1900.)

தோப்பிநார்து (Topinard) என்னும் தோன்றலார் "பண்டைக் காலத்தே தென்னிந்தியா ஆசியா கண்டத்தின் ஒரு பகுதி என அமைந்திலது," என்னும் கருத்துடையார்.

பிரித்தானிய ஒற்றுமைக் கழகத்தின் தலைவர், அதன் கண் நிகழ்த்திய தலைமைப் பேருரையில், "தென்னிந்தியாவே மக்கள் தோன்றிய மாநிலம் எனத் தோன்றுகின்றது," எனக் குறிப்பிட்டுள்ளார். (Sir John Edvans, President, The British Association-1897.)

சென்னை மாநிலக் கைந்நூல் இயற்றியுள்ள அறிஞர் மக்கிளீன் இக்கருத்தே கொண்டு எழுதியுள்ளார். மறைந்த இலெமூரியா வரலாறு வரைந்துள்ள ஸ்காத்து எலியத்து என்னும் பேரறிஞர், "மக்கள் இனத்தின் முதல் உறைவிடம் தென்கடலுள்ளே மறைந்து கிடக்கின்றது" என மிக்க நயம்பட அறிவுறுத்தி நிலைநாட்டி யுள்ளார் (The Last Lemuria by Scott Elliott.)

"இந்தியப் பெருமக்களும் பெருவினைக்களும்" என்னும் பெயர் பெற்ற நூற்கண் நுவலப் பெற்றுள்ளது:—"இந்திய தீபகற்பம் அல்லது தென்னிந்தியா என்பதை சிலநூல்

வழியே ஆராய்ந்து பார்க்கின், அது சிந்து கங்கைச் சம வெளியினின்றும், இமயத்தினின்றும் பிரிந்து, தனிப்பட்ட இயல்புடையதாக விளங்குகின்றது. அந்நாடு முந்திய கண்டத்தின் எஞ்சிய பகுதியாம். அக்கண்டம் ஆவ் பிரிக்கா வரைக்கும் தொடர்ச்சியாய் நீண்டு விரிந்திருந்து, இப்பொழுது இந்து மாக்கடலால் மூடப்பெற்றுள்ளது. அதில் அமைந்துள்ள கற்பாறைகள் நிலவுலகிலுள்ள பாறைகள் அனைத்தினும் மிகத் தொன்மை யுடையன. முன்னர் எக்காலத்திலேனும் நீரில் அமிழ்ந்து கிடந்தமைக் குரிய அடையாளங்கள் அவற்றிடைக் கண்டிலேம். அவற்றுட் பல பகுதிகள் கருங்கல் அடுக்குகளால் அமைந்துள்ளன. அன்றேல் உருகிய கற்குழம்பு பெருகியோடி அமைந் திருத்தல் வேண்டும். யாம்—மக்கள் இனத்தினேம்— நிலவுலகின் ஆதிநாட்களில் தென்புலத்தே வாழ்ந்திருந் தேம் எனவும், உயிர்கள் தோன்று முன்னரே அத்தென் புலம் மிக்க விரிவுடையதாய் விளங்கியது எனவும் காண் கின்றேம். சிந்து கங்கைச் சமவெளி என்பது இதுகாலை மேல்புறம் சிந்துப் பேரியாறு தொடங்கிக் கீழ்புறம் கங் கைச் சங்கமத் துறைகாறும், ஆயிரத் திருநூறு கல் தொலைவு இடையீடின்றித் தொடர்ச்சியாய் அமைந்து கிடக்கின்றது. நிலவுலகம் உருவாகிய அமையத்தே, இமய மலை தோன்று முன்னமே, அச்சமவெளி அனைத்தும் கடல் மூடிக் கிடந்தது. இக்காலத்தே இந்திய தீபகற்பம் எனப் படும் இந்நாடு, அக்காலத்தே அக்கடலின் தென்கரை எனத் தோற்றம் அளித்தது. இமயம் வெளிப்படலும் கடல் மறைந் தொழிந்தது." (Peoples and Problems of India by Sir T. W. Holderness, K. C. S. I., Chapter I page 23.)

நீர்வளம், நிலவளம், குடிவளம், மலைவளம், கலைவளம் முதலாய பல்வகை வளங்களினாலும் பெருஞ் சிறப்புற்று விளங்கிய தமிழகத்திற்கு இங்ஙனம் முதன்முதற் கடல் கோளினாற் பேரிடர் விளைவதாயிற்று. அது முதற்கடல் கோள் என்ப. அதனால் குமரியாற்றின் தெற்கே நிலை

பெற்றிருந்த குமரிமலையும், அம்மலையின் தெற்கே நெடுந் தொலைவில் ஓடிய பஃறுளியாறும், அவ்யாற்றின் கரைமீதே நிலவிய பாண்டியன் கோநகர் என்னும் தென்மதுரையும், இவற்றிற் கெல்லாம் இடையே எழில் சிறந்தோங்கிய வள நாடுகளும், பேரூர்களும் சிற்றூர்களும், பட்டினங்களும், பாக்கங்களும், மாடங்களும், மன்றங்களும், அளப்பரும் பெரும்பொருட் குவைகளும், விலங்குயிர்களும், பிறவும் மறைந் தொழிந்தன.

கடல் வெள்ளம் பல திசை வழிகளான் நாடு நகர்கட் கிடையே புகுந்தமையின், மக்கள் செய்திறன் அறியாது, தத்தமக்குத் தோன்றியவாறே தப்பியோட முயன்றனர். பட்டினங்களிலும் பாக்கங்களிலும் வதிந்தோர் மனைவி மக்களுடன் தோணிகளிலும், நாவாய்களிலும், மரக்கலங் களிலும் இவர்ந்து விரைந்தோடினர். எனினும், பெரு மழையும், பெரும் புயலும், பேரலைகளும், அவர்தம் பெரு முயற்சிக்கு இடையூறு செய்தன. அவற்றிற்கு ஆங்காங்கே இரையாயினோர் பலர். எஞ்சினோர் அவற்றின் வயமாய்ப் பன்னாள் அலைந்து திரிந்து, அண்மையிற் கண்ணுற்ற நிலங்களில் சென்று சேர்ந்தனர். ஆஸ்திரேலியாவிற்கும், அதன் அண்மைக்கண் உள்ள நியூசிலந்து, மோரிசு முதலாய தீவுகட்கும், சாவக முதலிய கீழ்த்திசைத் தீவு கட்கும் சென்றோர் பலர். தென் மேற்றிசைக்கண் தமிழகத் துடனே இயைந்துள்ள மதகாஸ்கார் நிலம் அப்பெரு வெள்ளத்தின் அலைகளால் உடைந்து தனித் தீவாக அமைந்து நின்றமையால், ஆங்குச் சென்றுறைந்தார் பலர். அத்தீவினை அடுத்திருந்த ஆவ்பிரிக்கா கண்டத்தில் கரை யேறினோர் பலர். அக்கண்டத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே கிடந்த கடல்மீது கடும்புயலால் உந்தப்பெற்று, வடமேற்கே நெடுந்தொலை சென்று, மத்திய தரைக் கடலினைச் சூழ்ந்துள்ள நிலங்களில் இறங்கினோர் பலர். அதற்கும் வடமேற்றிசையில் ஐரோப்பா கண்டத்தினைக் கண்டார் பலர். ஆவ்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் இறங்க இயலாது பெருங்காற்றின் போக்கிலே இயங்கிச்

சென்றோர் பலர் பசியாலும் பிணியாலும் உயிர் நீத்தனர். எஞ்சிய மக்கள் அந்நிலங்களின் மேற்கிலும் கிழக்கிலும் பன்னெடுங் காவதம் திசை மயங்கித் திரிந்து, யாதானுமோராற்றான் உயிர்தாங்கி நின்று, இறுதியில் தென்னமெரிக்காவின் கீழ் கரையிலும் மேல்கரையிலும் சேர்ந்து உய்வுற்றனர். இவ்வாறு நாவலந்தீவின் மக்கள் நிலவுலகின் நாற்றிசைக்கண்ணும் பரவிச் சென்றுள்ளார்.

பாண்டிய மன்னன் தன் உரிமைச்சுற்றத்துடன் மரக்கலமூர்ந்து குமரிப் பேரியாற்றின் வடக்கே வந்தான். இறந்தவர் ஒழிய எஞ்சிய நன்மக்கள் எண்ணிறந்தோர் காலினும் கலத்தினும் அவனைப் பின்பற்றிச் சென்றுய்ந்தார். அம்மன்னன் பெயர் நிலந்தருதிருவிற் பாண்டியன். அவன் வாய்மை நோன்பினன் எனவும், அரச முனிவன் எனவும், பெயர் பெற்றுள்ளான். வடநூலார் அவனைச் சத்திய விரதன் எனவும், வைவஸ்வத மனு எனவும் அழைப்பார். விவிலிய மறைக்கண் கூறப்பெற்ற ஊழிப்பெரு வெள்ளமும், நோவை முனிவனும், அவன் இயற்றிய பேழை முதலியனவும், இவன் வரலாற்றுடன் ஒப்புநோக்கி ஆராய்தற்பாலன. இவ்வூழிப் பெருவெள்ளக் கதை நிலவுலக முழுவதினும் பல்வேறு மக்களிடையே சிற்சில வேறுபாடுகளுடன் வழங்குகின்றது.

நாவலந்தீவின் தென்புலம் இவ்வாறு கடல்கோளினால் நலிவுற்ற காலை, அதன் வடபுலத்தின் எல்லையாக நிலைபெற்றிருந்த கடல் கடிதின் மறைவதாயிற்று. எதிர்பாரா வண்ணம் ஆங்கொரு மாநிலம் எதிர்ந்தது. அது மிக்க விரிவுடையது. அதன் வடதிசைக்கண்ணே நெடுந்தொலைவில் வானளாவிய மலைத்தொடர் ஒன்று வயங்கி நின்றது. அதன் நீளம் ஆயிரத்தைந்நூறு கல், அகலம் ஐந்நூறு கல், உயரம் ஐந்து கல், அதன் கொடுமுடிகள் முகிற் பரப்பினை ஊடறுத்து, ஐந்திற்குமேல் அரைக்கல் நிவந்து நின்றன. மலைமிசைப் பனிநிரம்பிச் சாரல் அனைத்தும் பனிக்கட்டியினால் மூடப் பெற்றது. பனிக்கட்டிகள் ஞாயிற்றின் வெங்கதிர்களினால் உருகி வெள்ளப்பெருக்கெடுத்தன.

அவ்வெள்ளத்தில் வடபுறம் இரண்டும் தென்புறம் ஒன்று மாக மூன்று பேரியாறுகள் மூடுகின. அப்பேரியாறு களின் துணையாறுகளும், கிளையாறுகளும், மலையின் தென் பக்கல் அமைந்து கிடந்த மாபெருஞ் சமவெளிகளிற் பாய்ந்தோடிப் பல்வேறு வளங்களைப் பயந்தன. அவற்றின் கரைகளில் மக்கள் குடியேறினர். ஆங்கு நெல்லும் கரும்பும் நெருங்கின; கோதுமையும் கூலங்களும் குவிந்தன; படப் பைகளும் செய்களும் பரவின; நன்செய்கள் கரும்புத் தோட்டம் போன்றும், கரும்புத்தோட்டங்கள் கமுகஞ் சோலை போன்றும், கமுகஞ்சோலைகள் தெங்கந்தொகுப்புப் போன்றும், இனிய காட்சி அளித்தன. விந்திய மலையின் வடக்கே மேல்கடல் முதல் கீழ்கடல் வரை மந்தியும் அறியா மரன்பயில் சோலைகள் அடர்ந்து வளர்ந்தன.

பாண்டிய மன்னன் தென்புலத்தினின்றும் அகதி களாய்த் தன்பால் வந்த குடிகளுக்கு உறைவிடம் தேடி ஞன். அண்மையிற் சேர சோழ மண்டலங்களிற் குண்டூர்க் கூற்றம், முத்தூர்க் கூற்றம் எனச் சிற்சில கூற்றங்கள் கிட்டின. ஒற்றர் சிந்து கங்கைச் சமவெளி களின் சிறப்பினையும், செழிப்பினையும், அவன்பால் தெரி வித்தனர். தன் படைகளுடன் ஆங்கு எழுந்தான். புதிய நிலத்தையும் அதன் பொருவற்ற வளத்தையும் கண்ணுற் ருன். சீதைப்பிராட்டி சீராமன் கணையாழியைக் கண்ட பொழு தெய்திய நிலையை எய்திஞன்.

இழந்தமணி புற்றரவெதிர்ந்ததென லானுன்
பழந்தன மிழந்தன படைத்தவர் நிகர்த்தான்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டான்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தான்

உண்ட நிலத்தினை உமிழ்ந்தது கடலெனஉணர்ந் தான். அகதிகளாய் வந்த மக்களையும், ஆதரவற்ற குடிகள் பிறரையும், ஆங்குக் குடியேற்றினுன். சேர சோழ நாடுகளினின்றும் சிலர் வந்தனர். தமக்கு நிலந்தந்த திருவுடை மன்னனை அன்னுர் நிலந்தரு திருவிற் பாண்

டியன் என அழைத்தனர். கடல் கவர்ந்துகொண்ட பஃறுளியாற்றிற்குக் கங்கையாற்றையும், குமரிமலைக்கு இமயமலையையும், தென்புலம் ஒன்றற்கு வடபுலம் ஒன்றையும், அதன்பால் ஈடாகக் கொண்ட அவனது அரும்பெருந் திறலினை வியந்து,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

என வாயார வாழ்த்தினர். அக்காலத்தே ஆங்குக் குடியேறிய அப்பழந்தமிழ்க் குடிகளின் வாழ்க்கைத்திறத்தினையும், பண்பாட்டினையும், இக்காலத்தே சிந்துப் பெரு வெளியில் ஹரப்பா மொகஞ்சதரோ முதலாய விடங்களில் நிலத்தின் அடியில் யாம் கண்டு வியக்கின்றோம்.

தென்மதுரையைக் கடல்கொண்ட பின்னர்ப் பாண்டியன் கபாடபுரத்தைத் தன் அரசிருக்கை ஆக்கினான். தமிழகத்தின் நிலைமையும் எல்லையும் மாற்றம் பெற்றன. முன்னைத் தீவகம் பின்னைத் தீவகற்பம் ஆயது. அதன் நாற்புறத்தும் அமைந்துள்ள கடல் எல்லை மாறி,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை"

எனப் புலவர் புகழுமாறு, தெற்கே குமரியாறும், வடக்கே இமயமலையும், கிழக்கும் மேற்கும் இரு கடல்களும், எல்லைகள் என இயைந்தன.

இந்நிலையில், கி. பி. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவரும், யூதமக்கள் தொன்மைவரலாறு இயற்றிய ஆசிரியரும் ஆகிய பிலாவியஸ் ஜொசிபஸ் என்னும் யூதகுலப் பெரியார் வரைந்துள்ள குறிப்புக்கள் ஆராயத் தக்கன :— "இறைவனாற் படைக்கப்பெற்ற மக்கள்இனத்தின் முதல்வர்—ஆதாம், ஏவை என்னும், தந்தையும் தாயும் — முதன்முதல்ஏதேன் என்னும்

மாபெரும் பூம்பொழிற்கண்ணே உறைவாராயினர். பின்னர் அவரும், அவர் புதல்வர் புதல்வியரும், அதன் அண்மை இடத்தே வாழ்ந்திருந்தனர். அங்கு மக்கள் இனத்தினர் பலுகிப் பெருகினர். அந்நிலத்தினை வளம்படுத்திய பேரியாறுகளில் ஒன்று பைசோன் என்பது. அது இந்தியாவில் ஓடுகின்றது. அதனைக் கிரேக்கர் கங்கை யாறு என்பர். ஊழிப் பெருவெள்ளத்தின் பின்னர் மக்கள் பலர், அவ்விடத்தினின்றும் வெளிப்போந்து, நிலவுலகின் பற்பல பகுதிகட்கும் சென்றனர். அவருள் பலர் மெசோப்பெத்தோமியா நாட்டின் வழியே கல்தேயாவிற்கு வந்தனர். ஆங்குள்ள சினேயார் சமவெளியில் அன்னார் மதில் சூழ்ந்த ஒரு பெரிய நகரத்தையும், வானளாவிய மிக்குயர்ந்த கோபுரத்தையும் கட்டத் தொடங்கினர். முன்போல் கடல் பொங்கிப் பெருவெள்ளம் தோன்றும் காலத்தில் அவை தமக்கு அரணாக விளங்குதல் கூடும் என்பது அவர் துணிபு. எனினும், அவரது முயற்சி முடிவெய்திலது. அதுகாறும் ஒரே மொழியை வழங்கிவந்த அவர் நடுவே திடீரெனப் பலமொழிகள் தோன்றியமையால், ஒருவர் கருத்து ஒருவர்க்குப் புலப்படாது குழப்பமுற்று, அவர் அவ்விடத்தினின்றும் பற்பல இடங்கட்கும் பிரிந்து சென்றனர். உன்னதக் கோபுரம் அரைகுறையாக நின்று போயிற்று. அதனை இன்றும் காணலாம். அதனைப் பாபேல் என்பர். பிற்காலத்தே பாபிலோன் நகரம் அவ்விடத்தில் தோன்றிப் புகழ்பெற்றது'' (Antiquities of the Jews by Flavius Josephus, Chapters I, III & IV.)

இக்கருத்து விவிலிய மறையிடையேயும் விளங்கக் காண்கிறோம். இதனால் மக்கள் ஆதியில் ஒரு பூம்பொழிற் கண்ணே வாழ்ந்திருந்தனர் எனவும், அது நாவலம் பொழில் என்னும் தமிழகம் எனவும், அக்காலத்தே கடல்கோள் நிகழ்ந்தது எனவும், பைசோன் என்னும் ஆறு கங்கையாறு எனவும், கடல்கோளுக்கு அஞ்சிய மக்கள் பலர் கல்தேயா நாட்டிற்குச் சென்றனர் எனவும், அவர் பேசிய மொழி தமிழ்மொழி எனவும், கோபுரம் கட்டிய

காலத்தில் அம்மொழியிற் பன்மொழிகள் கிளைத்தன எனவும், அது நிலவுலகம் முழுவதும் அன்னார் நிலவுதற்கு ஏதுவாயிற்று எனவும், அறியக் கிடக்கின்றது. விவிலிய மறையோர் கணக்கின்படி, ஊழிப் பெருவெள்ளம் நிகழ்ந்த காலம் கி. மு. 2500.

கடல்கோளிற்குப் பின்னர் பல நூற்றாண்டுகள் கழிந்தன. நாவாய் முதலியன துணைக்கொண்டு முன்னரே பற்பல நிலங்கட்குச் சென்ற பழந்தமிழ்மக்கள் தம் தாய் நாட்டினை மறந்தார் அல்லர். தீவகம் தீவகற்பம் ஆயினபின், தமிழகத்தினின்று பிற நிலங்கட்கும், பிற நிலங்களினின்று தமிழகத்திற்கும் போக்கு வரவு எளிதாயிற்று. தம் முன்னோர் வாழ்ந்திருந்த நாட்டின் வளமும் செல்வமும் கேள்வியுற்றனர். ஆங்குச் செல்லும்விழைவு மீக்கூர்ந்தது. இது மக்கள் இயல்பு. யூதமக்கள் பாலஸ்தீனம் என்னும் தம் தாய்நாட்டினை இழந்து ஈராயிரம் ஆண்டுகள் சென்ற பின்னரும், அதனை என்றும் மறவாதவராய், இக்காலத்தே மீண்டும் அதனைக் கைப்பற்றித் தம் அரசினை நிறுவியுள்ள செயல் ஈண்டு உன்னுதற் குரியது. அவ்வாறே, அவர் வடகிழக்கு வடமேற்குக் கணவாய்கள் வழியே பற்பல இனத்தினர் எனத் தமிழகத்தை நாடிவரத் தொடங்கினர்.

அவருள் குறிப்பிடத்தக்கார் ஆரியர் என்னும் குழுவினர். அவர் வடமேற்கு ஆசியாவிலிருந்து வந்தனர் எனவும், ஆங்கிலர் முதலான ஐரோப்பியருக்கு நெருங்கிய இனத்தினர் எனவும் கூறுப. அவர் தம் குழுவிற்குள்ளே நிலவிய ஒற்றுமைப்பண்பினாலும், சூழ்ச்சித் திறத்தினாலும், விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்வோராயினர். அவரது மொழியின் சொற்கள் ஆங்குத் தமிழ்ச்சொற்களுடன் கலப்பனவாயின. அவரது மொழி வேங்கடமலை வரைக்கும் விரைந்து பரவியது. இவ்விரு மொழிகளும் கலந்து வேறு சில புது மொழிகள் தோன்றின. இவை முதலான காரணங்களினால், தமிழகத்தின் எல்லை குறுகியது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்பது

புதிய எல்லை ஆயது. வடக்கே வேங்கடமலை என்னும் திருப்பதியும், தெற்கே குமரி என்னும் பேரியாறும், கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லைகள் என்க. இது தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துட் கூறியுள்ள பனம் பாரனுர் கூற்று. பனம்பாரனுர் அகத்திய முனிவர்பால் தொல்காப்பியரோடு ஒருங்கே கற்ற மாணுக்கர். தொல் காப்பியர் வடமொழி வியாகரண நூலாசிரியர் ஆகிய பாணினி முனிவருக்குப் பிந்தியவர் எனவும் முந்தியவர் எனவும் மயங்குவார் உளர். ஆசிரியர் சிவஞான அடி களார், "இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்" எனவும்,

> "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
> தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தும்
> குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்"

எனவும் கூறி, பாணினி முனிவரை அகத்திய முனிவரு டன் தொடர்பு படுத்தினுர். ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியர் பாணினி முனிவர்க்குக் காலத்தால் முந்தியவர் என ஆராய்ச்சியாளர் பலர் அறிவுறுத்துகின்றனர். பாணினி முனிவர் காலம் கி. மு. ஏழாம் நூற்றுண்டு என இந்திய வரலாற்றுநூற் பேராசிரியர் சீனிவாசையங்கார் பற்பல ஏதுக்கள் எடுத்துக்காட்டி நிறுவியுள்ளார்.

கந்தபுராணக் கதை முதற் கடல்கோளிற்கு முந்திய காலத்தில் நடைபெற்றது எனக் கண்டோம். இராமா யணக் கதையும், பாரதக் கதையும், தமிழகம் இவ்வெல்லைக் குள் அடங்கியிருந்த காலத்தில் நடைபெற்றுள்ளன. வானரவீரர் சீதைப்பிராட்டியைத் தேடிக்காணப் புறப் பட்ட வேளையில், அவர்க்குத் திருவேங்கட மலை முதலாகக் குமரியாறு ஈருகத் தெற்கே பரவியிருந்த தமிழகத்தின் இயல்பும், அதனுள் பொதியைமலைக்குத் தெற்கே நெடுந் தொலைவில் பாண்டியன் அரசிருக்கையாக விளங்கிய கபாடபுரத்தின் மாண்பும், சுக்கிரீவன் என்னும் அவர்தம் மன்னனுல் அறிவிக்கப் பெற்றன. கந்தபுராணக் கதைக்கு

ஓர் ஊழிக்குப் பின்னர் இராமாயணக் கதை திரேத ஊழியில் நடைபெற்றது. பாரதக் கதை அதற்கு அடுத்த துவாபர வூழியின் இறுதியில் நடைபெற்றது.

இவ்வாறு பன்னூறாண்டுகள் கழிந்த பின்னர் மீண்டும் ஓர் ஊழிப் பெருவெள்ளம் வந்தது. அதுகாலை குமரி முனைக்கும் குமரிப் பேரியாற்றிற்கும் இடையேயுள்ள தமிழகப்பகுதியையும், கபாடபுரத்தையும், கடல் விழுங்கியது. இதனால் விளைந்த பெருங் கேடுகள் முந்திய கடல் கோளினால் விளைந்தனவற்றிற்கு எத்துணையும் குறைந்தன அல்ல. அவற்றுள், தமிழ்மொழிக்கும் தமிழ்மக்கள் பண்பாட்டிற்கும் சேமநிதியாகப் பாண்டிய மன்னர் அதுகாறும் காப்பாற்றிவைத்திருந்த கலைக் கருவூலங்கள் அனைத்தும் தொலைந்தன. இக்காலத்தே எஞ்சி நிற்கும் தொல்காப்பியத்தையும், தொகைநூல்களிற் சில பகுதிகளையும் நோக்குமிடத்து, அவற்றின் நிலைமை,

> "அழுங்கல் நீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
> விழுங்கியபின் வீடு கொண்டற்று"

எனப் புகலுதற்குரிய புதுமையே ஆகும்.

அக்காலத்தே இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே இரு காவதத் தொலைவே இருந்தது. அக் கடல் கோளினால் இலங்கையும் கேடுற்றது. ஆங்கு நூற்றுக் கணக்கான பேரூர்களும், சிற்றூர்களும், பட்டினங்களும், பாக்கங்களும் அழிந்தன எனவும், மக்கள் எண்ணிறந்தோர் மாண்டனர் எனவும், அத்தீவக வரலாற்று நூல்களினால் அறிகின்றோம். அன்றியும், அது கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்தது எனவும் அறியக் கிடக்கின்றது. அறிஞர் வில்கெலம் கீகர் என்பார் அது கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தது எனக் கூறுகின்றார். கபாடபுரத்திற்குப் பின்னர்க் கடம்பவனம் எனவும், ஆலவாய் எனவும், கூடல் எனவும் பெயர் கொண்ட நம் வடமதுரை பாண்டிய மன்னன் கோநகர் ஆயிற்று.

தமிழகத்தே நிகழ்ந்த கடல்கோள் வரலாற்றினை ஆராயுமிடத்து, கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல்கொண்டதாக மணிமேகலையிற் குறிக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சியும் அதனுள் அடங்கும். அவ்வேளையில், பாண்டியநாட்டில், பொருநையாற்றின் சங்க முகத் துறையில், அதுபோலும் பல்லாற்றானும் சிறப்புற்றிருந்த கொற்கைப்பட்டினத்தைக் கடல் கைவிட்டு விலகியோடினமையால், அது நிலைகுலைந்து வீழ்ச்சியுற்றது. அவ்வமயத்தே கீழ்த்திசைக்கண் நாகநாட்டில் நானூறு காவதம் கடல்கொண்ட கதையும் கேட்கின்றோம்.

மேற்கூறியவாறு தமிழகத்தின் தெற்கெல்லை குமரியாற்றினின்று குமரிமுனைக்குப் பெயர்ந்த பின்னர், மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்த பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி முனிவரது நன்னூலில்,

> "குணகடல் குமரி குடகம் வேங்கடம்
> எனும் நான்கெல்லை"

நிறுவப் பெற்றன. தொல்காப்பியத்திற்கும் நன்னூலிற்கும் இடைப்பட்ட காலத்தே, மேற்றிசைக்கண் முன்னிருந்த மேல்கடல் ஆகிய எல்லை குடகத்திற்குப் பெயர்ந்து வந்துள்ள செய்தியும் ஈண்டே அறியற்பாலது. தென் குமரி வடபெருங்கல் எல்லையாகத் திகழ்ந்த காலத்தே, வடவாரியக் கடல் பெருக்கெடுத்து விழுங்கியதால், வடக்கெல்லை வேங்கடத்திற்குப் பெயர்ந்ததேபோல், இதுபோழ்து ஆங்கு வடுகக்கடல் பெருக்கெடுத்து நிற்றலால், அவ் வடக்கெல்லை மீண்டும் பெயருங்கொல்லோ எனத் தமிழ்மக்கள் பேதுறுவா ராயினர்.

தமிழ்ச்சங்க காலம்

இதுகாறும் தமிழகம் வெவ்வேறு காலங்களில் இருந்த நிலைமைகளையும், அவ்வக்காலங்களில் அதற்கு அமைந்த வெவ்வேறு எல்லைகளையும் கண்டோம். இனி அப் பழங் காலத்தே விளங்கிய தமிழ்ச்சங்கம் என்னும் தலை இடை கடைக் கழகங்களை ஆராய்வோம். அவற்றின் வரலாறு

நக்கீரர் என்னும் கடைக்கழகப் புலவர் பெயராலும், அடியார்க்கு நல்லார் இயற்றிய சிலப்பதிகார வுரையாலும் வழங்கி வருகின்றது. அது இக்காலப் புலவர்க்குப் புராணக்கதை போன்று தோன்றுமெனினும், அதன்கண் அடங்கியுள்ள வாய்மை எத்தகையதென உய்த்துணர்தல் இன்றியமையாத செயலாகும். "காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண், ஆய்தல் அறிவுடையார் கண்ணதே" "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு." அவ்வரலாற்றுச் சுருக்கம் வருமாறு :—

புலவர் கழகம் நிறுவித் தமிழ்மொழியைப் புறந்தந்த வேந்தர் ஈண்டிய பெரும்புகழ்ப் பாண்டிய மன்னரே ஆவார். காய்சினவழுதி தென்மதுரைக்கண்ணே முதற்கழகம் நிறுவினான். அக்கழகத்தில் ஐந்நூற்று நாற்பத்தொன்பது புலவர் உறுப்பினர் ஆயினர். அவருள் தலைநின்றார் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலானோர். அக்கழக மருவிய நூல்களில் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களிரியாவிரை முதலியன தலைசிறந்தன. வழுதியருள் எழுவர் விழுமிய புலவராய் விளங்கினார். அக்கழகத்தினர் கையாண்ட இலக்கணநூல் அகத்தியம். கடுங்கோன் என்னும் பாண்டியன் காலத்தில் தென்மதுரையைக் கடல் கொண்டது. அத்துடன் தலைக்கழகம் தலைசாய்ந்தது.

இரண்டாவது கழகம் வெண்டேர்ச் செழியனால் கபாடபுரத்தின்கண் நிறுவப்பெற்றது. அக்கழக வுறுப்பினர் ஐம்பத்தொன்பதின்மர். அவருள் தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழியார், மோசியார், வெள்ளூர்க் காப்பியனார், சிறுபாண்டரங்கனார், திரையன் மாறனார், துவரைக்கோனார், கீரந்தையார் முதலானோர் முதன்மை இடம் பெற்றனர். அவர் மேற்கொண்ட இலக்கணநூல்கள் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் என்பன. அக்கழக மருவிய நூல்களில் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலியன தலைமை சான்றன. செழியர் ஐவர் அக் கழகத்தில் சிறந்த

புலவராய்த் திகழ்ந்தனர். முடத்திருமாறன் காலத்தில் கபாடபுரம் கடலுள் மூழ்கியது. அத்துடன் இடைக் கழகம் இறுதி எய்தியது.

மூன்றாம்கழகத்தினை வடமதுரையில் நிறுவினான் முடத்திருமாறன். அக்கழகத்தில் உறுப்பினராய புலவர் பெருமக்கள் நாற்பத்தொன்பதின்மர். அவர் அனைவர் பெயரும் திருவள்ளுவமாலையில் திகழ்கின்றது. அவருட் சிறந்தார், சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறனார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஆவார். அக்கழக மருவிய நூல்கள் நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, புறநானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என இத்தொடக்கத்தன. மூவர் வழுதியர் மூன்றாம் கழகத்தே புலவர் வரிசையில் முதற்கண் நின்றார். உக்கிரப் பெருவழுதி காலத்தில் கடைக்கழகம் கடைநிலையுற்றது. அதற்குக் காரணம் அக்கழகப்புலவர் திருவள்ளுவரை இகழ்ந்துரைத்த தீச்செயல் என்ப. அக்காலத்துப் பாண்டியநாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றமையாற் பசிகடுகுதலும், மன்னன் கழகப்புலவரைக் கூவி, "வம்மின், யான் நும்மைப் புறந்தரகில்லேன். என் நாடு பெரிதும் வருந்துகின்றது. நீயிர் போய், நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்," என விடுத்தமையும் காரணம் ஆகும்.

இங்ஙனம், தமிழகத்தே, பாண்டியநாட்டிலே, மூன்று தலைநகர்களிலே, மூவாயிரம் ஆண்டுகள் உள்ளிட்ட மூன்று காலங்களிலே, மூன்றுகழகங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வரலாற்றிலே கடவுளர் தொடர்பு, மன்னர் மரபு, கால எல்லை முதலிய சிலவற்றில் கருத்து வேற்றுமை காணலாம். மூன்றில் முதற்கழகத்தின் காலம் சால நெடிதெனவும், அடுத்த இரு கழகங்களின் காலம் ஒன்றினொன்று மிகக் குறிதெனவும் கொள்ளற்பாற்று. எனினும், மூவாயிரம்

ஆண்டு அவை நடைபெற்றுள்ளன என்னும் கொள்கையை மறுப்பார் மேற்றிசைக்கலைவாணர் கோட்பாட்டினை மேற்கொண்டவரே ஆவார். அவர் கி. மு. ஐந்தாம் நூற்றூண்டிற்கு முந்திய காலம் வரலாற்று நூற்கு முற்பட்ட காலம் எனவும், கி. மு. ஐந்தாம் நூற்றூண்டு முதல் ஆயிரம் ஆண்டுகள் பழைய வரலாற்றுக் காலம் எனவும், அதற்குப் பிந்திய காலம் புதிய வரலாற்றுக் காலம் எனவும் வகுத்துள்ளார். அவர் வரலாற்று நூல் எல்லைக்குள் அடங்குவது ஐரோப்பியப் பெருமக்கள் வரலாறு ஒன்றே. அவர் கிரேக்கர், உரோமர், ஆங்கிலர் முதலியோர் ஆவார். அவர்க்கு முன்னமே தொன்றுதொட்டு நாகரிகம் பெற்று வாழ்ந்த தமிழர், சீனர், எகிப்தியர், யூதர், அசீரியர், பாபிலோனியர் முதலாய உலகப்பெருமக்கள் பலர் வரலாறுகள் அவ்வெல்லைக்குள் அடங்குவன அல்ல. ஆகலின், அவற்றை மறுக்கின்றனர். இதுகாறும் உலகில் தோன்றிய பெருமக்கள் பலருள் தாமே ஏற்றமுடையார் என்னும் எண்ணம் அவர் கண்ணையும் கருத்தையும் மயக்குகின்றது. அதனல், அவர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் கொள்கை நிலவிவருகின்றது.

"காணுதாற் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டாளும் தான்கண்ட வாறு."

இக்காலத்தில் முதலுலகப் போர், இரண்டாமுலகப் போர் என இரு நிகழ்ச்சிகள் பற்றி இயம்புகின்றனர். முந்திய போர்க்கு முன்னே பதினெண் வல்லரசுகள் உள எனக் கொண்டார். அவை அனைத்தும் அவர்தம் நாடுகளில் உள்ள அரசுகளே. பிந்திய போர்க்குப் பின்னே இதுகாலை நான்குவல்லரசுகள் உள என நவில்கின்றூர். அவை ஒற்றுமை அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், உருசியா என்னும் நான்குநாடுகளே. இந்தியா அவற்றுள் ஒன்று அன்று. சீனநாடு என்பது பார்மோசாத் தீவகமே எனப் பகர்வார். பிரான்ஸ்நாடு ஐதராபாத்து மாநில அளவினது. இங்கிலாந்து இந்தியாவில் இருபத்தைந்தில் ஒரு பகுதி அளவினது. உலக மக்கள் ஐந்தி

லொரு பகுதியினர் இந்தியாவிலும், நான்கிலொரு பகுதியினர் சீனத்திலும், மற்றைப் பெரும் பகுதியினர் இவ்வல்லரசுகள் அல்லாத ஏனைக் கீழ்த்திசை நாடுகளிலும் வாழ்கின்றனர். தாமே உலகின்கண் மக்கள் எனத் தகுதியுடையார் என்பது அவரது தருக்கு. அந்நிலையில் இவ்வாய்மையுரைகள் அவர் அரசியற் கழகங்களில் அரங்கேறுவனவல்ல. அவ்வாறே நம் தமிழ்க்கழகங்களின் காலவரையறையும் அவர் பல்கலைக் கழகங்களில் அரங்கேறவல்லதன்று. அதனால், இதன் பெருமையே பிறங்கிற் றுலகு.

"சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்"

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் மூவாயிரம் ஆண்டுகள் கலைக் கழகம் நடாத்திய தமிழ் மக்கள், அம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஓராயிரம் ஆண்டுகளேனும் கலைப் பயிற்சி யுடையராய் வாழ்ந்திருத்தல் வேண்டுமன்றோ?

பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என் வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி

தமிழக மூவேந்தர்

தமிழகம் தொன்று தொட்டு "வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" என மூவர்க்கும் பொதுவான வுரிமை யுடையதாய் விளங்கியது. எனினும், அம்மூவருள் பாண்டியன் முந்தியவன். அவனே தமிழ்க் கழகம் நிறுவியவன். அவனது நாடே செந்தமிழ் நாடு. ஏனைச் சோழ சேர நாடுகள் கொடுந்தமிழ் நாடுகளே.

"செந்தமிழ் நாடே
சந்தனப் பொதியத் தடவரை முனிவனும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப"

ஆதலின், பாண்டியனே தலைமை பெற்றான். அவனது நாடு தென்புலம் எனவும், அதன் வடக்கிலுள்ள சோழ நாடு வடபுலம் எனவும், இவ்விரண்டிற்கும் மேற்கிலுள்ள சேரநாடு மேல்புலம் எனவும் பெயர் வழங்கின. இம் மூவரும் "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருகின்ற பழங்குடித் தலைவர்," என்பது பரிமேலழகர் முதலாய பண்டை யுரையாசிரியர் துணிபு. தமிழகம் பெருகியுள்ள காலத்தும், அருகியுள்ள காலத்தும், இம்மூவரும் முடி யுடைப் பேரரசராய் அமர்ந்து, தமக்குத் துணையாகக் குறுநில மன்னரை நிறுவி, கண்ணை இமை காப்பது போலக் குடிகளைக் காப்பாற்றி வந்தனர்.

> "சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவை மூன்றும்
> வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயும்
> மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
> எய்தியக் கண்ணும் பிறர்க்கு"

ஆகலின், இவர்தம் அருளும், வாய்மையும், ஆற்றலும், சூழ்ச்சித் திறனும், செங்கோன்மையும், பிற பண்பு நலன் களும், ஈண்டு அளவிட்டுரைக்கற் பாலன அல்ல. கம்ப நாடர் கட்டுரைத்த வண்ணம்,

> "வையக முழுதும் வறிஞன் ஓம்பும் ஓர்
> செய்யெனக் காத்தினி தரசு செய்"தனர்.

பிற்காலத்தில் இவர் நாடுகட்கு எல்லைகள் பின்வருமாறு குறிக்கப்பட் டுள்ளன. ஆட்சி நலத்தின் பொருட்டுத் தொண்டை நாடு சோழ நாட்டினின்று தனியே பிரிக்கப் பெற்று, அரசிளங்குமரன் தலைமையில் வைக்கப் பெற்றமை யின், அந்நாட்டிற்குத் தனி எல்லை காட்டப்பெற்றது.

பாண்டிய நாடு

> "வெள்ளா றதுவடக்கு மேற்குப் பெருவெளியாம்
> தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளான
> ஆய்ந்த கடல்கிழக் கைம்பத் தறுகாதம்
> பாண்டிநாட் டெல்லைப் பதி"

வடக்கே வெள்ளாறும், மேற்கே பெருவெளியும், தெற்கே குமரிமுனையும், கிழக்கே கடலும் ஆகிய எல்லைக்குள், ஐம்பத்தாறு காவத விரிவுடையது. வெளி என்பதற்கு வழி என்றும் பாட வேறுபாடு உளது. அவ்வழி அச்சன் கோவில் என்றும் குறிச்சிக்கு அண்மையில் செல்கின்றது என்ப.

சோழ நாடு

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஏழ முதலா விருபத்து நாற்காதம்
சோழநாட் டெல்லையெனச் சொல்"

கிழக்கே கடலும், தெற்கே வெள்ளாறும், மேற்கே கோட்டைக் கரையும், வடக்கே ஏழமும் ஆகிய எல்லைக்குள், இருபத்து நான்கு காவத விரிவுடையது.

சேர நாடு

"வடக்குத் தலம்பழனி வான்கிழக்குச் செங்கோடு
குடதிசைக்குக் கோழிக்கூ டாகும்—கடற்கரையின்
ஓரமது தெற்காகு மோரெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு"

வடக்கே பழனியும், கிழக்கே செங்கோட்டையும், மேற்கே கோழிக்கூடும், தெற்கே கடற்கரையும் ஆகிய எல்லைக்குள், எண்பது காவத விரிவுடையது. செங்கோடு என்பதற்குத் தென்காசி எனப் பாட வேறுபாடு உளது. செங்கோடு என்பதற்குத் தென்காசிக்கு மேற்கிலுள்ள செங்கோட்டை எனவும், சேல மாவட்டத்தி லுள்ள திருச்செங்கோடு எனவும் பொருள் கூறுவார் உளர். கோழிக்கூடு என்னும் ஊர்ப் பெயர் இக்காலத்தே கள்ளிக்கோட்டை என மருவி வழங்குகின்றது.

தொண்டை நாடு

"மேற்குப் பவழமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குச்—சீர்க்குளுயர்
தெற்குப் பிணாகைத் திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாட்டெல்லை நாடு"

மேற்கே பவழ மலையும், வடக்கே வேங்கட மலையும், கிழக்கே கடலும், தெற்கே பினாகையும் ஆகிய எல்லைக்குள், இருபது காவத விரிவுடையது. பிஞகை என்பது செய்யாறு.

பாண்டியனுக்கு மீனக் கொடியும் வேப்ப மாலையும், சோழனுக்குப் புலிக் கொடியும், ஆத்தி மாலையும், சேரனுக்கு விற்கொடியும், பனம்பூ மாலையும் உரியன. இவர்க்கு முறையே ஞாயிற்று மரபு, திங்கள் மரபு, நெருப்பு மரபு கூறுவது தமிழ் வழக்கன்று; ஆரியர் வழியாக வந்தது. தமிழ் நூல்களில் பிரம சத்திரிய வைசிய சூத்திர வருணங்கள் தோன்றிய புதுமைபோல். ஆரியருள்ளும் அக்கினி குலம் என்னும் நெருப்பு மரபு பிற்காலத்தே படைத்துக் கொண்டதேயாம்.

தமிழகத்தின் குடிகள்

இறைவன் அறம் என்னும் ஊர்தியில் இவர்ந்து செல்கின்றான் எனவும், அவ்வூர்தி கிருதவூழியில் நான்கு காலாலும், திரேதவூழியில் மூன்று காலாலும், துவாபர வூழியில் இரண்டு காலாலும் நடந்து, இக்கலி யூழியில் ஒரு காலால் நடக்கின்றது எனவும், இவ்வூழியின் இறுதியில் அவ்வொரு காலினாலே நடப்பதற்குத்தானும் இடையூறுண்டாகி வீழ்ச்சி யடையும் எனவும், பண்டை வரலாற்றுப் பனுவல்கள் பகர்கின்றன. அவ்வூழிகட்குப் பொன்னும், வெள்ளியும், செம்பும், இரும்பும் ஆகிய தாதுப் பொருட்கள் முறையே ஒப்புமை காட்டப் பெற்றுள்ளன. ஊழிக் காலத்தின் தொடக்கத்தில் மக்கள் யாக்கை, உள்ளம், பண்பு, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் மிக்க உயர்நிலையில் இருந்தனர் எனவும், காலம் செல்லச் செல்லப் படிப்படியாய் இழிநிலை அடைந்து வருகின்றனர் எனவும், அப்பனுவல்களில் படிக்கின்றோம். இதற்கு எதிராக முற்காலத்தினும் இக்காலத்தில் மக்கள் அறிவு பன்னூறு மடங்கு வளர்ந்துள்ளது எனவும், அதற்கு விஞ்ஞானக்கலையே சான்று எனவும் பேசக்கேட்கின்றோம்.

ஆயினும், அவ்வறிவினால் விளைகின்ற நன்மையினும் தீமையே பன்மடங்கு பரவி வரக் காண்கின்றோம். அதனால் மக்கள் ஒழுக்கம் திருத்தம் பெற்றிலது என்பது வெளிப்படை.

நம் சமய நூல்கள் பதி அறிவு, பசு அறிவு, பாச அறிவு என அறிவினை மூவகைப்படுத்துக் கூறுகின்றன. அவ்வறிவில் விஞ்ஞானம் பாச அறிவின்பாற் பட்டது. பாசம் என்பது உலகப் பற்று. அது பற்றிய அறிவினை வளர்ப்போர் உலக சிற்றின்பங்களில் ஈடுபட்டு, ஒழுக்கம் கெட்டு, இழிநிலை எய்துவார். பசு அறிவு என்பது உயிர் தன்னைத் தானே அறிகின்ற அறிவு. அதனை வளர்ப்போர் தம் உயிரின் மாண்பினை உணர்ந்து, உலகப் பற்று நீங்கி, உயர்நிலை அடைவார். பதி அறிவு என்பது தலைவனை அறிகின்ற அறிவு. அதனை வளர்ப்போர், தம் உயிரின் சிறுமையையும் தலைவன் பெருமையையும் உள்ளவாறு உணர்ந்து, அவன் திருவருளால் அவனது தன்மையைப் பெற்று, எக்காலும் பேரின்பப் பெரு வாழ்வில் நிலைத்திருப்பார்.

நிலவுலகில் தமிழகத்தின் தென்புலத்தே முதன் முதற் படைக்கப்பெற்று, ஆங்கு வாழ்ந்த முதன் மக்கள் முற்கூறிய நல்லறிவும் நல்லொழுக்கமும் படைத்திருந்தார். ஊழிப் பெரு வெள்ளத்தில் தமிழகத்தினின்று வேற்று நாடுகளில் சென்று உய்ந்தோர், ஆங்குற்ற வசதிக் குறைவுகளினால் நாகரிகப் பண்பினை இழந்தனர். பிற்காலத்தில் அன்னார் நன்னிலை யுற்றுச் சிறிது நாகரிக மெய்தி நானில மாளும் நற்பேறும் அடைந்த காலத்தில், மிலேச்சராக இருந்த தம் முன்னோர் வரலாற்றினை எங்ஙனம் வரைந்தனரோ, அங்ஙனமே தமிழ்மக்கள் வரலாற்றிற்கும் பழங்கற் காலமும், புதுக் கற்காலமும், ஆடையின்றி வாடையின் மெலிந்து வருந்திய காலமும், வேட்டையாடி விலங்குகளைக் கொன்று, ஊனும் கள்ளும் உண்டு களித்த காலமும், உயர்வெய்திய காலமும் வகுத்து, வரைந்து தருவா ராயினர். அன்றியும், தம் கொடுங்கோன்மையினால் அடக்கி

ஆளப்பெற்ற மக்கள் பிறர் தம்மினும் மிக்குயர்ந்த நாகரிக நிலைமையில் தொன்று தொட்டு வாழ்ந்துவந்தவர் என்னும் உண்மையை வெளியிட நாண முற்றனர். அதனால், அவரது தொன்மையை அண்மையில் சில நூற்றாண்டுகட்கு முன்னர் வைத்துக் கணக்கிட முன்வந்தனர். தமிழக மக்கள் எக்காலத்திலேனும் அவர் போன்று மிலேச்சராய் வாழ்ந்தார் அல்லர். அவர்க்கு முந்திய பழங்குடிகள் எவரும் இலர். குமரிக் கண்டத்தையும், சிந்துவெளியையும், மேன்மேலும் துருவி ஆராய்ந்து நோக்குமிடத்து, இவ்வுண்மையை நிலைநாட்டுகின்ற எண்ணிறந்த சான்றுகள் எதிர்காலத்தில் வெளியாகும் என்பது உறுதி.

தமிழகத்தின் குடிகள் தாம் வாழ்ந்த நிலமும் தொழிலும் பற்றி ஐந்து வகுப்பினர் ஆயினர். மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். அந்நிலத்தில் வாழ்ந்த நிலமக்கள் குறவர், கானவர் ; தலைமக்கள் பொருப்பன், வெற்பன், குறத்தி, கொடிச்சி. அவர் தொழில் மலைநெல், தினை, கிழங்கு விளைத்தல், தேன் எடுத்தல். மலையை அடுத்த காடும், அதனைச் சார்ந்த இடமும் முல்லை நிலம். ஆங்கு வாழ்ந்த நிலமக்கள் இடையர், ஆயர் ; தலைமக்கள் தோன்றல், மனைவி. அவர் தொழில் ஆடு, மாடு, எருமை மேய்த்தல், சாமை, வரகு விளைத்தல். வனமும், வனம் சார்ந்த இடமும் பாலை நிலம். ஆங்கு நிலமக்கள் எயினர், மறவர்; தலைமக்கள் விடலை, எயிற்றி. அவர் தொழில் வழிப்பறி செய்தல், ஊர் கொள்ளையிடல். வயலும், வயல் சார்ந்த இடமும் மருத நிலம். ஆங்கு உழவர், கடையர் நிலமக்கள்; ஊரன், கிழத்தி தலைமக்கள். அவர் தொழில் நெல், கரும்பு விளைத்தல். கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம். அவண் நுளையர், பரதர், அளவர் நிலமக்கள் ; சேர்ப்பன், பரத்தி தலைமக்கள். அவர் தொழில் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல். நிலமக்கள் தலைமக்கள் என்னும் பிரிவு அவரது பொருள் வளம், தொழில், இவற்றின் தாழ்வினாலும், உயர்வினாலும் வந்தது. வேறு வேற்றுமை இல்லை.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

காலத்தினைப் பெரும்பொழுது சிறுபொழுது எனப் பிரித்து வழங்கினர். பெரும்பொழுது ஒன்று இரு திங்கள் கொண்டது; சிறுபொழுது ஒன்று பத்து நாழிகை கொண்டது. ஆறு பெரும்பொழுது கொண்டது ஆண்டு. ஆறு சிறுபொழுது கொண்டது நாள். ஆவணி, புரட்டாசி கார்ப் பொழுது; ஐப்பசி, கார்த்திகை கூதிர்ப் பொழுது; மார்கழி, தை முன்பனிப் பொழுது; மாசி, பங்குனி பின் பனிப்பொழுது; சித்திரை, வைகாசி இளவேனிற் பொழுது. ஆனி, ஆடி முதுவேனிற் பொழுது. ஞாயிறு மறைந்த பின்னர்ப் பத்து நாழிகை மாலைப் பொழுது; அடுத்த பத்து நாழிகை யாமப் பொழுது; விடியற்காலம் பத்து நாழிகை வைகறைப் பொழுது; ஞாயிறு தோன்றிய பின்னர்ப் பத்து நாழிகை காலைப் பொழுது; அடுத்த பத்து நாழிகை நண்பகற் பொழுது; சாயங்காலம் பத்து நாழிகை எற்பாடு என்னும் பொழுது.

இவற்றுள் கூதிரும், யாமமும், முன் பனியும் குறிஞ்சிக்கும்; காரும், மாலையும் முல்லைக்கும்; வேனிலும், நண்பகலும், பின் பனியும் பாலைக்கும்; ஆறு பெரும் பொழுதும், வைகறையும் மருதத்திற்கும்; ஆறு பெரும் பொழுதும் எற்பாடும் நெய்தலுக்கும் சிறப்பான பொழுதுகள். முருகன் குறிஞ்சிக்கும், திருமால் முல்லைக்கும், காளி பாலைக்கும், இந்திரன் மருதத்திற்கும், வருணன் நெய்தலுக்கும் சிறப்பான கடவுளர். கிளி, மயில் குறிஞ்சிக்கும்; காட்டுக்கோழி முல்லைக்கும்; புறா, பருந்து, கழுகு பாலைக்கும்; அன்னம், நாரை, தாரா, அன்றில் மருதத்திற்கும்; காகம் நெய்தற்கும் சிறப்பான பறவைகள். புலி, கரடி, யானை, சிங்கம் குறிஞ்சிக்கும்; மான் முயல், ஆன், ஆடு முல்லைக்கும்; செந்நாய் பாலைக்கும்; எருமை மருதத்திற்கும்; சுறா மீன் நெய்தற்கும் சிறப்பான விலங்குகள். குறிஞ்சியில் ஊர்களைச் சிறுகுடி என்றும், குறிச்சி என்றும், முல்லையில் பாடி என்றும், பாலையில் குறும்பு என்றும், மருதத்

தில் சிற்றூர், பேரூர் என்றும், நெய்தலில் பாக்கம், பட்டினம் என்றும் அழைப்பர்.

தமிழகத்தின் குடிகள் இயற்கை நெறியே செல்லும் இயல்பினர். அவர் வாழ்க்கை அகத்திணை எனவும், புறத்திணை எனவும், இரு பிரிவுடையது. அகத்திணையை இன்ப வாழ்க்கை எனவும், புறத்திணையைப் போர் வாழ்க்கை எனவும் கூறுப. வடநூலார் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கும், மாணி வாழ்க்கை, இல்வாழ்க்கை, காடுறை வாழ்க்கை, துறவு வாழ்க்கை என்னும் வாழ்க்கைநிலை நான்கும், அவ்விரண்டு பிரிவில் அடங்கும். அவர் வாழ்க்கையில் துறவு பெருவரவிற்றன்று. பொறையே தவம் எனவும், புறப்பற்று அகப்பற்று அறுத்தலே துறவு எனவும் கொள்வார். கோலத்தை மதியாது ஒழுக்கத்தையே போற்றுவார். கடவுளை வழிபடும் இடமும், முறையும், ஆகுல நீரன அல்ல. சாவதும் புதுவது அன்று என்பார். மறுமை இல்லை என்பாரை மடவோர் என்பார்.

அகத்திணை களவியல் கற்பியல் என இரு வகைப் படும். இவற்றை முறையே காதல் வாழ்க்கை, இல் வாழ்க்கை எனலாம். திருமணத்திற்கு முன்னர் நிகழ்வது காதல் வாழ்க்கை. அதற்குப் பின்னர் நிகழ்வது இல் வாழ்க்கை. இல்வாழ்க்கை நடத்துவோர்க்குத் துணைவர் வேண்டும். அத்துணைவர்க்கு அன்பு இன்றியமையாத பண்பு. அப்பண்புடையாரைத் தேர்ந்து கோடல் வேண்டும். அதுவே களவியல் ஒழுக்கத்திற்கு அடிப்படை.

அறிவு, ஆற்றல், பெருமை, குடிப்பிறப்பு முதலாய நலன்களையுடைய இளைஞன் ஒருவன், அவற்றுடன் நாணம், அச்சம், மடம் முதலாய பண்புகளையுடைய நங்கை ஒருத்தியை எதிர்ப்படுமிடத்து, அவர் இருவர் உணர்ச்சியும் ஒத்திருப்பின் அவரிடையே காதல் விளையும். அந்நிலையில், அவர் மேற்கூறிய பண்பு நலன்கள் உடையரா யிருத்தலின், தம் உள்ளம் போகும் போக்கினைத் தடுத்துத் தம் வழிச் செல்வார். செல்லுமிடத்துக் காதலுணர்ச்சியினால் ஒரு

வரை யொருவர் நீங்காது நினைத்திருந்து, மீண்டும் காண்டற்கு விரைவார். இங்ஙனம் செய்தல் தம் குடிப்பிறப்பிற்கும், தகுதிக்கும், நல்லொழுக்கத்திற்கும் ஒவ்வாதென உணர்ந்து, தம் தோழன் தோழி இவர்தம் உதவியை நாடுவார். பின்னர்க் காதலர் பகற் பொழுதே உரையாடல் இயலாராய், இரவுப் பொழுதில் உரையாடி வருவார். அதற்கும் பல்வகை இடையூறுகள் தோன்றும். செவிலித்தாய் ஐயுறின் தலைவியை இற்செறிப்பாள்.

அந்நிலையில், தலைவியை மணந்து இல்வாழ்க்கை நடத்த வேண்டித் தன் முயற்சியாய்ப் பொருள் தேடுமாறு, தலைவன் சிறிதுகாலம் பிரிந்து செல்வான். அக்காலத்தில் தலைவிக்கு ஒரு நொடிப் பொழுது ஓர் ஊழிக் காலமாகத் தோன்றுமாகலின், அவள் வழக்கம் போல் உண்ணலும், உடுத்தலும், உறங்கலும், உரையாடலும், விளையாடலும் செய்யாது, ஒடுங்கி யிருப்பாள். அதனால், அவளது அகவைக்கேற்ற ஒழுக்கம் உண்டாயிருத்தல் கூடுமெனச் செவிலித்தாய் உணர்ந்து, தோழியை வினவ, தோழி வாயிலாய் அவளுக்கும், அவள் வாயிலாய் நற்றாய்க்கும், நற்றாய் வாயிலாய்த் தந்தைக்கும், தன்னையர்க்கும், உண்மை புலனாகும். தலைவன் தலைவியை மணத்தற்கு அன்னார் உடன்படல் கூடும்; அன்றேல் மறுத்தலும் கூடும். உடன்படுவாரேல், தலைவன் தன் பெற்றாரையும் உற்றாரையும் தலைவி இல்லிற்கு விடுத்து, மணம் பேசி, தலைவியைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் பெறுவான்.

அவர் உடன்படாவிடின், மடலேறுதல், வரைபாய்தல் முதலாய கொடுஞ்செயலால், தலைவன் தன் உயிரை மாய்க்கத் துணிவான். அதுகாலை அவ்வூர்ப் பெரியார் அவன் நிலைக்கு இரங்கி, தம் பெருமுயற்சியால் தலைவியின் பெற்றாரை உடன்படுத்துவார். அப்பால் மணம் நிகழும். இம் முயற்சி வெற்றி பயவாவிடின், தலைவன் நள்ளிரவில் தலைவியை உடன்கொண்டு, வேற்றிடம் செல்வான். ஆங்கு அவர் இருவரும் வேற்றார்ப் பெரியார் துணைபெற்று, மண

முடித்துக் கொண்டு, தம்மூர் மீள்வார். அன்றேல் சிறிது காலம் சென்ற பின்பு, தலைவனது மனைக்கு வந்து, அவண் மணமுடித்துக் கொள்வார். அல்லது அவர் திரும்பி வருகின்ற செய்தி தெரிந்து, தலைவியின் பெற்றார் அவரை வரவேற்று, தம் மனையில் அவர்க்கு மணமுடித்து வைப்பார்.

திருமண நிகழ்ச்சியுடன் களவியல் முடிவுறும். பின்னர்க் கற்பியல் நிகழும். கற்பு என்பது தலைவி கணவன் மீது கொண்ட மாறாத உள்ளப் பற்று. "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" எனச் சொற்றாருமுளர். ஆயின், கற்பு என்பது கல்வியே. பிறந்தகத்தில் தாய், தந்தையர், செவிலியர், ஆசிரியர்பாற் கற்றுக் கொள்வனவும், புகுந்தகத்தில், கணவன், மாமன், மாமியர் பாற் கற்றுக்கொள்வனவும் ஆகிய ஒழுக்க பழக்க வழக்கங்களை நடைமுறையில் நிகழ்த்தும் இயல் கற்பியல். கணவன் பாற் கொள்ளும் உறுதியான மனப்பற்றும், ஒருகாலும் அவனது சொற்றிறம்பி ஒழுகாத ஒழுக்கமும், நூல்கள் வாயிலாய் அறிந்து தெளிந்த நல்லறிவும், பிறவும், இதனுள் அடங்கும்.

தமிழகத்தின் குடிகள் இல்வாழ்க்கை தனிச் சிறப்புடையது. அதற்கு உயிர்நாடி இல்லாளே. "இல்லாள் அகத்து இருக்க இல்லாத தொன்றில்லை." அத்தகைய இல்லம் வையத்துறக்கமே யாகும். "மனைக்கு விளக்கம் மடவாள்—மடவாள் தனக்கு விளக்கம் தகைசால் புதல்வர்." பெற்றோர்க்குப் பெரும்பொருள் பிள்ளைகளே. அவரே அவர்க்கு இம்மை இன்பமும், மறுமை இன்பமும் நல்குவோர். தமிழ்க் குடிகள் கருத்தடை அறியார். கருச் சிதைத்தல் என்பது அவர்க்குக் கடும் கொடும் வல்வினை. அதற்குக் கழுவாய் அரிது. மக்கட்குக் கல்விப் பயிற்சி நல்குதல் பெற்றோர்க்கு முதன்மையான கடமை. மக்கள் பெற்றோர்க்குச் செய்யும் கைம்மாறு தம் கல்வி அறிவு ஒழுக்கங்களினால் அவர்க்குப் புகழ் விளைத்தலே.

இல்வாழ்க்கையில் தலைவன் தலைவி இருவர்க்கும் ஒருவர்மீது ஒருவர் மாறாத அன்பும், அவர் இருவர்க்கும் தாம் பெற்ற மக்கள் மீது அத்தகைய அன்பும், உற்றார் உறவினர்

மீது அன்பும், விருந்தினர் மீது அன்பும் பெருகி வளரும். அன்பே அருள் என்னும் பண்பினை ஈனும் அன்னை. அன்பு இன்றி அறம் இல்லை. அன்பினால் செய்யும் அறங்களில், தென்புலத்தார், கடவுளர், விருந்தினர், சுற்றத்தார் என்பார்க்குச் செய்யும் அறமே தலைமையான அறம். ஆகலின், உழவுத்தொழில் முதலியவற்றால் வருகின்ற வருவாயில் ஆறில் ஒரு பகுதி அரசர்க்கு இறைப்பொருளாக வழங்கிய பின்னர், எஞ்சிய ஐந்து பகுதிகளில் மேற்கூறிய நால்வர்க்கும் நான்கு பகுதிகளைப் பயன்படுத்தி, ஆறாவது பகுதியினைத் தம்மைப் பேணுதற்குக் கையாளுவார். இல்லறம் செய்வார் தாம் உளராய் நின்று எல்லா அறங்களும் செய்ய வேண்டுதலின், தம்மை ஓம்புதலும் அறமே ஆகும்.

விருந்தினர் என்பார் இருவகையினர். பண்டு அறிவுண்மையிற் குறித்து வந்தார்; அஃது இன்மையிற் குறியாது வந்தார். உறவினர், நண்பர் முந்திய வகையினர்; வழிப்போக்கர், துறந்தார், துவ்வார், இரவலர் முதலானோர் பிந்திய வகையினர். இல்வாழ்க்கையின் குறிக்கோள் விருந்தோம்புதலும், வேளாண்மை செய்தலுமே யாம். "தமக்கென்றலை யேற்றார்" என்பதூஉம் காண்க. விருந்தோம்புதல் ஐம்பெரு வேள்வியின் ஒன்று.

மக்கள் அயலார் அனைவரிடத்தும் பண்பும் இன்சொல்லும் பாராட்டுவார். செய்ந்நன்றி மறவார். உற்றவிடத்து உறுபயன் நோக்காது பிறர்க்கு உதவி செய்வார். பிறர் தமக்குச் செய்த நன்மையை என்றும் மறவார்; அவர் செய்த தீமையை அன்றே மறப்பார். நடுவு நிலைமை தவறார். வணிகரும் அது பேணுவார்; கொள்வது மிகை கொள்ளார்; கொடுப்பது குறைபடார். பிறர் பொருளைத் தம் பொருள்போற் பேணி யொழுகுவார். உயர்ந்தோர் கருத்திற்கு ஒப்ப ஒழுகாவிடின், கல்வியறிவினாற் பயனில்லை எனக் கொள்வார்.

பிறர் மனைவியை நோக்காத ஆண்மையே ஆடவர்க்குப் பேராண்மை. குடிப்பிறந்தார் அயலார் பிழை பொறுப்பார்;

அவர் தீமையை நன்மையால் வெல்வார்; பிறர்மீது பொறாமை கொள்ளார்; பிறர் பொருள் வெஃகார். பிறரைப் புறங்கூறார்; யாண்டும் பயனில்லாத சொற்கள் சொல்லார்; தீவினைக்கு அஞ்சுவார்; மறந்தும் பிறர்கேடு சூழார்; ஒப்புர வுடையார்; வறியார்க்கு ஈவார்; அவர் பசி களைவார்; ஈதல் இயையாக் கடை சாதல் இனிதென வுன்னுவார்.

இத்தகை நற்பண்பும், நற்செயலு முடைய தலைவனும், தலைவியும், ஒருங்கியைந்து நடத்தும் இல்லறத்தினால், அவர் இருவர் மரபிற்கும் பெரும்புகழ் விளையும். அப்புகழே அவர் இம்மையில் எய்தும் பெரும்பேறு.

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்."

இல்லற வாழ்க்கைக்கு மறுதலை யாவது துறவற வாழ்க்கை. அது இயற்கைத் துறவு செயற்கைத் துறவு என இரு வகைப்படும். முதுமையில் இயற்கையாக வந்து அடுப்பது இயற்கைத் துறவு. இளமையில் செயற்கையாக வலிய அனைத்தையும் விடுப்பது செயற்கைத் துறவு. தமிழ் மக்கள் செயற்கைத் துறவு சிறப்புடையதெனக் கொண்டிலரேனும், இயற்கைத் துறவினை வெறுத்திலர். ஆதலின், வாழ்க்கைத் துணையுடன் இனிது வாழ்ந்து, மக்களைப் பெற்று, மாண்பொருள் படைத்து, இல் லறத்தின் வழுவாது ஒழுகிய தலைவனும், தலைவியும், தமக்கு முதுமைப் பருவம் நெருங்குதல் கண்டு, மறுமையில் வீடு பேறு அடையும் வழியை நாடுவார்.

அகத்திணையுடன் தொடர்புடைய புறத்திணை பொரு ளினாலும், அப்பொருள் பற்றி நிகழும் போரினாலும், சிறப் புற்று விளங்குவ தாகும். அதனால் அதனைப் **போர் வாழ்க்கை** என்பார்.

"ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யான்"

என்பான் வீரன். போருக்குக் காரணம் பொருளே. உலக வாழ்க்கையின் உயர்வும் தாழ்வும் பொருளின் நிலைமை

யைப் பொறுத்துள்ளன. உரிமை வாழ்க்கையும் அதனைச் சார்ந்தே நிலைபெறுகின்றது. அப்பொருள் மக்கள் ஒழுக்க நெறியினாலும், வழக்க நெறியினாலும் ஆக்கம் பெறும். மக்கள் அந்நெறிகளில் தவறுவாரெனின், அதனால் பிறர் பொருள் அழிவுறும். அங்ஙனம் தவறியோரை ஒறுத்தல் முறை ஆகும். முறை செய்தற்குரியார் மக்கள் தலைவர். அவரே வேந்தர். குடிகள் தத்தமக்குத் தோன்றியவாறே தம்மிடை முறைசெயப் புகின், நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலைபெறா. வேந்தர் அவருள் உடன்பிறந்தார் இடையும், அயலகத்தார் இடையும், அயலூரார் இடையும், பிறர் பலர் இடையும் தவறு செய்தாரை ஒறுக்கின்றார். அதனால் குடிகள் நெறிதவறாது ஒழுகுகின்றார். நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலவுகின்றன. இக் காரணம் பற்றி எழுந்தது தமிழகத்தின் வேந்தர் மரபு.

> "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
> கிறையென்று வைக்கப் படும்."

இறைவனை மக்கள் ஆயிரம் திருப்பெயர் சொல்லி இறைஞ்சிப் போற்றுவதே போல், தமிழ்ப் பழங்குடிகள் தம் மன்னனை அரசன், புரவலன், பெருமான், ஏந்தல், வேந்தன், பொருநன், குரிசில், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன் எனப் பல்வேறு பெயர் சொல்லிப் போற்றிவந்தனர்.

தமிழ் மன்னன் அமைச்சு, குடி, அரண், பொருள், படை, நட்பு என்னும் அரசியல் உறுப்புக்கள் ஆறும் உடையான். கல்வி, அறிவு, துணிவு, ஊக்கம், ஆண்மை, ஈகை, நெறிமுறைமை முதலாய பண்புகள் குறைவிலான். பெரியாரைத் துணைக்கொள்வான்; சிறியாரைச் சேரான். காலமும், இடமும், வலிமையும் அறிந்து ஒழுகுவான். கடமை மறவான்; இடுக்கண் அழியான்; ஆள்வினை உடையான். ஆறு உறுப்புக்களையும் அயராது பேணி வருவான்.

அரசியலுறுப்புக்களில் தலைநின்றான் அமைச்சன். அவன் மன்னற்குரிய பண்புகளுடன் மற்றை நலன்கள்

பல உடையான்; பொருளும் படையும் போற்றுவான்; காலமும், இடமும், வலிமையும், அவற்றிற் கேற்ற செய்கையும் அறிவான்; குடிகள் நலமே குறிக்கொண்டு பேணுவான்; நால்வகைச் சூழ்ச்சியும், ஐவகைத் திறனும் கையாளுவான்; சொல்வன்மையும், வினைத்தூய்மையும், வினைத்திட்பமும் குன்றான்; மன்னன் குறிப்பறிந் தொழுகுவான்; அவையின் நிலைமை அறிவான்; அவைக்கு அஞ்சாது பேசுவான்; தூதர் ஒற்றரைத் துணைக்கொள்வான். மன்னன் நலத்திற்கு வேறாக அமைச்சனுக்குத் தன் நலம் என்பது ஒன்றும் இல்லை.

இத்தகைய வேந்தனும், அமைச்சனும், அரசியலுறுப்பினர் பிறரும், குடிகளைக் கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்து, ஒழுக்க நெறியிலும் வழக்க நெறியிலும் வழுவா வண்ணம் ஒறுத்துப் பேணி வருமிடத்து, அயல் நாட்டினராய் அந்நெறிகளின் வழுவி, தம் குடிகளின் பொருளையும், உரிமையையும், உயிரையும் கவர விழைவோர் பிறரை ஒறுக்காது வாளா இருத்தல் கூடுமோ? குடிகள் நலத்திற்குப் பகையாயினோரைக் கொற்றவன் ஒறுத்தலே போர் ஆயிற்று. அவரைக் கொலையினால் ஒறுத்தல் அறமே யாம்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

அறப்போர் செய்யினும், அதுவும் காலமும், இடமும், வலியும் அறிந்தே செய்தல் வேண்டும். முந்திப் படையெடுத்துப் போர் தொடங்க வேண்டுமேல், சிறிதும் காலந் தாழ்த்தல் கூடாது. பகை மன்னனை முந்திப் படையெடுக்க விட்டுப் பிந்தித் தடுத்து நிறுத்தி ஒறுத்துப் பணிய வைக்க வேண்டுமேல் அவ்வாறே செய்தல் வேண்டும்.

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை".

அகத்திணை வகை ஏழனுள் இன்ப வாழ்க்கைக்குக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணையும் சிறப்புற்று நிற்றலே போல், புறத்திணை வகை

ஏழனுள் போர் வாழ்க்கைக்கு வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்னும் ஐந்திணையும் சிறப்புற்று நிற்பன. அவற்றுள், வெட்சிப்போர் ஆனிரை காரணமாக இருதிறத்தினரும் கைகலத்தல்; வஞ்சிப் போர் பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுதல்; உழிஞைப் போர் மதில் சூழ்ந்த பேரூரை முற்றுகையிடுதல்; தும்பைப் போர் முடிவு காணுமாறு கடுமையாகப் பொருதல்; வாகைப்போர் வெற்றி யெய்தி மீளல்.

ஆனிரை காரணமாகவே முதன் முதல் போர் தொடங்கும். அயல் நாட்டின்மீது படை யெடுத்துச் செல்லும் வேந்தன், அந்நாட்டில் பசுக்கள், பார்ப்பனர், பெண்டிர், பிணியாளர், பிள்ளையற்றார், இவர்க்குத் தீங்கு செய்தல் கூடா தென்பது அறநெறி யாகலின், தான் படையெடுத்துச் செல்லுமுன் அந்நாட்டிலிருந்து விலகிச் செல்லுமாறு அவர்கட்கு அறிவிப்பான். பசுக்கள் தாமே விலகிச் செல்லா வாதலால், அவற்றை அந்நாட்டினின்று வெளியேற்றுமாறு தன் படைத் தலைவர்க்குக் கட்டளையிடுவான். அவர் படை வீரரைத் திரட்டி, வெட்சிப் பூவைச் சூடிக்கொண்டு, நல்ல நேரத்தில் ஆரவாரத்துடன் புறப்படுவார்; வழியில் நிமித்தம் பார்ப்பார்; ஆனிரைகள் அமர்ந்திருக்கும் இடங்களையும், காவலர் நிலைமையையும், ஒற்றரால் உணர்வார்; நெருங்கிச் சென்று ஆனிரைகளை வளைவர்; எதிர்த்த காவலரைக் கொல்வார்; ஆனிரைகளைக் கைப்பற்றிக் கொண்டு செல்வார். எஞ்சிய காவலர் தம் தலைவர்பாற் சென்று தெரிவிக்க, அவர் படை வீரருடன் வந்து தடுக்க, அப்பொழுது நிகழும் கடும் போரில் சிலர் மடிந்து விழுவார். வெட்சி வீரர் ஆனிரைகளை மெல்ல நடத்திக் கொண்டு வருவார். அவர் வருகை கண்டு தமர் மகிழ்வார். ஆனிரைகளை ஊர்ப்புறத்தே நிறுத்துவார். வீரர் அவற்றைத் தமக்குள்ளே பங்கிடுவார்; நிமித்தம் கூறினோர், ஒற்றுரைத்தோர், துடிகொட்டியோர் முதலானோர்க்குப் பரிசளிப்பார்; வெற்றிகொண்டாடுவார். இவர் வெட்சிப் பூச் சூடிப் போர் செய்தலால், இது வெட்சிப் போர் எனப்படும்.

ஆனிரைகளைக் கவர்ந்த செய்தி பகை வேந்தனுக்குத் தெரிந்தவுடனே, அவற்றை மீட்டு வருமாறு அவன் தன் படைத் தலைவர்க்குக் கட்டளையிடுவான். அவர் படை வீரரைத் திரட்டி, கரந்தைப் பூவைச் சூடிக்கொண்டு, ஆரவாரத்துடன் புறப்படுவார்; வழியில் நிமித்தம் பார்ப்பார்; ஒற்றரால் நிலைமை உணர்வார்; ஆனிரைகள் அமர்ந்திருக்கும் இடத்தில் அவற்றை வளைந்துகொள்வார்; எதிர்த்த காவலரைக் கொன்று விழுத்துவார். எஞ்சியோர் விரைந்தோடித் தம் தலைவர்பாற் கூறுவார். அவர் படை வீரருடன் வந்து தடுப்பார். கடும்போரில் சிலர் மடிவார். கரந்தையார் ஆனிரைகளைக் கைப்பற்றி மீள்வார். தமர் கண்டு மகிழ்வார். வீரர் ஆனிரைகளை ஊர்ப்புறத்தே நிறுத்துவார்; பின்னர் அவை தத்தம் இல்லத்திற்குத் தாமே செல்லுமாறு விட்டுவிடுவார். நிமித்திகர், ஒற்றர், துடியர் முதலோர்க்குப் பரிசளிப்பார்; வெற்றி கொண்டாடுவார். இவர் கரந்தைப்பூச் சூடிப் போர் செய்தலால், இது **கரந்தைப் போர்** எனப்படும்.

வெட்சி, கரந்தை இரண்டும், பசுக்களைக் காப்பாற்றுதல் என்னும் ஒரு பொருள் பற்றியே நிகழும். ஒரோவழி வெட்சி வீரர் தோல்வியுறுதலும், கரந்தை வீரர் தோல்வியுறுதலும் இயல்பேயாம்.

ஆனிரை கவர்ந்து கொணர்ந்த மன்னன் அதன்பின் பகைவன் நாட்டின்மீதே படையெடுப்பான். படைத் தலைவர்க்குக் கட்டளையிட, அவர் படைவீரரைக் கூட்டிச் சேர்த்து நிற்க, அரசன் முதலியோர் அனைவரும் மிக்க ஆரவாரத்துடன் தம் தலையில் வஞ்சிப்பூவைச் சூடிக்கொள்வார்; நல்ல நேரத்தில் வேந்தனது கொற்றக் குடையையும், கூர்வாட் படையையும், பெருஞ்சிறப்புடன் தமக்கு முன்னே எழுந்தருளப் பண்ணுவார்; அவற்றின் பின்னர் அவரவர் வரிசைக்கேற்பத் தத்தம் தலைவர் கட்டளையால் படை வீரர் அணியணியாகப் புறப்படுவார்; பகைவர் நாட்டில் புகுவார்; செல்லுமிடந்தோறும் ஊர்களிலும், நெல்லும் கரும்பும் விளைந்த கழனிகளிலும், முதிர்ந்த சோலைகளிலும், நெருப்பிடுவார்.

அந்நிலையில், துணைவேந்தர் தம் படைவீரருடன் வந்து, வஞ்சி வேந்தனுடன் கலப்பார். அவன் அவர் நடுவில் பெருமிதத்துடனே தன் ஊர்தியில் இவர்ந்து, பணியாளர் தனக்கு அமைத்து வைத்த பாசறைக்குச் செல்வான். ஆங்கு அரியணையில் அமர்ந்து, பரிசிலர்க்குப் பொருளும், படை வீரர்க்குப் படைக்கலமும் பரிசளிப்பான். தன் வேற்படையை வலமாக உயர்த்தி, பகை மன்னனைப் புறங்கண்டன்றி மீளேன் என வஞ்சினங் கூறுவான். அக்காட்சியைக் கண்ட ஆடவர் அவன் ஆண்மையையும், சினத்தையும், பலபடப் புகழ்வார்; மகளிர் அவன் சினத்தினுல் பகைவர் நாடு பாழாகிவிடுமே என இரங்குவார். படை வீரர் நாடோறும் நாட்டிற்குள்ளே புகுந்து, பலவிடங்களில் காவல் புரிந்து நிற்கும் வீரர்களை வெட்டி வீழ்த்துவார். நீர் நிலைகளிலும், சோலைகளிலும் நிற்கும் கரிகளையும், பரிகளையும் கொல்வார்; பொழில்களையும் புறஞ்சேரிகளையும் நெருப்பினுல் எரிப்பார்.

வஞ்சிவீரர் தம்மிடையே வந்து புகுந்து, தம் வலிமையாற் செருக்கித் திரிதல் கண்ட பகைப் புலத்தினர் மானத்தினுல் உந்தப்பெற்று, மனம் வருந்திக் கொதித்தெழுந்து பொருவார். அந்நிலையில் பகைமன்னற்குத் துணையாய மன்னர் படைகள் வந்து சேரும். இருதிறத்தினரும் கடும் போர் நிகழ்த்துவார். தனிவீரர் பலர் ஆங்காங்குக் கல்லணை போன்று நின்று, பின்னிடுவோரைத் தடுத்து நிறுத்தி, பகைவரை வெட்டியும், குத்தியும், எய்தும், கொன்று தொலைப்பார். கரிப்படையும், பரிப்படையும், தேர்ப்படையும், காலாட்படையும், கலந்து எதிர்த்துப் போர் நிகழ்த்தும். வீரர் பலர் நெடுமொழி கூறுவார்; தம் மன்னன் முதுபுகழ் மொழிவார். இங்ஙனம் பன்னெடுநாள் நடைபெறும்.

வஞ்சிவேந்தன் தன் படைவீரர்க்குப் பெருவிருந்தளிப்பான். அவர்க்கு ஊக்கமும், உறுதியும், மகிழ்வும் பயக்கும் இன்மொழி கூறுவான்; அருஞ்செயல் நிகழ்த்தும் பெரும் புகழ் வீரர்க்கு மருத நிலங்களையும், மற்றும் விளைபுலங்

களையும், மாராயம் நல்குவான். படைத் தலைவர்க்கு ஏனாதி, காவிதி முதலிய வெற்றிப் பட்டம் வழங்குவான். இவற்றினால் ஊக்கமுற்ற படைத்தலைவரும், படைவீரரும், பகைவர் ஊர்களிற் புகுந்து, இல்லங்களிலும், மன்றங்களிலும் எரியூட்டுவார்; காவல் மரங்களை வெட்டி எறிவார்; நீர் நிலைகளை அழிப்பார்; குளங்களையும் ஏரிகளையும் தூர்ப்பார்; அணைகளையும், தேக்கங்களையும் உடைத்தொழிப்பார். இவற்றைக் கண்டோர் வஞ்சிவேந்தன் பெருமையையும், பகைவேந்தன் சிறுமையையும், பாரித்துரைப்பார்.

சிலவேளை, அந்நிலைமையில், பகைமன்னன் போரில் மடிவான். வஞ்சி மன்னன் அவன் நாட்டினைக் கைப்பற்றிக் கொண்டு, அவன் சுற்றத்தினரைத் தழுவிக்கொள்வான். அன்றேல், பகைமன்னன் வஞ்சி மன்னன்பால் தூதனுப்பி, அவனுக்குத் திறை அளக்க உடன்படுவான். வஞ்சி மன்னன் அதனை ஏற்றுக்கொண்டு, அவனைத் தழுவிக்கொள்வான்; பின்னர்ச் சின்னாள் பாசறையில் தங்கியிருந்து, அந் நாட்டுக் குடிகளைத் தன் அடிப்படுத்து, தன் ஆணையை ஆங்கு நிலைநிறுத்தி, வெற்றிச் சிறப்புடன் தன்னகர் மீள்வான்.

இங்ஙனம் நாட்டின் உரிமை என்னும் ஒரு பொருளைக் கைப்பற்றுதற்கு வஞ்சிப்பூச் சூடிப் போர் செய்தலால், இது **வஞ்சிப் போர்** எனப்படும்.

வஞ்சிப்போரில் தோற்ற மன்னன் தன்னை வென்ற மன்னன்பால் அடைக்கலம் புகாதும், அவற்குத் திறையளக்க உடன்படாதும், அவனை மீண்டும் எதிர்த்துப் பொர இயலாதும், அரண்கள் சூழ்ந்த கோநகர்க்கண் தன் படைகளுடன் குறுகி, மதில் வாயில்களை அடைத்துக் கொண்டு, ஆங்கு ஒடுங்கி யிருப்பான். வென்றி எய்தி விழாக் கொண்டாடிய வேந்தன், பின்னர் அவனது கோநகரைக் கைப்பற்றக் கருதுவான்; படைத் தலைவர்க்குக் கட்டளையிடுவான். அவர் தத்தம் படைவீரருடன் வந்து குழுமுவார். அவருடன் கலந்து சூழ்வான். அங்கிருந்த

வாறே பகைவனது வளநாட்டின் பகுதிகளைத் தன் படைத் தலைவர்க்குப் பரிசளிப்பான். அச்செய்தி கேட்டு அனை வரும் ஆர்ப்பெடுப்பார்; உழிஞைப்பூச் சூடுவார்; நல்ல நேரத்தில் மன்னன் காவற்குடையையும், ஏமவாட்படையை யும் எழுந்தருளப் பண்ணுவார்; முரசு முழங்க எழுந்து செல்வார்.

காட்டரண், மலையரண், நிலவரண், நீரரண் என்னும் நான்கு அரண்களைக் கடந்து செல்லுதல் வேண்டும். அது மிகவும் அரிய செயல் ஆகும். அவைகளிடையே மறைந்த காவல்களும், நெருங்கிய புதர்களும், கவர்நெறிகளும், கவைமுட்காடுகளும், முட்படல்களும், முள்வேலிகளும், முட்கதவுகளும், படுபள்ளங்களும், அமைந்து கிடக்கும். காடும், மலையும், வறுநிலமும் கடந்த பின்னர், அகழி குறுக்கிடும். அது கடல்போலும் அகற்சியும் ஆழமும் உடையதாய் நெடிய கொடிய முதலைகள் நிறைந்திருக்கும். அதனைத் தோணி, நாவாய் முதலியவற்றின் உதவியால், கடந்து செல்லுதல் வேண்டும். அதனை அடுத்து மலை போன்று மதிலரண் எதிர் நிற்கும். அதன்கண் புழை களும், ஏவறைகளும், நெடுஞ் சந்துகளும், அமைந் திருக்கும். அவற்றில் பகைவரை அழிக்கும் பொறிகளும், கருவிகளும் நிரம்பிக் கிடக்கும். வில், குரங்கு, குருவி, களிறு, பன்றி, பாம்பு, ஆடு, குதிரை, பேய், பருந்து, அரி கயிறு, தூண்டில், மூங்கில் என்பன பொறிகள். நெய்யுமிழ் கருவி, தீயுமிழ்கருவி, செம்புருக்குமிடா, உலை, குழிசி, கவண், இடங்கணி, தொடக்கு, கவை, கழு, புதை, புழை, ஊசி, கோல், குந்தம், எழு, சீப்பு, நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, சகடம், மரநிலை, ஐயவித்துலாம் என்பன கருவிகள். அப்பொறிகளையும், கருவிகளையும், புழை முதலிய உள்ளிடங்களில் அமர்ந்து வீரர் இயக்குவார்.

கோநகர் மதிலை முற்றவும் பற்றவும் உழிஞை வேந் தன் வருகை கண்டு, பகைமன்னன் நகரைக் காக்க முற்படு வான். தலைவரும் வீரரும் நகரைக் காப்பாற்ற வஞ்சினம் பூண்டு, நொச்சிப்பூச் சூடி, ஆரவாரிப்பார். நல்லவேளை யி

மன்னன் குடையையும் வாளையும் முன்னே அனுப்புவார். முரசுகள் முழக்கமிடப் பின்னே செல்வார். காவற் காட்டில் வந்து, உழிஞை வீரரை எதிர்ப்பார். அவரை ஆங்குத் தடுத்து நிறுத்த இயலாவிடின், அகழியைக் காக்க விரைவார். அகழியிலும், அதன் கரைகளிலும் போர் நிகழும். உழிஞை வீரர் அகழியைக் கைப்பற்றி முன்னேறு தலும், நொச்சிவீரர் புறமதிலைக் காக்க முயல்வார்.

உழிஞை வீரர் பலவகை ஏணிகளையும், கிடுகுகள், கேடகங்கள், பரிசைகள், பலகைகள் முதலான தடைக் கருவிகளையும் எடுத்துக்கொண்டு, மதில்மிசை ஏறுவார். நொச்சிவீரர் தடுப்பார்; மதிற் பொறிகளையும் கருவி களையும் இயக்குவார். விற்பொறிகள் அம்புகளைப் பொழி யும். குரங்குகள் எட்டிப் பாய்ந்து கடித்துப் பிய்க்கும். குருவிகள் கண்களைக் குத்தும். களிறுகள் தலைகளை முறுக்கித் திருகும் பன்றிகள் பாய்ந்து மார்பினைக் கிழிக்கும். பாம்புகள் வாய்திறந்து விழுங்கும். ஆடுகள் கொம்புகளினால் வயிற்றைக் குத்திக் குடரை இழுக்கும். குதிரைகள் உதைத்து அகழியில் தள்ளும். பேய்கள் அறைந்து கொல்லும். பருந்துகள் உச்சியில் குத்தி மூளையை எடுக்கும். அரிகயிறுகள் பற்றினோர் கைகளை அரியும். தூண்டில்கள் முட்களினால் கோத்து வலிக்கும். மூங்கில்கள் எலும்புகள் நொறுங்கி நையப் புடைக்கும். நெய்யுமிழ் கருவிகள் கொதிக்கின்ற நெய்யைச் சொரியும். தீயுமிழ் கருவிகள் நெருப்புத் தழல்களை உமிழும். உருக்கு மிடாக்கள் கொதிக்கின்ற செம்பு, ஈயம், இரும்புக் குழம்புகளைச் சொரியும். கவண்கள் கற்களை எறியும். இடங்கணிகள் சிறுகற்களை மழைபோன்று விரைந்து பொழியும். தொடக்குகள் கழுத்தில் கழுக்கோல் பூட்டி முறுக்கும். கவைகள் உடம்பினை இடுக்கி, மறிந்து விழத் தள்ளும். புதைகள் அம்புகளை மிகுதியாக எறியும். ஊசி கள் கால்களிலும் கைகளிலும் தைக்கும். கோல்களும், குந்தங்களும், வேல்களும், அவ்வப் படைக்கலங்களைக் குறிப்பாகக் கையாளும். நூற்றுவரைக் கொல்லிகள் வீரரை

நூற்றுக் கணக்காக நூறும். தள்ளிவெட்டிகள் தலை குப்புறத் தள்ளி வெட்டும். சகடங்கள் உடம்புகளை அகப் படுத்தி ஈர்த்தோடும். ஐயவித்துலாம் தலைகளைக் கொய்து எறியும். மரமிலை உடம்புகளை நெருக்கி, எலும்புகளைக் கூழாக்கும்.

இவற்றின் நடுவில், உழிஞை வீரர் மதில்மீது சார்த்திய ஏணிகளின்மேல் உடும்புபோல் பற்றியும், அணில்போல் விரைந்தும், பாம்புபோல் சீறியும், அஞ்சாது இவர்ந்து செல்வார். நொச்சிவீரர் அவரை ஏணிகளில் இடை மறித்தும், மதில் உச்சியில் எதிர்த்து நின்றும் பொருவார். ஒருபுறம் உழிஞை வீரர் வெல்வார். மறுபுறம் நொச்சி வீரர் மேற்கொள்வார். பகற்பொழுதே போர் செய்வார்; இரவுப் பொழுதே ஓய்ந்திருப்பார். இவ்வாறு பலநாள் கழியும்.

உழிஞை வீரர் இப்பொழுது முற்றுகையிட் டிருப்பது புறமதில். அதற்குள்ளே புறஞ்சேரி மதில், நகர்ப்புறத்து மதில், அகமதில், மனைப்புறத்து மதில் எனப் பல மதில்கள் ஒன்றையொன் றடுத்து, இடைவெளி தோன்ற அமைந்து கிடக்கும். அகமதிலுக்குள்ளே அரசனுடைய காவற் கோட்டைகள் நிரை நிரையாக நிற்பன. காவற் கோட்டைகளைக் கடந்த பின்னரே அரசிருக்கை காண லாம். இத்தகைய மதிலரணுக்குள்ளே உணவின்றிப் பன்னெடுநாள் பசியினால் வாடிக் கிடக்கின்ற நொச்சி வீரர் உழிஞை வீரரை எதிர்த்துப் போராடுதல் அரிய செயல் ஆகும். உழிஞை வீரர் இத்துணைக் காலமும் மதிற்புறத்திலே வதிந்து, உண்ணல், பருகல், உறங்கல், நீராடல் முதலிய நல்ல வசதிகள் பெற்றிருந்தனரேனும், இனிமேல் அவை வாய்க்கப் பெறார். இப்பொழுது, அன்னார் தமக்கு முன்பின் பழக்க மில்லாததும், மேலே காட்டிய வண்ணம் மதிலுக்குள்ளே மதிலும், கோட்டைக் குள்ளே கோட்டையுமாய் அமைந்துள்ளது மாகிய கோநகர்க்குள்ளே புகுதல் வேண்டும். ஆங்குப் புகுந்த பின்னர் நொச்சி வீரர்க்குரிய வசதிக் குறைவுகள்

இவர்க்கும் நேரிடும். அவற்றினை மேற்கொள்ளும் ஆற்றல் அவர்க்குப்போல் இவர்க்கு இராது. எனவே, காலந்தாழ்க்காது விரைவில் நகரைக் கைப்பற்றின் அன்றி, வெற்றி எய்துதல் சாலாது.

கோநகர் முற்றுகை நீடுதலால், நகர மாந்தர்க்கு உணவுப் பொருள் குறைவுபடும். அதனால் பஞ்சம் உண்டாகும். அதன் விளைவாய்ப் பசியும், பட்டினியும், பிணியும், சாவும் மக்களை வருத்தும். எப்பக்கமும் அழுகையும், புலம்பலும், கூக்குரலும் தோன்றும். சிறுவர் கூவி அழுவார். அன்னையர் பரிவுற்றுப் புலம்புவார். பருகும் நீரும் கிடையாது போம். கரி, பரி, ஆடு, மாடு முதலாய விலங்குகள் பலவும் பிளிறுதலும், கனைத்தலும், கதறலும், விளித்தலும் கேட்கும். படைவீரரும் பசி தாழாது வருந்துவார். அந்நிலையில் நகரப் பெருமக்கள் மன்னன்பாற் சென்று, அவனுக்கு நிலைமையை அறிவுறுத்தி, நகர வாயில்களைத் திறந்து மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுவார்.

அதுகாலை உயிர்கள் அடையும் துன்பங் கண்டு உள்ளமுருகும் உயர்ந்தோர் பலரும் உழிஞை வேந்தனை அணுகுவார். அவன் அமைச்சருடன் சூழ்வான். தன் படை வலிகுன்றுதல் காண்பானாயின், நொச்சி வேந்தன் மகளை மணந்து உடன்படிக்கை செய்துகொள்ள வகை தேடுவான். அவன் இணங்கி வரின், போர் நின்று, நலம் விளையும். மகட்கொடை மறுப்பின், அதன் விளைவு கடிதில் வெளிப்படும்.

மறுநாள் காலை முரசு முழங்கும் பொழுது, உழிஞை மன்னன் கீழ்த் திசையில் எழுந்து வருகின்ற செஞ்ஞாயிற்றைச் சினந்து நோக்குவான். அதன் குறிப் புணர்ந்த உழிஞை வீரர் அகப்பைகளையும், துடுப்புக்களையும், அகமதிலுக்குள்ளே எறிவார். அன்று ஞாயிறு படுதற்கு முன்னர் அகமதிலைக் கைப்பற்றி, மாலைப் பொழுதில் அம் மதிலுள்ளே உணவு சமைத்து உண்போம் என்பது, அவர் செயலின் கருத்து.

கடும்போர் தொடங்கும். வீரரொடு வீரரும், தலைவ ரொடு தலைவரும், வேந்தரொடு வேந்தரும் எதிர் நின்று, வஞ்சினங் கூறிப் பொருவார். நொச்சி வேந்தன் விழுவா னேல், உழிஞை வேந்தன் அவன் பெயரால் முடிபுனைந்து, மங்கல நீராடுவான்; அவனை வீழ்த்திய தன் வாளிற்கு மங்கல நீராட்டுவான். அத்துடன் நொச்சி வீரர் எதிர்ப்பு நின்றுவிடும்.

உழிஞை வீரர் வெற்றிகொண்டாடுவார். நகர மாக் கட்கு அவர் எவ்வகைத் துன்பமும் இழைப்பார் அல்லர். எனினும், தம் இறைவன் ஆணையால் மதிலை அழிப்பார்; பகைவேந்தன் பெருமையை விளக்கும் மாட மாளிகைகளை இடித்தெறிந்து, நெருப்பினால் எரிப்பார்; கழுதைகளை ஏரிற்பூட்டிக் கோநகரை உழுது, எள்ளும், கொள்ளும், வரகும் விதைப்பார். அரசன் அந்நாட்டினை அடிப்படுத் தும் பொருட்டுச் சிலநாள் ஆங்கு வதிந்து, பின்னர்ப் படை வீரர் புடைசூழ வெற்றிச் சிறப்புடன் திரும்புவான். இவர் உழிஞைப் பூச்சூடிப் போர்செய்தலால், இது உழிஞைப்போர் எனப்படும். உழிஞை, நொச்சி இரண்டும், கோநகர் உரிமை என்னும் ஒரு பொருள்பற்றியே நிகழும்.

ஆனிரை, நாடு, நகர் இவற்றைக் கைப்பற்றுதலே பொருளாகக் கொண்டு போர் நடத்துவோர், பின்னர் அப் போரில் நெருக்கம் உண்டாயவிடத்து, தம் வலிமையை நிலைநாட்டுதலே பொருளாகக்கொண்டு நடத்துகின்ற கடும் போர் தும்பைப் போர் எனப்படும்.

அப்போர் தொடங்கும்பொழுது, வேந்தன் தும்பைப் பூவைச் சூடி வந்து, தன் படைத்தலைவர்க்கும், படைவீரர்க் கும், தும்பைப் பூக்கள் நல்குவான். அவர்கள் பேராரவாரத் துடன் அவற்றைச் சூடிக்கொள்வார். பின்னர்ப் போரில் அதுகாறும் அரிய செயல்புரிந்த தலைவர்க்கும், வீரர்க்கும், வெற்றிக்குறியும், பொன்னும், மணியும், பொருளும், வள நாடும், விளைநிலமும், கரியும் பரியும் முதலியன பரிசில் அளிப்பான். படைவீரர் போர்முழக்கம் செய்வார், வெற்றி

எய்துதல், அன்றேல் உயிர்விடுதல் என வஞ்சினங் கூறுவார். அக்கொடிய காட்சியைக் கண்டோர், பகைவர்நிலை என்னகுமோ என ஏங்குவார்.

கடல்போல் இரையும் காலாட்படைகளும், முகில்போல் முழங்கும் யானைப்படைகளும், காற்றென விரையும் தேர்ப்படைகளும், அம்புபோற் பாயும் குதிரைப்படைகளும், அணியணியாகப் புறப்பட்டுச் செல்லும். அப்படைகளைப் பருந்தும், கழுகும், கூற்றும், பேயும் பின்தொடரும். போர்க்களத்தில் பகைவேந்தனைக் கொல்வதே மாற்றார் குறிக்கோள் ஆகும். யானைமீது வருகின்ற வேந்தன் ஒருவனை அவனது பகை வேந்தனும், அவனுக்குத் துணைவராம் மன்னர் பலரும், தத்தம் யானைகளுடன் ஞாயிற்றை மறைக்கும் கருமுகில்கள்போல் சூழ்ந்துகொள்வார். அப்பொழுது அவ்வேந்தன் படைவீரர் அவனுக்குத் துணையாக வந்து சேர்வார். அவர் தம் கையிலுள்ள வேற்படையினல் பகைமன்னர் வேழங்களைத் தாக்குமிடத்து, அவை தம்மீதிவர்ந்துள்ள மன்னருடன் கீழ்மேலாக மலைகள்போல் சாய்ந்து விழும். மன்னன் தேர்மீது அமர்ந்து தன் படைகளை நடத்தும் பொழுது, பகைவர் பெருந்திரளாகப் பட்டு விழுந்து, அவன் தேர்க்கால்கள் அவர்தம் பிணங்கள்மீது இவர்ந்தோடும். படைவீரர் பின்னிடவும் தாம் பின்னிடாது நின்று, தம் நிலையில் தம்மைத் தொடர்ந்து வருகின்ற வாள்வீரரை எதிர்த்துப் போர்செய்வார் சில வாள்வீரர்; வேல்வீரருடன் மாறுபட்டு வந்து பொருவார் சில வேல்வீரர்.

தும்பைப் போர்க்களத்தில் வீரர் பலர் வாயினின்றும் வீரமொழிகள் வெளிப்படுவன.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்"

என்பது ஒருவன் கூற்று.

"இன்ன ரெனவேண்டா வென்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும்—மன்னர்

பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண்''

என்பது பிறிதொருவன் கூற்று. "வாளினுற் பேசல் அல்லால் வாயினுல் பேசல் தேற்றேன்,'' என்பது இன்னொருவன் கூற்று.

"கான முயலெய்த அம்பினில் யானை''
பிழைத்தவே லேந்த லினிது''

என்பது பின்னொருவன் கூற்று.

"விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு''

என்பது மற்றொருவன் கூற்று. "ஏற்றவர் இமைப்பினும் இகழ்ந்தெறிதல் செய்யார்'' என்பது பிறன் ஒருவன் கூற்று. அவர் செயலும் அத்தகையனவே.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

"அழியுநர் புறக்கோடை அயில்வாள் ஓச்சார்''

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு''

"வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகிற் கிடான்கவசம்—தன்றம்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறக்கொடுக்கி னென்று''

யானையுடன் பட்டு விழுந்த வீரர், பெருவரை முரிந்து விழ அதனுட்பட்டு மடிந்த அரிமா ஒப்பார். வாட்படை கைப்பற்றி நாற்புறமும் வீசித் துள்ளிப் பாய்வார் தோற்றம், அகன்ற பெரிய பொய்கையில் துள்ளிப்பாயும் வாளை மீன்களின் காட்சியை ஒக்கும். மார்பிலும், தோளிலும், தொடையிலும், முகத்திலும் அம்புகள் புகுந்து அஞ்சாது உயிர்நீத்த வீரர் உடல், மண்மீது படியாது, அம்புகளினிடையே படிந்து கிடப்பன.

வேந்தன் வீழ்வானெனின், மாற்றான் படை வீரர் அவனைச் சூழ்ந்து நின்று, வாள் வீசி ஆடுவார். தம் வேந்தன் பட்ட துணர்ந்த வீரர் அக்கணமே கொடிய வாட்போர் தொடுத்து, அப்போரில் உயிர் நீப்பார். இரு பெருவேந்தரும் கடும்போர் நிகழ்த்தி ஒருங்கே மடிவாரு முளர். வெற்றி எய்திய வேந்தன் தேர்முன்னே வீரர் ஆடுவார். அத்தேரின் பின்னே வீரரும் விறலியரும் ஆடுவார். அத்தேரின் முன்னும், பின்னும், இருபுறத்தும் பேய்கள் கூத்தாடும். உயிர் துறந்த வீரர்புகழைப் பாணர் யாழ் மீட்டிப் பாடுவார். வானோர் துறக்கத்தில் அவரை வரவேற்பார்.

வெற்றி எய்தும் செயல் வாகை ஆகும். மேற்குறித்த போர்களில் வெற்றி எய்துவோர் வாகைப் பூச்சூடி வெற்றி விழாக் கொண்டாடுவார். ஆயின், தமிழ்மக்கள் போர் வெற்றி ஒன்றினை மட்டுமே வாகை எனக் கொண்டார் அல்லர். படை எடுத்துச் செய்யும் போரினை மட்டுமே போர் எனக் கொண்டாரும் அல்லர். வலிய கொள்கைகளை நிறைவேற்றுதற்குச் செய்யும் அரிய முயற்சிகள் அனைத்தும் அவர்க்குப் போரேயாம்; அவற்றில் எய்தும் வெற்றி வாகையேயாம். அவரவர் தத்தம் தொழிலில் அடையும் சிறப்பும் வாகை எனவே கொண்டனர்.

குடிபுரத்தற் சிறப்பு அரச வாகை, மறையொழுக்கச் சிறப்பு பார்ப்பன வாகை, வாணிகச் சிறப்பு வணிக வாகை, உழுதொழிற் சிறப்பு வேளாண் வாகை, தவச் சிறப்பு தாபத வாகை. இவையன்றி ஆடற்போர், பாடற்போர், சொற்போர், மற்போர், சூதுபோர் முதலான போர்களும், அவற்றில் எய்தும் வென்றிகளும் வாகையாம். சிவல், குறும்பூழ், கோழிச்சேவல் முதலான பறவைகளும், தகர், எருமை முதலான விலங்குகளும் வாகைத்திணைக் குரியன.

அரசியல் அமைப்பு

இதுகாறும் பண்டைத் தமிழகம் எனவும், தமிழ்க் கழகம் எனவும், தமிழ் மக்கள் வாழ்க்கைத் திறம் எனவும்

பெயர் வைத்து, அவற்றுள் ஒரு சில செய்திகளை மட்டுமே ஓராற்றான் ஈண்டு எடுத்துக் காண்பித்தோம். இனி அத் தமிழகத்தின் கண்ணே தமிழ்க் கழகம் நிறுவியும், தமிழ்ப் பழங்குடிகளைப் பேணியும் தனிச் சிறப்பெய்திய வேந்தர் மாண்பினைக் கூறுதல் இயைபுடைத்தாகும்.

இக்காலத்து வரலாற்று நூலோர் என்பார் அவர் வரலாற்றினைக் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னர்க் கொண்டு செல்ல உடன்படுவார் அல்லர். தொல்காப்பியர், திருவள்ளுவர் காலங்களைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு காறும் கொண்டுவந்துள்ளார். பண்டைத் தமிழகம் என்பதும், தமிழ்க்கழகம் என்பதும் கட்டுக்கதையென விட்டுத் தள்ளினாரும் உளர். ஒரிரு பெரியார் கிறிஸ்து பெருமான் திருப்பிறப்பிற்கு முந்திய தமிழ் மன்னர் ஓரிருவர் உளராவார் என உவந்துரைத்தார். அறிஞர் போப்பையர் அப்பெருமான் தனியடியார் பன்னிருவருள் ஒருவர் முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் எழுந்தருளியுள்ளார் எனவும், அவருக்கும் நம் வள்ளுவருக்கும் தொடர்புளது எனவும் வரைந்துள்ளார். அவ்வடியார் நம் வள்ளுவர் வாழ்ந்த திருமயிலையில் சமாதி அடைந்தமை வரலாற்றுநூல் உண்மை ஆகும். அவர் பெயரால் அமைந்த திருக்கோவில் ஆங்கு உளது. அவர்பால் அறவுரை கேட்டுய்ந்த சீரிய மக்கள் வழியினர் திருவிதாங்கூர், கொச்சி, மலையாள மாவட்ட நாடுகளில், இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் தக்க அறிவும் ஆராய்ச்சியுமின்றி அப்பண்டை மன்னர் காலத்தை வரையறுக்கப் புகுதல் அடாத செயல் ஆகும். அவர்தம் நீதி வழுவா நெறி முறைமையும், பிறவும், முன்னர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். இனி அவரது அரசியல் அமைப்பு முதலியனவற்றில் சில செய்திகளை மட்டும் எடுத்துக் கூறி இதனை முடிப்பாம்.

இக்கால அரசியல் அமைப்பு முறைமைகளில், ஆங்கிலர் முறைமை முடியரசோடு கூடிய குடியரசு எனவும், மக்கள் நலத்தின் பொருட்டு மக்களால் நடைபெறுகின்ற

மக்களது அரசியல் எனவும், அதனுள் பாராளுமன்ற அமைப்பு பொதுமக்கள் கருத்துக்களை ஆட்சியாளர்க்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்ற இணையற்ற சிறப்புடையது எனவும் இயம்புகின்றனர். அவ்வாங்கிலர், இடையில் நூறு ஆண்டுகள் நம் நடுவில் வந்து, நம் ஆசிரியக் கட்டிலில் அமர்ந்து, நம் வரலாற்றுப் பழைமையை மறைத்து, தம் வரலாற்றுப் புதுமையையே நமக்கு அறிவுறுத்தி வந்தமையான், நம்மவர் பலர் இன்னும் அதனுள் மயங்கிக் கிடக்கின்றனர். அவ்வாங்கிலர்க்கு ஆசிரியராகிய உரோமர்க்கும், அவர்க்கு ஆசிரியராகிய கிரேக்கர்க்கும், பாபிலோனியர் முதலான பழம்பெரு மக்கட்கும் முன்னரே, நம் முன்னோர் நிலவுலக மக்கள் அனைவர்க்கும் அரசியற் பெரும் பேராசிரியராய் நிலவிய பெருமை யுடையார் என்பது நினைவில் இருத்துதற் குரியது.

முடியரசோடு கூடிய குடியரசு முறைமையில் முதன் முதல் தோன்றியது தமிழகப் பேரரசே ஆகும். அது சேர சோழ பாண்டியப் பேரரசு என மூவகைத்து. அதில் அரசனே தலைவன். அவன் கோநகர்க்கண் அரசு கட்டிலில் வீற்றிருந்தான். அவனுக்கு உதவியாக ஐம்பெருங் குழு, ஐம்பெருஞ் சுற்றம், எண்பேராயம் என்னும் அரசியற் கழகங்கள் அமைந்திருந்தன. அவற்றுள் அமைச்சர், சமயகுரவர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் முதலானோர் உறுப்பினர். அவ்வுறுப்பினர் பல்வேறு தொழில் பற்றிப் பல்வேறு திறத்தினர் ஆயினர்.

பேரரசு மாநிலத்தை மண்டலங்கள் எனவும், மண்டலங்களைக் கோட்டங்கள் எனவும், கோட்டங்களைக் கூற்றங்கள் எனவும், கூற்றங்களை நாடுகள் எனவும், நாடுகளை வளநாடுகள் எனவும், வளநாடுகளைப் பேரூர்கள் எனவும், சிற்றூர்கள் எனவும், பற்றுக்கள் எனவும், குறைப்பற்றுக்கள் எனவும் பிரித்துள்ளார். ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே தலைவர் நிறுவப்பெற்றனர். அவருட் பெருந் தலைவர் வேந்தன் உறவினர் ஆவார். வேந்தற்குப் பின்னர் அரசுகட்டில் ஏறுதற்குரிய இளவரசன் தனிநாடும் தனி

நகரும் பெற்று, அரசியற் பயிற்சி அடைந்தான். கொற்கையில் இளங்கோப் பாண்டியன் அமர்ந்து தென்பாண்டி நாட்டையும், காஞ்சிநகரத்தில் இளங்கோச் சோழன் அமர்ந்து தொண்டைமண்டலத்தையும் ஆண்டமை காண்க. கோவேந்தற்குக் கீழே குறுநில மன்னர் இருந்தனர். அவருட் பெரும்பாலார் குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் நிலத் தலைவரே ஆவார்.

இவ்வமைப்பில் அடங்கியுள்ள புரவுவரித்திணைக்களம், பண்டாரம், ஆவணக்களரி முதலாய அலுவலகங்களும், அவற்றின் அலுவலாளரும், அவர் அலுவல்களும், நிலவரி முதலான பலவகை அரசிறையும், அதன் வரவு செலவு இருப்புக் கணக்கும், தணிக்கையும், நிலத்தின் அளவைகளும், வாணிக முறைகளும், கைத்தொழில் வளங்களும், நாணய வகைகளும், கல்வித்துறைச் சிறப்பும், படைப் பயிற்சி மாண்பும், திருக்கோவில் நடைமுறைகளும், அயல் நாட்டு வாணிகமும், துறைமுக ஆட்சியின் பெருமையும், அயல்நாட்டு அரசியல் உறவும், இவை போன்றன பிறவும் ஈண்டு விரித்துரைக்கற் பாலனவல்ல.

அரசன் பொறுப்பில் அமைந்த அலுவல்கள் அனைத்தையும் அமைச்சர் முதலானோர் பகிர்ந்து கொள்ளுதலால், அவனது நிலை "மூவண்ணல் முத்தொழில் செய்ய வாளா மேவண்ணல்" நிலை போன்றது. அமைச்சர் முதலான அரசியல் தலைவர்கள் அனைவரும் தத்தம் துணைவர் பலருடன் நாட்டாண்மைமீதே எப்பொழுதும் நாட்டமுடையவராய் இருப்பாரேனும், நாடெங்கும் பரவியுள்ள நகரங்களையும், சிற்றூர்களையும் தனித்தனியே கண்காணித்து நடத்துதல் அவர்க்கு அரிய செயலாகும். ஆயினும், அவை நாட்டிற்கு முதுகெலும்பு போன்றும், உயிர்நிலை போன்றும் உறுதி பயப்பன. அவற்றைப் பேணுதலால் மட்டுமே நாடு நலமும் வளமும் பெறும். ஆதலால், நகராண்மை, ஊராண்மை என்னும் ஆட்சிகள், இன்றியமையா வாயின. அஃதுணர்ந்த மன்னனும், மதிவல்ல அமைச்சரும், அவற்றிற்குத் தனியாட்சி வழங்கி, அதற்குரிய விதிமுறைகளை

வகுப்பாராயினர். அந்நகராண்மையும், ஊராண்மையும், அவற்றின் விதிமுறைகளும், இன்றும் உலகில் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்கி நிற்கின்றன.

பேரூர்கள் தனித்தனியே நகராண்மை நடாத்தின. சிற்றூர்கள் சில சேர்ந்து ஊராண்மை செலுத்தின. அவ்வவ்வூர்களில் ஆட்சிக் கழகங்கள் நிறுவப் பெற்றன. ஆண்டு தோறும், குறிப்பிட்ட காலத்தில், அக் கழகங்கட்குக் குடவோலை வாயிலாய் உறுப்பினர் தெரிந்தெடுக்கப் பெற்றனர். உறுப்பினர் அனைவரும் ஊதியம் யாதும் பெறாதே பணியாற்றி வந்தனர். குடவோலை இடுதற்குரியார், அவர் இடும் முறை, அதனைக் கணக்கிடும் வகை முதலியன அனைத்தும் வியத்தற்குரிய நுட்பங்கள் உடையன. ஊராண்மைக் கழகங்களில் உட்கழகங்கள் அமைந்திருந்தன. அவற்றை வாரியம் என்பார். அவற்றின் உறுப்பினரை வாரியர் என அழைப்பார். அவர்க்கு வெவ்வேறு அலுவல்கள் இருந்தன. நெறிமுறை வாரியர் ஊரார் வழக்குரைகளைக், கேட்டு, முறை வழங்கியும், அற நிலையங்களைக் கண்காணித்தும் வந்தனர். தோட்ட வாரியர் நிலங்களையும், விளைபுலங்களையும், பாதுகாத்தனர். ஏரி வாரியர் ஏரி, குளம், வாய்க்கால், ஊருணி முதலான நீர்நிலைகளைக் காப்பாற்றினர். பொன் வாரியர் நாணயங்களை ஆராய்ந்தனர். ஐவரி வாரியர் குடிகள் அரசர்க்குச் செலுத்த வேண்டிய நிலவரியையும், பிற வரிகளையும் வாங்கிக் கருவூலத்திற்கு அனுப்பினர். இவ்வலுவல்களில் இவர்க்கு உதவி செய்தற்கு ஊர்கள்தோறும் பொதுமன்றங்கள் இருந்தன. அவை திருக்கோவில் மண்டபங்கள் முதலியவற்றில் நடைபெறும். மன்றத்தினர் விதிக்கின்ற ஒழுங்கு முறைகளுக்கும், கட்டளைகட்கும், திறம்பி நடப்பார் எவரும் இலர். அதனால் வாரியர் பொறுப்பு எளிதாய் நிறைவேறியது.

இங்ஙனம் முடியரசும் குடியரசும் ஒருங்கே இயங்கிச் செவ்வனே நடைபெற்று வந்தவிடத்தும், எதிர்நோக்காத நிலைமையில் மிக்க அரிதாக இவ்வரசியலிடை விளையும் சில இன்னல்கள் உள. அவற்றைக் காலந்தாழ்க்காது உடனே

நீக்குதல் வேண்டும். அன்றேல் அரசியல் வான் சகடம் செல்லாது தெற்றிற்று நின்று. உதாரணமாக, இன்று நம் நாட்டில் பொதுமொழிப் பெருவினா ஒன்று உளது. ஒரு மொழியைப் பொதுமொழியாக்க முயல்கின்றனர் நம் குடியரசுத் தலைமை அமைச்சர். ஆரம்பக் கல்வித்திட்டம் பிறிதொரு பெருவினா. பாதிவேளை கல்விப் பயிற்சியும், பாதிவேளை கைத்தொழிற் பயிற்சியும் செய்விப்பது. அதனை நாட்ட முயல்கின்றனர் நம் மாகாணத் தலைமை அமைச்சர். இருவர் கருத்தும் நன்றேயாம். எனினும், மக்கள் கையாளுதற்கு ஏற்றன அல்ல. உலகில் மிகச் சிறு நாட்டிலும் பல பொதுமொழிகள் கையாட்சி பெறுகின்றன. அது அந்நாட்டினர்க்கு நலம் பயக்கின்றது. ஓர் ஆரம்பப் பள்ளியில் கல்விப் பயிற்சிக்கு ஓராயிரம் வெண்பொன் செலவு செய்யின், கைத்தொழிற் பயிற்சிக்கு பதினாயிரம் வெண்பொன் செலவு செய்தல் வேண்டும். நம் நிதி நிலைமை அதற்கு இடம் தந்திலது. புல்லுண்ணாத பசு புதுக்குடம் நிறையப் பால் கறவாது. இந்நிலையில் சிறுவர் திண்டாடுகின்றனர்; பெற்றோர் மன்றாடுகின்றனர்; பருலேகர் அதனைக் கொண்டாடுகின்றனர். இப்பெருவினாக்களைத் தீர்த்தல் யாங்ஙனம்?

நம் பண்டை அரசியலில் இத்தகைய இன்னல் பயக்கும் பெருவினாக்களைத் தீர்க்க இடம் இருந்தது. ஐம்பெருஞ் சுற்றத்துள் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் ஆகிய அறவோரும், பொய்யடிமை யில்லாத புலவர் பெருமக்களும் இருந்தனர். அவர் அறிவிலும், ஆண்டிலும், ஒழுக்கத்திலும் முதியோர். திருவள்ளுவரும் புகழ்ந்த திருவுடையார். சமயப் பெருங்குரவரும் தம்பால் அடிமைபூண்டொழுக விழைந்துள்ள விழுமியோர். பிறாண்டும், "அறன் அறிந்து மூத்த அறிவுடையார்" எனவும், "உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்" எனவும், "பெரியார்" எனவும், "தக்கார்" எனவும், "இடிக்குந் துணையார்" எனவும், "ஏந்திய கொள்கையார்" எனவும், "சிறந்தமைந்த சீரார்" எனவும், வள்ளுவர் பல

படப் போற்றிய தெள்ளியார். மன்னர் அவரைப் பிழையாது ஒழுகுதல் வேண்டும் என்பது மதியுரை. குமரகுருபர அடிகளார், "தக்கார் நெடுமொழி கோறல் கெடுவது காட்டும் குறி" எனக் குறித்ததூஉம் இதுவே. இத்தகைய பெருவினைக்களுக்கு முடிவு காண்பார் முக்காலமும் உணர வல்ல அப்பெரியாரே. அவர் முடிவினை மன்னன் அக்கணமே தலைமீது தாங்கி நிறைவேற்றுதல் வேண்டும். அவ்வேளையில் குடியரசு நிற்க முடியரசுக் கோட்பாடு முன்வந்து உதவும். முழுமுதற்றலைமை சர்வாதிகாரம்—என்பது முடியுடை வேந்தற்குரிமை யன்றோ?

பாண்டியன் அறிவுடை நம்பி தன் பெயரினுக்கேற்பக் கல்வியறிவிலும், கவிசொல்லும் திறத்திலும், மிகச் சிறந்த காவலன். மக்கட்பேற்றின் இம்மைப்பயன் குறித்துச் சுருக்கமும் விளக்கமுமாக அவன் செய்துள்ள அரிய செய்யுள் வள்ளுவர் குறளை அடியொற்றிச் செய்ததோ, வள்ளுவர் குறள் அவனது செய்யுளை அடியொற்றிச் செய்யப் பெற்றதோ என எவரும் ஐயுறும் சிறப்புடையது. அவன் ஆட்சிக் காலத்தில் ஆடல், பாடல், அழகுக் கலைகட்கும், உரிமைச் சுற்றத்திற்கும் பரிசில் வழங்குதலிற் பெரும் பொருட்செலவு மிக்கது. அதனாற் குடிகள்பாற் கொள்ளும் இறைப்பொருளும் வரம்பு கடந்தது. அமைச்சர் முதலானோர் எவரும் அவனை அணுகி, அறிவு கொளுத்த மாட்டாத நிலையில் இருந்தனர். குடிகள் பெரிதும் வருந்தினர். "இன்னல் தீர்த்து இவரைக் காப்பார் யாரே?" இது அதுபோழ்து நிகழ்ந்த பெருவினை. பிசிராந்தையார் என்னும் பெரும்புலவர் அவனுழைச் சென்று, பின்வருமாறு செவியறிவுறுத்தி, குடிகள் இடுக்கண் களைந்தார் :—

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமும் கெடுமே" (புறம்-184)

சோழன் கிள்ளிவளவனுக்கும், மலையமான் திருமுடிக் காரிக்கும் பகைமை யுண்டாகிப் போர் நிகழ, அப்போரில் மலையமான் மடிந்தனும், அவன் இளம்புதல்வர் இருவரும் வளவன்பாற் சிறைப்பட்டனர். அவ்விருவரே பிற்காலத்தில் ஔவையார் முயற்சியாற் பாரிமகளிர் இருவரையும் மணந்தனர் என்ப. கிள்ளி காரிமீதுற்ற கிளப்பருஞ் சினத்தான் அவன் இளஞ்சிறார் இருவரையும் மதவேழ முன்னர் இட்டுக் கொல்ல முடிவுசெய்தான். அம்முடிவினை மாற்ற வல்ல ஆற்றல் படைத்த மதியமைச்சர் எவரும் இலர். குறித்த நாள் வந்தது. கொலைக்களிற்றின் முன்னர்க் குறுநடைச் சிறாரைக் கொணர்ந்தனர். கண்டோர் எவரும் மனம் வருந்திப் புலம்பிக் கண்ணீர் சொரிந்தார். "இக் கொடுஞ் செயலினை விலக்குவார் யாரே?" இது ஆங்கு நிகழ்ந்த பெருவினா. அதுகாலைக் கோவூர்கிழார் எனனும் கொழுந்தமிழ்ப்புலவர் கோவேந்தன்பாற் குறுகி, அடியில் வருமாறு அறிவுறுத்தி, அவரை உய்யக்கொண்டார் :—

"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கண்நோ வுடையர்
கேட்டனை யாயின் நீ வேட்டது செய்ம்மே" (புறம். 46)

இவை இரண்டும் தெய்வப்புலவர் இருவர், மன்னன், மக்கள், இருவர் நலமும் ஒருங்கு கருதி, உற்றுழி உதவிற்றிய உயரிய செயல்களாம். இனி அறவோர் செயல் ஒன்று

ஈண்டுக் குறிப்பாம். சோழன் நெடுமுடிக்கிள்ளி புகார் நகரத்தில் ஆட்சிபுரிந்த காலத்தில், அவன் புதல்வன் உதயகுமரன் துறவி மணிமேகலையைக் காமுற்றுப் பின் தொடர்ந்து திரிதலும், அவள் காயசண்டிகையின் கோலங்கொண்டு கரந்துறையுங்கால், காயசண்டிகையைத் தேடி வந்த அவள் கணவன் காஞ்சனன் என்பான், அவன் தன் மனைவியுடன் தொடர்புகொண்டுளான் என மாறு பட்டு, அவனை வாளால் எறிந்து வீழ்த்தினான். அது கண்ட நகரமாந்தரும், பிறரும், கோவேந்தன் வெகுளி யினால் தமக்கும், மணிமேகலை முதலாய மற்றையோர்க்கும், என்னென்ன தீங்குகள் நேரிடுமோ என அஞ்சி, மன்னற்கு உண்மை தெரித்து மக்களை உய்விக்க வல்லார் யாவரோ என ஏங்கி நிற்புழி, அப்பேரூர்க்கண்ணே சக்கிரவாளக் கோட்டத்தே வதிந்த அறவோர் அனைவரும் ஒருங்கே திரண்டு, அரசன்பாற் சென்று, கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப அவற்குப் பல நல்லுரை கூறி, அதன்பின் அன்று நிகழ்ந்த செய்கையை அறி வுறுத்தி, மக்கள் நலனையும், மணிமேகலை உயிரையும் காப் பாற்றி, அவரது ஏக்கத்தைத் தீர்த்தனர். இஃது மணி மேகலைக் காப்பியம் இருபத்திரண்டாவது காதையில் விரித் துரைக்கப் பெற்றுள்ளது.

இங்ஙனம், நம் பண்டை அரசியலில் அறவோரும் புல வோரும் பொதுமக்கள் கருத்தினைப் புரவலற்குப் புலப் படுத்தி, அவர் இருதிறத்தினரையும் உற்ற வேளையில் ஒருங்குடன் புரந்த செயல்கள் பல வுள. விரிவஞ்சி இத் துடன் நிறுத்துகின்றோம்.

வாழிய தமிழகம் வயங்குபுக ழெய்தி
வாழிய தமிழ்க்கழகம் வானுற வுயர்ந்தே
வாழிய தமிழ்க்குடிகள் வண்மைநல மெல்லாம்
வாழிய திருப்புகழ் இசைக்கழகம் வாழி.

உ. பல்லவர்காலம் (கி. பி. 250—கி. பி. 900)

[திரு. வ. பொன்னுசாமி பிள்ளை அவர்கள், எம். ஏ.]

பல்லவர் காலம் தமிழக வரலாற்றில் மிக முதன்மை வாய்ந்ததோர் காலமாகும். தமிழகம் தமிழகமாக உருவான காலம் அது. தேவாரமும், திருவாய்மொழியும் நாட்டில் தோன்றிய காலம்; அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் தங்கள் பாமாலைகளால் சைவத்தை வளர்த்த காலம்: நம்மாழ்வாரும், மங்கைமன்னனும், திருமழிசை ஆழ்வாரும் வைணவத்தை வளர்த்த காலம்; பௌத்தமும், சமணமும் நலிவுற்று, சிதைந்து, தமிழகத்திலிருந்து மறைந்தகாலம்; சிற்பமும், ஓவியமும் சீர்பெற்று ஓங்கிய காலம்; குகைக்கோயில்களும், மலைக்கோயில்களும், கற்கோயில்களும் எழுந்தகாலம்; நகரத்தாரும், நாட்டாரும், கிராமத்தாரும் தங்கள் தங்கள் குழுவில்கூடி மக்களுக்கு நீதி வழங்கிய காலம்; வறுமையும், பிணியும் மக்களை வாட்டாத காலம்; வளம் பெற்றகாலம்.

இத்தகைய மாண்புமிக்க காலத்தில் தமிழகத்தில் பேரரசர்களாய் ஆட்சிபுரிந்தோர் பல்லவர்கள் ஆவர். அவர்களது தலைநகர் தொண்டைநாட்டின்கண்ணுள்ள காஞ்சிமா நகராகும். சோழமன்னர்கள் பெரும்பாலும் பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாய் இருந்தனர். தமிழகத்தை உருவாக்கிய பல்லவர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்களா, அல்லது பரதகண்டத்தின் பிற பகுதிகளைச் சார்ந்தவர்களா, அல்லது அண்டை நாடுகளிலிருந்து தமிழகத்தில் குடியேறியவர்களா? என்பது ஆராய்ச்சிக்குகந்த பொருளாகும்.

ஒரு தலைமுறைக்கு முன்னர், ஆராய்ச்சியாளர்கள் பல்லவர்களைப் பரதகண்டத்தின் வடமேற்கிலுள்ள பாரசீக

நாட்டைச் சேர்ந்தவர்களென்றும், அவர்கள் பாஞ்சாலம், கூர்ஜரம், தக்கணம் வழியாகத் தொண்டைமண்டலப் பகுதியை அடைந்தவர்களென்றும் கருதினர். பல்லவர்களை அயல்நாட்டார்கள் என்று அவர்கள் கொண்ட கொள்கைக்கு அத்தாட்சியாகப் பற்பல காரணங்களைக் கூறினர். பார்த்தியன் (பாரசிகன்) என்னும் சொல் நாளடைவில் பால்த்தியன் எனத் திரிந்து, இறுதியில் பல்லவன் என்று மாறியது எனக் கருதினர். மேலும் நம் நாட்டு இதிகாசங்களிலும், புராணங்களிலும் பார்த்தியர்கள் யவனர்களோடும், சாகர்களோடும் குறிப்பிடப்படுகின்றனர். ஆகவே, அம் மக்களைப்போலவே பார்த்தியர்களும் (பல்லவர்களும்) அயல்நாட்டார்களாகவே கருதப்படவேண்டும். கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் கூர்ஜரத்தில் ஆட்சி புரிந்த ருத்திரதாமன் என்னும் சாகமன்னன் அவனது கிர்நார் கல்வெட்டில் சுவிஷகன் என்னும் பல்லவ அதிகாரியைப்பற்றிக் குறிப்பிடுகின்றான். ஆகவே, வடமேற்கு நாடுகளிலிருந்து பல்லவர்கள் கூர்ஜரத்தை அடைந்திருக்கக் கூடுமெனக் கருதப்படுகின்றது.

மேலும், ஆந்திர அரசியான, 'பாலஸ்ரீ' என்பவர் அவருடைய மகன் கௌதமி ஸ்ரீசதகர்ணி என்பவரின் வெற்றியைக் கல்வெட்டுகளில் குறிப்பிடுகையில் பல்லவர்களும் சாகர்களும் புறமுதுகிட்டோடினர் என்கின்றார். ஆகவே, கூர்ஜரத்திலிருந்து தெற்கு நோக்கிச்சென்ற பல்லவர்களைக் கௌதமி ஸ்ரீசதகர்ணி என்னும் ஆந்திர மன்னன் தடுத்துப் போரில் வெற்றிபெற்றிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. சிறிதுகாலம் பல்லவர்கள் ஆந்திரருக்குட்பட்ட சிற்றரசர்களாக வாழ்ந்து அன்னார் வீழ்ச்சிக்குப் பின்னர், கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தென்பகுதியில் சுதந்தர அரசு ஒன்றை அமைத்திருக்க வேண்டுமென்று கருதப்பட்டது. மேனாட்டு வரலாற்றுஆசிரியர்களும், கல்வெட்டு ஆராய்ச்சியாளரான டாக்டர். வெங்கையாவும் பல்லவர்களை அந்நியர்களென்றே கருதினர்.

சில ஆண்டுகளுக்குமுன்னர், டாக்டர் எஸ். கிருஷ்ண சுவாமி ஐயங்கார், பி. டி. சீனிவாச ஐயங்கார் முதலிய அறிஞர்கள் பல்லவர்களைப் பரதகண்டத்தைச் சார்ந்த மக்களென்றும், அவர்கள் அயல்நாட்டார்கள் அல்ல என்றும் பல சான்றுகளுடன் தெளிவுறுத்தினர். பார்த்தியன் என்னும் பதம், மொழிநூல் இலக்கணப்படி பல்லவன் எனத் திரிவுற்று மாறுது என்பது உண்மை. பல்லவர்கள் தங்களை அந்நியர்களெனக் கருதவில்லை. அவர்களுடைய கல்வெட்டுகளிலிருந்து அறியக்கிடப்பது யாதெனின், அவர்கள் பரதகண்டத்தைச்சார்ந்த மக்களே என்பதாகும்.

பல்லவன் என்னும் அவர்களுடைய முன்னோன் பாரத யுத்தத்திற்குப் பின்னர், தெற்கு நோக்கி வந்த துரோண குமாரனான அசுவத்தாமனுக்கும், நாககன்னிகை ஒருத்திக்கும் பிறந்தவன் ஆவன். ஆகவே, பல்லவர்கள் பாரத்துவாச கோத்திரத்தைச் சார்ந்த க்ஷத்திரியராவர்கள். மைந்தன் பிறந்தவுடன் நாககன்னிகை அக்குழந்தையைப் பல்லவம் என்னும் படர்கொடி மெத்தையின் மேல் துயில்வித்தாள். ஆகவே, அம்மைந்தனுக்குப் பல்லவன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. பல்லவர்கள் தமிழ்நாட்டிற்கு அந்நியர்கள் எனின், அவர்களுடைய கல்வெட்டுகளில் இத்தகைய கதை ஒன்றைக் காண்பதரிதன்றோ?

மேலும், தமிழகத்தில் புதுக்கோட்டை மன்னர்கள் பல்லவராயர்களென அழைக்கப்படுகின்றனர். அவர்கள் கள்ளர்மரபின் தலைவர்களாவர். கள்ளர்கள் தமிழக மக்களாவர். ஆகவே, பல்லவர்களை அந்நியர்களெனக் கருதுவது முறையன்று. மேலும், வேளாண்மரபினரின் ஒரு பகுதி பல்லவராய கோத்திரத்தைச் சார்ந்ததெனக் கருதப்படுகின்றது. கள்ளர் சமுதாயத்தைப்போலவே வேளாண்மரபினரும் தமிழ்மக்களாவர். அவ்வாறாயின், பல்லவர்களை அந்நியர்களெனக் கருதுவது தவறன்றோ? கி. பி. 10-வது நூற்றாண்டில் வாழ்ந்த ராஜசேகரன் என்னும் ஆசிரியர் அவரது **புவன கோசம்** என்னும் நூலில் சிந்து

நதிக்கப்பாலுள்ள பாலவர்களும், தென்னிந்தியாவிலுள்ள பல்லவர்களும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவரெனக் குறிக்கின்றமையால், அந்நிய நாட்டுப் பாலவர்களே, தமிழகத்துப் பல்லவர்களெனக் கருதுவது சிறிதும் பொருந்தாது.

இந்திய அறிஞர்களும், வரலாற்றுஆசிரியர்களும் பல்லவர்கள் பரதகண்டத்தைச் சார்ந்த மக்களெனக் கருதினர் எனினும், அவர்களுடைய ஆதி உறைவிடத்தைப்பற்றி அவர்களிடையில் பல கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. பல்லவர்கள் மத்திய பிரதேசத்து நாகர்களைச் சார்ந்தவரென்பர் பி. டி. சீனிவாச ஐயங்கார்; தென் பகுதியில் வாழ்ந்த குரும்பர்களைச் சார்ந்தவர்கள் என்பர் சிலர்; தமிழகத்தில் தொண்டைமண்டலத்தைச் சார்ந்தவர் என்பர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்; காரணம்:— வடமொழிப் 'பல்லவமும்' தமிழ்த் 'தொண்டியும்' படர் கொடியைக் குறிப்பதால் தமிழ்த்தொண்டையரும் வடமொழிப் பல்லவரும் ஒரே வகுப்பினர் ஆவர்.

சி. இராசநாயகம் என்னும் இலங்கை அறிஞர் பல்லவர்களை ஈழநாட்டிலிருந்து தொண்டைமண்டலம் சேர்ந்த தமிழர்கள் எனக் குறிப்பிடுகின்றார். தொண்டைமண்டலத்தின் ஆதி மன்னனாகிய தொண்டைமான் இளந்திரையன், கிள்ளிவளவன் என்னும் சோழ அரசனுக்கும், இலங்கைக்கண்மையிலுள்ள மணிபல்லவம் என்னும் தீவிலிருந்த நாககன்னிகைக்கும் பிறந்தவன் ஆவன். மணிபல்லவத்தில் தாயுடன் இருந்த இளந்திரையன் தந்தையைத் தேடித் தமிழகத்துக்கு வரும் வழியில், கப்பல் உடைந்து திரைகளால் கரை சேர்க்கப்பட்டானென்றும், அவனது காலில் தொண்டிக்கொடி சுற்றப்பட்டிருந்ததென்றும், ஆகவே, மக்கள் அவனை இளந்திரையனென்றும், தொண்டைமான் என்றும் அழைத்தனர் என்பது கதை. கிள்ளிவளவன் அம்மைந்தனுக்குத் தொண்டைமண்டலப் பகுதியைக் கொடுத்தான். இளந்திரையனின் மரபினர் பல்லவர்கள் என மணிபல்லவத்தீவின் பேரால் அழைக்கப்பட்

டனரென்பது இராசநாயகத்தின் கருத்து. இவ்வாராய்ச்சி யாளரின் கொள்கை பல்லவர்களின் பண்பாட்டில் ஓர் முக்கிய பகுதியை விளக்காது விடுகின்றமையால், இதை ஏற்றுக்கொள்வது பொருத்தமன்று.

ஆதிப் பல்லவர்கள் வடமொழிப் பற்றுடையோராவர். அவர்களுடைய பண்பாடே வடநாட்டைச் சார்ந்ததாகும். சேர, சோழ, பாண்டியர்களைப் பாராட்டும் தமிழ்ப்புலவர்கள் பல்லவ மன்னர்களுக்கு அவர்களுடைய பாமாலைகளைச் சூட்டுகின்றனர் அல்லர். அம் மன்னர்களைப் போலப் பல்லவர்களும் தமிழகத்தைச் சார்ந்தவர்களாக இருப்பின், பாவலர்கள் அவர்களைப் புறக்கணித்திருக்க மாட்டார்கள் அன்றோ?

'பல்லவர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்களல்லர்', என்பது மேலே கூறியவற்றால் நன்கு விளங்குகின்றது. அவர்களை ஒரு மரபினர் என்று கொள்வதைவிடக் கலப்பு மணத்தால் ஏற்பட்ட ஒரு குடும்பத்தினர் எனக் கருதினால், பல்லவரின் இனத்தைப் பற்றிய சொற்போர்கள் அனைத்தும் மறையுமன்றோ? பல்லவரின் மூதாதை, அந்தணன் ஒருவனுக்கும், ஓர் நாககன்னிகைக்கும் தோன்றியவனாதல் வேண்டும். அவனும் அவன் சந்ததியார்களும் ஆந்திர மன்னர்களை அண்டி அவர்களுக்குத் தொண்டாற்றி சிற்றரசர் பதவியைப் பெற்றிருக்கவேண்டும். ஆந்திரமன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் மத்தியில் பல்லவர்கள் காஞ்சிமா நகரத்தையும், தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றி அவர்களுடைய ஆட்சியை நிறுவியிருக்கவேண்டும். அவர்கள் அந்தணர் வழி வந்தவராதலின், வடமொழியை முதலில் ஆதரித்தனர்போலும். காலம் செல்லச் செல்ல மக்களின் மொழியை ஆதரிக்கத் தொடங்கினர். ஆகவே, பல்லவர்களை அந்நியர்களெனக் கருதுவதும் முறையன்று; ஒரு கூட்டமக்கள் என்று கருதுவதும் முறையன்று. அவர்கள் தனிப்பட்ட ஒரு குடும்பத்தினரேயாவர்.

ஆதி பல்லவ மன்னர்களின் வரலாறு :—
(கி. பி. 250—கி. பி. 350)

ஆந்திர சாம்ராச்சிய வீழ்ச்சிக்குப் பின்னர், தோன்றிய ஆதிபல்லவ மன்னர்களின் மரபையும், அவர்களுடைய காலத்தையும் முடிவு செய்வது எளிதன்று. வரலாற்று ஆசிரியர்களிடையில் அவைகளைப்பற்றிக் கருத்து வேற்றுமைகள் பல காணப்படுகின்றன. அம்மன்னர்களால் அளிக்கப்பெற்ற சாசனங்கள் பிராகிருத மொழியில் வரையப்பெற்றிருக்கின்றமையால், வரலாற்று ஆசிரியர்கள் அவர்களைப் பிராகிருதமொழி இனத்தைச் சார்ந்த பல்லவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். அவ்வினத்தின் முன்னோன் பப்பதேவன் என்று அழைக்கப்படுகின்றான். அவ்வரசன் அவனுடைய குடிகளுக்கு ஒரு நூறாயிரம் ஏர்களையும் மாடுகளையும் கொடுத்துக் காட்டை வெட்டிப் பண்படுத்திக் கழனிகளாகத் திருத்தினான் என்று பட்டயங்களில் கூறப்பட்டுள்ளது. தமிழ்இலக்கியத்தில் பல்லவ மன்னர்களைக் காடுவெட்டிகளென்றும், காடவர் கோன்களென்றும் புலவர்கள் குறிக்கின்றனர். பப்பதேவனின் ஆக்கவேலையே அத்தகைய புகழைப் பல்லவர்களுக்கு அளித்துள்ளது எனக் கொள்ளலாம்.

பப்பதேவனின் குமாரன் சிவஸ்கந்தவர்மனாவன். குண்டூர் மாவட்டத்தின் கண் மயிதவோலு என்னுமிடத்தில் கிடைத்துள்ள பட்டயங்களும், பல்லாரி மாவட்டத்திலுள்ள ஹிரஹதகல்லி என்னும் சிற்றூரில் அகப்பட்டுள்ள பட்டயங்களும், சிவஸ்கந்தவர்மனின் வீரத்தையும் ஆட்சியையும் பற்றி நன்கு விளக்குகின்றன. அண்மையிலுள்ள அரசர்களிடையில் பல்லவ அரசன் ஏறுபோல் விளங்கினான். அவர்களை வென்று வாஜப்பேயம், அசுவமேதம் முதலிய வேள்விகளை வெற்றிகரமாக இயற்றினான். சோழ மன்னர்களிடமிருந்து காஞ்சிமாநகரைச் சிவஸ்கந்தவர்மன் கைப்பற்றி அதை அவனது தலைநகராக அமைத்தான். சோழர்களை முறியடித்ததினால் சாசனங்கள் அம்

மன்னனை விஜயஸ்கந்தவர்மன் எனப் பாராட்டுகின்றன போலும்.'

ஆந்திரப் பேரரசின் தென்பகுதியிலும், தொண்டை மண்டலத்திலும் பல்லவர் ஆட்சியை வலுவுறச் செய்தவன் சிவஸ்கந்தவர்மனேயாவன். அவனது ஆட்சிமுறை தமிழ் மக்களின் ஆட்சிமுறையைப்போலன்றி, வடநாட்டு மௌரிய ஏகாதிபதிகளின் முறையைப் பின்பற்றி இருந்தது. மயிதவோலு பட்டயம் காஞ்சியிலிருந்து இளவரசன் சிவஸ்கந்தவர்மனால் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு சிற்றூரை இரு பிராமணர்களுக்கு இளவரசன் அளித்ததை அப்பட்டயம் குறிக்கின்றது. ஹிரஹதகல்லிப்பட்டயம் சிவஸ்கந்தவர்மன் பேரரசனான பின்னர், வழங்கப்பட்டுள்ளது. அப்பட்டயத்தில் சிவஸ்கந்தவர்மன் மஹாராஜாதிராஜனென்றும், தருமராஜனென்றும் புகழப்படுகின்றான். அரசியல் அதிகாரிகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

சிவஸ்கந்தவர்மனின் குமாரன் புத்தவர்மன் ஆவன். அவனது அரசியான சாருதேவி அளித்துள்ள பட்டயம் ஒன்று குணபதேயத்தில் அகப்பட்டுள்ளது. பெருமாள் கோவிலுக்கு அவ்வரசி அளித்த தானத்தை அப்பட்டயம் குறிக்கின்றது. சாருதேவியின் குமாரன் புத்யங்குரன் ஆவன். புத்தவர்மன், புத்யங்குரன் இவர்களின் பெயர்களிலிருந்து இவர்கள் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்களெனச் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். பௌத்தமும், சமணமும் முற்காலப் பல்லவர்களின் ஆட்சியில் செழிப்புற்றிருந்தன என்று கருதலாகும். இம் மன்னர்களின் காலத்தைப் பிராக்ருதபட்டயங்களின் உதவியால் ஒருவாறு முடிவுசெய்யக்கூடும். பப்பதேவன் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் ஆட்சிபுரிந்திருக்கவேண்டும். அவனுடைய குமாரனான சிவஸ்கந்தவர்மன் அந் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவப்பேரரசை அமைத்திருக்கலாகும். புத்தவர்மன், புத்யங்குரன் முதலிய ஆதிப்பல்லவர்கள் காஞ்சிமாநகரத்தைத் தலைநகராகக்கொண்டு தொண்டை

மண்டலத்திலும், ஆந்திரபதத்திலும் கி. பி. நான்காவது நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்திருக்கவேண்டும்.

இடைக்காலப் பல்லவ மன்னர்கள்

(கி. பி. 350—கி. பி. 575)

கி. பி. நான்காவது நூற்றாண்டின் மத்தியில் வடநாட்டு மன்னனான சமுத்திரகுப்தன் தென்நாட்டின்மீது படையெடுத்தானென ஹரிசேன கல்வெட்டிலிருந்து புலப்படுகின்றது. அக்காலத்தில் காஞ்சிமாநகரில் சிவஸ்கந்தவர்மன் வழிவந்த விஷ்ணுகோபன் என்னும் பல்லவமன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். நெல்லூர் மாவட்டத்தில் பாலக்காடா என்னும் நகரில் உக்கிரசேனன் என்னும் பல்லவ அரசன் ஆட்சிபுரிந்ததாக ஹரிசேனக்கல்வெட்டு கூறுகின்றது. உக்கிரசேனனும், விஷ்ணுகோபனும், வேங்கை நாட்டு மன்னன் அஸ்திவர்மனும் சமுத்திரகுப்தனை எதிர்த்துத் தோல்வியடைந்தனரென்று அக் கல்வெட்டு குறிக்கின்றது. குப்தமன்னனின் படையெடுப்பால் பல்லவர் நாடும் அரசும் குழப்பமுற்றன என்று கருதப் பல சான்றுகள் உள.

விஷ்ணுகோபனுக்குப்பின் தோன்றிய பல்லவமன்னர்கள், ஆதிபல்லவர்களைப்போலக் காஞ்சிபுரத்திலிருந்து, பட்டயங்கள் வெளியிட்டதாகத் தெரியவில்லை. அவர்களுடைய செப்பேடுகளும், கல்வெட்டுகளும் ஆந்திரநாட்டிலுள்ள நகரங்களில் அகப்பட்டுள்ளன. தசனபுரம், மேண்மதுரா, ராமகோட்டம், சந்தலூர், உதயேந்திரம், உருவப்பள்ளி என்னும் தெலுங்க நகரங்களிலிருந்து செப்பேடுகள் எடுக்கப்பட்டுள்ளன. அமராவதி, வாயலூர் முதலிய இடங்களில் கல்வெட்டுகள் அகப்பட்டுள்ளன. இந் நகரங்களனைத்தும் கிருஷ்ணாநதிக்குத் தெற்கிலும், பெண்ணையாற்றிற்கு வடக்கிலும் இருக்கின்றமையால், பல்லவமன்னர்கள் காஞ்சிநகரிலிருந்து அரசு புரியவில்லையென நன்கு விளங்குகின்றது.

செப்பேடுகளும், கல்வெட்டுகளும் வடமொழியில் அமைந்திருப்பதால் வரலாற்று ஆசிரியர்கள் இப் பல்லவ மன்னர்களை வடமொழி இனத்தைச் சார்ந்தவரெனக் கூறுவர். பிராகிருத மொழியில் சாசனங்கள் அளித்த ஆதிபல்லவ மன்னர்களுக்கும். வடமொழியில் செப்பேடுகள் அளித்த இடைக்காலப் பல்லவர்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவ்விரு பல்லவ மரபுகளையும் வெவ்வேறு மரபுகளெனக் கருதுவது பொருத்தமன்று. கி. பி. ஏழாவது நூற்றுண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த பல்லவப் பேரரசனுன இராசசிம்மன் அவனுடைய முன்னேர்களைப் பட்டயம் ஒன்றில் குறிக்கின்ருன். வயலூரில் அகப்பட்டுள்ள இப் பட்டயத்தில் ஆதிபல்லவ மன்னர்களும், இடைக்காலப் பல்லவர்களும் குறிக்கப்படுகின்றனர். இரு மரபுகளுக்குமிடையில் வேற்றுமை தோன்றவில்லை. அம் மரபினரின் கோத்திரமும், பெயர்களும் ஒத்திருப்பதால் அவர்களை வெவ்வேறு குடும்பத்தினர் என்று கொள்வது பொருத்தமன்று.

இடைக்காலப் பல்லவ மன்னர்களில் புகழ்பெற்றவன் வீரகூர்ச்ச மன்னன் ஆவன். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் துவக்கத்தில் அம் மன்னன் நாகர்களின் தலைவனுன ஸ்கந்த நாகனின் குமாரியை மணந்து அவனது உதவியைப் பெற்றுன். வீரகூர்ச்சனின் மைந்தனின் பெயர் ஸ்கந்தஷ்யா. இப்பெயர் பல்லவர்களுக்கு நாகர்கள் எவ்வாறு துணைபுரிந்தனர் என்பதைக் குறிக்கும் சான்ருகும். நாகர்களின் உதவியால் ஆந்திரபதத்திலிருந்த வீரகூர்ச்சவர்மன் தன் முன்னோர் ஆட்சிபுரிந்த தொண்டைமண்டலப் பகுதியின் பெரும் பாகத்தைக் கைப்பற்றினன். அவனுடைய மைந்தன் ஸ்கந்தஷ்யா திருக்கழுக்குன்றம் கோவிலுக்கு நிலம் தானம் செய்ததாகக் கல்வெட்டில் காணப்படுகின்றது.

ஸ்கந்தஷ்யாவின் மைந்தனுன இரண்டாம் குமாரவிஷ்ணு சோழர்களைக் காஞ்சிநகரினின்றும் விரட்டி அதைக் கைப்பற்றினுன் எனப் பட்டயங்கள் கூறுகின்றன. இடைக்

காலப் பல்லவ மன்னர்கள் ஏறத்தாழத் தமது காலம் முழுவதுமே சோழர், கதம்பர், சாளுக்கியர் முதலிய அண்மை அரசர்களுடன் ஓய்வின்றிப் போர்செய்யவேண்டியதிருந்ததெனக் கொள்ளின் அது தவறன்று. அவர்கள் நாட்டின் சில பகுதிகளைப் பகைவர்கள் கைப்பற்றினர். தலைநகரான காஞ்சியும் அடிக்கடி கைமாறியதாக உய்த்துணரலாம். நெல்லூர், குண்டூர் மாவட்டங்களையும் வீரகூர்ச்ச வர்மனுக்குப் பின்னர் தொண்டைமண்டலப் பகுதியையும் இப் பல்லவர்கள் ஆண்டுவந்தனர். காஞ்சியைக் கைப்பற்றிய குமாரவிஷ்ணுவின் மகனான புத்தவர்மன், சோழருடைய கடல் போன்ற சேனைக்கு வடவைத் தீயைப்போன்றவன் என்று வேலூர்ப் பாளையப் பட்டயம் கூறுகின்றது.

குமாரவிஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றியபின் சோழர்கள் அதைத் திரும்ப அடையும் நோக்கத்துடன் பல்லவர்களை எதிர்த்திருக்கவேண்டும். புத்தவர்மன் அவர்களை விரட்டியிருக்கலாம். புத்தவர்மனின் வழிவந்த இரண்டாம் சிம்மவர்மனும், முதலாம் நந்திவர்மனும் கதம்பர், சாளுக்கிய மன்னர்களுடன் கடும்போர் புரிந்ததாகப் பட்டயங்கள் பகர்கின்றன. முதலாம் நந்திவர்மனின் குமாரர் மூன்றும் சிம்மவர்மனவர். கி. பி. ஆறும் நூற்றாண்டின் மத்தியில் பல்லவ அரியணையில் இவர் அமர்ந்தார். இடைக்காலப் பல்லவமன்னர்களில் கடைசிமன்னர் இவரே. பல்லவப் பேரரசிற்கு அடிகோலிய சிம்மவிஷ்ணுவின் தந்தையாவர் இம் மூன்றும் சிம்மவர்மன். இவர் ஒரு சிறந்த சிவபக்தர். 'ஐயடிகள் காடவர்கோன்' என்று பாராட்டப்படுபவரும் க்ஷேத்திர வெண்பா பாடியவரும் இப் பல்லவமன்னரே யாவர்.

பல்லவப் பேரரசர்கள்
(கி. பி. 575—900)

ஆறுவது நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றும் சிம்மவர்மனின் குமாரரான சிம்மவிஷ்ணு என்பவர் காஞ்சி மாநகரில் பல்லவ அரியணையேறினார். பல்லவர்களின் வரலாற்றில் அவருடைய ஆட்சி மிக முதன்மை வாய்ந்த

தாகும். வேலூர்ப்பாளையம், உதயேந்திரம் பட்டயங்களும் அவனி சுந்தரி கதை, மத்த விலாசப் பிரகசனம் முதலிய வடமொழிநூல்களும் மாவலிபுர சிற்பங்களும் இம்மன்னரது வீரத்தையும், கலை உணர்ச்சியையும் நன்கு தெளிவுறுத்துகின்றன. பல்லவர்களை அரசியல் துறையிலும் கலைத்துறைகளிலும் முன்னேக்கிச் செல்லுமாறு தூண்டியவர் இம்மன்னரேயாவர். சோழர், சிங்களர், பாண்டியர், களப்பிரர், கதம்பர் முதலிய அரசமரபுகளை யடக்கிப் பல்லவப் பேரரசிற்கு அடிகோலியவர் இவரேயாவர். வரலாற்று ஆசிரியர்கள் இவரை மூன்றுவது பல்லவ மரபை நிறுவியோர் எனக் குறிப்பிடுவர். ஆனல் பிராகிருதத்திலும், வடமொழியிலும் பட்டயங்கள் வழங்கிய பல்லவ மன்னர்களின் வழிவந்தவரே சிம்மவிஷ்ணு. இவரையும் இவர் வழிவந்த மாபெரும் பல்லவமன்னர்களையும் முற்கால, இடைக்காலப் பல்லவ மன்னர்களிடமிருந்து வேற்றுமைப்படுத்துவதற்குத் தகுந்த சான்று இல்லை.

சிம்மவிஷ்ணு ஓர் தலைசிறந்த வீரர் என்பதை அவரது பட்டப்பெயர் நன்கு விளக்குகின்றது. அவர் "அவனிசிம்மன்" என்று அழைக்கப்பெற்றுர். இவருடைய மகனை முதலாம் மகேந்திரவர்மன் தான் இயற்றிய மத்த விலாசத்தில் இவரைப் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது. வீரத்தில் இந்திரனைப்போன்றவரென்றும், செல்வத்தில் குபேரனை ஒத்தவரென்றும், அரசர்களுக்கு ஏறுபோன்றவரென்றும், பல நாடுகளை வென்றவரென்றும், மகேந்திரவர்மன் தந்தையைப் புகழ்கின்றுன். வேலூர்ப்பாளையப் பட்டயத்திலிருந்து அறியக்கிடப்பது யாதெனின்? இவர் செழிப்பான சோழநாட்டைச் சோழர்களிடமிருந்து கைப்பற்றினர் என்பதாம். காசக்குடிப்பட்டயமும் இவரது வீரத்தைப் பாராட்டுகின்றது. பூவுலகில் சிங்கம் போன்ற சிம்மவிஷ்ணு தோன்றிக் களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர் முதலிய அரசமரபினரை அடக்கி வெற்றிகண்டார் எனக் காசக்குடிப்பட்டயம் அறைகின்றது.

கும்பகோணத்தையடுத்த கஞ்சனூர்ப் பட்டயத்தில் "சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம்" என்பது காணப் படுகிறது. முதலாம் மகேந்திரவர்மன் புதுக்கோட்டைச் சீமையிலுள்ள சிற்றன்ன வாசலில் குகைக்கோயில் அமைத்துள்ளான். அவன் காலத்தில் தென்னாட்டில் பல்லவர்கள் போர் செய்ததாகப் பட்டயங்கள் கூறவில்லை. ஆகவே, புதுக்கோட்டை வரையிலுள்ள சோழநாட்டைச் சிம்மவிஷ்ணுவே வென்று பல்லவர் ஆட்சியை நிலைநிறுத் தினார் எனக் கருதலாம். தென்னாட்டு அரசருடன் சிம்ம விஷ்ணு போர்புரிந்து காவிரியாறு வரையுள்ள தமிழ் நாட்டைக் கைப்பற்றினார் என்று உய்த்துணரலாம். காஞ்சிமாநகரில் மறைந்திருந்த பகைவர்களையும் அறவே ஒழித்தார். "கற்றவர் கூட்டத்தினின்று இறுதிப் பகைமையை அறவே நீக்கினான்" என்று சிம்மவிஷ்ணுவை அவந்தி சுந்தரி கதை பாராட்டுகின்றது. கற்றவர் கூட்டம் என்பது காஞ்சிமாநகரைக் குறிக்கிறது எனக்கொள்ள லாம். ஏனெனில் அந்நகரே அக்காலத்தில் அறிஞர்களின் உறைவிடம்.

சிம்மவிஷ்ணு வீரத்தில் தலைசிறந்து விளங்கியது போலத் தெய்வபத்தியிலும் உயர்ந்து விளங்கினார். அவர் ஒரு பரம பாகவதர் என்பதை அவரது பெய ரைக்கொண்டே உய்த்துணரலாம். உதயேந்திரப்பட்டயம் இவரைப் "பக்தி ஆராதித விஷ்ணு" என்று குறிப்பிடுகின் றது. மாபலிபுரத்தில் அவரது பக்தியின் சின்னமாக ஆதிவராகர் குகைக்கோவிலை அவர் அமைத்தார் என்று கொள்வது முற்றிலும் பொருந்தும். அக்கோவிலில் வட புறத்தில் "ஸ்ரீசிம்மவிஷ்ணு போதாதி ராஜன்" என்று பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு இருக்கின் றது. அக் கல்வெட்டின் அடியில் சிம்மவிஷ்ணுவின் உரு வமும், அவருடைய இரு மனைவியர்களின் உருவங்களும் காணப்படுகின்றன. அவ்வுருவங்களுக்கு நேர் எதிரே மகேந்திரனின் உருவமும், அவனுடைய இராணிகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. "ஸ்ரீமகேந்திர

போதாதி ராஜன்" என்று பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

குகைக்கோவில்களை மத்திய இந்தியாவில் வாகாடகர் நாட்டில் காணலாம். அவர்களைப் பின்பற்றி கிருஷ்ணு ஆற்றங்கரையில் விஷ்ணுகுண்டர் என்னும் அரசமரபினர் பல குகைக்கோவில்களை அமைத்தனர். ஆந்திர பதத்தை யாண்ட சிம்மவிஷ்ணு அவற்றைக் கண்ணுற்று, தாம் வென்ற தமிழ்நாட்டில் குகைக்கோவில்களை அமைத்திருக்க வேண்டும். சீயமங்கலத்திலும் குகைக் கோயிலொன்றைச் சிம்ம விஷ்ணு அமைத்திருக்கவேண்டும். விஷ்ணுபக்தர் ஆகிய சிம்மவிஷ்ணு மாபலிபுரத்தில் ஆதிவராகர் கோவிலை அமைத்து அதில் தமது உருவச்சிலையையும், தமது இராணியர்களின் சிலைகளையும் செதுக்கியதில் வியப் பொன்றுமில்லை.

சிம்மவிஷ்ணு புலவர்களைப் போற்றிக் கலைகளை வளர்த் தார் என அவனி சுந்தரி கதையிலிருந்து அறியக் கிடக் கின்றது. கிராதா அர்ஜுனீயம் என்னும் காவியத்தை இயற்றிய மகாகவி பாரவி சிறிது காலம் காஞ்சியில் சிம்ம விஷ்ணுவின் ஆதரவில் இருந்தாரென்று அவனிசுந்தரி கதை கூறுகின்றது. சிம்மவிஷ்ணுவின் அவையை அடைந்த புலவன் ஒருவன் நரசிம்ம அவதாரத்தைப் பற்றிய பெருமாள் துதி ஒன்றை வடமொழியிற் பாடவே அரசன் மகிழ்ச்சியுற்று அப்பாவினை ஆக்கியோன் யாரென வினவவும், அப்புலவன் தாமோதரன் என்னும் பாரவியே அதை ஆக்கியோன் என்றும், அவர் கங்க அரச ஞன துர்வினீதன் அவையில் இருக்கின்றார் என்றும் கூறவே, சிம்மவிஷ்ணு அவரைக் காஞ்சிக்கு அழைத்து அவருக்குச் சகல வசதிகளையும் செய்துகொடுத்தார்.

பாரவி ஆதியில் கீழச்சாளுக்கிய மன்னனான விஷ்ணு வர்த்தனனுடைய நண்பராயிருந்தார். விஷ்ணுவர்த்தன னும், துர்வினீதனும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் அரசு புரிந்தவர்கள். ஆகவே அவர்கள் காலத்த

வராகிய சிம்மவிஷ்ணு காஞ்சியில் ஏழாம்நூற்றூண்டின் ஆரம்பத்தில் அரசுபுரிந்திருக்கவேண்டும். ஏறக்குறைய கி. பி. 610ல் அவர் காலஞ்சென்றிருக்கவேண்டும். அவர் மைந்தனை முதலாம் மகேந்திரவர்மன் பல்லவ அரசு கட்டிலில் கி. பி. 610-ல் ஏறினுன் என்று கொள்வதில் தவறென்றுமில்லை.

முதலாம் மகேந்திரவர்மன்
(கி. பி. 610—630)

மகேந்திரவர்மன் காலத்தில் தக்கணத்தில் ஆட்சி புரிந்த சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி ஆவன். அவன் பல்லவவேந்தனேடு போர்தொடுத்து அவனது நாட்டின் வடபகுதியாகிய வெங்கிதேசத்தைக் கைப்பற்றி, அசலபுரியில் அரசுபுரிந்த தன் இளைய சகோதரனை விஷ்ணுவர்த்தனனைத் தான் புதிதாகவென்ற வெங்கி தேசத்திற்கு அதிபதியாக்கினுன். புலிகேசியினது "அய்ஹொளே" கல்வெட்டு கூறுவதாவது:—புலிகேசியின் படைகள் வடபகுதியிலிருந்து காஞ்சியை நோக்கித் தெற்கே சென்றபோது கிளம்பிய தூளியானது பல்லவமன்னனின் ஒளியை மங்கச்செய்தது. சாளுக்கிய சேனையைக் கண்டு காஞ்சி அரசன் கோட்டைக்குள் புகுந்து கொண்டான். பல்லவ காசக்குடிப் பட்டயம் கூறுவதாவது :— மகேந்திரன் தன் பகைவரைப் புள்ளலூரில் அழித்தான். இவ்விரு சான்றுகளும் முரண்படுகின்றமையால் உண்மை எளிதில் விளங்காது. சளுக்கியர்களும் பல்லவர்களும் தங்களுக்குநேர்ந்த தோல்வியைக் கூருது தங்களுடைய வெற்றியை மட்டும் குறிப்பிட்டனர் என்று கொள்ளின் உண்மையை அறிவது அரிதன்று. சளுக்கியவேந்தன், மகேந்திரனுக்கு எதிராகத் தமிழ்வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களுடன் உறவுகொள்ளும் நோக்கத்துடன் தெற்குநோக்கி காவிரிவரை சென்றிருக்கக்கூடும். பல்லவர்களைப் பொருட்படுத்தாது தெற்கிலிருந்து திரும்பியபொழுது மகேந்திரவர்மன் தன் படையுடன் காஞ்சி

புரத்திற்குப் பத்துக்கல் தொலேவில் உள்ள புள்ளலூர் என்னும் இடத்தில் புலிகேசனேயும், அவனது சேனேயையும் தோற்கடித்துத் தமிழ்நாட்டினின்று சளுக்கியரை விரட்டியிருக்கவேண்டும். புள்ளலூர்ப் போரைப்பற்றிச் சளுக்கியக் கல்வெட்டுக்கள் கூறவில்லேயெனினும் கங்க அரசனுன துர்வினீதன் தன் கல்வெட்டுக்களில் அதைக் குறிக்கின்ருன். சளுக்கிய மன்னனேடு துர்வினீதனும் சேர்ந்து மகேந்திரவர்மனுடன் போரிட்டான் என்பது புலனுகின்றது.

தன் நாட்டின் வடபகுதியை மகேந்திரவர்மன் இழந்தனன் எனினும் அவன் காலத்தில் அவன் ஒரு பேரரசனுகவே விளங்கினுன் என்பதற்கு ஐயமில்லே. அவனது பெயர் தமிழகவரலாற்றில் குன்றின்மேலிட்ட விளக்கைப்போல் என்றும் விளங்கும் என்பது திண்ணம். பலதுறைகளிலும் மகேந்திரவர்மன் மேம்பாடுற்றிருந்தான். அவன் ஓர் மகாகவி; இன்னிசையாளன்; கட்டிடக் கலேவல்லுநன்; அரசியல் சதுரன்; புலவரின் புரவலன்; வடமொழியில் மிக்க புலமை பெற்றிருந்தான். 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் நையாண்டிநாடகம் ஒன்றை அம்மொழியில் வரைந்தான். அக்கேலிக்கூத்தில் மகேந்திரவர்மன் அவன் காலத்தில் இருந்த பௌத்த துறவிகளேயும், காபாலிகர்களேயும், பாசுபதர்களேயும், ஏளனம் செய்கின்ருன். அக்காலத்தில் விளங்கிய பல சமயத்தார்களேயும் அவர்களின் கொள்கைகளேயும் வாழ்க்கையையும் நன்கு சித்திரிக்கின்ருன். அவனுடைய பட்டப்பெயர்களில் "மத்தவிலாசன்" என்பது ஒன்று.

ஆதியில் மகேந்திரவர்மன் சமணமதத்தைப் பின்பற்றி நின்ருன் என்பது சைவமதக்குரவரான திருநாவுக்கரசரின் வரலாற்றிலிருந்து விளங்குகிறது. அப்பரும் ஆதியில் சமணமதத்தைச் சார்ந்திருந்தார். பின்னர்ச் சைவத்திற்குத் திரும்பவே, சினமடைந்த சமணர்கள் அரசனேக் கொண்டு அவருக்குப் பல இன்னல்கள் இழைத்தனர். மன உறுதியோடும் பொறுமையோடும் அப்பரடிகள்

அரசன் இழைத்த தொல்லைகளை ஏற்று இறுதியில் மகேந்திர வர்மனைச் சைவத்தைத் தழுவும்படி செய்தார். திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணப்பள்ளிகளை அரசன் நாசஞ்செய்து, சமணர்களையும் தன் தேசத்தை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டான் என அறியக்கிடக்கின்றது. சிதைவுற்ற சமணப்பள்ளிகளில் சிறந்தது பாடலிபுத்திரம் ஆகும். சைவசமயத்தைச் சார்ந்தவுடன் மகேந்திரவர்மன் முக்கண்ணனுக்கும், மணிவண்ணனுக்கும் பாறைகளைக் குடைந்து பல குகைக்கோவில்களை அமைத்தான்.

செங்கல்பட்டுக்கண்மையில் உள்ள வல்லத்திலும், திண்டிவனத்திற்கருகில் உள்ள தளவனூரிலும், அரக்கோணத்துக்கண்மையில் உள்ள மகேந்திரவாடியிலும், பல்லவ மன்னன் குடைந்தெடுத்த குகைக்கோவில்கள் காணப்படுகின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டுக் கல்வெட்டுக் கூறுவதாவது:—மகேசுவரனுக்கும், பிரமதேவனுக்கும், விஷ்ணுமூர்த்திக்கும் மரம், கல், சுண்ணும்பு முதலியன இல்லாது மகேந்திரவர்மன் கோவில் ஒன்றை அமைத்தான். ஆகவே மண்டகப்பட்டுக் குகைக் கோயிலே மகேந்திரவர்மன் தனது தேசத்தில் முதன் முதலாக அமைத்த குகைக்கோவில் எனக் கொள்ளலாம்.

தன் தந்தை மாபலிபுரத்தில் ஆதிவராகர் கோவிலைக் குடைந்தெடுத்ததுபோல மகேந்திரவர்மனும் பல இடங்களில் குகைக்கோவில்கள் அமைத்தான். அவன் பட்டப் பெயர்களில் ஒன்று சேதகாரி என்பது. அது செய்த்தியகரியின் திரிபு. செய்த்தியகரியென்றால் கோவில் அமைப்பவன் என்பது பொருள். திருச்சிராப்பள்ளி மலைக்கோவிலில் மகேந்திரவர்மனின் கல்வெட்டு ஒன்று காணப்பட்டு உள்ளது. அது கூறுவதாவது :

இக் கோவிலைச் சத்தியசந்தன், சத்துருமல்லன், குணபரன் என்னும் விருதுகள்பூண்ட அரசன் அமைத்தான். இலிங்கத்தை வழிபடும் குணபரன் இந்த லிங்கத்தினல் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்ட

நாள் நிலைநிற்பதாக, திருவதிகையில் தான் இடித்த சமணப்பள்ளிகளின் கற்களைக்கொண்டு ஒரு சிவன் கோவிலைக் கட்டி அதற்குத் தன் பெயரால் குணபரஈச்சரம் என்று பெயரிட்டு மகேந்திரவர்மன் சைவத்தை வளர்த்தான். மன்னன் சைவனானதும் அவனுடைய குடிகளும் அம்மதத்தையே பின்பற்றினர் என்று கருதலாகும்.

மாபலிபுரத்திலுள்ள ஆதிவராகர் கோவிலில் முன் கூறியபடி, மகேந்திரவர்மனின் உருவச்சிலையும், அவன் இரு இராணியர்களின் உருவச்சிலைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. நாட்டில் பல குகைக்கோவில்கள் எழுப்பிய மகேந்திரவர்மன் மாபலிபுரத்திலும் கோவில்களை அமைப்பது இயல்பே. ஆனால், ஆராய்ச்சியாளர்கள் மாபலிபுரக் கோவில்கள் அனைத்தும் மகேந்திரவர்மனின் மகனான நரசிம்மவர்மன் அமைத்தவை என்பர். நன்கு ஆராயின் மாபலிபுரத்தில் காணும் தர்மராஜர் மண்டபமும் கொடிக்கால் மண்டபமும் மகேந்திரவர்மன் காலத்தவை என்பது விளங்கும். தர்மராஜர் மண்டபம் மண்டகப்பட்டில் மகேந்திரவர்மன் அமைத்த கோவிலை ஒத்திருக்கின்றது. கொடிக்கால் மண்டபத்தின் படிக்கட்டு மகேந்திரவாடி கோவில் படிக்கட்டை ஒத்திருக்கின்றது.

மகேந்திரவர்மன் கட்டிடக்கலையில் மட்டுமன்றி ஓவியத்திலும், சிற்பத்திலும் அதிக ஆர்வமுற்றிருந்தான் என்பதை அவன் பட்டப்பெயர்களில் ஒன்றான சித்திரக் காரப்புலி என்பது நன்கு விளக்குகின்றது. இசைக்கலையிலும் நடனக்கலையிலும் மகேந்திரவர்மன் மிகுந்த தேர்ச்சியுற்றிருந்தான். என்பதை புதுக்கோட்டைச் சீமையில் உள்ள சித்தன்னவாசல் குகைக்கோவில் ஓவியங்களும், குடுமியாமலைக் கல்வெட்டும் நிரூபிக்கின்றன. குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுவதாவது :

மகேந்திரவர்மன் சில புதிய சுரங்களையும், இராகங்களையும் அமைத்தான். மத்தவிலாசன், அவனிபஜனன், குணபரன், சத்துருமல்லன், சேதகரி, லளிதாங்குரன், புருஷோத்தமன், சத்தியசந்தன், போத்தரையன்,

பகாப்பிடுகு (பகைவர்க்கு இடிபோன்றவன்), நரவாகனன், அலுப்தகாமன், விசித்திர சித்தன் முதலியன மகேந்திர வர்மனின் பட்டப்பெயர்கள். இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் முதலிய கலைகளைப் பல்லவமன்னன் நன்கு வளர்த்தான். விசித்திரசித்தன் என்னும் பட்டப்பெயர் மகேந்திரவர்மன் பல துறைகளிலும் பெற்றிருந்த தேர்ச்சியைத் தெளிவுறுத்துகின்றது.

காடுவெட்டி மன்னர்களின் குலத்திற்கேற்ப மகேந்திர வர்மன் பல ஏரிகளையும், வாய்க்கால்களையும் அமைத்து நாட்டை வளம்பெறச் செய்தான். மகேந்திரவாடி, மாமண்டூர், தளவனூர் முதலிய இடங்களில் ஏரிகளையமைத்து வேளாண்மையைப் பெருக்கினான். சளுக்கியத் தாக்குதலைப் புள்ளலூரில் தடுத்துத் தொண்டை மண்டலத்தையும், பல்லவப் பேரரசையும் காப்பாற்றினான். சைவத்திற்குப் புத்துயிரளித்தான். கவிதை, சிற்பம், ஓவியம், நடனம், இசை, நாடகம் முதலிய பல கலைகளை ஆர்வத்துடன் வளர்த்தான். கிருஷ்ணாநதிக் கரையிலிருந்து, பாலாற்றங் கரைக்கும், காவிரிக்கரைக்கும் குகைக்கோவில்களை அமைக்கும் கலையை மாற்றினான். சோழமன்னர்கள் அவன்கீழ் சிற்றரசர்கள்; கங்கர்களும், பாண்டியர்களும், சளுக்கியர்களும் அவனுடைய எதிரிகள். பகைவர்களின் கை ஓங்காதபடி தன் நாட்டை அழகுற அமைத்து அருஞ்செயல்கள் பல புரிந்து தமிழ்மக்களின் பண்பாட்டை வளர்த்த முதலாம் மகேந்திரவர்மனுக்குத் தமிழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்கள் பல்லவப் பேரரசில் அடங்கியிருந்தன. இருபது ஆண்டுகள் நலம் பெற ஆட்சிபுரிந்து மகேந்திரவர்மன் கி.பி. 630-ல் காலம் சென்றான்.

முதலாம் நரசிம்மவர்மன்
(கி பி. 630—668)

முதலாம் மகேந்திரவர்மனின் மைந்தன் நரசிம்மவர்மன் கி. பி. 630-ல் காஞ்சிநகரில் அரியணை யேறினான்.

சளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசி புள்ளலூரில் தான் அடைந்த தோல்வியை நீக்கும் நோக்கத்துடன் பல்லவநாட்டைத் தாக்கினன். வேலூர்ப்பாளையத்திலும், கூரத்திலும் அகப்பட்டுள்ள பல்லவச் செப்பேடுகள் கூறுவதாவது:—பரியலம், மணிமங்கலம், சூரமாரம் என்னும் இடங்களில் நடந்த போர்களில் சளுக்கிய சேனை தோல்வியுற்று, பல்லவநாட்டை விட்டு வாதாபிக்கு ஓடிற்று.

மேற்கூறப்பட்ட இடங்களில் மணிமங்கலம் இன்று காஞ்சிக்கு இருபதுகல் தூரத்தில் உள்ளது. பரியலம் காஞ்சிக்கு அண்மையில் இருந்திருக்கக்கூடும். பல்லவச் செப்பேடுகள் புலிகேசனின் தோல்வியை நன்கு குறித்து, நரசிம்மவர்மனின் வீரத்தைப் பாராட்டுகின்றன. யானைக் கூட்டத்திற்குச் சிங்கம் போன்றவனும், நரசிங்கப் பெருமானை ஒத்தவனும், வணங்காமுடி மன்னர் மகுடத்தின்மேல் இருக்கும் சூடாமணியைப் போன்றவனுமான நரசிம்மவர்மன் வெற்றியென்னும் மொழியைப் புலிகேசியின் முதுகாகிய பட்டயத்தின்மீது எழுதினன் என்று கூரம் பட்டயங்கள் கூறுகின்றன. உதயச்சந்திரப் பட்டயங்கள் அவன் வாதாபியை அழித்தான் என்று பகர்கின்றன.

வேலூர்ப்பாளையப் பட்டயங்கள் கூறுவதாவது:— நரசிம்மவர்மன் தன் பகைவர்களை அழித்து வாதாபியின் நடுவில் தன் வெற்றித்தூணை நிறுவினன். தோல்வியுற்று ஓடிய சளுக்கியச்சேனையைத் தொடர்ந்து பல்லவப்படை சளுக்கியத் தலைநகரான வாதாபியை அணுகிற்று. பல்லவரின் தானைத்தலைவர் பரஞ்சோதி. பெரிய புராணத்தில் சிறுத்தொண்டர் எனச் சிறப்புற்று விளங்கும் நாயனராவர் பரஞ்சோதி. அவர் வாதாபிநகரைக் கைப்பற்றி, அதை மண்ணோடு மண்ணாக்கிப், புலிகேசியின் பெருநிதியைக் காஞ்சிக்குக் கொண்டுவந்து, தம் மன்னர் முன்பு குவித்தார் என்று பெரியபுராண ஆசிரியரான சேக்கிழார் பெருமான் கூறுகிறார்:

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்தும்
பன்மணியும், நிதிக்குவையும், பகட்டினமும், பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்."

பரஞ்சோதியார் வாதாபியைக் கைப்பற்றியபோது நேர்ந்த போரில் புலிகேசி மடிந்திருக்கவேண்டும். ஏனெனில் இப்போருக்குப் பின்னர் வாதாபிநகர் பதின்மூன்று ஆண்டுகள் குழப்பத்திற்குட்பட்டிருந்தது. புலிகேசியின் குமாரனுன **விக்கிரமாதித்தன்** இறுதியில் அக்குழப்பத்தை அடக்கிச் சளுக்கிய அரியணை அமர்ந்தான். புலிகேசியைப்பற்றி யாதொரு விவரமும் கூறப்படவில்லை. பரஞ்சோதியாரின் அருஞ்செயலால் நரசிம்மவர்மன் "**வாதாபி கொண்ட போத்தரையன்**" என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். அவனது பதின்மூன்றாவது ஆட்சியில் அளிக்கப்பெற்ற சீர்குலைந்த சாசனம் ஒன்றிலிருந்து அவன் தன்னை மாமல்லன் என்று அழைத்துக்கொண்டானென்பது விளங்கும்.

விக்கிரமாதித்தன் கி. பி. 655-ல் அரியணை யேறினன் என்று சளுக்கியப் பட்டயங்களிலிருந்து அறியக்கிடக்கின்றது. பதின்மூன்று ஆண்டுகள் வாதாபிநகரம் குழப்பத்திற்குட்பட்டு இருந்தது என்பதினால் வாதாபியின் வீழ்ச்சி கி. பி. 642-ல் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆகவே, சிறுத்தொண்ட நாயனாரின் காலத்தையும், அவர் காலத்திய இதர நாயன்மார்களுடைய காலத்தையும் நிர்ணயிப்பதற்கு வாதாபிப் படையெடுப்பு மிக்க துணை புரிகின்றது. பரத கண்டத்தின்கண்ணுள்ள பௌத்த இடங்களைக் கண்டு போகவந்த சீன யாத்திரிகரான இயூன்-சங் என்பவர் ஏறக்குறைய கி. பி. 641-ல் புலிகேசனைச் சந்தித்தார் என்று அறியக்கிடக்கின்றது. ஆகவே, வாதாபியின் வீழ்ச்சி கி. பி. 642-ல் என்று ஐயமின்றிக் கூறலாம்.

விக்கிரமாதித்தன் அளித்த கர்நூல் பட்டயம் கூறுவதாவது:—புலிகேசன் பகைவர் மூவரால் தோல்வியுற்றான்.

நரசிம்மவர்மன் அம்மூவரில் ஒருவன். இதர இருவரைப் பற்றியும் ஒருவாறு ஊகிக்கக்கூடும். நரசிம்மவர்மன் தாயாதியும், பல்லவநாட்டின் வடபகுதித் தலைவனும் அம்மூவரில் ஒருவனாக இருக்கக்கூடும். மூன்றாவது பகைவனைப் பற்றி இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சத்தில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கை மன்னனான மானவன்மன் தன் நாட்டை இழந்து காஞ்சிநகரில் நரசிம்மனிடத்தில் அடைக்கலம் புகுந்தான். சளுக்கியப் படையெடுப்பில் தன் நண்பனான பல்லவ வேந்தனுடன் சேர்ந்து, புலிகேசியுடன் போர்புரிந்திருக்க வேண்டும். பரஞ்சோதியாரோடு, மானவன்மனும் சேர்ந்து வாதாபியைக் கைப்பற்றியிருக்கலாம். வாதாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் நரசிம்மனான மாமல்லன் இலங்கை வேந்தனுக்குத் தனது நன்றியைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் பல்லவப்படை ஒன்றை அனுப்பி, மானவன்மனின் எதிரியான அட்டதத்தனோடு போர்தொடுத்தான். பல்லவப்படை வெற்றியுறாது போகவே நரசிம்மவர்மன் கடல்மல்லை யென்னும் தனது துறைமுகத்திலிருந்து பெரும்படையொன்றை ஈழத்திற்கு அனுப்பி அட்டதத்தனை வென்று மானவன்மனுக்கு முடிசூட்டினான். காசக்குடியில் அகப்பட்டுள்ள பல்லவப் பட்டயம் இச்செயலைத் தசரத குமாரனான இராமன் இலங்கையில் அடைந்த வெற்றிக்கு ஒப்பிட்டுப் பாராட்டுகின்றது.

வடபுலத்திலும், ஈழத்திலும் நரசிம்மவர்மன் வெற்றி பெற்றான் எனினும் தென்னாட்டில் பேரரசர்களாக விளங்கிய பாண்டியர்களை அவனால் அடக்க இயலாது போயிற்று. நரசிம்மவர்மனின் காலத்திய பாண்டிய அரசன் அரிகேசரி பராங்குசன் என்ற நெடுமாறன் ஆவான்.

சின்னமனூரில் அகப்பட்ட பாண்டியப் பட்டயம் கூறுவதாவது :—சங்கரமங்கை என்ற இடத்தில் பல்லவப் பேரரசனைப் **பாண்டியன் நெடுமாறன்** புறங்கண்டான். நெடுமாறனுக்கும் நரசிம்மவர்மனுக்கும் போர் பெரும்பாலும்


புலிகேசியின் தாக்குதலை ஓட்டி எழுந்திருக்கவேண்டும். மகேந்திரவர்மன் காலத்திலேயே புலிகேசி தமிழ்வேந்தர்களுடன் பல்லவர்களுக்கு எதிராக உறவுகொண்டிருந்தானல்லவா? நரசிம்மவர்மன் காலத்தில் அவன் காஞ்சியைத் தாக்கவே தமிழ் வேந்தர்கள் அவனுக்கு உதவியாகப் பல்லவ நாட்டின் தென்பகுதியில் தங்கள் படையுடன் நுழைந்திருக்கவேண்டும். இக்காரணம் கொண்டே நரசிம்மவர்மன் தோற்றோடிய புலிகேசியைத் துரத்திச்செல்லும்படி தன் தானைத்தலைவர் பரஞ்சோதியாருக்குக் கட்டளையிட்டு, தென்பகுதியில் நுழைந்த நெடுமாறனையும், அவன் துணைவர்களையும் தடுக்கத் திரும்பியிருக்கவேண்டும். நெடுமாறன், நரசிம்மன் வருமுன்னர் சங்கரமங்கையென்னுமிடத்தில் பல்லவரின் எல்லைப்படையை முறியடித்திருக்கவேண்டும். நரசிம்மவர்மன் பெரும்படையுடன் தென்பால் திரும்பியதும், பல்லவர்களுக்குச் சாதகமாகப் போர் மாறியிருக்கவேண்டும். எனினும் பல்லவ அரசன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதாகத் தெரியவில்லை. ஆகவே பாண்டியன் நெடுமாறன் நரசிம்மவர்மனைப்போலத் தமிழகத்தில் பேரரசனாக இருந்தான் என்றால் அது தவறன்று.

மகேந்திரவர்மன் சிற்பம், இசை, ஓவியம், நடனம் முதலிய கலைகளைப் பாராட்டி வளர்த்ததுபோல அவன் மைந்தனான நரசிம்மவர்மனும் அவைகளைப் பெரிதும் போற்றிவந்தான். தன் தந்தையைப்போல முதலில் நரசிம்மவர்மன் குகைக்கோயில்களை அமைத்தான். இவன் அமைத்த கோவில்கள் மகேந்திரவர்மனின் கோவில்களை விட மிகுந்த அழகுள்ளவை. மகேந்திரவர்மன் கோவிற்றூண்கள் சதுரமாயும், கனமாயும் இருக்கின்றன. நரசிம்மவர்மன் கோவிற்றூண்கள் உருண்டிருக்கின்றன. அவைகளைச் சிங்கங்கள் தலைமீது தாங்கி நிற்கின்றன. நாமக்கல் மலையடியில் இருக்கின்ற நரசிங்கப்பெருமாள் குகைக் கோவிலும், குடுமியாமலையில் உள்ள குகைக்கோவிலும் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள திருமெய்யத்தில் இருக்கும் பெருமாள் கோவிலும், திருச்சிராப்பள்ளி மலையடி


சித்தன்னவாசல் ஓவியங்கள்







மாமல்லபுரத்தில் காணப்படும் சில சிற்பச் செல்வங்கள்



பல்லவர்காலத்தில் மாமல்லபுரத்தில் ஒரேகல்லில்
செதுக்கப்பட்ட தேர்

[த. வ. பக்கம்: 73

யில் இருக்கும் குகைக்கோவிலும் நரசிம்மவர்மன் காலத்தில் குடையப்பட்டவை ஆகும்.

கடல்மல்லை என்னும் மாபலிபுரத்தில் சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன் முதலிய பல்லவ மன்னர்கள் ஆரம்பித்த வேலையை நரசிம்மவர்மன் வெற்றிபெறச்செய்து முடித்தான் எனக்கொள்ளலாம். கடல்மல்லை என்று அழைக்கப்பெற்ற அவ்வூர் நரசிம்மவர்மன் காலத்தில் மாமல்லபுரமாக மாறித் தற்போது மாபலிபுரமாக விளங்குகிறது. எவ்வாறு கடல்மல்லை மாமல்லபுரம் ஆகியது என்பதை வாதாபிநகரில் அகப்பட்டுள்ள சிதைந்த கல்வெட்டிலிருந்து ஊகிக்கலாம். நரசிம்மவர்மனுக்கு மாமல்லன் என்ற பட்டப்பெயர் ஒன்றுண்டு என்பதை அக்கல்வெட்டு விளக்குகின்றது. மாமல்லனால் பொலிவுறச் செய்யப்பெற்ற கடல்மல்லை மாமல்லபுரம் ஆயது வியப்பன்று. மாபலிபுரத்தில் உள்ள மகிஷாசுர மண்டபமும், வராக மண்டபமும், திரிமூர்த்தி மண்டபமும், மாமல்லன் அமைத்த குகைக்கோவில்கள் என்பதற்கு ஐயம் இல்லை. இம்மண்டபத் தூண்களில் காணப்படும் வேலைப்பாடுகள் வாதாபியில் உள்ள தூண்களில் காணப்படும் வேலைப்பாடுகளை ஒத்திருக்கின்றன.

வராக அவதாரம், வாமன அவதாரம் இவை இரண்டும் வாதாபிக் குகைக்கோவில் சுவர்களிலும், மாபலிபுரம் குகைக்கோவில் சுவர்களிலும் காணப்படுகின்றன. கஜலட்சுமி உருவச்சிலை, அநந்த சயனம், மகிஷாசுரவதம் முதலியன திறம்படச் செதுக்கப்பட்டிருக்கின்றன. நரசிம்மவர்மன் தன் பெயரை நிலைநாட்ட தனிக்கற்களை கோவில்களாக வெற்றிகரமாய் அமைத்தான். இக்கோவில்களைப் பிற்காலத்திய மக்கள் "பாண்டவரின் தேர்கள்" என அழைத்தனர். ஏனெனில் ஐந்து ஒற்றைக்கல் கோவில்கள் ஒரே வரிசையில் இருக்கின்றன. இவ்வைந்து தேர்களில் ஒன்றான தர்மராஜன் தேர் சிவன்கோவிலாக அமைக்கப்பெற்றது. பீமசேனன் தேர் பௌத்த சைத்தியங்களை ஒத்திருக்கின்றது. அர்ச்சுனன் தேர் தர்ம

ராஜன் தேரைப்போலச் சிவன் கோவிலாகும். அதற்கண்மை யிலிருக்கும் திரௌபதி தேர் கிராமத்தேவதைகளின் கோவிலை ஒத்திருக்கின்றது. சகதேவன் தேர் பீமசேனன் தேரைப்போலப் பௌத்த சைத்தியத்தைஒத்துக் காணப் படுகிறது.

தனிக்கற்களைக் கோவில்களாகச் செதுக்கி வெற்றி பெற்றதுபோல நரசிம்மவர்மன் பாறைகள்மீது புராணக் கதைகளை உருவகப் படுத்தியிருக்கின்றான். கோவர்த்தன கிரியைக் கண்ணன் குடையாகக் கொண்ட கதையும், "அர்ச்சுனனின் தவம்" என்றழைக்கப்படும் கங்கைக் காட்சியும் சிற்பங்களில் பாராட்டுதற்குரியன. பல்லவப் பேரரசைப் பல கோட்டைகளை அமைத்து நரசிம்மவர்மன் வன்மையுறச் செய்தான். லால்குடிக்கு அண்மையில் உள்ள **பல்லவரம்** என்னும் சிற்றூரில் காணப்படும் கோட்டையும், காஞ்சியில் காணப்படும் கோட்டையும் அவன் கட்டிய கோட்டைகளில் சிறந்தவையாகும். நரசிம்மவர்மனுடைய பட்டப்பெயர்கள் அவன் அமைத்த கோவில்களில் காணப் படுகின்றன. **மாமல்லன், இரணசயன், அத்யந்தகாமன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன்** முதலியன அவனுடைய பட்டப்பெயர்க ளாகும்.

நரசிம்மவர்மன் சுமார் நாற்பது ஆண்டுகள் வெற்றி யுடன் ஆட்சி புரிந்து கி. பி. 668ல் காலமானான். அவன் காலத்திலே சீன யாத்திரிகனான **இயூன்-சங்** ஏறக்குறைய கி. பி. 640-ல் காஞ்சிக்கு வந்தான். அவன் காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டைத் "**திராவிடம்**" எனக் குறிப்பிட்டுள் ளான். மக்களையும் நாட்டையும் பற்றிய அவனது கூற்று நரசிம்மவர்மனுக்கு மிகுந்த பெருமையை அளிக்கின்றது. "நாடுவளம் மிக்கது; விளைவுடையது; மக்கள் அஞ்சா நெஞ் சத்தினர்; நம்பத் தகுந்தவர்; பொதுசன சேவையில் ஆர்வ முள்ளவர்; காஞ்சிமாநகரம் ஆறுகல் சுற்றளவுடன் பல்லாயிரக் கணக்கான மக்களையும் மாடமாளிகைகளையும் கொண்டு சிறப்புற்று இருந்தது. அந்நகரில் பல பௌத்த மடங்கள் இருந்தன. அவைகளில் சிலவற்றில் ஆயிரக்

கணக்கான துறவிகள் இருந்தனர். சமணப்பள்ளிகளும், இதர கோயில்களும் அந்நகரில் இருந்தன,'' என்று சீன யாத்திரிகன் கூறுகின்றான்.

நரசிம்மவர்மன் ஒரு பரம பாகவதனாக இருந்தபோதி லும் சமயவாழ்க்கையில் மிகுந்த சகிப்புத்தன்மை கொண் டிருந்தானென்பது சீனயாத்திரிகனின் கூற்றிலிருந்து புலப் படுகிறது. இயூன்-சங் பாண்டிய நாட்டிற்கும் சென்றதாகக் கூறுகின்றான். ஆனால், அந்நாட்டில் பௌத்தம் சீர்கெட் டுச் சிதைந்த நிலையில் இருந்தது என்று வருத்தத்துடன் வரைகின்றான்.

நரசிம்மவர்மனின் குமாரன் இரண்டாம் மகேந்திரவர்மன் கி. பி. 668-ல் அரியணை யேறினான். அவனது ஆட்சிக் காலம் மிகவும் குறுகியது. கூறத்தகுந்த சம்பவங்கள் யாதொன்றும் அவன் காலத்தில் நேரவில்லை. கி. பி. 670-ல் அவன் காலம் சென்றதும் அவனுடைய குமாரன் முதலாம் பரமேசுவரவர்மன் அரசுகட்டில் ஏறி கி. பி. 685 வரையில் ஆட்சி புரிந்தான்.

முதலாம் பரமேசுவரவர்மன்
(கி. பி. 670—685)

பரமேசுவரவர்மன் காலத்தில் நடந்த சம்பவங்களில் மிக முதன்மை வாய்ந்தது சளுக்கியப்போர் ஆகும். இரண்டாம் புலிகேசியின் குமாரன் முதலாம் விக்கிரமாதித் தன் கடல்போன்ற தன் சேனையோடு பல்லவநாட்டைத் தாக்கிப் பெரும்போர் விளைத்தான். பரமேசுவரவர்மனும் தன் சேனையுடன் விக்கிரமாதித்தனை எதிர்த்து இறுதியில் அவனை வாதாபிக்கு விரட்டியடித்தான். இப்பெரும் போரில் பல்லவர்களும், சளுக்கியர்களும் தாம் தாம் வெற்றியடைந்ததாகப் பட்டயங்களும், செப்பேடுகளும் அளித்திருக்கின்றனர். சான்றுகள் முரண்படுவதால் உண்மையை அறிவது சிறிது கடினமே. கூர்ந்து ஆராய்ந்த பின் இருதிறத்தாரும் தங்களுடைய வெற்றியை வெளியிடு

கின்றனரே யன்றித் தாம் அடைந்த தோல்வியைக் குறிப்பிடவில்லை என்பது நன்கு விளங்கும்.

விக்கிரமாதித்தன் திடீரென்று தன் படையுடன் பல்லவர்களைத் தாக்கித் தோற்கடித்து, அகழி சூழ்ந்த காஞ்சிமாநகரினுள் சித்திரகாந்தம் என்னும் தனது அசுவத்தில் அமர்ந்து புகுந்து பல்லவமன்னனைத் தன் பாதகமலங்களை முத்தமிடும்படி செய்தான் என அவன் வெளியிட்டுள்ள கத்வல் பட்டயம் கூறுகின்றது. அவன் வெளியிட்ட கர்நூல் பட்டயம் கூறுவதாவது:—தன் பகைவரைப் பல நாடுகளில் வென்று தன் உரிமையைப் பெற்றான்.

மாமல்லனின் பேரனான பரமேசுவரவர்மனைப் புறமிட்டோடும்படி செய்தமையால் விக்கிரமாதித்தன் தன்னை 'இராசமல்லன்' என்று அழைத்துக்கொண்டான் என்று கத்வல் பட்டயம் பகர்கின்றது. விக்கிரமாதித்தனது தனயன் விநயாதித்தன் வெளியிட்ட சோரப்பட்டயம் பல்லவர் வேந்தனைத் தோற்கடித்துக் காஞ்சியை விக்கிரமாதித்தன் அடைந்தான் என்று கூறுகின்றது. கேந்தூர்ப் பட்டயத்திலிருந்து அறியப்படுவது யாதெனின் தமிழ்மன்னர் அனைவருங்கூடி விக்கிரமாதித்தனை எதிர்த்தனர் என்பதாம்.

பல்லவர் வெளியிட்டுள்ள பட்டயங்கள் சளுக்கியப் பட்டயங்களுக்கு முற்றிலும் முரணாயிருக்கின்றன. பரமேசுவரனது கூரம் பட்டயம் கூறுவது:—விக்கிரமாதித்தனைப் பல்லவமன்னன் தோற்கடித்துக் கந்தையைச் சுற்றிக்கொண்டு அவன் நாட்டிற்கு ஓடும்படி செய்தான். உதயேந்திரப் பட்டயம் அறிவிப்பதாவது:— பரமேசுவர வர்மன் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள பெருவளநல்லூரில் நடந்த பெரும்போரில் விக்கிரமாதித்தனை முறியடித்து, அவன் நாட்டிற்கு ஓடும்படி செய்தான் என்பதாம்.

அரிவாரணம் என்னும் தனது யானைமீதமர்ந்து வல்லபனை முறியடித்து விரட்டினான் என்று கூறும் கூரம் பட்டயத்தை நம்புவதா? அல்லது சளுக்கிய கத்வல் பட்டயத்தின் கூற்றை நம்புவதா? என்ற கேள்வி எழுகின்றது. இரு பட்டயங்களின் கூற்றும் உண்மையே. விக்கிரமாதித்தனது திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க இயலாது பல்லவப்படை பின்னிட்டிருக்கவேண்டும். தடுப்பவர் யாருமின்றி விக்கிரமாதித்தன் பல்லவநாட்டின் தென்கோடி வரையிலும் சென்றிருக்கவேண்டும். உரகபுரம் என்ற உறையூர்க்கு அண்மையிலிருக்கும் பெருவளநல்லூரில் பரமேசுவர வர்மனுக்கும் விக்கிரமாதித்தனுக்கும் பெரும் போர் நடந்திருக்கவேண்டும். முதலில் தோற்றோடிய பல்லவன் இறுதியில் வெற்றியடைந்தான் எனக் கூரம்பட்டயம் கூறுவதால், பரமேசுவரவர்மன் தனது தோல்விக்குப்பின்னர் ஒரு பெரும்படையைத் திரட்டியிருக்கவேண்டும். பெருவளநல்லூரில் நடந்த போரில் சளுக்கியரை முறியடித்து அவர்களது நாட்டுக்கு ஓடும்படி செய்திருக்க வேண்டும்.

சளுக்கியக் கேந்தூர்க்கல்வெட்டுக் கூறுவதாவது:— தமிழரசர் அனைவரும் கூடி விக்கிரமாதித்தனை எதிர்த்தனர்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் விக்கிரமாதித்தனை எப்பொழுது எதிர்த்திருக்கக்கூடும் என்ற கேள்வி எழுகின்றது. சளுக்கிய மன்னன் பல்லவநாட்டின் தென்கோடியை யடைந்ததும் பாண்டியர்களும், இதர தமிழ் வேந்தர்களும் அவனை எதிர்த்திருப்பார்களென்பதற் கையமில்லை. விக்கிரமாதித்தன் காலத்திய பாண்டிய மன்னன் நெடுமாறன் ஆவான்.

சின்னமனூரில் அகப்பட்டுள்ள செப்பேட்டில் காணப்படுவதாவது:—"வில்லவனை நெல்வேலியில் புறங்கண்ட பராங்குசன்." நெடுமாறனே அரிகேசரி பராங்குசனாவான். அவன் பெற்ற நெல்வேலி வெற்றியைச் சுந்தரமூர்த்தி நாய

ளுரும் தமது திருத்தொண்டத் தொகையில் பாராட்டிக் கூறியுள்ளார். "நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற, நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கு மடியேன்," ஆகவே நெல்வேலிப் போர் மிகவும் முக்கியமானது. கி. பி. 680-ல் காலமான அரிகேசரி மாறவர்மன் அடைந்த வெற்றியை அது குறிக்கும்.

சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தில் நெடுமாற நாயனுர் "சேயபுலத் தெவ்வர்தம் கடல்போன்ற தானையை நெல்வேலியில் அழித்தார்" எனக் கூறுகின்றுர். "வடபுலத்து முதல் மன்னர் படை சரிந்ததும் நெடுமாறன் வாகை புனைந்தான்", என்று நெல்வேலிப் போரை முடித்துள்ளார். உரகபுரத்தை அடைந்த விக்கிரமாதித்தனைப் பாண்டியன் நெடுமாறன் எதிர்த்து முறியடித்திருக்கவேண்டும். பின்னர்ப் பெரும்படையை வடக்கிலிருந்து திரட்டிக்கொண்டு வந்த பரமேசுவரவர்மன் சளுக்கியனைப் பெருவளநல்லூரில் முற்றிலும் முறியடித்துக் கந்தையோடு விரட்டியிருக்கவேண்டும். இரண இரசிகன் எனப் பெயர்பூண்ட விக்கிரமாதித்தனைப் பரமேசுவரவர்மன் வென்றதினுல் தன்னை அவன் "இரண ஜெயன்" என்று அழைத்துக்கொண்டான் போலும். சளுக்கியப் படையெடுப்பும், பெருவளநல்லூர், நெல்வேலிப்போர்களும் ஏறக்குறைய கி.பி. 675-ல் நடந்திருக்கவேண்டும்.

சளுக்கியப் போருக்குப் பின்னர் பரமேசுவரவர்மன் மக்களின் பண்பாட்டை வளர்ப்பதில் ஈடுபட்டான் எனப் பட்டயங்கள் பகர்கின்றன. அவன் பல சிவன்கோவில்களை யமைத்து முக்கண்ணன்பால் தனக்குள்ள பக்தியை வெளியிட்டான். காஞ்சிக்கு அண்மையில் கூரம் என்ற சிற்றூரில் சிவன்கோவிலொன்றைக் கல்லால் கட்டி அதற்குத் தன் பெயர்பெற்ற பரமேசுவரமங்கலம் எனும் சிற்றூரை மானியமாக அளித்தான். கூரம் கற்றளியே தமிழகத்தில் முதற் கற்கோவிலாகும். கூரம் பட்டயம் இச் சந்தர்ப்பத்தில் அளிக்கப்பட்டதாகும்.

மாபலிபுரத்தில் ஒற்றைக் கல்லில் தற்போது கணேசர் கோவிலென்று கூறப்படும் சிவன்கோவிலைப் பரமேசுவரவர்மன் அமைத்தான். தர்மராஜ தேரின் மூன்றாவது அடுக்கை முடித்து அதில் தான் பூண்டு கொண்ட 'இரணஜெயன்' என்னும் பெயரைப் பொறித்தான். கணேசர் கோவிலில் பதினொரு வடமொழிப் பாக்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவை சிலேடையாக அமைந்தவை. அரசனாகிய பரமேசுவரவர்மனுக்கும், சிவனுக்கும் அப்பாக்கள் பொருந்துகின்றன. ஆகவே, பரமேசுவரவர்மன் வடமொழியிற் சிறந்த புலமை பெற்றிருந்தான் என்பது நன்கு விளங்கும்.

உருத்திராக்கமணிகளைக் கொண்டு சிவலிங்க வடிவமாக அமைக்கப்பெற்ற முடியையே பரமேசுவரவர்மன் தன் தலையில் எப்போதும் அணிந்திருந்தான் என்பதை அப்பாக்களிலிருந்து அறியக்கிடக்கின்றது. சித்திரமாயன், குணபாசனன், அத்யந்தகாமன், ஸ்ரீநிதி, இரணஜெயன், ஸ்ரீபரன், முதலிய பட்டப்பெயர்களை இவன் கொண்டிருந்தான். சிறந்த சிவபத்தன்; பேரரசன்; திடவீரன்; தன் முன்னோர்களைப்போலப் பலகலைகளையும் வளர்த்து மக்களின் அன்பைப் பெரிதும் பெற்றிருந்தான். கி. பி. 685-ல் அவன் காலமாகவே இராசசிம்மன் என்னும் அவனுடைய மைந்தன் பல்லவ அரியணை யேறினான். இவனை இரண்டாம் நரசிம்மவர்மன் என்று இவனுடைய பட்டயங்கள் கூறுகின்றன.

இரண்டாம் நரசிம்மவர்மன்
(இராசசிம்மன் கி. பி. 685—705)

கி. பி. 685-ல் அரியணை யேறிய இராசசிம்மன் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். அவன் காலத்தில் சளுக்கியரின் தொல்லை ஒழிந்திருந்தது என்று சில ஆசிரியர்கள் கூறுவர். ஆனால், அவன் காலத்திய கல்வெட்டுக்கள் அவனைப் போரில் விஜயனுக்கும், இராமனுக்

கும் ஒப்பிடுகின்றன. உடல்வலியில் நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன் என்று கூறுகின்றன. பகைவர்க்கு இடியேறு போன்றவனென்றும், வீரத்தில் மகேந்திரனை ஒத்தவனென்றும், பல இடங்களை வென்றவனென்றும், சமரில் களைப்படையாதவனென்றும் குறிக்கின்றன. போரில் ஈடுபடாத ஓர் அரசனைப்பற்றி இத்தகைய பாராட்டு மொழிகள் எழுவதற்கு நியாயமில்லையன்றோ? ஆகவே, இவன் விக்கிரமாதித்தன் மகனான விநயாதித்தனுடன் போர்புரிந்திருக்க வேண்டும் என்று கருதிடின் தவறொன்றுமில்லை.

விநயாதித்தனும் இராசசிம்மனோடு போர்புரிந்தான் என்பதிற்கையமில்லை. ஏனெனில் சளுக்கியர், பல்லவர்கள் கையில் பலமுறை படுதோல்வியுற்றிருக்கின்றனர். இரண்டாம் புலிகேசனும், முதலாம் விக்கிரமாதித்தனும் பல்லவர்களால் விரட்டப்பட்டு அவமானம் அடைந்தவர்களன்றோ? பரமேசுவரவர்மன் மறைந்ததும், அவன் தனயன் இரண்டாம் நரசிம்மனோடு விநயாதித்தன் போர் தொடர்ந்திருக்கக்கூடும். பல்லவநாட்டில் கி. பி. 686 முதல் - 689 வரை மூன்று ஆண்டுகள் பெரும்பஞ்சம் ஒன்று மக்களை வாட்டிற்று என்று சீனநூல் ஒன்று கூறுகின்றது. விநயாதித்தன்,- இராசசிம்மன் போரைப் பற்றிய கல்வெட்டுக்கள் இதுகாறும் கிடைத்தில எனினும் மக்களை வாட்டிய பஞ்சம் அப்போரின் விளைவேயெனக் கொள்ளலாம்.

இராசசிம்மன் தன் பகைவர்களை யடக்கி பல்லவப் பேரரசை வலுவுறச்செய்தான் என்பது அவன் கல்வெட்டுக்களிலிருந்து அறியக்கிடக்கின்றது. பஞ்சத்திற்குப் பிறகு இராசசிம்மன் கைலாசநாதர் கோவிலைக் காஞ்சியிற் கட்டினான். கைலாசநாதர் கோவிற் கல்வெட்டுக்கள் இவனுடைய அரிய குணங்களை விளக்குகின்றன, **"ஆகமப்பிரியன்"** என்றும், **"சங்கரபக்தன்"** என்றும், **"சிவசூடாமணி"** என்றும், **"வாத்ய வித்யாதரன்"** என்றும், **"இரணஜெயன்"** என்றும் அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றமையால் இராசசிம்மன் பத்தியிலும், கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினான்

என்பதற்கு ஐயமில்லை. பூசலார் என்னும் நாயனார் இராச சிம்மன் காலத்தவர் என்று சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில் கூறுகின்றார்.

கைலாசநாதர் கோவிலைக் கட்டிமுடித்த இராசசிம்மன் கும்பாபிடேகம் செய்ய நன்னாள் ஒன்றைக் குறிப்பிட்டான். இறைவன் அவனது கனவில் தோன்றி அவன் குறித்த நாளில் தான் பூசலார் கோவிலில் எழுந்தருளப் போவதால் பிறிதொருநாளைக் குறிக்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டடார். இராசசிம்மன் வியப்புற்றுத் திருநின்ற வூர் வாசியான பூசலாரைத் தேடியடைந்து, அவர் கட்டிய கோவிலைக் காண்பிக்கும்படி வேண்டவே, அவர் தமக்குப் பொருள் இன்மையால் தமது மனத்திலேயே திருக் கோவில் ஒன்றை அமைத்து அரசன் குறிப்பிட்டிருந்த நன்னாளில் கும்பாபிடேகம் செய்யக் கருதியிருந்ததைக் கூறவே, அரசன் அவருக்கு அடிபணிந்து காஞ்சிநகர் ஏகினான். இக்கனவைக் கைலாசநாதர் கோவிற் கல்வெட்டுக் கள் அரசன் வானொலிகேட்டான் எனக் கூறுகின்றன.

காஞ்சியில் கைலாசநாதர் கோவிலை அமைத்தது மன்றி, இராசசிம்மன் மாபலிபுரத்தில் கடற்கரைக் கோவிலையும் சிறப்பாகக் கட்டுவித்தான். அவன் மாபலி புரத்தில் மூன்று கோவில்களைக் கட்டியிருக்கவேண்டும். ஆனால் இப்போது இருப்பது திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற ஜலசயனமே ஆகும். ரங்கபதாகை யென் னும் இவன் அரசி கோவில் கட்டுவதில் இவனை மிகவும் ஊக்குவித்தாள் என அறியக்கிடக்கின்றது.

வடமொழிப் புலவரான தண்டி யென்பவர் இராச சிம்மனது ஆதரவைப் பெற்றிருந்தார் என்பதை விளக்கப் பல சான்றுகள் உள. பல்லவமன்னர்கள் வடமொழிப் புலவர்களை நன்கு போற்றியவராவர். தண்டியின் அவந்தி சுந்தரி கதை இராசசிம்மன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத் தைப்பற்றி விளக்குகின்றது. இராசசிம்மனே அவரிடம் கல்வி கற்றுச் சிறந்த வடமொழிப்புலவன் ஆகினான் என்று கருதுவதில் தவறில்லை. தன் முன்னோர்களைப்போல

இவன், இசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளை நன்கு வளர்த்தான் எனக் கொள்ளலாம். வடமொழி நாடகாசிரியரான 'பாசர்' என்பவரின் நாடகங்கள் இவனது அவையில் நடிப்பதற்கு ஏற்றமுறையில் சுருக்கி வரையப் பட்டன என்று அறிஞர் கூறுவர்.

கி. பி. 705-ல் இராசசிம்மன் காலமாகவே அவன் தனயன் இரண்டாம் பரமேசுவரவர்மன் அரியணை யேறினன். அவன் இரண்டாம் மகேந்திரவர்மனைப்போல சில ஆண்டு கள் ஆட்சிபுரிந்து நேர்வாரிசுகளின்றி கி. பி. 710-ல் காலஞ் சென்றான். அம்மன்னனின் தாயாதிகளில் பலர் அரியணை யைக் கைப்பற்ற முனைந்தனர். அவர்களில் ஒருவன் சித்திரமாயன் என்பவன். அவன் எதிரி சிம்மவிஷ்ணு வின் சோதரனாகிய பீமவர்மனின் வழிவந்த இரணியவர்ம னின் குமாரன் நந்திவர்மன் ஆகும். தன்னுடைய தந்தை யின் பேராற்றலால் நந்திவர்மன் பல்லவ அரியணையைக்கைப் பற்றிப் "பல்லவ மல்லன்" என்றும், "போத்தரையன்" என் றும் புனைபெயர்கள் பூண்டு, கி. பி. 710-ல் அரசுகட்டில் ஏறினன். அவன் தனது இளவயதிலேயே அரியணையில் ஏறியிருக்கவேண்டும். ஏனெனில் அவன் அரியணையில் அமர்ந்த அறுபத்தைந்தாவது ஆண்டிற் பிறப்பித்த பட்ட யங்களும் கல்வெட்டுக்களும் அகப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் நந்திவர்மன்
(பல்லவ மல்லன் கி. பி. 710-775)

இரண்டாம் பரமேசுவரவர்மனோடு சிம்மவிஷ்ணு வழிவந்த பல்லவமரபு முடிவுற்றது. அவனுக்குச் சித்திர மாயன் என்னும் மைந்தன் இருந்தான். ஆனல் அவனைச் சிற்றரசர்களும் பல்லவ அரசியல் அதிகாரிகளும் பொது மக்களும் அரியணையேற இடங்கொடுக்கவில்லை. காரணம் :—பல்லவப் பேரரசு இருபெரும் பகைவர்களால் அச்சுறுத்தப்பட்டது. வடபால் சளுக்கியரும், தென்பால் பாண்டியர்களும் பல்லவ அரசைத் தாக்கமுனைந்து நின்ற னர். சித்திரமாயன் சிறுவனுக இருந்திருக்கலாம்; அரசி

யல். பொறுப்பை ஏற்கத் தகுதியற்றவனாக இருந்திருக்கலாம். சளுக்கியரையும் பாண்டியர்களையும் எதிர்த்து நிற்கப் போதிய அறிவும், ஆற்றலும், அனுபவமும் உடைய தலைவன் ஒருவன் வேண்டியதிருந்ததால் அமைச்சர்களும், சிற்றரசர்களும் சிம்மவிஷ்ணுவின் சகோதரனான பீமவர்மனின் வழிவந்த இரணியவர்மனை அரசனாகுமாறு வேண்டிக் கொண்டனர். அப்பதவியை அவன் மறுத்துத் தன் மைந்தர்களுள் ஒருவனுக்கு அதைக்கொடுக்க இசைந்தான். வயதுவந்த அவனுடைய மூன்று மூத்த குமாரர்களும் அரியணையேற மறுக்கவே பன்னிரண்டு வயது இளைஞனான பல்லவமல்லன் "நான் அரசனாவேன்" என்று தந்தையிடம் கூறிப் பொதுமக்கள், மந்திரிகள், சிற்றரசர்கள் முதலியோரின் ஆதரவைப்பெற்று, கி. பி. 710-ல் அரியணை அமர்ந்தான்.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலுள்ள சிற்பங்களும், காசக்குடிப்பட்டயமும் குறிப்பிடுவதாவது :— பல்லவமல்லனை மக்களே அரசனாகத் தேர்ந்தெடுத்தனர் என்பதாம். தன் குமாரன் வயது வரும்வரை இரண்யவர்மன் அவனுக்கு அனுசரணையாகப் பகைவர்களிடமிருந்து பல்லவநாட்டைப் பாதுகாத்தான் எனக் கொள்வதில் தவறில்லை.

பதவியிழந்த சித்திரமாயன் பாண்டியன் அரிகேசரி பராங்குசமாறவர்மன் (கி. பி. 710—765) இடத்தில் தஞ்சம் புகுந்தான். பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் எல்லைத் தகராறுகள் மனக்கசப்பை உண்டாக்கியிருந்தமையால் பாண்டியன் பல்லவனை எதிர்க்கச் சமயம் பார்த்திருந்தான். கி. பி. 734-ல் பல்லவன் கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள நாதன்கோவில் அல்லது நந்திபுரம் என்னும் கோட்டையில் இருக்கையில் பாண்டியன் அவனைத் தாக்கித் தொல்லைப்படுத்தினான். பல்லவத் தானைத்தலைவனான உதயச்சந்திரன் தன் மன்னனின் இடுக்கணைத் தீர்க்கப் பெரும்படை திரட்டிப் பாண்டியனோடு போர்புரிந்தான். சூதவனம், நிம்பவனம், மண்ணைக்குறிச்சி, குரும்

பூர் முதலிய இடங்களில் கடும் போர்கள் நடந்தன. இவ்வூர்கள் தஞ்சைக் கோட்டத்திலும் புதுக்கோட்டைச் சீமையிலும் இருக்கின்றன. பாண்டியன் சில இடங்களில் வெற்றி பெற்றான். உதயச்சந்திரன் சில இடங்களில் வெற்றிபெற்றான். இறுதியில் உதயச்சந்திரன் கையோங்கியது. பாண்டியன் பின்னிட்டான். உதயச்சந்திரன் போரில் சித்திரமாயனை வெட்டி வீழ்த்திப் பல்லவமல்லனின் ஆட்சியை வலுவுறுத்தினான்.

பல்லவமன்னன் தென்பால் தன் பகைவர்களோடு போர் புரிந்திருக்கும்பொழுது சளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தன் ஒரு பெரும்படையுடன் பல்லவநாட்டைத் தாக்கிக் காஞ்சியை அணுகினான். பல்லவப்படைகள் பின்னிடவே விக்கிரமாதித்தன் காஞ்சியில் புகுந்து கைலாசநாதர் கோவில் முகப்பிலுள்ள தூண் ஒன்றில் தான் அடைந்த வெற்றியைக் குறித்தான்.

கைலாசநாதர் கல்வெட்டுக் கூறுவதாவது:—பல்லவர்கள் வாதாபியை அழித்ததுபோல் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிமாநகரைத் துகளாக்காது அந்நகரின் கோவில்களைப் பாதுகாத்துத் தன் முன்னோன் முதலாம் விக்கிரமாதித்தன் கைலாசநாதர் கோவிலிலிருந்து எடுத்துச்சென்ற பொற்காசுகளையும், இரத்தினங்களையும் அக்கோவிலுக்கு மீண்டும் அளித்துப் பொதுமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றான். பல்லவப்பட்டயங்களொன்றும் இத்தாக்குதலைப் பற்றிக் கூறவில்லை. காரணம், சளுக்கியவெற்றி பூரணமானது. சளுக்கிய மன்னன் இரண்டாம் கீர்த்திவர்மன் வெளியிட்ட வக்கலேரிப்பட்டயமும், கேந்தூர்ப் பட்டயமும் இப்போர்நிகழ்ச்சிகளைத் தெளிவுறுத்துகின்றன.

கீர்த்திவர்மன் விக்கிரமாதித்தனின் தனயன். இப்போரில் தந்தையோடு அவனும் பங்கு கொண்டிருந்தான். காஞ்சியைக் கைப்பற்றிய விக்கிரமாதித்தன் சிறிது காலம் சென்றபின் பல்லவன் ஒருவனை அரசனுக்கித் தன் தேசத்

திற்கு ஏகினன் என்றும், அதன் பின்னர்ப் பல்லவமல்லன் உதயச்சந்திரனின் உதவியால் காஞ்சியைக் கைப்பற்றினன் என்றும் சிலர் கூறுவர். பகையரசன் சென்றபின் காஞ்சியைப் பல்லவமல்லன் கைப்பற்றினன் என்று கொள்வது பொருத்தமன்று. சித்திரமாயனைக் கொன்று பாண்டியனை விரட்டியடித்த பின்னர் உதயச்சந்திரனும் பல்லவமல்லனும் காஞ்சிக்குத் திரும்பி விக்கிரமாதித்தனையும் இளவரசன் கீர்த்திவர்மனையும் விரட்டியிருக்கவேண்டும். முதலில் பல்லவமல்லன் மட்டும் தென்பகுதியிலிருந்து காஞ்சிக்குப் படையுடன் மீண்டிருக்கலாம். கேந்தூர், வக்கலேரிப் பட்டயங்கள் கூறுவதுபோலச் சளுக்கியர் அவனைத் தோற்கடித்திருக்கலாம். தென்திசைப்போரை முடித்த உதயச்சந்திரன் தன் படையுடன் காஞ்சிக்குத் திரும்பிச் சளுக்கியரை உதயேந்திரம், காசக்குடிப் பட்டயங்கள் கூறுவதுபோல பல்லவநாட்டை விட்டுத் துரத்தியிருக்க வேண்டும். போர் சளுக்கியருக்குப் பாதகமாய் முடிந்ததெனினும் அவர்களுடைய பண்பாட்டை அது வளர்த்தது என்பதற்கையமில்லை.

விக்கிரமாதித்தனின் அரசியான லோகமாதேவி பட்டடக்கல் என்னுமிடத்தில் காஞ்சிக் கைலாசநாதர் ஆலயத்தைப்போல விருபாட்சருக்கு ஆலயம் ஒன்றைத் தன் கணவனின் வெற்றிச் சின்னமாக அமைத்தாள். விக்கிரமாதித்தனும் தன் நாட்டில் கைலாசநாதர் கோவிலைப்போலப் பல கோவில்களைப் பல்லவர் முறையில் எழுப்பினன். பல்லவப் போரினல் சளுக்கிய மரபே இறுதியில் அழிந்தது எனக் கொள்ளலாம். ஏனெனில், விக்கிரமாதித்தனின் தனயனை கீர்த்திவர்மன் அரியணையமர்ந்த சில ஆண்டுகளுக்குள் உயிர்துறக்க நேரிட்டது. இராட்டிர கூடரின் தலைவனை தந்தி துர்க்கன் தக்கணத்தில் சளுக்கியரை வென்று தனது ஆதிக்கத்தை கி. பி. 754-ல் நிலைநாட்டினன். பல்லவமன்னன் இராட்டிர கூடருக்கு அனுசரணையாக இருந்து சளுக்கியமரபினரை அழித்தொழித்தான்.

தந்திதுர்க்கனின் கல்வெட்டு அவன் காஞ்சியை வென்றதாகக் கூறுகிறது. ஆனால், பல்லவஅரசனோடு அவன் பகைமை பாராட்டாது அவனுக்குத் தன் குமாரி ரீவா என்பவளைத் திருமணம் செய்துகொடுத்தான். தந்தி துர்க்கனின் பட்டப்பெயர் வயிரமேகன் ஆகும். வயிர மேகனையும், பல்லவமல்லனையும் காஞ்சியில் கண்டதாகக் திருமங்கையாழ்வார் பாடியிருக்கிறார். இரண்டாம் நந்தி வர்மன் தன் காலமெல்லாம் போர்களில் கழித்தான் எனக் கொள்ளலாம். கங்க அரசனை ஸ்ரீபுருஷனுடன் போரிட்டு அவனிடமிருந்து வயிரம் பதித்த கழுத்தணியொன்றைக் கைப்பற்றினான் என ஒரு பட்டயம் பகர்கின்றது. வெங்கி நாட்டில் சளுக்கியரையும், கங்கர்களையும் சமரில் வென்று வடக்கிலும் மேற்கிலும் சில நாட்டுப்பகுதிகளை உதயச் சந்திரன் பல்லவப் பேரரசிற்குட்படுத்தினான் என்று பல்லவப்பட்டயங்கள் கூறுகின்றன. போர்கள் பல நிகழ்ந் தன எனினும் நந்திவர்மன் தன் நாட்டில் ஒரு சிறு பகுதியையும் இழக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. பல்லவப் பேரரசு இவன் காலத்தில் வடவேங்கடத்தி லிருந்து புதுக்கோட்டைவரை பரவி வன்மை பெற்று விளங்கியது.

பல்லவமல்லன் ஒரு பரம பாகவதன். ஆழ்வார்களில் சிறந்த திருமங்கையாழ்வார் இம்மன்னனின் காலத்தவர். காசக்குடிப்பட்டயம் நந்திவர்மனை "அரிசரணபரன்" என் றழைக்கின்றது. தண்டன் தோட்டப்பட்டயம் முகுந்தன் திருவடிகளைத்தவிர நந்திவர்மன் வேறொரு தெய்வத்தையும் வணங்கவில்லை யென்று கூறுகிறது. காஞ்சியில் வைகுந்தப் பெருமாள் கோவிலை நலமுற அமைத்தான். அதற்கு வேண்டும் தானங்கள் செய்தான். கூரத்தில் கேசவப் பெருமாள் கோவிலைக் கட்டினான். புதுக்கோட்டையில் குன்றாண்டார் கோவிலை யமைத்தான். காஞ்சியிலுள்ள மூத்தீசுவரர் கோவில் இவன் காலத்தில் சிறப்புற்று விளங்கி யது. மத விஷயங்களில் மிகுந்த சகிப்புத்தன்மையுடன் நந்திவர்மன் ஆட்சிபுரிந்தான் என்பதற்குச் சான்று

ஆர்க்காடு நகருக்கருகிலுள்ள பஞ்சபாண்டவர் மலையில் குடைந்தெடுக்கப்பட்ட சமணர் குகையாகும். பௌத்தர்களும் இவன்காலத்தில் இருந்தனர் என்பதைத் திருமங்கையாழ்வாரின் பதிகங்கள் வலியுறுத்துகின்றன. கலைகளையும், சமயத்தையும் நலமுற வளர்த்து நந்திவர்மன் தனது முதுமைப்பருவத்தில் கி. பி. 775-ல் காலமாயினான். அவன் மைந்தன் தந்திவர்மன் அரசுகட்டில் ஏறினான்.

தந்திவர்மன்
(கி. பி. 775—826)

தந்திவர்மன் ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஆட்சி புரிந்தான் எனக் கருதல் ஆகும். கல்வெட்டொன்று இவனது ஐம்பத்தோராவது ஆட்சிஆண்டைக் குறிக்கிறது. இவன் ரீவாவின் மைந்தனாகையால் தன் பாட்டனின் (தந்திதுர்க்கன்) பெயரைப் பெற்றான். இவனுக்கும் அவனைப்போல வயிரமேகன் என்னும் பட்டப்பெயர் உண்டு. நெருங்கிய உறவினன் எனினும் இராட்டிரகூட மன்னர்களான துருவனும், மூன்றும் கோவிந்தனும் பல்லவ நாட்டைத் தாக்காது இருக்கவில்லை. துருவன் தந்திவர்மனைத் தாக்கியதற்குக் காரணம் பல்லவமல்லன் இராட்டிரகூடர் அரசியல் விஷயங்களில் தலையிட்டதேயாகும். துருவனுக்கும் அவனுடைய மூத்த சகோதரன் இரண்டாம் கோவிந்தனுக்கும் எழுந்த தகராறில் தந்திவர்மன் கோவிந்தனை ஆதரித்தான். இறுதியில் வெற்றிபெற்ற துருவன் தன் தமையனுக்கு உதவிபுரிந்தவர்களைப் பெரும்படையுடன் தாக்கி அவர்களின் செருக்கை யடக்கினான். கி. பி. 780-ல் அவன் காஞ்சியை முற்றுகையிட்டபொழுது தந்திவர்மன் அவனுக்குப் பணிந்து தனது யானைப்படையை யளித்துக் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.

கி. பி. 794-ல் துருவன் காலஞ்சென்றதும் அவன் மைந்தனான மூன்றும் கோவிந்தன் அரசனானான். தன் தந்தையைப்போலக் கோவிந்தனும் தன் தமையனுடன் போரிடவேண்டியதாயிற்று. தந்திவர்மன் இப்போரிலும்

கோவிந்தனின் தலைமையனையே ஆதரித்து நின்றான். வெற்றி பெற்ற கோவிந்தன் காஞ்சியைக் கைப்பற்றித் தந்திவர்மனைத் தனக்குப் பணியுமாறு செய்தான். பின்னர்க் கோவிந்தன் வடநாடுகளை வெல்லச் சென்றபொழுது தந்திவர்மனும் தமிழ்வேந்தர்களும் இராட்டிரகூட மன்னனுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தனர். சீற்றங்கொண்ட கோவிந்தன் மறு முறையும் காஞ்சியைக் கைப்பற்றித் தந்திவர்மனைத் தனக் குக் கப்பம் கட்டும்படி கட்டளையிட்டான்.

இராட்டிரகூடப் போர்களினால் வலிமை இழந்த தந்தி வர்மனைத் தென்திசையில் பாண்டியமன்னனான முதலாம் வரகுணன் எளிதில் தாக்கிப் பல்லவப் பேரரசிற்குட்பட் டிருந்த சோழநாட்டைக் கைப்பற்றியது மட்டுமன்றித் தொண்டைமண்டலத்திலும் பெண்ணையாற்றுப் பிரதேசத் தைக் கவர்ந்தானெனப் பாண்டியன் பட்டயங்களிலிருந்து அறியக்கிடக்கின்றது. வரகுணபாண்டியனின் கல்வெட்டுக் கள் சோழநாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன.

தந்திவர்மன் பல நெருக்கடிக்குட்பட்டிருந்தபோதிலும் தன் குடிகளின் நலனைப் பெரிதும் பேணினான் எனக் கல் வெட்டுக்களிலிருந்து அறியலாகும். திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் தன் பட்டப்பெயர்கொண்ட ஏரி ஒன்றை வெட்டுவித்தான். புதுக்கோட்டைச் சீமையில் இவனுடைய சிற்றரசனான வாலிவடுகன் ஏரி ஒன்றை வெட்டுவித்தான். வயிரமேகன்வாய்க்கால் இவன் காலத்தில் வெட்டப் பெற்றது. மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச்செய்து வேளாண்மையைத் தந்திவர்மன் வளர்த்தானெனக் கூற லாம். இவன் விஷ்ணுபத்தன் எனினும் திருச்சிராப் பள்ளிக்கோட்டத்திலுள்ள ஆலம்பாக்கத்தில் கைலாச நாதர் கோவிலொன்றைக் கட்டி, அதற்குத் தன் பெயரால் வழங்கப்பெற்ற தந்திவர்மமங்கலம் என்னும் சிற்றூரைத் தானமாக அளித்தான். காஞ்சி பரமேசுவர விண்ணகரத் திற்குப் பொற்குடம் ஒன்றை அளித்துள்ளான். இவனது கல்வெட்டொன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் அகப்பட்டுள்ளது. நெல்லும் பொன்னும் அக்

கோவிலுக்கு அரசன் தானம் செய்ததாக அக் கல்வெட்டுக் கூறுகின்றது. அரை நூற்றாண்டாக மக்களின் நலனைப் பேணி, தந்திவர்மன் கி. பி. 826-ல் காலம் சென்றான். அவன் மைந்தனான **மூன்றாம் நந்திவர்மன்** அரியணை யேறினான்.

மூன்றாம் நந்திவர்மன்
(கி. பி. 826—850.)

மூன்றாம் நந்திவர்மன் பல்லவ தந்திவர்மனுக்கும் கதம்பகுமாரி அக்களநிம்மதிக்கும் தோன்றியவன் ஆவன். இவன் காலத்துப் பட்டயங்களும், கல்வெட்டுக்களும் பெரிய புராணமும் பாண்டிய இராட்டிரகூடக் கல்வெட்டுக் களும் தமிழ்இலக்கிய நூல்களும் இவனது ஆட்சியை நன்கு உணர்த்தும் சான்றுகளாவன. திருக்காட்டுப்பள் ளியில் சிவன்கோவிற்கு இவன் ஒரு சிற்றூரைத் தான மாக அளித்து வேலூர்ப்பாளையப் பட்டயத்தை இவனது ஆறும் ஆண்டில் வெளியிட்டான். அப்பட்டயம் மிகுந்த வரலாற்றுமுதன்மை வாய்ந்ததாகும். இவனது பத்தா வது ஆட்சிஆண்டில் வெளியிட்ட கல்வெட்டு ஒன்று **தெள்ளாறில்** இவன் பெற்ற பெரும் வெற்றியைக் குறிக் கின்றது. ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் இவன் அரசனாக இருந்திருக்கக்கூடுமெனப் பட்டயங்களும், கல் வெட்டுக்களும் பகர்கின்றன.

நந்திக்கலம்பகம் என்னும் தமிழ்இலக்கியம் இவன் மீது பாடப்பட்டது. இவன் அரும்பெரும் குணங்களை அந்நூல் தெளிவுறுத்துகின்றது. நந்திக்கலம்பகத்தில் இவன் '**கழல்நந்தி**' '**பல்லவர்கோன் அரி**' என்றும் பாராட்டப் படுகின்றமையால் இவனே சேக்கிழார்பெருமான் புகழ்ந்து கூறும் கழல்சிங்கநாயனார் என்பதற்கு ஐயமில்லை. சுந்தர மூர்த்திநாயனார் தமது **திருத்தொண்டத்தொகையில்** கழல் சிங்கனைக் குறிப்பது நோக்கத்தக்கது.

"கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்,
காடவர்கோன் கழல்சிங்கன் அடியார்க்கும் அடியேன்."

அரியணை யேறியதும் நந்திவர்மன் இராட்டிரகூட மன்னர் துருவன், மூன்றும் கோவிந்தன் இவர்கள்பால் தன் தந்தை தந்திவர்மன் அடைந்த தோல்வியை நீக்கும் நோக்கத்துடன் வடக்குநோக்கித் தன் படைகளை நடத்தி இராட்டிரகூடரைத் தோற்கடித்துப் பல்லவப் பேரரசர்களின் பெருமையை நிலைநிறுத்தினான். நந்திக்கலம்பகம் இவனது வடபுலப் போரைத் தெளிவாகக் குறிக்கின்றது.

> "குஞ்சரங்கள் சாய, குருக்கோட்டை அத்தனையும்,
> அஞ்சரங்கள் ஆர்த்தான் அருள்."

குருக்கோடு துங்கபத்திரை ஆற்றங்கரையில் உள்ள கோட்டையாகும். நந்திவர்மனின் வடபுல வெற்றியை வேலூர்ப்பாளையப் பட்டயமும் உணர்த்துகின்றது. இவனது "வாளால் துணிக்கப்பட்ட யானைகள் அணிந்திருந்த முத்துமாலைகள் போர்க்களத்தில் சிதறிக்கிடந்த காட்சி போர்க்களமங்கை தன் பற்களைக் காட்டி நகைப்பதுபோல இருந்தது," என்று அப்பட்டயம் கூறுகின்றது. தெள்ளாற்றுப் போருக்கு முன்பு இப்பட்டயம் வெளியிடப்பட்டமையால் வடபுலப்போரையே இது குறிக்கின்றது என்பதற்கையமில்லை. சேக்கிழார் பெருமான் இப்போரைக் குறிக்கின்றது நோக்கத்தக்கது. "கூடலர் முனைகள் சாய வடபுலம் கவர்ந்துகொண்டு" காஞ்சி போந்தான், தான் ஒரு பேரரசன் என்பதை நிலைநாட்டவே இப்போரில் நந்திவர்மன் ஈடுபட்டான் போலும். இராட்டிரகூட மன்னனான அமோகவர்ஷன் இலக்குமிபோன்ற தன் குமாரி "சங்கா" என்பவளை நந்திவர்மனுக்குத் திருமணம் செய்துகொடுத்து அவனுடன் உறவுகொண்டான்.

மூன்றும் நந்திவர்மன் செய்த போர்களில் தெள்ளாற்றுப் போர் ஒன்றே மிகவும் சிறப்பு வாய்ந்தது. பத்தாம் ஆட்சிஆண்டிற்குப்பின்னர் இவன் வெளியிட்ட பட்டயங்களும் கல்வெட்டுக்களும் இவனைத் "தெள்ளாறெறிந்த நந்திவர்மன்" என்றே குறிக்கின்றன. இப் போர் நந்திவர்மனுக்கும் பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனு (கி. பி. 830-862) க்கும் நேர்ந்ததாகும். முதலாம் வரகுணபாண்டியன்

நந்திவர்மன் காலத்தில் பல்லவர் அரசிற்குட்பட்டிருந்த சோழநாட்டையும் தொண்டைநாட்டின் தென் பகுதியையும் கவர்ந்துகொண்டான் அல்லவா? நந்திவர்மன் பாண்டியரின் வன்மையைப் பொருட்படுத்தாது தன் படையுடன் வடபுலத்திற்கு ஏகியபோது, வரகுணபாண்டியனின் குமாரனும் பாண்டிய அரசனுமான ஸ்ரீவல்லபன் தனக்கு அடங்கிய சேர, சோழ மன்னர்களுடன் பெண்ணையாற்றைக் கடந்து வட ஆர்க்காட்டுக் கோட்டத்தைத் தாக்கினான். வடக்கே வெற்றிபெற்ற நந்திவர்மன் தன் பெருஞ் சேனையுடன் திரும்பத் தென்புலப்பகைவர்களை வந்தவாசிக்கண்மையில் உள்ள தெள்ளாற்றில் கடும்போர் புரிந்து முறியடித்தான்.

இப்போர் நந்திவர்மனின் ஆறும் ஆட்சிஆண்டிற்கும், பத்தாம் ஆட்சிஆண்டிற்கும் இடையில் (கி. பி, 832-836) நடந்திருக்கவேண்டும். ஏறக்குறைய கி. பி. 834-ல் நடந்திருத்தல் கூடும். தெள்ளாற்றில் தோற்றோடிய பகைவர்களை நந்திவர்மன் கடம்பூர், வெள்ளாறு, பழையாறு முதலிய இடங்களில் தோற்கடித்துப் பாண்டியநாட்டெல்லையை யடைந்தான். இறுதியில் பகைவர்களைக் குறும்பில் கோட்டையில் முறியடித்துக் காஞ்சிக்குத் திரும்பினான் என்று நந்திக்கலம்பகம் கூறுகின்றது. பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனார் இவனது தெள்ளாற்றுப்போரை நன்கு குறிக்கின்றார்.

> "வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
> உண்மையால் பாராள் உரிமையால்—திண்மையால்
> தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே(டு)
> யார்வேந்தர் ஏற்பார் எதிர்!"

சோழநாட்டை நந்திவர்மன் முன்போலப் பல்லவ அரசிற்குட்படுத்தினான். காவிரிப்பாக்கம் இவன் காலத்தில் "அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்" என அழைக்கப்பெற்றது. அவனி நாராயணன் என்று பல இடங்களில் இவன் குறிக்கப்படுவதால் அப்பெயர் இவன் பட்டப்பெயர்களில் ஒன்றுபோலும். இவன் காலத்தில்

தமிழ்வணிகன் ஒருவன் சயாம்நாட்டிற்குச்சென்று அங்குக் குளம் ஒன்றை வெட்டி அதற்கு "அவனி நாரணன் குளம்" என்று பெயரிட்டான் என அங்குள்ள கல்வெட்டுக் கூறுகின்றது. நந்திக்கலம்பகம் கடற்படை ஒன்றை இவன் வைத்திருந்ததாகக் கூறுகின்றது. சுந்தரமூர்த்தி நாயனாரும் இக் காரணத்தினால்தான் "கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்" என்று இவனைக் கொள்கின்றார்போலும்.

நந்திவர்மன் இதர பல்லவஅரசர்போலன்றித் தமிழில் பெரும் புலவனாக இருந்தான். "பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி" "தமிழ்நந்தி" என நந்திக்கலம்பகம் இவனைப் பாராட்டுகின்றது. கல்வி கேள்விகளில் தலைசிறந்து நந்தி விளங்கியதால் கலம்பக ஆசிரியர் இவனை "நாற்கடல் புலவன்", "நூல் வரம்பு முழுதும் கண்டான்" எனப் போற்றுகின்றார். பாண்டியனின், குமாரியும் அமோகவர்ஷன் குமாரியும் இவனுடைய இராணியர். அவர்களிருவரும் நந்தியைப்போலவே குடிகளைப் பாதுகாத்தனர். நந்திவர்மன் சிறந்த சிவபத்தனாவான். "சிவனை முழுதும் மறவாத சிந்தையன்" என்று கலம்பகம் போற்றுகின்றது. சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் இவனைக் "கழற்சிங்கர் அடியார்க்கு மடியேன்" என்று பாராட்டுகின்றார். வேலூர்ப்பாளையப் பட்டயம் இவனைச் "சிவனது திரு அடையாளம் நெற்றியில் கொண்ட நந்திவர்மன்" எனக் குறிக்கின்றது. இவன் செய்த இறைக்கொடைகள் பல; ஆற்றிய கோவில் திருப்பணிகள் பல; திருவிடைமருதூரில் கோவில் திருப்பணி இவன்செய்துள்ளான் என்று அறியக்கிடக்கின்றது.

கடல் வாணிபம் இவன் காலத்தில் சிறந்து இருந்தது என்று நந்திக்கலம்பகம் குறிக்கின்றது. மல்லை (மாமல்லபுரம்) மயிலை, (மயிலாப்பூர்) இவை யிரண்டும் சிறந்த துறைமுகப்பட்டினங்களாக இவன் காலத்தில் விளங்கின. தமிழ்வணிகர் சயாம் முதலிய நாடுகளுக்குச் சென்று கடல்வணிகத்தை வளர்த்தனர். இருபத்தைந்து ஆண்டு

கள் பேரரசனாக ஆட்சிபுரிந்து கி. பி. 850-ல் இவன் காலம் சென்றான்.

நிருபதுங்கவர்மன்
(கி. பி. 850—882)

நிருபதுங்கவர்மன் மூன்றாம் நந்திவர்மனுக்கும் இராட்டிரகூட மன்னன் அமோகவர்ஷனின் மகள் சங்காவிற்கும் தோன்றியவன். தாயைப் பெற்ற பாட்டனின் பெயரைப் பெற்றவன். இவன் காலத்தில் தெற்கே பாண்டியர்களோடு பெரும்போர் மூண்டது. தெள்ளாற்றுப் போரில் தோல்வியுற்ற ஸ்ரீமாறன் நந்திவர்மன் காலம் சென்றதும், சோழநாட்டைத் தாக்கிப் பல்லவர்படையைக் குடமூக்குப் (கும்பகோணம்) போரில் முறியடித்தான் எனப் பாண்டியநாட்டுப் பட்டயம் பகர்கின்றது. குடமூக்குப் போர் பெரும்பாலும் கி. பி. 851-ல் நிகழ்ந்திருக்கக்கூடும். நிருபதுங்கன் இத் தோல்வியை நீக்கும் நோக்கத்துடன் பெரும் படையொன்றைத் திரட்டி அரிசிலாற்றங் கரையில் ஸ்ரீமாறனை எதிர்த்தான். பாகூர்ப் பட்டயம் நிருபதுங்கனால் வெளியிடப்பட்டது. அப் பட்டயம் கூறுவது:— முன்னொருமுறை பாண்டியர்க்குத் தோற்ற பல்லவர் படை இப்பொழுது அரசனது அருளால் வெற்றிபெற்றது.

அரிசிலாற்றங்கரையில் தோல்வியுற்ற ஸ்ரீமாறன், பாண்டியநாட்டில் தனக்கு எதிரியாகத் தோன்றிய மாய பாண்டியனையும் அவன் நண்பனான ஈழத்தரசனையும் தொலைக்க நிருபதுங்கனுடன் நட்புக்கொண்டு அவனது கடற்படையின் உதவியால் தன் பகைவர்களை ஒழித்தான் என்று கொள்ளச் சான்றுகள் பல உள. பாண்டியரின் நட்பு நீடித்திருக்கவில்லை. ஸ்ரீமாறனின் குமாரனான **இரண்டாம் வரகுணன்** (கி. பி. 862-880) பல்லவப் பேரரசைத் தொலைக்கும் நோக்கத்துடன் கி. பி. 880-ல் சோழநாட்டைத்தாக்கினான். நிருபதுங்கன் முதுமையின் காரணமாய்த் தன் மைந்தன் அபராஜிதப் பல்லவனிடம் பல்லவப்

படையை ஒப்படைத்தான். அபராஜிதனின் தாயைப் பெற்ற பாட்டனும் கங்கர்களின் அரசனுமான முதலாம் பிருதிவிபதி பல்லவப்படையுடன் சென்றான். சோழச் சிற்றரசனும், விஜயாலயனின் புத்திரனுமான ஆதித்த சோழனும், பல்லவருடன் சேர்ந்து பாண்டியனை எதிர்த்தான். கும்பகோணத்துக்கண்மையிலுள்ள "திருப்புறம்பயம்" என்னுமிடத்தில் கடும்போர் மூண்டது. போரில் பிருதிவிபதி இறந்தான் எனினும் பாண்டியன் தோற்றோடினான். அபராஜிதன் வெற்றிபெற்றுக் காஞ்சிக்குத் திரும்பினான். தன் தந்தை நிருபதுங்கன் கி. பி. 882-ல் காலஞ்செல்லவே, அபராஜிதன் அரியணையேறினான். அவனது ஆட்சி நீடித்திருக்கவில்லை.

பல்லவர் பாண்டியர் போட்டி இருதிறத்தாரையும் வலிமை குன்றச்செய்து சிற்றரசர்களாக இருந்த சோழர்களைச் சுதந்தரம் அடையும்படி தூண்டிற்று. திருப்புறம்பயம் போரினால் பாண்டியன் வரகுணன் வன்மையிழந்தான். அபராஜிதப் பல்லவன் பலவீனமடைந்தான். அப்போரில் பல்லவர்க்குத் துணைநின்ற ஆதித்த சோழனே நன்மையடைந்தான். அவன் சோழநாடு முழுமையும் தனதாக்கிக்கொண்டதுமன்றிப் பல்லவப் பேரரசனையும் முறியடித்து கி. பி. 893க்குள் தொண்டைமண்டலத்தையும் காஞ்சியையும் கைப்பற்றினான் என்று சோழக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆகவே, அபராஜிதவர்மனது ஆட்சி கி. பி. 890ல் முடிந்திருக்கவேண்டும். அவனோடு பல்லவப் பேரரசு முடிவுற்றது என்று கூறின் தவறில்லை. பிற்காலத்திய பல்லவர்கள் சோழமன்னர்களின் தளபதிகளாகவும், அரசியல் அதிகாரிகளாகவும் விளங்கினர். சோழர் காலத்தில் கலிங்கத்தை வென்ற கருணாகரத் தொண்டைமானும், சேந்திமங்கலச் சிற்றரசன் பெருஞ்சிங்கனும் பல்லவ மரபினரே. பல்லவரில் சிலர் மைசூர்ச் சீமையின் வடபாதியில் நொளம்ப பல்லவர் என்னும் பெயருடன் பதின்மூன்றும் நூற்றாண்டுவரை ஆண்டுவந்தனர்.

பல்லவர் பண்பாடு

பல்லவமரபினரின் வரலாறு அவர்தம் பண்பாட்டை அறிந்துகொள்ளத் துணைபுரியும். பல்லவ மன்னர்கள் தமிழகத்தில் பற்பல கலைகளைப் போற்றி வளர்த்துவந்தனர். அவர்களைப்போல் கலைகளுக்குத் தொண்டாற்றிய அரச மரபினர் பரதகண்டத்தில் ஒரு சிலரேயாவர். சிற்பம், ஓவியம், கட்டிடக்கலை இவைகள் பல்லவர்கள் காலத்தில் தலைசிறந்து விளங்கின. குகைக்கோவில்கள், கற்கோவில் கள், கண்ணைக்கவரும் சிற்பங்கள் இவைகள் பல்லவ ஆட்சி யின் அழியாச் சின்னங்களாகும். அவர்களுடைய கட்டி டங்களின் தன்மை நால்வகைப்படும். முதலாம் மகேந்திர வர்மன் காலத்தில் பெரும்பாலும் குகைக்கோவில்களே அமைக்கப்பெற்றன.

பல்லாவரம், மாமண்டூர், திருச்சிராப்பள்ளி, வல்லம் முதலிய இடங்களில் பல்லவர்களின் குகைக்கோவில்கள் இன்றும் மக்களுக்கு இன்பமூட்டும் தன்மை வாய்ந்தன வாய் விளங்குகின்றன. மகேந்திரவர்மனின் தனயனான மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் புதியதோர் முறை கையாளப்பட்டது. அவ்வரசன் தனிப்பாறைகளிலும் ஒற்றைக்கற்களிலும் கோவில்களைச் செதுக்கிப் புகழ் பெற்றான். மாபலிபுரத் தேர்களனைத்தும் பாறைகளில் செதுக்கப்பட்டனவேயாகும். மகேந்திரவர்மனின் கோவில் களைப் பார்க்கிலும் மாமல்லனின் கோவில்கள் மிகவும் அழகு வாய்ந்தவையாகும். பாறைச்சுவர்களில் மிருகங் கள், பறவைகள், நாகர்கள், தேவர்கள், இவர்களின் உரு வங்கள் திறமையுடன் செதுக்கப்பட்டுள்ளன. இராச சிம்மன் என்றழைக்கப்பெற்ற இரண்டாம் நரசிம்மன் காலத்தில் பல்லவர்கள் கற்கோவில்களை அமைத்தனர்.

தமிழகத்தில் கோவில்கள் பெரும்பாலும் செங்கல், சுண்ணும்பு, மரம் ஆகியவற்றால் ஆதியில் கட்டப்பட்டிருந் தன. அவைகள் சிறந்த வேலைப்பாடுகள் உடையனவாக இருந்ததென்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் இராச சிம்மன் காலத்தில் அவ்வேலைப்பாடுகள் அனைத்தும் கற்களால்

ஆக்கப்பட்டன. கட்டிடக்கலையைப் பல்லவமன்னர்கள் எவ்வாறு வளர்த்தனர் என்பதைக் காஞ்சிமாநகரில் உள்ள கைலாசநாதர் கோவிலும் வைகுந்தப்பெருமாள் கோவிலும் குறிக்கின்றன. பல்லவ அபராஜிதன் காலத்தில் கற்கோவில்களைச் சிற்பிகளும், கட்டிடக்கலைவல்லுநர்களும் தங்கள் திறமையால் பொலிவுறச்செய்தனர்.

பல்லவர்காலச் சிற்பங்கள் காலத்தைப் பொருட்படுத்தாது என்றும் பார்ப்பவர் கண்களைக் கவரும் அழகு பெற்றிருக்கின்றன. மாபலிபுரத்தைப் "பல்லவர் சிற்பக் கூடம்" என்று கூறிடின் தவறில்லை. 'அருச்சுனன் தவம்' என்றழைக்கப்பட்ட சிற்பம் மழையையும், காற்றையும் எதிர்த்தும் பல நூற்றாண்டுகள் சென்ற பின்னரும் பொலிவுற்று விளங்குகின்றது. பால்கறக்கும் கோபன், அவன் அண்மையில் நிற்கும் கோபி, கறவைப்பசு, வாலைச்சிறிது உயர்த்தி நிற்கும் கன்று, அதை நக்கும் தாய், இவைகள் உயிருள்ளன என்று தோன்றும்படி கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றன. தவம் புரியும் அருச்சுனனுக்கருகில் பின்னங்கால்களில் நின்று முன்னங்கால்களை உயர்த்தித் தவஞ்செய்யும் முறையில் பூனை ஒன்று செதுக்கப்பட்டிருக்கின்றது. பூனைத்துறவியினால் அபாயம் ஒன்றும் நேராதெனக் கருதி எலிகள்பல, நான்கு திசைகளிலும் ஓடியாடித் திரிவதுபோலச் செதுக்கப்பட்டிருக்கின்றன. குரங்குகள் கூட்டமாக நின்று இக்காட்சியைக் காண்பது போலச் சிற்பி அமைத்திருக்கின்றார். இச்சிற்பத்தைக் கண்ணுற்ற எவரும் மானிடத் துறவியையும், பூனைத்துறவியையும் போல மௌனமாயிராது வயிறு குலுங்கச் சிரிப்பார்களன்றோ?

அருச்சுனனின் தவநிலையைத்தவிர கோபாலன் கோவர்த்தனகிரியைக் குடையாகக் கொள்ளும் சிற்பமும், காளி மகிஷாசுரனைக் கொல்லும் சிற்பமும், மாபலிபுரத்தில் உயர்ந்த சிற்பங்களாகும். மேலும் கண்டு களிப்புற வேண்டின் காஞ்சியில் கைலாசநாதர்கோவில், வைகுந்தப் பெருமாள் கோவில் சிற்பங்கள் உள. கைலாசநாதர் முன்

கோவில் சுவர்களில் சிவபெருமானைக் குறிக்கும் பெரிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சடையை விரித்த சிவனார் உருவமும், எட்டுக் கைகளுடன் நடனம் புரியும் சிவனார் உருவமும் குறிப்பிடத்தக்கவை. உள்ளறை மண்டபச்சுவரில் சிவனார் நடனம், பிரமன், நாமகள், திருமால், திருமகள் இவர்கள் சிவனாரை வணங்குதல் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. மதிற்சுவரின் உட்பக்கத்தில் அம்மை இடக்கையில் கிளியேந்தி அமர்ந்துள்ளநிலை, பாற்கடல் கடைந்த வரலாறு, மார்க்கண்டனுக்காக யமனை உதைத்த வரலாறு, பரமன் - பார்த்தன் போர், இராவணன் கைலையைப் பெயர்க்கும் காட்சி, திருமால் ஆழிபெற்ற வரலாறு, அம்மையப்பர் திருமணம், திருமால் திருமகள் திருமணம், பராசக்தியின் எழுவகை உருவங்கள் முதலியன மிகவும் நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வைகுந்தப்பெருமாள் கோவிலில் இரண்டாம் பரமேசுவரவர்மனின் மரணம், பல்லவமல்லனைப் பொதுமக்கள் அரசனாகத் தேர்ந்தெடுத்தல் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் மாபலிபுரத்தைப்போலக் காஞ்சிக் கோவில்களும் "பல்லவரின் சிற்பக்கலைக்கூடம்" என்று கொள்ளலாம்.

பல்லவர்கால ஓவியங்களைக் கண்ணுற்று மகிழத் தகுந்த இடம் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள சித்தன்ன வாசல் ஆகும். இது திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே இருபதுகல் தூரத்தில் உள்ளது. இங்குள்ள குகைக் கோவில் சுவர்களிலும், தூண்களிலும் உட்கூரைகளிலும் அழகான பல ஓவியங்கள், காணப்படுகின்றன. முன் மண்டபத்தூண்கள் இரண்டிலும் மாதரிருவர் நடனமாடும் முறையில் காணப்படுகின்றனர். அவர்களுடைய காதணிகள், கழுத்தணிகள், கடகங்கள், வளையல்கள், ஆடைகள் முதலியன நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இம் மாதர்களுக்கு மூக்கணி இல்லை. ஒரு தூணின் உட்புறத்தில் ஓர் அரசன் தலையும் அவன் மனைவி தலையும் வரையப்பட்டுள்ளன. ஆதிவராகர் கோவிலிலுள்ள மகேந்திரவர்ம

னின் முகத்தையே அவ்வரசனின் முகம் ஒத்துள்ளது. கூரை முழுவதிலும் தாமரைஇலைகளும், தாமரைமலர்களும் கொண்ட தாமரைக்குளமொன்று தீட்டப்பெற்றிருக்கின்றது. இடக்கையில் பூக்கூடைகொண்டு வலக்கையால் மலர்பறிக்கும் சமணர் ஒருவரும் வரையப்பட்டுள்ளனர். மலர்களுக்கிடையில் மீன்கள், அன்னங்கள், யானைகள் முதலியன காணப்படுகின்றன. இவைகளனைத்தும் உயிர் ஓவியங்களாகவே தோற்றமளிக்கின்றன. கற்சுவர்களின்மீது சிறிதளவு சுண்ணும்புச்சாந்து மேடு பள்ளம் இல்லாமல் பூசப்பட்டு, அது உலர்வதற்கு முன்னர் மஞ்சட்கிழங்கால் ஓவியங்கள் அனைத்தும் தீட்டப்பெற்றிருக்கவேண்டும். வெவ்வேறு நிறங்கள் கொடுப்பதற்குப் பலவிதப் பச்சிலைகளை உபயோகப்படுத்தியிருக்கவேண்டும் பாறையில் அறைந்த சாந்து பெயர்ந்து விழாது இருப்பதின் காரணம் அது கடுக்காய், பூமணல், பனஞ்சாறு, வைக்கோல் முதலியவைகளுடன் சேர்த்தரைக்கப்பட்டதாகும்.

பல்லவர்களின் ஓவியங்களும் சிற்பங்களும் அவர்கள் காலத்தில் நடனக்கலை எவ்வாறு வளம்பெற்றிருந்தது என்பதை நன்கு புலப்படுத்துகின்றன. சித்தன்னவாசல் ஓவியங்கள் இருவித நடனங்களைக் குறிக்கின்றன. நடனமாதரின் முழு உருவமும் சித்திரிக்கப்படாது, இடைக்குமேல் தீட்டப்பெற்றிருப்பதால் நாட்டியத்திற்குச் சுவை கொடுப்பது முகபாவம் ஒன்றே என்பதைப் பல்லவ ஓவியர்கள் நன்கு அறிந்திருந்தனர் போலும். சிவனாரின் யானைக்கை நடனம், ஊர்த்துவத்தாண்டவம், நந்தி நடனம், கணங்களின் நடனம், தூக்கிய திருவடி நடனம் முதலியவற்றைச் சிற்பங்களும், ஓவியங்களும் நன்கு விளக்குகின்றன. ஆடவரும், பெண்டிரும் நடனக்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று அவைகளிலிருந்து அறியலாம்.

வைகுந்தப்பெருமாள் கோவிலில் உள்ள ஒரு சிற்பம் ஒன்பது நடிகர்களைக் காண்பிக்கின்றது. இசைமுழக்கத்துடன் ஒருவன் அரசன் அவையை யடைகின்றான். அவன்

பின்னர் ஆறு ஆடவரும், இரு பெண்டிரும் செல்கின்றனர். இருபாலரும் பல்லவர்காலத்தில் கலந்து ஆடினர் என்பதற்கு ஐயமில்லை. பல்லவர்காலத்துக் கோவில்களில் நடனத்தையும், இசையையும் கணிகையர் வளர்த்து வந்தனர். கணிகையர் "அடிகள் மார்" எனக் குறிக்கப்பட்டிருக்கின்றனர். நடனத்திற்கு இன்றியமையாதது இசை. பல்லவமன்னர்களில் முதலாம் மகேந்திரவர்மன் தாள வகைகள் ஐந்தனுள் "சங்கீர்ண" தாளத்தைப் புதிதாக அமைத்த பெருமையை யுடையவனாவன். இவனது குடுமியாமலைக் கல்வெட்டொன்று "சித்தம் நமசிவாய" என்று தொடங்கிப் பலவகைப் பண்களையும், தாளவகைகளையும் விளக்குகின்றது. இம்மன்னன் "பரிவாதினி" என்னும் பெயர்கொண்ட, தன் வீணையை வாசிப்பதில் மிகுந்த தேர்ச்சிபெற்றவன் ஆவான். இவன் வழிவந்த இராசசிம்மனின் பட்டப்பெயர்களில் ஒன்று "வாத்ய வித்யாதரன்" ஆகும். அவன் வீணைவாசிப்பதில் தும்புருவையும், நாரதரையும் போலப் பயிற்சிபெற்றிருந்தான் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

சைவசமயகுரவர்களான அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் தேனினும் இனிய தங்கள் பதிகங்களைப் பலவகைப் பண்களுக்கிணங்கப் பாடி மக்களைப் பரவசப்படுத்தினர். நாயன்மார்களைப்போலவே ஆழ்வார்களும் இசையுடன் அருட்பாடல்கள் பலவற்றைப் பல்லவர்காலத்தில் பாடியருளினர். பல்லவர் காலத்தை இசைக்காலம் என்றால் தவறில்லை. "ஈசன் எந்தை இணையடி நீழல்—மாசில்லாத வீணை ஒலிபோன்றது," என்று பாடிய அப்பரின் இசைப் புலமைதான் என்னே! தேவாரப்பதிகங்களும் ஆழ்வார்களின் பாசுரங்களும் மக்களின் உள்ளத்தில் புகுந்து அவர்களைப் பேரின்பம் அடையச் செய்ததென்பது முற்றிலும் பொருந்தும்.

சைவமும், வைணவமும் பல்லவர்காலத்தில் பரவியதற்கு முக்கியகாரணம் இசைப்பாட்டாகும். பல்வகை இசைக்கருவிகள் பல்லவர்காலத்தில் உபயோகப்படுத்தப்

பட்டன. யாழ், வீணை, மிருதங்கம், குழல், கின்னரி, மத்தளம், முரசம், உடுக்கை முதலிய கருவிகளில் இசை வாணர் தேர்ச்சிபெற்றிருந்தனர். இக் கருவிகள் சைவத்தையும், வைணவத்தையும் வளர்த்தன என்பதற்கு ஐயமில்லை. மன்னர்களே இராகங்கள் அமைப்பதிலும் இசைக் கருவிகள் வாசிப்பதிலும் ஈடுபட்டபொழுது மக்கள் அவைகளை நன்கு பயன்படுத்தித் தங்கள் நாட்டைக் கந்தருவ நாட்டிற்கு ஒப்பாக ஆக்கினர் என்று கருதலாமன்றோ?

பல்லவ மன்னர்கள் பெரும்பாலும் வடமொழியையே ஆதரித்து வந்தனர். பிற்காலத்துப் பல்லவர்தாம் தமிழ் அறிவுடையவராக இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள. பல்லவப்பட்டயங்கள் வடமொழியில் வரையப்பெற்றிருக்கின்றன. கூரம்பட்டயம், காசக்குடிப் பட்டயம், வேலூர்ப்பாளையப் பட்டயம், தண்டன்தோட்டப் பட்டயம் முதலியவற்றில் வடமொழிநடை அழகாக இருக்கின்றது. கிராதா அர்ச்சுனீயம் இயற்றிய பாரவி, சிம்மவிஷ்ணுவின் ஆதரவில் சிறிது காலம் இருந்தார். பல்லவ அவைப்புலவரான தண்டி "காவியதர்சம்," "அவந்தி சுந்தரிகதை" முதலிய நூல்களை வடமொழியில் இயற்றினர். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசப் பிரகசனத்தை அம்மொழியில் ஆக்கினன். பாசருடைய நாடகங்கள் இராசசிம்மன் அவையில் நடிக்கத் தகுந்தமுறையில் சுருக்கமாய் அமைக்கப்பட்டன. இச்சான்றுகள் பல்லவமன்னர்களின் வடமொழிப்பற்றை நன்கு வெளியிடுகின்றன.

பல்லவர்கள் காலத்தில் தமிழ்மொழியில் வடமொழிச் சொற்கள் பெரும்பாலும் கலந்தன என்று கொள்ளல் ஆகும். தமிழ்மொழியை ஆதரித்த பல்லவமன்னர்களில் முக்கியமானவர்கள் இரண்டாம் நந்திவர்மனும், மூன்றும் நந்திவர்மனும், அபராஜிதவர்மனும் ஆவர். திருமங்கையாழ்வாரின் பாடல்களும், நந்திக்கலம்பகமும் பல்லவ மன்னர்களான இரு நந்திவர்மர்களின் தமிழ் அறிவைப் புலப்படுத்துகின்றன. அவர்களுக்கு முன்னர் வட

மொழியிலும், தென்மொழியிலும் புலமைபெற்றுக் காடவர்கோன் ஐயடிகள் என்னும் பல்லவஅரசர் விளங்கினர்.

பல்லவ மன்னர்களைப்பற்றிச் சில்லறைத் தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன. எனினும் பல்லவர்கள் பெரும்பாலும் வடமொழியையே ஆதரித்தனர் என்று கூசாது கூறலாம். சைவத் திருப்பதிகங்களும், வைணவத் திருப்பாசுரங்களும், ஐயடிகளின் க்ஷேத்திர வெண்பாவும், சுந்தரரின் திருத்தொண்டத்தொகையும் பல்லவர் காலத்திய தமிழ்நூல்கள் ஆகும். நந்திக்கலம்பகம் என்னும் தமிழ் நூல் மூன்றும் நந்திவர்மனைப் பாராட்டுகின்றது. பெருந்தேவனாரின் பாரத வெண்பாவும் இந் நந்திவர்மனது காலத்திய நூல் ஆகும். அவர் நந்திவர்மனைப் பாராட்டிப் பாடிய வெண்பா முன்னரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கலம்பகத்தின் இறுதியில் பின் வரும் இரங்கற்பா காணப்படுகின்றது :

"வானுறுமதியை அடைந்ததுன் வதனம்;
வையகம் அடைந்ததுன் கீர்த்தி;
கானுறுபுலியை அடைந்ததுன் வீரம்;
கற்பக மடைந்ததுன் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்;
செந்தழல் புகுந்ததுன் மேனி;
யானும்மென் கவியும் எவ்விடம் புகுவேம்
எந்தையே நந்திநாயகனே."

பல்லவ மன்னர்கள் காலம் செல்லச் செல்லத் தமிழராக மாறித் தமிழ்மொழியை வளர்த்தனர் என்பதற்கு ஐயமில்லை. அவர்கள் தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வந்தனர் என்பதற்கு மேற்கூறப்பெற்ற இரங்கற்பாவே போதிய சான்றாகும். அரசவையில் தமிழ்ப்புலவர்கள் பட்டயம் எழுதவும், கல்வெட்டில் பாட்டெழுதவும், அரசியல் ஓலைகள் வரையவும் இருந்திருத்தல் வேண்டும். சுருங்கக் கூறின் தமிழ்மக்களின் பண்பாடே பல்லவர்களால் பெரும்பாலும் ஆக்கப்பட்டதாகும்.

பல்லவர்காலச் சமயநிலை

பல்லவப் பேரரசர்கள் கால ஆரம்பத்தில் தமிழகத்தில் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், சைவத்தின் கிளைகளான பாசுபதம், காளாமுகம், கபாலிகம் முதலிய பல்வேறு சமயங்கள் நிலவின. இவைகளுள், சில சீர்கேடான நிலையில் இருந்தன. பாசுபதர் திருநீற்றையணிந்து சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குபவர். அவர்களில் சிலர் உடல் முழுதும் நீறுபூசி ஆடையின்றி நடமாடினர். சிவகணங்களின்மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். அவற்றை உள்ளம் குளிரச்செய்ய மக்களைப் பலியிட்டும் வந்தனர். கபாலிகர் மண்டையோடுகளை மாலைகளாக்கி யணிந்து பைரவர்க்குப் பலியிட்டு வணங்கிவந்தனர். பெண்களை ஆதிசக்தி அவதாரம் என்று வழிபட்டு வந்தனர். பெண்பாலரும் கபாலிகர் கொள்கைகளைப் பின்பற்றினர் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. காளாமுகர் சிவன்பால் பத்தி நிறைந்தவர்கள். மெய்ம்மறந்து ஆடியும், பாடியும் சிவனை வணங்கிவந்தனர். கபாலியம், காளாமுகம், பாசுபதம் முதலிய சைவமதக் கிளைகளுக்கும், அப்பர், சம்பந்தர், சுந்தரர் மக்களிடையில் பரப்பிய சைவத்திற்கும் அதிக வேற்றுமை இருந்தது.

முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலேயே இச்சைவக் கிளைகள் இழிநிலையை அடைந்துவிட்டன என்பதை அம் மன்னனின் மத்த விலாசப் பிரகசனம் விளக்குகின்றது. கபாலிக சமயத்தான் ஒருவன் நமசிவாய மந்திரத்தை உரக்கக் கூறிக்கொண்டே ஒழுக்கங்கெட்ட கபாலினி ஒருத்தியுடன் மதுவருந்தக் கடைக்குள் செல்லுகின்றான். அவன் கையில் இருந்த கபாலத்தில் இறைச்சித்துண்டு இருந்தமையால் அவன் மதுவுண்டு மயங்கிக்கிடக்கும் சமயத்தில் ஒருநாய் அப் பாத்திரத்தைக் கவர்ந்து சென்றது. அதை அறியாத கபாலிகன் அவ் வழியே சென்ற பௌத்ததுறவி ஒருவனை மறித்துத் தன் கபாலத்தை அவன்தான் திருடிக்கொண்டான் என்று கலகம் விளைவித்தான். இறுதியில் பாசுபத சமயத்தான் ஒருவனை

அப் பூசலைத் தீர்க்கக் கபாலிகன் அழைத்தான். அவனு லும் அதைத் தீர்க்க முடியவில்லை. உன்மத்தன் ஒருவன் நாயிடம் இருந்து கபாலத்தைப் பெற்றதாகக் கூறி அங்கு வரவும், பூசல் தீர்ந்தது. முதலாம் மகேந்திரவர்மன் சைவனானபின்னர் அம் மதத்தின் கொள்கைகளை யறி யாது மக்களிற் பலர் தீயவழியில் செல்வதைக் கண்டிக் கவே இத்தகைய நையாண்டி நாடகம் ஒன்றை வரைந்தான் போலும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத் தில் சமண மதமே ஆட்சி புரிந்தது என்று கூறிடில் அது தவறன்று. பல்லவர்களும் பாண்டியர்களும் சமணத்தைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். இத்தருணத்தில்தான் தமிழகத்தில் சமய மறுமலர்ச்சி ஒன்று தோன்றியது. சைவநாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் அம் மறு மலர்ச்சியை உருவாக்கிச் சமணத்தையும், பௌத்தத்தை யும் ஒழித்து, மக்களை அறநெறியில் நடக்கும்படி தூண்டி னர். ஏழாம் நூற்றாண்டில் சைவ மறுமலர்ச்சியின் தலை வர்கள் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் ஆவர். அப்பரும், சம்பந்தரும் ஒரேகாலத்தவர் என்பது அவர் தம் தேவாரப் பதிகங்களாலும், சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தாலும் அறியலாகும். இவ்விரு குரவர் களின் காலத்தைச் சிறுத்தொண்டநாயனாரின் காலத்தை வைத்து ஒருவாறு முடிவு செய்யலாம்.

சேக்கிழார் பெருமான் பரஞ்சோதி என்ற சிறுத் தொண்டநாயனாரைப் பல்லவ மன்னனை முதலாம் நரசிம்ம வர்மனின் தானைத் தலைவரென்றும், வாதாபியைத் தூக ளாக்கியவர் என்றும் கூறுகின்றார். வாதாபி நகரம் அழி வுற்றகாலம் கி. பி. 642 என்பது கல்வெட்டுக்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. சம்பந்தமூர்த்தி நாயனார் தமது தேவாரத்தில் திருச்செங்காட்டான்குடியில் வாழ்ந்த சிறுத்தொண்ட நாயனாரைப் பதினொரு பாக்களில் புகழ்ந் துள்ளார். வாதாபிப் போருக்குப் பின்னர் பரஞ்சோதி யார் செங்காட்டான்குடிக்குச் சென்று சிவத்தொண்டில்

ஈடுபட்டிருக்கவேண்டும். சம்பந்தர் அப்பொழுதுதான் அவரைச் சந்தித்திருக்கக்கூடும். சம்பந்தரின் வயது கர்ணபரம்பரைப்படி பதினாறு. ஆகவே ஏறக்குறைய கி. பி. 650-ல் சம்பந்தர் சிறுத்தொண்ட நாயனாரைப் புகழ்ந்து பாடியிருக்கலாம்.

சம்பந்தரின் காலத்தவராகிய அப்பர் ஆதியில் சமண மதத்தைச் சார்ந்து 'தருமசேனர்' என்ற பெயருடன் விளங்கினர். அவர் சகோதரி திலகவதியாரின் பிரார்த் தனைக் கேற்ப சிவபிரான் அவரை ஆட்கொண்டார். தரும சேனர் சைவராக மாறியவுடன் சமணர்கள் அரசனிடம் முறையிட்டனர். அரசனும் அப்பரைப் பலதொல்லைக ளுக்கு உட்படுத்தினன். நீற்றறையில் இட்டான்; விடங் கலந்த உணவை ஊட்டினன்; யானையால் இடறச் செய் தான்; கல்லில் கட்டிக் கடலில் தாழ்த்தான். ஈசன் அருளால் திருநாவுக்கரசர் அக்கொடுமைகளை வென்று அரசனையும் சைவனாக்கினர். அப்பரைக் கொடுமைப் படுத்திய பல்லவ அரசன் முதலாம் மகேந்திரன் என முன்னரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சைவத்தைச் சார்ந்ததும் மகேந்திரவர்மன் சமணப்பள்ளிகளையும், மடங்களையும் அழித்துச் சமணர்களைத் தன் நாட்டை விட்டுச் செல்லும்படி கட்டளையிட்டான்.

அப்பர்பெருமான் சமணத்தைத் தொண்டைநாட் டில் அழித்ததுபோலச், சம்பந்தர் அம்மதத்தைப் பாண்டியநாட்டில் ஒழித்தார். பாண்டிய அரசனை நெடுமாறன், மகேந்திரவர்மனைப்போலச் சமணத்தைச் சார்ந்திருந்தான். ஆனல், அவன் அமைச்சர் குலச் சிறையாரும், தேவி மங்கையர்க்கரசியாரும் சிவன் பால் பற்றுடையவர்கள். அவர்களுடைய அழைப்பின் பேரில் மதுரையம்பதி சென்று சம்பந்தர் சமணரை வாதில்வென்றனர். சமணர் சம்பந்தர் தங்கியிருந்த மடத் திற்கு நெருப்பிட்டதனல் நெடுமாறன் சமணர்களை அவர் கள் ஒப்புக்கொண்டபடி கழுவேற்றக் கட்டளையிட்ட பொழுது அன்பே சிவம் என்னும் கொள்கையுடைய

சம்பந்தர் "மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா" திருக்க நேர்ந்தது என்று சேக்கிழார் கூறுகின்றார்.

அப்பர், சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் அப்பூதி அடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், குலச்சிறையார், மங்கையர்க்கரசியார், நெடுமாறர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர் ஆவர். இவர்கள் மடங்கள் வைத்தும், தண்ணீர்ப்பந்தல்கள் வைத்தும், அடியார்களுக்கு அன்னமளித்தும், திருப்பணிகள் பல செய்தும் சைவத்தைவளர்த்தனர். அப்பரும், சம்பந்தரும் தேனொழுகும் தங்கள் பாடல்களால் மக்களுக்குத் தெவிட்டாத பேரின்பம் அளித்தனர். அவர்தம் இசைப் பாடல்களே சைவத்தை மக்களிடையில் பரவச்செய்த தெனக் கூறலாம். சைவமத வளர்ச்சியில் பல்லவர் காலத்தில் பெரும்பங்கு கொண்டவர்கள் நாயன்மார்கள் ஆவர். சுந்தரமூர்த்திநாயனார் பாடிய திருத்தொண்டத்தொகையில் நாயன்மாரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால், சுந்தரரின் காலத்தை முடிவுசெய்தால் அறுபத்துமூன்று நாயன்மாரின் இறுதிக்கால எல்லையை அறியலாகும்.

சுந்தரர் காலத்து அரசன் கழற்சிங்கன் என்னும் பல்லவன் என்பது தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கன் என்ற பெயருடன் இருவர் பல்லவ மன்னர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவன் முதலாம் நரசிங்கன் (கி. பி. 630-668). மற்றவன் இரண்டாம் நரசிங்கன் என்ற இராசசிங்கன். இவர்களுள் முதற் சிங்கன் காலத்தில் அப்பரும், சம்பந்தரும் வாழ்ந்தனர். ஏனெனில் அவனுடைய படைத்தலைவர் சிறுத்தொண்ட நாயனார் அன்றோ? எனவே சுந்தரர் இராசசிங்கன் காலத்தவராக இருத்தல் வேண்டும் என்று அநேகர் கருதுகின்றனர். அங்ஙனமாயின் சுந்தரர் எட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஆவர்.

கழற்சிங்கனைப்பற்றிச் சுந்தரர் குறிப்பிடும்பொழுது அவனுக்குத் திறை கட்டாத மன்னர்கள் சிவனருளால் தண்டிக்கப்பட்டனர் என்கின்றார். இராசசிம்மன் கைலாச

நாதர் கோவிலைக் கட்டியவன். மனக்கோவில் கட்டிய பூசலார் அவன் காலத்தவர். ஆனால், சுந்தரர் பூசலாரைப் பாராட்டியதாகத் தெரியவில்லை. கர்ண பரம்பரைப்படி அப்பர், எண்பது ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்தவர் எனப் படுவதால் அவர் ஏறக்குறைய கி. பி. 660 வரையில் வாழ்ந் திருக்கவேண்டும். இராசசிம்மன் அப்பர் மறைந்து இருபத் தைந்து ஆண்டுகளுக்குள் அரியணையேறினன்.

சுந்தரர் இராசசிம்மன் காலத்தவர் என்றால் அப்பருக்கும், சுந்தரருக்கும் இடையில் சுமார் முப்பது ஆண்டுகளேயுள்ளன. மிகவும் குறுகிய இடைக்காலம் இது. சுந்தரர் காலத்தில் பௌத்த சமண வாதங்கள் நாட்டில் இல்லை. அப்பர் மறைந்த முப்பது ஆண்டுகளுக் குள் பௌத்தமும், சமணமும் எவ்வாறு முழுவதும் மறையக்கூடும்? ஆகவே, சுந்தரமூர்த்தி நாயனர் எட்டா வது நூற்றாண்டில் சைவத்தை வளர்த்திருக்கமுடியா தென்று கூறலாம். ஆனால், அவர் பாடும் கழற்சிங்கப் பல்லவன் யாராக இருக்கக்கூடும் என்ற கேள்வி பிறக் கின்றது. அக்கழற்சிங்கன் தெள்ளாறெறிந்த நந்திவர் மனேயன்றி வேறு ஒருவரும் இல்லை. “கழல் நந்தி” என்று நந்திவர்மன் பாராட்டப்படுகின்றான். “சிவனை மற வாத சிந்தையன்” எனக் கலம்பகம் அவனைக் குறிக் கின்றது.

சுந்தரரும், அவர் காலத்திய நாயன்மார்களான கோட்புலி நாயனர், நரசிங்க முனையரையர், சோமாசி மாறர், கலிக்காமர், சடையனர், இசை ஞானியார் முதலி யோர்களும் சைவத்தை மக்களிடையே பெரிதும் பரப் பினர். பல்லவ மன்னர்கள் கோவில்கள் பல கட்டித் தானங்கள் பல அவைகளுக்கு அளித்துச் சைவத்தை வளர்த்தனர். சிம்மவிஷ்ணுவின் தந்தையான மூன்றும் சிம்மவர்மனே “காடவர்கோன் ஐயடி”களாவன். ஐயடி கள் க்ஷேத்திர வெண்பாப் பாடியவர்.

முதலாம் மகேந்திரவர்மன், தான் சைவ மதத்திற்கு மாறியதைத் திருச்சிராப்பள்ளிக் கோவிற் கல்வெட்டால்

வெளிப்படுத்தி உள்ளான். முதலாம் பரமேசுவரவர்மன் உருத்திராக்க மணிகளால் சிவலிங்க வடிவமாகச் செய்யப்பட்ட முடியை எப்பொழுதும் அணிந்திருந்தான். அவன் தனயனுன இராசசிம்மன் காஞ்சியில் கைலாசநாதர் கோவிலைக் கட்டிச் சிவனூர்பால் தனக்குள்ள பத்தியை வெளியிட்டான். அக்கோவிற் சிற்பங்கள் சிவனூரின் நடனச் சிறப்பை விளக்குகின்றன. அச்சிறப்பை அப்பர் பாக்களில் காணலாம். கற்கோவில்கள் பல கட்டி அவைகளுக்கு நிலமும், பொன்னும் தானம் செய்து சைவத்தைப் பல்லவ மன்னர்கள் வளர்த்தனர். அம்மன்னர்களில் சிலர் பரம பாகவதர்களாக இருந்தனர். சிறந்த விஷ்ணு பத்தர்களாக விளங்கினர்.

பல்லவர்காலத்தில் சைவத்தைப்போல வைணவமும் செழிப்புற்று வளர்ந்தது. வைணவசமயகுரவர்களான ஆழ்வார்களில் "முதல் ஆழ்வார்கள்" என்று அழைக்கப்படும் பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற மூவரும் பல்லவப் பேரரசர்களுக்கு முற்பட்டவர்களாவர். திருமழிசை ஆழ்வார் முதல் மூன்று ஆழ்வார்களுடன் இணைக்கப்படுகின்றமையால், அவரை முற்காலப் பல்லவமன்னர்களின் காலத்தவர் எனக் கருதலாம். இவ்வாழ்வார் திருமாலைக் "குணபரனே" எனத் தமது பாசுரம் ஒன்றில் விளிக்கின்ருர். குணபரன் என்னும் பெயர் முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப்பெயர்களுள் ஒன்ருகும். இக்காரணம்கொண்டு இவரை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவர் என்று சிலர் கருதுவர். அம்மன்னன் காலத்தில் சமயவாதம் வலுவுற்றிருந்தது. சைவ, வைணவ சமயத்தார்கள் சமணர்களோடும், பௌத்தர்களோடும் பெரும் போர் புரிந்து வந்தனர். திருமழிசைப் பிரானின் பாசுரங்களில் ஒன்று பின்வருவது :

"அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பின் - வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
ஈனவரே ஆதலால் இன்று."

சைவ வைணவர்களுக்குள் மாற்சரியங்கள் இருந்த தென்பதற்கு ஐயமில்லை. தம் தேவாரப் பதிகங்களில் ஒன்பதாம் கவிதோறும் திருமாலைத் தாழ்த்தி உரைக்கின்றார் சம்பந்தர். பொதுப்பகைவரான புறச்சமயத்தார்களுடன் போரிடுவதில் வைணவ சைவ மதகுரவர்கள் ஒத்துழைத்தனர். அவர்களுக்கிடையில் உள்ள வேற்றுமைகளைப் பாராட்டவில்லை என்று தெரிகின்றது. திருமழிசையாழ்வாரை ஆறும் நூற்றாண்டின் இறுதியிலும், ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் வாழ்ந்தவர் எனக்கொள்ளலாம். சைவமதகுரவராகிய வேளாண்மரபிற் றோன்றிய அப்பர்பெருமானைப் பெரிதும் ஒத்திருக்கின்றார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆழ்வார் திருநகரில் அவதரித்துச் சிறப்புற்று விளங்கியவர் **நம்மாழ்வார்** பெருமான். அவரும் வேளாண் மரபினரே ஆவர். அவ பாடிய பாசுரங்களை எழுதியவர் மதுரகவி ஆழ்வார் ஆவர். நம்மாழ்வாரின் பாசுரங்கள் அப்பரின் பதிகங்களைவிடச் சிறிது பழையனவாகத் தோன்றுவதால் நம்மாழ்வாரையும், **மதுரகவி ஆழ்வாரை**யும் ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களெனக் கருதலாம். நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்கள் மக்களைப் புறச்சமயங்களைவிட்டு வைணவத்தைப் பின்பற்றும்படி செய்தன என்பதற்கு ஐயமில்லை.

நம்மாழ்வார்க்குப்பின் தோன்றிய **பெரியாழ்வாரும்** அவர்தம் செல்வப் புதல்வி **ஆண்டாள் அம்மை**யாரும் தேனொழுகும் திவ்விய பாசுரங்களைப் பாடி மக்களைப் பேரின்பமடையச் செய்தனர். பெரியாழ்வார் பாண்டி நாட்டில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். பிற சமயத்தார்களுடன் வாதஞ்செய்து வெற்றிபெற்றுப் பாண்டியனிடமிருந்து பொற்கிழி ஒன்றைப் பெற்றார். "பட்டர்பிரான்" என்னும் புனைபெயரும் கொண்டார். அவர் காலத்திய பாண்டியனை ஸ்ரீவல்லபன் என்றும், நெடுமாறன் என்றும் இவர் பாசுரங்களில் குறிப்பிடுவதால் இவரை எட்டாவது நூற்றாண்டின் மத்தியில் இருந்தவரெனக் கருதலாம்.

பெரியாழ்வாரின் திருமகளான கோதைநாச்சியார் திருவரங்கத்துப் பெருமானுன அழகிய மணவாளனே அன்றி மானிடர் எவரையும் மணக்க மறுக்கவே, ஆழ்வாரும் அவ் வம்மையாரைத் திருஅரங்கப் பெருநகருக்கு அழைத்துச்சென்று திருமால்முன் நிறுத்த, அப் பெருமான் அவளேஏற்றுத் தன்னுள் ஒன்றுபடுத்திக்கொண்டான் என்பது கதை. இவ் வம்மையார் திருப்பாவை முப்பதும், நாச்சியார் திருமொழி நூற்று நாற்பத்துமூன்றும் பாடியுள்ளார். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் பெரியாழ்வாரின் திருமொழியை யடுத்துத் திருப்பாவை அமைக்கப் பட்டுள்ளது.

தென்னுட்டில் பெரியாழ்வாரும் சூடிக்கொடுத்த நாச்சியாரும் எட்டாவது நூற்ருண்டில் வைணவத்தை வளர்த்ததுபோலத் தொண்டைநாட்டில் **திருமங்கையாழ்வார்** தோன்றி அம் மதத்தை வளர்த்தார். அவர் சோழநாட்டின் ஒரு பகுதியான ஆலிநாட்டை ஆண்ட குறுநிலமன்னர்; சிறந்த வைணவ பத்தர். நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரத்திலிருந்த பொன்னுற் செய்யப்பட்ட புத்தர்சிலையை அவர் கவர்ந்து அத் திரவியத்தைக் கொண்டு பலகோவில் திருப்பணிகள் செய்தனர் என்று குருபரம்பரை கூறுகின்றது. புறச் சமயங்களான பௌத்தமும், சமணமும் இவருக்கு மிக்க வெறுப்பை உண்டாக்கின. இவரைப்போலப் புறச் சமயங்களே வெறுத்தவர் இவரது காலத்தவரான **தொண்டரடிப்பொடி யாழ்வார்** ஆவர். சமயம் வாய்ப்பின் அவர்களேக் கொல்வதே நல்லதென்ற எண்ணம் கொண்டவர். அவருடைய பாடல்களில் ஒன்று இதை நன்கு உணர்த்துகின்றது.

"வெறுப்பொடு சமணமுண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யங்கள் பேசில் போவதே நோய தாகி
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல், தலேயை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகரு ளானே!"

காஞ்சியில் உள்ள பரமேச்சுவர விண்ணகரத்தில் உள்ள சிற்பங்களில் சில பல்லவமல்லன் சமயக் கொள்கை

யைக் குறிக்கின்றன. அரசன் அரியணையில் அமர்ந்துள்ளான்; அவனுக் கெதிரில் துறவிகளிருவர் கழுவேற்றப் படுகின்றனர். ஆழ்வார்களைக் குறிக்கும் சிற்பங்களும், வைகுந்தப்பெருமாள் கோவில்போன்ற சிற்பங்களும் அருகில் காணப்படுகின்றன. இச் சிற்பங்களிலிருந்து அறியக் கிடப்பதாவது—எட்டாவது நூற்றாண்டிலும் புறச்சமயத்தார்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர். சமயக் கொடுமை பல்லவர்கால நிலைமையை ஒட்டியதெனக் கொள்ளலாம். சமரசம் பேசப்படும் இந்நாளில் சமயக் கொடுமை கண்டிக்கற்பாலதே. ஆனால் அத்தீமை அக் காலத்தை ஒட்டியதென்பதை உணர்தல் நன்று.

பொதுவாகப் பல்லவப் பேரரசர்கள் சமய சார்பான கொளகைகளில் மிகுந்த சகிப்புத் தன்மை உடையவராக இருந்தனர் என்று கொள்ளின் தவறன்று. அவர்களுள் சிம்மவிஷ்ணுவும், நரசிம்மவர்மனும், இரண்டாம் நந்திவர்மனும் மிகுந்த வைணவப் பற்றுடையவர்களாவர் தங்கள் நாட்டில் பல பெருமாள் கோவில்களை அவர்கள் தோன்றச்செய்தனர். பல குகைக்கோவில் களைக் குடைந்தெடுத்தனர். காவிரிப்பாக்கத்தில் பல வைணவ மடங்களை ஆதரித்தனர். சைவத்தைப் பின்பற்றிய பல்லவ அரசரும் வைணவத்திற்குப் பல வகையில் ஆக்கம் அளித்தனர் என்று அவர்களின் கல்வெட்டுக்களி லிருந்து அறியக்கூடும்.

சைவசமயத்தைப் பின்பற்றிய முதலாம் மகேந்திரவர்மன் நாமக்கல் அரங்கநாதன் மலைக்கோவிலை அமைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அக் கோவிலிலுள்ள பள்ளி கொண்ட பெருமாளின் உருவம் அழகுறச் செதுக்கப்பட் டிருக்கின்றது. அக் கோவிலின் முன்மண்டபத்துக்கு வெளியிடம் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப்போல மலையைக் குடைந்து மிக்க அழகுடன் அமைக்கப்பட் டுள்ளது. கோவிற் சுவர்களில் திருமால் அவதாரக் கதைகள் அழகொழுகும் சிற்பங்கள் வாயிலாக உணர்த்தப்படு கின்றன. மகேந்திரவாடியில் உள்ள தடாகத்தின் கரையில்

பாறையைப் பிளந்து மகேந்திரவர்மன் விஷ்ணுக்கிரகம் ஒன்றை அமைத்திருப்பது நோக்கத்தக்கது. மாபலி புரத்தில் உள்ள ஆதிவராகர் கோவிலில் சைவ சமயத்தைப் பின்பற்றும் மகேந்திரவர்மனது சிலையும், அவன் இரு இராணியர்களின் சிலையும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணுபக்தனான நரசிம்மவர்மனின் தானைத்தலைவரும் வாதாபியை அழித்தவருமான பரஞ்சோதியார் சைவ நாயன்மார்களில் புகழ்பெற்ற சிறுத்தொண்டராவர். ஆகவே பல்லவப் பேரரசர்கள் சைவத்தையும், வைணவத்தையும் பாரபட்சமின்றிப் பராமரித்து வந்தனர் என்று கொள்ளுதல் தவறாகாது. சுருங்கக்கூறின் பல்லவர் காலத்தில் சமணமும், பௌத்தமும் தமிழகத்திலிருந்து மறைந்தன. வைணவமும், சைவமும் வளர்ந்தோங்கின.

சைவத்தின் கிளைகளான கபாலிகம், பாசுபதம், காளா முகம் முதலியன நாளடைவில் அன்பே சிவம் என்னும் சைவ மதகுரவர்களின் கொள்கைக்குத் தலைசாய்த்து மறைந்தன. தேவாரத் திருப்பதிகங்களும், நாலாயிரப் பிரபந்தப் பாசுரங்களும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. உண்மைச் சைவத்தை வளர்த்த பெரியார்களில் ஒருவரும், திருமந்திரத்தை ஆக்கியவருமான திருமூலரும் பல்லவர் காலத்தவரே யாவர். பல்லவப் பேரரசர்களின் காலத்தில் எழுந்த சமய மறுமலர்ச்சி சோழப் பேரரசர்கள்காலத்தில் உச்சநிலையையடைந்ததென்பதற்கையமில்லை. சோழ மன்னர்கள் காலத்தில் கற்கோவில்களும், தெய்வவழிபாடும் சிறப்புற்றுத் தமிழகத்தில் விளங்கியதெனின் அதற்கு அடிகோலியவர்கள் பல்லவமன்னர்களேயாவர்.

சமயத்துறையில் சோழர்கள் பல்லவர்களைப் பின்பற்றியதைப்போல அரசியலிலும் அவர்களைப் பின்பற்றினார்களென்பது பல்லவ அரசியலை ஆராய்ந்திடின் நன்கு விளங்கும்.

பல்லவர்கால அரசியல்

புகழ்பெற்ற சோழர்கால அரசியல் பல்லவ அரசியலின் வளர்ச்சியேயாகும். பல்லவப்பேரரசு கோட்டங்கள், வள

நாடுகள், நாடுகள், கிராமங்கள் ஆக அரசியல் அலுவல் நன்கு நடைபெறுவதற்குப் பிரிக்கப்பட்டிருந்தது. மாகாணத் தலைவர்களும், கோட்ட அதிகாரிகளும் இருந்தனர். தொண்டைமண்டலம் இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அரசியலில் அரசனது ஆணைக்கு முரணாகக் கட்டளையிடும் உரிமை ஒருவர்க்கும் இல்லை. அரசன் ஆணையே சட்டமாகும். ஆனால் அரசர்கள் அனைவரும் மக்களின் நலனுக்காகத் தங்கள் வாழ்நாட்களைக் கழித்தனர். அறங்கொண்ட உள்ளம் உடையவர்கள்; சமயப்பற்று மிகுதியும் உள்ளவர்கள்; கலையுணர்ச்சியுடையவர்கள்; நாட்டின் செல்வத்தை வீணாக்காதவர்கள்; தன்னல மற்றவர்கள்; மக்களின் நலனே தங்கள் நலன் என அரசுபுரிந்தவர்கள்; குடிகளைத் தங்கள் குழந்தைகளைப் போலப் பாவித்து ஆட்சிபுரிந்தவர்கள்; அதிதீரர்கள்; அஞ்சாநெஞ்சினர். இத்தகைய குண நலன்களைப் பெற்றவர்கள் நாட்டில் முழு அதிகாரம் செலுத்தினார்கள் என்றால் வியப்பொன்றுமில்லை.

பல்லவர் அரசுமுறை தந்தையினின்று மூத்த மகனுக்கு உரிமையானதாகவே தெரிகிறது. தகுந்த மைந்தன் இல்லாத காலத்தும் அரசன் திடீரெனப் பிள்ளையின்றி இறந்த போதும் அமைச்சர் முதலிய பொறுப்புள்ள மக்கள்கூடி அரசமரபில் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்து அரசனாக அவருக்கு அபிடேகம் செய்வது வழக்கம். இரண்டாம் பரமேசுவரவர்மன் கி. பி. 710-ல் காலமடைந்தவுடன் அமைச்சர் முதலியோர் பல்லவமல்லனைத் தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது. பட்டம் ஏற்றவுடன் பல்லவ அரசன் அபிடேகநாமம் ஒன்றைக்கொள்வது வழக்கமாய் இருந்தது. முதலாம் பரமேசுவரவர்மனின் குமாரரான இராசசிம்மன் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பட்டத்துடன் அரியணை யேறினான். முதலாம் பரமேசுவரவர்மனின் அபிடேகப் பெயரே இரண்டாம் நந்திவர்மன் ஆகும். பாண்டியர்களுக்கு மீனும், சேரர்களுக்கு வில்லும், சோழர்களுக்குப் புலியும் அரசசின்னமாய் இருந்ததுபோலப்

பல்லவர்களுக்கு **நந்தி** அடையாளமாக இருந்தது. இரண்டு பக்கங்களிலும் உயர்ந்த விளக்குகள் இடையே நந்தி அமர்ந்துள்ள பல்லவ இலச்சினை மிகுந்த அழகுள்ளதாகும். அவர்களுடைய கொடி நந்திக்கொடியாகும். அவர்களுடைய நாணயங்களிலும் நந்தியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அரசர்கள் எச்சமயத்தைப் பின்பற்றியவராயினும் சிவனுக்குரிய நந்திக்கொடியையே உபயோகித்து வந்தது குறிப்பிடத்தக்கது. பல்லவர்களின் விருதுப் பெயர்களுள் ஒன்றான "விடேல் விடுகு" என்பதைப் பிரித்தால் விடை, வேல், விடுகு என்று ஆகும். அதன் பொருள் வெற்றியுடைய நந்தி சின்னத்தோடு விடப்பட்ட ஆணை என்பதாம்.

பல்லவப் பேரரசன் நாட்டை அமைச்சர்குழு மூலமாக ஆட்சிபுரிந்தான். கல்வெட்டுக்களிலிருந்து பல அமைச்சர்களின் பெயர்கள் புலப்படுகின்றன. அரசராணையை அமைச்சர்கள் நடைமுறையில் கொண்டுவந்தனர். அமைச்சர்களைத் தவிர பல செயல்தலைவர்களும் இருந்தனர் எனப் பட்டயங்கள் கூறுகின்றன. பல்லவமன்னரின் "வாயில் கேட்பார்" சோழமன்னர்கள் காலத்தில் "திருவாய் கேள்வி" என அழைக்கப்பட்டனர். அரசர் இடும் கட்டளைகளை ஓலைகளில் எழுதுவதற்கு இவர்கள் துணைபுரிந்தனர். மண்டலாதிபதிகளுக்கும் கோட்டங்கள், நாடுகள் முதலியவற்றின் அதிகாரிகளுக்கும் இவர்கள் மூலமாகத் திருமுகங்கள் அல்லது அரசர் கட்டளைகள் அனுப்பப்பட்டன. பல்லவப் பெரும் நகரங்களில் **நகரத்தார்** என்னும் குழுவினரும், நாடுகளில் **நாட்டார்** என்னும் குழுவினரும் முறையே மக்களின் நலனைப் பேணிவந்தனர். அவைகளுக்கும் திருமுகங்கள் அடிக்கடி அனுப்பப்பட்டன என்று அறியக் கிடக்கின்றது. இவ்வரசாங்க அதிகாரிகளைத்தவிர அரண்மனையில் இருந்தவர்களில் பொற்கொல்லர், பட்டய எழுத்தாளர்கள், புலவர்கள் முதலியோர் குறிக்கத்தக்கவராவர். அரசிக்கு அணிகலன்செய்த பொற்கொல்லர் பெருந்தட்டார் என்று பட்டயங்களில் குறிக்கப்பட்டுள்ளார்.

பொற்கொல்லரும் பட்டய எழுத்தாளர்களும் வழிவழி அரண்மனையில் அலுவல் பார்த்து வந்ததாகத் தெரிகின்றது.

பல்லவப் பேரரசில் மிகவும் குறைந்த ஆட்சிமுறைப் பகுதி கிராமம் அல்லது ஊர் என்று அழைக்கப்பெற்றது.

ஒவ்வொரு ஊர் அலுவல்களையும் அவ்வூர் அவையினர் செய்து வந்தனர். ஊர் அவையினர் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். உழவு, கோவில்திருப்பணி, நீதி வழங்கல், வரிதண்டுதல் முதலிய பல வேலைகளைப் பெருமக்கள் கவனித்து வந்தனர். ஊர் அவை பல உட்பிரிவுகளாகப் பிரிந்து பல துறைகளிலும் திறம்படச் செயலாற்றி வந்தது. ஒவ்வொரு பிரிவும் "வாரியம்" அல்லது சிறு குழு என்று அழைக்கப்பட்டது. ஏரிவாரியப் பெருமக்கள், தோட்டவாரியப்பெருமக்கள், நியாயவாரியப் பெருமக்கள், கிராம அலுவற் பெருமக்கள் எனப் பல வகுப்புப் பெருமக்கள் கொண்ட முழு அவையே ஊர் அவையாகும். அரசரின் பிரதிநிதியாக "ஆளுங்கணத்தார்" எனப்பட்டவர் ஊர் அவையின் வேலையைக் கண்காணித்து வந்தனர் எனக் கருதலாம். கோவிலில் ஆட்சிபுரிந்துவந்த கூட்டத்தினர் "அமிர்த கணத்தார்" என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கோவில்பத்திரங்களையும், கோவில் பொருள்களுள்ள பண்டாரத்தையும் கோவிலுக்கு வரும், தானங்களையும் பாதுகாத்து வந்தனர்.

ஒவ்வொரு ஊரிலும் இப்பொழுது இருப்பது போல நன்செய், புன்செய் நிலங்கள், வீட்டுத்தோட்டங்கள், புறம்போக்கு நிலங்கள், சுடுகாடு இடுகாடுகள், கோவில் நிலங்கள், கடைவீதிகள் முதலியன நன்கு அளக்கப்பட்டு எல்லைகள் குறிக்கப்பெற்றிருந்தன. குளங்கள், கோவில்கள், ஓடைகள் முதலியன மக்களுக்குப் பொதுவாக இருந்தன. பல்லவ அரசர்கள் பல சிற்றூர்களைக் கல்வி கேள்விகளில் சிறந்த வேதியர்களுக்குப் "பிரம்மதேய"ச் சிற்றூர்களாக அரசாங்க வரிகளினின்றும் விடுவித்து அளித்து

வந்தனர். பல சிற்றூர்களைத் தேவதானச் சிற்றூர்களாகக் கோவில்களுக்கு அளித்தனர். திருக்காட்டுப்பள்ளி என்னும் சிற்றூரை மூன்றும் நந்திவர்மன் அவ்வூர் எஞ்ஞேசுவரருக்கு நிலத் தானமாகக் கொடுத்தான் எனக் கல்வெட்டுக் கூறுகின்றது.

வாரிய மக்களும் ஊர் அவையினரும் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும் அவர்கள் எத்தன்மை உடையவராய் இருக்கவேண்டும் என்பதும் சோழர்காலக் கல்வெட்டுக்கள் குறிப்பதுபோலப் பல்லவர்களின் கல்வெட்டுக்கள் குறிக்கவில்லை. கிராமங்களில் உள்ள ஏரிகளை அடிக்கடி பழுதுபார்க்கவேண்டிய செலவுக்காகச் சில நிலங்கள் ஊர்ப் பேரவையினர் பார்வையில் விடப்பட்டிருந்தன. அவை "ஏரிப்பட்டி" எனப்படும். ஏரிப்பட்டியை மேற்பார்வையிட்டவர் ஏரிவாரியப் பெருமக்கள் எனப்பட்டனர்.

ஊர்மக்கள் பல்லவ அரசுக்குப் பலவகை வரிகள் செலுத்திவந்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தென்னை, பனைமரங்களுக்கு வரி; பனஞ்சாறு இறக்க வரி; பனம்பாகு செய்ய வரி; கமுகு மரங்களுக்கு வரி; மருந்துச் செடிகள் பயிரிட வரி; சீனத்திற்குரிய மருக்கொழுந்து பயிரிட வரி; கொல்லர், வண்ணார், செக்கார், ஆடைநெய்பவர், நூல் நூற்பவர், வலைஞர், கால்நடைகளால் பிழைப்பவர் முதலியவர்கட்கெல்லாம் வரி; நெல் அரிசி முதலியவைகளை விற்பவர்கட்கு வரி; கத்தி செய்பபவர்கட்கு வரி; மணஞ்செய்யும் இளந்தம்பதிகளுக்கு வரி; நிலவரி முதலியன பல்லவ அரசர்கள் வசூலித்து வந்தனர் என்று கல்வெட்டுக்களிலிருந்து விளங்குகின்றது. இவ்வரிகள் காணம் என்றும், பாட்டம் என்றும், இறை என்றும் வழங்கப்பட்டன. இவ்வரிகளை ஊரவை வசூலித்து அரசாங்க அதிகாரிகளுக்குச் செலுத்திவந்தது. ஊரவையின்றி நியாய வாரியம் அல்லது அறங்கூர் வாரியம் மக்களிடையில் எழுந்த பூசல்களை ஆட்சி, ஆவணம், அயலார்காட்சி என்ப பவைகளைக் கொண்டு ஆராய்ந்து முடிவு கட்டின.

ஆட்சி என்பது அனுபவ பாத்தியம் ; ஆவணம் என்பது வழக்கை முடிவுசெய்ய உதவும் ஓலை முதலிய எழுத்துச் சீட்டுகள் ; அயலார்காட்சியென்பது வழக்கு நிகழ்ச்சியைக் கண்டவரின் கூற்று. அறங்கூர் அவையத்தின் வேலையைக் காண அலுவலாளர்கள் கண்காணித்து வந்தனர். பெரும் வழக்குகளைப் பல்லவப் பேரரசரின் நேர்பார்வையில் இருந்த "தர்மாசனம்" கவனித்து வந்தது என்று தெரிகிறது. குற்ற வழக்குகளை ஆராயும் மன்றம் "அதிகரணம்" என்றழைக்கப்பட்டது. இதர வழக்குகளைத் தர்மாசனம் ஆராய்ந்தது. பல ஊர்களை ஒன்று சேர்த்துத் தொகுத்த பகுதி நாடாகும். "நாட்டார்" என்னும் அவையினர் அப்பகுதிக்குரிய செயல்களைக் கண்காணித்து வந்தனர். கிராமங்களின் எல்லைகளை நாட்டார் முடிவு செய்ததாகத் தெரிகின்றது. நாட்டார் விடுத்த அறை ஓலைப்படி ஊர் எல்லையைக் குறிக்கக் கல்லும், கள்ளியும் நாட்டப்பெற்றன என்று கல்வெட்டொன்று குறிக்கின்றது. நாட்டார், நகரத்தார், ஊரார் முதலியோர் தனிப்பட்டவர்களிடமிருந்து பொன்னும், நிலமும் பெற்று, பல தர்மப்பணிகளைச் செய்தனர் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

நாட்டின் நிலம் முழுவதும் செவ்வையாக அளக்கப்பெற்றிருந்தது என்பதைக் கல்வெட்டுக்களிலிருந்தறியலாம். கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் என்னும் நான்கு அளவைகள் இருந்தன என்று தெரிகின்றது. ஒரு கலப்பை கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் ஓர் உழவன் உழும் நிலத்தின் அளவு 'கலப்பை' என்று அழைக்கப்பட்டது. நிவர்த்தனம் என்பது குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒருவன் நடந்து புறப்பட்ட இடத்தையே மீண்டும் அடைவதாகும். பட்டிகா என்பது ஓர் ஆடு சுற்றும் அளவாகும். பாடகம் என்பது இருநூற்றுப்பத்துக்குழி கொண்ட நிலமாகும். ஒரு குழி நாற்றுநாற்பத்துநான்கு சதுர அடி கொண்ட நிலம். உழக்கு, ஆழாக்கு, உரி, சோடு, மரக்கால், குறுணி, பதக்கு முதலிய அளவைகளும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பொன் முதலியன கழஞ்சு, மஞ்சாடிகளாக நிறுக்கப்பட்டன. அரசாங்க இறை விளைபொருள்களாகவும், பொற்காசுகளாகவும் வசூலிக்கப்பட்டன. பல்லவமன்னர்களின் காசுகள் பல அகப்பட்டுள்ளன. அவைகளில் சில மகேந்திரவர்மன் காலத்தவை. சில ஸ்ரீபரன் ஸ்ரீநதி என்னும் பெயர் கொண்ட இராசசிம்மன் காலத்தவை. நந்தியின் உருவமும், பாய்மரக் கப்பல்களின் உருவமும் அவைகளில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

பல்லவமன்னர்கள் காடுவெட்டிகள் என்னும் தங்கள் பெயருக்கு ஏற்பத் தங்கள் குடிகளுக்குப் பல நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்தனர். அவர்கள் உண்டாக்கிய ஏரிகளில் பல அவர்களுடைய பெயர்களையே கொண்டிருந்தன. இராச தடாகம், மகேந்திர தடாகம், பரமேசுவர தடாகம், வைரமோகன் தடாகம் முதலியன பல்லவப் பேரரசர்களை நன்கு குறிக்கின்றன. பாலாறு, காவேரி முதலிய ஆறுகளிலிருந்து நீரைக்கொண்டுசெல்லப் பல்லவர்கள் பல கால்வாய்கள் வெட்டினர். பெரும்பிடுகு வாய்க்கால் என்பது பாலாற்று நீரைக் கூரத்தில் உள்ள பரமேசுவர தடாகத்துக்குக் கொண்டு சென்றது. அவ்வாறே திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் வயிரமேகன் (தந்திவர்மன்) வாய்க்கால் தோண்டப்பட்டது. ஏரி, கிணறு, வாய்க்கால், மதகு முதலியவைகளை ஏரிவாரியப் பெருமக்கள் பார்வையிட்டு மக்களின் நலனைப் பேணி வந்தனர்.

பல்லவமன்னர்கள் மக்களிடமிருந்து வசூலித்த பொருளைக் கோவில் திருப்பணிகள் செய்வதிலும், நீர்ப்பாசன வசதிகளை யமைப்பதிலும் செலவுசெய்து வந்தனரெனினும், அதில் ஒரு பகுதியைத் தங்கள் படைகளை வன்மையுறச் செய்வதில் செலவழித்திருக்கவேண்டும். கதம்பர், சளுக்கியர், தமிழ்வேந்தர்கள், இராட்டிரகூடர் முதலியவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்கப் பல்லவப்படைகள் வலுவுற்றிருக்கவேண்டுமன்றோ? அவர்கள் பலம் பெற்ற கடற்படையொன்றையும் வைத்திருந்தனர் என்று மகாவமிசத்திலிருந்து அறியக்கூடும். அப்படையன்றோ

மானவன்மனே ஈழமன்னன் ஆக்கியது? நிருபதுங்கவர்மன் காலத்தில் ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டியன் பல்லவக் கடற்படையின் உதவியால் ஈழத்தின்மீது படையெடுத்தான். இராசசிம்மன் இலக்கத்தீவுகளை வென்றதாகக் குறிப்பிருக்கின்றது. அம்மன்னன் சீன வணிகர்களின் அன்பைப்பெறத் தனது துறைமுகமான நாகப்பட்டினத்தில் புத்தர்கோவிலொன்றைக் கட்டினன் என்று விளங்குகின்றது. கடல்மல்லையும், காவிரிப்பூம்பட்டினமும் அக்காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினங்களாக இருந்ததென்னலாம்.

மூன்றும் நந்திவர்மன் காலத்தில் தமிழ்வணிகன் ஒருவன், சயாம் நாட்டில் குளம் ஒன்று வெட்டினன் என்று முன்னரே குறிக்கப்பட்டதன்றோ? பல்லவர்கள் காலத்தில் தமிழகம், சீனம், சயாம் முதலிய நாடுகளுடன் சிறந்த வாணிபம் செய்துவந்தது என்று கருதலாகும். பல்லவமன்னர்கள் அடிக்கடி வடபுலத்திலும் தென்திசையிலும் போரில் ஈடுபடவேண்டியதிருந்ததினாலும், காலமழை பொய்த்ததினாலும் சிற்சில சமயங்களில் தமிழ்நாட்டில் பெரும் பஞ்சங்கள் உண்டானதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. தண்டியென்னும் வடமொழிப் புலவரும் கூறுகின்றார். பல்லவமன்னர்கள் "பஞ்சவார வாரியம்" ஒன்றை ஏற்படுத்தி மக்களைப் பாதுகாத்து வந்தனர்.

மேற் கூறியவைகளால் புகழ்பெற்ற சோழ அரசியல் முறை பல்லவ அரசியல் முறையின் வளர்ச்சியே ஆகும் என்பது நன்கு விளங்கும். தமிழ் மக்களின் வரலாற்றில் பல்லவர்காலம் மிகவும் முதன்மை வாய்ந்தது. ஏனெனில் தமிழகம் தமிழகமாக உருவானது பல்லவர் காலத்தில் தான் என்று உறுதியாய்க் கூறலாம்.

௩. சோழர்காலம் [கி. பி. 846—கி. பி. 1279]

[திரு. ரே. சேஷாசலம் அவர்கள், எம். ஏ.]

சோழர் பழமை

"திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும்"

தம் பெருந்தேவியராகி இன்புறச் சோழ மன்னர்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆட்சிபுரிந்து வந்தார்கள்.

"குடிப் பெயராவன கூறுங்காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருந்தங் கொளலே"

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரம், சோழர் என்பது ஒரு குடிக்கட் பிறந்தாரைக் குறிக்கும் பெயரெனல் விளக்குகின்றது. அவர்கள் ஆண்டுவந்த நாடான சோழ மண்டலம், பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தின் மூன்று பெரும் பிரிவுகளுள் ஒன்றாக இலங்கியது. சோழநாடு குணபுலம் எனவும் கூறப்படும்.

"கடல் கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையும்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாறு இருபத்து நாற்காதம்
சோணாட்டுக்கு எல்லையெனச் சொல்"

என்னும் பழைய செய்யுள் ஒன்று சோணாட்டு எல்லையைக் குறிக்கிறது. இதனால் தொண்டைமண்டலமும் சோழ நாட்டின் ஒரு பகுதியே என்று பெறப்படுகின்றது. தொண்டைநாட்டின் எல்லையை,

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு—பார்க்குள்உயர்
தெற்குப்பி னாகி திகழ்இருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு"

என வரூஉம் பாட்டால் அறியலாம். அது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, புதுக்கோட்டையின் ஒரு பகுதி இவற்றைத் தன்னகத்தே கொண்டது.

இந் நிலப்பகுதியை ஆண்டுவந்த சோழர் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவந்த ஒரு தொல் குடியினர். இவர்கள் நாடு 'வான் பொய்ப்பினுந் தான் பொய்யாக் காவிரி'யால் வளம்பெற்றுச் சிறப்பெய்தியதால் காவிரிநாடு எனவும் பொன்னிநாடு எனவும் வழங்கப்படும். காவிரி, சோழன், சோழமண்டலம் இவற்றின் சிறப்பைத்,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே"

என வரூஉம் அடிகளால் உணர்க. காவிரியாறு இடையறாது ஒழுகலின், விதைத்த ஒன்று நூறாக விளையும் செழுமையுடையது குணபுலம். 'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற ஔவையாரின் வாக்கும் உன்னற்பாலது. சோழர் வளவர், கிள்ளியர், செம்பியர், சென்னியர் என்றும் அழைக்கப்படுவர். சுருங்கக்கூறின், செல்வவளம் பற்றி 'வண்புகழ் மூவர்' தம்மிலும் முதல்வராய்த் திகழ்ந்தவர் இவரே எனலாம்.

வடவேந்தரை யொப்ப இன்னோர் சூரிய குலத்தின ரென்றும், காசிப கோத்திரத்தினரென்றும் தமிழ்நூல்கள் கூறுகின்றன. இவர்கள் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை என்பன. இவற்றுள், உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் சங்ககாலத்திலும், தஞ்சாவூரும் கங்கைகொண்ட சோழபுரமும் பிற்காலத்திலும் சோழர் தலைநகரங்களாய் இலங்கின. சோழர்களுடைய அடையாள மாலை ஆத்தியாகும்; கொடியும் இலச்சினையும் புலியாம். இவர்களின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் ரேனாண்டுச் (தெலுங்கு நாட்டுச்) சோழர்கள் சிங்கத்தைத் தங்கள் இலச்சினையாகக் கொண்டிருந்தார்கள்.

விசயாலயனுக்கு முற்பட்ட சோழர்

மதுரைமாநகரில் நிலவிய கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் முடிவு எய்தியது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குமுன் சோழமண்டலத்தை ஆண்ட சோழ மன்னர்களில் பலரைப்பற்றிப் புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு முதலான சங்கநூல்கள் சில கூறுகின்றன. அவற்றிலிருந்து அக்காலத்தில் ஆண்டவர்கள் காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாலன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், நலங்கிள்ளி, மாவளத்தான், பேரவைக் கோப்பெருநற் கிள்ளி, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, நெடுங்கிள்ளி, இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி, செங்கணான், நல்லடி என்று தெரிகிறது. அன்னோர் வரலாறுகளும் மிகச் சுருக்க மாகவே காணப்படுகின்றன. கடைச் சங்கத்திறுதிக் காலத்திற்குப் பிறகு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் தஞ்சையைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கிய சோழன் விசயாலயன் காலம் வரையில் சோழரின் செய்தி கள் நன்கு புலப்படவில்லை.

கி. பி. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் நம் தமிழ கம் களப்பிரர் என்ற ஒருவகையாரது ஆட்சிக்கு உட்பட்டிருந் தது. முதலில், பாண்டியர் தாம் இழந்த நாட்டை மீண் டும் கைப்பற்றித் தமிழகத்தின் தென்பகுதியில் தம் பேரரசை நிறுவி ஆட்சிபுரிந்து வருவாராயினர். சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து கைப்பற்றிய பல்லவர், தமிழகத்தின் கீழ்ப்பகுதிக்கும் வடபகுதிக்கும் பேரரசராய் விளங்குவாராயினர். எனவே, அந்நாட்களில் சோழர்கள் பல்லவர்க்குத் திறைசெலுத்தும் குறுநிலமன்னராயிருந் தனர் என்பது தேற்றம். சோழர் அந்நிலையில் கும்ப கோணத்திற்கு அண்மையிலுள்ள பழையாறை என்ற ஊரில் தங்கியிருந்தனர்.

பாண்டிய பல்லவ போராட்டம்

தமிழகத்தின் வடபுலத்திலிருந்த பல்லவர்களுக்கும் தென்புலத்திலிருந்த பாண்டியர்களுக்கும் அடிக்கடி போர் ஏற்பட்டது. மூன்றும் நந்திவர்மன் தெள்ளாறு என்ற இடத்தில் பாண்டியன் வரகுணனைப் புறங்கண்டான். அவனுக்குப் பின்வந்த நிருபதுங்கவர்மனும் பாண்டியர்களை அரிசிலாற்றங்கரையில் முறியடித்தான். இப்போராட்டங்களினால் பல்லவர்களின் வலிமை குன்றியது. பல்லவ தேயத்திற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் இருந்த சோழநாட்டிற்குத் தன் சுயேச்சையை நிலைநிறுத்துவதற்கு வேண்டிய வாய்ப்புக்கள் அமைந்திருந்தன. அக்காலத்தில், அப்பகுதியில் ஆண்டு வந்தவர்களுள், கொடும்பாளூர் வேளிர்களும், முத்தரையர்களும், சோழர்களும் தலைசிறந்தவர்கள் ஆவர். முத்தரையர்கள் தஞ்சைக்கு அருகில் உள்ள சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் எனப்படும் செந்தலையைத் தங்கள் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தார்கள். புதுக்கோட்டையிலுள்ள கோனாட்டுப் பகுதியை ஆண்டு வந்தவர்கள் கொடும்பாளூர் வேளிர்கள். இவர்களும் சோழர்களும் தங்களுக்குள் மணவினை செய்துகொண்டு நெருங்கிய கேண்மை பெற்றிருந்தார்கள்.

நிசும்பசூதனி விசயாலயன் (கி. பி. 846—881)

பல்லவ அரசாங்கம் வலியற்றிருந்ததால், இச்சிற்றரசர்கள் யாவரும் தம்முள் போரிட்டு வந்தார்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்துவந்த விசயாலயன் என்னும் சோழன் கி. பி. 846-ல் முத்தரையர்களை வென்று அவர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிக் கொண்டான். அவனுடைய ஆதிக்கம் தொண்டைநாட்டின் ஒரு பகுதியிலும் பரவியிருந்தது எனத் தெரிகிறது. மார்பில் தொண்ணூற்றாறு புண் கொண்ட வென்றிப்புரவலன் என்று ஒட்டக்கூத்தரால் பாராட்டப்பட்டவன் இவனேபோலும். இவன் காலத்தே தான் தஞ்சாவூர் சோழமண்டலத்திற்குத் தலைநகரமாயிற்று. விசயாலயன் தஞ்சையில் நிசும்பசூதனி என்

னும் துர்க்கைக்கு ஒரு கோயில் எடுத்தனன். அது இன்ன இடத்தில் உள்ளதென அறிந்துகொள்ளமுடியவில்லை. இஃதன்றிப் புதுக்கோட்டையைச் சார்ந்த நாரத்தாமலை மீதுள்ள விசயாலய சோளீச்சுரம் என்ற கற்கோயில் இவன் எடுத்ததென்பர்.

திருநெல்வேலியைச் சார்ந்த திருக்குற்றாலம் குற்றாலநாதர் கோயில் விமானத்து வெட்டப்பட்டுள்ள இவனது 35-ஆம் ஆண்டுச் சாசனத்தைக்கொண்டு இவன் குறைந்தது முப்பத்தைந்து ஆண்டுகள் செங்கோலோச்சினன் எனலாம். இவனே சோழர் பேரரசை நிறுவ முதலில் அடிகோலியவன்.

அக்காலத்தில் சோழமண்டலத்தில் ஆணை செலுத்தி வந்த சோழமன்னர்கள் எல்லோரும் இராசகேசரி, பரகேசரி என்ற இரு பட்டங்களையும் ஒருவர்பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்துகொண்டிருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அவற்றுள், பரகேசரி என்ற பட்டம் புனைந்தாண்டவன் விசயாலயன். விசயாலயன் பல்லவர்களின்கீழ் ஒரு சிற்றரசனாகவே இருந்தான் போலும்.

முதல் ஆதித்தன் (கி. பி. 871—907)

இவனுக்குப்பின் அரியணை ஏறியவன் இவன் மகன் ஆதித்தன் எனப்படுவான். அவன் காலத்தில் திருப்புறம்பயத்தில் (தஞ்சாவூர் மாவட்டம்) பல்லவ அபராஜிதனுக்கும், பாண்டிய வரகுணனுக்கும் பெரும்போர் ஒன்று நிகழ்ந்தது. கங்க அரசனை பிருதிவீபதி, பல்லவனுக்குத் துணையாகப் போர்செய்தான். அவன் பாண்டிய வரகுணனைக்கொன்று, தன் நண்பனைப் பெயரளவில் மட்டுமின்றி உண்மையாகவே அபராஜிதனாகச் (அபராஜிதன்—வெல்ல முடியாதவன்) செய்து துறக்கம் புக்கான். இப்போரில் இறந்த கங்கமன்னனின் நடுகற்கோயில் ஒன்றும் உதிரப்பட்டி என்ற பெயருடைய நிலப்பகுதியும் இக்காலத்தும்

திருப்புறம்பயத்தில் உள்ளன. அன்றியும், கச்சியாண்டவன் கோயில் என்ற நடுகற்கோயிலும், போர் நிகழ்ந்த இடம் என்று கருதப்படும் பறந்தலை ஒன்றும் அவ்வூரில் இன்றும் காணப்படுகின்றன.

இச்சமயத்தில் ஆதித்தன் சோர்ந்திருக்கவில்லை. அவன் தன்னுடைய சுயேச்சையை நிலைநிறுத்திக்கொண்டான். அம்மட்டிலோ? சிறிது காலத்தில் அபராஜிதனையும் போரில் புறங்கண்டு தொண்டைநாட்டையும் கைக்கொண்டான். யானை மேலிருந்து போர் புரிந்த அபராஜிதவர்மன்மீது ஆதித்தன் பாய்ந்து அவனைக் கொன்றான் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டுக் கூறுகின்றது. இது நிகழ்ந்தது கி. பி. 893-லாகும். அவன் கங்கவாடியையும் வென்று மேலைக்கங்கர்கள் தலைநகரமான தழைக்காட்டையும் பிடித்துக்கொண்டான் என்று கொங்கு தேசராசாக்கள் சரிதம் கூறுகின்றது.

ஆதித்தன், தொண்டைநாட்டிலே, காளத்திக்கு அருகிலுள்ள தொண்டைமான் பேராற்றூரில் கி. பி. 907-ல் இறந்தான். இது தற்காலத்தில் தொண்டைமானாடு என வழங்கும்.

ஆதித்தனும் சேரமான் தாணுரவியும், கங்க அரசன் இரண்டாம் பிருதிவீபதியும் உற்ற நண்பர்களாக இருந்தார்கள். போர்முனையில் வீரத்துடன் போர் புரிந்ததற்காக ஆதித்தனும் சேரமானும் விக்கியண்ணன் என்பவனுக்குப் பல பரிசில்களும் 'செம்பியன் தமிழவேள்' என்ற பட்டமும் அளித்தார்கள். ஆதித்தனுக்குத் தொண்டைநாடு பாவின சோழன், கோதண்டராமன் என்ற பெயர்கள் உண்டு. இவன் காவிரியின் இருமருங்கும் பல சிவன்கோயில்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான் என்று அன்பிற் செப்பேடுகள் புகழ்ந்து கூறும்.

முதற் பராந்தகன் (கி. பி. 907—953)

ஆதித்தனுக்குப் பிறகு அவன் மகன் பராந்தகன் 'பரகேசரி' என்னும் பட்டத்துடன் அரசுகட்டில் ஏறினான்.

இவன் வாணர்க்கரசன் வித்தியாதரன் மகன் விசயாதித்த னோடு போர் செய்து அவனைவென்று அவன் நாடாகிய வாணகப்பாடியை, இப்போரில் தனக்குத்துணையாக இருந்த கங்கர் குலத்தரசன் இரண்டாம் பிருதிவீபதிக்கு அதனை யளித்துச் செம்பியன் மாவலிவாணராயன் எனப் பட்டஞ் சூட்டி, அவனைத் தன்கீழ்ச் சிற்றரசனாக்கினான். வாணகப் பாடி என்பது பாலாற்றுக்கு வடக்கே வட ஆர்க்காட்டினைத் தன்னுள்ளடக்கிய இடம் என்பர். இதனை வடுகவழி மேற்கு எனவும், பெரும் பாணப்பாடி எனவும் கூறுப. வாணர்கள் தாங்கள் மாவலி (மகாபலி)யின் வழி வந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர்.

இனி, பராந்தகன் வைதும்பரையும் போரில் வென்றான் என்று உதயேந்திரச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. வைதும்பர் என்பார் ரேனாண்டு நாட்டை ஆண்ட தெலுங்கர் என்றும், அன்னோர் கங்கர்க்குப் பகைவராகவும் வாணர்க்கு நண்பராகவும் இருந்தனர் என்றும் திரு. K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுகிறார்கள். பராந்தகன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் மாறன் பரமேசுவரனான செம்பியன் சோழியவரையன் என்பவன், சீட்புலியை வென்று நெல்லூரையும் அழித்தான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. சீட்புலி என்பது நெல்லூர் மாவட்டத்தின் வடபகுதியிலிருந்த ஒருநாடு. இதனால் தென்குமரி முதல் நெல்லூர்வரைப் பராந்தகனது ஆட்சி பரவியிருந்தது என்பது ஒருதலை.

பாண்டியர்களுடன் போர்

தன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் பாண்டியனுடன் போர்புரிந்து வெற்றிபெற்று மதுரையைக் கைக்கொண்டான். அதனால் அவன் 'மதுரை கொண்டவன்' என்னும் விருதையும் அடைந்தான். மதுரையை ஆண்டுவந்த இராசசிம்மன் என்னும் பாண்டியன் தன் மணிமுடியுடனும் வேறுபல விலையுயர்ந்த பொருள்களுடனும் இலங்கைக்கு ஓடிவிட்டான். அக்காலத்தில் இலங்கையை ஆண்டுவந்த

ஐந்தாம் காசிபன் சக்க சேனபதியின் தலைமையில் பெரும்படை ஒன்றைப் பாண்டிநாட்டிற்கு அனுப்பினான். அதைக் கண்டு பெருமகிழ்வுற்ற பாண்டியன், "இனி இவ்வுலக முழுவதையும் என் குடைக்கீழ் ஆக்குவேன்" எனக் கூறி இரு படைகளையும் பராந்தகன்மீது அனுப்பினான். வெள்ளூரில் நடந்த போரில் பாண்டியன் மறுமுறையும் தோல்வியுற்றான். பாண்டியனும் அச்சுற்று மதுரையை விடுத்து இலங்கையைப் புகலிடமாக அடைந்தான்.

சிங்கள அரசனது துணை வலியே, பாண்டியர்கள் பன்முறையும் கொடுக்கும் இடர்ப்பாட்டிற்குக் காரணமாகும் என்றறிந்த பராந்தகன், இத்தகைய இடர்களுக்கு ஏதுவாயிருப்பதை அடியோடு ஒழிப்பதே தக்கதெனக் கருதி, மிக்க சீற்றத்துடன் கடலைக் கடந்துபோய் இலங்கையை முற்றுகை செய்தனன்; எதிர்த்துவந்த சிங்களவரை எல்லாம் தன் வாட்படைக்கு இரையாக்கி, அன்னவர் மனைவியர் அழுத கண்ணீரால் தனது சினத்தீ சிறிது தணியப் பெற்றுத் தன் தலைநகர்க்குத் திரும்பினான். கடலைக்கடந்து இலங்கையில் இராமனைப்போல் போர் புரிந்தமையின், இவனுக்குச் சங்கிராமராகவன் என்னும் பெயர் ஏற்படுவதாயிற்று. இவ்வாறு மதுரையும் ஈழமும் வென்றமையின், 'மதுரையும் ஈழமுங் கொண்ட பரகேசரி வர்மன்' என இவனை வழங்கத் தொடங்கினர். ஆயினும் இப்போரினால் பாண்டியன் இலங்கைக்குக் கொண்டு சென்ற மணிமுடியைப் பராந்தகனால் கைப்பற்ற முடியவில்லை.

தீவினை தன்னை விடாமல் துரத்தி வந்ததை அறிந்த பாண்டியனும், தன் முடி முதலியவற்றை இலங்கையிலேயே வைத்துவிட்டுத் தன் தாய் வானவன் மாதேவியின் பிறந்தகமாகிய சேரநாட்டிற்குச் சென்று அம்மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான்.

இராட்டிரகூடர்களுடன் போர்

பராந்தகன் ஆட்சியின் இறுதியில் தொண்டைநாட்டில் குழப்பம் ஏற்பட்டது. கன்னரதேவன் என்னும்

இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணராஜன் தொண்டை மண்டலத்தைப் பிடித்துக்கொண்டான். கி. பி. 949-ஆம் ஆண்டில் தக்கோலம் என்னுமிடத்தில் நடந்த போரில், சோழர்க்கே வெற்றியென எவரும் கருதியிருக்கையில், கன்னரதேவன் தங்கை கணவனும் மேலைக் கங்க அரசனுமான இரண்டாம் பூதுகன் விடுத்த அம்பொன்று இராசாதித்தன் மார்பில் தைக்கவே அவனும் விண்ணுலகு அடைந்தான். கன்னரதேவனும் வாகை சூடினான். இராசாதித்தன் போர்க்களத்தில் யானைமேல் வீற்றிருக்கையில் இறந்ததனால் அவன் 'ஆனைமேல் துஞ்சின தேவன்' என்று குறிக்கப்படுகின்றான். இங்ஙனமாகச் சோழர்கள் தொண்டைமண்டலத்தை இழந்தார்கள். இஃது இவ்வாறாக, சில கல்வெட்டுக்கள், மூன்றாங் கிருஷ்ணதேவனைக் 'கச்சியுந் தஞ்சையுங் கொண்ட கன்னரதேவன்' என்று குறிப்பிடுகின்றன. ஆனால், புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள வாகூருக்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அருகிலுள்ள திருவதிகை வீரட்டானத்திற்கும் தெற்கே மூன்றாங் கிருஷ்ணன் கல்வெட்டுக்கள் யாண்டும் காணப்படாமையால், அவன் தஞ்சையைக் கைப்பற்றியமை வெறும் புனைந்துரை என்பது பெறப்படும்.

பராந்தகன் சோழர்கள் குலதெய்வமான தில்லைக் கோயிலில் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்தான். இதனை ஆனைமங்கலச் செப்பேடுகளிலும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும் காணலாம். அன்றியும் இதனை,

"வெங்கோல் வேந்தன் தென்னனாடும் ஈழமுங்கொண்ட திறல்
செங்கோல் சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லை யம்பலம்"

என்று முதற்கண்டராதித்த சோழனும்,

"கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலால் பொன்வேய்ந்த காவலனும்"

என்று ஒட்டக்கூத்தரும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். இவன் காலத்தில் திருவிடைமருதூர், திருவாவடுதுறை,

திருச்செந்துறை, உறுமூர் ஆகிய ஊர்களிலுள்ள சிவன் கோயில்கள் கற்றளிகளாக ஆக்கப்பட்டன.

இம்மன்னன், ஏமகர்ப்பம், துலாபாரம் முதலான பல தானங்களைச் செய்தான் என்று உதயேந்திரச் செப்பேடுகள் கூறும். இவன்காலத்தில் குடவோலை பறித்துக் கிராம சபை உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கும் முறையும், கிராம ஆட்சி முறையும் எவ்வாறிருந்தன என்பது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்தரமேரூர்க் கல்வெட்டால் புலனாகின்றது. இவனுக்கு வீரநாராயணன், வீரசோழன், பண்டித வத்சலன், குஞ்சரமல்லன், சங்கிராமராகவன், இருமடி சோழன் என்ற பெயர்களும் வழங்கியுள்ளன என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. சோழராச்சியம் மேலோங்கிவரத் தலைப்பட்டது பராந்தகன் ஆட்சியிலேதான்.

கண்டராதித்தன் (கி. பி. 950—957)

பராந்தகனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் முறையே இராசாதித்தன், கண்டராதித்தன், அரிந்தமன் எனப்படும் அரிஞ்சயன் என்பவர்கள். மூத்தவனான இராசாதித்தன் இறந்துவிட்டபடியால் அவன் தம்பியான கண்டராதித்தன் சோழ அரியணை ஏறினான். இவன் காலத்தில் போர் ஒன்றும் நடக்கவில்லை. இவன் புறப்பகைகளையாவிடினும் அகப்பகைகளைந்து ஈசன் திருவடித்தொண்டைக் கைக்கொண்டவன். இவன் சிறந்த சிவபத்தன். தமிழ் மொழியிற் சிறந்த புலமைமிக்கவன். சைவத் திருமுறைகள் பன்னிரண்டுள் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பாவினுள் தில்லைச்சிற்றம்பலத்து எம்பெருமான்மீது இம்மன்னவன் பாடியுள்ள திருப்பதிகம் ஒன்று காணப்படுகின்றது. இவனைப்போலவே இவன் மனைவி செம்பியன் மாதேவியும் சிவபத்தி மிக்கவள். இவ்விருவராலும் திருப்பணி செய்யப்பட்ட கோயில்களும், விடப்பட்ட நிவந்தங்களும் பல உள. இக்காலத்தில் கோனேரிராசபுரம் என்று வழங்கும் திருநல்லம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் செம்பியன்மாதேவி தன்

கணவன் பெயரால் 'கண்டராதித்தம்' என்னும் கற்றளி அமைத்து, அதில் தன் கணவன் அவ்விறைவனை வழிபடுவதுபோல் ஒரு படிமம் வைத்திருப்பதும் அறியற்பாலதாகும்.

அரிஞ்சயன் (கி. பி. 956—957)

கண்டராதித்தன் இறந்தபொழுது இவன் மகன் **மதுராந்தகன்** சிறு குழந்தையாக இருந்தான். அதனால் இவனுடைய தம்பியான **அரிஞ்சயன்** இவனுக்குப்பின் ஆட்சிபுரியத் தொடங்கினான். முன்னோர்கள் அடிப்படுத்திய தொண்டைமண்டலத்தை மறுபடியும் பிடித்துக் கொள்ள அரிஞ்சயன் வடக்குநோக்கித் தண்டுகொண்டு சென்றான். தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியிருந்த இராட்டிரகூட மன்னனை **கன்னரதேவனும்** எதிர்த்துப் போர் செய்தான். ஆயினும், அரிஞ்சயன் தொண்டைமண்டலத்தே ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்துவிட்டான். இதனால் அவனுக்கு 'ஆற்றூர்த் துஞ்சின தேவன்' என்ற பெயருண்டாயிற்று. இம் மன்னனுக்கு முதலாம் இராசராசன், வடஆர்க்காடு மாவட்டத்தில் மேல்பாடி என்னுமிடத்தில் ஒரு பள்ளிப்படை எழுப்பினான்.

இரண்டாம் பராந்தகன் (கி. பி. 957—970)

அரிஞ்சயன் இறந்தவுடன், அவனுக்கு வைதும்ப அரசன் மகள் கல்யாணியிடம் பிறந்த மகனாகிய **பராந்தகன்** என்பான் அரசுகட்டில் ஏறினான். இவன் பேரழகுடையவனாயிருந்தமைபற்றிச் **சுந்தரசோழன்** என்னும் பெயரைப் பின்னர் எய்தினன் என்பது அன்பிற் செப்பேடுகளால் அறியப்படுகிறது. இவன் தன் ஆட்சியின் முதலிலேயே தனக்கு அரச காரியங்களில் உதவியாக இருக்கும்படியாகத் தன் மகன் **கரிகாலன்** எனப்படும் ஆதித்தனை வைத்துக்கொண்டான். அதுமுதல் ஆதித்தன் பெரும்பாலும் தன் காலம் முழுமையும் தந்தையுடன் சேர்ந்தே அரசு செலுத்தினான்.

பாண்டி நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டியன் என்பவன் சோழர்களைச் சிறிதும் மதிக்காமல் ஆதிக்கம் செலுத்திவந்தான். அதனால் சோழர்கள் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று சேவூர் என்னும் இடத்தில் பெரும்போர் நிகழ்த்தி வீரபாண்டியனை வெற்றிகொண்டார்கள் இதனால் சுந்தர சோழன் 'மதுரை கொண்டவன்' 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்,' என்னும் விருதுகளைப் பெற்றான். ஆதித்தனும் 'வீரபாண்டியனைத் தலைகொண்டவன்' என்றும், 'வீரபாண்டியனை எறிந்து தலைகொண்டவன்' என்றும் சிறப்பிக்கப்படுகின்றான்.

ஈழப்போர்

பாண்டியர்களுடன் நிகழ்ந்த போரில் சோழர்களுக்கு உதவியாகக் கொடும்பாளூர் இருக்குவேளான பூதி விக்கிரம கேசரி என்பவனும், பாண்டியர்களுக்கு உதவியாக இலங்கையரசனான நான்காம் மயிந்தனும் போர் புரிந்தார்கள். கொடும்பாளூர் வேளிர்குலத்தைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளான் என்பவன், சிங்களவர்களை அடக்க வேண்டி, கி பி. 965-ல் இலங்கைமீது படையெடுத்தான். அவ்வாண்டில் நிகழ்ந்த போரில் அத்தலைவன் உயிர் துறந்தான். அச்செய்தி 'ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் வேளான் சிறிய வேளான்' என்ற ஒரு கல்வெட்டுப்பகுதியினால் தெரிகிறது. ஆகவே, அப்படையெடுப்பினால், சோழர்கள் இலங்கையை வெல்ல முடியவில்லை என்பது பெறப்படும். நான்காம் மயிந்தனின் வெசகிரிக் கல்வெட்டு அவன் படைத்தலைவன் (சேனா) தமிழ்ப்படையைப் போரில் வென்றதை உறுதிப்படுத்துகிறது எனினும், அப்படையெடுப்பின் முடிவில், ஆதித்தன் 'கடல் அடையாது இலங்கைகொண்ட சோழன்' என்னும் விருதைப் பெற்றான்.

இராட்டிரகூடர்களுடன் போர்

வடக்கே தொண்டைமண்டலம் கன்னரதேவனது ஆட்சியிலேதான் இருந்தது. ஆதலின் சோழ மன்னன்

அங்கேயும் படையெடுத்துச் சென்று அவனை வென்று அந்நாட்டை மீண்டும் தன் ஆளுகையின்கீழ்க் கொண்டு தந்தான். வேற்றரசர்கள் ஆதிக்கத்திலிருந்த நாட்டைச் சரியாக அமைத்துப் பழையநிலைக்குக் கொணர்தற்கு ஆதித்தனே தகுதியானவன் என்பதையறிந்த சுந்தர சோழன் அவனைப் பார்த்திவேந்திரவர்மன் என்ற பெயருடன் தொண்டைநாட்டுக்கு அதிபதியாக அமர்த்தினான்.

ஆதித்தனின் முடிவு (கி. பி. 969)

கி பி 969-ஆம் ஆண்டில் சுந்தரசோழன் மூத்த மகன் ஆதித்தன் சில வஞ்சகர்களால் கொல்லப்பட்டான். தாயாதியான உத்தம சோழனின் சூழ்ச்சியால் இவன் கொலையுண்டான் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் அதற்குப் போதிய சான்றில்லை. சிதம்பரந் தாலூகாவிலுள்ள உடையார்குடியில் காணப்படும் கல்வெட்டால் அக்கொலையைச் செய்தவர் உடன் பிறந்தார் நால்வர் என்பதும், அவர்கள் அந்தணர் என்பதும் அறியப்படுகிறது. அவர்கள் சோமன், ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராயன், பரமேசுவரனான இருமுடிச் சோழ பிரமாதிராயன், மலையனூரானான ரேவதாசக் கிரமவித்தன் என்போர்.

சுந்தரசோழன் கி. பி. 969-ல் தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனை இழந்தமையால் ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்ந்து அவ்வாண்டிலேயே உயிர் துறந்தான். சுந்தர சோழன் 'பொன்மாளிகைத் துஞ்சின தேவன்' என்று வழங்கப்பெறுவதால், அவன் காஞ்சிபுரத்தில் இருந்த சோழ அரண்மனையில் இறந்துபோனான் என்பது தெரிய வரும். அவன் மனைவி வானவன் மாதேவி "தலைமகற் பிரியாத் தையல்" ஆதலால் உடன்கட்டை ஏறினாள்.

சுந்தரசோழன் ஆளுகையில் துன்பத்தால் 'ஆ' என்று ஓலமிட்டு அரற்றியவர் எவருமிலர் என்றும், அதற்கு மாறாகச் சிவபெருமானை வணங்குங்கால் மக்கள் கூறிய

'அர' என்ற ஒலிதான் கேட்கப்பெற்றது என்றும் திரு வாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

உத்தம சோழன் (கி. பி. 970—985)

ஆதித்தன் கொலையுண்டிறந்ததும், அவன் தம்பி இராசராசன் நாட்டின் நிலைமையில் உள்ள சிக்கலை அறிந்து ஒரு வகையாகச் சமாதானத்துக்கு ஏற்பாடு செய்தான். கண்டராதித்த சோழனின் மகனான உத்தம சோழன் அரியணைக்கு உரியவனாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அவன் காலத்துக்குப் பிறகு, அரசு அவன் வழித்தோன்றியவர்களுக்குச் செல்லாமல் திரும்ப வும் இராசராசனுக்கு வந்துவிடவேண்டும் என்றும், அதற் கேற்ப உத்தமசோழனுக்கு முடிசூட்டப்பெறும்பொழுது இராசராசன் இளவரசனாக முடிசூட்டப் பெறவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. இங்ஙனம் பரகேசரி மதுராந்தகனான உத்தமசோழன் கி. பி. 969-ஆம் ஆண் டில் சோழ அரசனாகவும் இராசராசன் இளவரசனாகவும் முடிசூட்டப் பெற்றார்கள். அதனால் உத்தமசோழன் மகனான கண்டராதித்தன் அரச பாரத்தை ஏலாமல் இராசராசன் ஆட்சியில் அவன்கீழ்க் கோயில்களைப் பரி பாலிக்கும் அதிகாரியாக விளங்கிவந்தான்.

உத்தமசோழன் பதினாறு ஆண்டுகள் ஆண்டான். நடுவில் புலியுருவம் பொறிக்கப் பெற்றதாயும் ஓரத்தில் உத்தமசோழன் என்று வடமொழியில் வரையப் பெற்றதாயுமிருந்த ஒரு பொற்காசு உத்தமசோழன் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்று வழங்கிவந்தது என்று சர் வால்டர் எலியட் என்னும் அறிஞர், 'தென்னிந் திய நாணயங்கள்' என்னும் தம் நூலில் கூறியுள்ளார். இதுகாறும் கிடைத்துள்ள சோழமன்னர் நாணயங்களுள் அதுவே மிகப் பழமை வாய்ந்தது என்பது ஆராய்ச்சியா ளர் கருத்து. இவன் காலத்திற் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளனவாயினும் அவற்றால் சிறப்பான செய்தி ஒன்றும் கிடைத்திலது.

முதலாம் இராசராசன் (கி. பி. 985—1014)

மதுராந்தக உத்தமசோழனுக்குப் பிறகு, சுந்தர சோழனுக்கு வானவன் மாதேவியிடத்துப் பிறந்த அருண் மொழித்தேவன் அரசனாக முடிசூட்டப்பெற்றான். இவன் ஐப்பசித் திங்களில் சதயநாளில் பிறந்தவன். இவனைச் 'சதயநாள் விழா உதியர் மண்டலந்தன்னில் வைத்தவன்' என்று கலிங்கத்துப்பரணி புகழ்ந்து கூறுவதாலும் இச்செய்தி வலியுறுகின்றது. இவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதல் இவனுக்கு இராசராசன் என்னும் பெயரே வழங்கிவந்தது. இவனை இளமையில் வளர்த்தவர்கள் கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன்மாதேவியும், இவன் தமக்கையாகிய குந்தவைப்பிராட்டியும் ஆவர். 'சைவம் வளர்க்குந் தண்முகில், திருமுறை போற்றும் செவிலி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசை படரும் கொழுகொம்பு' என எவரும் எடுத்தியம்பிட, இவன் இளமையிலேயே மூதறிவிற் சிறந்திருந்தனன். இவன் தமக்கையாரிடத்தும், செம்பியன் மாதேவியிடத்தும் மிகுந்த பற்றுடையவன். தமக்கையாரைக் கூறுமிடத்தெல்லாம் "இராசராச தேவர் திருத்தமக்கையார்" என மேம்படுத்துக் கூறியதோடமையாமல், அவர் தந்தன மட்டும் தன்னோடெடுத்து நடு விமானத்து வரைந்திடச் செய்து, பெண்டிரும் பிறரும் தந்தவற்றைத் திருச்சுற்று மாளிகையில் இடந்தொறும் இடந்தொறும் வெட்டுவித் திருப்பதையும் நோக்கின், இவன் மூதறிவின் மாண்பினை இனிதுணரலாம்.

மெய்க்கீர்த்தி

தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை நன்கு விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழ்மொழியில் அகவற்பாவில் அமைத்துத் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்டவன் முதலாம் இராசராசனே யாவன். மெய்க்கீர்த்தி என்பது:

"சீர் நான்காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாஞ் சொல்லியும்
அந்தத்தவன் வரலாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட வுரைப்பது சீர் மெய்க்கீர்த்தி"

என்று பன்னிருபாட்டியல் கூறுவது போல், பேரரசன் புகழ்ச்செய்திகளைக் கூறி, அவன் தன் பெருந்தேவியுடன் நீடு வாழ்க என்று வாழ்த்தி, அவ்வேந்தன் இயற் பெயரோடு அவனது ஆட்சி ஆண்டினைக்கூறும் செய்யுளாம். இவ்வகைப்பாடல் பெரும்பான்மை அகவல் ஓசையும் சிறுபான்மை கலியோசையும் கொண்டு சொற்சீரடியால் அமைவதாகும். இவ்வகை மெய்க்கீர்த்திகளில் அவ்வப் பொழுது அரசனுடைய புதிய புகழ்ச்செய்திகளைச் சேர்த்துக்கொண்டே போவார்கள். ஆட்சியின் காலம் செல்லச் செல்ல மெய்க்கீர்த்தியின் அளவும் பெருகிக் கொண்டே வரும். இதனால், அவ்வந் நிகழ்ச்சிகள் எவ்வெப்பொழுது நடந்தன என்பதை உறுதியாகக் கூற இயலும். இவ்வகை மெய்க்கீர்த்திகள் தமிழ்நாட்டிலேதான் காணப்படுகின்றன. மெய்க்கீர்ததிகளைக் கல்வெட்டுக்களில் எழுதும் வழக்கம் முதலில இராசராசன் காலத்திலதான் உண்டாயிற்று.

சேரனுடன் போர்

'காந்தளூர்ச்சாலைக் கலம் அறுத்தருளிய கோஇராச கேசரிவர்மன்' என்று இராசராசன் தன்னைக் கூறிக் கொள்கிறான். இவன் காலத்தில் நடைபெற்ற முதற்போர் இதுவேயாகும். காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்த புரத்தின் ஒரு பகுதியாக இந்நாளில் உள்ளது. அதனை வலியசாலை என்றும் வழங்குவர். இப்போருக்குக் காரணம் சேர அரசன் பாஸ்கர ரவிவர்மன் இராசராசன் அனுப்பிய தூதன் ஒருவனை அவமதித்து இழிவாக நடத்தி உதகையில் சிறையிட்டிருந்தமையேயாம். உதகை என்பது திரு வாங்கூர் இராச்சியத்திலுள்ள நாகர்கோயிலுக்கு வட

மேற்கேயுள்ள ஒரு நகரமாகும். இப்போரில் சேரனின் கப்பல்படைகள் அழிந்துபோயின. பிறகு விழிஞத்தில் நடந்த போரிலும் சேரர்கள் தோல்வியுற்றனர். இப் போர் கி. பி. 988-ஆம் ஆண்டில் நிகழ்ந்திருக்கவேண்டும். 'காந்தளூர்ச்சாலைக் கலமறுத்த' என்னும் தொடருக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறுவர். 'காந்தளூரில் இருந்த அறச்சாலையில், சாப்பிடவேண்டியவர்கள் எவ்வளவு என்பதை வரையறுத்த' செய்தியைக் கூறுகின்றது என்று ஒரு சாரார் கூறுவர். இது பொருந்தாது.

பிற போர்கள்

பாண்டியன் அமரபுஜங்கனைத் தோற்கடித்து பிறகு கொல்லத்தையும் கைப்பற்றினான். பாண்டியர்களை முற்றும் வென்றடக்கியமை இவனுக்குத் தென்னபராக்கிரமன் என்னும் விருதுப்பெயராலும், பாண்டிநாட்டிற் பற்பல இடத்தும் இவன் கல்வெட்டு காணப்படுவதாலும் வலியுறும்.

பிறகு இராசராசன் படை குடமலைநாட்டைத் தாக்கிற்று. அது தறபோது குடகு என வழங்கும் நாடேயாம். மனிஜன் என்பான் பணசோகே என்னுமிடத்தில் வெற்றி கொண்டதை மெச்சி அவனுக்கு 'க்ஷத்திரிய சிகாமணி கொங்காள்வான்' என்ற பட்டமும், மாளவ்வி என்ற ஊரும், இராசராசன் ஆணையின்படி அளிக்கப்பட்டது. மனிஜன் மரபினர் சுமார் நூறாண்டுகள் சோழர்களுக்கு அடங்கியவர்களாகக் கொங்காள்வார் என்ற பட்டத்துடன் குடகு நாட்டை ஆண்டு வந்தார்கள்.

இராசராசன் அதன் பின்னர் கொங்குநாட்டின் பக்கத்தில் அமைந்திருந்த நுளம்பப்பாடியைத் தாக்கி அதனைக் கைக்கொண்டான். நுளம்பப்பாடி என்பது சேலம், வட ஆர்க்காடு, பெல்லாரி, கோலார், தும்கூர், ஆகிய மாவட்டப் பகுதிகளைக் கொண்ட நிலப்பரப்பாகும். பல்லவமரபினர்களான நுளம்பர்கள் அதனைக் கங்க அரசர்களின்கீழ்ச் சிற்றரசர்களாக ஆண்டு வந்தார்கள்.

கங்கவாடியும், அதன் தலைநகரான தழைக்காடும், மைசூர் மாவட்டத்தின் பகுதிகளைக்கொண்ட தடிகைபாடியும் இப் படையெடுப்பின் முடிவில் சோழர்கள் வசம் ஆயின. கங்கவாடியை இராசராசபுரம் எனத் தன் பெயரினை தாக்கினன்.

ஈழப்போர்

இராசராசன் மெய்க்கீர்த்திகளில் அவன் 'முரட் டொழில் சிங்களர் ஈழமண்டலம்' கொண்ட செய்தி காணப்படுகின்றது. இவ்வெற்றி கி.பி. 993-ஆம் ஆண்டுக்கு முந்தியதாதல் வேண்டும். இலங்கை வரலாற்றினின்றும், அக்காலத்தில் அத்தீவை ஆண்டு வந்த ஐந்தாம் மயிந்தன் என்பான் அத்தீவின் தென்கிழக்குப்பகுதியில் உள்ள ரோகண நாட்டிற்கு ஓடி ஒளிந்துகொண்டான் என்று தெரிகிறது. சோழ மன்னனும் அத்தீவின் வடபகுதியைக் கைக்கொண்டு அதற்கு 'மும்முடிச் சோழமண்டலம்' எனப் பெயரிட்டுத் தன் நாட்டின் ஒரு பகுதியாகச் சேர்த் துக்கொண்டான். அதுகாறும் இலங்கைக்குத் தலைநகராக இருந்த அநுராதபுரத்தைச் சோழர்கள் அழித்தார்கள். இராசராசனுக்கு முற்பட்டவர்கள் அத்தீவின் வடபகுதியை மட்டும் கைக்கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந் தார்கள். ஆனல் இராசராசனே அத்தீவு முழுவதையும் தன் ஆளுகையின்கீழ்க் கொணரவேண்டி மத்தியபாகத் தில் உள்ள பொலன்னருவா என்னும் இடத்திற்குச் சனநாதமங்கலம் என்ற பெயரிட்டுத் தலைநகரை மாற் றினன். அதுவே பிற்காலத்தில் சிங்கள அரசர்களின் தலை நகராக விளங்கியது.

சளுக்கியப் போர்

சுமார் கி. பி. 992-ஆம் ஆண்டுக்குப் பிறகு மேலைச் சளுக்கிய மன்னனை இரண்டாம் தைலபன் இறந்துவிட்ட தால், அவன் மகன் சத்தியாசிரியன் சளுக்கிய அரியணை ஏறினன். இராசராசனின் 18-ஆம் (கி. பி. 1003) ஆண்டுக் கல்வெட்டுக்களில் அவன் 'இரட்டபாடி ஏழரை

யிலக்கம்' கொண்ட செய்தி குறிக்கப்படுகின்றது. திருவாலங்காட்டுச் செப்பேடுகளில், "(எண்ணெய் என்று பொருள்படும்) தைலனுக்குப் பிறந்த சத்தியாசிரியன், பிறப்புக்கேற்ப, இராசராசனுடைய கடல்போன்ற படையைப் போர்க்களத்தில் எதிர்ப்பதால் நேரிடும் கஷ்டங்களினின்றும் தப்புவதற்காக நழுவிவிட்டாலும், கஷ்டாச்சிரயன் (கஷ்டங்களுக்கு இருப்பிடம்) ஆனான்" என்று கூறப்பட்டுள்ளது.

கி. பி. 1007-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ள சத்தியாசிரயனுடைய ஹொட்டூர்க் கல்வெட்டு, "சோழகுல திலகமான இராசராசன் நித்தியவிநோதன் மகனான நூர்மடி சோழ இராசேந்திர வித்தியாதரன் ஒன்பது லட்சம் வீரர்கள் அடங்கிய படையுடன் வந்து மிக்க வீரத்துடன் போர்புரிந்து நாட்டைச் சூறையாடி, நகரங்களைக் கொளுத்தி, அந்தணர், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களைக் கொன்று, கன்னியரைக் கவர்ந்தும் சென்றான்" என்று கூறுகின்றது. அதே கல்வெட்டு, 'திருளமாரி' (தமிழர்களின் காலன்) ஆன சத்தியாசிரியன் சோழர்களைப் புறங்காட்டச் செய்தான் என்று கூறுகின்றது. இவற்றிலிருந்து இராசராசன் இரட்டபாடி ஏழரை இலக்கத்தைத் தாக்கிப் போர் புரிந்தாலும் அதை வென்று அடிப்படுத்தியதாகத் தெரியவில்லை. பிற இடங்களில் காணப்படுவதைப் போன்று இராசராசன் கல்வெட்டுக்கள் இரட்டபாடியில் காணப்படவில்லை. சோழர்கள் துங்கபத்திரைக்குத் தெற்கே உள்ள நாடுகளைக் கொண்டார்கள் என்ற அளவிற் கூறலாம்.

வேங்கிப்போர்

பத்தாம் நூற்றாண்டின் இடையில் வேங்கியை ஆண்டு வந்த கீழைச்சளுக்கியரிடையே தாயாதிச் சச்சரவு உண்டாயிற்று. சுமார் கி. பி. 945-ஆம் ஆண்டில் அரசுகட்டில் ஏறிய இரண்டாம் அம்மராசன்காலத்தில், இளைய பரம்பரையைச் சேர்ந்த **பாடபன்** என்பவன் அரசைப் பெற விரும்பினான். அதனால் அவன் இராட்டிரகூட அரசன் மூன்றாம்

கிருஷ்ணனின் உதவியைப்பெற்று, நாட்டினில் கலகம் செய்து ஒரு பகுதியைக் கைப்பற்றினன். அம்மராசனுக்குப்பிறகு பட்டத்துக்குவந்த அவனுடைய மாற்றாந் தாய் வயிற்றுச் சகோதரன், தானூர்ணவன் கி. பி. 970-ஆம் ஆண்டிலிருந்து 973-ஆம் ஆண்டுவரையில் நாட்டின் மற்றொரு பகுதியின் அரசனாக விளங்கினன். ஆயினும் அதற்குப் பிறகு நாடு முழுமையும் இளையமரபினர் வசம் போய் விட்டது. பாடபனும், அவன் தம்பி இரண்டாம் தாழனும் இருபத்தேழு ஆண்டுகள் வேங்கிமண்டலம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள்.

மூத்த மரபினரைச் சேர்ந்தவர்கள் அக்காலத்தில் நாட்டினின்றும் வெளியேறிக் கரந்துறைந்தார்கள். இறுதியில் இப்பரம்பரை வழியினனான சக்திவர்மன் சோழ மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். சக்திவர்மனை வேங்கி அரியணையில் அமர்த்தும் பொருட்டே இராசராசன் வேங்கிநாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான்.

இராசராசன் முதலில் பராந்தகன் அடிப்படுத்திய சீட்புலி நாட்டையும், பாகி நாட்டையும் வெற்றிகொண்டான். அப்பொழுது அப்பகுதியைத் தெலுங்குச் சோழ அரசனான வீமன் ஆண்டுவந்தான். இந்தப் படையெடுப்பில் சக்திவர்மனும் சோழர் பக்கத்தில் மிகுந்த வீரத்துடன் போர்புரிந்து புகழ்பெற்றான். இராசராசன் கி. பி. 999-ஆம் ஆண்டில் வேங்கி நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று இளையோன் வழியினரைப் போரில் வென்று சக்திவர்மனை வேங்கி வேந்தனாக முடிசூட்டினன். அவன் தம்பி விமலாதித்தனுக்கு வேங்கிநாட்டு இளவரசப் பதவியுடன், தன் பெண் குந்தவையையும் இராசராசன் மணஞ்செய்து கொடுத்தான். இராசராசன் வேங்கிநாட்டை வென்றாலும் அதனைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக்கொள்ளவில்லை. தன் மேற்பார்வையில் உள்ள ஒரு தனி அரசாகவே மதித்தான்.

பிற போர்கள்

இராசராசன் மகனான இராசேந்திரன் விமலாதித்தன் என்னும் குலூத அரசன் ஒருவனை வென்று மகேந்திரகிரியில்

வெற்றித்தூண் ஒன்றை நிறுத்தினன். இக் கலிங்கப் போரின் பிற விவரங்கள் தெரியவில்லை. இராசராசனுடைய வெற்றிகளில் இறுதியாகக் கூறப்படுவது அவன் 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்' கொண்ட செய்தியாகும். அவை இப்பொழுது 'மால்தீவ்' தீவுகள் என வழங்கும். மால்தீவ் தீவுகளின் அரசன் தன்னை இப்பொழுதும் 'பன்னீராயிரம் தீவுகளின் அரசன்' என்று கூறிக்கொள்ளுகின்றனும். இப்படையெடுப்பைப் பற்றிய விவரங்கள் கிடைத்திலவாயினும், அக்காலத்தில் நன்கு பயிற்றுவிக்கப் பட்ட கடற்படை ஒன்று இருந்திருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.

ஆட்சி முறை

இராசராசனுக்கு 'நித்திய விநோதன்' 'சிவபாத சேகரன்' 'மும்முடிச் சோழன்' என்ற விருதுகளும் உண்டு. இவன் தஞ்சாவூரில் மாபெருங் கோயில் ஒன்றை எடுப்பித்து அதற்கு இராசராசேச்சுரம் என்று பெயரிட்டான். அக்கோயில் பெருவுடையார் கோயில் எனவும், பிரகதீஸ்வரர் கோயில் எனவும் கூறப்படும். அக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையது. அதன்கண் அமைந்துள்ள நடுவிமானம் 216 அடி உயரம் உடையது. அதன் உச்சியில் போடப்பெற்றிருப்பது ஒரே கருங்கல். அதன் எடை ஏறக்குறைய எண்பது டன். அக்கோயில் கட்டி முடிக்க நான்காண்டுகள் ஆயின. அக் கோயில் விமானம் தட்சிணமேரு என வழங்கியது. கோயிலின் வெளித் திருச்சுற்றிலுள்ள நந்தி ஒரே கல்லில் அமைக்கப்பட்டது. அது 12 அடி உயரமும் $19\frac{1}{2}$ அடி நீளமும் $8\frac{1}{4}$ அடி அகலமும் உடையது. இராசராசேச்சுரமுடைய பெருமான்மீது இராசராசன் காலத்தவரான **கருவூர்த்தேவர்** என்னும் பெரியார் ஒரு பதிகம்பாடிப் பரவியுள்ளார். அப்பர் அடிகள் கூறும் "தஞ்சைத்தளிக் குளத்தைத்"தான் இராசராசன் கற்றளியாக எடுத்தான் என்றும், வெற்றுநிலப்பரப்பில் புதிய கோயில் ஒன்றும் கட்டவில்லை என்றும் திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார்

அவர்கள் கருதுகிறார்கள். இராசராசன் திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பியைக்கொண்டு திருமுறை வகுக்கச் செய்தான்.

இராசராசன் பெரிய சிவபத்தனாயினும் பிற சமயங் களிடம் வெறுப்புக் காட்டினானல்லன். நாகப்பட்டினத் தின்கண் ஸ்ரீவிசய அரசன் சூளாமணிவர்மனால் கட்டத் தொடங்கப்பெற்று அவன் மகன் மாறவிஜயோத்துங்கவர்ம னால் முடிக்கப்பெற்ற புத்த விகாரத்திற்கு இராசராசப் பெரும்பள்ளி என்று தன் பெயரிடுவதற்கு இவன் உடன் பட்டதோடு அதற்கு நிவந்தமாக ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாகவும் அளித்தான்.

இவ்வேந்தன் காலத்தில் இராச்சியம் முற்றும் அளக் கப்பட்டது. இது இவன் ஆட்சியின் 16-ஆம் ஆண்டாகிய கி. பி. 1001-ல் தொடங்கப்பெற்று ஈராண்டுகளில் முடிவுற் றது. நிலம் அளந்த கோல் பதினாறு சாண் நீளமுடையது. அதனை உலகளந்த கோல் என்று அந்நாளில் வழங்கினர். இவ்வாறு சீருஞ் சிறப்புமாக ஆண்டுவந்த இராசராசன் கி. பி. 1014-ல் இவ்வுலக வாழ்வை நீத்தான். இவனுக்குச் 'சோழ நாராயணன்' என்றொரு பெயர் இருந்ததாகவும் தெரிகிறது.

முதலாம் இராசேந்திரன் (கி. பி. 1012—1044)

'பூர்வதேசமும் கங்கையும் கடாரமுங்கொண்ட கோப் பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும் இராசேந்திரன் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந் தவன் என்பது திருவொற்றியூரிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகிறது. இவன் தந்தை இவனுக்கு மதுராந்தகன் என்று பெயரிட்டிருந்தனன் என்பது திருவாலங்காட்டுச் சேப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது. கி. பி. 1012-ஆம் ஆண்டில் இராசராசன் இவனுக்கு இளவரசுப்பட்டம் கட்டியநாளில் இராசேந்திரன் என்ற அபிடேகப் பெயர் வழங்கியமையால் இவன் தன் ஆட்சிக்காலம் முழுமையும் அப்பெயருடன் விளங்கினான். இவன் தன் ஆட்சியின்

ஏழாம் ஆண்டாகிய கி. பி. 1018-ல் தன் மூத்த புதல்வன் இராசாதிராசனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டினான். அது முதல் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுக்காலம் தந்தையும் தனயனும் அரசுப் பொறுப்பை ஒன்றுசேர்ந்தே நடத்தி வந்தார்கள்.

இராசேந்திரன் வெற்றிகள்

இராசேந்திரன் பலவெற்றிகளை அடைந்தாலும், அவற்றுள் இரண்டுதான் தலையாயவை. அவை :

"களிறு கங்கை நீருண்ண மண்ணையில்
காய் சினத்தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரை கடாரமும்
கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்"

ஆகும். இவன் கடல் கடந்து கடாரம் கொண்டதால் 'கடாரம் கொண்டான்' என்னும் பெயரை அடைந்தான். ஆயினும், இவன் 'கங்கைகொண்டான்' என்னும் பெயரையே பெரிதும் போற்றி மகிழ்ந்தான்.

இம்மன்னனின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டுக்களில் இவன்,

"நெடிதிய லூழியுள் இடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதில் கொள்ளிப் பாக்கையும்
நண்ணரு முரண மண்ணைக் கடக்கமும்"

கொண்ட வெற்றிச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. இடைதுறை நாடு என்பது வடக்கே கிருஷ்ணா நதிக்கும் தெற்கே துங்கபத்திரைக்கும் இடைப்பட்ட சமவெளியாகும். இது கன்னடமொழிக் கல்வெட்டுக்களில் 'எடதோறே இரண்டாயிரம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. வனவாசி என்பது மைசூர் நாட்டின் வடமேற்குப் பகுதியைத் தன்னகத்தே கொண்டு முற்காலத்தில் நிலவிய ஒரு நாடாகும். அதனை 'வனவாசிப் பன்னீராயிரம்' என்று கல்வெட்டுக்கள் கூறு

கின்றன. கொள்ளிப்பாக்கையாவது ஐதராபாத்துக்கு நாற்பத்தைந்துமைல் வடகிழக்கே உள்ள 'கூல்பாக்' என்னும் இடமாகும். இது 'கொள்ளிப்பாக்கை ஏழாயிரம்' என்றும் கூறப்படும். மண்ணைக்கடக்கம் என்பது ஒரு காலத்தில் இராட்டிரகூடர்களுக்குத் தலைநகராக இருந்த மான்யகேடம் என்னும் பட்டணமாகும்.

ஈழப்போர்

இம்மன்னன்,

"பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர னாரமும்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்"

கொண்ட செய்தி ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. சோழசேனை இலங்கையைச் சூறையாடினவென்றும், தோல்வியுற்ற ஐந்தாம் மயிந்தன் வஞ்சகமாகப் பிடிக்கப்பட்டு சோழநாட்டுக்கு அனுப்பப்பட்டான் என்றும் மகாவமிசம் கூறுகிறது. இப்படையெடுப்பினால் ஈழமண்டலம் முழுவதும் சோழர்கள் வசம் ஆயிற்று. தவிர, சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர்ப் பாண்டியமன்னன் ஈழ மன்னனிடம் ஒப்படைத்திருந்த மணிமுடியையும், மற்ற அணிகளையும், பாண்டிய குலத்திலே வெகுகாலமாகவே இருந்துவந்த இந்திரனாரத்தையும் கைப்பற்றினான்.

மலைநாடு வென்றது

கங்கைகொண்ட சோழனுடைய ஆறும், ஏழாம் ஆண்டுக் கல்வெட்டுக்களில் இவன் சேரநாட்டின்மேல் படையெடுத்துச்சென்று அந்நாட்டரசர்க்கு வழிவழியுரிமையுடையனவாயிருந்த முடியையும் மாலையையும், கி.பி. 1018-ல் கைப்பற்றிப் பழந்தீவையும் பிடித்துக்கொண்டான் என்றும், சாந்திமத் தீவில் பரசுராமனால் வைக்கப்பட்டிருந்த செம்பொன்முடியைக், கி. பி. 1019-ல் கவர்ந்து

கொண்டான் என்றும் கழறுகின்றன. சாந்திமத் தீவு என்பது அரபிக்கடலிலிருந்த ஒரு தீவாதல் வேண்டும். பரசுராமனால் பண்டை வேந்தர்கள் பட்ட அல்லல்களைக் கேள்வியுற்ற இவ்வேந்தன், அவனை இந்நிலவுலகில் காண முடியாமையால் அவன் அமைத்த நாட்டைக் கைப்பற்ற விரும்பினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்ந்து கூறும்.

சளுக்கியப் போர்

இராசேந்திரன்,

"பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டு
ஒளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட பாடி எழரை
இலக்கமும் நவநிதிக் குலப்பெரு மலைகளும்"

கைக்கொண்டான் என்று, இவனுடைய 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இராசேந்திரன் மேலைச்சளுக்கிய அரசனை சயசிம்மனுடன் முயங்கி அல்லது முசங்கி என்று கூறப்படும் இடத்தில் பொருது வெற்றிகொண்டான். முயங்கி என்பது ஐதராபாத் சமஸ்தானத்தில் உள்ள 'மாஸ்கி' என்னுமிடமாகும். மீரஜ் செப்பேடுகளிலிருந்து இராசேந்திரன் இரட்டபாடியைக் கைக்கொண்டதாகக் கூறிக்கொண்டாலும், சயசிம்மன் துங்கபத்திரைக்கு வடக்கேயுள்ள நாட்டை இழக்கவில்லை என்று தெரிகிறது.

கங்கை கொண்டது

இவனுடைய பதினோராம் ஆண்டுக் கல்வெட்டுக்களில் இவன், சக்கரக் கோட்டமும், மதுரமண்டலமும், நாமணைக் கோணமும், பஞ்சப்பள்ளியும், மாசுணி தேசமும் கொண்டதும், ஆதிநகர் இந்திரரதனைக் கிளையொடும் பிடித்ததும், ஒட்டரதேசமும், கோசலநாடும் கொண்டதும், தன்மபாலன், இரணசூரன், கோவிந்த சந்திரன் இவர்களைத் தாக்கி தண்டபுத்தி, தக்கணலாடம், வங்காளம் இவற்றை

முறையே கொண்டதும், இறுதியில் உத்தரலாட கொண்டதும் கூறப்படுகின்றன.

சக்கரக்கோட்டம் என்பது விசாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மேற்கில் மத்திய மாகாணங்களில் பஸ்தர் சமஸ்தானத்தின் தலைநகரான இராசாபுரத்திற்கு எட்டுக்கல் தூரத்தில் இந்திராவதி ஆற்றின் தென்கரையில் உள்ள சித்திரகோடா என்னும் ஊராகும். கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் அதனை நாகர் மரபினர் ஆண்டு வந்தனர். அதனால் அதற்கு மாசுணி தேசம் என்று பெயர் வந்தது போலும். மதுர மண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப்பள்ளி ஆகிய இடங்களும் அந்நாட்டைச் சார்ந்தனவாகவே இருத்தல் வேண்டும். கோசலம் என்பது மகா கோசலம் என்று வழங்கும் தென் கோசல நாடாகும். தண்டபுத்தி என்பது சுவர்ணரேகை ஆற்றின் இருகரையிலும் பரவியிருந்த நாடாகும்.

தக்கணலாடம், உத்தரலாடம் என்பன, பீகார் வங்காளம் ஆகிய மாகாணங்களில் கங்கைப் பேராற்றின் தென்கரையில் இருந்த இரண்டு நாடுகள் ஆகும். வங்காளம் என்பது கீழ் வங்காளமாகும். தன்மபாலனும், இரணசூரனும், கோவிந்தசந்தனும் வங்காளத்தைப் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டுவந்த மகிபாலன் என்ற பால மரபு அரசனுக்கு உட்பட்ட குறுநில மன்னர்கள். மகிபாலன் சோழ சேனாதிபதியின் சங்க நாதத்திற்கு அஞ்சிப் போர்க்களத்தைவிட்டு ஓடிப்போனான். பின்னர்ச் சோழர்கள் கங்கைக்கரையை அடைந்தார்கள். தோல்வியுற்றவர்கள் கங்கைநீரைத் தங்கள் தலையில் சுமந்து சோழ அரசனுக்குக் கொணர்ந்து சேர்ப்பித்தார்கள் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டும், வாகை சூடித் திரும்பிவரும் தண்டநாயகனை மன்னன் கோதாவரிக்கரையில் சந்தித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் கூறும்.


படையெடுப்பின் பயன்

அப்படையெடுப்பின் பயனாகத் தமிழர்நாகரிகம் வங்காளத்தில் புகுந்தது. படையுடன் வங்கம் சென்றவர்

முதலாம் இராசேந்திரன் கடாரப்படையெடு



ச்சியில் வென்ற இடங்களைக் காட்டும் படம்



களுள் ஒருவன் மேற்கு வங்காளத்தில் தங்கினான் என்றும், அவன் வழியில் வந்த சாமந்தசேனன் என்பவனே பிற்காலத்தில் வங்க நாட்டை ஆண்ட சேன மரபினரின் முதல்வன் என்றும் திரு R. D. பானர்ஜி என்னும் அறிஞர் கூறுகின்றார். மிதிலையை ஆண்ட கருநாடரும் அவ்வாறு சென்றவர்களாக இருத்தல்வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். திரிலோசன சிவாசாரியாரது சித்தாந்த சாராவளியின் உரையிலிருந்து இராசேந்திரன் கங்கைக்கரையிலிருந்து பல சைவர்களை அழைத்துவந்து காஞ்சியிலும், சோழநாட்டிலும் குடியேற்றினான் என்று தெரிகிறது. பல தென்னிந்தியர்களையும் வங்காளத்தில் குடியேற்றினான்.

கடாரம் கொண்டது

“ அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்மன்
ஆகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையில் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகனகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சாதிரத் தோரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைஸ்ரீ விஷயமும் துறை நீர்ப்பன்னையும்
வன்மலை யூரெயில் தொன்மலை யூரும்
ஆழ்கடல் சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூறுடை வளைப்பந் தூறும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மாதமர் லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடற் காவல் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டால் கொண்ட ”

செய்தி இராசேந்திரனின் பதின்மூன்றும் ஆண்டுக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றது.

கடாரத்தரசனை வென்று இவன் கைக்கொண்டனவாகக் கூறப்படும் ஊர்கள் மலேயா தீபகற்பத்திலும் சுமத்ரா தீவிலும் இருந்தன. அப்பொழுது கடாரத்தை ஆண்ட அரசனின் பெயர் சங்கிராம விசயோத்துங்கவர்மன். இவன் மாற விசயோத்துங்கவர்மனின் புதல்வன். கலிங்கத்துப் பரணியில், 'குளிறு தெண்டிரைக்குரை கடாரம்' என்றும், 'பரக்கு மோதக் கடாரம் அழிந்த நாள்' என்றும் குறிக்கப்பட்டிருப்பதினின்றும், அது கடற்கரையில் உள்ளது என்பது பெறப்படும். அது வடமொழியில் கடாஹம் என்றும், பட்டினப்பாலையில் காழகம் என்றும் வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீவிஷயம் என்பது சுமத்திரா என்று இக்காலத்தில் வழங்கும் சொர்ணத்தீவிலுள்ள பாலம்பாங் என்னும் இராச்சியமாகும்.

பன்னை சுமத்திரா தீவின் கீழ்கரையில் உள்ள பனி (Pani or Panei) என்னும் ஊராகும். மலையூர் என்பது சுமத்திரா தீவின் கீழ்கரையிலிருந்தது என்று சிலரும், மேல்கரையில் இருந்தது என்று வேறு சிலரும், மலேயா தீபகற்பத்தின் தென்பகுதியில் இருந்தது என்று மற்றோரும் கூறுகின்றனர். இந்நாட்டிலேதான் மலையூ என்னும் ஆறு ஓடியது. டச்சு ஆராய்ச்சியாளர்கள் இது ஜம்பி என்னும் நாடே என்று முடிவு செய்திருக்கிறார்கள். மாயிருடிங்கம் என்பது மலேயாவின் நடுவில் இருந்ததாம். சீன நூல்களில் அது ஜிலோடிங் என்று வழங்கப்பட்டுள்ளது. இலங்காசோகம் என்பது மலேயாவிலுள்ள கெடாவுக்குத் தெற்கே இருந்தது. பப்பாளம் என்பது பப்பாளமா என்று மகாவமிசத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இது 'கிரா' பூசந்திக்குப் பக்கத்தில் இருக்கவேண்டும்.

மேவிலிம்பங்கம், வளைப்பந்தூறு என்னும் இரண்டும் எவ்விடங்களில் இருந்தன என்பது இப்போது புலப்படவில்லை. ஆயினும் இவை எந்த இடங்களாக இருக்கலாம்

என்பது படத்தில் காட்டப்பட்டுள்ளது. தக்கோலம் என்பது கிரேக்க ஆசிரியரான தாலமியால் 'தகோலா' என்று குறிக்கப்பட்டுள்ளது. கிராபூசந்திக்குத் தெற்கே, மலேயாவின் மேல்கரையிலுள்ள தகோபா ஜில்லாவின் தலைநகராகிய தகோபா நகரமே பழைய தக்கோலம் என்பது அறிஞர்கள் கருத்து. மாதமாலிங்கம் சீன நூல்களில் தன்மாலிங் என்று கூறப்பட்டுள்ளது. அது மலேயாவின் கீழ்கரையில் குவாண்டன் என்னும் ஆறு கடலோடு கலக்குமிடத்திலுள்ள தெமிலிங் அல்லது தெம்பெலிங் என்ற நகரமாகும்.

இலாமுரி தேசம் என்பது சுமத்திராவின் வடபகுதியிலிருந்தது. அராபியர்கள் இதை லாமுரி என்றும், மார்க்கபோலோ என்னும் இத்தாலிய யாத்திரிகர் இதை லம்பிரி என்றும் குறித்துள்ளார்கள். சீனர்கள் இதனை லான்வூலி என்று வழங்கியுள்ளார்கள். மாநக்கவாரம் என்பது நிக்கோபார் தீவுகள் (Nicobar Islands) என்று இக்காலத்தில் வழங்குகிறது. சீன நூல்களிலிருந்து இப்பகுதிகள் எல்லாம் ஸ்ரீவிசய ராச்சியத்திற்கு உட்பட்டிருந்தன என்று தெரிகிறது. இராசேந்திரன் ஸ்ரீவிசயத்துடன் போர் செய்ய நேர்ந்ததற்குக் காரணம் இன்னதென்று இப்பொழுது தெரியவில்லை. இவன் ஸ்ரீவிசயத்தை வென்றும் அதைத் தன்னாட்சியின் கீழ்க்கொண்டு வந்ததாகத் தெரியவில்லை.

பிற போர்கள்

இளவரசன் இராசாதிராசன் 'தென்னவர் மூவரை'யும் வென்று கொன்றதோடு சுந்தரபாண்டியன் போர்க்களத்தில் எல்லாவற்றையும் இழந்து தலைவிரித்தோடி முல்லையூர் புக்கு ஒளிக்குமாறும் செய்தனன். பின்னர்ச் சேர நாட்டின் மீது படையெடுத்துச்சென்ற இராசாதிராசன் முதலில் வேணாட்டரசனை வானுலகம்போக்கிக் கூபகநாட்டு அரசனை விடுவித்தான். பின்னர், எலிமலைக்கண்மையிலுள்ள மூஷிக வமிசத்தரான இராமகுட மூவரைத் தோற்கடித்தான்.

இராசாதிராசனால் வெற்றிகொள்ளப்பட்டவன் கண்டன் காரிவர்மன் என்பவன் போலும்.

ஈழப்போர்

சிங்களவர்கள் தாங்கள் இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றச் சமயம் பார்த்திருந்தனர். ஐந்தாம் மயிந்தனின் புதல்வன் காசிபன் என்பான் சோழர்களுக்கு எதிராக ஆறு திங்கள் போரிட்டு ரோகணநாட்டை வென்று கி. பி. 1029-ல் விக்கமபாகு (விக்கிரமபாகு) என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டான். அவன் பன்னீராண்டுகள் ஆண்டான். சோழர்களுடன் போர்நிகழ்த்துவதற்குப் பெரும்படையைத் திரட்டிக்கொண்டிருந்த காலத்தில் அவன் கி. பி. 1041-ல் இறந்துபோனானென்று மகாவமிசம் கூறுகின்றது. ஆனால் அவன் சோழர்களுடன் நிகழ்த்திய போரில் உயிர் இழந்தான் என்று சோழர் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

அவனுக்குப் பிறகு 'கித்தி' என்பான் எட்டுநாட்களும், அவனுக்குப்பிறகு மகாலானகித்தி என்பான் மூன்றாண்டுகளும் ஆண்டான். அவன் சோழர்களுடன் புரிந்த போரில் தோல்வியெய்தி அவ்வவமானத்தைப் பொறாது தன் கையாலேயே கழுத்தை அரிந்துகொண்டு உயிர் துறந்தான். சோழர்கள் அவன் முடி முதலியவற்றையும் பிற அணிகலன்களையும் பொருள்களையும் கைப்பற்றி நாட்டைச் சீரழித்தார்கள். மகாலானகித்தியின் மகன் விக்கமபண்டு இலங்கையில் இருப்பதற்கு அஞ்சித் துளுவநாட்டில் வாழ்ந்துவந்தான். தன் தந்தையின் முடிவைக் கேட்டதும் அவன் ரோகணத்திற்குத் திரும்பிச்சென்று அந்நாட்டின் ஆட்சியைக் கி. பி. 1044-ல் ஏற்றுக்கொண்டான்.

மேலைச்சளுக்கியப் போர்

இராசேந்திரன் ஆட்சியின் இறுதியில் சோழர்களுக்கும் மேலைச்சளுக்கியர்களுக்கும் மீண்டும் போர் தொடங்கிற்று. கி. பி. 1042-ல் சயசிம்மன் இறக்கவே அவன் மகன்

முதலாம் சோமேசுவரன், திரைலோக்கிய மல்லன், ஆகவ மல்லன் என்ற விருதுகளுடன் முடிசூட்டப்பெற்றான். இளவரசனாகிய இராசாதிராசன் சளுக்கிய சேனையைப் புறங்கண்டு அவர்கள் படைத்தலைவர்களான கண்டப்பையன், கங்காதரன் ஆகியவர்களைக் கொன்றான். சோமேசுவரன் மக்களாகிய விக்கிரமாதித்தனும், விசயாதித்தனும் தம் படைத்தலைவன் சங்கமையனோடு போர்க்களத்தினின்றும் ஓடினர். பின்பு சோழர்கள் யானையும், குதிரையும், நவநிதியும் கொண்டு, கொள்ளிப்பாக்கையை எரியூட்டினார்கள்.

சோழர்களை வெல்லமுடியாது என்பதை யறிந்த ஆகவமல்லன், சமாதானத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகச் சில தூதர்களை அனுப்பினான். சோழர்கள் அவர்களுள் இருவரைப் பொறுக்கி எடுத்து ஒருவனுக்கு 'ஐங்குடுமி' வைத்து மற்றவனுக்குப் பெண் உடைதரித்து, அவர்களுக்கு 'ஆகவமல்லன், ஆகவமல்லி' என்று பெயரிட்டுத் திருப்பி அனுப்பினார்கள். இதைக்கண்ட சளுக்கியன் மனம்பொறானாய்ப் போர்செய்து மீண்டும் தோல்வியுற்றான் என்று சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இராசேந்திரன் ஆட்சி

இராசேந்திரனுக்கு முடிகொண்ட சோழன், பண்டித சோழன், கடாரங்கொண்டான், கங்கைகொண்ட சோழன் என்னும் பெயர்கள் வழங்கியமை கல்வெட்டுக்களால் புலனாகின்றது. முடிகொண்ட சோழன் ஆறு, இவனால் வெட்டப்பெற்றது. இவன் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை உடையவன். இவன் கங்கைகொண்ட சோழன் என்னும் பெயர் எய்தியமைக்குக் காரணம் முன் கூறப்பட்டுள்ளது. இவ்வெற்றியின் அறிகுறியாக இவன் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் ஒரு நகரத்தை அமைத்து, அதில் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்னும் கோயிலையும் எடுப்பித்து, பக்கத்தில் 'சோழகங்கம்'

என்னும் பெரிய ஏரியை நீர்மயமான வெற்றித்தூணாக எடுப்பித்தான்.

கங்கைகொண்ட சோழபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், உடையார்பாளையம் தாலூகாவில் இப்பொழுது ஒரு சிற்றூராக இருக்கின்றது. முற்காலத்தில் இவ்வூர் பெரிய நகரமாக விளங்கியது. கங்கைகொண்ட சோழீச்சுரம் அமைப்பில் தஞ்சை இராசராசேச்சுரத்தை ஒத்தது; ஆனால் உருவத்தில் அதனிலும் சற்றுச் சிறியது; சிற்பத்திறத்தில் உயர்ந்தது. கர்ப்பக்கிருகம், அதனைச் சூழ்ந்த பிரகாரம், இடிந்த கிழக்குக் கோபுரம் என்பவற்றைத் தவிர எஞ்சிய பகுதிகள் எல்லாம் இடிந்தழிந்து போயின. விமானம் தஞ்சை விமானத்தைப்போல் மிக அழகாக அமைந்துள்ளது. கருவூர்த்தேவர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார்.

இம்மன்னன் வெட்டுவித்த 'சோழகங்கம்' என்னும் ஏரி இப்பொழுது பொன்னேரி என்று வழங்கப்படுகிறது. இது தெற்கு வடக்கில் பதினாறுகல் நீளமுள்ளது. தற்பொழுது எக்கர் அடித்து மேடாக உள்ளது. இதற்குத் தண்ணீர் வருவதற்குத் தென்புறத்தில் கொள்ளிடத்திலிருந்து அறுபதுகல் நீளமுள்ள ஒரு கால்வாயும், வடபுறத்தில் வெள்ளாற்றிலிருந்து மற்றொரு கால்வாயும் இருந்தன. தென்னார்க்காடு மாவட்டத்தில் இப்பொழுது மிகப்பெரிய ஏரியாகக் கருதப்படும் வீராணம் இப்பொன்னேரியின் வடிகாலாகவே இருந்ததாம்.

மாளவநாட்டுப் பரமார அரசனான போசராசனால் இரு குன்றுகளுக்கிடையில் அமைக்கப்பெற்ற போசபுரத்து ஏரியினும் சோழநாட்டில் மலைகளே இல்லாத நிலப்பரப்பில் மிக்க வலிமை வாய்ந்த பெருங்கரைகளுடன் இராசேந்திரனால் அமைக்கப்பெற்ற சோழகங்கம், சிறப்பும் தொன்மையும் வாய்ந்தது என்பது உணரற்பாலது. அரசியலார் இவ்வேரியைச் சீர்ப்படுத்தினால் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விளைந்து பயன் தருமென்பது திண்ணம்.

குலகுரு

இவனுக்குச் சைவாசாரியராக விளங்கியவர் சர்வசிவ பண்டிதர் ஆவார். இச்செய்தி, ஆசாரிய போகமாக இவருக்கு இரண்டாயிரங் கலநெல் ஆண்டுதோறும் அளிக்குமாறு இவன் செய்துள்ள ஏற்பாட்டினுல் வெளியாகின்றது. சைவத்தின் அறுவகைப் பிரிவுகளுள் ஒன்ருகிய காளாமுகத்தைச் சார்ந்த லகுளீச பண்டிதரும் இவனுல் ஆதரிக்கப்பட்டார். சைவத்தில் பெரும் பற்றுடையனுயினும் புறச்சமயங்களை வெறுத்து ஒறுக்கும் தீயபண்பு இவனிடம குடிகொண்டிலது.

இறுதிக் காலம்

இராசேந்திரன் ஆட்சியின் இறுதியில் சோழப் பேரரசு மிகவும் புகழ்பெற்று விளங்கியது. இப்பொழுது மைசூர் சமஸ்தானம் உள்ளிட்டுச் சென்னை மாகிலம் என்று வழங்கப்படும் பகுதி முழுவதும், ஒரிஸ்ஸா மாகிலத்தின் தென்பகுதியும், இலங்கையின் முழுப்பகுதியும் சோழ ஆட்சியில் அடங்கியிருந்தன. முப்பது ஆண்டுகள் முட்டின்றி முடியாட்சி செய்த மும்முடிச் சோழன் கி. பி. 1044-ல் உலக வாழ்வை நீத்தான். இவன் மக்கள் பலருள்ளும் இவனுக்குப் பிறகு முடி தாங்கியவர் மூவர். அவர் முதல் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், வீரராசேந்திரன் என்போர் ஆவர். அம்மூவரும் வேள்வியில் தோன்றும் முத்தீயைப் போல் இராசேந்திரசோழன் புதல்வர்களாகச் சிறந்து திகழ்ந்தனர் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டுக் கூறுகின்றது.

முதல் இராசாதிராசன் (கி. பி. 1018—1054)

கி. பி. 1018-ல் இளவரசுப்பட்டம் கட்டப்பெற்ற இராசேந்திரன் மூத்தமகன் இராசாதிராசன் கி. பி. 1044-ல் தந்தை இறந்தபின் அரசுகட்டில் ஏறினுன். இவன் பிறவியிலேயே வீரமும் ஆண்மையும் படைத்தவன். கி. பி. 1047-ல் விக்கிரமபாண்டியன் என்னும் விக்கம பண்டு

வினால் ஈழநாட்டில் தோன்றிய புரட்சியை இராசாதிராசன் அடக்கியொடுக்கியதோடு, அவன் தாயை மூக்கரிந்து பரிப வப்படுத்தினான். இராசாதிராசன் மேலைச்சளுக்கியர்களுடன் போரிட்டுப் பெல்லாரி மாவட்டத்திலுள்ள கம்பிலி மாளிகையைத் தகர்த்தெறிந்து அவ்விடத்தில் வெற்றித்தூண் ஒன்றும் நிலைநாட்டினான். கி. பி. 1048-ல் இராசாதிராசன் மேலைச்சளுக்கியர்களுடன் நிகழ்த்திய போரில் வெற்றி எய்திய பின்னர், அன்னோரது தலைநகராகிய கல்யாணபுரத்தைக் கைப்பற்றி அவணிருந்த அரண்மனையையும் இடித்து, தன் வெற்றிக்கு அடையாளமாக அந்நகரிலேயே வீராபிடேகஞ் செய்துகொண்டு 'விசயராசேந்திரன்' என்ற பட்டமும் புனைந்தனன்.

கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள தாராசுரம் கோயிலில் வைக்கப்பெற்றுள்ள துவாரபாலர் படிமம் ஒன்றின் பீடத்தில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விஜயராசேந்திரதேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டுவந்த துவாரபாலர்' என்று வரையப்பெற்றுள்ள செய்தி இப்போர்நிகழ்ச்சிக்குச் சிறந்த சான்றாகும். கி. பி. 1054-ஆம் ஆண்டில் இராசாதிராசன் தன் தம்பி இரண்டாம் இராசேந்திரனோடு மறுபடியும் சளுக்கியரின்மீது படையெடுத்துச்சென்றான். கிருஷ்ணா ஆற்றங்கரையிலுள்ள கொப்பத்தில் இருபடைகளும் கைகலந்தன. 'செப்பருந் தீர்த்தக் கொப்பத்து' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருத்தலால் இது தீர்த்தச்சிறப்பு வாய்ந்த ஒரு தலமாதல்வேண்டும். இப்போரில் இராசாதிராசன் யானைமீதிருந்து போர்புரிந்து உயிர்துறந்தமை பற்றிக் 'கல்யாணபுரமுங் கொல்லாபுரமும் எறிந்து யானைமேல் துஞ்சின உடையார் விசயராசேந்திர தேவர்' என்று சோழர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றான்.

தன் தமையன் இறந்ததும் இரண்டாம் இராசேந்திரன் பட்டத்து யானைமீதேறிப் போர்க்களங்குறுகி சளுக்கியர்களைத் தோற்கடித்துக் கொல்லாபுரத்தில் வெற்றித்தூண் ஒன்றையும் நிறுவினான். போர்க்களத்திலேயே விசயா

பிடேகஞ் செய்துகொண்டு சோழச்சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டான்.

இரண்டாம் இராசேந்திரன் (கி. பி. 1051—1063)

இராசேந்திரன் கொப்பத்துப் போர்க்களத்தில் முடி சூட்டிக்கொண்ட செய்தி,

"ஒரு களிற்றின் மேல் வரு களிற்றை ஒத்து
உலகுபக் கொளப் பொருது கொப்பையில்
பொரு களத்திலே முடிகவித்தவன்"

என்று கலிங்கத்துப் பரணியிலும் ஆசிரியர் சயங்கொண்டாரால் கூறப்பட்டிருக்கிறது. கி. பி. 1059-ல் சளுக்கியர்களுடன் நிகழ்ந்த முடக்காற்றுப் போரில் மீண்டும் சோழர் வெற்றி கொண்டனர். முடக்காறு கிருஷ்ணு ஆற்றின் கரையில் உள்ளது. கோல்ஹாப்பூரில் வெற்றித் தூண் ஒன்றும் நிறுவினன். இவன் தன் மகள் மதுராந்தகியை கீழைச் சளுக்கிய மன்னனாகிய இராசராச நரேந்திரன் மகனும் கங்கைகொண்ட சோழன் மகள் அம்மங்கதேவியின் பேரனுமாகிய இராசேந்திரனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அவ்விராசேந்திரனே பிறகு 'முதற் குலோத்துங்க சோழன்' என்ற பட்டம் தாங்கி சோழர் அரியணை ஏறியவன்.

வீரராசேந்திரன் (கி. பி. 1063—1070)

இவன் கங்கைகொண்ட சோழனின் புதல்வர்களுள் ஒருவன்; இரண்டாம் இராசேந்திரனின் இளவல். இவன் ஆவணித்திங்கள் ஆயிலிய நாளில் பிறந்தவன் என்று திருமுக்கூடலிலுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது. 'ஆகவமல்லனை ஐம்மடி வெங்கண்டு' என்ற தொடர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுவதால் இவன் சளுக்கிய மன்னனை ஐந்துமுறை புறங்கண்டது பெறப்படும். இவற்றில் கிருஷ்ணை, துங்கபத்திரை ஆகிய ஆறுகள் கூடும் இடமாகிய கூடல் சங்கமத்தில் கி. பி. 1064-ல் நடைபெற்ற போர் தலையாயது. இதில் வீரராசேந்திரன் ஆகவமல்லன்

பாசறையை முற்றுகையிட்டு, அவன் மனைவியரையும், பட்டத்து யானையாகிய புட்பகப்பிடியையும், வராகக் கொடியையும், யானை குதிரைகளையும் மற்றும் பல பொருள் களையும் கைப்பற்றினான்.

வீரராசேந்திரன் பொத்தப்பி வேந்தனையும், கேரளனை யும், சனநாதன் தம்பியையும், பாண்டியன் சீவல்லபன் மகன் வீரகேசரியையும் செருக்களத்துக் கொன்றான். இந் நிகழ்ச்சிகள் கி. பி. 1065-ல் நிகழ்ந்திருக்கவேண்டும். கி. பி. 1067-ல் மேலைச்சளுக்கிய விக்கிரமாதித்தனால் கைப்பற்றப்பட்ட வேங்கிநாட்டை, வீரராசேந்திரன் கலிங்கம் ஏழும் கடந்து திரும்பவும் கைப்பற்றினான். தன்பால் அடைக்கலம் புகுந்த கீழைச்சளுக்கிய மன்ன னாகிய ஏழாம் விசயாதித்தனிடம் வேங்கி நாட்டை அளித்து விட்டுத் தலைநகர்க்குத் திரும்பினான்.

வீரராசேந்திரன் ஈழநாட்டில் விசயபாகுவுடன் போர் புரிந்து அவனைத் தன்னடிப்படுத்தினான். இவன் 'தன் கழலடைந்த மன்னர்க்குக் கடாரம் எறிந்து கொடுத்தருளி னான்' என்று இவனுடைய ஆட்சியின் ஏழாம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. கி. பி. 1068-ல் ஆகவமல்லன் இறந்தபின்னர்ப் பட்டத்துக்கு வந்த இரண்டாம் சோமேசு வரன் முன் வீரராசேந்திரனால் நிற்கமுடியவில்லை என்று சளுக்கியர்களின் கல்வெட்டும், 'சோமேசுவரன் கட்டிய கண்டிகை அவிழ்ப்பதன் முன்னம்' வீரராசேந்திரன் சளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று, கம்பிலி நகரை எரித்து, குத்தியை முற்றுகையிட்டு, இடைதுறை நாட்டிலுள்ள கரடிக்கல்லில் வெற்றித்தூண் நிறுவினான் என்று சோழர்களின் கல்வெட்டும் கூறு கின்றது.

வீரராசேந்திரன் தன் மகளை இரண்டாம் சோமேசு வரனின் இளவல் விக்கிரமாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்ததுடன், இரட்டபாடி ஏழரை இலக்கத்தின்மேல் படையெடுத்துச் சென்று, இரண்டாம் சோமேசுவரனைக்

"கன்னட தேசங் கைவிடத்துரத்தி தன்னடியடைந்த" விக்கிரமாதித்தனுக்கு வழங்கினான். இவன் விருதுகளுள் 'ஆகவமல்ல குலகாலன்', 'வல்லவ வல்லவன்' என்பவை சிறப்பானவை.

அதிராசேந்திரன் (கி. பி. 1067—1070)

இவ்வேந்தன் வீரராசேந்திரனின் புதல்வன். சில திங்கள் ஆட்சிபுரிந்து ஊழ்வினைவயத்தால் இறந்தான். ஆறும் விக்கிரமாதித்தன் வரலாறு எழுதிய வடமொழிப் புலவர் பில்ஹணர் என்பார், சோணாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுப்போரில் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான் என்று கூறியுள்ளது ஆராய்தற்குரியது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கூகூரில் காணப்படும் கல்வெட்டு இவன் கொடிய நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றான் என்றும், இவன் உடல்நலம் பெறும்பொருட்டு அவ்வூர்க் கோயிலில் இறைவன் திருமுன்னர் நாள்தோறும் தேவாரப்பதிகங்கள் ஓதப்பட்டன என்றும் கூறுவதால் பில்ஹணர் கூற்றுப் பொருந்தாமை காண்க.

சில வரலாற்று ஆசிரியர்கள், வைணவ நூல்களில் கூறப்படும் 'கிருமிகண்ட சோழன்' இவனே என்றும், இவனே தில்லைத்திருமாலைக் கடலில் போட்டவன் என்றும் கருதுவதற்கு யாதொரு காரணமுமில்லை என்பது பின்னர் விளக்கப்படும். இவனுடன் விசயாலய சோழர் வமிசம் இறுதி எய்திற்று.

முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070—1120)

அதிராசேந்திரனுக்கு மகப்பேறு இன்மையாலும், சோழநாட்டில் முடிசூட்டப்பெறுவதற்குரிய வேறு சோழ அரசிளங்குமரன் இன்மையாலும், பேரன் உறவு கொண்டாடி, குலோத்துங்கன் சோழ அரசுகட்டில் ஏறினான். இவன் தந்தைவழியில் சளுக்கிய மரபையும், தாய்வழியில் சோழர் மரபையும் சேர்ந்தவன். இவனுக்கு இளமையில் இவன் தாய்ப்பாட்டனின் பெயரான இராசேந்திரன்

என்னும் பெயர் இடப்பெற்றிருந்தது. இவன் கி. பி. 1060-ல் வேங்கிநாட்டில் 'விஷ்ணுவர்த்தனன்' என்ற பெயருடன் அரியணை அமர்ந்தான். சோழநாடு அதிராசேந்திரன் இறந்தபின்னர் அரசனில்லாது குழப்பத்திற்குள்ளாகியிருந்தது. இவனும் அதையுணர்ந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு விரைந்தேகி கி. பி. 1070-ஆம் ஆண்டு சூன் திங்கள் 9-ஆம் நாளில் முடிசூட்டிக்கொண்டான்.

இவனுடைய மாமன்மார், அவர்கள் முன்னோர் யாவரும் துங்கபத்திரைக்கு வடக்கேயுள்ள மேலைச் சளுக்கியநாட்டைக் கைப்பற்றிச் சோழநாட்டுடன் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பன்முறை அங்குப் படையெடுத்துச்சென்று வென்றும், அவர்கள் விருப்பம் நிறைவேறவில்லை. சளுக்கிய நகரங்கள் அழிந்தமைதான் அன்னோர்கண்ட பயன். இதனையெல்லாம் நன்கறிந்த குலோத்துங்கன் துங்கபத்திரைக்கு வடக்கே சோணாட்டெல்லையைப் பரப்பும் எண்ணத்தை அறவே விட்டொழித்தான்.

குலோத்துங்கன் போர்கள்

சுமார் கி. பி. 1073-ல் திரிபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த காலசூரி மரபினனான யசகர்ணன் வேங்கியைச் சூறையிட்டான். கி. பி. 1075-ல் குலோத்துங்கன் ஈழத்தையும் இழந்தான். குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் இலங்கையில் யாண்டும் காணப்படவில்லை. இவ்வாறு இலங்கை முழுவதையும் தன் குடைக்கீழ்க் கொண்டு வந்த சிங்கள மன்னன் முதலாம் விசயபாகு ஆவன். இவன் கி. பி. 1076-ல் மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆறாம் விக்கிரமாதித்தனோடு போர் நிகழ்த்தினான். இப்போரில் குலோத்துங்கன் நங்கிலி, மணலூர், அளத்தி என்ற இடங்களில் விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தான் எனச் சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆனால் பில்ஹணர் இப்போரில் விக்கிரமாதித்தனே வெற்றி பெற்றான் என்று தாம் எழுதிய விக்கிரமங்கதேவ சரித்திரத்தில் கூறுகிறார். தன் சிறிய தந்தையாகிய ஏழாம் விசயாதித்தன் கி. பி.

1077-ல் இறந்தபிறகு குலோத்துங்கன் தன் மைந்தனை வேங்கி நாட்டிற்குப் பிரதிநிதியாக அனுப்பினான். கி. பி. 1088-ல் குலோத்துங்கன் தன் மகள் சுத்தமல்லியாழ்வாரை இலங்கை வேந்தன் வீரவாகுக்கு மணஞ் செய்து கொடுத்தான்.

இராசநாராயணன் கி. பி. 1081-ல் 'மீனவர் ஐவரையும்' புறங்கண்டு தனக்குத் திறை செலுத்தும்படி செய்தான். குலோத்துங்கன் சேரர்களையும் அதே ஆண்டில் செருக்களத்தில் வென்றடக்கினான். சேர பாண்டிய நாடுகளில் 'நிலைப்படை'களையும் நிறுவினான். இவ்வாறு கோட்டாற்றில் அமைக்கப்பட்ட படைக்குக் 'கோட்டாற்று நிலைப்படை' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

கலிங்கப்போர்

குலோத்துங்கன் கி. பி. 1096-ல் **தென்கலிங்கத்தை** ஆண்ட தெலுங்க வீமனை அடிப்படுத்தினான். தென்கலிங்கம் என்பது கோதாவரி ஆற்றிற்கும் மகேந்திரகிரிக்கும் இடைப்பட்ட கடற்கரையை ஒட்டிய நாடாகும். சுமார் கி.பி. 1098-ல் தெற்கே தோன்றிய கலகத்தை **நரலோகவீரன்** என்ற தண்டநாயகன் அடக்கியொடுக்கினான். கி. பி. 1112-ல் நடைபெற்ற வடகலிங்கப்போர், வடகலிங்க வேந்தனாகிய அனந்தவர்மன் என்பவனோடு குலோத்துங்கன் நிகழ்த்திய போராகும். இப்போர் நிகழ்ச்சியைச் சயங்கொண்டார் என்னும் புலவரால் பாடப்பட்ட 'கலிங்கத்துப்பரணி' என்ற நூல் விரிவாக விளக்குகின்றது. இப்போரை நடத்திப் பெருவெற்றியுடன் திரும்பியவன், இவனுடைய படைத்தலைவனாகிய **கருணாகரத் தொண்டைமான்** என்பவனே. கலிங்கப்போரில் தோல்வியுற்ற அனந்தவர்மன் என்பவன் குலோத்துங்கனுடைய மகள் இராசசுந்தரியின் மகன் என்று சிலர் கருதுகின்றனர்.

கங்கவாடியும் வேங்கிநாடும்

கி. பி. 1116-ல் ஹொய்சல வேந்தன் பிட்டிகவிஷ்ணுவர்த்தனன் என்பான் தன்னைத் 'தலைக்காடு கொண்ட'

அரசன் என்று கூறிக்கொள்வதால், அவ்வாண்டில் கங்க வாடியையும் அதன் தலைநகரான தலைக்காட்டையும் குலோத்துங்கன் இழந்தனன் என்பது தெளிவு. இனி, குலோத்துங்கன் ஆட்சியின் 49, 50-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் வேங்கிநாட்டில் காணப்படாமையாலும், சளுக்கிய விக்கிரமாதித்தனுடைய தண்டநாயகனாகிய அநந்தபாலையா என்பவன் கி. பி. 1118-ஆம் ஆண்டில் வேங்கிநாட்டை ஆட்சிபுரிந்து கொண்டிருந்தான் என்று குண்டூர் மாவட்டத்திலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுவதாலும், கி. பி. 1118-ல் வேங்கிநாட்டைக் குலோத்துங்கன் இழந்தான் என்று தெரிகிறது.

வெளிநாட்டுத் தொடர்பு

கி. பி. 1077-ல் எழுபத்திரண்டு பேர் அடங்கிய ஒரு குழுவினர் சோணாட்டிலிருந்து சீன தேயத்திற்குத் தூது சென்ற செய்தி அத்தேயச் சரித்திரத்தில் காணப்படுகின்றது. குலோத்துங்கன் காலத்தில் தமிழ்நாடும் கடாரமும் நட்புற்றிருந்தமை சுமத்திரா தீவில் கி. பி. 1088-ஆம் ஆண்டில் வரையப்பெற்ற "திசையாயிரத்து ஐந்நூற்றுவர்" என்னும் தமிழ் வணிகக் குழுவை உணர்த்துங் கல்வெட்டொன்றால் உறுதியாகிறது. குலோத்துங்கன் காம்போசநாட்டு வேந்தன் தனக்குக் காட்சிப் பொருளாகக் காட்டிய கல்லொன்றைப் பெற்று வந்து, தில்லைச்சிற்றம்பலத்தைச் சார்ந்துள்ள திருவெதிரம்பலத்தில் வைத்தனன் என்று சிதம்பரத்திலுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.

கி. பி. 1111-ல் வரையப்பட்ட கன்னோசி மன்னனது வடமொழிக் கல்வெட்டொன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ளது. அதிலிருந்து குலோத்துங்கன் கன்னோசி அரசன் கோவிந்தசந்திர தேவனுடன் நட்புரிமை பெற்றிருந்தான் என்று தெரிகிறது. இனிக் கன்னோசி வேந்தர்கள் பரிதிக்குத் தனிக்கோயில் எடுப்பித்ததைப் போன்று, குலோத்துங்கனும் சூரியனுக்குத் தனிக்

கோயில் எடுப்பித்தது அறியத்தக்கது. பர்மாவிலுள்ள புரோம் (Prome) நகரத்திலிருந்து கி. பி. 1084-முதல் 1112-வரையில் அரசாண்ட திரிபுவனாதித்திய தம்மராசன் என்னும் வேந்தன் ஒருவன், சோழ அரசகுமாரன் ஒருவனைப் பௌத்த சமயத்தினனாக மாற்றியதோடு அவன் மகளை மணந்துகொண்டான் என்றும் அந்நாட்டிலுள்ள கல்வெட்டொன்று உணர்த்துகின்றது. இச்சோழ குமாரன் யார் என்பது விளங்கவில்லை.

குலோத்துங்கன் பெருமை

இவன் காலத்தில் நாட்டின் பரப்புச் சுருங்கியபோதிலும் ஐம்பதாண்டுகளுக்கு நெறியாக அரசை நடாத்தினன். கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர்,

"புவி ராசராசர் மனுமுதலோர் நாளில்
தவிராத சுங்கந் தவிர்த்தோன்"

என்று இவன் சுங்கந் தவிர்த்ததைப் பாராட்டியுள்ளார். மக்களும் இவனை 'சுங்கந் தவிர்த்த சோழன்' என வாயார வாழ்த்தினர். கி. பி. 1086-ஆம் ஆண்டில் நாடு முழுதும் அளக்கப்பட்டது. இங்கிலாந்தில் அதே ஆண்டில் முதலாம் வில்லியம் என்பவனால் நிலம் அளக்கப்பட்டது. மீண்டும் கி. பி. 1110-ல் நிலம் அளக்கப்பட்டது.

சமயநிலை

இவன் திருநீற்றுச் சோழன் என வழங்கப்பட்டதே இவனுக்குச் சிவபெருமானிடத்தில் இருந்த எல்லையற்ற பேரன்பைக் காட்டுகிறது. இவன் தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் 'குலோத்துங்கசோழ விண்ணகரம்,' என்ற பெயரால் திருமால்கோட்டம் ஒன்று எடுப்பித்தான். அது தற்பொழுது இராசகோபாலசாமி கோயில் என வழங்குகிறது. நாகப்பட்டினத்திலுள்ள புத்த விகாரத்திற்கு இவ்வேந்தன் விட்ட நிவந்தங்களை உணர்த்துஞ் செப்பேடுகள் உலாந்தா நாட்டிலுள்ள லீடன் பொருட்காட்சிச்சாலையில் இருக்கின்றன.

கல்விச் சிறப்பு

இவன் பல்கலையிலும் துறை போயிருந்தமை, 'பல் கலைத்துறை நாவில் உறைந்தவன்' என்றும் 'அறிஞர் தம்பிரான் அபயன்' என்றும் ஆசிரியர் சயங்கொண்டார் குறிப்பிட்டிருத்தலால் அறியப்படும். அன்றியும், இவன் இசைத்தமிழ்நூல் ஒன்று இயற்றியுள்ளனன் என்பது,

"சோழ குலசேகரன் வகுத்த இசை"

எனவும்,

"தாளமுஞ் செலவும் பிழையாவகை தான்
வகுத்தன தன்னெதிர் பாடியே—
காளமுங்களி றும்பெறும் பாணர்தம்
கல்வி யிற்பிழை கண்டனன் கேட்கவே"

எனவும் சயங்கொண்டார் கூறியிருத்தலால் புலனாகின்றது. சுருங்கக்கூறின் குலோத்துங்கன், 'கலையினொடுங் கவிவாணர் கவியினொடும் இசையினொடும்' பொழுது போக்கினன் எனலாம். சயங்கொண்டார் இவன் வட கலிங்கத்தில் பெற்ற பெருவெற்றியைப் பாராட்டிக் கலிங் கத்துப்பரணி என்ற நூலை இயற்றினார். 'கவி குமுத சந்தி ரன்' என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்ற திரு. நாராயண பட்டர் என்பவர் 'குலோத்துங்க சோழ சரிதை' என்ற காப்பியம் ஒன்று பாடியிருக்கிறார்.

திரிபுவன சக்கரவர்த்தி என்னும் பட்டம் புனைந்து கொண்டு அரசாண்ட சோழமன்னர்களுள் இவனே முதல்வன் ஆவான். இவனுக்கு 'அபயன்', 'சயதரன்,' 'சயதுங்கன்,' 'விருதராசபயங்கரன்', 'கரிகாலன்', 'இராச நாராயணன்', 'திருநீற்றுச்சோழன்', 'உபய குலோத் தமன்', எனச் சிறப்புப் பெயர்கள் உண்டு.

முதல் குலோத்துங்கன் மக்கள்

இவன் ஐம்பதாண்டுகள் செங்கோல் செலுத்தி கி. பி. 1120-ல் உயிர் துறந்தான். இவனுக்கு ஆண்மக்கள்

எழுவர் இருந்தனர். அவர்கள் எல்லோரும் இவன் பட்டத்தரசி மதுராந்தகியின் புதல்வர் ஆவர். இவ்வேந்தனுக்குச் சுத்தமல்லியாழ்வார், அம்மங்கையாழ்வார் என்னும் பெண்மக்கள் இருவர் இருந்தனர்.

விக்கிரமன் (கி. பி. 1118—1135)

இவன் குலோத்துங்கனுடைய நான்காம் புதல்வன். இவன் ஆனித்திங்களில் உத்திரட்டாதி நன்னாளில் பிறந்தவன். கி. பி. 1127-ல் ஆறும் விக்கிரமாதித்தன் இறந்த பிறகு, விக்கிரமன் வேங்கிநாட்டை மீண்டும் தன் ஆட்சிக்கீழ்க் கொண்டுவந்தான். கங்கவாடி நாட்டின் ஒரு பகுதியையும் மீண்டும் விக்கிரமன் கைப்பற்றினான். கி. பி. 1125-ல் வடவார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் வெள்ளத்தால் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. கி. பி. 1131-ல் சோழநாட்டிலும் ஒரு பஞ்சம் ஏற்பட்டது என்று கோவிலடிக் கல்வெட்டுக் கூறுகின்றது.

தில்லைத் திருப்பணி

கி. பி. 1128-ஆம் ஆண்டில் இவன் தில்லை அம்பலவாணர் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தான். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் என்பவற்றிற்குப் பொன் வேய்ந்தமையும், திருத்தேரைப் பொன் வேய்ந்து அதற்கு முத்துவடங்கள் அணிவித்து அழகு செய்ததும், இவன் ஆற்றிய அரிய திருப்பணிகளாகும். தில்லைக் கோயிலிலுள்ள நூற்றுக்கால் மண்டபமும் இவனால் கட்டப்பட்டதே. இவன் காலத்தில் பல ஊர்களில் கொட்டகாரம் என்று வழங்கப்பெற்ற மண்டபங்களும் இருந்தன. அரசன் தன் நாட்டைச் சுற்றிப் பார்த்துவருங்கால் அரண்மனை இல்லாத ஊர்களில் தங்குவதற்கு அமைக்கப்பட்டிருந்த மண்டபங்கள் கொட்டகாரங்கள் என்று வழங்கின.

விக்கிரம சோழன் 'மன்னுயிர்க்கெல்லாம் இன்னுயிர்த் தாய்போல்—தண்ணளி பரப்பித் தனித் தனிப்

பார்த்து—மண் முழுதுங் களிப்ப'வும் தன் 'கோயிற் கொற்ற வாயிற்புறத்து—மணி நாவொடுங்க'வும் ஆட்சி புரிந்த பெருமன்னன் ஆவன். ஒட்டக்கூத்தர் இவன் அவைக்களப் புலவர். அவர் இவன்மீது கலிங்கத்துப்பரணி ஒன்று பாடியுள்ளார். அது தற்பொழுது கிடைக்க வில்லை. இவனுடைய சிறப்புப்பெயர்கள் தியாக சமுத் திரம், அகளங்கன் என்பனவாம். இவன் கி. பி. 1135-ஆம் ஆண்டின் இறுதியில் இம்பர் நாட்டைவிட்டு உம்பர் நாடேகினன்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1150)

இவன் விக்கிரம சோழனின் மகன். குலோத்துங்கன் தில்லையில் முடிசூட்டிக்கொண்டான். இவன் தில்லையில் பெருவீதிகள் அமைத்தும், பற்பல மண்டபங்கள் கட்டு வித்தும் அந் நகரை அணிசெய்தான்; பேரம்பலத்தையும் பொன் வேய்ந்தான்; எழுநிலைக் கோபுரங்கள் எடுப்பித் தான்; சிவகாமகோட்டம் பெரிதாக அமைத்தான்; திருக்கோயிலில் பொன்னாலாகிய கற்பகத் தருக்களை அமைத்தான்.

கிருமிகண்ட சோழன்

வைணவர்கள் 'கிருமிகண்ட சோழன்' என்று குறிப் பிடுவது இவனையேயாகும். இவன் தான் தில்லைக் கோயிலி லுள்ள கோவிந்தராசப் பெருமாளை, மன்றிற்கு இடங்காண வேண்டித் திருமாலுக்குரிய பழைய ஆழிக்கே அனுப்பி விட்டான் என்று ஒட்டக்கூத்தர் 'தக்கயாகப் பரணி'யில் கூறுகின்றார்.

"முன்றிற் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றிற் கிடங்கண்ட கொண்டல் மைந்தன்
மரகத மேருவை வாழ்த்தினவே."

என வருஉங் கூத்தர் வாக்கை நோக்குக. இனித் திருமா லைக் கடலில் எறிந்தவன் அதிராசேந்திரன் என்று சிலர்

கூறுவது பொருந்தாது. தக்கயாகப் பரணியின் உரையா சிரியர் இதனை நிகழ்த்தியவன் இராசராச சோழன் தாதை யாகிய குலோத்துங்க சோழன் என்று தெளிவாகக் கூறி யிருப்பதும் அறியத்தக்கது.

இவன் தில்லைக் கூத்தரிடத்து எல்லையற்ற அன்புடை யவன் என்பது திருவாரூர்க் கல்வெட்டால் புலனாகின்றது. இவனுக்குத் தமிழாசிரியராகவும், இவன் அவைக்களப் புலவராகவும் இலங்கிய ஒட்டக்கூத்தர் இவன்மீது 'பிள்ளைத் தமிழ்' ஒன்றும், 'உலா' ஒன்றும் பாடியுள்ளார். அவை முறையே 'குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்' எனவும், 'குலோத்துங்க சோழனுலா' எனவும் வழங்கி வருகின்றன. இவ் வேந்தன் காலத்திலிருந்த மற்றொரு புலவர் தண்டியாசிரியர். இவன் பல புலவர்களையும் புரந் தமை,

"கற்றவர் குடிபுடை சூழ்
கற்பக இள வனமே."

என்னும் கூத்தர் வாக்கினால் தெரிகிறது. இவனுக்கு **அநபாயன்** என்றொரு பெயரும் உண்டு. இவன் கி. பி. 1150-ஆம் ஆண்டில் இறக்கம் எய்தினன்.

இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146—1163)

இவன் குலோத்துங்கன் புதல்வன். இவன் 'தந்தை யிலோர்க்குத் தந்தையாகியும் தாயிலோர்க்குத் தாயாகியும் மைந்தரிலோர்க்கு மைந்தராகியும் மன்னுயிர்கட்கு உயிரா கியும்' இருந்து அரசாண்டுவந்தான். இவன் தென்மொழி, வடமொழி இரண்டிலும் நிறைந்த புலமையுடையவன். இவனை 'முத்தமிழுக்குந் தலைவன்' என்றும், 'இராச பண் டிதன்' என்றும் மெய்க்கீர்த்தி கூறுகிறது. இவன், "தொல்லைத் திருமரபிற் கெல்லாந் தொழுகுலமாந் தில்லைத் திருநடனஞ் சிந்திப்பவன்," என்று கூத்தர் கூறுகிறார். தந்தை நாளில் மனம் புண்பட்ட வைணவர்களிடம் பரிவு காட்டி ஆதரவளித்ததுபற்றியே 'விழுந்த அரி சமயத்தை

யும் மீள எடுத்தனன்' என்று இவன் மெய்க்கீர்த்தி கூறு கின்றதுபோலும். இவன் 'காவிரிக்குச் சோணாடு வாழ வழியிட்ட' பெருமையுடையவன்.

இம்மன்னன் பழையாறையின் வடகிழக்குப் பகுதியில் இராசராசேச்சுரம் என்ற சிவன் கோயிலை எடுப்பித்தான். இவ்வூர் தற்பொழுது தாராசுரம் என வழங்குகிறது. இவன் அவைக்களப்புலவராக விளங்கியவர் ஒட்டக்கூத்தர். இவன்காலத்தில் கேசவசுவாமி என்ற வடமொழிப் புலவர் ஒருவரும் இருந்தார்.

இராசராசனும் பாண்டிநாடும்

இராசராசன் காலத்தில் மதுரையை ஆண்டுகொண் டிருந்த பராக்கிரம பாண்டியனுக்கும் அவன் தாயத்தா ளுகிய குலசேகர பாண்டியனுக்கும் பாண்டிநாட்டின் ஆட்சி யுரிமைபற்றிப் போர் மூண்டது. பராக்கிரம பாண்டியன் சிங்கள அரசன் பராக்கிரமபாகுவைத் தனக்கு உதவி புரியுமாறு வேண்டிக்கொண்டான். ஆனல், அவ்வுதவி வருவதற்குள், குலசேகரபாண்டியன் பராக்கிரம பாண்டி யனையும் அவன் மனைவி மக்களையும் கொன்று மதுரையில் அரசுகட்டில் ஏறினன். இலங்கையிலிருந்து வந்த தண்ட நாயகன் பாண்டிநாட்டைப் பிடித்துக் கொலையுண்ட பராக்கிரம பாண்டியனைச் சேர்ந்தோர்க்கு அளிக்கஎண்ணி இராமேசுவரம் முதலான ஊர்களையும், இறுதியில் மதுரை யையும் கைப்பற்றி, கொலையுண்ட பராக்கிரமபாண்டியன் புதல்வன் வீரபாண்டியனுக்கு ஆட்சியுரிமையை நல்கினன். ஆனல், குலசேகரபாண்டியன் மீண்டும் மதுரையைக் கைப்பற்றி, வீரபாண்டியனை மதுரையிலிருந்து துரத்தினன். இலங்கைத் தண்டநாயகன் மறுமுறையும் இலங்கையி லிருந்து துணைப்படைகளைப் பெற்று, மீண்டும் வீரபாண்டி யனை மதுரையில் அரியணையில் அமர்த்தினன். இம் மன்னன் கி. பி. 1163-ல் இவ்வுலகவாழ்வை நீத்து விண் ணுலகம் புகுந்தான்.

இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163—1178)

இவன் விக்கிரமசோழனின் பேரன். இவனுடைய பிள்ளைத்திருநாமம் 'எதிரிலிப் பெருமாள்' என்பது. இவன் காலத்தில் துணைவேண்டிய குலசேகர பாண்டியனுக்குப் படையுதவி சிங்களவரை முறியடித்து, மூன்றும் முறையாக மதுரை ஆட்சியைக் குலசேகரன் கைக்கொள்ளுமாறு செய்தான். இராசாதிராசன் ஈழத்தின்மீதும் படையெடுத்துப் பல ஊர்களை அழித்தான். ஈழமன்னன் பராக்கிரமபாகு இதன்பிறகு குலசேகரபாண்டியனை உற்ற நண்பனாக ஏற்றுக்கொண்டான். குலசேகரன் இராசாதிராசனுக்கு எதிராக நடக்கவும் தலைப்பட்டான். இராசாதிராசன் மதுரைமீது படையெடுத்துச் சென்று, குலசேகரனைப் போரில் புறங்கண்டு, வீரபாண்டியனுக்குப் பாண்டி நாட்டை அளித்தான். இராசாதிராசனுக்குக் கரிகாலன் என்ற சிறப்புப்பெயர் உண்டு. இவன் கி. பி. 1178-ல் இறந்தான்.

மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178—1218)

இவன் இரண்டாம் இராசராசனின் புதல்வன். இவன் காலத்தில் வீரபாண்டியன் ஈழத்தரசன் பராக்கிரமபாகுவுடன் நட்புரிமை பாராட்டினன். அதேசமயம் குலசேகர பாண்டியன் மகன் விக்கிரம பாண்டியனும் குலோத்துங்கனின் உதவியை நாடினான். இவனும் வீரபாண்டியனைப் போரில் புறங்கண்டு மதுரையையும், பாண்டி நாட்டையும் விக்கிரம பாண்டியனுக்கு அளித்தான். சேரனின் துணைகொண்டு மீண்டும் விக்கிரமபாண்டியனை எதிர்த்த வீரபாண்டியனைக் குலோத்துங்கன் நெட்டூரில் முறியடித்தான். குலோத்துங்கன் ஈழநாட்டின்மீதும் படையெடுத்துப் பல வெற்றிகள் பெற்றான்.

குலோத்துங்கன் 1194-ஆம் ஆண்டிற்கு முன்னர்க் கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அங்குத் தன்னாட்சி நிலைபெறச் செய்தான். கி. பி. 1194-க்கும் 1197-க்கும் இடையில் இவன் தெலுங்குச் சோழரை

வென்று வாகைசூடி அவர்களிடம் சிலகாலம் இருந்த காஞ்சியையும் மீட்டான்.

விக்கிரமபாண்டியன் இறந்தபின்னர் அவன் மகன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி. பி. 1190-ல் மதுரையில் அரசுகட்டில் ஏறினான். அவன் குலோத்துங்கனுக்குப் பகைவனாக மாறவே, குலோத்துங்கன் மதுரைமீது படையெடுத்துச்சென்று பாண்டியனை மட்டியூர், கழிக்கோட்டை என்னுமிடங்களில் புறங்கண்டு, 'வழுதியர் தம் கூடமண்டபம் கழுதை ஏரிட உழுது புகழ்க்கதிர் விளையக் கவடி' விதைத்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகு தன்பால் அடைக்கலம் புகுந்த சடையவர்மன் குலசேகரனுக்கு மீண்டும் பாண்டி நாட்டை அளித்தான்.

இவன் காலத்தில் சோழராச்சியம் தெற்கே குமரிமுனையிலிருந்து வடக்கே வேங்கிநாடுவரை பரவியிருந்தது. சேக்கிழாரைக் கொண்டு பெரியபுராணம் பாடுவித்தவன் இவனே என்பர் சிலர். கி. பி. 1201, 1202-ஆம் ஆண்டுகளில் தொண்டைமண்டலத்தில் வெள்ளத்தால் பஞ்சம் உண்டாயிற்று. இவனது ஆட்சியின் 23, 24-ஆம் ஆண்டுகளில் மழையின்மையால் நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. இவனது ஆட்சியின் 22-ஆம் ஆண்டில் தோன்றிய ஒரு கலகத்தால் சைவமடங்கள் பல அழிக்கப்பட்டன என்று தெரிகிறது. இவன் கி. பி. 1218-ல் இவ்வுலக வாழ்வை நீத்தான். சோழமன்னர்களில் பெருவேந்தனாக இறுதியில் இலங்கியவன் இவனேயாவன்.

மூன்றும் இராசராசன் (கி. பி. 1216—1256)

கி. பி. 1216-ல் இளவரசுப்பட்டம் கட்டப்பெற்ற மூன்றும் இராசராசன், கி. பி. 1218-ல் மூன்றும் குலோத்துங்கன் இறந்தவுடன் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக்கொண்டான். இவன் காலத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இருமுறை சோழநாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கினான். கி. பி. 1219-ல்

சுந்தரபாண்டியன் சோழநாட்டின்மீது படையெடுத்துப் போரில் இராசராசனை முறியடித்தான். 'தஞ்சையையும் உறந்தையையும் செந்தழல் கொளுத்தி'னான். சோழன் கரிகாற் பெருவளத்தான் தன்மீது 'பட்டினப்பாலை' பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர்க்கு வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபம் ஒன்று நீங்கலாகப் பிற மாளிகைகளையும், மண்டபங்களையும், ஆடரங்குகளையும் இடித்தான்; நீர்நிலைகளை அழித்தான். தோல்வியுற்ற இராசராசனுக்குத் துணையாக ஹொய்சல மன்னன் இரண்டாம் வல்லாளனும், அவன் மகன் வீரசிம்மனும் வந்ததால், சுந்தரபாண்டியன் மீண்டும் சோழநாட்டை இராசராசனுக்கு வழங்கினான். இரண்டாம் வல்லாளன் இத்துணை உதவி செய்ததற்குக் காரணம் அவன் சோழர்குலப் பெண்மணி ஒருத்தியை மணந்திருந்ததேயாம்.

இராசராசனது ஐந்தாம் ஆட்சிஆண்டில் ஒரு கலகம் நிகழ்ந்தது என்றும், அதில் அவன் ஊர்க் கணக்குப் புத்தகங்களையும், நில உரிமைப் பத்திரங்களையும் பிறவற்றையும் இழக்கும்படி நேர்ந்தது என்றும் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவனுக்கடங்கிய குறுநிலமன்னர்களாகவிருந்த கோப்பெருஞ்சிங்கனும், வாணகோவரையனும் இராசராசனை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். கி. பி. 1226-ல் ஹொய்சல அரசன் வீரசிம்மன் இவர்களை அடக்கினான்.

கி. பி. 1219-லிருந்து பாண்டியனுக்குத் திறை செலுத்திவந்த இராசராசன் கி. பி. 1231-ல் திறை கொடுப்பதை நிறுத்தவே சுந்தரபாண்டியன் போருக்கெழுந்தான். அவன் இராசராசனைத் தோற்கடித்ததோடு அவன் உரிமை மகளிரையும் சிறைப்பிடித்தான். 'கத்திய கர்ணாமிர்தம்' என்ற கன்னட நூலொன்று தோல்வியுற்ற இராசராசன் ஹொய்சல அரசனது உதவிபெறும் பொருட்டு வடபுலம் நோக்கிச் சென்றானென்றும், பல்லவர்குலச் சிற்றரசனாகிய கோப்பெருஞ்சிங்கன் அப்பொழுது அவனைத் தெள்ளாற்றில் தோற்கடித்துச் சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான் என்றும், அதனையறிந்த ஹொய்சலமன்

னன் வீரநரசிம்மன் கி. பி. 1232-ல் படையெடுத்துவந்து கோப்பெருஞ்சிங்கனை வென்று இராசராசனைச் சிறைமீட்டான் என்றும், வீரநரசிம்மன் காவிரிக்கரையிலுள்ள மகேந்திர மங்கலத்தில் சுந்தரபாண்டியனை முறியடித்தான் என்றும், தோற்ற சுந்தரபாண்டியன் பணிந்து கப்பஞ் செலுத்தினன் என்றும், வீரநரசிம்மன் சோழநாட்டை இராசராசனுக்களித்து அதனை ஆண்டு வருமாறு செய்தான் என்றும் கூறுகிறது. இவ்வாறு பன்முறையும் வீரசிம்மன் இராசராசனுக்கு உதவியதற்குக் காரணம் இவன் வீரநரசிம்மன் மகளை மணந்திருந்ததேயாம்.

இராசராசன் காலத்தில் இராச்சியத்தின் பரப்பு சுருங்கியது. இராசத்துரோகம், சிவத்துரோகம், நாட்டுத் துரோகம் ஆகிய குற்றங்கள் மலிந்தன. குற்றங்களுக்காகத் துரோகிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டதைப் பல கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இராசராசன் காலத்தில்தான் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் 'சிவஞானபோதம்' என்ற ஒப்புயர்வற்ற சித்தாந்த சாத்திர நூலை எழுதினர். இவன் கி. பி. 1256-ல் இறைவன் திருவடி நீழலை எய்தினன்.

மூன்றும் இராசேந்திரன் (கி. பி. 1246—1279)

இவன் மூன்றும் இராசராசனின் புதல்வன். இவனது மெய்க்கீர்த்தி வடமொழியில் வரையப்பெற்றுள்ளது. இவன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனைப் போரில் வென்று அவனைத் தனக்குக் கப்பஞ் செலுத்தும்படி செய்தான். வீரநரசிம்மனுக்குப் பின் அரசுகட்டில் ஏறிய அவன் மகன் வீர சோமேசுவரன் இராசேந்திரன் ஆட்சியின் முற்பகுதியில் இவனுக்குப் பகையாக இருந்தான். நெல்லூரிலிருந்து ஆண்ட தெலுங்குச் சோழனை திக்கநிருபதி எனப்படும் கண்டகோபாலன் இராசேந்திரனுக்கு உற்ற நண்பனுயிருந்தான். இராசேந்திரன் தொண்டைமண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டுவந்த சம்புவராயனைப் போரில் வென்முன்.

பாண்டிநாட்டில் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்குப் பிறகு முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1251-ல் அரியணை ஏறினான். அதே ஆண்டில் வீர சோமேசுவரன் இராசேந்திரனுடன் மீண்டும் நட்புரிமை பாராட்டினான். திருச்சி மாவட்டத்திலுள்ள கண்ணனூரைத் தலைநகராகக்கொண்டு வீர சோமேசுவரன் புதல்வன் வீர ராமநாதன் ஆட்சி புரிந்தமையால் திருச்சி மாவட்டத்தின் பெரும்பகுதியை இராசேந்திரன் இழந்தான். மூன்றும் இராசராசன் இறுதிக்காலத்திலேயே வடவார்க்காடு, செங்கற்பட்டு, சித்தூர், நெல்லூர் மாவட்டங்கள் சோழர்கள் ஆட்சியினின்றும் நழுவின.

கி. பி. 1257-ல் சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து இராசேந்திரனைப் போரில் புறங்கண்டு தனக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகச் செய்தான். இவனுக்கு உதவிபுரிய வந்த ஹொய்சல அரசன் வீர சோமேசுவரனையும் சுந்தர பாண்டியன் தோற்கடித்ததோடு, கி. பி. 1264-ல் கண்ணனூரில் நிகழ்ந்த போரில் அவனை வானுலகுக்கு அனுப்பினான். கி. பி. 1257-லிருந்து கி. பி. 1279 வரை சோழநாடு பாண்டியப் பேரரசின்கீழ் அடங்கி அதற்குத் திறை செலுத்தும் நாடாகவிருந்தது. கி. பி. 1261-லிருந்து சோணாட்டின் எல்லை மிகவும் சுருங்கியது. கி. பி. 1279-ல் இராசேந்திரன் இறந்த பின்னர், சோழநாடு பாண்டிய இராச்சியத்தோடு சேர்க்கப்பெற்றுப் பாண்டி வேந்தரது ஆட்சிக்குள்ளாயிற்று. சோழர் தனியாட்சியும் முடிவுற்றது.

சோழர்கள் காலத்தில் இருந்த நாட்டின்நிலைமை
அரசியல்முறை

சோழர்கள் ஆட்சிமுறையைத் ‘தனியரசன் ஆட்சி’ என்றே சொல்லவேண்டும். அவர்கள் உண்மை நெறியினின்றும் பிறழமாட்டார்கள். சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராசராசன், இராசேந்திரன் ஆகியவர்கள் ஆண்டு வந்த காலத்தில்

மொத்தம் ஒன்பது மண்டலங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வளநாடுகளின் பகுதிகளான நாடுகளுட் சில, கூற்றங்கள் எனவும் வழங்கி வந்தன. ஒவ்வொரு நாடு அல்லது கூற்றம் பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அரசன் விருதுகளும் அரச குடும்பமும்

சோழமன்னர்கள் தங்கள் கல்வெட்டுக்களில் தங்களைப் பெரும்பாலும் உடையார் என்றே கூறிக்கொள்ளுகிறார்கள். ஆயினும், சில கல்வெட்டுக்களில், அவர்கள் சக்கரவர்த்திகள் என்றும், கோனேர் இன்மைகொண்டான் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்றழைக்கப்பட்டது முதற் குலோத்துங்கன் காலத்திலிருந்துதான்.

அரச குடும்பத்தின் ஆதரவில் பல வகையான வேலைக்காரர்கள் இருந்து வந்தனர். அவர்கள் வேளம் எனப்படும் பல பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் பலர் பெண்மக்கள் ஆவர். அரச குடும்பத்தைச் சேர்ந்த தேவியர் தங்கள் கணவரோடு வேட்டைக்கும் போர்க்களத்துக்கும் செல்வதுண்டு என்பது "பிடியின் மேல் வரு பிடிக்குலம் அநேகமெனவே பெய்வளைக்கை மடமாதர் பிடி மீதின் வரவே" எனக் கலிங்கத்துப்பரணி கூறுவதால் அறியலாகும். அவர்கள் ஆடல், பாடல், சித்திரம் வரைதல், செய்யுள் இயற்றல் முதலியவற்றில் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தனர்.

தந்தைக்குப்பின் மகன் அரசை அடைவது முறைமையாக இருந்தது. சோழமன்னர்கள் சில சமயம் தங்கள் மக்களில் வீரமும் திறமையும் பெற்றவனுக்கே (அவன் மூத்தவனாயில்லாமலிருந்த போதிலும்) அரசுரிமையை வழங்கினார்கள். சக்கரவர்த்தி முடி சூட்டப்பெறும் காலத்தில் இளவரசனும் அபிடேகம் செய்யப்பெற்றான். சோழமன்னர் பெரும்பாலும் தாங்கள் இளவரசராக முடி

சூட்டப்பெற்ற காலத்திலிருந்தே தங்கள் ஆட்சி ஆண்டைக் கணக்கிட்டார்கள்.

அரசியல் நிர்வாகம்

அரசன் கடவுளின் கூறுகவே கருதப்பட்டான். அவன் அமைச்சர்களைக் கலந்தே ஆட்சிசெய்துவந்தான். அவ்வாறு அரசுப் பொறுப்பை அரசனுடனிருந்து தாங்கியவர்கள் 'உடன் கூட்டம்' எனவும், 'கூட்டப்பெருமக்கள்' எனவும் படுவர். அவர்கள் எப்பொழுதும் அரசனுடன் சேர்ந்தே இருப்பார்கள். ஈதன்றி அரசியலை நடத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கருமிகள் என்றும், பணி மக்கள் என்றும் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தனர். கருமிகள் எனப்படும் அதிகாரிகள், பெருந்தரம், சிறுதரம் என இருவகைப்படுவர். அவ்வதிகாரிகளுக்கு அவரவர் தரத்துக்குத் தக்க நிலமோ, அதன் வரும்படியோ கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் ஆயுட்காலம் முடியுமட்டும் துய்க்கலாம்.

அரசன் பல சமயங்களில் நாட்டைச் சுற்றிப் பார்வையிட்டான். அக்காலங்களில் குடிகள் தங்கள் குறைகளை அரசனிடம் முறையிட்டுக்கொள்ள வாய்ப்புகள் இருந்தன. அரசனிடம் உத்தரவு பெறவேண்டிய பொருளைப் பற்றி உடன்கூட்டத்து அதிகாரிகளுள் ஒருவன் விண்ணப்பஞ் செய்வான். அதைக்கேட்ட அரசன், உடனேயோ, பின்பு அமைச்சர்களைக் கலந்தாலோசித்தோ முடிவு செய்து வாய்மொழியால் உத்தரவை அளித்து அதை நிறைவேற்றிவைக்க 'ஆணத்தி'யையும் குறிப்பிடுவான். அதைக் கேட்டிருந்த 'திருவாய்க் கேள்வி' என்னும் அதிகாரி சொல்ல ஓலை எழுதும் அதிகாரியான 'திருமந்திர ஓலை' அதை எழுதி, 'ஓலை நாயகம்' என்னும் அதிகாரியைக் கொண்டு ஒப்பிட்ட பிறகே மற்ற அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். அந்த ஓலைக் கொடையைத் தெரிவிப்பதாக இருந்தால், அதைத் 'தீட்டு'ப்படிப் 'புரவுவரி' என்போர் 'வரிப்பொத்தகம்', 'வரிப்பொத்தகக் கணக்கு'

ஆகியவற்றில் எழுதி, 'வரியிலீடு', 'முகவெட்டி', 'கண்காணி' ஆகிய அதிகாரிகளுக்குக் காட்டிப் 'பட்டோலை' அதிகாரியைக்கொண்டு நாட்டார்க்குத் திருமுகம் அனுப்புவார்கள்.

நீதி வழங்கும் முறை

'நியாயத்தார்' எனப்படும் அதிகாரிகள் கூடி நீதி செலுத்தினர். அவர்கள் கூடுமிடம் 'தர்மாசனம்' என்று வழங்கப்பெற்றது. நியாயத்தார் முன்னிலையில் ஒருவன் 'முறைப்பாடு' செய்தவுடன், அவர்கள் அம்முறையீடு நியாயமானதா என்பதை முதலில் ஆராய்ந்து, பிறகு முறையீடு செய்தவனைத் தன் கட்சியை ஆட்சி (வழக்கம்) ஆவணம் (பத்திரங்கள்) 'அயலார் தங்கள் காட்சி' (சாட்சி) ஆகிய மூன்றனுள் ஒன்றாலோ பலவற்றாலுமோ நிரூபிக்குமபடி சொல்லுவார்கள். பிறகு மற்றவன் வழக்கையும் அவ்வாறே கேட்டு ஆய்ந்து உண்மை தெளிந்து முடிவு கூறுவார்கள்.

பிறர் பொருளைக் கவர்தல், பிறன்மனை சேரல், கூடலேகை செய்தல் (கள்ளக் கையெழுத்திடல்) ஆகியவை பெரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. வேண்டுமென்றே செய்யப்படாத கொலைக்குக் கொலை வாங்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. அப்படிப்பட்ட கொலைகளுக்கு நீதிமன்றத்துக்குச் செல்லாமலேயே கழுவாய் செய்யும் உரிமை இருந்தது. பெரும்பாலும் அப்படிப்பட்ட குற்றங்களுக்குக் கோயில்களுக்கு நிவந்தம் அளிக்குமாறு தண்டனையளிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, வேட்டைக்குச் சென்ற ஒருவன், எய்த அம்பு குறிதவறி ஓர் உழவன் மேற்பட்டு அவன் இறந்ததற்காக வேட்டையாடியவன் திருக்கோயிலில் விளக்கு எரிக்க ஏற்பாடுசெய்யுமாறு பணிக்கப்பட்டான். சில பெரிய குற்றங்களுக்குக் குற்றவாளிகளைக் கழுதைமேல் ஏற்றி ஊரைச்சுற்றி வரவும் பணித்தனர். அரசத்துரோகக் குற்றங்களை அரசனே நேரில் கேட்டு முடிவுசெய்தான். அரசத்துரோகிகள்

ஒறுக்கப்பட்டதுடன், அவர்களுடைய உடைமைகள் பறி முதல் செய்யப்பட்டு அரசன் ஆணையால் விற்கப்பட்டன.

கருமவினைஞர்களுக்குப் பட்டம் அளித்தல்

அரசாங்கத்தில் வேலை பார்த்த பலருக்கு அரசன் பட்டங்கள் வழங்கினான். மாராயன், பேரரையன் என்பன அப்பட்டங்களுள் சிலவாகும். ஒவ்வொரு துறையிலும் மேம்பட்டவர்களுக்கு வாச்சிய (வாத்ய) மாராயன், நித்த (நிருத்த)ப் பேரரையன் என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. மாராயன் மனைவியை மாராசி என்று வழங்கினர். அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும் விளங்கிய அதிகாரிகளுக்குத் தன்னுடைய விருது ஒன்றுடன் 'மூவேந்த வேளான்' எனனும் பட்டத்தை அரசன் நல்கினான். அவர்கள் 'இராசேந்திர சோழ மூவேந்தவேளான்,' 'அதிகாரிகள் மூவேந்த வேளான்' என்று வழங்கப்பெறுவார்கள். அவர்கள் மனைவியர் 'அதிகாரிச்சி' என்று குறிக்கப்பட்டனர்.

படைகளும் அவற்றின் வகைகளும்

அக்காலத்தில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய மூவகைப் படைகள் இருந்தன. ஒவ்வொரு படையும் பல பிரிவுகளாக அமைந்திருந்தது. வில்லிகள் என்றும், வாள்பெற்ற கைக்கோளர் என்றும், விட்டேறு என்றும் கல்வெட்டுக்களில் காணப்படுவதால், அவர்கள் சிறப்பாக வில், அம்பு, வாள், வேல் முதலிய கருவிகளாலேயே போர் நிகழ்த்தினர் என்பது புலனாகும். துப்பாக்கி, பீரங்கி முதலியன அக் காலத்தில் இல்லை. படைகள் நாட்டின் பல பகுதிகளிலும், கடகங் (படை வீடு)களில் நிறுவப்பட்டு, அமைதியைப் பாதுகாத்து வந்தன. இவைகள் 'நிலைப்படை' என்று கூறப்படும். இவற்றையன்றி உற்றிடத்து உயிர் வழங்கும் வேளைக்காரப் படைகளும் இருந்தன. 'இன்னவாறு செய்வேன், செய்யாதொழியின் இன்ன கேடுறுவேன்,' என

வஞ்சின மொழிந்து, சொன்னவாறு நடப்பவர் வேளைக்காரர். கல்வெட்டுக்களிலிருந்து பிராமணர்களும் போர்த் தொழிலை மேற்கொண்டு பல வெற்றிகளைப் பெற்றனர் என்று தெரிகிறது. அக்காலத்தில் கப்பற்படை ஒன்றும் இருந்தது. ஈழநாடு, கடாரம் ஆகியவற்றைக் கொண்ட படையெழுச்சிகளால், தமிழ்நாட்டினர் அலைகடலில் கலத்தைச் செலுத்திச் செல்வதில் சளைத்தவர்களல்ல என்பது புலனாகும். ஆயினும், அக்காலத்திலிருந்த கப்பற்றொழிலைப்பற்றிய நூலோ குறிப்போ ஒன்றும் கிடைக்கவில்லை.

போர்நிகழ்த்திய முறை

சோழர்கள் நிகழ்த்திய போர்ச்செயல்கள் அரசநீதியில் உள்ள விதிகளுக்கேற்ப நடந்தனவென்று கூறமுடியாது. கைப்பற்றிய நாட்டைச் சூறையாடி, நகரை எரியூட்டிப் பாழ்படுத்திப் பல கொலைகளும் தீச்செயல்களும் புரிந்து திறைகொள்வது வழக்கம் என்றே நுவலலாம். போர்வீரர்கள் போர்க்களத்தினின்று புறங்காட்டி ஓடாமல், 'பழியொடு வாழ்வதிற் சாவது சால நன்று' என்ற கொள்கையைக் கொண்டவர்களாக உயிருள்ளவரையில் போர்புரிந்து வெற்றித்திருவை மணம் புரிவார்கள், அல்லது வீரசுவர்க்கம் புகுவார்கள்.

கிராம சபைகள்

நாடு காவலை அரசன் நடத்திவந்தாலும், பொதுக் காரியங்களிற் பலவற்றைக் கிராமங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்த மக்களே கவனித்து வந்தார்கள். பெரும்பாலும் ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒரு சபை இருந்தது. சிற்றூரில் உள்ள வயதுவந்த ஆண்மக்கள் யாவரும் அச்சபையின் உறுப்பினராயினும், தேர்ந்தெடுத்த ஆளுங் குழுவினரே ஆட்சியை நடத்திவந்தனர்.

அந்தணர்கள் குடியேறிய சதுர்வேதிமங்கலத்தில் இவ்வாறு இருந்த குழுவுக்குச் 'சபை' என்றே பெயர். அதைப்போலவே வைதிகசமயத்தையும், சமணசமயத்

த்தையும் பின்பற்றியவர்கள் வாழ்ந்த இடங்களில் தேவதானத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பள்ளிச் சந்தத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தனித்தனிச் சபைகள் இருந்தன. வணிகர் முதலானோருக்கும் 'வளஞ்சியத்தார்', 'மணிக் கிராமத்தார்' என்பனபோன்ற தனிச் சபைகள் இருந்தன.

சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளவற்றைப் போலவே ஒவ்வொரு நாட்டுக்கும் 'நாட்டார்' என்ற சங்கம் இருந்தது. கிராமச்சபைகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் 'வாரியம்' என்று பெயர்.

உறுப்பினராகத் தேர்தற்குரியார்

இச் சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமிடத்து, காணிக்கடன் செலுத்தற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்கு தேர்ந்து அவற்றைப் பிறர்க்கு உணர்த்தவும் வல்லராய், காரியம் நிறைவேற்றுவதிற் திறமை வாய்ந்தவராய், முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபத்தைந்துக் குட்பட்ட ஆண்டினராய், நல்ல வழியில் ஈட்டிய பொருளும் தூய வாழ்க்கையும் பெற்றவராய், மூன்று ஆண்டுக்கு உட்பட்டு எந்த வாரியத்திலும் உறுப்பினராக இருந்திராதவராய் இருப்பவரே தேர்ந்தெடுக்கத் தக்கவராவர். இன்னும் அரைக்கால் வேலி நிலமே உடையவராய், ஒரு மறையைக் கற்றவராய், ஒரு பாடியத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் வல்லவராய் இருப்பவரும் உறுப்பினராகத் தேர்ந்திடற்கு உரியவராவர்.

உறுப்பினராகத் தேர்ந்திடத்தகாதவர்

எந்த வாரியத்திலாவது உறுப்பினராகவிருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், அவர்க்குச் சிற்றன்னை, பெரியன்னை, அத்தை, மாமன் என்றின்னவர் மக்களும், அவர்தம் மக்களும், தந்தையும், தாயுடன் பிறந்தவன், தந்தையோடு பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியொடு

பிறந்தவன், பெண் கொடுத்த மாமன், உடன் பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் என்றிவர்களும், இன்னவர் சுற்றத்தினரும் தேர்ந்தெடுக்கத் தகாதவராவர். இவர்களை யன்றி, நெருங்கிய சுற்றத்தினளாகிய ஒரு பெண்ணைத் தகாப்புணர்ச்சி செய்தார் என்றூராவது, அந்தணர் கொலை, கள்ளுண்டல், களவாடல், ஆசான் மனைவியைக் கூடல் என்ற இவைகளில் எவையேனும் செய்தவரென்றூவது கிராமக் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், அவர்க்கு உறவினரும், பிறர் பொருளை வவ்வினோரும், கூடலேகை செய்தவரும், குற்றங்களுக்குக் கழுதைமீது ஏற்றப்பட்டவரும், இழிகுலத்தவரின் கூட்டுறவு காரண மாகச் சாதியினின்றும் விலக்குண்டு கழுவாய் செய்யப் பெறாதவரும் தேர்ந்திடத்தக்கவரல்லர். இன்னும் எத் தகைய கையூட்டுக் (லஞ்சம்) கொண்டாரும், கிராமத் துரோகி எனக் கருதப்பட்டவரும், பொது மகளிரோடு இணைவிழைச்சு செய்தோரும், கழுவாயால் தூயவரான போதிலும் வாணாள் இறுதிவரையும் உறுப்பினராகத் தேர்ந்திடத்தகாதவராவர்.

உறுப்பினராகத் தேர்ந்திடுமாறு

மேற்கண்ட விதிகளுக்கிணங்க உறுப்பினரைக் 'குட வோலை' வாயிலாக ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பார்கள். ஒவ்வொரு ஊரையும் முப்பது பகுதிகளாகப் பகுத்து ஒவ் வொரு பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் தகுதியுடைய ரெனத் தமக்குத் தோன்றும் ஒருவர் பெயரைத் தனித் தனி ஓலையில் எழுதி, எழுதிய ஓலைகளை ஒருங்கு சேர்த்து, இன்ன பகுதியைச் சார்ந்த ஓலை என்பது விளங்க, அப் பகுதியின் பெயர் எழுதிய வாயோலை பூட்டிக் கட்டிக் குடத்தில் இடுவர். இவ்வாறு முப்பது பகுதியினரும் இட்டபின்னர், ஒரு முதியார், அங்கு நடைபெறுவது இன்னதென்று அறியாத ஒரு சிறுவனைக் கொண்டு அக் குடத்தினின்றும் ஓர் ஓலைக்கட்டினை எடுப்பித்து, அதனை அவிழ்த்துப் பிறிதொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற் றுள் ஓர் ஓலையை அவனைக்கொண்டு எடுக்கச்செய்து,

அதனைத் தாம் வாங்கி, அங்கிருக்கும் கரணத்தான் கையில் கொடுப்பர். அவன் அதனையேற்று அதன்கண் எழுதப் பெற்றுள்ள பெயரை வாசிப்பான். அங்கிருக்கும் மற்றும் பலரும் அவ்வோலையைப் படித்திடுவர். பின்னர் அப்பெயர் ஓர் ஓலையின்கண் எழுதிக்கொள்ளப்படும். இவ்வாறு மற்றைய கட்டுக்களையும் ஒன்றன்பின் ஒன்றாக முன்போல் எடுப்பித்துப் பிரித்துக் குடத்திட்டுக் குலுக்கி, முன்போல் ஒவ்வோர் ஓலையாக எடுக்கச் செய்து எழுதிக்கொள்வார்கள்.

சபையின் அலுவல்கள்

மேற்கூறியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது உறுப்பினர்களில் கல்வியிலும், ஆண்டிலும் மூத்தார் பன்னிருவரைச் சம்வத்சரவாரியாகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் சிலர் தோட்டவாரியராகவும், ஏரிவாரியராகவும், சிலர் பொன்வாரியராகவும், சிலர் பஞ்சவாரியராகவும் தேர்ந்திடப்படுவர். இதனால் கிராமசபை, சம்வத்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம் என்ற ஐந்து உட்கழகங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிற்று என்று தெரிகிறது. இவர்களை ஆளுங்கணத்தார் எனவும் பெருமக்கள் எனவும் கூறுவர். இவர்கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவர்களுள் நீதி விசாரணை செய்வதும் அறநிலையங்கள் நன்கு நடைபெறுகின்றனவா என்று பார்ப்பதும் சம்வத்சரவாரியரது கடமையாகும். ஏரி முதலிய நீர்நிலைகளைப் பழுதுறுமற் பாதுகாத்தலும், விளைச்சலுக்குவேண்டிய நீரைப் பாய்ச்சுவித்தலும் ஏரிவாரியக்காரரும், நிலத்தைப் பொறுத்தனவற்றைத் தோட்டவாரியக்காரரும் மேற்கொண்டிருந்தனர். பல்வகையாலும் வாங்கப்பட்ட பொற்காசு செப்புக்காசுகளை ஆராய்வது பொன்வாரியக்காரர் பொறுப்பாக இருந்தது. பஞ்சவாரியக்காரரது கடமை இன்னதெனத் தெரியவில்லை. இச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் எனப்படுவான்.

வரிகள்

அரசாங்கத்தின் தலையாய வருமானம் நிலவரியாகும். இது காணிக்கடன் என்று வழங்கப்பட்டது. இக்காணிக் கடன் நெல்லாகவேனும், பொன்னுங் காசுமாகவேனும் செலுத்தப்பட்டது. விளைவில் மூன்றில் ஒருபங்கு நில வரியாகத் தண்டப்பட்டது. நிலவரியைத் தவிரக் குடிகள் வேறு பல 'சில்லிறை'களையும் கொடுத்து வந்தனர். அவை பொதுவாக 'ஊரிடு வரிப்பாடு' என்று கூறப்படும். கண்ணாலக்காணம், குசக்காணம், நீர்க்கூலி, மீன்பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நாடுகாவல், உல்கு, ஈழம் பூட்சி என்பன அவற்றுட் சில. கடன், கூலி, இறை, பாட்டம், பூட்சி என்பன வரிகளை உணர்த்தும் சொற்களாம். கண்ணாலக்காணம் என்பது திருமண நாளில் மணமகனும் மணமகளும் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய அரைக்கால் பணமாகும் என்று ஈரோட்டிலுள்ள முதற்பராந்தகன் கல்வெட்டொன்று கூறுகின்றது. உல்கு என்பது சுங்கவரியாகும். ஈழம் பூட்சி என்பது கள் இறக்குவதற்குச் செலுத்தவேண்டிய வரி. தறியிறை, தட்டாரப் பாட்டம், செக்கிறை, வண்ணாரப்பாறை என்பன அவ்வத்தொழிலைச் செய்பவர்கள் கொடுக்கவேண்டிய தொழில் வரியாகும்.

சில சமயங்களில் குடிகள் வறுமையாலோ வேறெக் காரணத்தாலோ வரி செலுத்த இயலாமல் ஊரைவிட்டு வெளியூர்களுக்குச் செல்வதும் உண்டு. ஊரைத் துறந்து வெளியில் செல்லாதவர்களைச் சில காலங்களில் படையிலார் நீரில்போட்டும், வெயிலில் நிறுத்தியும் பல வேதனை செய்து வசூல் செய்திருக்கிறார்கள். மூன்றும் ஆண்டு தொடங்கியும் கடந்த ஈராண்டிற்கும் நிலவரி கொடாதவர் நிலங்கள் ஊர்ச்சபையாரால் பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்பட்டன. அவ்வாறு விற்றதால் கிடைத்தபொருள் அரசாங்கத்தில் சேர்ப்பிக்கப்பட்டது.

நில அளவு

சோழ இராச்சியம் முழுமையும், முதல் இராசராசன் ஆட்சிக் காலத்தில் ஒரு முறையும், முதல் குலோத்துங்கன் காலத்தில் ஒரு முறையும், மூன்றும் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் ஒரு முறையும் அளக்கப்பட்டது. இவை முறையே கி. பி. 1001, கி. பி. 1086, கி. பி. 1216-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தவையாகும். நிலம் அளந்த கோலை 'உலகளந்த கோல்' என்று வழங்கினர். அது பதினறுசாண் நீளமுடையதாயிருந்தது. நிலத்தை யளந்து எல்லையறிந்து அங்குப் புள்ளடிக்கல் நடுவது வழக்கம் என்பதும் கல்வெட்டுக்களால் அறியப்படு கின்றது.

இறையிலி

சைவ வைணவ கோயில்களுக்கு இறையிலி (வரி யில்லாதது) யாகக் கொடுக்கபபட்ட நிலங்கள் தேவதானம் எனவும், சைன பௌத்த கோயில்களுக்குக் கொடுக்கப் பட்டவை பள்ளிச்சந்தம் எனவும், மறையவருக்கு விடப் பட்டவை பிரமதேயம், பட்ட விருத்தி எனவும், அறநிலையங் கட்கு விடப்பட்டவை சாலா போகம் எனவும் வழங்கின. புலவர்க்கு அளிக்கப்பெற்றது முற்றூட்டு எனப்படும்.

நாணயங்கள்

அக்காலத்தில் பொன்னினும், வெள்ளியினும், செம்பினும் செய்யப்பெற்ற காசுகள் இருந்தன. கழஞ்சு என்னும் பெயரையுடைய பொற்காசு சுமார் எழுபத்தி ரண்டு குன்றிமணி எடையுடையது. அதற்குப் பொன் என்றும் மாடை என்றும் வேறு பெயர்களும் இருந்தன. கழஞ்சுக்குச் சரிபாதியான 'காசு' என்னும் நாணயம் ஒன்று இருந்தது. பொன் நாணயங்களைத் தவிர வெள்ளி, செம்பு நாணயங்களும் இருந்தன. கருங்காசு, ஈழக்கருங் காசு என்பவை வெள்ளிக்காசுகள். கல்வெட்டுக்களில், கச்சாணம் (கத்யாணம்), அக்கம், திரமம் என்பனபோல

வேறு நாணயங்களின் பெயர்கள் பல காணப்படுகின்றன. ஈதன்றிக் காய்ச்சி உருக்கி வெட்டி நாணயமாக்கினும், மாற்றும் நிறையும் தூய்மையும் குன்றாததெனக் அதிகாரிகளால் ஆராய்ந்து உறுதி செய்யப்பட்டதற்கு அறிகுறியாகத் துளையிடப்பட்ட துளைப்பொன்னும் உண்டு.

அளவைகள்

அக்காலத்தில் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நால்வகைப்பட்ட அளவைகளும் வழக்கில் இருந்தன. இவற்றுள் எடுத்தல் என்பது நிறுத்தல் ஆகும். அரசாங்க முத்திரையிடப்பெற்ற நிறைகல் குடிஞைக்கல் எனப்படும். இனி, செம்பு, பித்தளை முதலியவற்றால் செய்யப்பெற்றவை, "செப்புக்குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலம்" என்றாற்போல எத்துணையாயினும் பலத்தால்தான் நிறுக்கப்பட்டன. ஆதலால், சேர், வீசை, தூக்கு, மணங்கு ஆகியவற்றால் நிறுக்கும் வழக்கமின்மை நன்கு புலப்படுகின்றது. நீட்டலளவை தோரை, விரல், சாண், முழம் என்பவற்றால் நடைபெற்றது.

சோழர்காலத்து அளவை வாய்ப்பாடு

எடுத்தலளவை

2 குன்றி	=	1 மஞ்சாடி
20 மஞ்சாடி	=	1 கழஞ்சு

நீட்டலளவை

8 தோரை (நெல்)	=	1 விரல்
12 விரல்	=	1 சாண்
2 சாண்	=	1 முழம்

முகத்தலளவை

5 செவிடு	=	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	=	1 உழக்கு
2 உழக்கு	=	1 உரி
2 உரி	=	1 நாழி
8 நாழி	=	1 குறுணி
2 குறுணி	=	1 பதக்கு
2 பதக்கு	=	1 தூணி அல்லது காடி
3 தூணி	=	1 கலம்

வாணிகம்

அக்காலத்தில் தமிழர்கள் அலைகடல் கடந்து பிற நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தார்கள். மேற்கே அரேபியாவுடனும் கிழக்கே ஸ்ரீவிசயம், சீன நாடுகளுடனும் சிறப்பாக வாணிகம் செய்தார்கள். வணிகர்களுக்குள், வளஞ்சியத்தார், மணிக்கிராமத்தார், நானாதேசிகள், நகரத்தார் என்ற பல சங்கங்கள் இருந்தன. இவ்வாறு மக்கள் வெளிநாட்டாருடன் வாணிகம் செய்துவந்ததால், இந்நாட்டில் வெளிநாட்டார் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பொருள்களுக்குச் சுங்கம் விதிக்கப்பட்டது. அதனாலும் அரசாங்கத்துக்கு வருமானம் கிடைத்தது. பணமும் 'கையெழுத்து ஓலை' (Promissory Note)யின் மேல் கொடுக்கப்பட்டு வந்ததால், நாணயச் செலாவணியும் பெருகியது. அக்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கு முத்து, யானை மருப்பு, பவழம், கண்ணாடிக்கல், பாக்கு, அகிற்கட்டை, ஏலம், பளிங்குக்கல், துணி, சாயம் தோய்த்த பட்டு நூல் கலந்த துணி ஆகியவைகளும், பல வகை வாசனைத் திரவியங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

அணிகலங்கள்

கண்டநாண், புல்லிகைக் கண்டநாண், பாசமாலை, மாணிக்கத் தாலி, வாகுவலயம், பதக்கம், அரதன வளையல், அரதனக்கடகம், பவழக்கடகம், திருக்கைக் காறை, திருப்பட்டிகை, அரதனமோதிரம், நவரத்தின மோதிரம், மாணிக்க உழுத்து, வயிர உழுத்து, சோகைச் சிடுக்கின் கூடு, பிருஷ்ட கண்டிகை, ஸ்ரீசந்தம் என்ற மணிபதித்த அணிகலங்களும், திருமுடி, வீரபட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், வயிரசாயலம், மூன்றுக அடுத்து விளக்கின கண்டத்துடர், புறத்துடர், ஏகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி, திரள்மணிவடம், தாலிமணிவடம், பொன்னுணிற் கோத்த மாணிக்கத்தின் திரு, பொன்னின் பட்டைக்காறை, திருக்களாவம், திருமகரம், திருக்குதம்பை, தோடு, வடுகவாளி, கொப்பு,

பட்டைமேற் குண்டு வைத்து விளக்கின வளையல், கைக் கடகம், திருக்கால் வடம், திருவடிக்காறை, திருக்கால் மோதிரம் என்றின்னோரன்ன பொன்னணிகலங்களும், முத்தின் சூடகம், முத்தின் சிடுக்கு, முத்துமாத்திரை என்னும் முத்தணிகலங்களும் இருந்தமை கல்வெட்டுக் களில் பரக்கக் காணலாம். இக்காலத்தில் சுரை என வழங்குவதை 'நிலையாணி' எனவும், திருகாணி என வழங் குவதை 'ஓடாணி' எனவும் வழங்கினர்.

சமயங்களும் வழிபாடும்

சோழ அரசர்கள் பெரும்பாலும் சிவநேயச் செல்வர் களாக இருந்தார்கள். சோழர்கள் காலத்தில், சைவாகம பண்டிதர்களான பல அந்தணர்கள் கௌடமத்திய தேயங் களினின்றும் தமிழகத்திற்கு வந்து குடியேறினார்கள். சைவசமயம் தழைத்து விளங்கியது. அரசர்கள் திருமால் கோட்டங்களுக்கும் நிலங்கள் இறையிலியாக விட்டிருக்கி றார்கள். இராசேந்திரன் காலத்தில் நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிசயதேயத்து அரசனால் கட்டிமுடிக்கப்பட்ட பௌத்த விகாரத்தைப்பற்றியும், அதற்கு அரசன் பள்ளிச்சந்தமாக நிலம் தந்ததுபற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். சில அரசர்கள் வேள்வி செய்தார்கள். தில்லையில் பன்முறை சோழ அரசர்க்ள் துலாபாரம் புகுந்தனர்; அவர்கள் தேவியர் இரணிய கருப்பம் புகுந்தனர்.

கோயில்கள்

செங்கற் கோயில்களாக இருந்த பலவற்றைச் சோழர் கள் கற்றளிகளாக எடுப்பித்தார்கள். பல புதிய புதிய கோயில்களும் இவர்களால் கட்டப்பெற்றன. தஞ் சைப் பெருவுடையார் கோயில் முதலாம் இராசராச னும், கங்கைகொண்ட சோளேச்சுரர் கோயில் முதல் இரா சேந்திரனும், நீடூர், திருவைகாவூர், மன்னார்குடி கோயில் களை முதற் குலோத்துங்கனும், தாராசுரம் கோயிலை இரண்டாம் இராசராசனும், கச்சி ஏகாம்பரர் கோயிலையும், திரிபுவனம் கோயிலையும் மூன்றும் குலோத்துங்கனும்

கட்டினார்கள். தேவாரப் பதிகங்கள் நாள்தோறும் திரு முன்னர் விண்ணப்பஞ் செய்தற்கு நிவந்தங்கள் விடப்பட்டிருந்தன. கோயிற் காரியங்களை அவ்வவ்வூரிலுள்ள ஒரு சபையார் நன்கு நடத்திவந்தனர். அரசனும் அரசாங்க அதிகாரிகளும் நாட்டைச் சுற்றிப்பார்த்து வருங்கால் கோயில்கள் திட்டப்படி நடத்தப்பட்டு வருகின்றனவா என்று பார்ப்பது வழக்கம். கோயிற்குரிய செலவுபோக எஞ்சிய பொருளின் ஒரு பகுதியைக் கல்விவளர்ச்சிக்கும், மருத்துவத்திற்கும் செலவிட்டனர். அக்காலத்தில் சாம்பிராணி இல்லை. ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடைபெற்றது. ஒவ்வொரு கோயிலுக்கும் பல பணிப் பெண்கள் இருந்தனர். எடுத்துக்காட்டாகத் தஞ்சைக் கோயிலுக்கு நானூறு பதியிலார் இருந்தனர். அவர்களுக்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டன. கொட்டி மத்தளம், பக்க வாத்தியம், வீணை, மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச்சங்கம் முதலிய இசைக்கருவிகளும்; உவச்சுப்பறை, சகடை, கரடிகை முதலிய பறை வகைகளும் அக்காலத்தில் இருந்தன.

மருத்துவக்கூடம்

ஏழைகளுக்கு உதவிசெய்ய நாட்டின் பல பகுதிகளிலும் மருத்துவக்கூடங்கள் இருந்தன. சுந்தரசோழனின் நினைவாகத் தஞ்சையில் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுல சாலை' என்று ஒரு மருத்துவக்கூடம் இருந்தது. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடலிலும் ஓர் ஆதுல சாலை இருந்தது. ஆதுலசாலைகளை 'ஸ்வர்ணர்கள்' எனப்படுபவர் மேற்பார்வையிட்டனர். மேற்கூறிய ஆதுலசாலையில் ஒரு 'வைத்தியம் சொல்லுவானும்,' ஒரு சல்லியக் கிரியை பண்ணுவானும், மருந்துப்பொருள்களைக் கொணர்ந்து வேலைசெய்வதற்கென இரண்டு ஆட்களும், நோயாளிகளுக்கு உதவி செய்ய இரண்டு பெண்மக்களும் இருந்தார்கள்.

கல்வி

கிராமப்பள்ளிகளைத் தவிர, மக்களுக்குக் கல்வி, மடங்களிலும் கோயில்களிலும் புராண இதிகாசச் சொற்பொழிவுகள் மூலம் புகட்டப்பட்டது. இதைத் தவிர மேற்படிப்புக்கும் வழி வகுக்கப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்னும் இடத்தில் ஒரு பெரிய கல்லூரி இருந்தது. அது பன்னான்கு ஆசிரியர்களையும், 340 மாணக்கர்களையும் கொண்டிருந்தது. அங்கு வேதங்கள், இலக்கணம், மீமாம்சம், வேதாந்தம் முதலியன கற்றுக் கொடுக்கப்பட்டன. மாணவர்களுக்கு நாடோறும் உணவு படைப்பதற்கும், ஆசிரியர்களுக்கு நெல்லும் பொன்னும் கொடுப்பதற்கும் நாற்பத்தைந்து வேலி நிலம் நிவந்தமாக அளிக்கப்பட்டது. பாண்டிச்சேரிக்கு அண்மையிலுள்ள திரிபுவனி என்னுமிடத்தில் உள்ள கல்லூரியில், அதிகப் படியாக இராமாயணம், பாரதம், மநுதர்ம சாத்திரம், வைகானஸ சாத்திரம், சத்யாஷாட சூத்திரம் முதலியன சொல்லிக்கொடுக்கப்பட்டன. அதில் 260 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் இருந்தார்கள். அக்கல்லூரிக்கு 72 வேலி நிலம் நிவந்தம் இருந்தது. திருமுக்கூடலில் ஒரு கல்லூரியும், ஒரு மாணவர் விடுதியும் இருந்தது. மாணக்கர்களுக்குச் சோறும், சனிதோறும் முழுக்குக்கு எண்ணெயும், இரவில் படிப்பதற்கு விளக்கும் அளிக்கப்பட்டது. தஞ்சவூர் மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறையில் ஒரு மருத்துவப்பள்ளிக்கூடம் இருந்தது. சென்னைக்கு அருகேயுள்ள திருவொற்றியூரில் ஓர் இலக்கணப் பள்ளிக்கூடம் இருந்தது. இவ்வாறாக நாட்டின் பல பகுதிகளிலும் கல்லூரிகள் இருந்தன.

இலக்கியம்

சோழர்களின் மெய்க்கீர்த்திகள் அழகிய நடையில் இயற்றப்பட்டுள்ளமையால், அவர்கள் அவையில் பெரும் புலவர்கள் இருந்தனர் என்பது பெறப்படும். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான **சீவகசிந்தாமணி** திருத்தக்கதேவர்

என்ற சமண முனிவரால் சுமார் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்த நாதமுனிகளும் இந்நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். அதே நூற்றாண்டில் தான் குண்டலகேசி என்ற பௌத்த காப்பியமும், கல்லாடரால் எழுதப்பட்ட கல்லாடமும் வெளிவந்தது. அமிர்தசாகரர் என்ற சமணர் யாப்பருங்கலம் என்ற செய்யுள் இலக்கண நூலை யாத்தார். பதினோராம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி முதல்சைவத்திருமுறை ஏழினையும் முதல் இராசராசன் காலத்தில் வகுத்தார். திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றினவரும் அவரே. அதே நூற்றாண்டில் வீர ராசேந்திரசோழன் வேண்டுகோளுக்கிணங்கிப் பாண்டி மண்டலத்தில் பொன்பற்றி என்னும் ஊரில் சிற்றரசனாயிருந்த புத்தமித்திரன் என்பான் வீரசோழியம் என்ற இலக்கண நூலை எழுதினான். முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் அவன் அடைந்த வட கலிங்க வெற்றியைப் பாராட்டிச் சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி என்ற ஓர் அரிய நூலை இயற்றினார். விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இராசராசசோழன் ஆகிய மூவர்காலத்தும் அவைக்களப் புலவராய் விளங்கிய கவிராக்ஷஸன் ஒட்டக்கூத்தர் மூவருலா பாடியதோடு, குலோத்துங்கன் மீது பிள்ளைத்தமிழ் ஒன்றும் பாடியுள்ளார். இவர் கலிங்கத்துப்பரணி என்ற நூலொன்றும், தக்கயாகப்பரணி என்ற நூலொன்றும் இயற்றினாரென்பது முன்னரே கூறப்பட்டது.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமகாதையை வடமொழி இராமாயணத்தைத் தழுவி எழுதினார். தற்பொழுது அது கம்பராமாயணம் என வழங்குகிறது. கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று பலரும், பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சிலரும் கருதுகின்றனர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்த மற்றொரு புலவர் தண்டியாசிரியர் ஆவர். அவர் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற

பல்லவ மன்னனுடைய அவைக்களப் புலவராகிய தண்டி என்னும் வடமொழிப்புலவர் இயற்றிய 'காவியாதர்சம்' என்ற வடமொழி அணி நூலைத் தண்டியலங்காரம் என்ற பெயரால் தமிழில் மொழி பெயர்த்தார். தண்டியாசிரியர் ஒட்டக்கூத்தருடைய மாணவராயிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுள்ளது.

பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தைப் பாடினூர் என்று திரு T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கூறுகிருர்கள். ஆனல், கோவை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் என்று கூறுகிருர்கள். மூன்ரும் குலோத்துங்கனின் அவைக்களப் புலவராக விளங்கியவர் வீராந்தப் பல்லவரையர் ஆவர். நேமிநாதம், வச்சணந்திமாலை, வெண்பாப் பாட்டியல் என்ற இலக்கணநூல்களை இயற்றியவரும், களந்தை வச்சணந்தி முனிவரின் மாணவரும் ஆகிய குணவீர பண்டிதரும் இவன் காலத்தில் வாழ்ந்த புலவரேயாம். இவன் காலத்தில் தொண்டைமண்டலத்து அரும்பாக்கத்து அருணிலை விசாகன் திரைலோக்யமல்லன் வத்சராசன் என்பவர் மாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். அஃது இற்றை நாளில் கிடைக்கவில்லை. குலோத்துங்கனுக் கடங்கிய அமராபரண சீயகங்கன் என்ற குறுநில மன்னன் வேண்டிக்கொண்டதற்கிணங்க பவணந்தி முனிவர் என்ற சமணர் நன்னூல் என்ற இலக்கண நூலை யாத்தார். மூன்ரும் இராசராசன் காலத்தில் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்த நூலை இயற்றினூர். நளவெண்பாவை இயற்றிய புகழேந்திப்புலவர் பதின்மூன்ரும் நூற்றுண்டில் வாழ்ந்தவராவர்.

தென்மொழியைப்போலவே வடமொழியும் நன்கு போற்றப்பட்டு வந்தாலும் அக்காலத்தில் பல நூல்கள் வடமொழியில் தோன்றவில்லை. முதற்பராந்தகன் காலத்தில் வேங்கடமாதவர் என்பார் இருக்குவேத பாடியம்

எழுதினர். பல கல்வெட்டுக்கள் வடமொழியில் உள்ளன. முதல் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் வடமொழிப்பகுதியை வரைந்த நாராயணகவி வடமொழியில் புலமைமிக்கவர் என்று தெரிகிறது. இரண்டாம் இராசராசனின் வடமொழி ஆசிரியரான கேசவ சுவாமி என்பார் அவன் விரும்பியவாறு நானார்த்தார்ணவ—சம்க்ஷேபம் என்று வடமொழியில் அகராதி ஒன்றைத் தொகுத்தார். சித்தாந்த ரத்னாகரம் என்ற நூல் இயற்றியவர், சீகண்டசம்புவின் புதல்வரும், மூன்றும் குலோத்துங்கனின் குருவுமாகிய ஈசுவரசிவனார் என்பவர்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றான் சற்றேறக்குறைய நானூற்று முப்பத்துமூன்று ஆண்டுகட்குமுன் தமிழகத்தில் மன்னர் மன்னர்களாக வீற்றிருந்து அரசாண்ட சோழ மன்னர்களின் வரலாற்றையும், அக்காலப் பகுதியில் நிகழ்ந்த பல அரிய வரலாற்றுநிகழ்ச்சிகளையும் நன்குணரலாம். சோழர்கட்குப்பிறகு பாண்டிய மன்னனான முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தமிழகம் இழந்த பெருமையை மீண்டும் ஓரளவு பெற்றது. எனினும் முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் காலத்தில் தமிழகம் அடைந்த உச்சநிலை அதற்கு முன்னும் அடைந்திலது, பின்னும் அடைந்திலது என்பது ஒருதலை. தமிழகத்தை உச்சநிலைக்குக் கொணர்ந்துவைத்துத் தமிழர்களுடைய புகழ், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை வடநாட்டில் மட்டுமன்றிக் கடல்கடந்து சீனா, இந்தோ சீனா, காம்போடியா, சயாம், மலேயா, இந்தோனேஷியா வரையில் எட்டும்படிசெய்த பெருமை சோழர்களுக்கே உரியது. இன்னும் சுமத்திரா, ஜாவா தீவுகளில் உள்ளவர்கள் சிலர் தங்களைச் சேரர், சோழர், பாண்டியர் என்ற குடிப்பெயரால் கூறிக்கொள்ளுகின்றனர்.

படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவந்த தமிழ் வேந்தர்களான சோழர்கள் ஆட்சி மறைந்தொழிந்து

இற்றைக்கு அறுநூற்றெழுபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அவர்களது ஆதரவினால் வெளிப்போந்த தமிழ் நூல்களும், அவர்களால் எடுக்கப்பட்ட கோயில்களும், வெட்டப்பட்ட பேராறுகளும், கட்டப்பட்ட அணைகளும் இன்றும் நிலைபெறு உடையனவாய் அன்னோரது பெருமை அனைத்தும் நம்மனோர்க்கு உணர்த்தும் கலங்கரை விளக்கமென நின்று நிலவுதல் ஒருவகையால் நமக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பது திண்ணம். சோழமண்டலம் என்ற சொல் திரிந்து 'கொரமாண்டல்' (Coromandel) என்று ஆங்கிலத்தில் வழங்குவதும் சோழர்கள், சோழநாடு இவற்றின் அழியாப்புகழைக் காட்டுகின்றது.

ச. பாண்டியர்காலம் [கி. பி. 300—கி. பி. 1700]

[திரு. ஞா. துரைசாமிபிள்ளை அவர்கள், எம்.ஏ., எல்.டி.]

'இன்பத்தேன் வந்து பாயும்' தன்மைத்தாய தண்டமிழ்த் தாயின் வயிற்றிலே பிறந்து, மடியிலே தவழ்ந்து, தமிழமுதையே உண்டுதிளைத்த நம் பாண்டியர், பண்டையர் எனும் காரணம்பற்றியே பாண்டியர் என்ற பெயர்க்குரிமை பெற்றனர் போலும். ஆராய்ச்சிவல்லுநர் பலர் நம் தமிழ்நாட்டு மூவேந்தரும் 'ஊழிக்காலந் தொட்டே உயர்நிலையடைந்தவர்' எனக்கூறி அதற்குத் தக்க சான்றுகளும் தரலாயினர். மனித உற்பத்தி முதலில் தண்டகாரணியத்திற்கும், கடலுக்குமிடைப்பட்ட பகுதியிற்றான் ஏற்பட்டதென, திரு. பி. டி. சீனிவாஸ ஐயங்கார் கூறுகின்றார். "ஹெக்கல்" எனும் ஜர்மானியப் புலவன், "குமரிமுனைக்குத் தெற்கிலுள்ள ஞாலத்தின் [1]நடுக் கோட்டிற்கு இருமருங்கிலுமுள நிலப்பகுதிகளே, மக்கள் வாழ்விற்குத் தக்க நிலையை முதற்கண் அடைந்தன வென்றும், அவண் மக்கள் முதலில் தோன்றி, வளர்ந்து, நாகரிகத்திற்கு வித்திட்டனரென்றும் கூறியுள்ளான்," என நெல்லை தாகூர் சொற்பொழிவாளர் திரு. எம். எல். பிள்ளையவர்கள் தம் 'இலக்கிய வரலா'ற்றின்கண் எழுதிப் போந்தனர். [2]பிரித்தானிய சங்கம் எனும் ஆராய்ச்சிக் கழகத் தலைவராம் [3]ஸர். ஜாண் எவான்ஸ் என்பார் தம் தலைமையுரையில் 'மனிதவர்க்கத்தின் தொட்டில் தென்னிந்தியாவாக இருக்கலாம்' எனக் கூறியதாக, சுவாமி விபுலானந்தர் தம் 'உலக புராணத்தில்' குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளனைத்தும் நம் தமிழ் மன்னர் தொன்மைவாய்ந்தவர் என்ற உண்மையை ஐயமறத் தெளிவாக்கும்.

---

1. Equator. 2. British Association. 3. Sir John Evans.

மேலும் தமிழகத்தின் தொன்மைபற்றித் தக்க சான்றுகள் தருவன, புதை பொருளாராய்ச்சியாளரால் சிந்துநதிப் பள்ளத்தாக்கின்கண் அகழ்ந்தெடுக்கப்பெற்ற [1]ஹரப்பா, [2]மொகஞ்சதாரோ நகரங்களில் கிடைத்த சின்னங்களாகும். இவற்றைத் துணைக்கொண்டு ஆராய்ச்சியாளர் பாண்டிநாட்டின் நாகரிகம் சமார் 5,000 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கணக்கிடுகின்றனர்.

ஆங்குள்ள வீடுகள், மாடிகள், வீதிகள், உருவச் சிலைகள் அனைத்தும், நம் திருநெல்வேலி, மதுரைமா வட்டங்களிலுள்ள, ஏன்? தமிழக முழுவதிலும் நாம் காண்கின்ற வீடுகள், வீதிகளைப் படிவம் பிடித்தமைத்ததேபோன்று காட்சியளிக்கின்றன. [3]ஜான் மார்ஷல் என்பார் இப்புதை பொருட்களைப்பற்றிய விபரங்களை விரிவாய் எழுதியுள்ளார். வீடுகள் கற்களால் அடிகோலப்பெற்றுச் செங்கற்களால் சுவரெழுப்பப்பெற்றவை. மாடிகளுக்குச் செல்லும் படிக்கட்டுகள் அழகுபெற அமைக்கப்பெற்றிருந்தன. வீடுகள்தோறும் சிறிய கிணறுகள் உள. குளிப்பதற்குத் தனி அறைகள் உள. கழிவுநீர்க் கால்கள் உள. மாடியினின்றும் கழிவுநீர் செல்ல மண்குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன. வீடுகளில் சாளரங்கள் மிகச் சிறியவை. தமிழ்மக்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கையை மேற்கொண்டவரன்றோ? பெரும்பாலும், வெளியிடங்களிற் சென்று இயற்கையைத் துய்ப்பவரானதால் காற்றோட்டமான வீடுகள் அவருக்கு வேண்டாதிருந்தன போலும்.

நீராடும் துறைகள், [4]பூங்காக்கள் ஆங்காங்கே காணப்பட்டன. செப்புப்பானைகள், சட்டிகள் வழக்கிலிருந்தன. மண்சட்டிகள் வழுவழுப்பாகவும்; மரங்கள் இலைகள், பூக்களின் படங்கள் வரையப்பெற்றனவாயுமிருந்தன. இன்று நம் வழக்கிலிருக்கின்ற கிண்ணங்கள், தட்டுகள், மூக்குப்பாத்திரங்கள், கைபிடிச்சட்டிகள் என்பன கிடைத்துள்ளன. அம்மி, குழவி, திரிகை, உரல், கோடரி,

---

1. Harappa. 2. Mohenjadaro. 3. John Marshal.
4. Park.

அரிவாள், கட்டில், கோரைப்பாய், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், செப்புகள், குழல், தாயக்கட்டைகள் என்றவையனைத்தும் கிடைத்துள்ளன.

பொன், வெள்ளி, வெண்கலம் ஆன உலோகப் பொருட்களை மக்கள் உபயோகித்துவந்தனர். வெண்கலப் போர்க் கருவிகள், சாடிகள், தாழிகள், தட்டுகள், சவரக் கத்தி உட்பட மக்களால் உபயோகிக்கப்பெற்றன. பொன், வெள்ளி, கற்களாலாய ஆபரணங்களைப் பெண்கள் விரும்பி யணிந்துவந்தனர். கைவளையல்கள் வழக்கத்திலிருந்தன.

உணவுப் பொருட்கள் மிருகங்களின் மாமிசம், காய் கறிகள், பால், வெண்ணெய், தயிர் நெய், பழங்கள், நெல், பட்டாணி, எள், பேரீச்சம்பழம் என்பன. ஆடைகள் மக்களால் விசேடமாகக் கருதப்படவில்லை. பெண்கள் சீப்பு, கண்ணுடி உபயோகித்து வந்தனர். பெண்கள் கூந்தலை அழகு படுத்தும் முறையில் சிறந்தவராயிருந்தனர். தற்காலப் பெண்கள் சிகையைச் சிங்காரிக்கும் நவீனமுறை களனைத்தும் பண்டை மக்களிடமிருந்து கடன் பெற்றவை போலும்.

அங்குக் கிடைத்த சிலையொன்றில் 'மின்கண்ணன்'— மீன்கண்ணன் எனும் சொல்லின் சிதைவு - என்ற தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றுளதெனவும், அது சிவ பெருமானின் உருவச்சிலையெனவும் மீன்கண்கள் எக்காலத் தும் திறந்திருப்பதாகத் தோற்றமளிப்பதால், இறைவனும் இமைக்காத கண்களையுடையோனுய் உலகைப் பாதுகாக் கின்றுன் என்ற பொருட்பட அச்சிலைக்கு 'மீன்கண்ணன்' எனப்பெயர் அமைத்திருத்தல் வேண்டுமெனப் புதை பொருள் ஆராய்ச்சியாளர் [1]ஹிராஸ் கூறியவற்றை நேரில் கேட்டுள்ளேன். பாதிரியாரின் கூற்றை அறிஞரின் ஆய் வுக்கு விடுதல் தகுதியாம்.

இனி நம் பாண்டியரைப்பற்றிய சுருங்கிய குறிப்புக் கள் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் நம் நாட்டின் வடபால்

1. Fr. Heras.

சிறப்பாட்சி செய்த அசோகரின் சித்தாபுரம் (மைசூரிலுள்ளது) சிறிய கல்வெட்டுகளினின்றும், [1]கூட்டிக் கருகிலுள்ள எழக்குடி பதினான்கு கல்வெட்டுக்களினின்றும், யவன தூதுவன் [2]மெகாஸ்தனீஸ் என்பான் எழுதித்தந்த 'இண்டிகா'வினின்றும், மாயூர சந்திரகுப்தனின் அரசியல் தந்திரி கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தினின்றும், இலங்கையரின் தொன்மை வாய்ந்த வரலாற்று நூல் 'மகாவம்சத்தினின்றும்' அறியக்கிடக்கின்றன. கலிங்க - தற்கால ஒரிஸ்ஸா நாட்டில் அரசுசெய்த காரவேலர் என்பார் கி. மு. 150-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுமன்னரைப் போரில் வென்றதாகக் கூறப்படுகின்றது. மேலும் செனிகா, பிரிடோரியஸ், பிளினி என்ற பேராசிரியர், தம் நாட்டின் பொன்னும், வெள்ளியும் கணக்கற்ற அளவில் வாணிகம் பற்றித் தென் தமிழ்நாட்டிற் போய்க் குவிந்துவிட்டன என இரங்கிக் கூறுகின்றனர். அகஸ்தஸ் என்ற உரோமச் சக்கரவர்த்தியிடம் நம் பாண்டிய மன்னன் ஒருவன் தூதுக்குழு ஒன்றையனுப்பினான் என்பதும், செல்வமிக்க உரோமப் பெண்மணிகள் மதுரையில் நெய்யப்பெற்ற சிறந்த ஆடைகளையும், கோயம்புத்தூரின் கோமேதகங்களையும், மதுரையின் முத்துக்களையும் பாராட்டி அணிந்து வந்தனர் என்பதும் வியப்பைத் தரும் செய்திகளேயாம்.

பேராசிரியர் திரு. நீலகண்ட சாத்திரிகள், "தென்னிந்திய வரலாற்றைத் தெளிவுற அறிந்துகொள்ளப் பிற நாட்டவர் குறிப்புக்களில் பழமையானவை யவன, உரோம எழுத்தாளரின் குறிப்புக்களே. அவர்களுள் [3]ஹரடோட்டஸ், மெகஸ்தனீஸ் என்பாரின் குறிப்புக்களும், ஆசிரியர் பெயர் விளங்காத பெரிப்பிளஸ் என்ற நூலும், தரை நூலாசிரியர் [4]டாலமி என்பார் தந்துள்ள செய்திகளும் பெரிதும் பயன்படுபவை. மேலும் அராபியர் வாணிகத்தில் சிறந்தவர். இவர் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டுடன் வாணிகம் செய்து வந்தனர். அக்காலத்திய எழுத்தாளர் [5]அபுசேட் எழுதிய

1. Gooty. 2. Megasthenes. 3. Herodotus.
4. Ptolemy. 5. Abu-Zaid.

செலவு நூல் நம் நாட்டு வாணிகம், அரசியல், நாகரிகம் முதலியவற்றை அறிந்துகொள்ளச் சிறந்த ஆதார நூல்களாகும். 'இபின்பட்டுட்டா'வின் குறிப்புக்களும் சிறந்தவை. சீனர் எழுதிய செலவுநூல்களும் பயன்படத் தக்கவை. இவை அனைத்துள்ளும் நம் நாட்டின் பலப்பல விடங்களில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள், செப்பேடுகளே வரலாற்றாராய்ச்சிக்குப் பயன் தருபவை. இவற்றுள் பாண்டிநாட்டின் சரித்திரத்தைத் தெளிவுபடத் தெரிந்துகொள்ளப் பெரிதும் ஆதாரமானவை வேள்விக்குடி, சின்னமனூர்ச் செப்பேடுகள்," என்கின்றார்.

நிற்க, இப் பாண்டியர் பிற நாட்டினின்றும் நம் நாட்டிற் புகுந்தனரோ, அன்றி எக்காலத்தும் தென்னாட்டில் உள்ளவரோ என்பதுபற்றி அறுதியிட்டுக் கூறும் சான்றுகள் யாவும் கிடைத்தில. திரு. கனகசபைப் பிள்ளையின் கூற்று, மங்கோலியக் கூட்டத்தினர் நால்வர் நம் நாட்டில் புகுந்தனர்; அவருள் 'மாறர்' என்னும் பிரிவினர் பாண்டிய மரபையும், வானவர் சேரரையும், திரையர் சோழ மரபையும், கோசர் கொங்குநாட்டையும் அமைத்தனர் என்பதாம். இக் கொள்கை வரலாற்றாசிரியர் அனைவருக்கும் முரண்பாடு. பாண்டியர் பாண்டியநாட்டவரே. பாண்டிநாட்டின் எல்லையை,

> "வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
> தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
> ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
> பாண்டிநாட் டெல்லைப் பதி."

என்ற வெண்பா விளக்குகின்றது. வெள்ளாறு பாண்டிநாட்டின் வடவெல்லையில், அறந்தாங்கித் தாலுகாவில் ஓடும் ஒரு சிற்றாறாகும்.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருவாங்கூர், கொச்சியின் ஒரு பகுதியும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியும் பாண்டிப்பதியின் எல்லைகளாம். கொற்கை துறைமுகப்பட்டினம். பொதியமலையை ஆய்

வேள் என்பானும், பழனிமலையைச் சுற்றிய நாடுகளைப் பேகனும் ஆட்சிபுரிந்து வந்தனர்.

பாண்டியர் பலரைப்பற்றி நாம் அறியக்கிடப்பதெல்லாம் சங்க இலக்கியங்களின் வாயிலாகவே. 'முதற்சங்கம் பல்லாண்டுகள் நடைபெற்றதெனவும், அதை அகத்தியன் முதலானோர் நடாத்தினர் எனவும், அகத்தியம் பரிபாடல் என்பன அக்காலத்தன எனவும், இடைச் சங்கம் வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59-மன்னர்களால் ஆதரிக்கப்பெற்றதெனவும், முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியின் காலம்வரை கடைச்சங்க காலம் எனவும், நான்காவதோர் சங்கம் கி. பி. 600 முதல் கி பி 750-வரை நிலைபெற்றிருந்ததெனவும், ஐந்தாவது சங்கம் திருத்தக்கதேவர் காலத்து கி. பி. 900 - ஆம ஆண்டு நிறுவப்பெற்றதெனவும், ஆறாவது சங்கம் திரு. பாண்டித்துரைத் தேவர் ஆதரவில் ஏற்பட்டு நடைபெற்று வருவதெனவும், அறிஞர் திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் 'தமிழ் இலக்கியம்' என்னும் நூலில் வரைந்துள்ளார்.

இலங்கைக் கயவாகு மன்னன் காலம் கி. பி. 173—195. சேரன் செங்குட்டுவன் பத்தினிதேவிக்குச் சிலையெடுத்த காலத்து இலங்கைமன்னன் உடனிருந்தான். இதனினின்றும் கடைச்சங்ககாலம் கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுகட்குட்பட்டதாகும் என ஆராய்ச்சியாளர் முடிவுகட்டியிருக்கின்றனர். பிளினி, டாலமி என்பாரின் கூற்றும் இக்காலத்தையே குறிப்பனவாகும். தென்னிந்தியாவில் கிடைத்துள்ள நாணயங்களினின்றும் மேற்கூறிய காலம் உறுதியாகின்றது.

பாண்டியர் வரலாற்றினை நுணுகி ஆராய்ந்து அண்மையில் ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிட்டருளிய ஆசிரியர் திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார், பாண்டிய மன்னர் காலத்தினைக், கடைச்சங்ககாலத்திற்கு முந்தியவர், சங்ககாலத்தவர், பின்வந்தவர் எனத் தெளிவுறத் தம் 'பாண்டியர் வரலாறு' எனும் நூலின்கண் முறைப்படுத்தி

யிருப்பது காலவரைப்படி பாண்டிய மன்னரின் வரலாற்றைத் தொகுத்துப் படிக்க விரும்புவோர்க்குப் பெரும் பயன் அளிப்பதாகும்.

சங்ககாலத்திற்கு முந்திய பாண்டியர்

சங்க காலத்திற்குமுன் நம் நாட்டினையாண்டுவந்த பாண்டியருள் குறிப்பிடத்தக்கவர் இருவராவர். இவருள் 'நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன்' என மதுரைக்காஞ்சியிலும், 'முந்நீர் விழவினெடியோன்' எனப் புறப்பாட்டிலும் (புறம் : 9) சிறப்பித்துக் கூறப்பெற்றவனாகிய வடிம்பலம்பநின்ற பாண்டியன், 'நெடியோன்' என அழைக்கப் பெற்றதால் பல்லாண்டுகள் இவன் அரசு புரிந்திருத்தல்வேண்டும். கடலாற் கொளப்பெற்ற, குமரிமுனைக்குத் தெற்கில்கிடந்த, குமரிநாட்டில் பஃறுளியாற்றை அமைத்து, முந்நீர்க்கடல் தெய்வத்திற்கு விழவெடுத்தான் இவன். தொன்னூல் எனப் பேசப்படும் தொல்காப்பியம் இவன் அவையின்கண் அரங்கேற்றப் பெற்றது என்பது நச்சினார்க்கினியர் கூற்று.

இவனுக்குப் பின்னவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாவான். இயற்பெயர் முதுகுடுமி. இளைஞனாயிருப்பினும் அறிவில் முதுமை பெற்றோன் என விளங்குமாறு இப்பெயர் பெற்றனன் போலும். நாட்டிற்கு நலம் பலபுரிந்தோன்; வள்ளல். சிவபிரானிடம் சிறந்த பத்தி செலுத்தியவன். பகைவரை அறப்போரில் வென்று மறக்களவேள்வி புரிந்தோன். 'ஆவும் அந்தணரும் மகளிரும், நோயுடையோரும் புறம்சேர்க' எனக் கூறிப், பின்னர்த் தான் அறப்போர் தொடுப்பான் என நெட்டிமையார் (புறம் : 9) இவனைப் பாடுவது இவனது உண்மைவீரத்திற்கு எடுத்துக்காட்டாகும்; தற்கால அணுக்குண்டு முறையின் தவற்றை வலியுறுத்துவதாகும். 'வேற்றரசர் நிலத்தை அவருக்கு இன்னாவாகக் கொண்டு பரிசிலருக்கு நீவிர் அளிப்பது தகுதியோ' எனப் புலவர் இவனைப் பழிப்பது போல் புகழ்வது படித்தின்புறத் தக்கதாகும் (புறம் : 12).

ஒரு நாள் மன்னன் தன் அமைச்சர், படைத்தலைவர் மற்றையோர் சூழ்ந்திருக்க, 'மக்களுக்கு ஆவன அனைத்தும் அளித்து முடித்தேன். மேலும் யாதாயினும் செயத்தக்கதுளதோ?'வென அவையிலுள்ளோரில் ஒருவர், 'இதுவரை மண்ணில் மக்களுக்குப் பணியாற்றினீர், இனி விண்ணவரையும் மகிழ்விப்பது நும்கடன்' என, இணங்கிய மன்னன் இராசசூயம், அசுவமேதம் எனும் வேள்விகளை இயற்றிப் புகழ்பெற்றான். 'எம்மதத்தவரும், எந்நாட்டவரும், எந்நிலையினரும் நம் நாட்டில் அமைதியுடன் வாழ்வெய்துக', எனக்கூறி மக்களை வாழ்வித்தான் இம்மன்னன்.

சங்ககாலப் பாண்டியர்

இனி, கடைச்சங்ககாலப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மராவர். இவரைப் பற்றிய செய்திகள் பரிபாடல், குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களினின்றும் அறியக் கிடக்கின்றன. இடைச்சங்ககாலத்தின் இறுதியில் முடத்திருமாறன் வாழ்ந்ததாகப் பெறப்படுதலால் கடைச்சங்ககாலத்து மன்னருள் இவனே முதல்வனுவான். பாண்டியன் முடத்திருமாறன் கபாடபுரத்தில் தன் தலைநகரை அமைத்து ஆட்சி செலுத்தினுன். இவன் காலத்தும் கடல்கோள் நிகழ, குமரியாற்றிற்கும், தாமிரபர்ணிக்கும் இடையில் நின்ற கபாடபுரம் அழிந்தது. கணக்கற்ற தமிழ்நூல்களும் இறந்தன. எஞ்சி நின்றது தொல்காப்பியம் ஒன்றே. எனவே, மன்னரும், புலவர் சிலரும் அவ்விடம்விட்டு மதுரைமாநகர் அடைந்தனர். ஆங்குக் கடைச்சங்கம் நிறுவி முத்தமிழும் வளர்த்தான் இப்பாண்டியன். சுவைமிகும் பாடல்கள் பாடும் ஆற்றலுடையோன். பொருளீட்டும வகையான் தலைவியைப் பிரிந்த தலைமகன் தன் நெஞ்சினைநோக்கி, 'நெஞ்சமே! நீ நம் காதலி வருந்தும்படி விட்டு நெடுந்தூரம் வந்தனை. இனி, உடன் அங்குத் திரும்பாவிடின் உன் முயற்சி நன்முயற்சியாகாது' என்னும் கருத்துக்கொண்டு மாறன் பாடிய நற்றிணைச் செய்யுள் (நற் : 105) சிறந்த அகத்திணைக் கருத்தினை விளக்குவதாகும்.

பாண்டியன் மதிவாணன், "மதிவாணர் நாடகத் தமிழ்" எனும் நூலை இயற்றியவன். சிலப்பதிகார உரையாளர் அடியார்க்குநல்லார் இந்நாடகத்தைச் சிறப்பித்துப் பேசியுள்ளார். கூத்தின் இலக்கணம் கூறுகின்றது இந்நூல்.

பொற்கைப் பாண்டியன்

கடைச் சங்க காலத்திய மற்றொரு பாண்டியமன்னன் பொற்கைப் பாண்டியன். வஞ்சம் தீர்த்துத் திரும்பிய பத்தினித்தேவியாம் கண்ணகியின் முன்தோன்றிய மதுரைமா தெய்வம், பாண்டியரின் பெருமையைப் பற்றிப் பேசிய காலத்துப் பொற்கையனைப் பற்றியும் கூறிப் புகழ்கின்றது. கீரந்தை என்னும் வேதியன் காசிக்குச் செல்லுங்கால் தன் இல்லாளிடம் 'பாண்டியன் செங்கோல் நினைக்காக்கும்' எனக் கூறிப்போனான். நகர்வலம் வந்து கொண்டிருந்த பாண்டியன் இதனை ஒற்றுக்கேட்டு அந்நாள் முதல் வேதியன் இல்லத்தை இரவுதோறும் காவல் புரிந்தான். காசியினின்றும் திரும்பிய வேதியன் ஒருநாள் தன் மனைவியுடன் உரையாடிக் கொண்டிருக்க, வேதியன் ஊர் திரும்பிய செய்தியையறியாத பாண்டியன், வேறொருவன் வேதியன் வீட்டிற் புகுந்தனனோ எனவஞ்சிக் கதவைத் தட்ட, வேதியன் புல்லன் ஒருவன் தன் மனையாளிடம் வருவது வழக்கமோ என இல்லாளை ஐயுறுவான் என்று எண்ணியவனாய், அத்தெருவின்கண் பலவாயில்களையும் தட்டிச்சென்றான். இப்பிழையை எண்ணி வருந்திய மன்னன் அறமுறையில் வாள்கொண்டு, தன் கையைக் குறைத்துக்கொண்டு பின் பொற்கையமைத்து வாழ்ந்தான். மன்னரின் மாண்புமிக்க பண்பினை விளக்கும் ஒரு செயலன்றோ இது! மனுநீதிச்சோழன் செயலும் இத்தன்மைத்தன்றோ! இஃது ஒரு கற்பனைக்கதையோவென ஐயுறுவோர்க்கு, மதப்பற்றின் காரணமாக எரிதீயில் தன் கையை நீட்டிக் கருக்கிய [1]ரிட்லி என்ற மேனாட்டு மத வீரன் வரலாற்றை நினைவூட்டல் தகுதியாகும்.

---

1. Ridley.

கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி

இளமைபற்றி இளம்பெருவழுதி எனக் காரணப் பெயர் பெற்றான்போலும். கடலில் கலம் ஊர்ந்து செல்லுங்கால் மாண்டனன் இவன். திருமால் அன்பு கொண்டவன். இவன் பாடிய பரிபாடல் செய்யுள் இதனை விளக்கும். திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்பை வியந்து பாடுகின்றான் இவன் (புறம்: 182) 'உண்டாலம்ம இவ்வுலகம்' எனத் தொடங்கும் புறப்பாட்டு ஒன்றிலிருந்தே இப் பாண்டியனின் தலைசிறந்த வாழ்க்கை இலக்கணம் இனிது விளங்கும் இவன் ஒரு தத்துவஞானி. உலகம் என ஒன்று உண்டோ ! இல்லையேல், அழிந்து கெட்டதோ என்ற ஐயம் மன்னன் மனத்தில் புகுந்ததாம். 'உண்டு' என முடிவுகட்டு கின்றான் பாண்டியன். 'பிறர்க்கென முயலுபவர் இவ்வுல கில் உண்டு' என்ற உண்மையால் உலகம் உண்டு என்கின்றான் அரசகவி. இன்றைய உலகில் இத்தகைய செந்நெறி யில் வாழமுயலும் ஒரு சிலரேனும் உளரோ எனும் ஐயம் நம் உளத்தில் தோன்றி மறைகின்றதன்றோ ?

பாண்டியன் அறிவுடை நம்பி

பிசிர் எனும் ஊரில் தோன்றிய ஆந்தையார் இவரைப் பாடியுள்ளார். இப்பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழ னுக்கு உயிர்த்தோழராக அமைந்து அவரோடு வடக் கிருந்து உயிர் நீத்தவர். இச்சோழன் காலத்துப் புலவரால் இவன் பாடல் பெற்றமையின் இச்சோழனும் பாண்டியன் நம்பியும் ஒரே காலத்தவராயிருததல் வேண்டும். இவர் பாடிய 'படைப்புப் பல படைத்து' எனத் தொடங்கும் புறப்பாட்டில் (புறம் : 188) 'பலசெல்வம் படைத்தவ ரினும் ஒருவர்க்கு மக்கட்பேறில்லையாயின், அவருக்கு இம்மைப் பயன் யாதுமில்' என இவர் கூறுவது சிறந்த தோர் கருத்தினை விளக்குவதாகும். தலைவியை அச்சுறுத் தித் தினைப்புனங்காவலோம்புமாறு தோழி கூற்றாக இவர் பாடிய பாடல் நெறியுடைத்து (அகம் : 28). நம் மன்னர் புவியாளப் பிறந்தவர் மாத்திரமன்று. கவியாளவும் பிறந்த

வருமாவர் என்றறிவது பாண்டிய நாட்டு மக்கள் இறும்பூது எய்துவதற்குத் தக்கதோர் காரணமாகும்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

போரில் வல்லோன். செய்யுள் செய்தலில் ஆற்றல் பெற்றோன். மாவன், ஆந்தை, அழிசி என்போர் இவன் நட்பினர். இவன் பாடிய வீரச்சுவை ததும்பும் வஞ்சினப் பாட்டு, படிப்போருள்ளத்தைப் பிணிப்பதாகும். (புறம்:71) 'சிங்கம்போன்ற சினத்தவர் என்னோடு பொருவர். அவரைப் புறங்காணேனாயின், எனது அவையின்கண் முறை கலங்கிய ஒருவனை ஏற்றிக் கொடுங்கோல் புரிந்த கொடுமை என்னைச்சேர்க. எனக்குச் சிறந்த இவளினும் (மனைவியினும்) நீங்குவேனாக. மாவன், ஆந்தை என்போரின் மகிழ் நகை யிழந்து, வளம்மிகும் பாண்டிநாட்டை யகன்று, வன்புலங்களைக் காக்கும் காவலனாகப் பிறப்பேனாக' என வஞ்சினங்கூறினான். இப்பாண்டிய மன்னனின் படைத்திறம், செங்கோன்மை, நட்புத்திறமனைத்தும் இச்செய்யுளில் பொதிந்து கிடக்கின்றன.

பாண்டியன் இங்ஙனமாயின் பாண்டியன் தேவி இவனிலும் சிறப்புற்றவர். பூதப்பாண்டியன் திடீரென உயிர் நீத்தான். சுடுகாட்டில் தேவி தீப்பாய்வாள், தன்னைச்சூழ நின்றவரைப் 'பல்சான்றீரே! பல்சான்றீரே' எனவழைக்கிறாள். (புறம் : 246) 'தலைவனிறப்ப நீயும் கூடச் செல்வாய் என்னாது இழிந்த கைம்மைநோன்பைக் கைக்கொள் என்கின்றீரே, பத்தினிப் பெண்டிராகிய எமக்குத் தாமரை நிறைந்த நீர்செறிந்த பெரிய பொய்கையும், தீயும் ஒரு தன்மைத்து' எனக் கூறும்முறை வியப்பைத் தருவதாகும். பெண்ணுலகிற்குப் பெருமை தரும் சீரிய பெண். இறையடிப்பற்றால் நாவுக்கரசருக்கு நீற்றறை நீர்நிறைந்த பொய்கையாயிற்றன்றோ?

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

சிலப்பதிகாரக்காதையின் தலைவனைக் கொல்வித்தவன் இப்பாண்டியன். பத்தினித்தேவி கடிந்துரைக்க, அரசு

கட்டில் னின்றும் வீழ்ந்து உயிர்நீத்தான். 'இதுவரை கோடாது நின்ற பாண்டியன் செங்கோல் கோடியதே' எனக் கவன்று, உயிர்நீத்துக் கோடிய செங்கோலை நிமிர்த்தான் இப்பாண்டியன். தலைக்கற்பினளாய கோப்பெருந்தேவியும் உடன் உயிர்நீத்தாள். இயற்பெயருக்கு முன் 'ஆரியப்படை கடந்த' என்ற அடைமொழி அமைத்துக் கொண்டதாலும், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் கூற்றாலும் இவன் வடவரைப் போரில் வென்று புகழெய்தியவன் எனப் பெறப்படுகின்றது.

கற்றவன் ; கற்றோர்பால் மதிப்புடையோன்; கற்றலின் பெரும்பயனை நன்குணர்ந்தோன். மக்களுக்குக் கல்வியினுலாய உயர்வை இவன் எடுத்துக்கூறும் பண்பு நயமுடைத்து. 'பிறப்பு ஒருமைத்தாய ஒருவயிற்றுப் பிறந்தோருள்ளும், ஒருவனது கல்வியின் சிறப்பால் பெற்ற தாயின் மனமும் ஒருபாற் சிறிது சாயும். ஒருகுடிப் பிறந்தோருள் ஓர் சபையில் மூத்தோன் வருக என்னாது, அறிவுடையோனை வருக என்றழைப்பர். அரசனும் அவன் வழியே செல்வான்' என்பது இப்பாடலின் பொருளாகும்; (புறம்: 183). இவருக்குப் பின்வந்த இவன் புதல்வன் பாண்டியன் இளஞ்செழியன் 1000 பொற்கொல்லரைக் கொன்று வஞ்சம் தீர்த்துக்கொண்டான் எனக் கூறப்படுகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

தலைசிறந்த பாண்டியருள் ஒருவன். 'பகைவருக்கு ஞாயிறு போன்றவன், என்போன்றவர்க்குத் திங்களை யொத்தவன்' எனச் சீத்தலைச் சாத்தனுரால் சிறப்பித்துப் பாடப்பெற்ற சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் புதல்வனுயிருக்கலாமென்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இளமையிலேயே அரசுகட்டிலேறியவன் இவன். 'கிண்கிணி களைந்தகால்' எனத் தொடங்கும் புறப்பாட்டு (புறம்: எஎ) இதனை விளக்கும். 'சதங்கை வாங்கப்பெற்ற காலில் வீரக் கழல் அணிந்தனை, குடுமியொழிக்கப்பெற்ற சென்னியின்கண் உழிஞை சூடினை, குறிய வளையொழிக்கப்

பெற்ற கையில் வில்லைப்பிடித்தனே, பாலை ஒழித்து உணவு இன்றுண்டனே' என இடைக்குன்றூர்கிழார் இவனைப் பாடுகின்றார்.

சேரனும், சோழனும் 'இவன் இளைஞன்' என இகழ்ந்து கூறினர் ஒருநாள். வெகுண்ட பாண்டியன் 'என்னை இகழ்ந்து கூறிய இவரைச் சிதறப் பொருது வெற்றிபெறேனெனில், என் குடிமக்கள் என்னைக் கொடுங் கோலனெனக் கூறுவாராக! எனது நெருங்கிய நண்பரும், சிறந்த அவைப்புலவருமாய மாங்குடி மருதனார் என்னைப் பாடாதொழிவராக' (புறம்: 72) எனச் சூள் உரைத்தான். அதற்கேற்பச் சேரனையும், சோழனையும், ஐம்பெருவேளிரையும் ஒருங்கே பொருது புறங்காட்டச்செய்து, சோழநாட்டினுள் சென்று 'தலையாலங்கானம்' என்னுமிடத்துப் பகைவரை மறித்து வெற்றிகொண்டு வாகைசூடினான்.

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சிக்குத் தலைவன் இவனே. இவ்வுலகின் நிலையாமை, இறைவன் அடி நீழலின் நிலைத்ததன்மை, இவற்றைப் பாண்டியனுக்கு அறிவுறுத்தி நல்வழிப்படுத்தவேண்டி இயற்றப்பெற்றதாகும் இந்நூல். நக்கீரரும் இவனது புகழைப்பாடி மகிழ்கின்றார்—'நெடுநல்வாடையில்.'

மறக்களவேள்வி, அறக்களவேள்வி செய்தோன் இவன். பாசறைசென்று புண்பட்ட வீரரைக்கண்டு, அன்புடன் அவரிடம் இன்பமொழிகள் கூறித் தேற்றும் சிறந்தசெயலை யுடையவன். இது 'நெடுநல்வாடை'ச் செய்தியாகும். மேனாட்டு அம்மையார் [1]பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்பாள் கிரிமீயாப்போரில் இத்துணைச் செயலில் ஈடுபட்டுப் புகழெய்தினள். இங்கு நம்மன்னனே இச்செயல் புரிந்தானெனல் சாலச்சிறந்த புகழாகும். செய்யுள் அமைத்தலில் வல்லவன். இரப்போர்க்குக் கொடுத்தலை யுடையவன். 'இவன் புகழ் விரிப்பிற் பெருகும்' என்கிறார் புறநானூற்று உரையாசிரியர்.

1. Florence Nightingale.

கானப்பேரெயில்கடந்த உக்கிரப் பெருவழுதி

கடைச்சங்கத்தின் இறுதியில் வாழ்ந்த பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப் பெருவழுதி. கடைச் சங்கத்தை வெகுவாய் ஆதரித்தவன். தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் மகனாயிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். [1]கானப்பேர் எயில் திருக்கானப்பேர்—மதுரை நகருக்கருகிலமைந்துள்ள காளையார்கோவில் எனுமூர்—என்னுமிடத்து தன் பகைவன் வேங்கைமார்பனைப் புறங்கண்ட காரணத்தால் இச் சிறப்புப்பெயர் பெற்றான். சேரமான் மாரிவெண்கோவும், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும் இவனுடன் நட்புக் கொண்டிருந்தனர் (புறம்: 367). இம் மூவேந்தரும் ஒருங்கிருந்தாரைக் கண்டு மகிழ்வெய்திய மூதாட்டி ஔவையார் மூவரையும் ஒருசேர மனமார வாழ்த்தினாள். மதுரை உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மனைக்கொண்டு அகத்துறைப் பொருள்செறிந்த அகநானூறு தொகுப்பித்தோன் இப்பாண்டியன். கடைச்சங்கத்தில் இவனும் உறுப்பினன்; புலவரையொப்பப் பாடும் ஆற்றல் மிகுந்தபுரவலன்.

நிற்க, நம் தமிழ்நாட்டுக்கென தனிச்சிறப்புக்கள் சில உள. அவற்றுள் இருமருங்கிலும் கடல்களும், மலைகளும், இடையே பல நதிகளும் அமைந்திருப்பது இயற்கைச் சிறப்பு. மற்றொன்று இளங்கோ, சாத்தனார், ஔவையார், கபிலர், பரணர் என்போரால் சிறந்த பாடல்கள் பெற்றிருப்பதாம். இவற்றினும் சிறப்பு, தமிழ்மறை எனக்கொள்ளப்படும் திருக்குறளைத் தனக்கெனப் பெற்றிருப்பதாம். தமிழனின் பண்பு தனக்கென வாழாதிருத்தலாம். எனவே, நம் திருக்குறள் உலகின்கணுள்ள பலப்பல மொழிகளின் வாயிலாக பிறநாடுகளுக்குஞ் சென்று புகழெய்தியிருக்கின்றது. இத்திருக்குறளைத் தன் அவையில் அரங்கேற்றும் பெரும்பேறு உக்கிரப் பெருவழுதிக்கே கிட்டியது. இனி, குறள் அரங்கேற்றப்பெற்றது காலத்தால் பிந்தியதென வாதிப்பாருமுளர்.

---

1. Fort of the Forest.

இவன் பாடிய நற்றிணைப்பாடலில் (நற்: 68) 'பன்றி தினையுண்ண வெண்ணி இயந்திரமமைத்த புழையை அணு கிற்றும். அக்காலத்து, பல்லி 'கச், கச்செ'ன' ஒலிக்கச் சகுனம் சரியன்று என எண்ணிய பன்றி புழையினுட் செல்லாது திரும்பியதாம்' இதனைத் தலைவன் தலைவியை எண்ணிச் செல்லுங்கால் நிலவு முதலிய இடையீடு நிகழ ஏதமுடைத்தெனத் தலைவன் தன்பதி மீண்டான்' என மன்னன் கூறும் பண்பு நயமுடைத்து. சுவைகள் வீரம், அச்சம், இழிப்பு, நகையாதி ஒன்பதாகும் ஈங்குப் பன்றி பல்லிச் சகுனம் பார்த்ததாகக் கவித்திறம் வாய்ந்த காவலன் கூறும் கூற்று நகைச்சுவை நிறைந்ததாகும்.

இவர் பாடிய அகத்துறைப்பாடல் (அகம் : 26) படிக் குந்தோறும் படிக்குந்தோறும் இனிமை பயப்பதாகும். தலைவி தன் தோழியிடம் 'தோழி, எம் தலைவனிடம் யான், முயங்குதலை விலக்கி, என்னை நீங்குவீராக என வெறுத்துக் கூறிய காலத்தும் அவர் என்னைப் பாராட்டிய காலங்களும் உள. ஆயினும் இன்று என்னை அணைத்தலைவிடாத அவர் கைகள் நெகிழ்ந்தன. ஊடல் எண்ணிய யான் அருகினின்ற என் மகனைக் காட்டி இனி நீவிர் எனக்குப் பொருந்தியவ ரல்லீர், இச்செல்வனே எனக்கு உரியவன் எனக் கூறி, மெல்ல என் மகனிடம் நகர்ந்தேனாக, அது கண்டு 'யாமும் அச்செல்வன்பாற் காதலுடையேம் எனக் கூறி அருகில் வந்து என் முதுகினை அணைத்துக்கொண்டார் என் தலைவன்' எனச் சுவைபடக் கூறுகின்றாள். இல்லறத்தில் இனிது நடைபெறும் ஓர் இன்ப நிகழ்ச்சியை அழகுபெற அமைக் கின்றார் நம் அரசு கவி.

இத்தகைய அகத்துறைப்பாடல்கள், தலைவன், தலைவி யர் உறவு, அவர் உறவின் விளைவான களவியல், கற்பியல், அவ்விருவர் கூட்டத்தால் அவர் பெற்ற மெய்ப்பாடுகள் இவற்றை விரிவாக எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. இவை கேவலம் இவ்வுடலின்பத்தைக் குறிப்பனவல்ல. ஈங்குத் தலைவன் எனக் கூறப்பெற்றவன் இறைவனாவான். தலைவி அவனால் புரக்கப்பெறும் மக்கள். பதியும், பசுவும்

ஒன்றியிருத்தலும், இவரைப்பிரிந்து வாழச்செயும் பாசம் அவ்வப்போது குறுக்கிடலும், அதன் விளைவாக பதி ஒருபாலும், பசு மற்றொருபாலும் வருந்துதலும், பின்னர் இருவருங்கூடி இன்பந்துய்த்தலுமாய செயல்களாக அமைந்துள்ள இப்பாடல்களை அமைக்கும் முறை, நம் தமிழ்மொழியிலல்லாது பிறமொழிகள் எவற்றினும் இத்தனை அழகுபெற அமைந்துள்ளனவோ என ஐயுற வேண்டியதிருக்கின்றது.

நன்மாறன்

இதுகாறும் கூறப்பெற்ற பாண்டியரையன்றி வேறு சில பாண்டியர்களும் இக்காலப் பகுதியினராவர். ஆனால் அவரைப்பற்றிய முழு வரலாற்றுண்மைகள் தற்போது கிடைத்தில. அவர்களுள் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் ஒருவன். மூவேந்தருள்ளும் மேம்பட்டு விளங்கியவன். பல புலவரால் பாடல் பெற்றவன். "விலக்குதற்கரிய வெட்சியால் கூற்றத்தை யொப்பை, வலியால் வாலியை யொப்பை, புகழால் மாயோனை யொப்பை, கருதியது முடித்தலான் முருகனை யொப்பை"யென மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இவரைப் போற்றுகின்றார். மதுரை மருதன் இளநாகனார் "சேர சோழரைக் காட்டினும் மேன்மையுற்று விளங்கும் நன்மாற! சூரியன் போன்ற வெந்திறலாண்மையும், சந்திரன் போன்ற குளிர்ந்த மென்மையும், மழையைப்போன்ற வண்மையும் என்ற முக்குணங்களையுடையோனாய், இல்லாதார் இல்லதாக, வெண்ணலைகள் மோதும் திருச்செந்தில் நகரில் முருகவேள் கோயிற்றுறையில் பெருங்காற்றினால் திரண்டு குவியும் மணல்மேட்டின்கணுள்ள மணலைக் காட்டினும் பல காலம் வாழ்வாயாக" (புறம்: 55,56) எனப் பாடினார்

நன்மாறன் சேர, சோழரைப் போருக்கிழுத்து ஏழு நாட்கள் போர்புரிந்தபின், மாற்றார் இவனுக்கடிபணிய 'மும்மலையும், முந்நதியும், முப்பதியும், முக்கொடியும்,

மூவரசும்' கொண்டு மூன்று நாடுகட்கும் நன்மாறனே தலைவனாயினான்.

பாண்டியன் கீரஞ்சாத்தன்

சிறந்த வீரன், அடைந்தோர்க்கு அன்புடன் அமுதளிப்பவன். போர்க்களத்து அஞ்சிப் புறங்கொடுத்து ஓடும் மாற்றலரை மேலும் துன்புறுத்தாது, அவருக்கு அரண்போல் விளங்குவான் எனப் புகழ்பெற்றோன். உண்மை வீரன் பண்பு இதுவாகும்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய நன்மாறன்

இவன் வீரன். வடநாட்டரசரை வென்று அடிமை கொண்டான். குளிர்ந்த தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொதுவெனக் கூறப்பொருளாய், போரையேற்றுத் திறை வேண்டுவானாயின், கொள்க என முன்னே கொடுத்தவர் நடுக்கந் தீர்ந்தார், கொடாதவர் இரங்கத் தக்கவர் என ஐயூர் முடவனார் இவனைப் பாடுகின்றார்.

கி. பி. 250-ஆம் ஆண்டுடன் கடைச்சங்கம் இறுதி யுற்றது. கி. பி. 300—600 வரை பாண்டியர் ஆட்சியினைப் பற்றிய செய்திகள் யாவும் கிடைத்தில. இதற்குக் காரணம் களப்பிரர் என்னும் மரபினர், பாண்டிநாட்டிற் புகுந்து மெலிவடைந்திருந்த பாண்டியன் ஒருவனைப் போரில் வென்று நாட்டை ஆட்சிபுரிய ஆரம்பித்ததே.

களப்பிரர்

இக்களப்பிரர் வெளிநாட்டினின்றும் இங்குப் புகுந்தவரோ என்றும், அல்லது இவர் தென்னாட்டினரோ என்றும் விளங்கவில்லை. குப்தமன்னருள் தலை சிறந்தவனும் தான் பெற்ற பல வெற்றிகளின் காரணமாகத் தன்னை 'இரண்டாம் நெப்போலியன்' என அழைத்துக்கொண்டவனுமான, சமுத்ர குப்தன் தெற்கில் படையெடுத்துவர அவனுக்கஞ்சி இவர் தென்னாடு புகுந்திருக்கலாம். அல்லது பல்லவர் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றிய காலத்து இக்களப்பிரர் பாண்டிநாடு புகுந்

திருக்கலாம் எனக் கருதுகின்றனர் ஆராய்ச்சியாளர். இவர் காளத்தி மலைப்பகுதிகளில் வாழ்ந்தவர். களவர், களபகு என்ற சொற்கள் களப்பிரர் எனத் தமிழில் வந்தது என்பர் இவர் பாண்டிநாட்டைக் கைப்பற்றியது ஏறக்குறைய கி. பி. 250-ஆவது ஆண்டு. ஏறக்குறைய 300-ஆண்டுகள் இவர் பாண்டிநாட்டை ஆட்சிபுரிந்தனர். அச்சுதக்களப்பாளன் என்னும் களப்பிர மன்னன் மூவேந்தரையும் வென்றுவிட்டதாகத் தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது.

இவர் பல்லவரோடு அடிக்கடி பொருது இன்னல் இழைத்தனர். பாண்டிநாட்டிற் புகுந்தபின் இவர் தம்மை முத்தரையர் என அழைத்துக்கொண்டனர். நாலடியாரில் இம்முத்தரையர் பாடப்பெற்றுள்ளார். கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் களப்பிரர் வலிகுன்றி தஞ்சைக்கருகி லுள்ள கொடும்பாளூரில் பாண்டியருக்கடங்கிய சிற்றரசர் களாக வாழ்ந்துவந்தனர். தற்போது மதுரை, இராம நாதபுரம் மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் 'கள்ளர்' என்ற பெயருடன் இம் மரபினர் வாழ்ந்துவருகின்றனர். 'அம்பலகாரர்' என்பது இவருக்குச் சிறப்புப்பெயர். இம் மக்களின் முன்னேற்றத்திற்கென மேற்கூறிய மாவட்டங் களில் [1] கள்ளர் முன்னேற்றப் பாடசாலைகள் பல அரசிய லார் அமைத்து நடத்திவருகின்றனர். களபேரம் எனும் சொல்லிற்குக் [2]குழப்பம் என்பது பொருள். இவர் பாண்டி நாட்டில் பெருங்குழப்பம் உண்டாக்கியதால் இவர் களப் பிரர் என அழைக்கப்பெற்றார் என்கின்றார் அறிஞர், பூரண லிங்கம்பிள்ளை.

அஃது எங்ஙனமாயினும் இக் களப்பிரர் தம் மொழி யைப் பேண எண்ணி, தமிழ்மொழியினையும், கலைப்பண்பு களையும் அழித்துவிட்டனர் எனத் தெரிகிறது. கி. பி. 575-ஆவது ஆண்டில் பாண்டியன் கடுங்கோன் என்பான் ஏதிலாரைப் போரில் வென்று இறந்த பாண்டியர் ஆட்சிக் குப் புத்துயிர் அளித்தான். பாண்டியன் நெடுஞ்சடையன்

1. Kallar Reclamation schools. 2. Confusion.

காலத்திய செப்பேடுகள் கி. பி. 600 முதல் 900 வரையுள்ள பாண்டியரைப்பற்றிப் பல செய்திகள் தருகின்றன. எனினும் இப் பாண்டியர் ஒருவருக்கொருவர் உறவு யாது, அவர் ஆட்சிபுரிந்த காலம் யாது என்பனபற்றி ஆராய்ச்சியாளருக்குள் முரண்பாடு இருந்து வருகின்றன. எனினும் 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கடுங்கோன் மாறவர்மன், அவனி சூளாமணி என்ற பாண்டியர் ஆட்சி செலுத்தி வந்தனர் என்பது உறுதி.

சங்ககாலத்திற்குப் பின்வந்த பாண்டியர்

சங்ககாலத்திற்குப் பின்வந்த பாண்டியமன்னரின் வரலாறு எழுதித்தந்த அறிஞர், பண்டாரத்தார், அவர் காலத்தை,

கி. பி. 575—900 வரை ஆண்ட பாண்டியர்
,, 900—1190 வரை ,,
,, 1190—1310 வரை ,,

எனப் பிரித்து, கி. பி. பதினான்காம் நூற்றாண்டிற்குப்பின் வந்தவரை மற்றொரு பகுதியினராகவும் வகுத்து எழுதியுள்ளார். செப்பேடுகள், கல்வெட்டுக்கள், மெய்க்கீர்த்திகளினின்றும் நமக்குக் கிடைக்கும் செய்திகள் பெரும்பாலும் உண்மைச்செய்திகளேயாயினும், காலக்கோள்களாலும், புல்லரின் செயலாலும் வரலாற்றுண்மைகள் திரிந்து, விரிந்து மாறுபடுகின்றன. எனினும் கிடைத்துள்ளவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

பாண்டியன் கடுங்கோன்

பாண்டிநாட்டிற்குத் தீங்கிழைத்த களப்பிரரை அழித்தொழித்தவன் பாண்டியன் கடுங்கோன். வீரமும் புகழும் படைத்தோன். நாட்டிற்குப் புத்துயிர் அளித்த காரணத்தால், இவன் காலத்திற்றான் [1]முதற் பாண்டிய

1. The First Pandyan dynasty.

அரசு செழித்திருந்தது. முதற்சங்க காலத்திய கடுங் கோனுக்கும் இவனுக்கும் பெயரளவில்தான் தொடர்பு உண்டு. இவன் புதல்வன் அவனி சூளாமணி. இவனைப் பற்றி நாம் அறியக்கிடப்பவை யாவுமில. அவனி சூளா மணியின் மகன் **பாண்டியன் சேந்தன்,** சடையவர்மன் எனப் பெயர் புனைந்துகொண்டான். வீரமும், நேர்மையும் படைத்தவன். சேரரை வென்று தன்னை 'வானவன்' என வழைத்துக்கொண்டான். இவன் ஆட்சிக்காலத்துப் புத்தர் பிறந்த மண்ணை மிதித்தல் வேண்டுமெனவும், புத்தரின் வாழ்க்கைச் சின்னங்கள் கிடைப்பின் அவற்றைக் கைப்பற் றிப்போக வெண்ணியும் இந்தியாவிற்குள் வந்த சீனயாத்தி ரிகன் 'யுவான்சுவாங்' என்பான் காஞ்சி வந்துசேர்ந்தான். இவன் எழுதிப்போந்த குறிப்புக்கள் பல வரலாற்றாசிரிய ருக்குப் பெரும்பயன் அளிப்பன. பாண்டிநாட்டிற்கும் செல்ல இவன் கருதியதாகவும், அதற்குள் பாண்டிய மன்னன் இறந்துவிட்ட செய்தியறிந்து ஆங்குச் செல்ல வில்லை யெனவும், அக் காலத்துப் பாண்டிநாடு பஞ்சத்தில் மூழ்கிக் கிடந்ததென்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அரிகேசரி - மாறவர்மன்

சேந்தன் புதல்வன் அரிகேசரி - மாறவர்மன், அரி கேசரி—பராங்குச மாறவர்மன் எனவும் அழைக்கப்பெற் றான். இவன் [1]பரவர்களை வென்றான். நெல்வேலியில் பல்லவர்களைப் பொருது வெற்றிகொண்டான். நெல்வேலி என்பது திருநெல்வேலியாகும் என்பாரு முளர். சுந்தர மூர்த்தி நாயனார் திருத் தொண்டத்தொகையில் 'நிறைக் கொண்ட சிந்தையான், நெல்வேலி வென்ற நின்றசீர் நெடு மாற னடியார்க்கும் அடியேன்' என நெல்வேலிப் போரைக் குறிப்பிடுகின்றார்.

திருவிளையாடற் புராணம் கூறும் கூன்பாண்டியன் இவனே யாவான். சோழமன்னன் புதல்வியான மங்கை யர்க்கரசியார் இவர் மனைவி. மந்திரி குலச்சிறையார்.

1. Paravas.

மன்னன் சமணமதப் பற்றுக்கொண்டிருக்க, வருந்திய மாதேவி குலச்சிறையாரை அனுப்பிச் சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய திருஞானசம்பந்தரை அழைக்க, சம்பந்தர் மதுரைசென்று சமணருடன் வாதுபுரிந்து மன்னனை நல்வழிப்படுத்தினர். அனல் வாதம், புனல்வாதம் புரிந்து தோல்வி கண்ட சமணர் தாமாகவே கழுவேறிய வரலாறு அனைத்தையும் சேக்கிழார்பெருமான் அருளிச்செய்த பெரியபுராணத்தின்கண் காண்க.

இக் கூன்பாண்டியன் சேர மன்னரையும், குறுநில மன்னர் சிலரையும் வென்று புகழெய்தினன். சோழரையும் பொருது வெற்றி கொண்டானென வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறும். சோழனை வென்று உறையூரைக் கொண்டபின் அச் சோழன் மகளையே மணம்புரிந்திருத்தல்வேண்டும். மாயூர சந்திரகுப்தனோடு போரிட்டுத் தோல்வி எய்திய யவன நாட்டுப் படைத்தலைவன் செலூக்கஸ் நிகேடர் என்பான், பின்னர்த் தன் மகளைச் சந்திரகுப்தனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்தானன்றே!

கோச்சடையன் இரணதீரன்

இவன் மாறவர்மன் அரிகேசரியின் மகனாவான். தன்னை 'வானவன்' என அழைத்துக் கொண்டான். சேனைப்பல மிகுந்த ஆய்வேளை மருதூர்ப் போரில் வென்றான்; மருதூர் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற் கருகிலுள்ள திருப்புடை மருதூராகும் என்பர் ஆராய்ச்சியாளர். இம் மருதூர் வெற்றியை அரிகேசரி வர்மனுக்கு ஏற்றிக் கூறுவாருமுளர். இவன் காலத்தில் சுந்தரர் சேரமான்பெருமாள் நாயனருடன் மதுரை சென்று திரும்பிய செய்தி சுந்தரர் தேவாரத்தினின்றும் அறியக்கிடக்கின்றது.

முதலாம் மாறவர்மன் இராசசிம்மன்

இவன் கோச்சடையன் புதல்வன்; போரில் வல்லோன். சேர, சோழ மன்னருடன் கூடிக்கொண்டு நந்திவர்மப்

பல்லவனை நந்திபுரம் எனுமிடத்தில் தோற்கடித்தான். பல்லவ படைத்தலைவன் உதயசந்திரன் கொடும்போர் புரிந்து இறுதியில் பாண்டியனை மேற்செல்லாது தடுத்தான். மேலைக்கங்கரின் துணைகொண்டு சளுக்கிய மன்னனை இரண்டாம் கீர்த்திவர்மனையும் புறங்கண்டான்.

நெடுஞ்சடையன்

மாறவர்மன் இராசசிம்மன் மகன் ஜடாவல்லபவர்ம பராந்தக நெடுஞ்சடையன். இவன் ஆட்சிசெய்த காலம் கி. பி. 765 முதல் கி. பி. 790 வரை. வேள்விக்குடிச் செப்பேடுகள் அளித்தவன் இப்பாண்டியன். திரு. நீலகண்ட சாத்திரிகளின் கூற்றின்படி இச்செப்பேடுகள் இல்லையாயின் கடைச்சங்க காலத்திற்குப்பின் வந்த பாண்டியர் வரலாற்றினையோ கி. பி. 300 முதல் 600 வரை பாண்டிநாட்டிற் புகுந்து, பல இன்னல்கள் விளைவித்த களப்பிரர் ஆட்சியினைப்பற்றியோ யாதும் அறிந்துகொளல் இயலாததாகும். ஏறக்குறைய இருபத்தைந்தாண்டுகட்கு மேல் இவன் ஆட்சி நடைபெற்றது. கொங்குநாட்டு மன்னரை யடக்கி நாட்டையும் கைப்பற்றினன். வேணாட்டு மன்னனையும் (வேணாடு என்பது - திருவனந்தபுரம்) வென்றான். தன்னை எதிர்த்த பல்லவ மன்னனை, காவிரியின் தென்கரையிலுள்ள பெண்ணாகடத்தில் தோற்கடித்துப் புகழெய்தினன். பெண்ணாகடப் போரில் தோல்வியுற்றவன் நந்திவர்மப் பல்லவன். பெண்ணாகடம் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்.

இவனது உத்தர மந்திரி மதுரகவி; மதுரைக்கருகிலுள்ள ஆனைமலைக்கருகில் ஒரு வைணவக்கோவிலை யமைத்தான். இந்த ஆனைமலை மிகப்பெரிய உடலைப்பெற்ற யானை படுத்திருப்பதுபோல் தோற்றமளிக்கின்றது. இம்மதுரகவி, வேளாளர்வகுப்பைச் சார்ந்தவரெனவும், அவர் ஊர் 'களந்தை' எனவும் வேள்விக்குடிச் செப்பேடுகள் பேசுகின்றன. இக்களந்தை நெல்லை மாவட்டத்திலுள்ள 'களக்காடு' எனக் கருதப்படுகின்றது. இவர் வைணப்

பெரியாராகிய மதுரகவியாழ்வாராகவிருக்கலாம் என்பது ஒரு சிலர் துணிபு. வேறுபல குறுநில மன்னரையும் பொருது புறங்கண்டான் இவன். கொங்குநாட்டையும் வென்று அதியமான் என்பானை மதுரையில் சிறை வைத்தான் எனச் செப்பேடுகள் கூறும்.

அதியமான் சேலம் மாவட்டத்திலுள்ள தகடூரி லிருந்து ஆட்சி புரிந்தான். தகடூர் தற்போதுள்ள தருமபுரி யாகும். ஒரு பெரும்படை உடையான். காவந்தபுரத்தில் பேரகழி ஒன்றும், கோட்டையும் அமைத்திருந்தான். இக்காவந்தபுரம் திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள உக்கிரன்கோட்டையா யிருத்தல் வேண்டும். தற்போது இவ்வூர் அழிந்த நிலையி லிருக்கின்றது. பாண்டியமன்னர் அனைவரும் சைவர். இவன் ஒருவனே வைணவப்பற்றுக்கொண்டவன்.

நெடுஞ்சடையன் ஆட்சியில் பல அரசியல் தலைவர் தம் தம் இடங்களிலிருந்து நாட்டைச் செவ்வனே நடாத்தி வந்தனர். அவர்களுள் சிறந்தவன் மாறன்காரி என்பான். ஆனைமலையில் திருமாலுக்கு ஆலயம் கட்டுவித்தவன் மாறன்காரியே என்பர். மேலும், எயினன், சாத்தன் கணபதி எனப் பல படைத்தலைவர் ஆங்காங்கே தம் தம் கடமையில் செவ்வனே ஒழுகி வந்தனர். இவருள் ஏனாதி சாத்தன் என்பான் சிறந்தவன். மன்னர் தம் வரலாற்றுப் பெருமைகளைச் செப்பேடுகளில் எழுதி வைக்கும் வழக்கத்தைத் தொடங்கியவன் இச் சாத்தனுவான். சாத்தன் கணபதி திருப்பரங்குன்றம் கோயிலுக்குப் பணி புரிந்து, குளமும் திருத்தியமைத்தான்.

நெடுஞ்சடையன் புதல்வன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியன். இவன் சில ஆண்டுகள் மாத்திரம் ஆட்சி செய்தான்.

வரகுண மகாராசன்

இராசசிம்ம பாண்டியன் புதல்வன் வரகுண மகாராசன். சின்னமனூர்ச் செப்பேடுகள் இவனைச் சிறப்பித்துக்கூறும்.

இவன் எழுதித் தந்த கல்வெட்டுக்கள் பல, ஆடுதுறை, கும்பகோணம் முதலியவிடங்களில் கிடைத்துள்ளன. இவற்றினின்றும் இவன் நந்திவர்மபல்லவன் காலத்து வாழ்ந்தவன் எனத் தோன்றுகின்றது. சோழநாட்டை வென்று ஆட்சி புரிந்தான். இம்மன்னனின் கல்வெட்டொன்று நெல்லை மாவட்டத்தின் அண்மையிலுள்ள அம்பாசமுத்திரத்தில் கிடைத்துள்ளது. இதனினின்றும் இவன் அம்பாசமுத்திரம் சிவன்கோவிலுக்கு நாள் வழிபாட்டிற்கென 290 பொற்காசுகள் அளித்த செய்தி கிடைத்துளது.

இப்பெயருடையான் ஒருவனை மணிவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையாரில் குறிப்பிட்டுள்ளார். இவன் முற்றத்துறந்த புனிவராம் பட்டினத்தடிகளாலும் புகழ்ந்து பாடப்பெறுகின்றான். வரகுண பாண்டியன் என்ற பெயருடன், மணிவாசகர் காலத்து ஆட்சிமன்னனாகிய அரிமர்த்தன பாண்டியனுக்குப் பல தலைமுறைமுன் ஒருவரிருவர் விளங்கியதாகச் சொல்லப்படுகின்றது. மணிவாசகர் குறித்த வரகுண பாண்டியன் இவருள் முந்தியவனோ, பிந்தியவனோ தெரிகிலம். மாணிக்கவாசகர் காலம் மட்டும் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையுற்று ஆராயும் நல்லறிஞர் முடிவால் துணியப்பெற வேண்டுவதாம்.

நிற்க, அண்மையில் 'குமரகுருபரன்' இவ்வாண்டு மார்கழித்திங்கள் இதழில் வெளிவந்துள்ள செய்தியை இங்குக் குறிப்பிடுதல் நலந்தரும். " திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளைத் தமது முதல் அமைச்சராகப் பெற்ற பேறுடையவரும். சிவபெருமான் இடைக்காடரது பிணக்குத் தீர்த்தகாலத்திய பாண்டிய அரசனாகிய குலேச பாண்டியனது திருமகனும், இறைவன் திருவாதவூரடிகளுக்கு உபதேசித்து ஆட்கொண்டமை—நரியைப் பரியாக்கி............முதலிய திருவிளையாடல்கள் நிகழப்பெற்ற மன்னவரும்............திருப்பெருந்துறையில் ஆலயம் அமைக்கவும் அடியார்களுக்கு அளிக்கவும் வாதவூரரால் பயன்

படுத்தப்பெற்ற பொருள் படைத்தவரும், 'வரகுணனும் தென்னவன்,' 'வரகுணன் வெற்பின்வைத்த கயல்' என்று திருக்கோவையாரில் குறிக்கப்பெற்றவரும், 'பெரிய அன்பின் வரகுணதேவர்' எனப் பட்டினத்தடிகளாலும், நம்பியாண்டார் நம்பியாலும் புகழப்பெற்ற இரண்டாம் வரகுணன் என்று ஆராய்ச்சியாளர் ஒரு சாராரால் கருதப் பெறும் சிவபத்திச் செல்வரும் ஆகிய அரிமர்த்தன பாண்டியன்.''

சீமாறன் சீவல்லபன்

வரகுணபாண்டியனின் மகன் சீமாறன் சீவல்லபன். கி. பி. 835-ஆவது ஆண்டில் இவன் ஆட்சிபுரிந்தான். சின்னமனூர் செப்பேடுகள் இவனைப்பற்றிக் கூறுகின்றன. இவனின் வெற்றிகளைப்பற்றி இச் செப்பேடுகள் தெரிவிக்கும் செய்திகளை இலங்கையர் பண்டை வரலாற்று நூல் மகாவம்சம் வலியுறுத்தும். சிங்களம்மீது படையெடுத்துச் சிறந்த வெற்றிபெற்றான். வெற்றிக்குப்பின் ஈழநாட்டின் நகரங்களைக் கொள்ளையிட்டு, புத்தக் கோவில்களையும் சூறையாடினான். இந்நிகழ்ச்சியால் ஈழநாடு தன் செல்வமனைத்தையும் இழந்து வருந்தியதென 'மகாவம்சம்' கூறும். இலங்கை மன்னன் இப்பாண்டியனுக்குத் திறை செலுத்தினான். மாயப்பாண்டியன் என்பான், அரசுக்குப் போலி உரிமை கொண்டாடிக் கலகம்செய்து இலங்கை மன்னன் ஆதரவுபெற்றுப் பாண்டியனுக்குப் பல துன்பங்கள் விளைத்தான். இவனையும் பாண்டியன் ஒழித்தான்.

பின்னர், கங்கர், பல்லவர், காலிங்கர் என்பார் இவன் மேற்செல்லப் பாண்டியன் அனைவரையும் குடமூக்குப் போரில் தோல்வியுறச் செய்தான். குடமூக்கு தற்போதைய கும்பகோணமாகும். ஆயினும் இவன் தெள்ளாறு, அரிசில் என்னும் இடங்களில் நிருபதுங்கவர்மப் பல்லவனிடம் தோல்வியுற நேர்ந்தது. 'இவன் ஆட்சிக்காலம் வெற்றியும், தோல்வியும் கலந்துள்ளது' எனத் திரு. நீலகண்டசாத்திரிகள் கூறுவது பொருத்தமுடைத்து. எவ்வாறாயினும்

பாண்டியநாடு சிதைந்துவிடாமற் பாதுகாத்துத் தன்மகன் இரண்டாம் வரகுணவர்மனுக்கு அளித்த பெருமை இவனுடையதாகும். இவனேடு [1]முதல்பாண்டிய அரசு முற்றுப் பெற்றதெனலாம். இவனுக்குச் சிறப்புப் பெயர்கள் பல. அவற்றில் 'அவனியசேகரன்' என்பது ஒன்றாகும். இப் பெயரால் 'அவனியசேகரமங்கலம்' என்ற ஊர் ஒன்று உளது. அது தற்போது அணியாபரணநல்லூர் என வழங்கும் ஊராகவிருக்கலாமோ எனக் கருதுகின்றனர் ஆராய்ச்சியாளர்.

இரண்டாம் வரகுணவர்மன்

இவன் சீமாறன் சீவல்லபனின் மகன். இரண்டாம் வரகுணபாண்டியன் எனவும் இவனை அழைப்பர். பாண்டியருக்கும், பல்லவருக்கும் நடைபெற்ற போர்கள் இவன் காலத்திலும் நீடித்தன. சோழமன்னன் இவனிடம் தோல்வியுற்றான். இப்பாண்டியனின் ஆட்சி இறுதியில் நிருபதுங்கனின் மகன், அபராஜிவர்மப் பல்லவன், சோழன், கங்கன் இம்மூவரும் சேர்ந்து திருப்புறம்பயம் என்னுமிடத்தில் இவனை எதிர்த்தனர். பாண்டியன் தோல்வியெய்தினன். கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ளது திருப்புறம்பயம். சிங்களவரும் பாண்டிநாட்டின் மீது படையெடுத்தனர். இச்சமயம் சோழநாடு புத்துயிர் பெற்றது. எனவே, பாண்டியர்பெருமை அழிவுறத் துவங்கிற்று.

கி. பி. 880-வது ஆண்டில் நடைபெற்ற புறம்பயப் போர் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பாண்டியராட்சியும், பல்லவராட்சியும் இப்போருக்குப்பின் சிதைந்தன. திருச் செந்தூரில் உறையும் முருகப்பெருமானிடம் பெரும் பற்றுடையவன் இப்பாண்டியன். இக்கோவிலுக்கு நாள் வழிபாட்டுக்கென 1400 பொற்காசுகள் நிவந்தமாக இவன் வழங்கினன்.

1. First Pandyan Empire.

பராந்தக பாண்டியன்

இவன் மனைவி சேரமன்னன் மகள். திருநெல்வேலி நகருக்கருகிலுள்ள சேரன்மாதேவி என்ற ஊர் இவ்வரசியின் நினைவாக அமைக்கப்பெற்றது. இவன் உக்கிரன் என்னும் தலைவனைத் தோற்கடித்தான். திருநெல்வேலிக் கருகிலுள்ள 'உக்கிரன்கோட்டை' என்ற ஊர் இவன் பெயரால் இன்றும் அழைக்கப்பெறுகிறது.

மூன்றும் இராசசிம்ம பாண்டியன்

கி. பி. பத்தாம் நூற்றூண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றூண்டுவரை பாண்டிநாட்டை யாண்ட பாண்டியர் பலர். இவருள் பாண்டிநாட்டு வரலாற்றினை ஆராய்ந்தறியப் பெரிதும் பயன்படும் ஆதாரங்களைக்கொண்ட சின்னமனூர்ச் செப்பேடுகளை அளித்த மூன்றும் இராசசிம்ம பாண்டியன் குறிப்பிடத்தக்கவன். இவன் ஓர் வள்ளல். பலகோவில்களுக்குத் தானங்களும், பிரமதேயங்களும் அளித்தவன். பிரமதேயங்கள் மன்னர் பிராமணர்களுக்கு இனமாக அளித்த நிலப்பகுதிகளாம். நெல்லைநகருக் கருகில் அம்பாசமுத்திரத்திற்கு அண்மையில் பிரமதேசம் என்ற ஊர் இன்னும் இருப்பதைக் காணலாம்.

இக்காலத்து, முதற்பராந்தக சோழன் பாண்டியனோடு போர் தொடுத்தான். பாண்டியனின் தோழன் இலங்கை மன்னன் காசிபன் பெரும்படையை இவனுக்குத் துணையாக அனுப்பினான். இருபடைகளும் ஒருங்குசேர்ந்து போரிட்ட பின்னும் வெள்ளூர் என்னுமிடத்தில் பாண்டியன் படைகள் புறங்காட்டி யோடின. பாண்டியன் தன் நாட்டை இழந்து, சிங்களஞ்சென்று தன் நண்பனோடு தங்கவேண்டியதாயிற்று. எனவே, இவன் காலத்தில் பாண்டிநாடு இழிந்த நிலையடைந்ததென்னலாம். திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் கிடைக்கும் முதற்பராந்தக சோழனின் கல்வெட்டுக்கள் இதற்குத் தக்க சான்றுதரும்.

இனி ஆராய்ச்சியாளரால் இக்காலத்தவராகக் கூறப்படும் பாண்டியர் பலர். இவரைப்பற்றிய செய்திகளைத்

தையும் எழுத முற்படின் விரியும் என அஞ்சியும், இச் சிறிய கட்டுரையில் அது முறையன்று என எண்ணியும் ஆங்காங்கே சில பாண்டியரைப் பற்றிய குறிப்புக்கள் மாத் திரம் தரப்பெற்றுள.

சடையவர்மன் குலசேகர பாண்டியன்

பன்னிரண்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில் ஆட்சி புரிந்தவன் **சடையவர்மன் குலசேகர பாண்டியன்**. இவன் கி. பி 1162 வது ஆண்டில் அரசுகட்டில் ஏறினன். இப்பாண்டியன் திருநெல்வேலித் திருநகரைத் தன் தலை நகராகக் கொண்டு பாண்டி நாட்டின் தென்பகுதியினையும், **பராக்கிரம பாண்டியன்** என்பான் மதுரையைத் தலைநகராகக் கொண்டு வடபகுதியினையும் ஆண்டு வரலாயினர். சிறிது காலஞ்செல்ல இவ்விரு மன்னருக்குமிடையே பகைமை மூண்டது. குலசேகரன் மதுரையை முற்றுகையிட்டான். பராக்கிரமன் இலங்கைமன்னன் உதவியை நாட, தண்ட நாயகன் என்ற படைத்தலைவன் தலைமையில் பெரும்படை யொன்று அனுப்பப்பெற்றது.

இதற்குள் குலசேகரன் மதுரையைக் கைப்பற்றி மன்னனையும் அவன் மனைவி மக்களையும் கொன்று தீர்த் தான். இக்கொடுஞ்செயலை எண்ணிச் சினங்கொண்ட தண்டநாயகன் பாண்டியனைப் பலவிடங்களில் எதிர்த்து முறியடித்து, மதுரையைக் கைப்பற்றி இறந்துபட்ட பராக்கிரமன் மகன் வீரபாண்டியனை மதுரையில் மீண்டும் அரசுபுரியச் செய்தான். ஆனல் தோல்வியுற்ற குலசேகரன் மறுமுறையும் படை திரட்டி வீரபாண்டியனை மதுரை யினின்றும் விலக்கினன். பின்னர் மற்ருெரு சிங்களப் படை பாண்டிநாட்டிற்புகுந்து குலசேகரனைத் தோற் கடித்தது. சிரிவில்லிப்புத்தூர்ச் சண்டையிலும் குலசேகரன் தோல்வியுற்றுத் திருநெல்வேலியில் அடங்கியிருந்தான். இறுதியில் சோழமன்னனுகிய இராசாதி இராசன் சிங்களப் படையை அழித்து மதுரையைக் குலசேகரனுக்களித்தான். ஆயினும் செய்ந்நன்றியை மறந்து குலசேகரன் சிங்களவ

ரோடு உறவுகொண்டமையின், வெகுண்ட சோழன் மதுரையை வீரபாண்டியனுக்களித்தான். நன்றிமறந்த குலசேகரன் தன் நாட்டையிழந்தான்.

இவனுக்குப்பின் தோன்றிய பாண்டியர், சடைய வர்மன், வீரபாண்டியன், மாறவர்மன் முதலானோர். இவரைப் பற்றிய குறிப்புக்கள் அனைத்தும இன்னின்னமன்னர் இவரிவரோடு மலைந்து வெற்றி, தோல்வியுற்றனர் என்பன மாத்திரம் தற்போதைய ஆராய்ச்சியில் கிடைத்துள்ளன. இவை தேர்வுக்கெனப் பயிலும் மாணவர்க்கேயன்றி மற்றையோர்க்குப் பயன் தராதெனக்கொண்டு அவற்றை விட்டுவிட்டனம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சோழ மன்னரின் வலு குறையவே பாண்டிய மன்னர் ஆட்சி புத் துயிர்பெற்றதெனலாம். இக்காலத்தவரைப்பற்றி அறியக் கிடக்கும் கல்வெட்டுக்கள் எண்ணிறந்தவை யாயினும் அவற்றைச் சான்றுகளாகக் கொண்டு இவர் வரலாற்றினைத் தெளிவுபட எழுதிவிடல் எளிதன்று. நாளடைவில் கரைகாணலாமெனக் கருதுகின்றனர் அறிஞர்.

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

இக்காலத்தவருள் குறிப்பிடத்தக்கவன் முதல் மாற வர்மன் சுந்தரபாண்டியன். இவன் பதின்மூன்றும் நூற்றாண் டின் முற்பகுதியில் மதுரையில் ஆட்சிபுரிந்தோன். பாண்டிய நாட்டின் பழம் பெருமையை எண்ணி நாட்டை நலம்பெறச் செய்தோன் இவன். நெல்லை மாவட்டத் தைச்சார்ந்த அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள திருவாலீ சுவரக் கல்வெட்டுக்கள் இவன் செய்திகளைக் கூறும்.

இவன் மெலிவுற்றிருந்த சோணாட்டின்மீது படை யெடுத்தான். அவ்வமயம் சோழநாடு, புகழுடன் ஆண்டு மறைந்த மூன்றும் குலோத்துங்க சோழனின் மகனால் ஆளப்பெற்று வந்தது. இச்சோழன் ஆற்றல் குறைந்த வன். எனவே நல்ல வாய்ப்புக் கிட்டியது சுந்தரபாண்டிய

னுக்கு. தனது படையைத் திரட்டிப் போருக்கெழுந்து சோணாட்டைக் கைப்பற்றினான். தஞ்சாவூர், உறையூர் என்ற சோழநாட்டுப்பதிகள் தீக்கிரையாயின. அழகிய கட்டிடங்கள், மண்டபங்கள் அழிந்தொழிந்தனவாம். பின் சோழனைத் தனக்குத் திறை செலுத்தப் பணித்துப் பின்னர் நாட்டைச் சோழனுக்கே அளித்துவிட்டான். கல்வெட்டுக்கள் 'சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியத்தேவர்' என இம்மன்னனைக் குறிக்கின்றன. இக்காலத்துக் கொங்கு நாட்டு மன்னர் தமக்குள் மாறுபட்டு இப்பாண்டியனிடம் அடைக்கலம் புகுந்தனர். பின் சோழமன்னன் தனக்குச் செலுத்தவேண்டிய திறையை முறையாகச் செலுத்தவில்லையெனச் சினந்த பாண்டியன் மறுமுறையும் சோணாட்டைக் கைப்பற்றிச் சோணாட்டுத் தலைநகரில் தனக்கு அபிடேகமும் செய்து கொண்டனன்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன்

இவன் சிறந்த வீரன். பலமன்னர் இவனுக்குத் திறை செலுத்திவந்தனர். இவனது புகழைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் சிதம்பரத்தில் கிடைத்துள்ளன. சேர மன்னனைப் போரில் வென்றான். சோணாட்டையும் கைப்பற்றினான். யானைகள் இவனுக்குத் திறையாக அளிக்கப்பெற்றன. இலங்கை மன்னனையும் அடிபணியச் செய்து சிறந்த பொருள்களைத் திறையாகப்பெற்றனன். இறை வழிபாட்டிலும் ஈடுபாடுடையோன். தில்லை, திருவரங்கம் கோயில்களில் பொன்வேய்ந்து புகழ் எய்தியவன். 'கோயில் பொன்வேய்ந்த பெருமாள்' எனச் சிறப்புப்பெயர் பெற்றான்.

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன்

இவன் ஆண்ட காலத்தில் நாடு நல்ல நிலையில் இருந்தது. இவனது சிறப்பாட்சியைப்பற்றி உலகமுழுவதும் சுற்றிவந்த இத்தாலிநாட்டு [1]மார்க்கோ போலோ என்பார்

1. Marco Polo.

பின் வருமாறு கூறுகின்றார் "மன்னன் தன் நகரில் பெரும் பொருள் குவித்து வைத்திருக்கிறான். அரசு நல்ல நிலையில் நடைபெறுகிறது," என்பதாகும். பாண்டி நாட்டைப் பார்க்க வந்த 'வாசப்' என்ற இஸ்லாமியர் பாண்டியன் ஆட்சிக்குப் புகழுரையே தந்துள்ளார்.

இலங்கைக்குப் படையெடுத்துச்சென்று போரில் வெற்றியெய்தி வீறுடன் திரும்பிய பாண்டியன் திரண்ட கொள்ளைப்பொருள்களையும் கொணர்ந்தான் எனவும், ஈழமன்னன், கொள்ளைப்பொருளுடன் போய்விட்ட புத்தர் பல் ஒன்றைத் திரும்பப்பெற வேண்டிப் பாண்டியனுக்கு அடிபணிந்தான் எனவும் வரலாறு பேசுகின்றது. கொல்லத்தைக் கைப்பற்றியதால் 'கொல்லங்கொண்ட பாண்டியன்' எனச் சிறப்புப்பெயர் பெற்றான் இவன். சோழநாடு, நடுநாடு, தொண்டைநாடு என்பனவற்றையும் அடக்கி அமைதி நிறுவினன். தான் கொணர்ந்த பொருளை நற்பயன்படுத்த எண்ணியவனாய்த் திருநெல்வேலி நகரத்தின் மத்தியில் விளங்கும் நெல்லையப்பர் ஆலயத்திற்கு மதிற்சுவர் எழுப்பியதாகக் கல்வெட்டொன்று கூறுகின்றது.

இவன் காலத்து வீரத்தலைவர் பலர் வாழ்ந்து வந்தனர் இப் படைத்தலைவர் மன்னனுக் கடங்காது தத்தம் இடங்களில் தம் தம் ஆட்சிபுரியத் துவங்கினர். எனவே, பல போர்களில் தலையிட்டுப் பலங் குன்றியிருந்த பாண்டியன் தன நகரை நீங்கித் திருநெல்வேலியில் கரந்துறைய நேர்ந்தது. பின்னர் டில்லி சுல்தான்கள் மரபைச் சார்ந்த அலாவுதீன் கில்ஜி என்பானின் சிறந்த படைத்தலைவன் மாலிக்கபூர் என்பான் பாண்டிநாட்டினுள் நுழைந்து அழிவு பல புரிந்தான். எனவே, பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே பாண்டிய அரசு சிதைவுறத் துவங்கிற்று. இச்சமயம் பாண்டியமன்னர் இருவர் தங்களுக்குள் வேறுபட்டு மாலிக்கபூரை நாட்டிற்குள் அழைக்க, அவன் மறுமுறையும் நாட்டைக் கொள்ளையிட்டு, மக்களையும் பெரிதும் வாட்டிச் சென்றனன். 'இந் நூற்றாண்டில்தான்

இஸ்லாமிய ஆட்சி மதுரையிற் தொடக்கமாயிற்று. உள்நாட்டுக் கலகங்கள் பல ஏற்பட்டன. சமயமும் பாதிக்கப் பெற்றது' என முகமதிய வரலாற்றாசிரியர் இபின்பட்டுட்டா என்பார் தெரிவிக்கின்றார்.

இதுசமயம் ஹரிகார், புக்கர் என இருவர், முகமதியர் இடையீடுபரவுவதைத் தடுக்குமாறு விஜயநகர இராச்சியத்தை அமைத்தனர். இவ் விஜயநகர மன்னன் ஒருவன் மதுரை சென்று முகமதிய ராட்சியை ஒழித்தான். பின் நாட்டைச் சில தலைவர்களிடம் விட்டுச்சென்றனன். எனவே, பாண்டியர் ஆட்சியின் செய்திகள், முகமதியர் இடையீட்டால், 14-வது 15-வது நூற்றாண்டுகளில் யாதும் கிடைத்தில என்பர் ஆராய்ச்சியாளர். அழிவு அனைத்தும் குறுநில மன்னராலேயே விளைந்தன. இக் குறுநில மன்னரில் குறிப்பிட வேண்டியவன் வாணதிராயன் என்பான். இதுமுதல் மதுரை ராயர் ஆட்சிக்குட்பட்டது.

பராக்கிரம பாண்டியன்

இதற்குப்பின் தென்பாண்டிநாட்டில் அரசுபுரிந்த பாண்டியர் சிலர். இவர்களுள் குற்றாலநாதர் கோவிலுக்குப் பெரும்பணியாற்றிய பாண்டியன் சிறந்தவன். தென்னாட்டுப் புனித தலமாகக் கருதப்படும் திருக்குற்றாலத்திற்கு மூன்றுகல் தொலைவிலுள்ள தென்காசிநகரில் ஒரு சிவாலயமும் அதனை அழகுசெய்யும் ஒரு கோபுரமும் அமைத்து, என்றும் அழியாப் புகழ் படைத்தவன் **பராக்கிரம பாண்டியன்**. 'பொன்னின் பெருமாள்' எனப் பெயர் பெற்றவன். உண்மைப்புலமை வாய்ந்தவன். இவன் நெல்லைக் கருகிலுள்ள சங்கரநயினார்கோவில், குற்றாலம், வீரகேரளம்புதூர் என்னுமிடங்களில் பல வெற்றிகள் பெற்றான் என இவன் மெய்க்கீர்த்தி கூறும். பல சிற்றூர்களில் அகரங்கள் அமைத்தான். குற்றாலத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கல் தொலைவில் 'மேலகரம்' என்னும் சிற்றூர் இன்றும் உளது. குற்றாலம், திருவிடைமருதூர்,

நெல்லை எனுமிடங்களிலுள்ள சிவாலயங்களுக்கு நள்ளிரவு வழிபாட்டிற்கென நிபந்தங்கள் அளித்தான்.

ஓர் இரவில் சிவபிரான் இவன் கனவில் தோன்றி, 'பத்தனே, வடகாசிக் கோவில் அழியுந் தறுவாயிலிருக்கின்றது. தென்காசியில் எனக்கோர் ஆலயம் அமைப்பாயாக' எனக் கூறியதாகவும், அதற்கிணங்க மன்னன் தென்காசியில் சிவாலயம் ஒன்று அமைத்தான் எனவும் கூறப்படுகின்றது. இச் செய்தி கோவிலின் முன்றில் ஒரு கற்றாணில் வரையப்பெற்றுளதென்பதைத் திருநெல்வேலியிலும், அதைச் சுற்றியுள்ள சிறு நகரங்களிலும் உறையும் மக்கள் அனைவரும் நன்கறிவர். இக் கோவிலின் கோபுரம் பிளந்து, சிதைந்து இன்றும் நிற்கின்றது. இங்குள்ள மக்கள் அக் கோபுரத்தை 'மொட்டைக் கோபுரம்' என்றழைக்கின்றனர்.

இப் பாண்டியனின் தலைசிறந்த சிவ பத்திக்கு மற்றொரு சான்று உளது. இக் கோபுரத்தில் சில பாடல்கள் வரையப்பெற்றுள்ளன. இப் பாடல்கள் மன்னனால் பாடப் பெற்றவையாம். மன்னன் சிவனடியார்களையும், தன்வழித் தோன்றல்களையும் இக் கோவிலை இனிது பேணிப் பாதுகாத்தல் வேண்டுமெனவும், பணிகள் பல செவ்வனே நடைபெறுதல் வேண்டுமெனவும் இரங்கிக் கூறுகின்றான். இப் பாடல்கள் படிப்போர் உள்ளத்தை உருகச்செய்யும் தன்மை வாய்ந்தவை. இப் பாடல்களில் ஒன்று இங்குத் தரப்பெற்றுளது.

> "சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
> லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்ன
> மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
> பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே."

படிப்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதாகும் இப்பாடல். 'இவ்வாலயத்தை அமைத்த புகழ் தனக்கன்று; தெய்வத்திற்கெனவும், இவ்வாலயப்பணியில் ஈடுபட்டுப் புரப்பவரின் காலடிகளில் வீழ்ந்து, ஏவல் செய்

வேன்' என மன்னன் கூறுவது இப்பாண்டியனின் தலை சிறந்த பண்புக்கு எடுத்துக்காட்டன்றோ? இதனைப் படிப் போர் மற்றைய பாடல்களையும் தேடிப் படித்தின்புற வேண்டுகின்றேன்.

இவருக்குப்பின் சில பாண்டியர் குறுநில மன்னரே போல் ஆட்சி புரிந்துவந்தனர். அவர்கள் **நெல்வேலிமாறன், சடையவர்மன், அதிவீரராம பாண்டியன்** என்பார்.

அதிவீரராம பாண்டியன்

புலமை வாய்ந்த மன்னருள் இவன் ஒருவன். கொற் கைப் பதியிலிருந்து அரசு புரிந்தான். குலசேகரன் என மற்றொரு பெயர் இவனுக்கு வழங்கிற்று. இவன் காலம் கி. பி. 15-ம் நூற்றாண்டு. சிறப்புக் குழுமிய செய்யு ளியற்றும் தன்மை வாய்ந்தவன். கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்கள் இவன் இயற்றியவை. இவன் அருளிய 'திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி' படிப்போர் உள்ளம் கல்லாயிருப்பினும் கரைத்துருக்கும் வன்மை பற்றி இது 'குட்டித் திருவாசகம்' எனவழைக்கப் பெற்றது. இவன் வடமொழிப் புலவன். இவன் இயற்றிய கூர்மபுராணம் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகும். நைடதம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்த பெருமை இவனுக்கே உரியது.

எனவே, தொன்மை வாய்ந்து, தொல்புகழ் படைத் துப் பல்லாண்டு, பல்லாண்டுகளாகச் சீருடனும், சிறப் புடனும் நம் பாண்டிநாட்டில் நல்லாட்சி புரிந்து, புவியரசு களாக மட்டுமின்றிக் கவியரசுகளாயும் திகழ்ந்து, குமரி முதல் இமயம் வரை தம் கொடியினை நாட்டிப் பெருமிதத் துடன் வாழ்ந்துவந்த பாண்டியர், தம் நிலையினின்றும் இழிந்து, பின் குறுநில மன்னராகவோ, ஜமீன்தார்களா கவோ திரிந்து இறுதியுற்றனர் என்னும் செய்தி, பொது வாகத் தமிழ்மக்களுக்கும் சிறப்பாகப் பாண்டிநாட்டு மக்க ளுக்கும் உள்ளக் கவற்சியினை உளதாக்குகின்றது. தற்

போது தம் இயற்பெயருடன் சிறப்புப் பெயராக 'பாண்டியன்' எனப் பெயர் அமைத்துக்கொண்டிருக்கும் மக்கள் சிலரையும், தம்மைப் பாண்டிய மரபினர் என்று சொல்லிக் கொள்ளும் சிலரையும், மதுரை, நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களிற் காண்கின்றோமேயன்றி, பாண்டியமரபினர் எவரையும் கண்டிலேம். இஃது காலத்தின் கொடுமைதானன்றோ?

தமிழர் நாகரிகம்

இனிப் பாண்டியர் நாகரிகம் என்னும் தலைப்பின்கீழ்ச் சில கூறின், இக்கட்டுரை முற்றுப்பெறும். இதற்குமுன் நம் தமிழ்மக்களின் நாகரிகச் சிறப்பினைச் சில அறிஞர் வாயிலாகக் கேட்பது இங்குப் பொருத்தமுடையதாகும்.

தமிழ்மக்களின் நாகரிகத்தைப் பற்றிப் பேச வந்த திரு. N. S. கந்தையா பிள்ளையவர்கள் 'தமிழர் சரித்திரம்' என்னும் நூலில், தமிழரின் கலைச்சிறப்பனைத்தையும் விரிவாய்க் கூறுகின்றனர். அதன் சுருக்கம் இங்குத் தரலானேன்:

தமிழர் வாணிகத்துறையில் மேம்பட்டிருந்தனர்; பண்டை மக்களாய பாபிலோனியர், எகிப்தியர், ரோமருடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். பண்டங்களை ஏற்றிச்செல்லும் நாவாய்கள் துறைமுகங்களில் குழுமின்றன. எகிப்து நாட்டு நிலப்பகுதிகள் இந்திய மசிலின் துணிகளால் சுற்றப்பெற்றிருந்தன. சலமனின் தந்தையாகிய டேவிட் என்பான் ஒபீர் தேசத்திற்குக் கப்பல்களையனுப்பித் தங்கம் பெற்றான். ஒபீர் உவரித் துறைமுகமாகும். இது நெல்லைமாவட்டத்து நான்குநேரித் தாலுகா, இடையன்குடியை அடுத்துள்ளது.

இவ்விடையன்குடிக்குக் கிடைத்த பெரும்பேறு இதனையொத்த எந்தச் சிற்றூருக்கும் கிடைத்திலது எனக் கூறின் அது மிகையாகாது. இடையன்குடி நீர்வளமற்ற பாலைநிலம் போன்றது. ஊரைச்சுற்றியுள்ள மணல்

வெளியில் கதிரவன் ஒளிபடின் செம்மண் தரை முழுவ தும், தங்கத்தகடு பரப்பியதே போன்று காட்சியளிக்கு மாம். கிணற்று நீரும் கிடையாதவிடமாம். இக் கிராமத்திற்றான் தமிழ்மொழிக்கும், தமிழுலகத்திற்கும் பெரும்பணியாற்றிய பெரியார் கால்டுவெல் ஐயர் தம் சமயப்பணி ஆரம்பித்தார். சென்னையிலிருந்து இடையன் குடி தெற்கே நானூறு கல் தொலைவில் உளது இவ்வளவு தொலைவையும் கால்டுவெல் ஐயர் கால் நடையாகவே கடந்து வந்தாராம்.

கால்டுவெல் ஐயரின் (பின்னர் அத்தியட்சர்-Bishop) தமிழ்த்தொண்டு, தமிழ்மொழி இவ்வுலகின்கண் ஒரே ஒரு மனிதனால் மாத்திரம் பேசப்படும் காலம் வரினும், அதுவரை நிலைத்து நிற்கும். பிறநாட்டார் ஒருவர் நம் மொழியினைக் கற்று, ஒப்பற்ற நிதியம் எனக் கருதப்படும் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்' எனும் நூலினை எழுதித் தந்த அருஞ்செயல் அறிஞர் அனைவராலும் போற்றத்தக்கதாகும்.

நிற்க, ஹோமர் என்ற யவனப்புலவர் இந்தியாவிற் கிடைக்கும் பொருள்களைப்பற்றிக் கூறியிருக்கின்றார். கௌடில்யர் வடஇந்தியாவினும் தென்இந்தியாவே வாணி கத்திற் சிறந்திருந்த தென்கிறார். மதுரை அழகிய ஆடைக ளுக்குப் பெயர்பெற்றது. சீனாவுடன் வியாபாரம் நடத்தினர் தமிழ்மக்கள். கடல், பரவை, முந்நீர், கலம், கப்பல், நாவாய் என்பன தூய தனித்தமிழ்ச் சொற்கள். தென்னிந்தி யாவில் உரோம நாணயங்கள் வெகுவாய்க் கிடைத்துள்ளன; உரோம நாணயச்சாலை ஒன்று தென்னிந்தியாவில் இருந்த தாக நம்பப்படுகிறது. முத்துக் குளிப்பு மக்களின் முக்கிய தொழில். உரோமப்பெண்கள் நம் நாட்டு முத்துக்களில் மோகங்கொண்டு செருப்புக்களிலும்கூட முத்துக்களை அமைப்பர். [1]கிளியோபத்ரா என்னும் எகிப்திய அழகு இராணி 80,000 பவுன் மதிப்புள்ள முத்தொன்றைக் கரைத்துக் குடித்தனளாம்.

---

1. Keleopatra.

மிளகு, சந்தனம் போன்ற பொருள்கள் மலையாளக் கரையில் கிடைக்கும். கொற்கை, புகார் தமிழகத்தின் சிறந்த துறைமுகங்கள். கடற்கரைப்பட்டினங்களில் கலங் கரை விளக்கங்கள் உள.

உழவுத்தொழில் மேன்மையுற்றிருந்தது. யானை நின்றால் மறைக்கும் தன்மை வாய்ந்த கதிர்கள் கழனியில் காணப்பெற்றன. கைத்தொழில் சிறப்படைந்திருந்தது. 'பாலாவி'யை யொத்த பட்டாடைகளை நம் மக்கள் நெய் தனர். இது கற்பனையெனக் கருதவேண்டுவதில்லை. நெல்லை மாவட்டத்தில், சேரன்மாதேவிக்கருகில் அமைந்துள்ள பத்தமடை என்ற சிற்றூரில் இன்றும் எளிய நெச வாளர் நுண்ணிய கோரையினாலிழைத்த பட்டுப்பாய்களைப் பின்னிவருகின்றனர். கோசிகம், பீதகம், பச்சிலை, கோபம் என்னும் பலப்பல வகையான பட்டுகள் நெய்யப்பெற்றன. பொற்கொல்லர் பல அணிகளைப் பழுதின்றியமைக்கும் பண்பினர். தச்சரின் தலைசான்ற கலைத்திறனுக்கு மாபலி புரம் ஏழு தேர்க்கோவில்கள் எடுத்துக்காட்டாகும்.

மேனாட்டினரைத் திகைக்கவைக்கும் மதுரை, தஞ் சாவூர், திருநெல்வேலி சிவாலயங்களை அமைத்தவர் நம் சிற்பிகளன்றோ? ஓவியப்புலமையில் ஒப்பற்றவர் நம்மவர். வான ஆராய்ச்சியில் வல்லுநர் தமிழர். கோள்கள் விண்மீன் களின் ஓட்டத்தை நுணுகி ஆராயும் முறை நம்நாட்டில் சரித்திர காலத்திற்கும் முந்தியதாகும். 'தமிழரின் கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணக்கு முறைகளிலும் நிதானமானது' என்கின்றார் [1]சிலேட்டர் என்பார். மருத்துவ முறையில் மாண்புற்றவர் நம் தமிழர். நாடி பார்த்து உடலின் நலமறிதல் நம் தமிழகத்துக்கே உரியது.

மேலும், மாயூரபரம்பரைத்தலைவன் சந்திரகுப்தன் காலத்து இந்தியாவிற்குள் வந்த யவன தூதுவன் மெகாஸ் தனீஸ் என்பானும் நம் தமிழ் மக்களின் தனிப்பண்புகளைப் பற்றி வரலாற்றாசிரியருக்குப் பயன்படும் பல குறிப்புக்கள்

1. Dr. Slater.

தந்துள்ளான். அவற்றினின்றும் சில செய்திகள் இங்குக் குறிப்பிடல் பொருத்தமுடைத்து.

சிக்கன வாழ்க்கையில் தமிழர் சிறந்தவர். ஒழுங்கற்ற எதனையும் அவர் வெறுக்கின்றனர். ஆடம்பர வாழ்க்கையை விரும்பியவரல்லர். கொடுக்கல் வாங்கல்முறை நம்பிக்கையைப் பொறுத்திருந்ததால் பத்திரங்கள் எழுதும் முறை வழக்கிலில்லை. வீட்டினின்றும் வெளியிற் செல்லுங்கால் காவலுக்கென எவரையும் வீட்டில் விட்டுப்போவதில்லை. அழுத்தமான மரஉருளைகளை உடம்பில் உருட்டுவது ஓர் உடற்பயிற்சி முறை. அறிவுடையோரே மதிப்பிற்குரியவராகக் கருதப்படுகின்றனர். பொய்ச்சாட்சி கூறுபவன் கடுமையான தண்டனை பெறுகிறான். அரசன் பகற்காலத்தில் துயில்கொண்டு இரவில் நகர்சுற்றி வருகின்றான். சதிகளுக்குப் பயந்து படுக்கையைப் பலமுறை மாற்றுவான். மன்னன் அருகில் படையணிந்த வீரர் சூழ நிற்கின்றனர். ஆயுதந்தாங்கிய பெண்கள் சிலர் அரசன் அருகில் நிற்பர். பெண்களும் குதிரை, யானை மேற் செல்வர்.

நகராட்சி ஆறு குழுவினரால் நடைபெறுகின்றது. இறந்தவரின் உடல்கள் புதைக்கப்பெற்றன. வாணிக முறை சிறந்தது. பொருள்களைக் கலந்து விற்பவர் கடுமையான தண்டனை பெறுகின்றனர். குதிரைப்படை, யானைப் படை, காலாட்படை உள. தத்துவ சாத்திரிகள், மருத்துவர், மந்திரவித்தைக்காரர் என்போர் பலர் இருக்கின்றனர்.

பாண்டிய நாகரிகம்

நகரம் எனும் சொல்லினின்றும் பிறந்தது நாகரிகம். ஈங்கு வள்ளுவப்பெருந்தகை கண்ட 'நயத்தக்க நாகரிகம்' பேசப்படுவதின்று. நாகரிகம் எனும் சொல்லின்கண், அரசு, அரசமைப்பு, அவ்வமைப்பின் மாட்சி, கலைகள், கல்வி, வாணிகம் என்பனவனைத்தும் அடங்கிக் கிடக்கின்றன. பாண்டியரின் அரசியலமைப்பின் சிறப்பனைத்

ளதையும் அறிஞர் எஸ். கே. ஐயங்கார் 'தென்னிந்தியாவின் அரசியலமைப்பு' எனும் தம் நூலில் விரித்துரைக்கின்றார்.

பாண்டியர் அரசியலை ஆராயப்புகுமுன் அரசருக்கே அறிவூட்டும் ஆற்றல் மிக்க கவியரசாம் நம் வள்ளுவர் [1]குறிக்கோள் அரசு எங்ஙனம் அமைதல் வேண்டுமென விளக்கமாய்க் கூறும் பண்பினைச் சிறிது ஆராயின் அஃது இவ்விடத்தில் மிகையாகாது. [2]குறள் அரசியல், அஃதாவது வள்ளுவன் கண்ட அரசு, என்னென்ன இலக்கணங்களோடு அமைதல் வேண்டுமென ஆசிரியர் கூறுவதென்னை ?

குறள் வேதத்தில் இருபத்தைந்து அதிகாரங்கள் அமைத்துள்ளார். இதனைப் பற்றிப் பேசவந்த தெய்வப் புலவர், இறைமாட்சி யெனும் முதலதிகாரத்து, முதற் குறளில்,

> "படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
> உடையா னரசரு ளேறு."

என்கின்றார்.

சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறங்கங்களையும் உடையான் அரசருள் ஏறு. ஆறில் ஒன்று குறையினும் அரச நீதி செம்மையுற அமையாது. நல்லரசிற்கு நான்கு குணங்கள் வேண்டுவன—அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம். மூன்று நீங்காமை வேண்டும் - தூங்காமை, கல்வி, துணிவுடைமை. அறத்தினின்றும் வழுவாது, அறமல்லாதவற்றைக் கடிந்து வீரத்தினின்றும் தவறாத மானத்தையுடையான் மாண்புமிக்க மன்னனாவான். பொருள் ஈட்டலும், ஈட்டிய பொருளைக் காத்தலும், காத்தனவற்றை முறையே வகுத்து, காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல் இலனாய், இன்சொல்லுடன் ஈந்து அறநூல் விதிப்படி மக்களைக் காப்பாற்றும் மன்னன் இறையெனக் கருதப்படுவான்.

---

1. Ideal State. 2. Kural Polity.

அறிஞர் கூறும் அறவுரைகளைச் செவிகைப்பக் கொளாது, அவற்றின் பயனை யறிந்து பொறுத்து, கொடை, அளி, செங்கோன்மை, குடியோம்பலான நான்கு பண்புகளுமுடையோனாய் விளங்குபவன் உலகையே ஆள்பவனாவான் என்கின்றார் தமிழ்மறைத் தந்தை.

மேலும், கல்வி, கேள்விகளில் சிறந்தோனாய், இக் கல்வி கேள்விகளினாற் பெற்ற அறிவோடு உண்மையறிவும் உடையோனாய், ஆறு குற்றங்களைக் கடிந்து, தன்னை நல் வழியிற் செலுத்தும் பேரறிவுடையாரைத் துணைக் கொண்டு சிற்றினஞ் சேராது, தான்செயவெண்ணும் தொழிலினை ஆராய்ந்து, திறமறிந்து செயல் செய்து, செயல் செய்யும் காலம், இடமறிந்து, மந்திரி முதலா னோரின் செயல்களைத் தெளிந்து, தெளியப் பெற்றவரை அவரவர் செயலில் முறைப்படி ஏவி, சுற்றம் தழுவி, மறதி கொளாது, செங்கோன்மை பூண்டு, தான் அஞ்சாமலும் மந்திரி முதலானோரை அஞ்சவைக்காமலும், கண்ணோட்ட மெனும் காரிகையை உடையோனாய், ஒற்றரைத் திற னுடன் ஆண்டு, ஊக்கமுடையோனாய், மடி நீக்கி, முயற்சி யுடையோனாய், இடுக்கண் வருங்காலத்து ஒடுங்கிவிடாது நகுதல்தன்மை பெற்றோனாக அரசு புரிபவனே குறிக் கோள் மன்னன் என்கின்றார் நம் வள்ளுவர்பெருமான்.

பின் அமைச்சு எனும் தலைப்பின்கீழ் மந்திரி என் பவன், தொழில் செய்தற்குரிய கருவியும், அதனை இயற்றும் காலம், இடம் என்பன அறிந்து செயலாற்றி, குடிகாத்து, பிரித்தல், பேணிக் கொளல், பிரிந்தார்ப் பொறுத்தலாகிய பல ஆற்றல் மிகுந்து, ஆன்றமைந்த சொல்லால் மன்னனுக்குத் துணைபுரிந்து, நூலறிவுடன் மதிநுட்பமும் அமையப்பெற்று உலகின் இயற்கையறிந்து, சொல்வன்மை படைத்து, சொல்வன்மையுடன் நில்லாது, செயலினும் தூய்மைகொண்டு மன்னனாலும், மக்களாலும் போற்றப் பெறுபவனே தலைசிறந்த அமைச்சன் என் கின்றார் . வள்ளுவர். இனிப் படை, குடி, நட்பு, அரண்

என்ற மற்ற அங்கங்களையும்பற்றி விளக்கம் கூறுகின்றார். விரிப்பின் பெருகும். நிற்க.

நம் தமிழகம் மூவேந்தரின் ஆட்சிக்குட்பட்ட மூந்நாடாகும். நச்சினார்க்கினியர் கூற்றின்படி நான்காவதாகத் தொண்டை மண்டலமும் கூடியதாகும். தொண்டை மண்டலம் சோழநாட்டின் வடபகுதி. இம்மூவேந்தர் நாடேயன்றி பல குறுநிலமன்னர் நாடும் இதற்குட்பட்டவை. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வேந்தர் இருவரையும், ஐவேளிரையும் புறங்கண்டான். திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ, பொருநன் என்போர் மேற்சொன்ன வேளிர் ஆவர்.

அரசு :—தமிழ்நாட்டில் முடியாட்சியே நடைபெற்றது எக்காலமும். அரசருக்குத் துணையாக அறிவுரைக் குழுக்கள் அமைந்திருந்தன. போர்க்காலத்தில் படையை நடத்திச் செல்லுதலும், அமைதிக்காலத்து நாட்டின் மக்களின் நலங்கருதிச் செயல் புரிதலுமே இவர் கடமையாகும். அவை கூடி அரசியற் காரியங்களை விவாதிக்கும். எனினும் முடிவு கூறும் உரிமை மன்னனுக்கே உளது. மன்னரின் அவையிற் சென்று பெரும்புலவர் பாடல்கள் பாடிப் பரிசில் பெறுவர். இப்புலவர் மன்னனிடம் பிழை காணின் அப்பிழையை எடுத்துக்கூறி இடித்துக் கூறும் உரிமையும் பெற்றிருந்தனர். இதை மன்னன் தவறாகக் கொள்ளாது, நன்முறையில் கொள்வது வழக்கம்.

குழுக்கள் :—மன்னர் அவை ‘ஐம்பெருங் குழு’ என அழைக்கப்பெற்றது. இக்குழு அமாத்தியர், புரோகிதர், சேனாபதியார், தூதுவர், சாரணர் என ஐவகையினரைக் கொண்டதாகும். இவரை ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர், காவிதி, மந்திரக் கணக்கர் என்றும் அழைப்பர். இக்குழு இருபகுதிகளாகப் பகுக்கப்பெற்று ஒன்று [1]அறிவுரைக் குழுவாகவும் மற்றொன்று அரசியல் பணிக்காக நேரில் செலுத்தும் மந்திரி முதலானோர்

1. Advisory Body.

குழுவாகவும் அமைந்திருந்தன. 'எண்பேர் ஆயம்' என்பது மற்றொரு குழுவாகும். இக் குழுவினர் அரசனின் அண்மையிலிருப்பவராவர். இவர் பல பணியியற்றுபவர். உடை, உணவு போன்ற காரியங்களை மேற்பார்ப்பவராவர். இவரை, கரணிகர், கர்மகாரர், கனகச் சுற்றம், கடைக் காப்பு, நகர மாந்தர், படைத் தலைவர், ஆனைவீரர், இவுளி மறவர் என்றெல்லாம் அழைப்பர்.

மேற்கூறிய அரசியற் பணியாளர் மன்னரால் நியமனம் பெற்றவரோ, அன்றி மக்கள் வாக்குரிமையால் தேர்தல் பெற்றவரோ என்பது விளங்கவில்லை. பண்டைக் காலத்தில் மன்னன் முடிசூட்டு விழாவில் பங்கெடுக்கும் [1] அரசராக்குவோரும் உளர். இவர் அரண்மனை இரத்தினங்கள் என அழைக்கப்பெற்றனர். இரத்தினங்கள் பொதுவாகப் பதினைந்துபேராவர். எனவே மேற்கூறிய குழுக்களும், மன்னனும் அரசியல் ஆட்சிக்குப் பொறுப்பு வாய்ந்தவர். எனினும் சட்டங்கள் நிறுவுதல் அரசன் அலுவலன்று. அமைதி நிலவச்செய்து, முறைதவறாது நீதி வழங்குதல் அரசனின் முழுப் பொறுப்பாகும். ஆயினும் நீதி வழங்கும் முன்னும், அந் நீதி எம்முறையில் வழங்கல் வேண்டும் என்பதனையும் தன்னைச் சுற்றியிருக்கும் 'சுற்றத்தை'க் கலந்தே அரசன் ஒரு முடிவு காண்பான். சுற்றம் எவ்வித அச்சமுமின்றித் தம்கருத்தை மன்னனுக்கு எடுத்துரைத்தல் வழக்கம் என்பதற்குச் சங்க இலக்கியங்களும், மதுரைக் காஞ்சியும் சான்று தருவன. நல்லோரைக் காத்தல், இடர்ப்படுத்துவோரை அழித்தல், அறநிலையங்களைப் பாதுகாத்தல், வேள்விகள் இயற்றல், மக்களுள் கல்வியைப் பெருக்கல் இவ் வைந்தும் மன்னனின் மாண்புற்ற கடமைகளெனத் தொல்காப்பியம் கூறும்.

நாடு:—மேனாட்டார் நம் நாட்டைக் கைப்பற்றிய பின்னர்த்தான் நாட்டை மாகாணங்கள், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் என வகுத்து முறையே ஆண்டனர் என நம் இளைஞர் சிலர் கருதலாம். அன்று, 5000 ஆண்டு

1. King Makers.

கட்கு முன்னரே மாட்சியுடன் ஆட்சிபுரிந்து பண்பட்ட நம் பாண்டியர் நாட்டினை, நாடுகள், கூற்றங்கள் என வகுத்து ஆண்டனர். சில நாடுகளும் கூற்றங்களும் சேர்ந்தது வளநாடு என அழைக்கப்பெற்றது. நாடுகளுக்கு மன்னரின் பெயரே இடப்பட்டன. நாட்டின் சிறு பகுதிகள் ஊர்களாகும்.

அரசிறை:—இறைமுறை செம்மையுடன் கையாளப் பெற்றது. நிலவரி நாட்டிற்கு முக்கிய வருவாய். நெல், அல்லது பொன்னும் காசும் அரசரது பொருள் நிலையத்தில் செலுத்தப் பெற்றது. வேறு சில வரிகளும் மக்களிட மிருந்து பெறப்பெற்றன. செக்குவரி, தறிவரி, உலவியக் கூலி (காசக்குடிச் செப்பேடுகள் இதனை கிணறுகள்வரி எனக் குறிப்பிடும்.) நீர்ப்பாய்ச்சுதல்வரி, கண்ணுலக் காணம், குடக் காணம், தட்டார் பாட்டம், இளம்பூச்சி (கள் விற்போருக்கு வரி), இடைப்பூச்சி, கூலவரி, தரகுப் பாட்டம், திருமுகக் காணம் (இஃது தபால் வரியாக விருக்கலாம்), உப்புக்கோ செய்கை (உப்பு வெட்டி யெடுத் தல் வரி) எனப் பல வரிகளை மக்கள் செலுத்தி வந்தனர்.

நிலங்கள்:—நிலங்கள் முறைப்படி வகுக்கப்பெற்று, அளவு செய்யப்பட்டு, நாடு, கூற்றம், வளநாடுகளனைத்தும் நாடுவகை செய்வோரின் மேற்பார்வைக்குள் ளிருந்தன. குழி, மா, வேலி என்பன நில அளவுகளாம். இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 'குழி'க் கணக்கும், மதுரை மாவட்டத்தில் 'வேலி'க் கணக்கும் வழக்கிலிருக்கின்றன.

அளவைகள் :—அளவைகள் இன்று வழக்கிலிருப்பன போன்று துலாம், பலம் என்றும், குறுணி, நாழி, ஆழாக்கு, உழக்கு எனவும்; பொன், வெள்ளி முதலிய பொருள்கள் கழஞ்சு, காணம் என்ற அளவிலும் வழங்கப் பெற்றன. வீசை, மணங்கு எனும் அளவைகள் அக் காலத்து வழக்கிலில்லை.

நாணயங்கள் :—நாணயங்கள் பொன்னிலும், செம் பிலும் செய்யப்பெற்றன. சதுரவடிவத்தில் நாணயங்கள்

அமைந்திருந்தன. நாணயங்களின் முகத்தில் அக்காலைத்திய மன்னனின் சிறப்புப்பெயர்கள் பொறித்திருக்கும். சீமாறன் சீவல்லபன் காலத்திய நாணயத்தில் 'அவனிப சேகரன் கோளகை' என மன்னரின் சிறப்புப்பெயர் பொறித்திருந்ததாம். மன்னரின் உருவப்படங்கள் நாணயங்களில் அமைக்கும் முறை இல்லை போலும். ஒருபொற் காசு ஒரு கழஞ்சு எடையுள்ளதாம். சில நாணயங்களில் கயல்வடிவம் காணப்பெற்றதாம். காணம் என்பது நான்கு குன்றிமணி எடையாகும்.

கிராம ஆட்சி:—கிராம ஆட்சியினைப் பற்றிய கல்வெட்டுக்கள் கணக்கற்றவை. இவை அனைத்தையும் துருவிப் பார்த்தல் எளிதன்று. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் தாலுகாவில் உத்தரமேலூர் எனும் கிராமத்தில் ஏறக்குறைய 200-கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை அக்காலத்திய கிராம ஆட்சியினைப் பற்றி விரிவாய்க் கூறுகின்றன. உத்தரமேலூர் பன்னிரண்டு சிறறூர்கள் அடங்கியது. இஃது ஒரு சதுர்வேதிமங்கலம். சதுர்வேதி மங்கலமாவது, மன்னரால் பிராமணருக்கு இறையமாக அளிக்கப்பெற்ற நிலப்பகுதி.

நாடாட்சி, மாசபை அல்லது பெருங்குழுவால் நடைபெற்றதென முன் கூறப்பெற்றது. அக்குழுவில் ஆண்களனைவரும், இளைஞர் முதியோர் என வேறுபாடின்றி அமைந்திருந்தனராம். இக்குழுவின் மேற்பார்வையில் அரசியல் முழுவதும் நடைபெற்றது. ஆயினும் இக்குழுவினர் எவரும் அரசியல் அதிகாரிகளாக அமைதல் கூடாது. நிலங்களைக் கண்காணித்தல், அவற்றை முறைப்படி அளந்து பயிரிடுவோர்க்கு அளித்தல், நீர்ப்பாசன ஏற்பாடு, இவையனைத்தும் இக்குழுவின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. மேற்கூறிய மண்டல அதிகாரிகளையோ, நாட்டின் அதிகாரிகளையோ இக்குழு கலந்து ஆட்சி நடத்தல் வேண்டுமென்பதில்லை. முழுஉரிமையும் இவருக்குண்டு. மன்னரோ அல்லது மன்னரின் ஓர் அதிகாரம் படைத்தவரோ ஒரு கோவிலுக்கு நிலமான்யம் அளிக்கக்கருதின், இக்குழு

ினரைக் கலந்தல்லது செய்தல் கூடாது. இப்பெருங் குழுவின்கீழ்ச் சிறிய குழுக்கள் பல உள. உத்தரமேலூர்ச் சாசனங்களில் கண்ட இச்சிறிய குழுக்கள் ஒவ்வொன்றும் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டதாகும். இக்குழுக்கள், சம்வத்சாரவாரியம்—ஆண்டு முழுவதும் நடைபெறவிருக்கும் பொதுக்காரியங்களை நடத்தும் குழு—தோட்ட வாரியம், ஏரி வாரியம், கழனி வாரியம், கணக்கு வாரியம், [1]கலுங்கு வாரியம், [2]தடிவழி வாரியம் எனப் பல வாரியங்களைக்கொண்டவை. [3]வாரியம் எனுஞ் சொல் மேற்பார்வை எனப் பொருள்படும். இக்குழுக்களுக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்கும் முறை மிகச் சிறப்புவாய்ந்ததாகும். தற்காலத் தேர்தல் முறைகள் இதனுக்கீடாகா எனக் கூறின் அது மிகைபடக் கூறியதாகாது.

[4]தேர்தல்:—இக்குழுக்களுக்குத் தேர்தல்பெற உரிமையாளர் 35 ஆண்டு வயதினராயும் 70 ஆண்டுகட்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ¼ வேலி நிலத்திற்காவது உரிமை பெற்றோராகவும், சொந்தமான வீடு உடையவராகவும், தத்தம் தொழில்களில் வல்லுநராகவும், ஒழுக்கத்தில் சிறந்தவராகவும், நன்முறையில் பொருளீட்டியவராகவும் இருத்தல் வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்றவரின் தந்தை, தமையன், மாமன், அண்ணன், மகன் என்ற நெருங்கிய உறவினர் எவரும் மற்றொரு குழுவில் அங்கத்தினராக உரிமை இல்லை. குழுக்களிலுள்ளோர் தம் கடமையில் தவறின் கடுமையான தண்டனைக்குள்ளாவார்.

இக்குழுக்களுக்கு உறுப்பினராக உரிமையுள்ளோரின் பெயரடங்கிய தேர்தல்பத்திரம் ஒன்று மாசபை முன்வைக்கப்பெறும். பெருங்குழு கோவில்மண்டபத்தில் கூடும். உரிமையாளர்களின் பெயர்களை ஓலைநறுக்குகளில் எழுதி ஒரு மண்குடத்தில் இடுவர். கோவில் பட்டர் குடத்தைத் தலைகீழாகக் கவிழ்த்துக் கூடியிருப்பவ

1. Sluice. 2. Roads. 3. Control. 4. Election.

ரிடம் காட்டிய பின்னர்த்தான் ஓலைநறுக்குகள் குடத்தில் இடப்படும். பின் இளைஞன் ஒருவன் ஓலைத்துண்டுகளை ஒவ்வொன்றாக எடுக்க அவற்றில் கண்டுள்ள பெயர்கள் படிக்கப்பெற்றுப் பின் பெருங்குழுவின் முன் சீட்டுகள் வைக்கப்பெறும். இம்முறையில் தெரிந்தெடுக்கப்பெற்ற வரே குழுக்களில் உறுப்பினராக அமைவர். இம்முறை குடவோலை ஏற்பாடு என்றழைக்கப்பெற்றது. ஆண்டு தோறும் புதிய அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பெறுவர். குடிப்பழக்கம் உள்ளோர், திருட்டுத்தொழிலில் அகப் பட்டோர், எக்காரணம் பற்றியோ தம்மை இழிவுபடுத்தும் செயலில் முற்பட்டோர், தேர்தல் உரிமை பெற்றிலர்.

நீதி:—நீதி வழங்கும் பொறுப்பு பெருங்குழுவையே சார்ந்தது. கொலைக்குற்றம் செய்தோன் கொலைத் தண்டனையே பெறுதல் வழக்கம். ஆயினும் தற்செயலாக நடைபெற்ற கொலைக்குத் தண்டனை வேறு. முதற் குலோத்துங்க மன்னன் காலத்தில் வேட்டையாடச் சென்ற ஒருவன் மற்றொருவனைக் கைதவறிக் கொன்று விட்டான். அதற்குத் தண்டனையாக உள்ளூரில் அமைந் துள்ள கோவிலுக்கு அணையா விளக்கொன்று அவன் அமைக்க நேர்ந்தது. இவ்விளக்கேற்றும் செலவிற்கெனப் பதினாறு பசுக்கள் இவன் அளித்தானாம்.

[1]பெருவழிகள்:—பெருவழிகள் பல ஆங்காங்கே அமைக்கப்பெற்றிருந்தன. அவ்வழிகளின் மேற்பார்வைக் கெனத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். பழைய வழிகளைப் பாதுகாத்தலோடு நில்லாது அவ்வப்போது புதிய பெருவழிகள் வெட்டப்பட்டன. தமிழ்நாட்டின் எல்லையும் கடந்து சில பெருவழிகள் சென்றனவாம். சென்னையிலிருந்து வடக்கிலும் பின்னர் மைசூருக்கும் பெருவழிகள் அமைந்திருந்தன. நாகர்கோவிலுக்கருகி லுள்ள கோட்டார் வரையும் ஒரு பெருவழி அமைக்கப் பெற்றதென்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இப் பெருவழிகளை மத்திய அரசியலாரோ அன்றி ஆங்காங்

1. Trunk Roads.

குள்ள சிற்றூர் அதிகாரிகளோ யார் பாதுகாத்தனர் என்பது தெளிவாகவில்லை. பல போர்கள், பல காலங்களில் பாண்டிநாட்டில் நடைபெற்றதாக நாம் அறிவதால் பெருவழிகள் மிகப் பெரியனவாகவும், நன்கும் அமைக்கப் பெற்றிருத்தல்வேண்டும் என்பது தெளிவு.

கல்வி :—கல்வி மக்களாலும், மன்னராலும் பெரிதும் போற்றப்பெற்றது. மன்னரே பெருங்கவிகளாயிருந்தமையின் கற்றோர் மதிப்பிற்குரியவராயினர். வேதங்கற்றல், இலக்கணம் ஆராய்தல் இவற்றிற்கென முதன்முதல் கலலூரிகள் உண்டாயின. சைவசித்தாந்தம், சிவதருமம் இக்கல்லூரிகளில் விளக்கப்பெற்றன. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உயர்ந்ததோர் கல்லூரியும் அதனையொட்டிய [1]உணவுவிடுதியும் ஏற்பட்டிருந்ததாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. பண்டைக் குருகுலமுறை இக்கல்லூரிகளில் கையாண்டனர். மதவாராய்ச்சி கோவில்களிலும் நடந்தேறிற்று. அவை பாடசாலைகள் என அழைக்கப்பெற்றன. 340 மாணவர் கொண்ட உயர்நிலைப்பள்ளி ஒன்று அக்காலத்தில் அமைந்திருந்ததாம். ஒரு கலம் அன்று ஒரு குறுணி நெல் ஆசிரியருக்கு ஊதியமாக ஒரு மாணவனிடமிருந்து கிடைத்தது. ஓர் ஆசிரியனுக்கு உயர்ந்த சம்பளம் எட்டுக் கழஞ்சு பொன். மிகத் தேர்ச்சியுற்ற மாணவனுக்குப் பொற்பூவும், மோதிரமும் பரிசாக அளிக்கப்பட்டன. மாணவரின் விடுதிக்கு வேண்டும் விறகு முதலியனவற்றை ஊர் வாரியம்—கிராம அதிகாரிகள்—விலையின்றி அளிப்பர். தருமப் பள்ளிகளும் உள.

மருத்துவம் :—அக்காலத்தில் ஆங்காங்கே [2]மருத்துவச் சாலைகள் அமைக்கப்பெற்றிருந்தன. அவற்றை 'வீர சோழன்' அல்லது 'ஆதுலசாலை' யென அழைத்தனர். ஒரு சாலையில் 15 படுக்கைகள் உளவாம். சிறந்த மருத்துவர் இச்சாலைகளை நடாத்திவந்தனர். உணவும் அளித்து, மருத்துவமும் செய்து நோயாளிகள் பேணப்பெற்றனர். அசோகர் காலத்திலேயே மருத்துச்வசாலைகள் அமைந்

1. Hostel. 2. Hospitals.

திருந்தனவாயின் நம் பாண்டியர் காலத்தில் இத்தகைய நிலையங்கள் இருந்தனவோ என ஐயுறவேண்டுவதில்லை.

படை:—தரைப்படைகளும், கப்பற்படைகளும் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பெற்றுப் போற்றப்பெற்றன. யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பன நாட்டின் பாதுகாப்புக்கென அமைந்தவை. தேர்ப்படை பிற்காலத்துப் பயன்படுத்தப்படவில்லை. ஆனையாள், தேர்ந்த வில்லிகள், உடனிலைக் குதிரைச்சேவகர், அணுக்கர், மெய்காப்பாளர், அணுக்கவாசற்காப்போர், பரிவாரத்தார் என்ற சொற்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. எனவே சிறந்த படைப்பலம் பெற்றிருந்தனர் நம் பாண்டியர் என்பது புலனாகின்றது.

சீனயாத்திரிகன் [1]பாகியான் கூற்றினின்றும் தமிழ் மக்கள் வங்காளக்கடலுக்கும் அப்பால் குடியேற்றங்கள் அமைத்திருந்தனர் என்று விளங்குகின்றது. கி. பி. 7-வது நூற்றாண்டில் நரசிம்மவர்மப் பல்லவன் ஈழத்திற்கு ஒரு கடற்படை யனுப்பினான் என 'யுவான் சுவாங்' என்பார் கூறுகின்றார். இராச இராசசோழன், சேரர் கப்பற் படையைக் காந்தளூர் என்னுமிடத்துத் தோல்வியுறச் செய்தனன். இராசேந்திரசோழன் கடல் கடந்து, கடாரம் சென்று போர்புரிந்தான் எனக் கூறப்படுகின்றது. அப்துல்ரகுமான் என்ற அராபியன் காயல் துறைமுகத்தில் சுங்கம்சேகரித்தான் எனவும், அவன் பாண்டிய மன்னனின் அரண்மனையில் பெரியதோர் அதிகாரம் வகித்திருந்தான் எனவும் விளங்குகின்றது.

எனவே, இதுகாறும் விரிவாய்ப் பேசப்பெற்ற பாண்டியர் அரசியல் முறையினின்றும் நாம் அறியக்கிடக்கும் பேருண்மை ஒன்று உளது. பாண்டியர் அரசியலமைப்பில் மக்கள், மன்னன், பலப்பல குழுக்கள், வாரியங்கள், அரசிறை ஏற்பாடு என்பவை அனைத்தும் பின்னிப் பின்னிக் கிடப்பினும் மக்கள் சீரும், சிறப்பும்பெற்று, அவர்

1. Fahien.

செல்வமும் குறையாது அமைதி வாழ்க்கை நடாத்தினர். இதற்குக் காரணம், மக்களும் மன்னனும் மனம்பொருந்தி ஒத்துழைத்ததே. பிழைகள் தோன்றின் பிழைத்தோரின் பிழையைப் பொறுக்கும் பண்புவாய்ந்தவராயிருந்தனர் மக்கள். தன்னை இடித்துரைக்கும் எளிய புலவரையும் மன்னன் போற்றினுன் எனச் சங்க இலக்கியங்கள் கூறும். மக்களை மக்களால், மக்களுக்கென மன்னன் ஆட்சி செய்தான் எனக் கொளல்வேண்டும். மும்மன்னர்காலம் அனைத்தும் போர் மயமாயிருந்தனவே, மன்னர் தமக்குள்ளும், பல்லவர், சளுக்கியர், கங்கர் முதலிய பலரோடும் ஓயாது போரிட்டுவந்தனரே, பின் நாட்டில் அமைதி எங்ஙனம் நிலவிற்று என்ற ஐயம் நம் மனத்தில் எழலாம். அக்காலத்தில் போரிடும் மக்கள் வேறு, வேளாண்மை செய்வோர் வேறு. போர் பல நிகழ்ந்தகாலத்தும் படையினர் தவிர மற்றையோர் தத்தம் தொழிலில் அமைதியுடன் ஈடுபட்டிருந்தனர். அறப்போர்க் காலமன்றோ அக்காலம். மறப்போர் இக்காலம். எனவே நாட்டின் செல்வம் நலிவுற்றதேயில்லை எனலாம். நம் நாட்டிற்புகுந்த பிறரும் நாடு எக்காலத்தும் நலம்பெற்றிருந்ததெனவே தம் குறிப்புக்களில் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் நலனுக்கு அடிப்படையாவது அங்கு உறையும் கிராமமக்களின் நல்வாழ்வே என்பர் அறிஞர். பாண்டி நாட்டில் கிராமமக்கள் அமைதி வாழ்க்கை நடாத்தினர்; அரசியலிலும் பங்கு பெற்றிருந்தனர். வரிப்பளுவால் மக்கள் வாடியதாகச் சான்றுகள் யாதுமில. நம் வள்ளுவப் பெருந்தகையும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்' என ஏகாரம் தோன்றக் கூறி மகிழ்ந்தார்.

இடைக்காலப் பாண்டியர் மரபுவழி

பாண்டியன் கடுங்கோன்
[கி. பி. 575-600]

மாறவர்மன் அவனிசூளாமணி
[கி. பி. 600-625]

சடையவர்மன் செழியன் வேந்தன்
[கி. பி. 625-640]

மாறவர்மன் அரிகேசரி
[கி. பி. 640-670]

கோச்சடையன் ரணதீரன்
[கி. பி. 675-710]

மாறவர்மன் அரிகேசரி பராங்குசன் — இராசசிம்மன் I
[கி. பி. 710-765]

நெடுஞ்சடையன் பராந்தகன் — இராசசிம்மன் II
[கி. பி. 765-792]

வரகுண மகாராசன்
[கி. பி. 792-835]

சீமாறன் பரசக்கர கோலாகலன் — சீவல்லபன்
[கி. பி. 835—862]

வரகுண பாண்டியன்
[கி. பி. 862-880]

பராந்தக பாண்டியன்
[கி. பி. 880-900]

இராசசிம்மன் III
[கி. பி. 900-920]

வீரபாண்டியன்
[946-966]

ரு. நாயக்கர்காலம் [கி. பி. 1358—கி. பி. 1736]

[திரு. ஆ. சேபரத்தினம் அவர்கள், எம்.ஏ.]

காலப்போக்கில் நேர்ந்த மாறுதல்கள்

தமிழகத்தில் மூவேந்தர்களது ஆட்சி எக்காலத்தில் தொடங்கியது என்று அறுதியிடமுடியாது. ஆனல், அது எப்போது முடிவுற்றது என்பது நமக்குத்தெரியும். ஏதோ ஒருசேரர் பரம்பரை இன்றளவும் முற்றுப்பெறுமல் பெயரளவில் நின்று நிலவுகின்றது. ஆனல், முத்தமிழ் முழக்கிய இளங்கோ நாட்டிலே பன்னூறுண்டுகட்கு முன்னதாகவே சமக்கிருதம் புகுந்து தமிழ் மறைந்து விட்டது. சேர நாட்டார் இன்று தமக்கொரு தனிமொழியும் தனி ஆசாரமுமுடையோராய் மலையாளிகளாகிவிட்டனர். நாம் அவர்களைத் தமிழர் என்று நினைத்தாலும் அவர்கள் அதை ஒப்புக்கொள்வதாய் இல்லை. தென் திருவிதாங்கூர்த் தமிழர் அவர்களிடம் என்ன பாடுபடுகின்றுர்கள்! தம் ஆட்சியே கவிழ்ந்தாலும் தமிழர்க்குமட்டும் இணங்குவதில்லை என்று அவர்கள் கொண்டுள்ள உறுதி அண்மையில் வெளியானதை நாம் மறந்திருக்க முடியாது.

> "வஞ்சியீர் வஞ்சியிடையீர் மறவேலான்
> பஞ்சடி ஆயத்தீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்று ஊர்திரட்டி, அவர்கள் தம் நாடடைந்த 'பைந்தொடிப்பாவை'யைப் பாடிய காலம் பழைய காலம்; 'பாண்டியன் தன் மகளை'ப் பரவிய காலம் பழைய காலம். அம்மானைவரியும் கந்துகவரியும் ஊசல்வரியுமாக மூவேந்தரும் வஞ்சிநகர் வஞ்சியரால் வாழ்த்தப்பெற்று, எல்லை மூன்றுயினும் நாடு ஒன்றே என விளங்கிய பண்டை நிலைமை இன்று நமக்குக் கனவாகத் தோன்றுகிறது.

இங்ஙனம், தமிழகத்துப் பாகித்தானாக மலையாளம் பிரிந்த பின்னர், இன்றும் இனி என்றும் தமிழ்நாடென எஞ்சிநிற்பன சோழநாடும் பாண்டிய நாடுமே ஆகும்.

மூவேந்தர் ஒடுக்கமும் அதன் விளைவும்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டோடு பழந்தமிழ் மன்னர்கள் மறைந்தனர். தமிழ்மக்களின் அறிவு உயிர்ப்பாய் விளங்கிய தமிழ்ச்சங்கமும் மறைந்தது. அத் தமிழரசர்களுடைய காலத்திலே அவர்கள் கொடி வடக்கே இமயத்தில் பறந்தது; கிழக்கே கடாரத்திலும் சாவகம் முதலிய தீவுகளிலும் பறந்த காலமும் உண்டு. அவர்கள் கொடி தாங்கிய கலங்கள் கிழக்கே சீனத்தோடும், மேற்கே அரபு, மிசிரம், யவனம் முதலிய நாடுகளோடும் அரசியல் வாணிபத்தொடர்புகள் கொண்டிருந்த காலம் உண்டு. ஆனால் பொதுநீக்கிப் புவியாண்ட அத்தமிழரசர் மண்ணிலே வேற்றுநாட்டரசர்கள் யாரேனும் எக்காலத்திலேனும் இகல் கருதிக் காலடி வைத்ததாக ஒரு சிறு குறிப்புக்கூடக் கிடையாது. பாரதநாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகர்கூட தமிழகத்தின் உரிமையில் கைவைக்கத் துணியவில்லை. தனித்தமிழ்மொழி பேசித் தனித்தமிழ் நாகரிகத்துடன் தனித்தமிழ்நாட்டிலே தனித் தமிழ் அரசர்களால் ஆளப்பட்ட தனித்தமிழ்க்காலம் அது! இன்றும் தமிழ்மக்கள் சிலர்க்கு அத் 'தனித்தமிழ்' ஆசை தெளியாமல் இருப்பதில் வியப்பில்லை. பிறமொழிக் கலப்பற்ற தனித்தமிழ் உரைநடை வேண்டும் என்பாரும், தமிழகத்தில் தமிழரசு வேண்டும் என்பாரும், தமிழ் மொழி ஆட்சிமொழியாதல் வேண்டும் என்பாரும் இவரன்ன பிறரும் பழமையை எண்ணித் தொண்டு புரிந்து வருவது மகிழ்தற்குரியதாகும்.

நமது வேட்கை அது. ஆனால் காலம் மனிதனை மதித்து அவன் விருப்புக்கு அமைந்து ஒழுகும் இயல்புடையதா? கடைச்சங்க காலத்திலேயே வைதிகசமயங்களும், சமண பௌத்தங்களும் தமிழகத்தில் புகுந்து

தமிழர் சிந்தனைப்போக்கை மாற்றத்தொடங்கின. சாத்தனர் போன்ற பேரறிஞர்களுக்கும் அவை உடன்பாடாயின. நாயனர்போன்ற மெய்யறிவாளரும் அவற்றின் தாக்குதலுக்கு இணங்காமல் இல்லை. முதற்கண் இன்பமாகிய அகமும், பின்னர்ப் பொருள் முயற்சியும் அற முயற்சியுமாகிய புறமும் என்ற இயற்கைத் தமிழ்நெறி, திருக்குறளில் முதற்கண் அறமும் பொருளும், பின்னர்க் களவு கற்பு என்னும் இன்பமுமாய் இடமாற்றம் பெற்றது. அறத்தையே புகழ்ந்து இன்பத்தை இகழ்தல் தமிழர் இயல்பன்று, சமணர் இயல்பே யாகும்.

தமிழர் வடநாட்டுப் படையெடுப்பு வடவர்நாடு நகர்களை அழித்தது; அவர்கள் செருக்கை ஒழித்தது. இந்தச் சாயலைச் சிலம்பில் காண்கின்றோம். ஆனல், வடநாட்டுச் சமயப் படையெடுப்பு தமிழர் மரபுகளை அழித்தது. அவர் தம் சிந்தனைப் போக்குக்குப் புதுநெறி வகுத்தது. வாழ்வதற்கே வாழ்வு என்ற நெறிபயின்ற தமிழர் விண்ணை நோக்கிய ஆய்வில் மனம் போக்கிப் பொருளையும் இன்பத்தையும் புறம்போக விட்டனர்.

பல்லவர் மறைவு

தமிழ்மக்களுடைய வரலாற்றிலே இவ்வாறு அவர்களுடைய பழங்கொள்கைகள் உறுதிதளர்ந்து வரும் வேளையிலே மூவேந்தர் மறைந்து பல்லவ ஆட்சி ஒன்பதாம் நூற்றுண்டுவரை ஓங்கலாயிற்று. நிலைபேறுன வாழ்க்கைச் செல்வங்களை இழந்த தமிழர்க்குக் 'காஞ்சி' தலைநகராய் இருந்தது எத்துணைப் பொருத்தம்! அவமானத்துக்கு அஞ்சிப் பல்லவரைத் தமிழர் என்பாரும் உளர் நாவுக்கரசர் போன்ற சைவத் தமிழ்ப்பெரியாரின் குணம் ஒழுக்கம் பத்தி முதலிய பண்புகளால் கவர்ந்து கொள்ளப்பெற்று மனமாற்றம் எய்திய பின்னரே அவர்கள் 'தமிழர்' ஆயினர் என்பதுதான் உண்மை ஒப்பும் வரலாறு அல்லது வரலாறு ஒப்பும் உண்மையாகும். சைவம் தழுவிச் சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் எடுப்பித்து, சிற்பம் சித்திரம்

இசை நாடகம் முதலிய கலைகட்கு அவர்கள் புரிந்துள்ள புதுமைத்தொண்டுகள் அளப்பில. இன்று அவர்களை நாம் அயலார் என்று எண்ண இடமில்லை.

தமிழும் சமக்கிருதமும் கலைமகளின் இருகண்கள். அவ்விருமொழிகளிலும் பயிற்சியுடையவரே புலவர் என்று சமணர் பௌத்தர் காலத்து அரும்பிய கருத்து, மலர்ச்சியுற்றது பல்லவர்கள் காலத்திலேதான். இடைக்காலச் சோழர்காலத்தில் அக்கருத்து முதிர்ந்தது. நாயக்கர் காலத்தில் அது கனிந்து கமழ்ந்ததைப் பற்றிய செய்தியை இக்கட்டுரையின் பிற்பகுதியில் காணலாம்.

இதனால் வடநாடும் தென்னாடும் மொழிமுகமாய் நட்பாயின. தமிழர்க்குப் புண்ணிய தலம் வடபால் காசியாயிற்று. வடவர்க்குப் புண்ணியதலம் தென்பால் குமரியாயிற்று. வடநாட்டுச் சொற்களும் இலக்கிய இலக்கணங்களும், தமிழ்ச்சொற்கள் இலக்கிய இலக்கணங்களோடு கைகோத்துக் கலந்தன. மணிப்பவளத்தமிழ் நடை எழுந்தது. சங்கப் புலவர்களுடைய அகத்துறை, புறத்துறைச் சிறுபாட்டுக்களில் நடித்துவந்த கவிப்பாத்திரங்கள் ஆயிரமாயிரம் அடிகளும் விருத்தங்களும் அடங்கிய பெருங் காப்பிய அரங்குக்கு இடம்மாறினர். இக்காலத்துத் தெலுங்கு ஹிந்திநடிகர்கள் தமிழ்பேசித் தமிழ்த் திரையில் உலவுவதுபோல, வடநூலிற் பிறந்து வளர்ந்த சமக்கிருத பாத்திரங்கள் தமிழ் உளமும் தமிழ் உரையுமுடையோராய்த் தமிழ்க் காப்பியங்களுக்கு வந்து, தமிழர் மனத்தைக் களிப்பித்தனர். ஒருத்தியை உரிமை மனைவியாக மணந்துகொண்டு, காமக்கிழத்தியர் காதற்பரத்தையரை நயக்கும் ‘தன்னேப்பில் தமிழ்த்தலைவன்’ பலப்பல பெண்களை வேதவிதிப்படி மணக்கும் சீவகனுக்கு இடம் கொடுத்தான். பன்னீரியாண்டுப் பாவையை நினைந்துருகும் பதினாறாட்டைத் தமிழ் இளைஞன் மறைய, பாம்பணி பரமன் பதமலரில் மனம்வைத்து வாடும் பாலரு வாயர் காப்பியத்தலைவராயினர். தம் நாட்டையும் மொழியையும் பிறர் உரிமைக்கு நல்கிவிட்ட தமிழர் இம்மை இன்

பங்களில் நாட்டங் கொள்ளும் தமிழ் நிலையைக் கைவிட்டு, முத்திவீட்டினையும் பேரின்பத்தினையும் நாடினர். ஆங் காங்கே வானளாவிய கோவில்கள் எழுந்து தமிழகத்தை அணிசெய்தன.

சோழப்பேரரசு மறைவு

பல்லவரும் மறைந்தனர். அவர்க்கு அடிபணிந்து வாழ்ந்த பழைய தமிழ்ச் சோழர் மீண்டும் தலைதூக்கினர். விசயாலய ஆதித்தன் காலம் முதல், பதின்மூன்றாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் தலைவணக்கப்பெற்ற மூன்றாம் இராசேந்திர சோழன்வரை அவர்கள் தமிழ்ஆட்சி சிறப்போங்கி இருந்தது புவிச்சக்கரவர்த்தி இராசராசனும், கலைச் சக்கரவர்த்தி எனத்தகும் தஞ்சைப் பெருவுடையாரும், கவிச்சக்கரவர்த்தி கம்பரும் அக்காலச் சோழர் பெரு மைக்கு என்றும் அழியாச் சின்னங்கள். சமணமும் பௌத்தமும் சைவத்தோடு மோதி, இறுதியில் தமிழின் பலமுள்ள சைவத்துக்குத் தோற்றொழிந்த காலம் அது. பல்லவர்கள் காலத்திலே சைவப்பாடல்களாகிய தேவார அமுதுவார்த்து வளர்க்கப்பெற்ற சைவப்பயிர் சைவசித் தாந்தக் காழ்ப்பேறிக் கனிமிகுமரமாய் அன்புச்சுவை பிலிற்றும் அருங்கனி உதவிற்று.

சேக்கிழார் மனிதர்களைப் பெரியோர்களாகக் கண் டார். அதைத் தொடர்ந்து கம்பர் அவர்களைத் தெய்வ மாக்கினார். கடவுளைப்பாடிய காலம் கழிந்து, மனிதனைக் கடவுளாக்கி, அல்லது கடவுளை மனிதனாக்கிப் பாடிய காலம் அது. 'தெய்வங்கள் இருந்தால் அவை தெய் வங்களே, மனிதராகமாட்டா; அங்ஙனமே மனிதன் மனி தனே யன்றித் தெய்வமல்ல. 'இவ்வுலகில் அல்லது இப் பிறப்பில் நல்வழியில் இன்பமெல்லாம் எய்தி வாழ்தலே அற'மென வரையறுத்து உறுதியுடன் வாழ்ந்தவன் சங்க காலத்தமிழன். விண் முதலிய காணா உலகங்கட்குக் கற் பனை ஏணிவைத்து மனிதவாழ்க்கையை எல்லையற விரித்து

வளம்படுத்தியது கம்பர்காலம். பருப்பொருள் அடிப்படையில் நுண்பொருள் இயல்கண்ட பழந்தமிழனுக்கும், நுண்பொருள் அடிப்படையில் பருப்பொருள் இன்பம் நுகர்ந்த இடைக்காலச் சோழர்காலத் தமிழனுக்கும் எத்துணை வேறுபாடு!

பாண்டியர் பேரரசு மறைவு

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஒளி மழுங்கி மறைந்த பாண்டியர் குலம் மீண்டும் ஓர் ஆயிரம் ஆண்டு கட்குப்பின் சோழர் நுகத்தை முறித்து, ஏறத்தாழ 1215-ல் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தலைதூக்கியது. அப்போது மறைந்த சோழர் ஞாயிறு பின்னர் இன்றுவரை எழவே இல்லை, இனியும் எழுவதில்லை. இதே நிலைமைதான் மதிகுலப்பாண்டியர்க்கும் நேர்ந்தது: கி. பி. 1310-ல் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மக்கள் சுந்தரபாண்டியனும் வீரபாண்டியனும் அரசு கட்டிலுக்குத் தம்முள் இகலினர் அப்போது தென்னாட்டுச் செல்வங்களை நச்சி வடக்கேயிருந்து படையெடுத்து வந்து கொண்டிருந்த முகமதியர் படைத்தலைவன் மாலிக்காபூரின் உதவியை நாடினன் சுந்தரபாண்டியன். மாலிக்காபூர் அல்லாவுத்தீன் கில்ஜியினுடைய அடிமையாள். அவன் ஓர் இந்துவே. அவன் தெற்கே இராமேஸ்வரம் வரை கோவிலுள்ள இடமெல்லாம் போய்க் கொள்ளையடித்து, சோழபாண்டிய நாடுகளையும் அடிமைப்படுத்தினன். வடக்கே சோழநாட்டுக் கண்ணனூரிலும் தெற்கே பாண்டி நாட்டு மதுரையிலும் முகமதியப் படைகள் தங்கின. 1377 வரை தமிழகத்தில் முகமதியர் ஆட்சி செய்தனர். ஏற்கனவே பாண்டியர்க்குப் பணிந்து ஒழுகிய சோழர் இப்போதும் தத்தம் இடங்களில் பதுங்கிக்கொண்டனர். பாண்டியர் தெற்கே திருநெல்வேலிக்கு வந்துவிட்டனர்.

முகமதியர் வருகை

கி. பி. 986 முதலே இந்தியாவின் அரண்மனைகளிலும் கோவில்களிலும் குவிந்துகிடந்த பெருஞ்செல்வத்தை

விரும்பி, வடமேற்கு வழியாய் அங்குப் பன்முறை படை திரட்டி வந்து முகமதியர் கொள்ளையடித்துச் சென்றனர். முகமதியர்க்கும் இந்தியர்க்கும் இருநூறு ஆண்டுகளாய் அவ்வப்போது நடந்துவந்த இப்போர்கள் முடிவில் 1206-ல் டில்லியில் முகமதிய ஆட்சி ஏற்படுவதற்கு ஏதுவாயின. முகமதியரிடம் சிக்கிய டில்லி அரசுகட்டில் பின்னர் ஆங்கிலர் வசம் செல்ல அறுநூறாண்டுகளுக்கு மேலாயிற்று. முகமதியர் டில்லியில் அமர்ந்து ஒரு நூற்றாண்டளவாய் தென்திசையை எட்டிப்பார்க்கவில்லை. 1310-ல் அல்லாவுத்தீன் கில்ஜியின் சேனாபதி மாலிக்காபூரும், பின்னர் 1327-ல் மகமது துக்ளக்கும் தெற்கு நோக்கினர். அதனால் தக்காணத்திலிருந்த யாதவர், காகத்தியர் முதலிய இந்து அரச பீடங்கள் சரிந்து முகமதிய பாமினி அரசுக்கு இடமளித்தன. இங்ஙனம் வடஇந்தியாவிலும், தக்காணத்திலும் முகமதியஆட்சி பரவி நிலைபெறவே, இந்து அரச வம்சத்தினர்க்கும் அவர்கள் உரிமைக்கும் இடனாக எஞ்சியவை ஆந்திரமும் தமிழ்நாடுகளுமே.

விசயநகர் தோற்றம்

இதை அறிந்த ஐந்து சகோதரர்கள்—இவர்களை ஹொய்சல மரபினர் என்றும், மூன்றாம் வீரவல்லாளன் என்னும் ஹொய்சல மன்னவனுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாய் இருந்து அவன் இறந்தபின் அவனால் விஜயநகரத்தில் நிறுவப்பெற்ற அரசை ஏற்று, இந்தியாவின் தென்பகுதியில் முகமதியரை வேரறுக்கும் பணியைத் தொடர்ந்து செய்த வீரத்தலைவர்கள் என்றும், காகத்திய மரபினர் என்றும் பிறவாறும் கூறுவர். 1336-ல் விஜயநகர அரசைத் தோற்றுவித்துத் தென்னாடு முழுதுக்கும் மகிபதிகளாயினர். விசயநகர் துங்கபத்திரை நதியின் தென்கரையில் கட்டப்பெற்ற புதிய நகரம். ஆனால் அங்கே இந்தியாவின் பழங்குடிகளாகிய இந்துக்கள் தம் சமயம் கலாச்சாரம் முதலிய பழைய பண்பாடுகளுடன் வாழ்ந்து வந்தனர். இந்துதர்மம் முகமதியர் வாளுக்குப் பலியாகாமல் வாழும்படி சூழ்ந்த மறக்கோட்டை அது. ஹரிஹரர், புக்கர்

என்னும் வீர உடன்பிறந்தார் இருவர் அதன்காவலர்களாக இருந்தனர். தமிழகத்தில் நாயக்கர் என்று நாம் காணும் மரபுக்கு மூலபுருடர் இவர்களே. தெற்கே கண்ணனூரி லும் மதுரையிலும் முகமதியர் படை இருந்துகொண்டு ஆட்சி புரிவதை அவர்கள் உடனடியாக ஒழித்துக்கட்ட எண்ணியதில் வியப்பில்லை. ஆதலின் அவ்வீரர் தலைவரில் இரண்டாமவனுகிய புக்கருடைய புதல்வன் **குமாரகம் பண்ணன்** 1358-ல் தெற்கே இராமேசுவரம் வரை வந்து முகமதியப்படைகளை வென்று, சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும் விசயநகர ஆட்சியை நிலைநாட்டினுன் 1377-ல் முகமதியர் ஆட்சி தமிழகத்தினின்றும் முற்றிலும் மறைந் தது. தமிழகத்தில் கால் வைத்த முதல் நாயக்கன் குமார கம்பண்ணனே.

விசயநகரும் பாமினியும்

விசயநகரத்து அரசர்கள் தென்னுடு முழுவதையும் ஆறு அரசப் பிரதிநிதிகளைக்கொண்டு ஆண்டுவந்தனர். இக் கேரி, ஸ்ரீரங்கப்பட்டணம், வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய ஆறும் அப் பிரதிநிதிகள் வீற்றிருந்த தலை நகர்கள். இந்து இராச்சியமாகிய விசயநகரை அழிப்ப தென்று தக்காணத்திலிருந்த பாமினி என்னும் முகமதிய இராச்சியம் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தது. ஆனல் அதன் கனவு எளிதில் நிறைவேறுவதாக இல்லை. ஏனென் ருல் விசயநகர அரசப் பிரதிநிதிகள் தத்தம் தலைநகர்களில் முழு உரிமையுமுடைய அரசர்களைப்போன்று அதிகார முடையோராய், விசயநகர் வேந்தர்க்கு உண்மையாய், அவர்க்கு வேண்டும் பொருளும் படைத்துணையும் கொடுத்து உதவிவந்தார்கள். இந்துதர்மத்தைக் காப்ப தில் யாவர்க்கும் இருந்த ஒற்றுமைமனப்பான்மையே இதற்குக் காரணம்.

அதுமட்டுமன்றி, பாமினி இராச்சியத்திலே சுல்தா னுடைய பிரதிநிதிகளாய் அங்கங்கேயிருந்த முகமதியத் தலைவர்கள் பதவிப் பிரியர்களாகி, வேலைபார்த்து, பாமினி

யின் தலைமையை உதறி எறிந்துவிட்டுத் தாமே தனி சுல்தான்களாக முடி சூடிக்கொண்டார்கள். அதனால் 1526-ல் பாமினி இராச்சியம் பீரார், அமத்நகர், பீடார், பிஜப்பூர், கோல்கொண்டா என்று ஐந்து நாடுகளாகப் பிளவுற்றது. பிளவின்பின் போட்டியும் போரும் எழுவது இயற்கையே அன்றோ? ஐந்து சுல்தான்களும் தம்முள் பகைமை பூண்டு ஒருவரோடொருவர் தனித்தும் துணையுடனும் போர் விளைத்துக்கொள்ளலாயினர். இங்ஙனம் ஒற்றுமையிழந்த முகமதியர்கள் ஒற்றுமையுடன் விளங்கிய இந்து விசயநகரை வெல்வது அரிதாயிற்று. எனவே, விசயநகர் ஹரிஹரர் காலம்முதல் 1529-ல் கிருஷ்ணதேவராயர் காலம் வரை இருநூறு ஆண்டுகளாய் வலிபடைத்து வாழ்வு படைத்து புகழ்படைத்து நிவந்தோங்கியது.

ஆனால், பதினாறும் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கிருஷ்ணதேவராயர்க்குப் பிறகு விசயநகர் அரசுகட்டில் ஏறியவர்கள் ஆற்றல் படைத்தவர்கள் அல்லர். வெளியாராகிய முகமதியர் படை எடுப்பைத் தடுத்து நூறவும், தம் பிரதிநிதிகளுடைய ஒத்துழைப்பைக் கவர்ந்துகொள்ளவும் தக்க வன்மை இலராயினர்.

விசயநகரின் வலுக்குறைவு பழைய சோழ பாண்டியர்க்கும் ஒரு வாய்ப்பளிப்பதாக இருந்தது. அவர்களும் தத்தம் உரிமையை நிறுவும்படி தலைதூக்கத் தொடங்கினர். இராசராசன், இராசேந்திரன் காலத்துச் சோழப் பேரரசில் மதுரையை யடுத்த இடங்களில் வந்து தங்கிய சோழ வீரர்களான வாணதிராயர்களும் மீண்டும் மூச்சுவிட்டனர். தலைநாள் தமிழரசுகள் மறைந்ததின்பின்னரே இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று குடிநலம் கருதாமல் தம் நலமே கருதும் முடிகளின் கீழடங்கி அடிமையில் ஊறிய தமிழ்மக்கள் மட்டுமே அக்காலத்தில் அரவம் செய்யாது அடங்கியிருந்தனரெனல் வேண்டும்.


போர் வலியின்றிச் சிறுமை எய்திய அரசர்கள் வேளை பார்த்தே இருப்பர். கிருஷ்ணதேவராயர் காலத்திலும்

கூட தலை எடுத்துப் பார்த்தவர்கள் உண்டு. அப்போது அவர் தம்மோடு பயின்று உண்மையுடையோராய் அரசியல் அறிவும் ஆற்றலும் படைத்தவர்களைத் தம் பிரதிநிதிகளாக நியமித்து உள்நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பேணிவந்தார். அவருக்குப்பின் வந்தோர் திறமையற்றவர்கள். வடக்கிலிருந்த முகமதிய சுல்தான்கள் இதை அறிந்தனர்; தமது பகைமையை ஒழித்து ஒற்றுமைப்பட்டார்கள். சதாசிவராயர் காலத்தில் 1565-ல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் இந்துப் படையை எதிர்த்தார்கள். இந்துக்கள் தோற்றனர். முகமதியர் வென்றனர்.


விசயநகரம் சிதைந்தது


இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் இந்தியா அனைத்திலுமுள்ள இந்துக்களின் உரிமைச் சின்னமாக விளங்கியிருந்த விசயநகர் தரைமட்டமாயிற்று. இந்து சமுதாயத்தின் 'ராஜ்காட்' டாக இன்று நாம் அங்குக் காண்பது ஹம்பி என்றோர் சிற்றூர். மதவெறிகொண்ட மனிதப் பேயின் ஆன்மாபோன்று, பாடல் சான்ற விசயநகர் இருந்த இடத்திலே இன்று சூன்யம் நிலவுகிறது. தோல்வியுற்ற இந்துக்களின் புதிய தலைநகரமாக பெனுகொண்டா உருவாயிற்று. (பின்னர் அதுவும் மாறி சந்திரகிரிக்குப் போயிற்று.) விசயநகருக்குக் கப்பம் கட்டிய இந்துபதிகள் முகமதியர்க்குக் கப்பம் கட்டுவாராயினர்.

ஆயினும், விசயநகரை வென்ற முகமதியர் ஆந்திரத்திலும் தமிழகத்திலும் தம் ஆட்சியை நிறுவ முடியவில்லை. டில்லியிலே இருந்த அக்பர் போன்ற முகலாய பாதுஷாக்களின் கவனம் தெற்கே தக்காணத்தில் சுதந்திரத்துடனிருந்த சுல்தான்கள்மீது விழுந்தது. முதலில் தக்காணத்தையும், அதன்பின்னர்த் திராவிட நாட்டையும் இணைத்துக் கொண்டு இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்தாளும் வேட்கை அவர்களை உந்தியது. எனவே, தக்காணத்துச் சுல்தான்கள் தம்மினும் பன்மடங்கு பலம்


70
75
80
20
15
10
தௌலதாபாத்
பத்திரி
நந்தர்
பேசின்
ஆமத்நகர்
சோன்பேட்
சாவுல்
பீரார்
சோலாப்பூர்
பீடார்
கோல்கொண்டா
பிஜப்பூர்
தலைக்கோட்டை
முத்கல்
கோவா
ஸ்ரீசைலம்
விசயநகரம்
அகோபிலம்
தாட்பத்திரி
கண்டிகோட்டா
ஹோனவர்
ஜெர்சோப்பா
சித்தலதுர்க்கம்
பரத்கல்
இக்கேரி
பெனுகொண்டா
காளத்தி
திருப்பதி
சந்திரகிரி
மங்களூர்
ஸ்ரீரங்கபட்டணம்
வேலூர்
கன்னனூர்
மைசூர்
செஞ்சி
கடலூர்
கள்ளிக்கோட்டை
கண்ணனூர்
திருச்சி
தஞ்சை
மதுரை
இராமேசுவரம்
கோச்சின்
தென்காசி
இராமநாதபுரம்
கோயிலோன்
திருநெல்வேலி
காயல்
தூத்துக்குடி
குமரி
கொழும்பு
அரபிக்கடல்
இந்திய

விசய நகர சாம்ராச்சிய எல்லைகள் காட்




95
100
தென்னிந்தியா
16வது நூற்றுண்டு
20
தவுங்கு
புரோம்
பெகு
காகோன்
மார்த்தபான்
15
தாவாய்
தெனுசெரிம்
10
வ
95
100

பொருந்திய அந்த முகலாய மன்னர்களுக்குத் தப்பி உய்வதிலேயே நாட்டம் கொள்ளலாயினர். அதனால், இந்துக்கள் தோற்றும் தோற்றவர்களல்லர் ஆயினர். அப்போது ஹரிஹரர் அல்லது வீர சிவாசிபோன்ற தீரத்தலைவர் யாரேனும் இந்து அரசர் பரம்பரையில் தோன்றி இருந்தால் மீண்டும் இந்து அரசை உறுதியுற நிறுவியிருக்க முடியும். இந்துக்கள் அந்தப் பேறு பெறவில்லை. சிவாசி இதற்கு நூறுண்டுகளுக்குப் பின்னரே தோன்றினர். நிற்க,

தலைக்கோட்டையில் வாகை சூடிய சுல்தான்கள் தெற்கே எட்டிவர முடியாத நிலைமையில் இருந்தது தென் கடைசியிலிருந்த மதுரை நாயக்கர்கட்கு மிகமிக நலமாயிற்று. மற்ற நாயக்க மன்னர்களைக் காட்டிலும் மதுரை நாயக்கர்கள் வரலாற்று முதன்மையும் சிறப்பும் உடையோராக இருப்பதற்கு இஃது ஒரு காரணம். மதுரை நாயக்கர்களுக்கு மற்றொரு சிறப்பும் இருக்கின்றது. தஞ்சாவூர் நாயக்கரின் ஆட்சிக்குள் சோழநாடு முழுவதும் விடப்படவில்லை. திருவிதாங்கூர் அரசரிடம் கப்பம் வாங்கும் பொறுப்பும் மதுரை நாயக்கரிடமே இருந்தது. எனவே, தமிழகத்தின் பெரும்பகுதி மதுரையார் ஆட்சியில் இருப்பதைப் பார்க்கிறோம். தனிஉரிமை பெற்ற முதல் மதுரைநாயக்கராகிய விசுவநாதர் ஆட்சியில் இன்றை மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர் சேலம் மாவட்டங்களும் திருவிதாங்கூரின் ஒரு பாகமும் அடங்கியிருந்தன. எனவே மதுரை நாயக்கரைத் தமிழகத்து நாயக்கர் என்று குறிப்பிடுவதுகூடத் தவறாகாது.

மேலும் செஞ்சி, தஞ்சை வட்டங்கள் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியைக் காணாமலே கரைந்து மராட்டியர் வசமாயின. வேலூர் இவற்றுக்கும் முன்னர் 1604-ல் மறைந்தது. சீரங்கபட்டணம் 1610-க்குப்பின் உடையார் வம்சத்து அரசர்களுடைய மைசூர் இராச்சியமாக விடுதல் பெற்று இன்றளவும் இருக்கின்றது. விஜயநகரம் அழிந்த

பின்னரும் நூற்றெழுபது ஆண்டுகளாக மதுரை நிலைத்திருந்தது எனின், அதன் உறுதிக்கும் உயர்வுக்கும் வேறு சான்று வேண்டா. கிருஷ்ணதேவராயர் மறைந்த 1529-ஆம் ஆண்டுமுதலே தனிஉரிமை பூண்டு 1736 வரை ஏனை நாயக்கராட்சியைக் காட்டிலும் நெடுங்காலம் மன்னியது மதுரையே.

1358-ல் குமார கம்பண்ணன் காலம் முதல் 1736-ல் இராணி மீனாட்சி காலம் வரை 378 ஆண்டுகள் மதுரையில் நாயக்கர் ஆட்சி நின்றது. இதனை, 1358 முதல் 1529 வரை மதுரைநாயக்கர் விசயநகர அரசப் பிரதிநிதிகளாய் உரிமையற்றிருந்த முற்காலம் என்றும், 1529 முதல் 1736 வரை மதுரைநாயக்கர் தாமே தமக்குப் பொறுப்பாய் உரிமையுடன் இருந்து ஆண்ட பிற்காலம் என்றும் இரண்டு காலங்களாகப் பகுக்கலாம். இவற்றுள் பிரதிநிதி நாயக்கர் காலம் 171 ஆண்டுகள்; உரிமை நாயக்கர் காலம் 207 ஆண்டுகள். இவ்வுரிமை நாயக்கர்களும்கூடத் திருமலை நாயக்கர் காலம்வரை விஜயநகர்க்குப் பொருள் கொடுத்து, வடக்கிருந்து வரக்கூடிய முகமதியத் தாக்குதலுக்குத் தடுப்புச்சுவராக அதனைப் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். பதினேழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் விசயநகர் (பெனுகொண்டா) முகமதிய வெள்ளத்துக்கு அணையாகாது என்ற அதன் எளியநிலை வெளியானது. அஃதாவது, தக்காண சுல்தான்கள் பெனுகொண்டாவைக் கடந்து நேரே தெற்கே வந்து செஞ்சி, தஞ்சை, மதுரையைத் தாக்கினர் அந்தோ! இத்தாக்குதலுக்குச் சில வேளைகளில் பெனுகொண்டாவும் முகமதியர்க்கு உதவிசெய்தது. பழைய விசயநகரில் இந்துதர்ம லட்சியம் காற்றில் விடப்பட்டு, யாருக்குத் தலைவணங்கியாயினும் தம் அரசபோகங்களை விடாமற் காப்பாற்றிக்கொண்டிருந்தால் போதுமென்ற 'வீரமன்னர்கள்' பெரும்பாலும் பெனுகொண்டா அரசுகட்டிலை 'அணிசெய்து வந்தார்கள்'. இந்நிலைமை வந்தபின் மதுரைநாயக்கர் அவர்கட்குக் கப்பம் கட்டியாது பயன்?

மதுரை நாயக்கர் பரம்பரை தோன்றியது

துங்கபத்திரை நதிக்குத் தெற்கே கன்னியாகுமரி வரை விசயநகர ஆட்சியின்கீழ் இருந்ததென்று சொன்னோம். ஆம், ஆயினும் பழைய சோழ பாண்டிய மரபினர் முடிதுறந்து குடிகளாய் மறைந்துவிடவில்லை. விசயநகருக்குக் கப்பங்கட்டிகளாக அடங்கி வாழ்ந்தனர். இவர்களில் வீரசேகர சோழன் என்பான், வடக்கே தலைக்கோட்டையில் பின்னர் நேரவிருந்த இறுதிக்குரிய குறிகளை முன்னறிந்து, காலத்துக்கு முன்னரே சிறிது முந்திக்கொண்டு தனது தலைமையை நிலைநாட்டும் கருததுடன் சந்திரசேகர பாண்டியனது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். உடனே பாண்டியன் கிருஷ்ணதேவராயரிடம் குறையிரந்து முறைவேண்டி நின்றான். அவர் தென் திசையில் ஒழுங்கு நிறுவும்படி சோழநாட்டுக்கு வீர நரசிம்ம நாயக்கரையும் பாண்டிநாட்டுக்கு நரசிம்ம நாயக்கரையும் நியமுகம் செய்து அனுப்பிவைத்தார்.

வாழைப்பழம் தின்னுத குரங்கு இல்லை! இவர்கள் தாமும் தத்தம் இடங்களில் நிலையாகவிருந்து முழு உரிமையுடன் ஆட்சிபுரிய விரும்பினர். அதனை அறிந்த ராயர் மிகவும் வெகுண்டார். இறுதிப்போர் ஒன்று நேர்ந்தது, அதன் முடிவாகத் தென்னிந்தியாவில் விந்தியமலைக்குத் தெற்கே முகமதிய ஆட்சியா, இந்து ஆட்சியா எது நிலவப் போகின்றது என்பதுதான் அப்போதைய அரசியல் வானிலைக் குறி. இதில் விசயநகர் வென்றால் நாளடைவில் டில்லியையும் தம் அடிக்கீழ் வைக்கலாம் என்றும் கிருஷ்ண தேவராயர் போன்ற வீரமேதைகள் கனவுகண்டிருக்கலாம். இத்தகைய தருணத்தில்தான் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய்த் தென்திசை வந்த இருவரும் இவ்வாறு உரிமை நாட்டம் கொண்டனர். ஒருவேளை விசயநகரின் திக்குவிசயக் கனவு பலிப்பதற்கு உதவியாகத் தென்னுட்டில் தம் போன்ற திறமையாளருடைய நிலையான ஆட்சி வேண்டியதாகுமென்றும் வீரநரசிம்மரும் நாகமரும் கருதியிருக்கலாம்.

உண்மை அவரவர் உள்ளத்துக்கே தெரியும். ராயர் வெகுண்டபோது நரசிம்மர் திருவிதாங்கூருக்கு ஓடி ஒளித்துக்கொண்டார். நாகமரின் புதல்வன் விசுவநாதன் மதுரைக்கு வந்து தன் தந்தையைச் சிறைப்படுத்திக் கொண்டுபோய், ராயரிடம் ஒப்படைத்தான். தனயனுடைய அரச விசுவாசத்துக்குப் பரிசாக ராயர் அவன் தந்தை நாகமரை மன்னித்தார். மன்னித்ததோடுமட்டும் அவர் மனம் நிறைவெய்தவில்லை. விசுவநாத நாயக்கரையே தம் மதுரைப் பிரதிநிதியாக முழு உரிமையுடனிருந்து அரசாளும் பதவிக்கு உயர்த்தினார். விசுவநாதா தம் நண்பராகிய காஞ்சித்தமிழர் அரியநாதரைத் தமக்குத் தளவாயாகவும் பிரதானியாகவும் நியமித்துத் தம்முடன் அழைத்துக்கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார். இருவரும உள்நாட்டில் படமெடுத்தாடிய தலைவர்களை அடக்கும் பொருட்டுத் தான உபாயத்தைத் தழுவி அவர்களைப் பாளையக்காரர்களாக்கி, மதுரையில் இருநூறாண்டு நாயக்கராட்சிக்கு அடிகோலினர்.

மதுரைப்பாண்டியர் மறைவு

மதுரையில் 1310-ல் மாலிக்காபூர் படைகள் தங்கின காலத்திலேயே பாண்டியர்கள் தெற்கே வந்துவிட்டனர் என்று பார்த்தோம். திருநெல்வேலி, கரிவலம்வந்த நல்லூர், கொற்கை, தென்காசி முதலிய இடங்கள் அவர்கட்கு அவ்வப்போது புகலிடமாய் இருந்துவந்தன. விசுவநாத நாயக்கர் காலத்தில் 1564-ல் தென்காசியில் முடிசூடிக்கொண்ட நைடதப்புகழ் நரபதி அதிவீரராம பாண்டியனே கடைசிப் பாண்டிய மன்னர். அவருடைய மறைவு 1610-ல் என்று சொல்லப்படுகிறது. அவர்க்குப்பின்னர் சுந்தரபாண்டியன் என்ற பெயர் ஒன்று வருவதைத்தவிர வேறு குறிப்பு ஒன்றும் இலது.

கயத்தாற்றில் பஞ்ச வழுதிகள் என்ற சகோதரப் பாண்டியர்கள் திரண்டு, விசுவநாதர் தலைமையை ஏற்க மறுத்துத் தளவாய் அரியநாதர் படையை எதிர்த்துப் போர்

புரிந்து வீரசுவர்க்கம் எய்திய உருக்கமான செய்தி ஒன்றும் வரலாற்றில் உண்டு. ஆதி அறியாப்பாண்டியர் குலம் இவ்வாறு இறுதி எய்தியது. பாஞ்சாலங்குறிச்சி மண் மேட்டைக் கல்லி அந்நாயக்கச் சிறு தலைவரது வீரவரலாற்றுக்குச் சான்று தேடும் தமிழகத்தார் இப்பாண்டிய மரபினரைத் துவக்கி அவர்க்குச் சிறப்புச்செய்யும் ஒரு நாள் வருமா ?

தமிழகத்தில் எழுபத்திரண்டு அரசபீடங்கள்

சோழப் பேரரசர் காலத்தில் மதுரைக்கு வந்த சோழ வீரர்கள் மாவலிவாணாதிராயர் என ஆட்சி உரிமையுடைய தலைவர்களாய் மதுரைவட்டத்தில் வாழ்ந்துவந்தனர். அவர்களுடைய கொடை, வீரம் பற்றிய தனிப்பாடல்கள் இன்றும் தமிழகத்தில் ஒலித்துக்கொண்டிருப்பதை அறிவோம். குமார கம்பண்ணன் காலத்திலும் அதற்குப் பின்னரும் தென்னாட்டுக்கு வந்து குடியேறிய நாயக்கத் தலைவர்கள் வேறு ஆங்காங்கு அதிகாரத் தலைவர்களாய் விளங்கியிருந்தனர். இவர்களையன்றிப் பழைய பாண்டிய குலத்தினரும், மறவர் இனத்தினருமாகிய தலைவர்களும் இருந்தனர். அரியநாத முதலியாரும் விசுவநாத நாயக்கரும் இவர்களைப் பாளையக்காரர்களாக நியமித்தனர்.

இவ்வாறு தொடக்கத்தில் ஏற்பட்ட பாளையங்கள் பல. அவை நாளடைவில் எழுபத்திரண்டாக உருப்பெற்றன. அவற்றின் தொடர்ச்சியே பிற்காலத்தில் ஆங்கில ஆட்சியில் விளங்கிய சமீன்கள். பாளையக்காரர் தம் அதிகார எல்லைக்குள் அமைந்த நாட்டின் பகுதிக்கு அரசர்போல்வார். மதுரை மத்திய அரசாங்கத்துக்குப் போர் முதலிய நெருக்கடி ஏற்படும் காலங்களில் அவர்கள் படை அனுப்பி உதவவேண்டும். குடிகளிடம் தாம் வாங்கும் வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கப்பமாகக் கட்டவேண்டும். இம்முறையால் நாட்டில் அமைதி ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்தக்கு ஊர்தோறும் வரி வாங்கும் நிர்வாகப்பொறுப்பு எஞ்சியது. ஒரு பெரும்

படையை வைத்துப் பரிபாலிக்கும் பொறுப்பும் செலவும் இல்லாதொழிந்தன.

நாயக்கர் நிதிச்சாலை

படைகளுக்குரிய செலவைப் பாளையக்காரர் ஏற்றுக் கொண்டதால் மத்திய அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானங்களுக்குச் செலவு அதிகம் இல்லை. அரசாங்க வேலைக்காரர்க்குப் பணம் சம்பளமாகக் கொடுக்கும் வழக்கமும் அக்காலத்தில் இல்லை. மேலும், பாளையக்காரர்க்குச் சொந்தமான நிலங்களையன்றி, மதுரை நாயக்கர்க்கே சொந்தமாகவிருந்த நிலப்பகுதிகளும் உள. அவை பெரும்பாலும் பாளையக்காரர் நிலங்களைக்காட்டிலும் வளமிக்கவை; மிக்க வருவாய் அளிப்பவை. அவற்றிலிருந்தும் வருவாயில் மூன்றில் ஒன்று அரசாங்கத்துக்குக் கிடைத்தது. நிலவரியைத் தவிர, உழவு வரி, குடி வரி, படை வரி, தறி வரி, மர வரி, ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி முதலிய பலவகை வரிகளும் தண்டப்பட்டன.

இவற்றையன்றி மற்றொரு நிதி வாய்ப்பும் அவர்கட்கு உண்டாயிற்று. திருமலைநாயக்கர்க்குப்பின் வந்த நாயக்கர்கள் விசயநகரத்துக்குக் கப்பம் கட்டுவதை முற்றிலுமாக நிறுத்திக்கொண்டனர். ஆனால் இலங்கையும் திருவிதாங்கூரும் மதுரைக்கே கப்பம் கட்டிவந்தன. கடற்கரைப் பக்கங்களிலிருந்த போர்த்துக்கேசிய வணிகரும் மதுரைக்குக் கப்பம் கட்டினர். இவற்றால் மதுரை நாயக்கரின் நிதிச்சாலை நிரம்பிக்கிடந்தது. திருமலைநாயக்கர் காலத்தில் ஆண்டுவருவாய் எட்டு முதல் பத்து லட்சம் பவுன் மதிப்புவரை இருக்குமென்று மேனாட்டு ஆசிரியர்கள் கணக்கிடுகின்றார்கள்.

நாயக்க அரசர்கள்

நாகமநாயக்கருடைய புதல்வராகிய **விசுவநாதநாயக்கர்** காலம் முதல் இராணி மீனாட்சி காலம் வரை (1529-1736) ஆட்சி நடாத்திய நாயக்கர்கள் பதின்மூவர். அவர்களில்

நாயக்க மன்னர் மரபுவழி

நாகம நாயக்கர்
(காசியபகோத்திரம்)

விசுவநாத நாயக்கர் (தாய்) நாகமா
[கி. பி. 1529-64]

கிருட்டிணப்ப நாயக்கர்-I
(தாய்) லட்சுமம்ம அல்லது லட்சுமியாம்பிகா
[கி. பி. 1564-72]

வீரப்ப நாயக்கர் (தாய்) திருமலாம்பிகா
[கி. பி. 1572-95]

- கிருட்டிணப்ப நாயக்கர் II [கி. பி. 1595-1601]
- விச்வப்பா
  - முத்து கிருட்டிணப்ப நாயக்கர் [கி. பி. 1601-09]
    - முத்து வீரப்ப நாயக்கர் I [கி. பி. 1609-1623]
    - திருமலை நாயக்கர் [கி. பி. 1623-59]
      - முத்து வீரப்ப நாயக்கர் II [கி. பி. 1659]
        - சொக்கநாத நாயக்கர் [கி. பி. 1659-82]
          (தாய்) மங்கம்மாள் [கி. பி. 1689-1706]
          - முத்து வீரப்ப நாயக்கர் III
            (தாய்) முத்தம்மாள் [கி. பி. 1682-89]
            - விசயரங்க சொக்கநாத நாயக்கர் [கி. பி. 1706-32]
              - (தாய்) மீனாட்சி [கி. பி. 1732-36]
        - முத்துலிங்க நாயக்கர் [கி. பி. 1678]
    - குமார முத்து
- கஸ்தூரி ரங்கப்பா

வரலாற்றுச் சிறப்பு மிகப்பெற்றவர்கள் விசுவநாதநாயக்கர் (1529-1564), திருமலைநாயக்கர் (1623-1659), இராணி மங்கம்மாள் (1689-1706) ஆகிய மூவருமேயாவர். இவர்களில் திருமலைநாயக்கர் டில்லி ஷாஜஹானுடன் சமகாலத்தவர். ஷாஜஹான் காலத்தில் முகலாய ஆட்சி உச்சநிலை எய்தியதுபோல திருமலைநாயக்கர் காலத்தில் மதுரை நாயக்கர் ஆட்சி உச்சநிலை எய்தியிருந்தது. கட்டிடத்தால் அழியாப் புகழ்பெற்ற டில்லி பாதுஷாவைப்போலவே நாயக்கருக்கும் தாம் கட்டிய மஹாலால் இன்றும் தமிழகத்தில் வாழ்கிறார்.

தலைநகர்

விசுவநாத நாயக்கர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது திரிசிராப்பள்ளிக் கோட்டையையும் மதுரைக் கோட்டையையும் பழுதுபார்த்து எடுத்துக் கட்டினார். முன்னாள் தமிழகத்துத் தலைநகர்களாகிய இவ் விரண்டும் நாயக்கர் படையகமாய்த் தலைநகர்க்குரிய முக்கியத்துடன் விளங்கியிருந்தன. அவற்றுள் முதன்முதல் மதுரையே நாயக்கர் அரசுவீற்றிருக்கும் திருநகராய் அமைந்தது. பின்னர், முத்துவீரப்ப நாயக்கர் (1609—23) மதுரையை விட்டுத் திரிசிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு அங்கே வீற்றிருந்தார். அவருடைய குமாரராகிய திருமலை நாயக்கர் மீண்டும் மதுரையைத் தலைநகராகக்கொண்டு அங்கே புதிய கோவிற்பணிகள் செய்து, அரண்மனைகளும் கட்டினார். அவருடைய அரண்மனைச் சிறப்பை அவருடைய மனைவி அவமதித்துரைத்ததாகக் கதையொன்று வழங்குவதை அறிவோம். அவர் தஞ்சாவூர் நாயக்கரின் மகளார். தஞ்சாவூர் நாயக்கர் விஜயநகர் அரசபரம்பரையைச் சேர்ந்த செவ்வப்ப நாயக்கரின் பரம்பரையில் வந்தவர்கள். மதுரை நாயக்கர் நியமுகத்தால் அரசபதவிக்கு எட்டியவர்கள். குலச்செருக்கினை விளக்க இக்கதை வழங்குகின்றது. நிற்க, திருமலைநாயக்கருடைய பேரன் சொக்கநாத நாயக்கருடைய காலத்தில் மீண்டும் திரிசிராப்பள்ளி தலைநகராயிற்று. அதன்பின் இராணி மீனாட்சி காலம்

வரை அதுவே நாயக்கர் தம் தலைநகராய் இருந்து, அம் மரபினருக்கும் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிக்கும் கல்லறையாயிற்று. பழந்தமிழ்ப் பாண்டியரின் கல்லறையில் மற்றொரு பிணம் விழாமல் தப்பியதைப்பற்றிப் பாண்டிநாட்டார் மகிழ்வர்.

முதலாம் முத்துவீரப்ப நாயக்கர்காலம் முதல் மதுரை நாயக்கர்கள் அடிக்கடி தஞ்சை செஞ்சி நாயக்கர்களுடனும், மைசூர் உடையார்களுடனும், தக்காணத்துச் சுல்தான்களுடனும் போர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. பெனுகொண்டாவிலிருந்த விசயநகர் அரசு பலங் குன்றிவிட்டதே இதற்குக் காரணம். மதுரைக்கோட்டையைக் காட்டிலும் திருச்சிக்கோட்டை பலமிக்கதாய் இருந்ததாலும், வடக்கிருந்து வரும் படைகளைத் தொடக்கத்திலேயே தடுப்பதற்குத் திருச்சியே அண்மையில் இருந்ததாலும் இத் தலைநகர் மாற்றம் இன்றியமையாததாயிற்று.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை போர்களும் குழப்பமும்

வடகோடியில் டில்லியிலிருந்த முகலாய பாதுஷாக்களுக்கு, முக்கியமாக அக்பர் காலம் முதலே தெற்கே கன்னியாகுமரிவரை ஒரு குடைக்கீழ் வைத்துப் பாரத நாட்டை ஆளவேண்டுமென்ற பேராவல் இருந்து வந்தது. ஆனாலும் அவர்களுடைய நேர் ஆட்சி வடஇந்தியாவைக் கடந்து தெற்கு வருவதற்கு அத் தக்காணத்திலிருந்த ஐந்து முகமதிய அரசுகளும் இடையூறாக இருந்து வந்தன. முகமதிய சுல்தான்கள் முகலாய ஆணைக்குத் தலைவணங்க உடன்படவில்லை. முகலாய மன்னர்கள் சுல்தான்களுடைய சுதந்தரத்தை அநுமதித்து வாளா இருப்பதாகவும் இல்லை. அதனால் முகலாய ஆட்சியில் தக்காணத்தை அரிபிளவை என்று கூறுவர் பாதுஷா ஔரங்கசீப் காலத்தில் முகலாய ஆட்சி வீழ்ச்சியுறுவதற்கு இந்த அரிபிளவை ஓர் முக்கிய காரணம் என்று கூறுவர் வரலாற்றாசிரியர்.

பாதுஷாவைப் பெரும்பகையாகக் கொண்ட சுல்தான்கள் தாமும் தமக்குள் ஒற்றுமையுடன் இருக்கவில்லை. தம்முள் போர்புரிந்து கொள்வர். பின்னர்த் தாமே தனித்தும் கூடியும் விசயநகரரோடும் போர் புரிந்து கொள்வர். விசயநகர் இளைத்தபின் அதற்கும் தென்பாலிருந்த நாயக்கர்களோடும் போரிட்டுக்கொள்வர். இதற்கிடையில் டில்லி ஆசையும் தக்காணத்துச் சுல்தான்கள் ஆசையும் மண்ணாகும்படி மராட்டிய நாட்டில் வீரசிவாஜி (1674) முடிசூடிக்கொண்டு, வடக்கே முகலாயப் படைகளுக்கும் தெற்கே சுல்தான்களின் படைகளுக்கும் ஈடுகொடுத்துக்கொண்டு வந்தார். அவர் படைகள் செஞ்சி, தஞ்சை வரை வந்தன.

தெற்கே திராவிடநாட்டிலிருந்த நாயக்கத் தலைவர்கள் போரின்றி ஒற்றுமையுடன் இருந்தனராவெனின் இல்லை. தத்தம் தலைமையைக் கருதியும், வேறு பகைமைகள் கருதியும் தம்முட் போர்புரிந்து வந்தனர். அவ்வப்போது வடக்கிருந்து வரும் முகமதியப் படையெடுப்புக்களையும் எதிர்த்துப் போராடினர். தென்கோடியிலிருந்த நாயக்கர்கள் ஒருக்கால் அமைதியுடன் இருந்திருக்கலாம். அவர்களுக்கு அந் நல்விதியும் மதியும் இல்லை. கிழக்கிலுள்ள இராமநாதபுரம் சேதுபதிகளையும், மேற்கிலுள்ள திருவிதாங்கூர் மன்னர்களையும், மற்றமற்றப் பாளையக்காரரையும் அவ்வப்போது அடக்கிவைக்கும் உள்நாட்டுத் தொல்லைகள் ஏற்பட்டன. யார்யார் நிலையான நட்பு அன்புடைய பாளையக்காரர் என்பது உறுதியில்லை. மைசூர்ப்படை திருமலைநாயக்கர் உடல்நலமில்லாதிருந்த சமயத்தில் மதுரைவரை வந்து மதுரையிலும் புகுந்து, தமிழருடைய மூக்குகளை அரிந்து சாக்கில் கட்டி உடையார் மன்னர்க்குப் பாதகாணிக்கையாகப் படைத்தது. அப்போது சேதுபதி வீரத்தமிழ்மறவர் படையைத் திரட்டி மைசூர்வரை சென்று அங்குள்ளார் மூக்கை அரிந்து, மைசூர்மன்னர் மூக்கையும் அரிந்து, திருமலைநாயக்கருக்கும், கன்னடியப்படையால் தமிழர்க்கும்நேர்ந்த அவமானத்

ளைத் துடைத்தார். இவ்வண்ணம் திருமலை நாயக்கர்க்கு நண்பராய் விளங்கிய சேதுபதிகள் பின்னர் பெண்பாலாகிய மங்கம்மாள் காலத்தில் மனம் வேறுபட்டனர்.

இவ்வனம் இந்தியா முழுவதும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை முடிகள் ஒன்றுடனொன்று மோதி நாடு குருதிக்களமாகச் சிவந்தது. மக்கள் பதவிப் பித்தர்களின் கைப்பாவைகளாக மதிக்கப்பட்ட அக்காலத்திலே, இந்தியாவை அடிமைக்கயத்தில் ஆழ்த்தும் அரசியல் புயலொன்று கடல்வழியாக மெல்லிதாக வீசத் தொடங்கிப் பின் படிப்படியாகத் தடித்துக்கொண்டு வந்தது. போர்த்துக்கேசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் ஆகிய ஐரோப்பிய வணிகர்கள் கடற்கரையோரங்களில் வணிகநிலையங்கள் கட்டி அவற்றைத் தம் படை நிலையங்களாக மாற்றிக்கொண்டு, உள்நாட்டு அரசியலிலும் போர்களிலும் பங்கெடுத்துக்கொள்ளத் தொடங்கியிருந்தனர்.

திருமலை நாயக்கர் போர்த்துக்கேசியருக்கு உதவியாகக் காயல்பட்டினத்திலிருந்த டச்சுக்காரரைத் துரத்திவிட்டபோது, அவர்கள் பழிவாங்கும்படி பத்துக் கப்பலுடைய கடற்படையுடன் திருச்செந்தூர்க் கோவிலைப் பிடித்து, தூத்துக்குடியை எரித்து, கடற்கரைப் பரதவர்கள் தமக்குக் கப்பம்கட்டி வரும்படி உடன்பாடு செய்து கொண்டார்கள். இதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே 1535-ல் சதாசிவராயர் காலத்தில் தூத்துக்குடிவரை படையெடுத்து வந்த திருவிதாங்கூர் மன்னரிடம் புனித பிரான்சிஸ் சேவியர் விசயநகரப் படைத்தலைவராகிய இராமராய விட்டல நாயக்கருக்காகத் தூது சென்று, அவ்விருவர்க்கும் சந்து செய்து வைத்தார் என்று சொல்லப்படுகிறது.

கிறித்து சமயப் 'படை எடுப்பும்' தொடங்கியிருந்தது. ஏற்கனவே கடற்கரைப் பரதவரிடையே சமயப் பணி செய்து வந்த ஜெஸூட் மிஷன் 1592-ல் மதுரையிலும் இடம் பெற்றது.

இவ்வாறு நாடெங்கும் அமைதியின்றிப் போர்மயமாக இருந்த அக்காலத்தில் பாளையக்காரரது நேர்ஆட்சியி லிருந்த தமிழ்க்குடிகளது நிலைமையை நாம் கற்பனை செய்து பார்த்தல் அரிதன்று. நாயக்க மன்னர்கள் பலப்பல ஆக்கப்பணிகள் செய்தார்கள் என்பதற்கு ஐய மில்லை. மதுரை, திருநெல்வேலி போன்ற நகர்கள் கோவில் குளம் முதலிய சிறப்புக்களுடன் இன்று விளங்கி யிருப்பதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் விசுவ நாத நாயக்கர், திருமலைநாயக்கர் போன்றவர்களே யாவர். பாளையங்கோட்டைக்குக் கிழக்கே இருக்கும் கிருட்டிண புரம் ஊரும், மேற்கே இருக்கும் கடையம் கிருட்டிண புரமும் முதலாம் கிருட்டிணப்ப நாயக்கருடைய (1564—1572) படைப்புக்கள். இவ்வாறு நாயக்க மன்னர்கள் செய்துள்ள பணிகள் பல. சமயங்களின் வளர்ப்புப் பண்ணைகளாகிய மடங்களுக்கு அவர்கள் மானியங்கள் வழங்கினர். பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் குளங் களும கால்வாய்களும் தொட்டனர் மங்கம்மாள் சத்திரங் களும் பெருவழிகளும் வரலாற்றுப் புகழ்படைத்தவை. நாட்டில் இக்காலத்திலே நிலவும் அமைதி, ஆட்சி, மக்களின் உரிமை முதலியவற்றுடன், முழுஉரிமை படைத்து முடிமன்னரைப்போல விளங்கிய அக்காலத்துப் பாளையக்காரரின் ஆட்சியை ஒப்பிடும்போது, அவர்கள் நாகரிகமான எந்தச் சட்டம், எந்த நீதி வைத்து ஆண் டிருக்க முடியும்!

ஐரோப்பிய வணிகர்

ஐரோப்பிய வழிப்போக்கர்களான மார்கொபோலோ (வெனிஸ்), இபின் பட்டுட்டா (மொராக்கோ), நிக்கொலா காண்டி (வெனிஸ்), அதனெஸியஸ் நிகிடின் (ரஷ்யா), வார்தெமா (இத்தாலி), நூனிஸ் (போர்த்துக்கல்), முதலி யோர் பதின்மூன்றும் பதினன்காம் நூற்றாண்டு முதலே இந்தியாவுக்கு வந்து போனார்கள். இந்தியாவின் மிளகு, தந்தம் முதலிய வணிகப் பொருட்களைக் கண்டிருந்த ஐரோப்பிய மக்கள் இவ்வழிப்போக்கர் மூலம் இந்தியநாட்டு

மக்களையும் அவர்கள் பழக்க வழக்கங்களையும் அரசியல் நிலைமைகளையும் பற்றிக் கேள்விப்பட்டனர். அது மேனாட்டிலே துணிசெயல் விருப்புடையோர்க்கு இந்தியா அழைப்பு விடுத்ததுபோலாயிற்று.

மேலும் ஐரோப்பிய வணிகர்கள் மத்தியதரைக் கடல் செங்கடல் வழியாக அரேபியா இந்தியா முதலிய கீழ்நாடுகளுக்கு வந்துகொண்டிருந்த வழி துருக்கியர் வசமாகிவிட்டது; துருக்கிய முகமதியர்க்கும் ஐரோப்பியக் கிறித்தவர்க்கும் தீராக் கடும்பகை உண்டு. ஆதலின் ஐரோப்பியர் ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கீழ்நாடுகளுக்கு வரும் கடல்வழியைக் கண்டு பிடித்தனர். அப்போது விசய நகர அரசர்கள் ஆட்சிசெய்து கொண்டிருந்தார்கள்.

கடல் வாணிகத் துறையில் முதன்முதல் துணிந்தவர்கள் போர்த்துக் கேசியரே. பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் எத்தியோப்பியா, அராபியா, பெர்சியா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் கடற்கரைகளில் அவர்கள் கப்பல்கள் ஓடிக்கொண்டிருந்தன. வாஸ்கோடகாமா 1498-ல் கள்ளிக்கோட்டையில் வந்திறங்கினார். 1510-ல் கோவாத்தீவு அவர்களுக்குச் சொந்தமாயிற்று. அங்கே அவர்கள் நகர் கண்டு கோட்டை கட்டிப் படைவீரர்களை வைத்துத் தம் ஆட்சியை நிறுவிக் கொண்டனர். போர்த்துக்கல் மன்னர்கள் அன்றுமுதல் இன்றுவரை அங்குத் தம் பிரதிநிதிகளை வைத்து ஆண்டு வருகின்றனர். ஆங்கிலச் சிங்கத்தை நடுக்கிய நேருவின் முழக்கம், போர்த்துக்கல் சுண்டெலியை அசைக்கவில்லை.

போர்த்துக்கேசியரைப் பின்பற்றியவர்கள் டச்சுக்காரர். ஆனால் அவர்கள் எண்ணம் முக்கியமாக மலேயாவிலும் அதனை அடுத்த தீவுகளிலும் சென்றது. சாவகத் தீவு இன்னும் அவர்கள் வசமே இருந்துவருகின்றது. அவர்களைத் தொடர்ந்து பேனிஷ்காரர் வந்தனர். தரங்கம்பாடி அவர்கள் தலைநகர். அந்நாட்டுக் கிறித்துவ மிஷனைச் சேர்ந்த பணிநிலையத்தைத் தவிர அவர்கள் சுவடு வேறு இன்று தமிழகத்தில் இல்லை. பின்னர்ப் பதினேழாம்

நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆங்கிலேயரும், அவர்களுக்கு அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு பிரஞ்சுக்காரரும் இங்கு வந்தனர்.

நாட்டின் அரசியல் நிலையை அறிந்துகொண்ட மேனாட்டு வணிகர்க்கு ஆசை பெரிதானதில் வியப்பில்லை. எனவே, இந்தியாவிலுள்ள ஆட்சிப் பீடங்களைக் குறித்து அவர்கள் தம்முள் போட்டியிடலாயினர். போர்களும் புரிந்துகொண்டனர். இவற்றின் முடிவாக ஆங்கிலேயர் முதலில் போர்த்துக்கேசியரையும், பின்னர்ப் பிரஞ்சுக் காரரையும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றிவிட்டுத் தாமே டில்லியில் அரசுகட்டில் ஏறினர். அசோகர், அக்பர் முதலிய பழைய மன்னர்கள் கண்ட கனவு பலித்து, அவர்களே இந்திய நாட்டை ஒருகுடைக்கீழ் வைத்தாளும் உரிமை உடையவராய் விளங்கினர். இன்றும சுதந்தர இந்தியாவில் அஃது ஒரே நாடென இருப்பது ஆங்கில ஆட்சியின் தலைசிறந்த நன்மைகளில் ஒன்று.

இந்தியாவின் தென்பகுதியிலிருந்த தமிழரசுகளைப் போன்று, அதன் வடபகுதியில் பழமையான அரசுகள் எக்காலத்திலும் நெடுங்காலம் நிலைபெற்று இருந்ததில்லை. ஆரியர்காலம் தொட்டு, வடமேற்குக் கணவாய்களின் வழியாக வந்துகொண்டிருந்த பல படைஎடுப்புகட்கும், நிலைபேறற்ற பல ஆட்சிகட்கும் களமாகவே அது இருந்து வந்திருக்கிறது. நிலையான நல்லரசும், தனித்ததொரு மொழியும் வாழ்க்கைப் பண்பும் உடையோராக விளங்கிய தமிழ்மக்களே கடல் கடந்து வாணிபம் செய்யும் திற முடையவராக இருந்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய தலைநகர்களிலும் காயற்பட்டினம் காவிரிப்பூம்பட்டினம் முதலிய துறைமுகங்களிலும்,

‘கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வைப்பும்’

இருந்தன. இந்தியாவின் பாதுகாப்புக்குக் கடற்படையின் முக்கியத்தைத் தமிழரசர்களைப்போல உணர்ந்த பிற இந்திய மன்னர் என்றும் இருந்திலர். நாயக்கர்களிற் சிறந்த திருமலைநாயக்கர்கூட கப்பல்துறையில் கவனம் செலுத்தாது, ஐரோப்பியவணிகர் அளிக்கும் கப்பத்துடன் மனநிறைவு அடைந்தார். இந்தியாவின் பாதுகாப்புக்குக் கடற்படையின் முக்கியத்தை அறிந்தனர் ஐரோப்பியர்கள்.

ஆங்கில ஆட்சிக்கு வித்து இடப்பட்டது

நாயக்கர்கள் ஆட்சி மறைந்தபிறகே ஆங்கிலர் ஆளும் இனமாயினர். விசயநகர் அரசர்களுக்கு அடங்கிய சந்திரகிரி அரசர் 1639-ல் கூவம் நதிக்கு வடபாலுள்ள மணல் வெளியை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவர் பிரான்சிஸ்டே என்பார்க்கு ஒரு சிறு தொகைக்கு அளித்தார். பாம்பேத்தீவு போர்த்துக்கேசிய இளவரசி காதரினை மணந்த இரண்டாம் சார்லஸ் என்னும் ஆங்கில அரசர்க்கு 1661-ல் போர்த்துக்கேசியரால் பெண் கொடைப் பொருளாக வழங்கப்பட்டது! அவர் அதனை ஆண்டுக்குப் பத்துப் பவுன் குடிக்கூலிக்குக் கம்பெனியார்க்குக் கொடுத்தார். அங்கே சார்லஸ் அரசருடைய வெள்ளி ரூபாய் வழங்கிற்று.

இராணி மீனாட்சியைப் பகைவரிடமிருந்து பாதுகாப்பதாக வாக்குரைத்து, அவளை வஞ்சித்து, அவள் நஞ்சுண்டு உயிர்துறந்தபின் (1736) திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி மதுரை நாயக்கர் மரபுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் சந்தாசாகிப் என்னும் ஆர்க்காட்டு நவாப். ஆங்கிலேயர் சந்தாசாகிபுக்குப் பகைவனாகிய முகமது அலிக்குத் துணைநின்று, அவனையும், அவனுக்குத் துணைநின்ற பிரஞ்சுக்காரரையும் வென்றனர். ஆர்க்காட்டை 1752-ல் கைப்பற்றி ஆங்கில ஆட்சிக்கு வித்து இட்ட வியப்பைச் செய்தவன் கிளைவ் என்னும் ஆங்கிலவீரன்.

ஆகவே, ஐரோப்பியரிடம் முதலில் நம்நாட்டு வாணிகத்தையும், பின்னர் நமது நாட்டையுமே கொடுத்துவிட்டு

நாம் அவர்களிடம் பெற்றுக்கொண்டவை அடிமைத்தனம், தொழிலிழந்த வறுமை, கிறித்து சமயதர்மம், வேறுபாடற்ற சமூக சமதர்மக்கொள்கை, நல்லாட்சிமுறைமை, ஆங்கிலப்படிப்பு, சூட்டு, பூட்டு, தொப்பி, ரொட்டி, பிஸ்கோத்து முதலியன. இங்ஙனம் இழக்கக்கூடாத சிலவற்றை இழந்து, பெறவேண்டிய நன்மைகள் பலவற்றைப் பெற்றேம். தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் கிறித்து சமயத்தொண்டர்களாலும் அவர்கள் சங்கங்களாலும் நாம் எய்திய பேறுகள் பல. அவற்றைப் பின்னர்க் காண்பாம்.

மத்திய அரசாங்கம்

மதுரையுந் திருச்சிராப்பள்ளியும் மாறிமாறி மதுரை நாயக்கமன்னர்களின் தலைநகராக இருந்து வந்திருக்கின்றன. அவர்கள் அரச மரபினரைப்போன்று தந்தைக்குப் பின் தனயனுக ஆட்சி எய்தியிருக்கின்றனர். அவர்களுள் பெண்பாலாரும் உளர். சொக்கநாத நாயக்கர் மகன் மூன்றும் முத்து வீரப்பநாயக்கர் இறந்தபின் அவர் மனைவி முத்தம்மாள் குழந்தைப்பேறுவரையும் உயிர்தாங்கியிருந்து, பின்னர்த் தீக்குளித்து மாண்டார். ஆதலின் சிறுவனுக இருந்த விசயரங்க சொக்கநாதநாயக்கருக்குப் பதில் சொக்கநாதநாயக்கருடைய மனைவி மங்கம்மாள் அரசினை ஏற்றூர். விசயரங்க சொக்கநாதநாயக்கருடைய மனைவியே இராணி மீனுட்சியாவார்.

இப்பெண்ணரசிகள் பெயருக்குமட்டும் முடிசூட்டிக் கொண்டவர்களல்லர். ஆட்சித்திறமும், அரசியல் நுண்ணறிவும், வீரமும் படைத்து நாயக்கர் ஆட்சி வரலாற்றில் அழியா இடம்பெற்ற அரிவையராவர். இராணி மங்கம்மாள் தமக்குக் கப்பம்கட்ட மறுத்த திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மாமீது படையெடுத்துப்போய் வாகை சூடினுர். அவர் புகழ்ச்சின்னங்களாக இன்றும் நின்றிலங்கும் சத்திரங்களும் சாலைகளும் நாம் அறியாதனவல்ல. அவள் கிழவன் சேதுபதியை எதிர்த்த வீரப்பெண்ணரசியேயாயினும், கணவனிறந்து கைம்மை எய்தி வாழ்ந்த காரிகை

யாதலின் பொல்லா உலகம் அவர்மீதும் மாசுகற்பித்தது என்பது வருந்தத்தக்கது.

ஆட்சிக்குழு

நாயக்கர் மத்திய அரசாங்கத்தலைவராவார். அவரால் நியமிக்கப்பெற்ற அதிகாரத்தலைவர்கள் ஐவர். அவர்களில் தளவாய், பிரதானி, இராயசம் ஆகிய மூவரும் முதன்மை ஆட்சிக்குழு ஆவர். கணக்கன், தாணுபதி ஆகியோர் மற்றை இருவருமாவர். தளவாய் முதன்மந்திரியாக உள்நாட்டு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அயல்நாட்டுத் தொடர்புக்கும் பொறுப்புடையவர். பிரதானி நிதிமந்திரியாவார். இராயசம் ஆட்சி நடைமுறைக் கண்காணிப்புத் தலைவர். கணக்கன் அரசாங்கக் கணக்குகட்கு அதிபதி. தாணுபதி தளவாயுடன் அயல்நாட்டுத் தொடர்புக்குப் பொறுப் புடையவர். இந்தப்பதவிகள் பெரும்பாலும் பிராமணர் களாலேயே வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. திருமலை நாயக்கர் காலத்துக்குப்பின் அரசாங்கத்தில் அவர்கள் அதிக செல்வாக்குப் பெற்றனர். இவர்களுக்கு மாதச் சம்ப ளங்கள் கிடையா. நிலங்களும் இனும்களும் கொடுக்கப் பட்டன.

நாயக்கர் பொறுப்பு

கோவில்களும், பிறசமயத்துறைப் பொறுப்புக்களும் நாயக்கர்களிடம் இருந்தன. அவர்கள் சைவசமயத்தின ராயினும் பிறபிற சமயங்கட்கெல்லாம் ஆதரவளித்து வந்தனர். பள்ளிவாசல்களும் தனிப்பட்ட முகம்மதியரும் பொருளுதவிபெற்றிருக்கின்றனர். ஐரோப்பியக் கிறித்த வர்களும இதற்கு விலக்கல்ல. ஆயினும், நாயக்கர் ஆட்சி முக்கியமாக இந்துதர்மத்துக்கு வேலியாக அமைந்த தென்று கூறலாம்.

தளவாய் முதலிய மந்திரிகளின் பொறுப்பில் நாயக் கர்கள் தலையிடமாட்டார்கள் என்பதில்லை. எதனையும் செய்யும் உரிமை நாயக்கர்க்கு உண்டு. குறிப்பிட்ட

சட்டங்கள் அக்காலத்தில் இருக்கவில்லை. நாயக்கர்களும் அவர்களுடைய மந்திரிமார்களுமே சட்ட நூல்கள். விசுவநாதர், திருமலை, மங்கம்மாள் ஆகிய நாயக்க மன்னர்களுடைய ஆட்சிகள் சிறப்பெய்துவதற்கு, அவர்களும், அவர்களுடைய தளவாய்களாக விளங்கிய அரியநாதர், ராமப்பய்யா, நரசப்பய்யா ஆகியோருமே காரணம்.

மத்திய நீதிமன்றம் என்பது அக்காலத்தில் இருந்ததில்லை. கிராம ஆட்சியே நிலவியது. பாளையத் தலைவர்களும் கிராமத்தலைவர்களுமாகிய அதிகாரிகளுடைய அறிவுடைமைக்கும் மனச்சான்றுக்கும் ஏற்ப மக்களுக்கு நீதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும என்பது வெளிப்படை.

மாகாண ஆட்சி

பாளையங்களே மாகாணங்கள் ; பாளையக்காரர்களே மாகாண ஆட்சியாளர் என்று கொள்வதற்கு இடமில்லை. மத்திய அரசாங்கத்தின்கீழ் மாகாணத்தலைவர்களும், அத்தலைவர்களின்கீழ் பாளையங்களும் இருந்திருக்கின்றன. திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சத்தியமங்கலம், மானா மதுரை, சேநதமங்கலம், மாரமங்கலம், சேலம் முதலியன மாகாணங்கள். நியமிக்கப்பெற்ற அதிகாரிகளும், பெரிய பாளையத்தலைவர்களும், அரசர்களும் அம்மாகாணத் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். ஆட்சி செய்தலும், கப்பம் வாங்குதலும் இவர்கள் கடமையாகும்.

சமூக வாழ்க்கை

பிறசமயங்களை வெறுப்பவர் அல்லராயினும் நாயக்க மன்னர்கள் பெரும்பாலும் வைதீக மனப்பான்மையுடையவர்கள். பிராமணர்கள் தனி உரிமைகள் பெற்று மதிப்புடன் வாழ்ந்தமைக்கு இஃது ஒரு காரணம். சாதி வகுப்பு தரும நியாயமானது என்பது அவர்கள் நம்பிக்கை. ஆதலின் சாதித்தொடர்பு பற்றியவை அரசாங்கத்தின் அநுமதியின்றி நடைபெறமுடியா. 1623-ல் பிறப்பிக்கப்பட்ட அம்பாசமுத்திரம், பிரமதேசம் சாசனங்களில் கம்மாள

சாதியார் தம் கிளைகளுக்குள் கலப்புமணம் செய்துகொள்ளுதல் கூடாதென விதிக்கப்பட்டுள்ளது. இராணி மங்கம்மாள் அரண்மனைப் பண்டிதர்களைக் கலந்துகொண்டு, பட்டுநூல் வகுப்பார்க்கு உபகர்மம் செய்துகொள்ளும் உரிமை அளித்துச் சாசனம் வழங்கி இருக்கிறாள்.

நாயக்கர்களும் பிரபுக்களும் பலமனைவியரை மணந்துகொண்டிருக்கின்றனர். இது முகம்மதியரிடமிருந்து நம் நாட்டார் கற்றபாடம் போலும்! திருமலைநாயக்கருக்கு இருநூறு மனைவியர் இருந்தனர். இராமநாதபுரம் கிழவன் சேதுபதிக்கு நாற்பதுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தனர். ஆனும் தலைவர்களுடைய இல்வாழ்க்கை முறை குடிகளுக்கு முன்மாதிரியாகக் கொள்ளத் தக்கதல்ல. இந்த மனைவிமார் கும்பல் தம் கணவன்மார் இறந்த காலங்களில் உயிர் தாங்கியிருக்க உள்ளம் கொள்ளாது தீக்குளித்து மாண்டதாம். பெண்ணைத் தெய்வமென வழிபட்ட தமிழகத்திலே பெண்மை அரசச் செல்வத்துக்குப் பலியிடப்பெற்றது. இக்கொடுமை 1829-ல் ஆங்கில ஆட்சியில் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது. குடியாட்சி இந்தியாவில் முதல் மனைவி உயிருடனிருக்கும்போது மற்றொருத்தியை மணத்தல் குற்றமாகச் சட்டம் செய்யப்பட்டுள்ளது மிகவும் போற்றத்தக்கது.

கல்வி

ஐரோப்பிய சமயபோதகர்கள் யாவரும் வந்து படிக்கத் தக்கவாறு ஊர்களிலும் நகர்களிலும் பாடசாலைகளும் கலாசாலைகளும் நிறுவியதும், ஆங்கில ஆட்சியாளர் அம்முறையை ஆதரித்ததும் பிற்காலத்துச் செய்தி. சங்க காலத்தை யொட்டியும் அதற்குப்பின்னரும் சமணர்களும் பௌத்தர்களும் தத்தம் சமயபோதனைக்கென்று பள்ளிகள் வைத்திருந்தனர். அங்கே படித்துத் தேறியவர்களுக்குக் கலைப் பட்டங்களும் வழங்கினர். மருணீக்கியார் தருமசேனர் ஆனாரன்றோ? இம்முறையைப் பிற்காலத்தில் நம் கோவில்களும் மடங்களும் ஏனைக் குருபீடங்களும்

பின்பற்றின. எனவே, அக்காலங்களில் சாதிச்சிறப்பு இல்லாத தமிழ்மக்கள் குடும்ப வாசனையால் கிடைக்கும் கல்வியையே எதிர்பார்க்க முடியும். நாயக்கர் காலத்திலும் கோவில்களிலும் மடங்களிலும் கல்வி அளிக்கப்பட்டது காசில்லாக் கல்விதான். ஆனால் அது சாதி சமய வேறுபாடின்றி நாட்டுச்சிறுர் அனைவர்க்கும் உரியதாக இருந்திருக்குமென நம்பமுடியாது. யாரேனும் கணக்காயர்கள் தனிப்பட்ட முறையில் திண்ணைப்பள்ளிகள் வைத்து எழுத்தறிவித்தால்தான் உண்டு.

உயர்வகைக் கல்விக்குப் பிராமணர்களே உரியவர்களாக எண்ணப்பட்டனர். 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையைத் தம்மிடமாகக்கொண்டு சமயப் பணி புரிந்து வந்த தத்துவபோதக சுவாமிகள் ஆகிய ராபர்ட்-டி-நொபிலி என்னும் ஐரோப்பியர் மதுரைநகரில் கல்விகற்ற மாணவர்களைப்பற்றி எழுதிய குறிப்பொன்றிலிருந்து சில வரிகளை மொழிபெயர்த்து இங்கே தருவோம். ‘மதுரையில் பதினாயிரத்துக்கதிகமான மாணவர்கள் தங்கியிருந்து படிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்களே. வகுப்புக்கு இருநூறு முந்நூறு மாணவராக இருந்து பாடம்கேட்கின்றனர். இவர்களுக்கும் இவர்களுடைய ஆசிரியர்களுக்கும் வேறு கவலைகள் இல்லாதிருக்கும்படி விசயநகர் அரசாங்கமும் மதுரை நாயக்கரும் போதிய வருவாயுள்ள மானியங்களைக் கொடுத்துள்ளார்கள்.’ வானம் பொழிந்தது, பூமி விளைந்தது, நாட்டிலுள்ள மக்கள் உழைத்தார்கள். ஆனால் ஒரு சில உயர்சாதி மக்களே இன்பவாழ்வு வாழ்ந்தார்கள். ‘உயர்ந்தோர்’ தம்மை உயர்ந்தோராக எண்ணி இறுமாப்பதும், ‘தாழ்ந்தோர்’ தம்மைத் தாழ்ந்தோராக எண்ணி இளக்கரிப்பதும் எத்துணைப் பேதைமை !

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.”

தமிழர் கண்ட சாதிமுறை இதுவே!

தென்மொழியும் வடமொழியும்

தமிழகம் நானூறு ஆண்டுக்காலமாய் நாயக்கர்களது அரசியல் அரங்கமாக விளங்கிற்று. அவர்கள் தெலுங்கர்கள், இந்துக்கள். சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய நான்குமொழிகளுக்கும் அவர்கள் ஆதரவளித்தார்கள். அவர்கள் ஆட்சி தமிழ்மொழிக்குப் பாதகமானதென்று கூறமுடியாது. திருமலை நாயக்கர் வேண்டுகோளுக்கிசைந்து குமரகுருபர அடிகள் திருக்குறளின் சாரமாக நீதிநெறி விளக்கம் இயற்றினார். அவர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் திருமலை நாயக்கருடைய ஆதரவில் அரங்கேற்றமானது. விசயரங்க சொக்கநாத நாயக்கர் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர்க்குக் குறவஞ்சிமேடு மானியமளித்துப் பாராட்டினார். இத்தகைய செய்திகள் இன்னும் பலஉள.

பல்லவர் காலம் முதலே தமிழ்நாட்டில் சமஸ்கிருதக் கலாசாலைகள் இருந்துவந்தன. தமிழும் சமஸ்கிருதமும் ஒருங்கே பயின்று புலமை எய்தியவரே புலவர் என்ற கருத்து ஏற்கனவே பரவிக்கொண்டுவந்தது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இருமொழிப் புலமையும் உடையவர்கள் பலர் தோன்றினர். தமிழகத்துக் கலைமன்றங்களாக விளங்கிய திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய சைவ மடங்களைச்சேர்ந்த தலைவர்பெருமக்கள் பண்டை உரையாசிரியர்களையும் நூலாசிரியர்களையும் பின்பற்றித் தாமும் இருமொழிப் பயிற்சியுடையோராய், தம் மடங்களிலேயே இருமொழிப் பயிற்சிக்கும் ஆதரவு அளித்துவந்தனர். நிரம்ப அழகியதேசிகர், பரஞ்சோதி முனிவர், இரகுவம்சத்தைத் தமிழாக்கிய அரசகேசரி முதலிய பல புலவர்பெருமக்கள் இருமொழிப் புலமையும் உடையவர்கள். இவர்களுள் சிறப்புடையோராகக் கருதத்தக்கவர்கள் இலக்கணக் கொத்து மூலமும் உரையும் உரைத்த சுவாமிநாத தேசிகரும், தொல்காப்பியச் சூத்திரவிருத்தியும் இலக்கண விளக்கச் சூறாவளியும், எண்ணற்ற சைவசித்தாந்தங்களும்

உரைத்த சிவஞான அடிகளும் ஆவர். இவ்விருவரும் திருவாவடுதுறைச் சைவ ஆதீனத் தமிழ்ப்பெருமக்கள்.

அன்னார் இயற்றிய நூல்களைப் படிப்பார்க்கு வடமொழி தென்மொழி இரண்டற்கும் ஒத்த மதிப்புவைத்து அவர்கள் ஒழுகிய திறம் நன்கு புலப்படும்.

"வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினு
மிலக்கண மொன்றே என்றே எண்ணுக."

"அன்றியுந் தமிழ்நூற் களவிலை, அவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமிழ் உண்டோ."

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும். ஆண்டினு மிலையேல்
வடமொழி வெளிப்பெற விளங்கு மெண்க."

என்பர் சுவாமிநாத தேசிகர். "வடநூல் உணர்ந்தார்க் கன்றித் தமிழ் இயல்பு விளங்காது என்பதும் உணர்ந்து கோடற்கன்றே பாயிரத்துள் 'ஐந்திர நிறைந்த தொல்காப் பியன்' என்றதூஉமெண்க" என்று கூறி, அகத்தியரும் தொல்காப்பியரும் வடமொழி வல்லவராய்த் தமிழ் இலக்கண முரைத்தாரெனப் புலப்படுத்தி, வடமொழிப் பயிற்சியினை வற்புறுத்துவர் சிவஞான அடிகளார்.

தமிழ்ப்புலமை படைத்தோர்

நாயக்கர் காலத்திலே நம் தமிழகத்திலே தமிழ்நூற் பயிற்சியும கவிபாடும் வன்மையும் உடையோராய்த் திகழ்ந்தவர் எண்ணற்றவர். தமிழ் கற்றவர் அனைவரும் கவிசொல்லக் கற்றவரே என்பது 'காரிகை கற்றுக் கவிபாடத் தெரியாதார் பேரிகை கொட்டிப் பிழைப்பர் தாமே' என்ற வழக்காற்றால் புலப்படுகின்றது. இந்தக் கல்விமான்களுக்குள்ளே இலக்கியம் இலக்கணம் நிகண்டு தருக்கம் முதலிய இறவாப் பெருநூல்கள் இயற்றும் புலவர் பெருமக்கள் நூற்றுவரினும் பலராய் விளங்கியிருக்கின் றனர். அவர்கள் சைவம் வைணவம் கிறித்துவம் இஸ்லாம்

முதலிய பல்வேறு சமயத்தவர். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலிய பலவேறு சாதியினர். கன்னித் தமிழின் கவினுக்குத் தம் மனத்தைப் பறிகொடுத்து அவளைப் பாடி இன்புற்ற ஐரோப்பியப் பெருமக்களும் உளர்.

கவிமழை பொழிந்த காளமேகமும், தத்துவஒளி பரப்பிய வித்தகனாயிறு மாதவச் சிவஞானயோகிகளும், முப்பத்திரண்டு ஆண்டு வாழ்வில் இருபத்துமூன்று அருந் தமிழ் நூல்களை ஆக்கிக் குவித்த சிவப்பிரகாசரும், தோத் திரம் பாடிச் சாத்திரம் சாற்றிய யோகியும் ஞானியுமாகிய தாயுமான அடிகளும், செத்தும் கொடுத்த சீதக்காதி போன்ற வள்ளல் பெருமக்களும் வாழ்ந்து தமிழ் வளர்த்தது நாயக்கர்கள் காலத்திலேயே. புலவர்களும் வள்ளல்களுமான அன்னார் அனைவரையும் அவர் செய்த நூல்களையும பற்றி இங்குக் குறித்தல் இயலாமைக்கு வருந்துகின்றோம். அவருள் ஒரு சிலரும் அவர்தம் ஒவ்வொரு நூலும் சான்றாகக் கீழே தருகின்றோம்.

அதிவீரராமபாண்டியன் — நைடதம்
வில்லிப்புத்தூராழ்வார் — வில்லிபாரதம்
அருணகிரிநாதர் — திருப்புகழ்
பரஞ்சோதி முனிவர் — திருவிளையாடற் புராணம்
வீரகவிராயர் — அரிச்சந்திர புராணம்
குமரகுருபர சுவாமிகள் — நீதிநெறி விளக்கம்
சிவப்பிரகாச சுவாமிகள் — பிரபுலிங்க லீலை
தாயுமான சுவாமிகள் — தாயுமானர் பாடல்கள்
உமறுப் புலவர் — சீறாப்புராணம்
வீரமாமுனிவர் — தேம்பாவணி

இந்நூல்களேயன்றி அக்காலத்தில் இயற்றப்பட்ட தலபுராணங்களும, கலம்பகம், உலா, மடல், குறவஞ்சி, மாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களும கணக்கி லடங்கா.

கிறித்துவர் வளர்த்த தமிழ்

கிறித்துவ சமயம் நமது கீழ்நாடாகிய பாலஸ்தீன் நாட்டிலே பிறந்து, ஐரோப்பா சென்று அங்கு வளர்ந்து, பின்னர் உலகெங்கும் பரவியது. கிறித்துவ வேதமாகிய விவிலியம் இன்று ஆயிரம் மொழிகளில் அச்சாகியுள்ளது. எழுத்து வழக்கற்றுத் திருந்தா மொழிகளாயுள்ள சில விவிலியம் எழுதப்படுதலின் பொருட்டே எழுத்துப்பேறு எய்தியிருக்கின்றன. விவிலியம் தமிழுக்குச் செய்துள்ளதென்ன?

ஏசுவின் சீடராகிய புனித தோமா முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கு வந்து மலையாளக் கரைகளில் தங்கி, சமயபோதனை செய்துவிட்டுச் சென்னைநகர் சாந்தோமில் கொலையுண்டு இறந்ததாகச் செவிவழிச் செய்தி ஒன்று வழங்குகிறது. இக்காலத்து ரோமைக் கிறித்துவர் அதனை உண்மை வரலாறெனை வற்புறுத்துகின்றனர். புனித தோமாவின் காலத்துக்குப் பின்னர், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலே இங்கு வாணிகம் செய்யவந்த ஐரோப்பியரைத் தொடர்ந்து ஐரோப்பியக் குருமாரும் வந்தனர். தமிழர் மலையாளிகள் தெலுங்கர் ஆகிய திராவிட மக்களிடையே சேவை செய்யவந்த அவர்கள், அன்னாரின் மொழிகளைப் பயிலுதல் இன்றியமையாததாயிற்று. அவர்கள் தமது தேவைக்காகத் தமிழ் கற்கப்புக்கது தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் வாழ்வாக வந்து விடிந்தது.

விவிலியப் பகுதியினையும், கிறித்துசமயக் கோட்பாடுகளையும் ஐரோப்பியர் உரைநடையில் எழுதினர். உரைநடை என்பது தமிழ்மொழிக்கு இல்லாத தொன்றல்ல. எனினும், தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் யாவும் செய்யுள் நடையில் இயன்றனவே யாகும். உரைநடை வழக்கு இல்லாதிருப்பது ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் அம்மொழி பேசும் மக்கள் இனத்தின் முன்னேற்றத்துக்கும் தடையாகும். ஊர்ப்பகுதிகளில் வாழும் ஏழைப்

பொது மக்களுக்கும் விளங்கும்வண்ணம் தம் சமய உண்மைகளைப் பரப்பக் கருதிய கிறித்துவக் குருமார் தமிழுக்கே உரிய செய்யுள்நடையை விலக்கி, ஆங்கிலம் முதலிய ஐரோப்பியமொழிகட்குரிய உரைநடையினை மேற்கொண்டனர்.

தமிழகத்தே வரலாற்றுக்கு எட்டாப் பழங்காலத்தே தோன்றியது தமிழ். அதன் உரைநடைக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்த்தவர் ஆயிரமாயிரம் கல்களுக்கப்பாலிருந்து கடல் கடந்துவந்த ஐரோப்பியர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலே மதுரையில் வாழ்ந்த வீரமாமுனிவர் என்ற ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கியைத் தமிழ் உரைநடையின் தந்தை என்பர் சிலர். அது உண்மையல்ல. அவர்க்கு முன்னரே மதுரையில் வாழ்ந்த தத்துவ போதக சுவாமிகள் உரைநடை நூல்கள் பல இயற்றியிருந்தார். அவர் காலத்தில் அச்சகங்கள் இல்லாமையால் அவை அச்சில் வெளியாகவில்லை. அவர்க்கும் முன்னரே 'கிறித்துவ வேதோபதேசம்,' 'கிறித்துவ வணக்கம்' முதலிய உரைநடை நூல்கள் எழுதப்பட்டிருந்தன.

சமயப் பிரசாரத்துக்காக மட்டும் ஐரோப்பியப் போதகர்கள் உரைநடை நூல்கள் எழுதவில்லை. ஏழை மக்களுக்கு எழுத்தறிவு கொடுக்கும்படி அவர்கள் துவக்கப் பாடசாலைகள் வைத்திருந்தார்கள். அவற்றிலே படிக்கும் சிறுவர்க்குப் பாடப் புத்தகங்கள் வேண்டியிருந்தன. அவற்றையும் மேனாட்டுமுறையைத் தழுவி, சிறு உரைநடை நூல்களாக எழுதினார்கள். பூகோளம், வரலாறு, விஞ்ஞானம் முதலிய பாடங்களுக்கும் உரைநடை நூல்கள் எழுதப்பட்டன. இன்று தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கும், தமிழக மறுமலர்ச்சிக்கும் பெரிய கருவியாக விளங்கும் தமிழ் உரைநடை அரிகண்டம், யமகண்டம் பாடும் நம் தமிழ்ப் புலவர்களால் ஆக்கம் பெற்று அரசர் பெருமக்கள் ஆதரவில் வளரவில்லை. தாழ்த்தி ஒதுக்கப்பட்டு இருளிலே கிடந்த தமிழ்மக்களிடையே தமிழ்கற்ற ஐரோப்பியரால் பயிராக்கப்பட்டது. அப்பயிர் இன்று சிறுகதைகளும்

பெருங்கதைகளும் நாடகங்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தினப்பத்திரிகைகளும் வாரப்பத்திரிகைகளும் பிறவும் நல்கும் கற்பகத்தருவாய் வானுற வளர்ந்து விட்டது.

மரத்தை வைப்பவனே தண்ணீரும் ஊற்றவேண்டும் என்று எதிர் பார்க்கிறோம். ஆம், உரைநடையை உயிர்ப்பித்த ஐரோப்பியரே அது நாடெங்கும் புத்தக வடிவில் உலாவருதற்குரிய அச்சுஊர்தியையும் அதற்குத் தேடித் தந்தனர். டேனிஷ்மிஷனைச் சேர்ந்த சீகன்பால்கு ஐயர் முதன்முதல் தமிழ்ப் புத்தகங்களைச் சர்மன் தேசத்தில் அச்சாகிவர ஒழுங்கு செய்தார். பின்னர் அங்கிருந்தே அச்சுப்பொறியையும், தமிழ் அச்செழுத்துக்களையும் தருவித்துத் தரங்கம்பாடியில் ஓர் அச்சகம் நிறுவினர். அங்கே தாள் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்பட்டது. இவை 1713-ல் நிகழ்ந்தன. ஆனால், மேற்குக் கடற்கரையிலுள்ள கொச்சியில் 1577-லும், கிழக்குக் கடற்கரையிலுள்ள புன்னைக்காயலில் 1578-லும் ஜெஸூட் பாதிரிமார்களால் அச்சகங்கள் நிறுவப்பெற்றனவென்றும் சொல்லப்படுகிறது.

ஐரோப்பியர் தமிழ் கற்றதும், அதில் புலமை பெற்றதும், தமிழ் முதலிய திராவிடமொழிகளுக்கு ஒப்பிலக்கண முடிபுகள் கண்டதும், எகரம் ஒகரம் முதலிய உயிர்களையும் அவை ஏறிய உயிர்மெய்களையும் திரிபு அறத் தெரியுமாறு அவற்றுக்கு உருமாற்றிக் கொடுத்ததும், ஆங்கில முறையில் அகராதி வகுத்ததும், குறள்போன்ற அருந்தமிழ் நூல்களை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்துத் தமிழ்ஒளி தாரணி எங்கும் பரவவிட்டதும், தாம் வழிபடு கடவுட்குத் தமிழ்ப் பாமாலைகள் புனைந்து அணிந்து மகிழ்ந்ததுமாகிய அவர்தம் விந்தைச் செய்திகள் பலவற்றை அடுத்த அதிகாரத்தில் படிக்கலாம்.

தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி நானூறாண்டுக் காலம். அக்காலத்திலே மைசூரும் தஞ்சையும் செஞ்சியும் மதுரையும் ஒன்றுடனொன்று மோதிக்கொண்டன. அவற்

றோடு தக்கண முகமதிய நாடுகளும் மோதின. இத்துணைப் போர்கள் எல்லாவற்றுக்கும் தம் உயிரையும் பொருளையும் கொடுத்து வாழ்விழந்து அல்லற்பட்டவர் தமிழ்மக்கள். முல்லைக்கொடிக்குத் தேரைக்கொடுத்த முல்லையினும் மெல்லிய உள்ளமுடைய பாரியைக் கொன்று அவன் பெண்களைக் கதறி அழவிட்ட அன்றே மூவேந்தர் முடியையும் இறக்காமல் விட்ட பாவமோ யாதோ தமிழ்மக்கள் இங்ஙனம் நெடுங்காலம் துன்பமுற்றனர். பாளையக்காரர்கள் தம்முள் பூசல் விளைத்துக் கொண்டிருக்கவும், சட்டம் நீதி மன்றம் இல்லா ஆட்சிமுறையிலே, சாதிக்கொரு நீதி நிலவிய நிலையில் மக்கள் என்ன நலம் எய்தியிருக்க முடியும்?

இத்துணைப் பேரிடர்களுக்கிடையே தமிழினம் சாகாமல் தப்பியதற்குக் காரணம் தமிழ் ஒன்றே. தமிழன் தன் உள்ளத்தில் தமிழ் அன்றி வேறு எதுவும் யாரும் என்றும் ஆட்சிசெய்ய இடங்கொடுப்பதில்லை. இஃது அவன் பண்பு. அஃதாவது அப் பண்பைத் தமிழ் அவனுக்குக் கொடுக்கிறது. இந்தியாவில் இன்று எந்த மொழியும் சமக்கிருதமின்றி உயிர்வாழ முடியாது தமிழோவெனின் தான் சமக்கிருதத்தைச் சாப்பிட்டு அதற்கு இரையாகாமல் தப்பியது. இன்று தமிழோடு போட்டியிட்டுவரும் மொழி ஆங்கிலம். அஃது இன்று உலகப் பொதுமொழி. அதனிடமிருந்து தப்பி உய்யும் வழியும் தமிழுக்கு இருக்கின்றது. ஒன்று, ஆங்கிலம் முதலிய பிறமொழி நூற்கருத்துக்கள் அனைத்தையும் தழுவல், மொழிபெயர்ப்புமூலம் தமிழறிஞர்கள் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். முன்னாளில் வடமொழியைப் பயின்று அதன் நூல்களைத் தமிழுக்குக் கொண்டுவந்த அதே பழைய முறையைத் தமிழர் இப்போது ஆங்கிலத்தின்பாலும் கைக்கொள்ளல் வேண்டும். கம்பர் முதலிய தமிழ் அறிஞர் இம்முறையைக் கையாண்டே தமிழைக் காத்து, சமக்கிருதத்தைக் கடிந்தனர். இரண்டு, தமிழகத்தில் நூற்றுக்குப் பத்துப்பேர் கூடப் படித்தோராக இல்லாத அவலநிலை மாறி, தமிழர்

அனைவரும் பத்தாம் வகுப்புவரையேனும் படிக்கும் கட்டாயச் சட்டம் உடனடியாகக் கொண்டுவரப்படல் வேண்டும். விலைகொடுத்து நூல்கள் வாங்கிப் படிப்பாரும், எல்லாரும் படிப்பாருமாக மாறிவிட்டால் எதிர்கால உலகில் எந்த அரசு அல்லது எந்தமொழி பட்டத்துக்கு வந்தாலும் தமிழுக்கு அழிவில்லை ; வாழ்வு ஒன்றே உண்டு.

திராவிட நாடுகள் நாயக்கர் காலத்தில் பிளவுபட்டன. ஆங்கிலர் ஆட்சியில் மீண்டும் ஒருவாறு சேர்க்கப்பட்டன. இப்போது மீண்டும் பிரிந்து இயங்குகின்றன. ஆனாலும் திராவிடர் என்ற போர்வையில் 'நாயக்கர் இயக்கம்' ஒன்று தமிழகத்தில் நிலவுகிறது. அண்மையில் நெல்லையில் நடந்த சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க மாநாட்டிலே புலவர் அவைக்குத் தலைமைதாங்கிப் பேருரை நிகழ்த்திய நாவலர் சோமசுந்தர பாரதியார், தற்காலத்திலே தமிழுக்கு அயலான நாயக்கர் ஒருவர் தமிழ் மக்களுடைய எழுத்துக்களையும் இலக்கியங்களையும் சிதைக்க முன் வந்திருப்பதை எடுத்துரைத்தது இங்கே நினைவுகூரற்பாலது. மொழியழிந்த சமூகம் எங்கேனும் வாழ்ந்ததுண்டா ?

தமிழை வளர்க்கவும் காக்கவும் ஆதிமுதல் நம் முன்னோர் என்ன முறையைக் கைக்கொண்டனரோ அதே முறைதான் இங்கும் கூறப்பட்டது. அம்முறையில் நமது மொழியைமட்டும் நாம் பாதுகாத்துக்கொள்வோமாயின், அப்பர்பெருமான் வாக்குக்கிசைய,

"நாமார்க்குங் குடியல்லோம், நமனை அஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்,
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோ மல்லோம்,
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை."

'இருநிலத்தில் எமக்கெதிர் ஆவாருமில்லை' என, இரவியும் மதியும் உள்ளவரை நாம் தமிழராய் மன்னுவோம்.

௬௯. ஆங்கிலேயர்காலம் [கி.பி. 1600-கி.பி. 1946]

[திரு. சிவ. இராமச்சந்திரன், பி.ஏ. (ஆனர்ஸ்)]

ஆங்கிலேயர் வருகை

அறநெறியை மறந்து அவலவாழ்வு வாழ்ந்த உலக மக்கள் உய்யும் பொருட்டு இயேசு பெருமான் உலகத்தில் அவதரித்தார். அவருடைய போதனைகளுக்குச் சற்றும் செவிசாய்க்காத அறிவற்ற மக்கள் கூட்டம் அவரை அளவில் கொடுமைகளுக்கு ஆளாக்கி இறுதியில் தனது சிறுமையின் சான்றாக அவரைச் சிலுவையில் அறைந்துகொன்றது. ஆனால், உயிர் நீத்த அவர் தாம் சொன்னபடியே மறுபடியும் உயிர்த்தெழுந்தார். கலிலேயாவுக்குப் போய்த் தம் சீடர்கள் பதினொருவருக்கும் காட்சி தந்தார். அவர்களை நோக்கி, "உலகமெங்கணும் நீங்கள் சென்று உயிர்வாழ்வன அனைத்திற்கும் என்னுடைய நற்கருத்துக்களை உபதேசியுங்கள்; அவற்றில் நம்பிக்கைகொண்டு திருந்துபவர்கள் உய்வார்கள்; நம்பிக்கை கொள்ளாதவர்கள் நரக தண்டனையை அடைவார்கள்," என்று சொன்னார்.

இயேசுபெருமானின் இந்தக் கட்டளையைத் தலைமேல் தாங்கித் தமிழகம் வந்த துறவிகள் பலர். அவர்களுள் [1]தாமஸ் ஸ்டீபன்ஸ் என்னும் ஆங்கிலேயப் பாதிரியும் ஒருவர். இந்த நாட்டுக்குவந்த முதல் ஆங்கிலேயர் அவர். 1579-ல் இந்த மண்ணை மிதித்த அவர், வளங்கொழிக்கும் இந்தப் பூமியைப்பற்றித் தன் தந்தையாருக்குப் பல கடிதங்கள் எழுதினார். அக்கடிதங்களே இந்நாட்டிற்கும் இங்கிலாந்திற்குமிடையே துவங்கிய வாணிக உறவிற்கு வழிகோலின என்பது வரலாறு அறிந்தவர்களின் கருத்து.

1. Thomas Stephens.

சிறுகச் சிறுகப் பெருகிய இவ்வுறவு சீக்கிரத்திலேயே சிறப்பாகத் தழைத்தது. முதலில் தனிப்பட்ட ஆங்கிலேயர்கள் சிலரால் பேணி வளர்க்கப்பட்ட வாணிகமெனும் கன்று, நாளடைவில் பெரியதோர் பழமரமாக வளர்ந்தபோது அம்மரத்தின் கனிகளைச் சுவைக்க ஆங்கிலேயர்கள் தங்கள் தனிமையை விட்டுக் [1]கிழக்கிந்திய வாணிகக் கூட்டம் என்னும் பெயரில் ஒன்றுபட்டனர். 1600-ம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ம் நாள் கிழக்கிந்திய வாணிகக் கூட்டத்திற்கு இலண்டனில் கால்கோள் செய்யப்பட்டது. புது நூற்றாண்டிலே தாம் மேற்கொள்ளப்போகும் சிறு முயற்சி, பெரியதோர் உபகண்டத்தையே தங்களுக்குச் சொந்தமாகத் தரும் சிறப்பான முயற்சி என்பதை அவர்கள் அன்று கொஞ்சங்கூட நினைக்கவில்லை. ஆம்! வாணிகம் செய்து பொருள் சேர்க்கவேண்டும் என்பதே அப்போது அவர்களுடைய பெருநோக்கு. தங்கள் அரசி எலிசபெத் வழங்கிய ஆணைமடலின் ஆதாரத்திலே வாணிகம் செய்யப் புகுந்த கிழக்கிந்திய வாணிகக்கூட்டத்தார் தமிழகத்திலே, [2]புலிக்காடு என்னும் பகுதியிலே முதன்முதலாகக் குடியேற நினைத்தனர். ஆனால் அவ்வூர்ச் சூழ்நிலை அவர்களது வாணிக நிலைக்கு ஏற்றதாயில்லை. எனவே, புலிக்காட்டை விட்டு அதற்கு அருகிலேயே [3]ஆறுமகோன் என்னும் பகுதியில் ஒரு தொழிற்சாலையைத் தோற்றுவித்தனர்.

பின் அவ்விடத்தையும்விட்டு வேறிடத்திற்குத் தங்கள் தொழிற்சாலையை மாற்ற நினைத்தனர். அக்காலத்து ஆங்கிலேய வாணிகரின் தலைவராக இருந்தவர் [4]பிரான்சிஸ் டே என்பவர். அவருடைய ஆசைக்கிழத்தி சான்தோமிலே வசித்துவந்தாள். ஆகவே சான்தோமுக்கு அருகிலேயே தங்கள் தொழிற்சாலையை அமைத்துவிட்டால் தன் ஆசைக்கிழத்தியை அடிக்கடி பார்க்க முடியுமே என்று அவர் நினைத்தார். மேலும் சான்தோமுக்கு அருகிலே ஆறுமகோனில் கிடைத்ததைவிட மலிவான விலைக்குத் துணி கிடைத்தது. ஆகவே, ஆறுமகோனைவிட்டுப் புதிய

1. East India Company. 2. Pulicat. 3. Armagoan.
4. Francis Day.

தோர் பகுதியிலே அவர்கள் குடியேறினர். அப்பகுதியைச் சந்திரகிரி மன்னனிடமிருந்து அவர்கள் அன்பளிப்பாகப் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது. 1640-ல் ஆறுமகோன் தொழிற்சாலை அப்பகுதிக்கு மாற்றப்பட்டது; அதற்கு அடுத்த ஆண்டிலே தொழிற்சாலையைச் சுற்றி ஒரு கோட்டைச்சுவர் எழுப்பப்பட்டது. அதுவே இன்றைய [1]புனித ஜார்ஜ்கோட்டை. அவர்கள் குடியேறிய பகுதியே இன்றைய சென்னை நகரம்; தமிழரின் தலைநகரம். கோட்டையைக் கட்டிமுடித்து ஆங்கிலேயர் கோட்டை நிர்வாகத்தின் தலைவராக ஓர் [2]ஆள்வாரை நியமித்தனர். தங்களையும் தங்கள் உடைமைகளையும் நன்றாகப் பாதுகாக்க விரும்பிய ஆங்கிலேயர் சிறுகச்சிறுகக் கோட்டையைப் பலப்படுத்துவதில் அக்கறை காட்டினர். பின்னர்க் கோட்டை காவலுக்கென ஒரு சேனையையும் வைத்தனர்.

ஔரங்கசீப்பின் பேரரசு அசைவு காணுவதற்குக் காரணமான அஞ்சாநெஞ்சன் சிவாஜி 1677-ல் சோழமண்டலக் கரைமீது படையெடுத்துவந்தான். ஆங்கிலேயரின் திறத்தை ஏற்கனவே சூரத்தில் அறிந்த மராட்டியத் தலைவனான மலைஎலி ஆங்கிலேயரிடம் தன் படைக்கு மருத்துவ உதவிமட்டும் பெற்றுக்கொண்டு திரும்பப் போய்விட்டான். அச்சமயம் [3]ஸ்ட்ரின்சாம் மாஸ்டர் என்பவர் கோட்டையின் ஆள்வாராக இருந்தார்; கிழக்கிந்திய வாணிகக்கூட்டத்தின் ஆள்வாராக [4]சர் ஜோசையா சைல்டு என்பவர் இருந்தார். நாடோடியாக வந்த வெள்ளையர் நாடாளும் ஆட்சியினராக மாறுவதற்குக் கொள்கை வகுத்தவர் அவர். அவரது ஆணையின்படி சென்னைப் பகுதிக்கு நகராண்மைக் கழகமொன்று 1688-ல் நிறுவப்பட்டது.

கடலூருக்கருகிலே 1690-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் 9000 ரூபாய்கள் விலைகொடுத்து ஆங்கிலேயர்கள் ராமராஜாவிடமிருந்து ஒரு நிலத்தை

1. Fort st. George. 2. Governor.
3. Streynsham Master. 4. Sir Josiah child.

வாங்கினர். அங்கிலத்திலே [1]புனித தாவீதுக் கோட்டையை அவர்கள் அமைத்தனர். 1692-லிருந்து அரை நூற்றாண்டு வரை வாணிகக் கூட்டத்தாரின் ஆளுகையில் அமைதியில்லை. சில்லறைச் சச்சரவாலும் குழப்பத்தாலும் அவர்கள் முயற்சிகள் சீர்குலைந்தன. ஆனால் [2]தாமஸ் பிட் ஆள்வாராகப் பதவி வகித்த இடைக்காலத்தைச் (1698-1709) சென்னையின் பொற்காலமெனச் சொல்லலாம். வாணிபத்தை வளர்ப்பதிலும் அமைதியை நிலைநாட்டுவதிலும் நேசவுறவைப் பெருக்குவதிலும் அவர் பெரிதும் அக்கறை காட்டினார். அதில் வெற்றியும் பெற்றார்.

குன்றாத வாணிபம் வேண்டுமென்று ஆங்கிலேயர் கொண்ட ஆசை, நாடுபிடிக்கும் நப்பாசைக்கு நாளடைவில் அடிகோலியது. எனவே, ஆள்வார் [3]ஆரிசன் காலத்தில் (1711—1717) ஆங்கிலேயப் படைக்கு வேலை சற்று அதிகமாகவேயிருந்தது. முகலாயப் பேரரசர் 1717-ல் ஆங்கிலேயருக்கு நுங்கம்பாக்கம், திருவொற்றியூர் முதலிய ஊர்களைத் தானமாகத்தந்தார் ஆனால், அந்த அன்பளிப்பிற்குக் குறுக்கே நின்றார் கருநாடக நவாபு சாதுல்லாகான். அவ்வூர்களை ஆங்கிலேயர் அடைவதை அவர் விரும்பவில்லை. ஆனால், ஆங்கிலேயர்களோ தங்கள் பரிசுப்பொருளை விடுவதாயில்லை. ஆகவே, அவர்கள் வலுவோடு அவ்வூர்களை ஆக்கிரமித்தனர். நடைபெற்ற சண்டையில் நவாபின் படையை ஆங்கிலேயரின் படை புறங்கண்டது. ஆங்கிலேயரின் வெற்றி அவர்களது வளரும் செல்வாக்கிற்கு வாய்ப்பாக அமைந்தது.

தங்கள் தொடர்பைக் கருநாடகத்துடன் மேலும் பெருக்கும் வாய்ப்பு ஆங்கிலேயருக்கு அடுத்த சில ஆண்டுகளில் மறுபடியும் கிடைத்தது. மராட்டியர் 1738-ல் திடீரெனக் கருநாடகத்தின் மேல் படையெடுத்து வந்தனர். வந்தவர்கள் கிடைத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு

1. Fort St. David. 2. Thomas Pitt. 3. Harrison.

திரும்பிப் போய்விட்டனர். ஈராண்டுகளுக்குப் பின்னர் இரகுஜி பான்ஸ்லேயின் கீழ் அவர்கள் மீண்டும் கருநாடகத் திற்கு வந்தனர். நவாப் தோஸ்த்தலி ஆம்பூர் அருகே அவர்களால் கொல்லப்பட்டார். ஆர்க்காடு, காஞ்சிபுரம், திருவள்ளூர் முதலிய இடங்கள் அவர்களால் சூறையாடப் பட்டன. புயலுக்குப்பின் சிறிது அமைதி ஏற்பட்டது. சப்தார் அலி அந்நிலையில் புதிய நவாபாகப் பதவியேற்ருர். ஆனல், அவருடைய மேலதிகாரியான நிசாம் உல்முல்க் அவரது பதவியை அங்கீகரிப்பதாயில்லை. ஆகவே பதவிக்குப் பேரிடர் எப்போது நேருமோ என்ற பீதியிலே வாழ்ந்த நவாபு தன் குடும்பத்தைப், பாதுகாப்பிற்காக ஆங்கிலே யரின் விருந்தினராகச் சென்னைக்கு அனுப்பிவைத் தார்.

சில நாட்களுக்குள்ளேயே வேலூரில் முர்த்தா சா அலி யால் நவாப் கொல்லப்பட்டார். அதன்பின் அவரின் இளைய மகனை முகமது சேட் கருநாடக நவாபாகப் பதவியேற் ருர். தன் குடும்பத்தார்க்குச் சென்னையிலே அடைக் கலம் தந்து உதவியதற்காகச் சடையன் குப்பம், பெரம்பூர், வேப்பேரி, புதுப்பாக்கம், எரணவூர் ஆகிய ஐந்து கிராமங் களை அவர் ஆங்கிலேயருக்குத் தானமாகத் தந்தார். அது மட்டுமல்லாமல் ஆர்க்காட்டு ரூபாய்களையும் பகோடாக் களையும் அச்சிடும் உரிமையையும் அவர்களுக்கு அளித்தார். இந்த நிலை நெடுங்காலம் நீடிக்கவில்லை. முகம்மது சேட் சில நாளில் நிசாம் உல்முல்கால் கைது செய்யப்பட்டார். புதிய நவாபாக அன்வருதீன் பதவி ஏற்ருர். நிலைமை மாறியதைக் கண்ட ஆங்கிலேயர் முகம்மது சேட்டின் அன்பளிப்பை உறுதி செய்து கொள்ள விரும்பினர். எனவே, நிசாம் உல்முல்க் வந்தவாசிக்கு வந்தபோது அவ ரைச் சந்திப்பதற்காகப் பரிசுப்பொருள்களுடன் ஒரு தூதுவனை அனுப்பி வைத்தனர். ஆங்கிலேயரின் போலி உபசரணையிலே நிசாம் உல்முல்க் மயங்கிவிட்டார். எனவே, தமிழகம் மெதுவாக அன்னியரின் ஆதிக்கத்தின்கீழ் போவதை அவர் உணரவில்லை.

பிரெஞ்சுக்காரர் வருகை

உலக வரலாறு அறிந்தவர் மறக்கமுடியாத, பிரெஞ்சு நாட்டுப் பிரதம மந்திரி [1]ரிச்செலியூ வாழ்த்துரை வழங்க 1664-ல் பிரெஞ்சு கிழக்கிந்திய வாணிகக்கூட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சிறுகச்சிறுக இந்தியாவில் சில இடங்களில் குடியேறிய இவர்கள் 1672-ல் டச்சுக்காரரிட மிருந்து சான்தோமைக் கைப்பற்றினர். ஆனால் சான் தோமிலே அவர்களது ஆதிக்கம் ஈராண்டுகளே நிலைத்தது. 1674-ல் டச்சுக்காரர்களால் சான்தோமைவிட்டு விரட்டப் பட்ட அவர்கள் பீஜப்பூர் அலுவலன் ஷெர்கான்லோடி யிடமிருந்து சோழமண்டலக் கரையிலே ஓர் இடத்தை விலைக்கு வாங்கி அதில் குடியேறினர். அதுவே இன்றைய புதுச்சேரி. நாளடைவில் அவ்விடத்தைச் சுற்றி அவர்கள் ஒரு கோட்டையை எழுப்பிக் கோட்டையினுள் ஒரு சிறு படையையும் வைத்தனர். 1690-ல் டச்சுக்காரர்களுக் கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மறுபடியும் போர் மூண் டது. 1693-ல் புதுச்சேரி டச்சுக்காரர் வசமாகியது.

பின்னர் [2]ரிஸ்விக் உடன்படிக்கையின்படி 1697-ல் புதுச்சேரி பிரெஞ்சுக்காரருக்குத் திரும்பக் கிடைத்தது. அதிலிருந்து கால் நூற்றாண்டுவரை பிரெஞ்சுக்காரரின் வாணிக முயற்சி குன்றியேயிருந்தது. 1726 முதல் ஒன்பது ஆண்டுகள் ஆள்வாராக இருந்த [3]லீனுய்ர் காலத்தில்தான் பிரெஞ்சுக்காரருக்கு வாணிகமும் பெருகியது; வளமும் சிறந்தது. 1736-ல் காரைக்கால் பிரெஞ்சுக்காரருக்குக் கிடைத்தது. அதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பிரெஞ்சு உடைமைகளின் ஆள்வாராக [4]டூப்ளே பதவியேற் றார். பிரெஞ்சுப் பெருமகன் எனப் பெயர்பெற்றவர் டூப்ளே. சிறந்த வீரர். டூப்ளே பதவியேற்ற நாள்முதல் தமிழகத்திலே பிரெஞ்சுக்காரரின் வரலாற்றிலே ஒரு புது அத்தியாயம் மலர்ந்தது. ஒரு பிரெஞ்சுப் பேரரசை இந்தியாவிலே அமைக்க வேண்டுமென்று கனவுகண்ட

1. Richelieu. 2. Treaty of Ryswick. 3. Lenoir.
4. Dupleix.

அவர் தம் எண்ணம் ஈடேறுவதற்கான எல்லா வழிகளையும் பின்பற்றலானார். கெஞ்சவேண்டியவர்களிடம் கெஞ்சினார்; கொஞ்ச வேண்டியவர்களிடம் கொஞ்சினார்; அடக்க வேண்டியவர்களை அடக்கினார்; அடங்கவேண்டியவர்களிடம் அடங்கினார். தனது சூழ்ச்சித் திறமையால் விரைவிலேயே அவர் தமிழகத்து மன்னர்களிடம் தனது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டார். ஆகவே, 1744-ல் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் மூண்டபோது புதுச்சேரியைத் தாக்குவதற்கென அதை நோக்கி முன்னேறிய ஆங்கிலேயப் படையைத் தடுத்து நிறுத்தும்படியாகக் கருநாடக நவாபு அன்வருதீனுக்கு அவர் செய்தியனுப்பினார்.

தமிழகம் (1746—1755)

அன்வருதீன் உதவியால் பிரெஞ்சுக்காரர் உடனடியான தாக்குதலிலிருந்து தப்பினர். அன்வருதீனுக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே வளர்ந்த நட்பு ஏனோ பின்னர் வாடியது. அதை உணர்ந்த ஆங்கிலேயர் 1746-ல் பிரெஞ்சுக் கடற்படை ஒன்று சென்னையைத் தாக்க முற்பட்டபோது அதன் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக அன்வருதீனின் உதவியை நாடினர். ஆனால், அவர் ஆங்கிலேயரின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. பிரெஞ்சுப் படை இலகுவாகச் சென்னையைக் கைப்பற்றியது. அந்த முயற்சியைச் செய்துமுடித்தவர் [1]லாபூர்டனே என்ற பிரெஞ்சுத் தலைவராவர். கைமாறாகப் பொருள் வாங்கிக்கொண்டு சென்னையை ஆங்கிலேயரிடம் திருப்பிக் கொடுத்துவிடுதல் நலம் என்று லாபூர்டனே நினைத்தார். ஆனால், டூப்ளே அக் கருத்திற்குச் சற்றும் இசையாததால் அவர்கள் இருவரிடையேயும் மனக்கசப்பு வளர்ந்தது. இதற்கிடையே அன்வருதீன் சென்னைமீது படையெடுத்தார். பிரெஞ்சுக்காரர் சான்தோமிலே அவரை முறியடித்தனர். இவ் வெற்றியால் ஐரோப்பியரின் போர்த்திறம்

1. La Bourdonnais.

சிறப்பாக விளக்கம் பெற்றது. டூப்ளேயின் புகழ் பெருகியது.

சென்னையைவிட்டுத் துரத்தப்பட்ட ஆங்கிலேயர் தமிழகத்திலே தங்களது ஒரே உடைமையான தாவீது கோட்டையைப் பிரெஞ்சுக்காரரின் தாக்குதலினின்று பாதுகாக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டனர். அதோடு புதுச்சேரியை முற்றுகையிடும் முயற்சியையும் மேற்கொண்டனர். ஆனால், அவர்களது இரண்டாவது எண்ணம் எளிதில் ஈடேறுவதாயில்லை. டூப்ளேயின் புகழ் அதனால் மேலும் பெருகியது. இங்கிலையில் ஆகூழ் ஆங்கிலேயரைப் பார்த்துச் சிறிது சிரித்தது. [1]ஐலாசாப்பல் உடன்படிக்கையின்படி போர் முடிவடைந்தது. இழந்த இடங்களை இரு கட்சியினரும் அதன்படி கைமாறிக்கொண்டனர். வெற்றியை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த பிரெஞ்சுக்காரருக்கு ஐலாசாப்பல் உடன்படிக்கை ஒரு தோல்வி என்றே சொல்லவேண்டும். தோல்வியை நோக்கி வெகு வேகமாக விரைந்துகொண்டிருந்த ஆங்கிலேயருக்கு அவ் வுடன்படிக்கை ஒரு வெற்றி என்றே சொல்லவேண்டும். ஏனென்றால், அவ்வுடன்படிக்கை அவர்களை வாழவைத்தது.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் அடுத்தாற்போல் போர் நிகழ அதிக காலம் பிடிக்கவில்லை. தஞ்சை மன்னனோடு தாங்கள் செய்திருந்த ஒப்பந்தத்தைத் துறந்து ஆங்கிலேயர் தேவகோட்டையைக் கைப்பற்றினர். ஆனால் அதன் விளைவை எண்ணாது, உள்நாட்டு அரசியலிலே அதிக ஊக்கம் காட்டுவதிலேயே பிரெஞ்சுக்காரர் ஈடுபட்டிருந்தனர். தங்கள் நலம் பேணுபவர்கள் ஐதராபாத்திலும் ஆர்க்காட்டிலும் ஆட்சிப் பொறுப்பேற்பதை விரும்பி அதற்காக முயன்றார்கள் அவர்கள். பிரெஞ்சுக்காரரின் உதவியைப் பெற்று முசாபர்ஜங்கும், சந்தாசாகிபும், 1749-ல் ஆம்பூர்ப் படுகளத்தில் அன்வருதீனைக் கொன்றனர். டூப்ளே அவர்களுக்கு ஆசிகூறிப் புதுச்

1. Peace of Aix-la-Chapelle.

சேரியில் ஒரு பெரிய விழா எடுத்தார். அதிலே முசாபர் ஜங்கை ஐதராபாத் நிசாமாகவும் சந்தாசாகிபை ஆர்க்காட்டு நவாபாகவும் பிரகடனப் படுத்தினர். ஆங்கிலேயரால் இதைத் தாழமுடியவில்லை. எனவே, அன்வருதீனின் இரண்டாவது மகனும் சந்தா சாகிபின் எதிரியுமான முகம்மதலியுடன் அவர்கள் நட்பு வளர்த்தனர். ஐதரா பாத்திலும் நிசாம் பதவிக்கு நியாயமான உரிமையுடைய நாசீர் ஜங்கை ஆதரித்தனர். பிரெஞ்சுக்காரரின் போக்கைக் கண்டு பொறாமை கொண்ட ஆங்கிலேயர் பிரெஞ்சுக் காரருக்கு மாறுபாடாக அவர்களின் எதிரிகளை ஒன்று திரட்ட விரும்பினர். எனவே, அன்வருதீனின் இரண் டாவது மகனும் சந்தா சாகிபின் எதிரியுமான முகம்மதலி யுடன் அவர்கள் நட்பு வளர்த்தனர். ஐதராபாத்திலும் நிசாம் பதவிக்கு நியாயமான உரிமையுடைய நாசீர் ஜங்கை ஆதரித்தனர். பிரெஞ்சுக்காரர் முசாபர்ஜங், சந்தாசாகிபு ஆகியோருடன் ஒரு குழுவாய்ச் சேர்ந்ததுபோல ஆங்கி லேயர் நாசிர்ஜங், முகம்மதலி ஆகியோருடன் ஒரு கூட் டாகச் சேர்ந்தனர்.

கருநாடகத்தின்மேல் படையெடுத்து வந்த நாசீர்ஜங் முசாபர் ஜங்கைச் சிறைப்பிடித்தார். ஆனால் ஆர்க்காட்டை நோக்கி முன்னேறிய அவர் பிரெஞ்சுக்காரருடன் நேரடி யான போரை விரும்பாதகால் ஆர்க்காட்டில் முகாமிட் டிருந்தார். செஞ்சியை இங்கிலேயில் பிரெஞ்சுத் தளகர்த்தன் [1]புஸ்ஸி கைப்பற்றினன். பின்னர்ப் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த [2]லாடூச்சினல் நாசீர்ஜங் கொல்லப்பட்டார். முசாபர் ஜங்கும் விடுதலையானர். அவரது வேண்டு கோளின்படி டேப்ளே புஸ்ஸியின் தலைமையின்கீழ் ஒரு பிரெஞ்சுப் படையுடன் அவரை ஐதராபாத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனல் ஐதராபாத் சென்றடைவதற்கு முன் னரே அவர் கொல்லப்பட்டார். முசாபர் ஜங்கின் மரணம் பிரெஞ்சுக்காரரின் வலிமையை எவ்விதத்திலும் பாதிக்க வில்லை. முசாபர் ஜங்கிற்குப் பதிலாக அவர்கள் நிசாம்

1. Bussy. 2. LaTouche.

உல் முல்கின் மூன்றாவது மகனுன சலபத் ஜங்கை ஆதரிக்கத் துவங்கினர். எனவே, புதிய நிசாமான சலபத் ஜங்கின் சபையிலே அவர்களது செல்வாக்கு வளர்ந்தது.

திருச்சி முற்றுகை

ஆம்பூர்ப் படுகளத்தில் அன்வருதீன் மரணமடைந்த பின் அவன் மகன் முகம்மதலி திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் சென்று பதுங்கிக் கொண்டான். ஆனால் அன்வருதீனுக்கு அழிவு தேடிவிட்ட டூப்ளே முகம்மதலிக்கும் ஒரு முடிவு காணவேண்டுமென்று விரும்பினுர். ஆகவே, திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றும்படி தன் படையை ஏவினுர் பிரெஞ்சுக்காரருக்கு மாறாக முகம்மதலிக்கு உதவுவதில் ஆங்கிலேயர் முனைந்தனர். திருவரங்கத்தைக் கைப்பற்றிய பிரெஞ்சுப்படை கோயிலாடி மண்கோட்டையில் முகாமிட்டுத் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட ஆரம்பித்தது. தமிழகத்தின் வரலாற்றில் இந்தச் சமயம் ஒரு புதுமனிதர் முன்னணிக்கு வந்தார். அவர்தான் [1]ராபர்ட் கிளைவ்.

பிள்ளைப் பருவத்திலே "படுகாலி" என்று பட்டம் பெற்றவர் கிளைவ். உள்ளூரில் விலைபோகாமல் வாணிகக் கூட்டத்தில் அலுவல் மேற்கொண்டு தமிழகம் வந்த அவர் பின்னர்ப் போர்ப்பயிற்சி பெற்றுப் படைத்தலைவரானுர். பிரெஞ்சுக்காரர் திருச்சியை முற்றுகையிட்டபோது, ஆங்கிலேயர் படை ஆர்க்காட்டைத் தாக்கினுல் திருச்சிராப்பள்ளி விடுதலையடையும், முகம்மதலியையுங் காத்தல்கூடும் என்று அவர் தன் மேலதிகாரிகளுக்கு ஆய்வுரை கூறினுர். அது அவர்களுக்கு ஆண்டவன் வாக்குபோல இருந்தது.

உடனே கிளைவ் தலைமையில் ஐந்நூறு பேர்கொண்ட ஒருபடை ஆர்க்காட்டுக்கு அனுப்பப்பட்டது. ஆங்கிலேயப் படை ஆர்க்காட்டை நோக்கிப் போவதைக் கேட்ட சந்தாசாகிபு தம் மைந்தர் ராஜாசாகிபு தலைமையில் ஒரு பெரும்படையை ஆர்க்காட்டுக்கு அனுப்பிவைத்தார். கிளை

1. Robert Clive.

விற்கும் ராஜா சாகிபுக்கும் பெரும்போர் நடந்தது. அப்போரில் கிளைவ் வெற்றி பெற்றார். ஆர்க்காட்டு வெற்றி ஆங்கிலேயரின் நிலையை உயர்த்தியது. மராத்தியரையும், மைசூர் அரசரையும் அவர்களின் நண்பர்களாக்கியது. ஆர்க்காட்டு வெற்றியைத் தொடர்ந்து கிளைவ் ஆரணி, காவிரிப் பாக்கம் ஆகிய இடங்களில் பிரெஞ்சுக்காரரைப் புறங் கண்டு அவர்களைச் செஞ்சிக்கு விரட்டினார். ஆனால் டூப்ளே இதனால் தளரவில்லை. திருச்சிக் கோட்டையைத் தீவிரமாகத் தாக்கும்படி தம் தளகர்த்தன் லாவிற்கு அவர் ஆணையனுப்பினார். ஆர்க்காட்டில் வெற்றிபெற்ற கிளைவ் திருச்சியை நோக்கி விரைந்தார். அவரது வருகையை டூப்ளேயினால் தடுக்க முடியவில்லை. கிளைவ் இலகுவில் திருச்சிராப்பள்ளி முற்றுகையை உடைத்து முகம்மதலியைக் காத்தார். அந்த நிலையிலும் சந்தா சாகிபு பிரெஞ்சுக்காரரின் உறவைத் துறக்க விரும்பவில்லை. எனவே, அவரும் லாவும் ஆங்கிலேயரிடம் சரணடைந் தனர்.

தாயகத்திலிருந்து புதிதாகத் தான் பெற்ற படையும், எதிர்க்கட்சியிலே ஏற்பட்ட பிளவும் போரைத தொடர்ந்து நடத்த டூப்ளேயைத் தூண்டின. பாகூரிலே பிரெஞ்சுப் படை தோல்வியுற்றாலும் ஆங்காங்கே சில இடங்களில் அது வெற்றியடைந்தது. காவேரியின் கரையிலே மறு படியும் போர் துவங்கியது. முகம்மதலியிடமிருந்து திருச்சியைக் கைப்பற்றுவதில் மறுபடியும் டூப்ளே தீவிர மாக முனைந்தார். ஆனால், லாரன்சின் தலைமையின்கீழ் வந்த ஆங்கிலேயப் படை முற்றுகையிடுவோரைத் திருவ ரங்கத்திற்குத் துரத்தியது. அதன் பின்னரும் திருச்சியைக் கைப்பற்ற அவர்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை. இந்த நிலைமையிலே டூப்ளே தன் தாய்நாட்டிற்கு அழைக் கப்பட்டான். நிராசையுடனும் நீண்ட பெருமூச்சுடனும் அவர் தமிழகத்தை விட்டுப் புறப்பட்டார். அவருக்குப் பின் பதவியேற்ற [1]காடேகி ஆங்கிலேயருடன் உடன்பாடு செய்துகொண்டு போராடுதலை நிறுத்திக்கொண்டார்.

1. Godeheu.

மறுபடியும் போர்

தலை ஆடியது; எனவே வாலும் ஆடியது. பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே ஐரோப்பாவிலே போர் துவங்கியது தமிழகத்தில் அதன் எதிரொலி கேட்டது. சமர் செய்வதிலே சமர்த்தன் என்று புகழ் பெற்ற தளகர்த்தன் [1]லாலியின் தலைமையின்கீழ், பிரெஞ்சுப் படை அணிவகுத்தது. 1758-ல் லாலியின் படையில் பெரும் பகுதி சோழ மண்டலக்கரையை அடைந்தது. நாகைப்பட்டினக் கடலிலே நடந்த நாவாய்ப்போரிலே ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். தாவீது கோட்டையைக் கைப்பற்றுவதிலே லாலி வெற்றிபெற்றான். பின்னர் லாலி புஸ்ஸியின் துணையுடன் சென்னையை முற்றுகையிடுவதில் தன் சிந்தையைச் செலுத்தினன். ஆனால், அம் முயற்சி தோல்வியுற்றது. எனினும் லாலியின் வேட்கை தணியவில்லை. முராரினவிடம் தான் பெற்ற இருநூறு குதிரைகளுடன் வந்தவாசி நகரத்தைக் கைப்பற்றி அவ்வூர்க் கோட்டையைமுற்றுகையிட்டான். ஆனால், ஆங்கிலேயத் தளகர்த்தன் [2]அயர்கூட்டின் தாக்குதலைப் பொறுக்க முடியாமல் அவன் சோர்வுகொண்டு புறமுதுகிட்டோடும்படி நேரிட்டது. அயர்கூட் அவனை விடவில்லை. அவனைத் துரத்தினன்; துரத்தப்பட்ட லாலி மைசூர்ப்படைகளின் தலைவனுக அப்போதிருந்த வீரன் ஐதரலியைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்டு தன்னைத் துரத்திவந்த அயர்கூட்டைத் தடுத்து நிறுத்த முயன்றான். தனக்கு வெற்றி ஏற்பட்டால் தியாகதுர்க்கம் கோட்டை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களை ஐதருக்குத் தருவதாக வாக்களித்தான். ஆம், பிள்ளை பிறப்பதற்குமுன்னரே அதற்குப் பெயர் சூட்டினன். இச்சமயம் மைசூர் விவகாரத்தில் ஐதர் அக்கறைகாட்டும்படி நேரவே, அவனல் லாலிக்கு உதவி செய்ய முடியவில்லை. வேறு வழியின்றி லாலி புதுச்சேரி போய்ச்சேர்ந்தான். 1761-ல் அயர்கூட் புதுச்சேரியை முற்றுகையிட்டான். நான்கு திங்களில் அந் நகரம்

1. Lally. 2. EyreCoote.

வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து செஞ்சியும் சரணடைந்தது. லாலி ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டுப் பின்னர்ப் பாரிசுக்கு அனுப்பப்பட்டான். அங்கே அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பாரிஸ் ஒப்பந்தம் (1763)

தலையின் ஆட்டம் ஓய்ந்தது. எனவே வாலும் ஆடி நின்றது. போரின் இறுதியிலே ஏற்பட்ட 'பாரிஸ் [1]உடன்பாட்டின்படி புதுச்சேரி பிரெஞ்சுக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. கருநாடக நவாபாக முகமதலி அங்கீகரிக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிரெஞ்சுக்காரர் தங்கள் படைகளைப் பெருக்கக் கூடாது என்று கட்டுப்படுத்தப்பட்டனர். சுருங்கச் சொன்னால் பெருநில எசமானர்களாக மாறநினைத்த பிரெஞ்சுக்காரர் பெட்டிப்பாம்பாக ஒடுக்கப்பட்டனர். பிரெஞ்சுக்காரரை முறியடிப்பதில் ஆங்கிலேயர் முழு வெற்றிபெற்றாலும் அவர்களுடைய ஆட்சி வலுப்படுவதற்கு நிலையானதோர் அடிப்படை அதுவரை நிறுவப்படாமலே இருந்தது. ஆனபோதிலும் ஐதராபாத் நிசாமின் அதிகாரத்திலிருந்து விடுபட்டு முகமதலி ஆர்க்காட்டு நவாபாகப் பதவியேற்றபோது தங்களது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பை ஆங்கிலேயர் அடைந்தனர். அரியணை ஏறிவிட்டபோதிலும் ஆளுந்திறமை முகமதலிக்கு இல்லை. ஆகவே அவன் ஆங்கிலேயரது வல்லமையையே அண்டி வாழ்ந்தான். நாளுக்குநாள் அவனது ஆற்றலோ அதிகாரமோ அதிகரிக்காவிட்டாலும் அவனது கடன்சுமை மட்டும் கணக்கின்றிப் பெருகியது. எனவே பணம் திரட்டுவதற்கான பலவழிகளை அவன் மேற்கொண்டான். ஆங்கிலேயரது உதவியுடன் தஞ்சை மன்னரிடமிருந்து பெருந்தொகை ஒன்றை அநியாயமாகப் பெற்றதுமல்லாமல் ஆண்டுதோறும் அவர் தமக்குக் கட்டாயமாகத் திறை செலுத்தவேண்டுமென்றும் 1762-ல் ஒரு கட்டாய உடன்படிக்கை செய்துகொண்டான்.

---

1. Peace Of Paris.

இங்கிலேயில் தன் அண்ணன் சலாபட்ஜங்கைக் கொன்றுவிட்டு நிசாம்அலி ஐதராபாத் நிசாமாக 1763-ல் ஆட்சியை ஒப்புக்கொண்டார். பிரிந்துபோன கருநாடகத்தைத் தமது பிடியின்கீழ்க் கொண்டுவர நினைத்துப் படையுடன் வந்த அவரை ஆங்கிலேயர் பின்வாங்கச் செய்தனர். நிசாமலிக்கும் ஆங்கிலேயருககுமிடையே நிலவிய பகை மாறுவதாயில்லை. ஆகவே, முகலாயப் பேரரசன் ஷா ஆலத்திடமிருந்து வட சர்க்கார்ப் பகுதிகளை இனமாகப் பெற்று அந்நிலங்களுக்கு ஆங்கிலேயர் உரிமை கொண்டாடியபோது நிசாம்அலி அவர்களது உரிமையை ஒப்புக்கொள்ள மறுத்தார். நிலைமையைச் சுமுகமாகச் சமாளிக்க விரும்பிய ஆங்கிலேயர் வேறுவழியின்றி அவருடன் சமரசம் செய்துகொண்டனர். அதன்படி அந்நிலங்களின்மேல் நிசாமுக்கு அவர்கள் ஆண்டுதோறும் கப்பம் கட்டச் சம்மதித்தனர். மேலும் நிசாமலியின் தம்பியான பசலாட்ஜங் அவனது ஆயுட்காலம் வரை குண்டூரை ஆட்சிசெய்து பயன்பெறவும் ஆதரவு தந்தனர்.

ஐதரின் எழுச்சி

மைசூர்ச் சேனையிலே ஒரு சாதாரண வீரராகஇருந்தார் ஐதர். மைசூர் அரசனை ஆட்டிப்படைத்த இரு சகோதரர்களில் ஒருவனான நஞ்சராசு மைசூர் அமைச்சராகப் பதவி ஏற்ற காலத்தில் அவருடைய கையாளாக அவர் மாறினார். திண்டுக்கல் பகுதிக்கு இராணுவ ஆள்வாராக 1755-ல் ஐதர் நியமிக்கப்பட்டார். தனது வல்லமையை வளர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்த ஐதர் பிரெஞ்சுக்காரரின் மேற்பார்வையின்கீழ் தன்னுடைய படைகளையும் தளவாடங்களையும் பெருக்கிக்கொண்டார். மைசூர் மேல் படையெடுத்து வந்த மராட்டியரை விரட்டவும், அரச குடும்பத்தில் ஏற்பட்ட தகராறுகளைத் தவிர்க்கவும் அடிக்கடி மைசூர் போய்வந்ததின் விளைவாக பங்களூரும் அதன் சுற்றுப்புறமும், கோயம்புத்தூரும், மலபாரில் சில பகுதிகளும் சிலகாலத்தில் அவர் வசம் வந்தன. பங்களூருக்கு அருகிலுள்ள ஊர்ப்பகுதிகளைக் கைப்பற்றிச் சீரங்கப்

பட்டணத்தையும் மராட்டியர் கைப்பற்ற முயன்றபோது ஐதர் தீவிரமாக எதிர்த்து அவர்களைத் தோல்வியுறச் செய்தார். வெற்றிபெற்ற ஐதர் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டார். அதனால் அரசாங்கத்தில் ஐதரின் செல்வாக்குப் பெருகியது அந்நிலையில் அமைச்சர் நஞ்ச ராசை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு ஐதருக்கு அதிகநாட்கள் ஆகவில்லை. அயர்கூட்டால் விரட்டப் பட்டுப் பின்வாங்கிப்போன லாலியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அழிவுதேட ஐதர் நினைத்தது இந்த நிலைமையில்தான். மைசூர் விவகா ரத்தில் அச்சமயம் ஐதர் அக்கறை காட்டும்படி நேரவே அவரால் லாலிக்கு உதவிசெய்ய முடியவில்லை என்று முன்னர்ப் பார்த்தோம். மைசூரில் அவரது எண்ணத்தைக் கவர்ந்தவர் கண்டராவ் என்பவர். அவரால் ஐதரின் நிலைமை ஆட்டங்கண்டது ஆகவே அவரையும் தொலைக்கும் பணியில் ஐதர் ஈடுபட்டார். கண்டராவை விரைவில் ஒழித்துவிட்டதுமல்லாமல் மைசூர் மன்னரையும் ஐதர் மிரட்டி அவரைத் தனது கைப்பாவையாக ஆக்கினார். மங்களூர், போத்தனூர், கள்ளிக்கோட்டை, தென்கன்ன டம், ஆகிய பகுதிகள் காலப்போக்கில் ஐதரின் வசமாயின. அவனுடைய பலமும் நாள்தோறும் வளர்ந்துவந்தது.

முதலாவது மைசூர்ப் போர்

ஐதரின் ஆதிக்க வளர்ச்சி பக்கத்திலிருந்த நிசா முக்குப் பயத்தைத் தந்தது; ஆங்கிலேயருக்கு அச்சத்தைத் தந்தது; மராட்டியருக்கு மிரட்சியை அளித்தது. துவக் கத்தில் ஐதரின் பகைவராக இருந்த நிசாம் அலி 1767-ல் ஐதருடன் நட்புச் செய்துகொண்டார். முதலாவது மைசூர்ப்போர் இந்நிலையில் துவங்கியது. ஐதரை முறியடிக்க ஆங்கிலேயர் 1767-ல் அனுப்பிய படை செங்கம் கணவாயில் ஐதர்முன் நிற்கமுடியாமல் ஓடி ஒளிந்தது. ஆனால் [1]ஜோசப் ஸ்மித்தின் தலைமையின்கீழ்

1. Joseph Smith.

வந்த ஆங்கிலேயர்படை ஐதருக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது. திருவண்ணுமலை, ஆம்பூர் முதலிய இடங்களில் ஐதர் தோற்கடிக்கப்பட்டார். இவ்வளவு நாளும் சொந்தம் பேசி உறவுகொண்டாடிய நிசாம்அலி ஐதரின் பக்கத்திலிருப்பதால் தனக்கு ஏற்படப்போகும் ஆபத்தை உணர்ந்தார். வங்காளத்திலிருந்து வந்த ஆங்கிலேயப் படை அவருக்குச் சொந்தமான பகுதிகளின்மேல் படையெடுக்கவே நிசாம் அலி ஆங்கிலேயரின் கட்சியில் அவசரமாகச் சேர்ந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயப் படை மங்களூரைக் கைப்பற்றியது. ஸ்மித் தலைமையின்கீழ் வந்த மற்ருெரு படை பங்களூரை நெருங்கியது. தனது நிலைமைக்குப் பெரும் ஆபத்து வரவில்லையாயினும் பத்துஇலட்சம் ரூபாய் தருவதாகவும் சில பகுதிகளை விட்டுக்கொடுப்பதாகவும் சொல்லி ஐதர் ஆங்கிலேயரிடம் சமாதானம் பேசினுர். ஐதர் இவ்வளவில் இடங்கொடுக்க ஆங்கிலேயர் பெருமளவில் மடம்பிடுங்க நினைத்தனர். அதற்கிணங்காத ஐதர் போரைத் தொடர்ந்து நடத்துவதில் முனைந்தார். கரூர் ஐதரின் கைக்கு வந்தது. ஈரோடு எதிர்ப்பின்றி அவரிடம் சரணுகதி அடைந்தது. பின்னர்த் தன் சேனையில் ஒரு பகுதியை பசலுல்லாகானின் தலைமையில் மதுரை, திருநெல்வேலிப் பகுதிகளுக்கு அனுப்பிவிட்டு ஐதர் காவிரிக்கரையோடு கிழக்குநோக்கிப் போனுர். வழியெல்லாம் அவர் செய்த அழிவுவேலையைக் கேள்வியுற்றிருந்த தஞ்சை மன்னர் நான்கு இலட்சம் ரூபாயை ஐதருக்குக் காணிக்கையாகச் செலுத்தித் தமக்குச் சொந்தமான பகுதிகள் அவரால் சூறையாடப்படாமல் காத்துக்கொண்டார். அங்கிருந்து சென்னையை நோக்கி விரைந்த ஐதர் தம் சேனையில் பெரும்பகுதியை மைசூருக்கு அனுப்பிவிட்டு ஆருயிரம் குதிரை வீரர்களுடன் சென்னைக் கோட்டைக்கு ஐந்துமைல் தூரத்தில் வந்து நின்றுகொண்டு சமாதானம் செய்வதற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து ஆங்கிலேயருக்குச் செய்தி அனுப்பினுர். ஆங்கிலேயரும் சமாதானத்திற்கு இணங்கினர். அவர்கள்

செய்துகொண்ட உடன்படிக்கையின்படி போரில் இழந்த பகுதிகளை இருகட்சியினரும் திரும்பக் கொடுத்துவிடுவதென்றும் மாற்றான் தாக்கிய காலத்தில் ஒருவருக்கொருவர் உதவவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. ஐதர் கரூரை மட்டும் வைத்துக்கொள்வதற்கு ஆங்கிலேயர் சம்மதித்தனர்.

இரண்டாவது மைசூர்ப்போர்

சென்னை உடன்படிக்கை முடிந்த சிறிது காலத்திற்குள் மாதவராவின் தலைமையின்கீழ் மராட்டியர் மைசூர் மீது படையெடுத்து வரவே, ஐதர் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். ஆனால் ஐதருக்கு உதவிசெய்ய ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஆங்கிலேயரின் வஞ்சகத்தால் தமக்குச் சொந்தமான பகுதிகளில் சிலவற்றை இழந்துவிட்ட ஐதர் ஆங்கிலேயரைப் பழி வாங்கக் கருதிக்கொண்டிருந்தான். ஐதர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வாய்ப்பை எதிர்நோக்கியிருந்த சமயத்தில் நிசாம்அலிக்கும் ஆங்கிலேயருக்குமிடையே நிலவிய நேசஉறவு முறிந்தது. அடோனியின் மீது படையெடுக்கப்போவதாக ஐதர் பயமுறுத்தியதின் விளைவாக 1779-ல் பசலாட்ஜங், குண்டூரை ஒரு சொற்ப வாடகைக்கு ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான். இதைக் கேள்வியுற்ற நிசாம் அலிக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. வடசர்க்கார் பகுதிகளின் திறையில் நிலுவைப் பணத்தை ஆங்கிலேயர் உடனடியாகச் செலுத்தவேண்டுமெனக் கட்டளையிட்டதுடன் நில்லாமல், ஆங்கிலேயரின் பகைவர்களான ஐதர், பிரெஞ்சுக்காரர் நானாபர்னவிஸ் ஆகியோருடன் தாமும் சேர்ந்து கொண்டார்.

இங்கிலேயில் ஆங்கிலேயர் மாகியைக் கைப்பற்றினர். மாகியின் கோட்டைச் சுவரிலே தம்முடைய கொடி பறந்ததையும் கவனியாமல் அவ்வூரை ஆங்கிலேயர் கைப்பற்றியது தம்மை மதியாத செயல் என்று கூறி ஐதர் ஆங்கிலேயர்மீது போர் அறிவிப்புச் செய்தார். போர் ஏற்படுவதைத்

1. Colonel Baille.

தடுக்க ஆங்கிலேயர் விரும்பி மேற்கொண்ட முயற்சி எது வும் பலிக்கவில்லை. 1780-ல் ஒரு பெரும் படையுடன் ஐதர் கருநாடகத்தினுள் நுழைந்தார். புலிக்காட்டிற்கும் புதுச் சேரிக்கும் இடையிலுள்ள பகுதிகள் சின்னபின்னமாயின. குண்டூரிலிருந்து படைத்தலைவன் [1]பெய்லியின்கீழ் காஞ்சி புரத்தை நோக்கி வந்த ஆங்கிலேயப்படை பெரும்பாக்கத் தருகே ஐதரால் சீரழிக்கப்பட்டது. ஆர்க்காடு ஐதர்வச மாயிற்று. ஆனால் வந்தவாசியைக் கைப்பற்ற அவர் செய்த முயற்சி கைகூடவில்லை.

இந்நிலைமையில் சென்னை அரசியலாரின் வேண்டு கோளின்படி வங்காளத் தலைமைப்பீடம், அயர்கூட்டை மறுபடியும் சென்னைக்கு அனுப்பி வைத்தது. தமது வேலையை 1781-ல் துவக்கிய அவர் பல இடங்களைப் பகை வரிடமிருந்து மீட்டார். அதே ஆண்டில் பறங்கிப்பேட்டை யில் ஐதரைப் புறங்கண்டார். வந்தவாசி மறுபடியும் முற்றுகையிடப்பட்டபோது கூட் மறுமுறையும் அதை மீட்டார். பெரும்பாக்கத்திற்கருகே நடந்தபோர் தீர்வு காணமுடியாமல் ஓய்ந்தது. சோளிங்கூரிலே ஐதர் அடைந்த படுதோல்வி அவருக்கே வியப்பாயிருந்தது. வெற்றி யடைந்த கூட் சித்தூரைக் கைப்பற்றினர். வேலூரைப் பகைவரிடமிருந்து விடுவித்தார். ஐதருடன் டச்சுக்காரர் செய்திருந்த ஒப்பந்தத்தின் காரணமாய் நாகப்பட்டி னத்தை டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றினர் ஆங்கிலே யருக்கு மிகப்பெரு வெற்றிகளைத் தந்த அந்த ஆண்டு இத் துடன் கழிந்தது.

அடுத்த ஆண்டில் ஆங்கிலேயர் மேலைக் கடற்கரைப் பகுதிகளில் தங்கள் எண்ணத்தைச் செலுத்துவாராயினர். தலைச்சேரியில் ஐதர் தோற்கடிக்கப்பட்டார். பொன்னணி யில் ஐதரின் மகன் திப்பு ஆங்கிலேயர் படையின் முன் நிற்கமுடியாமல் பின் வாங்கினர். இந்நிலைமையில் ஐதர் 1782-ல் இறந்தார். ஆங்கிலேயரின் ஆட்சி தமிழகத்திலே மறைந்துபடுவதற்காக அரும்பாடுபட்ட ஐதர்அலி அந்தோ இறந்தார். ஐதரலிக்குப்பின் பதவியேற்ற திப்பு போரைத்

தொடர்ந்து நடத்துவதிலே மிக்க ஆர்வம் காட்டினர். ஆனல், போர்த்நனூரிலே அவர் வெற்றிபெற்ற போதிலும், மங்களூர் முற்றுகையில் அவர் முனைந்து நின்றபோதிலும் விரைவில் ஆங்கிலேயருடன் அவர் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி இருதிறத்தாரும் போரிலே வென்ற பகுதிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

மூன்ருவது மைசூர்ப்போர்

ஆங்கிலேயரின் அன்பனுன திருவாங்கூர் மன்னனை அடிமைப்படுத்தி அவனது ஆட்சிப்பகுதிகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற அவா திப்புவின் மனதிலே திரண்டெழுந்தது. ஆனல், கோயம்புத்தூரிலிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்ட திப்பு திருவாங்கூரை அடைந்தவுடனேயே தம் முயற்சியில் தோல்வியுற்ருர். [1]மெடோஸ் நடாத்தி வந்த ஆங்கிலேயர் படை திண்டுக்கல்லையும் பாலக்காட்டையும் கைப்பற்றியது. இங்கிலையில் திருவண்ணுமலையைத் தம் வசமாக்கிய திப்பு திருச்சியையும் முற்றுகையிடப் போவதாகப் பயமுறுத்தினுர். தமக்கு உதவிகேட்டுப் புதுச்சேரியுடன் பேச்சு வார்த்தைகள் துவக்கினுர். தமிழகத்தின் நிலையைக் கண்டு மனம் பதறிய [2]காரன் வாலிஸ் பிரபு போரைத் தாமே நடத்தும் நோக்கத்துடன் இச்சமயம் சென்னைவந்து சேர்ந்தார். பங்களூர் ஆங்கிலேயரின் கைக்கு வந்தது. ஆனல் சீரங்கப்பட்டணத்தை ஆங்கிலேயர் கைப்பற்ற நினைத்த முயற்சி பலனளிக்கவில்லை. அஃதோடு கோயம்புத்தூரைக் கைப்பற்றுவதிலே திப்பு வாகை சூடினுர். இங்கிலையில் இரண்டாவது முறையாக 1892-ல் காரன்வாலிஸ் சீரங்கப்பட்டணத்தைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பேரிடர் அருகிலேயே வந்துவிட்டதை யுணர்ந்த திப்பு உடன்பாட்டிற்கு முற்பட்டார். உடன்பாட்டிற்கு இணங்கிய ஆங்கிலேயர் மூன்றரை இலட்ச ரூபாயும் போர் துவங்குவதற்கு முன்னர்த் திப்புவிற்குச் சொந்தமாயிருந்த இடங்களில் பாதிப்பகுதிகளையும் கேட்டனர்; அவை

1. Medows. 2. Lord cornwallis.

கிடைக்கும் வரை திப்பு தம் மைந்தர்கள் இருவரைப் பணயமாக ஆங்கிலேயரிடம் அனுப்பி வைக்கவேண்டுமென வும் கட்டளை விதித்தனர். வேறுவழியின்றித் திப்பு அவர் களின் கட்டளைக்கு இணங்கினர். சேலம், திண்டுக்கல் ஆகிய தமிழ்ப்பகுதிகள் இவ்வுடன்படிக்கையால் ஆங்கிலேயருக்கு உரிமையாயின. ஈராண்டுகளுக்குள் பணத்தைச் செலுத் தித் தம் மைந்தர்களை மீட்டார் திப்பு.

நான்காவது மைசூர்ப்போர்

ஆங்கிலேயர்மீது வஞ்சம் தீர்ப்பதற்காகப் பொறுத் திருப்போம் காலம் மாறுமெனக் காத்திருந்தான் திப்பு. அதற்காக முதன்முதல் அவன் பிரெஞ்சுக்காரரின் உத வியை நாடினன். பெருவீரன் நெப்போலியன் ஐரோப்பாவி லிருந்து எகிப்தை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் அது. அவன் இந்தியாவிற்கு வந்து திப்புவுடன் சேர்ந்து கொண்டால் தங்களாட்சி இந்த மண்ணிலே ஆழக் குழி தோண்டப்பட்டுப் புதைக்கப்பட்டு விடுமோவென ஆங்கி லேயர் அஞ்சினர். எனவே திப்புவின் வல்லமையை உட னடியாக ஒடுக்க அவர்கள் வழி தேடினர். என்ருலும் நாட்டில் போர் நடைபெறுவதை அவர்கள் விரும்ப வில்லை. ஆனல், ஆங்கிலேயருடன் உடன்பாடு பேசத் திப்புவிற்கு எண்ணமில்லை. சண்டை நடந்தது. ஆங்கி லேயர் படைத்தலைவர் [1]ஆரிசை சுல்தான்பேட்டைக்கருகில் எதிர்த்த திப்பு தோல்வியடைந்தான். அதன்பின் அவன் போர் செய்வதை நிறுத்தித் தமது தலைநகரமான சீரங் கப்பட்டணம் வந்துசேர்ந்தான். ஆங்கிலேயர் அவனைத் தொடர்ந்துவந்து சீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்ட னர். மனவன்மையுடன் போரிட்ட திப்பு வீர மரண மடைந்தான். திப்புவிற்குப் பின்னர் மைசூர் அதன் முன்னுள் அரச மரபைச் சேர்ந்த கிருஷ்ண ராஜாவிடம் ஒப் படைக்கப்பட்டது. ஆயினும் அப்பகுதி ஆங்கிலேயரது ஆட்சிக்கு அடங்கியதாகவே அமைந்தது.

1. Harris.

முகமதலியுடன் புது உடன்படிக்கை

1792-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் முகமதலியுடன் ஒரு புது ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன்படி கருநாடகத்திலே போர்ப்பறை முழக்கப்படும் காலத்திலே எல்லாக் கோட்டைகளும் ஆங்கிலேயப் படைகளால் பாதுகாக்கப் படவேண்டும் எனவும், அந்தச் சூழ்நிலையிலே, கிடைக்கும் நிலையான வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை ஆங்கிலேயர் நவாபிற்குத் தந்துவிட்டுக் கருநாடகத்தின் ஆட்சிப் பொறுப்பு முழுவதும் பெறுவதென்றும் முடிவு செய்யப் பட்டது. பாளையக்காரர்கள் தமக்குத் தரும் கப்பப் பணத்தை ஆங்கிலேயர் வசூலித்துக்கொள்ளலாம் என்றும் நவாப் ஒப்புக்கொண்டார். எழுத்தளவில் இவ்வுடன் படிக்கை ஏற்பட்டதே தவிர நடைமுறையில் எதுவும் நிகழவில்லை. என்றாலும் முகமதலியின் வாழ்வுக் காலத்திலே, அவ்வொப்பந்தத்தை மாற்ற எவ்வித முயற்சியும் ஆங்கிலேயரால் செய்யப்படவில்லை. முகமதலிக்குப் பின் 1795-ல் அவனுடைய மகனான ஓம்தாத்-உல்-ஓமாரா நவாபாகப் பதவி ஏற்றார். அவரிடம் ஆங்கிலேயர் ஒரு புது ஒப்பந்தம் பேசினர். கருநாடகத்தை நிரந்தரமாகவே தங்களுக்குத் தந்துவிட்டு ஆண்டுதோறும் தவறாமல் கப்பம் வாங்கிக்கொண்டால், நவாபு எவரிடமும் கடன் வாங்கவேண்டிய தேவை இராது என ஆங்கிலேயர் அதன்படி ஆசை காட்டினர். பாளையக்காரரை ஆளும் பேருரிமையைத் தங்களுக்குக் கொடுத்துவிட்டால், நவாபிற்கு ஒரு கவலை விட்டது என்று அவர்கள் காரணம் காட்டினர். கருநாடகத்தில் சில கோட்டைகளை நவாபு ஆங்கிலேயருக்கு அளிப்பது இராணுவக் காரணங்களினால் தேவைப் படுகின்றது என்று அவர்கள் ஆதாரம் காட்டினர். ஆனால் இவற்றில் எந்தக் கட்டளைக்கும் நவாபு இணங்கவில்லை. எனவே, நவாபை எப்படித் தம் வழிக்குக் கொண்டுவருவது என ஆங்கிலேயர் சிந்திக்கலாயினர். இந்நிலைமையில் 1801-ல் நவாபு மரணமடைந்தார்.

நவாபு பதவியையடைய அதன்பின்னர் ஏற்பட்ட குழப்பத்தில், ஆங்கிலேயரது உதவியைப் பெற்று அசீம்-உத்தௌலா அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் செய்த உதவிக்குக் கடப்பாடு செய்பவர்போல் அவர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு அதன்படி கருநாடகத்தின் முழு ஆட்சிப்பொறுப்பை ஆங்கிலேயருக்கு அளிக்க அவர் உடன்பட்டார். மாருக, ஒரு வருடத்திற்கு ஒன்பது இலட்சம் ரூபாய்வரை நவாபிற்குக் காணிக்கையாகக் கொடுக்க ஆங்கிலேயர் வாக்களித்தனர். இவ்வாறு கருநாடகம் முழுவதும் ஆங்கிலேயரது கைவசம் வந்து சேர்ந்தது.

தஞ்சாவூரும் ஆங்கிலேயரும்

1762-ல் முகம்மதலியுடன் தாம் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி தஞ்சாவூர் மன்னர் சிலகாலமே திறை செலுத்தினர். அவர் திறைசெலுத்தத் தவறியதைக் காரணங்காட்டி நவாபு சென்னை அரசியலாரின் உதவியுடன் தஞ்சாவூரைக் கைப்பற்றித் தஞ்சாவூர் மன்னரையும் சிறைப்பிடித்தார். சென்னை அரசாங்கத்தின் இந்தப் போக்கு மேலிடத்திற்குப் பிடிக்கவில்லை. மேலிடத்தின் ஆணையின்படி சென்னையில் புதிதாகப் பதவி ஏற்ற ஆள்வார் [1]பிகாட் 1776-ல் தஞ்சாவூரை முகம்மதலியிடமிருந்து மீட்டு, அதைப் பழைய மன்னரிடம் ஒப்படைத்தார். புதிதாகப் பதவியேற்ற பழையமன்னர் தம்மை ஆட்சியில் அமர்த்திய ஆங்கிலேயரின் அன்பைப் பாராட்டித் தமக்குச் சொந்தமான சில பகுதிகளை ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுத்தார். அவரது காலத்திற்குப் பின்னர்த் தஞ்சாவூர் மன்னராவதற்கு இருவர் உரிமை கொண்டாடினர். ஆங்கிலேயரது ஆதரவுடன் முதலில் அமர்சிங் ஆட்சிப்பொறுப்பையேற்ருர். ஆனல், பின்னர் அவர் விலக்கப்பட்டு சரபோஜி ஆங்கிலேயரால் தஞ்சாவூர் மன்னராக்கப்பட்டார். அவரது காலத்தில் தஞ்சாவூரில் ஆங்கிலேயரின் ஆதிக்கம்

1. Pigot.

பரவியது. மூன்று இலட்சம் ரூபாயும் தஞ்சாவூரின் நிலையான வருவாயில் ஐந்தில் ஒருபங்கும் ஆண்டுதோறும் ஆங்கிலேயர் தமக்குத் தரவேண்டுமென்று உடன்படிக்கை செய்துகொண்டு தஞ்சாவூரின் ஆட்சிப்பொறுப்பை ஆங்கிலேயருக்கு அவர் விட்டுக்கொடுத்தார்.

தென்னாடும் ஆங்கிலேயரும்

மதுரையையாண்ட நாயக்கர்மரபு நசித்துப்போன பின் மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் கருநாடக நவாபின் ஆளுகைக்குக் கீழ்வந்தன. முகமதலி நவாபாகப் பதவியேற்றவுடன் இம் மாவட்டங்களிலே அமைதியை நிலைநாட்டுவதற்காகப் படைத்தலைவன் [1]ஈரானையும், வீரன் யூசப்கானையும் தெற்கே அனுப்பிவைத்தார். பாளையக்காரர்களைப் பணியவைத்த முயற்சியிலே வீரன் யூசப்கானின் திறமை வெளிப்பட்டது. அவனது திறமையை மெச்சி 1757-ல் அம் மாவட்டங்களின் தனியதிகாரியாக நவாபு அவனை நியமித்தார். யூசப்கான் தமிழன்; நல்ல வீரன். இராமநாதபுரம் மாவட்டத்திலே வேளாளர் வகுப்பிலே பிறந்தவன். தனது பிற்காலத்தில் மகம்மதிய சமயத்தைத் தழுவியவன். அவனது இயற்பெயர் மருதநாயகம் பிள்ளை. சில நாட்களில் அவன் ஆங்கிலேயரது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தன்னுரிமையுடன் அம்மாவட்டங்களின் தலைவனானான். ஆனால், ஆங்கிலேயர் அந்நிலையில் அதிககாலம் அவனை விட்டுவைக்கவில்லை. மதுரையையும் கைப்பற்றி அவனையும் சிறைப்பிடித்து 1764-ல் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றனர். 1781-ல் ஆங்கிலேயர் நவாபுடன் ஓர் உடன்படிக்கை செய்தார்கள். அதன்படி மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய பகுதிகள் தற்காலிகமாக ஆங்கிலேயரின் கைக்கு வந்தன. அப்பகுதிகளின் முழு ஆட்சிப்பொறுப்பை அவர்கள் நாளடைவில் ஏற்றனர்.

---

1. Heron.

பாஞ்சாலங்குறிச்சி

திருநெல்வேலிச் சீமையில் அப்போதிருந்த பாளையங்களுள் பாஞ்சாலங்குறிச்சி முக்கியமானது. "முசலும் நாயைக் கடித்திடுமாம் வெகுமுனையுள்ள பாஞ்சால நாட்டினிலே," என்று சொல்லும்படி வீரத்துக்கு விளைநிலம் அந்தமண். தெற்கத்திச் சீமையிலே நிலவிய குழப்பநிலையை அடக்கி ஒடுக்க 1755-ல் ஆர்க்காடு நவாபால் அனுப்பப்பட்ட ஈரான் பாஞ்சாலங்குறிச்சிமீது படையெடுத்தான். ஆனால், ஏனோ கோட்டையைக்கூடத் தாக்காமல் அவன் திரும்பிப் போய்விட்டான். 1783-ல் பாஞ்சாலங்குறிச்சி புல்லர்டன் என்ற ஆங்கிலேயனது போர்வெறிக்கு இரையாயிற்று. அவன் படைகொண்டு வந்தசமயம் பாஞ்சாலங்குறிச்சியை அப்போது ஆண்ட கட்டபொம்ம நாயக்கர் அடுத்தவூர் சென்றிருந்ததால் தட்டிக்கேட்க ஆளின்றிக் கோட்டைக்குள் நுழைந்த புல்லர்டன் அங்கிருந்த 40,000 வராகன்களைக் கொள்ளையடித்துச் சென்றான். இதன் பிறகேனும் கட்டபொம்ம நாயக்கர் தங்களுக்கு அடங்கிவிடுவார் என எதிர்பார்த்தனர், ஆங்கிலேயர். ஆனால் அவரது மரபு அடிபட்ட பந்துபோல மேலும் மேலும் உயர எழுந்தது.

வீரபாண்டியக் கட்டபொம்மன்

வீரபாண்டியக் கட்டபொம்மு 1790-ல் பாஞ்சைப்பதியின் பட்டத்துக்கு வந்தார். ஒன்பதாண்டு ஆட்சிக்காலத்தில் இரண்டாண்டுகளே அவர் அமைதியாக அரசாண்டார். எஞ்சிய ஏழுஆண்டுகள் வஞ்சக ஆங்கிலேயருடன் போரும் பூசலுமாகவே கழிந்தன. பாஞ்சைப்பகுதிக்குப் பக்கத்திலே இருந்தது எட்டையாபுரம் எனும் பாளையம். நெடுங்காலமாகவே பாஞ்சைப்பகுதிக்கும் எட்டையாபுரத்திற்குமிடையே நெருங்கியதோர் உறவு நிலவியது. இந்த நட்புறவை ஆங்கிலேயர் பிரிக்க எண்ணினர். 1792-ல் 'சர்வே நிலஅளவை செட்டில்மென்ட்' என்ற போர்வையில் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சொந்தமான அருங்குளம், சுப்பல

புரம் என்ற இரண்டு ஊர்களை எட்டையாபுரத்துடன் அவர்கள் இணைத்தார்கள். அதனால் எட்டையாபுரம் ஆங்கிலேயரிடம் புதுநட்புப் பாராட்டியது. பாஞ்சாலங் குறிச்சிக்கும் எட்டையாபுரத்திற்கு மிடையே பகை வளர்ந்தது. அப்பகுதிகளின் ஆட்சிப்பொறுப்பை அடைந் திருந்த ஆங்கிலேயர் பாஞ்சை மன்னனிடம் திறை கேட்டபோது, வீரபாண்டியனுக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே பகைமூண்டது. "வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி?" என்று வெள்ளையரிடம் அவன் வீரம் பேசினான். "தானமென் னிலோ தருவேன்; வரி எனில் தாரேன்" என்று வல்லமை பேசினான். வீரபாண்டியன் வீறுப்பை யறிந்த ஆங்கிலேயர் அதிகாரிகளை அனுப்பி அவனை அதட்டிக் கேட்டனர். கடிதங்கள் மூலம் கட்டளைகள் அனுப்பினர். எல்லாவற் றிற்கும் வீரபாண்டியன் அளித்த ஒரே பதில் 'இல்லை' என்பதுதான். 1792 முதல் 1799 வரை வீரபாண்டிய னிடம் வரிவசூலிக்க வெள்ளையர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

பாஞ்சைப்போரின் முதற்கட்டம்

எனவே, 1799-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 4-ம் நாள் நள்ளிரவில் வாணிகக்கூட்டத்தாரின் படைகள் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட்டுக் கோட்டையைத் தாக்கின. ஆனால், ஆங்கிலேயரின் படையெடுப்பைக் கண்டு வீரபாண்டியன் அஞ்சவில்லை. வெள்ளையரின் படைகளை எதிர்த்துப் பாஞ்சைப்பதியானின் படைகள் வீரப்போர் புரிந்தன. வீரபாண்டியன் படையினருக்கும் வெள்ளைப் படையினருக்கும் ஒரு வேறுபாடிருந்தது. பாஞ்சைப்பதியானின் படையினர் உரிமைக்காகப் போரிட் டனர். பிறநாட்டு வெள்ளையரின் படையினர் ஊதியத் துக்காகப் போரிட்டனர். உரிமைப்படையை எதிர்த்து ஊதியப்படை எளிதில் வெற்றிகாணமுடியுமா? முதல் நாள் போரிலேயே ஆங்கிலேயர் அயர்ந்துவிட்டனர். தோள்பலமும் துப்பாக்கிப்பலமும் பயனற்றுப்போகவே, ஆங்கிலேயர் தங்களிடமிருந்த பேய்வாய்ப் பீரங்கிகளைக்

கொண்டு பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைமீது குண்டுமாரி பொழிந்தனர். பகைவனின் படைவலிமையறிந்த வீரபாண்டியன், இந்நிலையில் ஆங்கிலேயர் அறியாவண்ணம் நள்ளிரவில் கோட்டையிலிருந்து வெளியேறினான். ஆங்கிலேயர் கோட்டையைக் கைப்பற்றியதுடன் வீரபாண்டியன் குடும்பம் முழுவதையும் கைதுசெய்து சிறைவைத்தனர்.

சுதந்தரத்தைவிடச் சுகவாழ்வே பெரிதென்றெண்ணிய பாளையக்காரர் பலர் அப்போது பாஞ்சைப்பதியானின் பகைவர்களாக இருந்தனர். பாஞ்சை மன்னன் கோட்டையை இழந்தபின்னரும் தனது கொள்கையை விட்டானில்லை. இரவோடு இரவாக ஊர்ஊராகச் சுற்றித் தென்பாண்டி நாட்டுப் பாளையக்காரர்களை வல்லரசின் எதிர்ப்பு முன்னணியில் ஒன்றுதிரட்ட முயன்றான். புதுக்கோட்டை மன்னனான விசயரகுநாத தொண்டைமான் வீரபாண்டியனையும் அவன் தம்பியையும் அவர்களுக்குத் துணைபுரிவதுபோன்று நடித்துத் தமது அரண்மனைக்கு அழைத்து அயர்ந்துறங்கும் வேளையில் அவர்களை ஆங்கிலேயரிடம் பிடித்துக்கொடுத்தான். எட்டையபுரத்தரசனும் புதுக்கோட்டைத் தொண்டைமானின் வஞ்சகச் செயலிலே முழுப்பங்குகொண்டான்.

கைது செய்யப்பட்ட வீரபாண்டியன் கயத்தாறுக்குக் கொண்டுவரப்பட்டான். 1799-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள், தமிழ்மகன் தலைகுனியவேண்டிய கொடுமை ஒன்று அன்று நிகழ்ந்தது. அன்று வாணிக வெள்ளையர் குடித்துக் கூத்தாடினர். தமிழ்நாட்டுமக்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்து உள்ளம் பொருமினர். ஏனென்றால் தன்மானத்தைப் பெரிதாக மதித்த தமிழ்நாட்டுக் குறுநிலமன்னனான வீரபாண்டியக் கட்டபொம்மன் அன்று ஆங்கிலேயரால் சாலையருகிலே நின்றதோர் புளியமரத்திலே தூக்கிலிடப்பட்டான்.

வாணிகஞ்செய்ய வந்த வெள்ளையர் வரிவிதிக்கும் ஆள்வோராக மாறிய முதற்கட்டத்திலேயே அவர்களுக்கு

வரிசெலுத்த மறுத்து வீரப்போர் புரிந்த தமிழன், வீரபாண்டியக் கட்டபொம்மன், அந்தோ அநீதியாகக் கொல்லப்பட்டான். பாஞ்சாலங்குறிச்சிப் போரிலே ஆங்கிலேயர் செய்த கொடுமை கொஞ்சநஞ்சமன்று. வீரபாண்டியனுக்கு அரசுநெறியுணர்த்தும் அமைச்சராய்—பேரிடர்க்குதவும் பெரு நண்பராயிருந்த தானபதி சுப்பிரமணிய பிள்ளையை நாகலாபுரத்தில் அவர்கள் தூக்கிலிட்டுக் கொன்றனர். உயிர் நீத்தபின்னர் பிள்ளையின் தலையை வெட்டி வேல்முனையில் குத்தி பாஞ்சாலங்குறிச்சி வீதிகளிலே உலாவாகக்கொண்டு சென்றனர். வீரபாண்டியனின் தளபதியாகிய வெள்ளையத் தேவனையும் சுட்டுக் கொன்றனர்.

பாஞ்சைப்போரின் இறுதிக்கட்டம்

தமிழன்னைக்குத் திருநெல்வேலிச் சீமையிலே பெருமைதரும் மைந்தர்களாக இரண்டு ஊமைகள் பிறந்தார்கள். ஓர் ஊமை தாய்மொழிக்காகத் தமது வாழ்வைத் துறந்து துறவியானார். மற்றோர் ஊமை தாய்நாட்டுக்காகத் தமது வாழ்வையும் உயிரையும் துறந்தார். முதல்வர் குமரகுருபரர். இரண்டாமவர் ஊமைத்துரை என்ற குமாரசுவாமி நாயக்கர்; வீரபாண்டியக் கட்டபொம்மனின் அருமைத் தம்பி; வீரருள் வீரர்; அண்ணனுடன் கைதுசெய்த அவரை ஆங்கிலேயர் பாளையங்கோட்டையில் சிறை வைத்தனர். 1801-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாள் அவர் சிறையிலிருந்து தப்பித் தம் கூட்டத்தாருடன் தூத்துக்குடி வந்துசேர்ந்தார். அப்போது தூத்துக்குடி ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

1795-ல் டச்சுக்காரரிடமிருந்து தூத்துக்குடியை வாணிகக் கூட்டத்தார் கைப்பற்றி யிருந்தார்கள். தூத்துக்குடியை அப்போது ஆங்கிலேயரிடமிருந்து ஊமைத்துரை கைப்பற்றினார்; அங்கிருந்த ஆங்கிலேயரின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்துகொண்டு மறுநாள் படைவீரர்களுடன் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்துசேர்ந்தார் ஊமைத்துரை.

அங்கே கோட்டையிருந்த இடத்தில் குருக்கு முளைத்திருந்தது.

வீரபாண்டியன் வீழ்ச்சிக்குப் பின்னர்ப் பாஞ்சாலங்குறிச்சிநகரைத் தரையோடு தரையாக ஆக்கிய அரும்பணியை அதற்குள் செய்து முடித்திருந்தார்கள் ஆதிக்க வெறிகொண்ட ஆங்கிலேயர். இதைக்கண்ட ஊமைத்துரை நெஞ்சு பொறுக்காமல் கண்ணீர் வடித்தார். அவரது கண்ணீரிலே கோட்டை மறுபடியும் எழும்பியது. ஆறு நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. அக் கோட்டையைக் குண்டுகளால்கூடத் துளைக்க முடியவில்லை என்பது வரலாறு சாற்றும் உண்மை. அரசுபீடத்தில் அமர்ந்த ஊமைத்துரை ஆங்கிலேய வல்லரசின் எதிர்ப்புப் பாசறையிலே தமிழ்நாட்டிலுள்ள பாளையக்காரர்களனைவரையும் ஒன்றுதிரட்ட நினைத்து அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். பலரிடமிருந்து இதற்குப் பதிலேயில்லை. பதிலெழுதிய சிலர் படை அனுப்பித் தந்தார்கள். காளையார் கோவிலை யாண்டுவந்த மருது சகோதரர்கள்மட்டும் இருபதினாயிரம் படைவீரர்களுக்கு மேலனுப்பிவித்து ஊமைத்துரையுடன் தீவிரமாகவே ஒத்துழைத்தார்கள்.

1801-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் 9-ம்நாள் ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சி மண்கோட்டைத் தாக்குதலைத் துவக்கினார்கள். கோட்டை அசைந்துகொடுப்பதாயில்லை. கோட்டையிலிருந்து ஒரு தூசி மண்ணும் உதிரவில்லை. ஆகவே, அவர்கள் கோட்டையைப் பிடிக்க முடியாமல் பின்வாங்கினார்கள். 1801-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாள் மறுபடியும் ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சி வந்துசேர்ந்தது. அப்போதும் ஆங்கிலேயரின் முயற்சி எளிதில் கைகூடுவதாயில்லை. இரண்டு திங்களுக்குப் பின்னரே அந்தக் கட்டைமண்கோட்டை வீழ்ந்தது. ஆனால், வீரருள் வீரன் ஊமைத்துரைமட்டும் வெள்ளையரின் கையில் அகப்படவில்லை.

மருது பாண்டியர்கள்

அருள்நிறைந்த ஆறுமுகப்பெருமான் கோயில்கொண்டிருக்கும் குன்றக்குடியிலே உற்சவமூர்த்தியின் சந்நிதி

யிலே ஆண்மை அப்படியே உருவெடுத்தாற்போன்ற இரண்டு சிலைகளிருக்கின்றன. அண்ணனான வெள்ளை மருதுவின் சிலை ஒன்று, தம்பியான சின்னமருதுவின் சிலை மற்றொன்று; வெள்ளை மருதுவும் சின்னமருதுவும் சிறு வயல் எனும் ஊரில் அரண்மனை கட்டிக்கொண்டு சிவகங்கைச் சீமையை ஆண்டுவந்தார்கள். கோயிலும் கோட்டையுமாகத் திகழும் காளையார்கோவில் இவர்களது தலைநகர். பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பிய ஊமைத்துரை காளையார்கோவில் வந்துசேர்ந்தார். மருது பாண்டியர்களின் பேராதரவைப் பெற்று ஆங்கிலேயரை எதிர்க்கப் பெரும்படை திரட்டும் முயற்சியை அங்கு அவர் மேற்கொண்டார். அதைக்கேட்ட ஆங்கிலேயர் ஊமைத்துரையை ஒழித்துவிடும் திட்டத்துடன் காளையார்கோவிலுக்குத் தங்கள் படையை அனுப்பிவைத்தார்கள். திருப்பூவணத்திலே நடந்த சண்டையில் ஆங்கிலேயரின் படை முறியடிக்கப்பட்டது.

அதன்பின் தம் படை வலிமையில் நம்பிக்கையிழந்த ஆங்கிலேயர் தங்கள் சூழ்ச்சித் திறனைக் காட்டத் துவங்கினர். மருது சகோதரர்கள் நியாயமாகச் சிவகங்கையை ஆளவேண்டிய மறவர் மரபில் வந்தவர்களல்லவென்று கூறி மறவர்குலத்தைச் சேர்ந்த மாற்றான் ஒருவனுக்குச் சோழபுரத்தில் மணிமகுடம் சூட்டினர். அவர்களது சூழ்ச்சி எப்போதும்போலப் பலித்தது. மருது சகோதரர்கள் ஆளும் உரிமையை இழந்தார்கள்; ஆள்பலத்தையும் இழந்தார்கள். அதனால் அவர்கள் தங்கள் போர் முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை. சங்கரப்பதி கோட்டையிலிருந்துகொண்டு ஆயுதம் சேர்க்கும் தங்கள் முயற்சியைத் தொடர்ந்து நடத்திவந்தார்கள். இங்கிலையில் சில வஞ்சகர்கள் அவர்கள் இருக்குமிடத்தை ஆங்கிலேயருக்குக் காட்டிக்கொடுத்தார்கள்.

நள்ளிரவில் மறைவாகப்போய்ச் சங்கரப்பதி கோட்டையை ஆங்கிலேயர் தாக்கினர். எதிர்த்துப் போர் புரிந்தவண்ணமே ஊமைத்துரையும் மருது சகோதரர்

களும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஆங்கிலேயரது கைதியாயினர். திருப்பத்தூர்க் கோட்டையில் சின்ன மருதுவும் பெரிய மருதுவும் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டார். அவர் தூக்கிலிடப்பட்ட இடமும், வெள்ளைக்காரரின் நினைவுச் சின்னங்களும் தவிர மற்ற இடங்கள் முழுவதையும் இரண்டாவது முறையாக இடித்துத் தரை மட்டமாக்கி அந் நிலத்தை உழுது அங்கே உப்புடன் வரகைக் கலந்து விதைத்தார்கள். அரசுநெறி மறந்த ஆங்கிலேயர்கள் "எழுநிலை மாடம் கால் சாய்ந்து உக்குக், கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்" என்ற வெற்றிவேற்கைக் கருத்துக்குச் சான்றாகப் பாஞ்சாலங்குறிச்சி இன்று பாலைநிலமாகக் கிடக்கின்றது.

பாஞ்சாலங்குறிச்சியில் துவங்கிப் பக்கத்திலும் பரவிய உரிமைத் தீயின் நாக்குகள் இந்தநிலைமையில் தணிந்தன. ஆனால், அவை என்றும் தணிந்தவையாக ஆகிவிடவில்லை. நிலையாக அவிந்தும் போய்விடவில்லை. மெல்ல மெல்ல அவை தமிழகமெங்கும் பற்றின. தமிழ்மக்களின் அடிமைப் பண்புகளைச் சுட்டெரித்து அவர்களது உரிமைப்போருக்கு உணர்ச்சி தந்தன. பழைய தமிழகம் பிறநாட்டு வெள்ளையருடன் நடத்திய புரட்சியல்ல பாஞ்சாலங்குறிச்சிப் போர்; ஆட்சிவெறிகொண்ட ஆங்கிலேயரின் வன்மைப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளப் புத்துணர்வுபெற்ற தமிழகம் நடத்திய உரிமைப்போரேயாகும். எனவே பின்னர் நடந்த உரிமைப் பெரும்போருக்குக் கால்கோள் விழா பாஞ்சாலங்குறிச்சியிலே செய்யப்பட்டது என்று நாம் சொல்லுவது சாலவும் பொருந்தும்.

வணிகக் குழு

தமிழகத்தின் கடைசியாக ஆங்கிலேயரின் கைக்கு வரவிருந்த பகுதி தெற்கத்திச் சீமை. பாஞ்சாலங் குறிச்சிப் போரில் ஆங்கிலேயரடைந்த வெற்றியால் தெற்கத்திச் சீமையும் அவர்களது பிடியில் சிக்குண்டது. எனவே, அந்நாள்முதல் தமிழகம் முழுவதும் அவர்களது நேரடி

யான ஆட்சியின்கீழ் வந்தது. படிப்படியாகத் தமிழ்நாடு ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்தபோது வடநாட்டிலும் அவர்களது செல்வாக்கு வளரத் துவங்கியிருந்தது. மேலும் தங்கள் வல்லமையை வடநாட்டில் நிலைநாட்ட எண்ணிய வாணிக ஆங்கிலேயர் தங்கள் மத்திய அரசியலை அங்கே நிறுவினார்கள். ஆகவே, ஆங்கிலேயரின் ஆளுகையின்கீழ்ப்பட்ட தமிழகம் அவர்களது இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. பக்கத்து வேறு சில பகுதிகளுடன் இணைக்கப்பட்ட தமிழகம் 'சென்னை மாகாணம்' என்று அழைக்கப்பட்டது.

தங்களாட்சி நிலைபெறலும் ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டார்கள். அச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் பல சட்டங்களை இயற்றினார்கள். அதனால் பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளானார்கள். மக்கள் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து ஒழுகிவந்த சாதி மத சமூகச் சடங்குகளில் சீர்திருத்தம் என்ற போர்வையில் ஆளவந்தவர்கள் அடிக்கடி தலையீடு செய்தது அந்த வெறுப்பை மேலும் வளர்த்தது. காலப்போக்கில், அவர்களது வெறுப்பு, எழுச்சிபெற்ற அம்மக்கள் கூட்டத்தின் அனல் மூச்சாக மாறியது. 1806-ல், வேலூரில் அந்த அனல்மூச்சு வெளிப்பட்டு ஆங்கிலேயருள் பலரைச் சுட்டெரித்தது.

போர்வீரர்களது தோற்றத்தைத் திருத்துவதற்கென்று சென்னைப் பகுதியின் தலைமைப் படைத்தலைவனாகவிருந்த [1]கிராடக் செய்த மாற்றங்கள் போர்வீரர்களிடையே பொல்லாததோர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அம்மாற்றங்களின்மூலம், ஆங்கிலேயர் ஆட்சி தங்களை மதமாற்றம் செய்ய முயலுகின்றது என்று அவர்கள் நினைத்தார்கள். எனவே, தங்கள் வெறுப்பை வெளிக்காட்ட விரும்பிய அவர்கள் கிளர்ந்தெழுந்து, தங்களண்டையிலிருந்த நூற்றுக்கதிகமான ஆங்கிலேயரைக் கொன்று தீர்த்தார்கள். நிலைமையைச் சமாளிப்பதற்காக

---

1. Craddock.

ஆர்க்காட்டிலிருந்த படைகளுக்கு உடனே அழைப்பு அனுப்பப்பட்டது. அந்தப் படைகளின் துணையுடன் புரட்சி சீக்கிரமே அடக்கப்பட்டது. முந்நூறுக்கு மேற்பட்ட போர்வீரர்கள் அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்த காரணத்திற்காகப் பின்னர் அரசாங்கத்தால் கொல்லப்பட்டார்கள். ஆம்! உரிமைக்குப் போராடி உயிர்ப்பலியானார்கள் அவர்கள்.

வேலூர்ப் புரட்சியின் பின்னர் இந்தியாவை ஆங்கிலேய வாணிகக் கூட்டத்தால் வெகுகாலம் அமைதியுடன் ஆள முடியவில்லை. இந்நாட்டு நட்புக்களிலும் பண்பாடுகளிலும் அவர்கள் மேலும் தலையிட்டது, விவரமறியாத இளம் பிள்ளை ஒருவன் நெருப்பைக் கையிலேந்தி வெடிமருந்தோடு விளையாடியதாலேற்பட்ட பேரிடரிலேயே முடிந்தது. வெடிமருந்து திடீரென்று வடநாட்டில் வெடித்தது. இந்திய சரித்திரத்தை எழுதிய ஆங்கில ஆசிரியர்கள் அதைச் சிப்பாய்க் கலகம் என்று கூறுவர். ஆனால், பாஞ்சைப்பதியான் துவக்கிவைத்த பாரதச் சுதந்தரப் போரின் ஒரு முக்கிய கட்டம் அந்த உரிமைப்போர் என்பது உணரத்தக்கது. அப்போரில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றபோதிலும், இந்தியர்கள் ஏகாதிபத்தியத் துரைத்தனத்தார்மீது கொண்டிருந்த வெறுப்பு அதனால் நன்கு வெளியாயிற்று. இந்தச் சூழ்நிலை காரணமாக 1858-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல்நாளன்று, வெள்ளை வாணிகக் கூட்டத்தார் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை விக்டோரியா மகாராணியாரிடம் ஒப்படைத்தனர்.

ஆங்கிலேயரில் இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய தமிழகம், அந்நாள்முதல் ஆங்கிலேய முடியாட்சியின்கீழ் வந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விக்டோரியா மகாராணியார் விடுத்த அறிக்கை இந்திய மக்களிடையே—ஆகவே தமிழர்களிடையே—மகிழ்ச்சியை யுண்டாக்கியது. சமயசம்பிரதாயங்களில் அரசாங்கம் தலையிடாது நடுவுநிலைமை வகிக்குமென்றும் இந்திய மக்களும் இங்கிலாந்துக் குடிமக்களைப்போல அந்நாள்முதல்

பாவிக்கப்படுவார்களென்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வாணிகக் கூட்டத்தின் ஆக்கம்

சுமார் ஒரு நூற்றாண்டுவரை நிலைத்திருந்த ஆங்கிலேயப் பேரரசு எனும் கோட்டைக்குத் தமிழகத்தில் அடிப்படையிட்டது கிழக்கிந்திய வாணிகக்கூட்டம் என்பதை அதன் ஆக்கத்தை அளவிடும்போது நாம் மறந்துவிடலாகாது. தமிழகத்திலே ஆட்சி புரிந்த அரசுகளுள் வாணிகக்கூட்டத்தின் அரசே வல்லமை மிகுந்தது என வரலாறு படித்த ஆசிரியர்கள் சொல்லுகின்றனர். ஆனால், தமிழ்நாட்டின் நலமே பெரிதெனக்கொண்டு முறை செலுத்திய அரசாங்கம் அது என எவரும் பாராட்டுவதற்கில்லை. தமிழ்நாட்டின் பொருள்வளம் வாணிகக்கூட்டத்தால் வரன்முறையின்றி சுரண்டப்பட்டதும், அதன் அலுவலர்கள் தனிப்பட்ட முறையிலே தமிழகத்தின் செல்வ வளத்தைக் கொள்ளை செய்ததையும் சாதாரணக் கணக்கனாகத் தமிழகம் வந்த [1]பால் பென் பீல்டு ஆர்க்காட்டு நவாபிற்குக் கொள்ளை வட்டிக்குக் கடன் கொடுத்துப் பெரும் பொருள் திரட்டியதையும் அறிந்தவர்கள் ஒருபோதும் அவ்வாறு பாராட்டமாட்டார்கள்.

ஆங்கிலேயர் காலத்துத் தமிழகம்

சிதறுண்டுகிடந்த செந்தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே குடையின்கீழ் வந்தது. தமிழகம் ஒரு மாகாணம் என்ற அளவில் வடநாட்டிற் செயற்பட்ட மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டதாக அமைந்திருந்தபோதிலும், பலமான ஓர் அரசியலமைப்பால் ஆளப்பட்டு வந்தது. ஆட்சித் துவக்கத்தில் தந்நலம் காரணமாய், தமிழ்நாட்டின் பொருள்வளத்தைச் சுரண்டுதலில் மட்டுமே, அந்த அரசாங்கம் அக்கறை செலுத்தியதென்றாலும் நாளடைவில்

1. Paul Benfield.

அதன் போக்கில் ஒரு மாறுதல் தெரிந்தது. அம்மாறு தலின் காரணமாய்ப் பற்பல துறைகளில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

கல்வித்துறை

சென்ற நூற்றாண்டின் முதற்பாதிவரை இந்தியாவில் ஆட்சி செலுத்திய கிழக்கிந்திய வாணிகக்கூட்டம் இந்த நாட்டுமக்களின் கல்வி வளர்ச்சியில் 1813-ஆம் ஆண்டுவரை நாட்டம் செலுத்தவில்லை என்றே சொல்லவேண்டும். தமிழகத்தின் கல்வி நிலையும் 1813-ஆம் ஆண்டுவரை எவ்வித மாறுதலையுமடையாமல் பழைய நிலையிலேயே இருந்தது. கிராமங்கள் தோறும் திண்ணைப்பள்ளிக்கூடங்களே காணப்பட்டன. ஏடும் எழுத்தாணியும் அவர்களது எழுத்துப்பயிற்சிக்கு அமைந்த கருவிகள். இலக்கியம், இலக்கணம், நிகண்டு, கணிதம் ஆகியவையே பொதுவாக மாணுக்கர்கள் பயின்ற பாடங்கள். 1813-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நிலைமையில் சிறிது மாறுதல் காணப்பட்டது. சாதி சமய வேறுபாடுகளெல்லாம் இல்லாமல் எல்லாரும் பயிலுவதற்கென்று பல துவக்கப்பள்ளிக்கூடங்கள் அவ்வாண்டுமுதல் தோன்றலாயின. 1835-ஆம் ஆண்டு முதல் மெக்காலே பிரபுவின் ஆய்வுரையின்படி மேல்வகுப்புக்களில் ஆங்கிலப்பயிற்சிக்கான வசதியளிக்கப்பட்டது. 1854-ல் [1]சார்லஸ்வுட் என்பவரின் ஆய்வுரையின்படி மெக்காலேயின் கல்வித்திட்டம் ஒரு சிறிது மாற்றியமைக்கப்பட்டது. மெக்காலேயின் திட்டம் ஆங்கிலப் பயிற்சிக்கு மட்டுமே ஆதரவு தந்தது. சார்லசின் முயற்சி தாய்மொழிப் பயிற்சிக்கும் ஊக்கம் காட்டியது. துவக்கப் பள்ளிகள், உயர்தரப் பள்ளிகள், கல்லூரிகள் இவற்றை யமைத்துத் தேர்ந்த முறையில் கல்வியைப் பரப்புவதற்கு இவரது முயற்சி பெரிதும் ஊக்கமளித்தது. பல்கலைக் கழகமொன்று அமைக்க இவர் சொல்லிய ஆய்வுரை 1857-ல் நிறைவேற்றப்பட்டது. அந்த வருடம் சென்னையில் ஒரு

1. Charles Wood.

பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. 1884-ல் அமல் செய்யப்பட்ட தலசுயாட்சி முறையின்படி நகராண்மைக் கழகங்கள் தங்கள் நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கல்வித் துறைக்கெனச் செலவிடும்படி வற்புறுத்தப்பட்டன. துவக்கப் பள்ளிகள் மாவட்டக் கழகங்களின் பொறுப்பில் விடப்பட்டன.

நாளடைவில் சாதாரணக் கல்விப் பயிற்சிக்கென அமைக்கப்பட்ட பள்ளிகளைத் தவிரத் தொழிற்பயிற்சிக்கெனப் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றின. சட்டக் கல்லூரிகள், பொறிநுணுக்கக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் முதலியன, இவ்வகையில் முதன்மையானவை. அரசாங்க முயற்சி இத்துடன் நிற்கவில்லை. மாணுக்கர்களுக்காகச் செய்யப்பட்ட இவ்வசதிகளைத் தவிர சாதாரண மக்களும் பார்தது, படித்துப் பயன்பெறும்படி பொருட்காட்சிச்சாலைகளையும், நூல்நிலையங்களையும் அரசாங்கம் நிறுவியது. அவற்றுள் சென்னைப் பொருட்காட்சிச் சாலையும் சென்னை 'கன்னிமாரா' நூல்நிலையமும் முக்கியமானவை.

அரசாங்கம் செய்த ஏற்பாடுகளைத் தவிர தனிப்பட்டவர்களின் முயற்சியாலும் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்தது. தனிப்பட்ட ஆட்சியின்கீழ் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. இவ்வகையில் சொல்லரிய தொண்டாற்றியவர்கள் கிறித்துவ மதப் பாதிரிமார்கள் ஆவர். 1929-ல் செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாரின் ஆதரவில் நிறுவப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வித்துறையில் தனிப்பட்ட ஒருவர் ஆற்றியுள்ள பெருந்தொண்டிற்குத் தக்க சான்றாகும்.

பொருளியல் துறை

தமிழகத்தின் பெருந்தொழில் உழவுத்தொழில். உழவர்கள் இந்த நாட்டின் அச்சு எனப்படுவர். ஆகவே அரசாங்கத்தின் பெரும்பான்மையான வருவாய் முன்னுட்

களில் நிலவரியின் உருவத்திலேயே சேர்க்கப்பட்டது. இம்முறையில் தங்கள் வருமானத்தைப் பெருக்க நினைத்த ஆங்கிலேய அரசாங்கம் சில நிலவரிச் சீர்திருத்தங்களைச் செய்தது. அவை இருவகைப்படுவன: ஒன்று சமீன்தாரி முறை, இன்னொன்று ரயத்துவாரி முறை. முதலாவது முறைப்படி ஒரு குறிப்பிட்ட வருவாயைச் செலுத்த ஒப்புக்கொண்ட தனிநபர்களிடம் சில நிலப்பகுதிகள் ஒப்படைக்கப்பட்டன. அந்நிலப்பகுதிகளில் வரிவாங்கும் உரிமை அத்தனி நபர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் சமீன்தார்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆகவே, அம்முறையும் சமீன்தாரிமுறை என்று பெயர்பெற்றது. தமிழ்நாட்டில் சிற்சில பகுதிகளில் இம்முறை அமல் செய்யப்பட்டது. மற்றைய பகுதிகளில் ரயத்துவாரி முறை பின்பற்றப்பட்டது. அம்முறையின்படி நிலவரி நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டு, உழவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட வரியைத் துரைத்தனத்தாரிடம் நேரடியாகச் செலுத்தவேண்டியதாயிற்று. தமிழகத்தில் பெரும் பகுதிகள் இம்முறையின்கீழ் வந்தன.

வாணிகக்கூட்டத்தார் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வகைசெய்தார்களே ஒழிய உழவுத்தொழிலுக்கு ஆக்கம் தரும் எவ்வித முயற்சியையும் தங்கள் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளவில்லை. 1858-ல் பொறுப்பேற்ற முடியாட்சிகூட தனது [1]தலையிடாக் கொள்கை காரணமாக இத்துறையில் சிலகாலம் எதுவும்செய்யாமலே இருந்துவந்தது. அரசாங்கத்தின் இந்த அக்கறையின்மை காரணமாகத் தமிழகத்துமக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல பஞ்சங்களால் பீடிக்கப்பட்டுச் சொல்ல முடியாத அவதியுற்றனர். 1866-லும் 1876-லும் ஏற்பட்ட பஞ்சங்களால் தமிழகத்துமக்கள் ஆயிரக்கணக்கில் மாண்டு மடிந்தனர். ஏற்கனவே சீர்குலைந்து போயிருந்த உழவுத்தொழில் இதனால் செத்து மடியும் நிலையை யடைந்தது.

---

1. Laussez-faire.

பஞ்ச நீக்கத்திற்காகப் பல பஞ்சப் பாதுகாப்புக் குழுக்கள் அதன்பின் அமைக்கப்பட்டன. உழவுத்தொழிலை உயிர்ப்பிக்கும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. நீர்ப் பாசன வசதிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் மேட்டூர், பெரியாறு, பாபநாசம் ஆகிய நீர்த்தேக் கங்கள் முதன்மையானவை.

போக்குவரவுச் சாதனங்களின் பெருக்கம் ஆங்கிலேயர் காலத்திலேயே ஏற்பட்டது என்று சொல்லவேண்டும். முதன்முதலாகத் தமிழகத்தில் 1856-ல் அமைக்கப்பட்ட இருப்புப்பாதை சென்னையையும் அரக்கோணத்தையும் இணைத்தது. தபால் தந்தி வசதிகளும் அதைத் தொடர்ந்து செய்யப்பட்டன. பின்னர்ச் சாலைகளமைப்பதிலும் அரசாங் கம் முயற்சி எடுத்துக்கொண்டது. சென்னை, தூத்துக்குடி முதலிய துறைமுகங்களைச் செப்பனிடுவதில் துரைத்தனத் தார் காட்டிய ஊக்கம் கடற்போக்குவரத்திற்குப் பெரிதும் உதவியாக அமைந்தது.

ஆங்கிலேயராட்சியால் முன்னாட்களில் தமிழகத்தின் தொழில் முயற்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இயந்திரத் தினாலாக்கப்பட்ட பொருட்கள் 18-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பெருவாரியான அளவில் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டபோது தமிழ்நாட்டவரின் கைத் தொழில் வளர்ச்சி கருகியது. நாட்டுப்பற்றிலே பிறந்த சுதேசி இயக்கம் பின்னர்க் கைத்தொழில்களுக்குப் புத்துயி ரளித்ததென்றாலும் அரசாங்க ஆதரவு இந்நாட்டின் தொழில் நிலையங்களுக்குப் பின்னரே கிடைத்தது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழகமெங்கும் ஆலைகள் பல நிறுவப்பட்டன. பஞ்சாலைகள் இவற்றுள் முக்கிய மானவை. ஆலைத்தொழில் அதிகரித்தபோது தொழிலாளர் களின் குறைகளைத் தீர்ப்பதிலும் துரைத்தனத்தார் அக்கறை காட்டுவது இன்றியமையாததாயிற்று. தங்கள் குறைகள் கவனிக்கப்படாமல் போனபோது தொழிலாளர் கள் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டனர். தமிழ்நாட்டில்

உழைப்பாளிகளின் உரிமைப்போராட்டத்திற்கு அடிப்படை வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற தூத்துக்குடி "ஆர்வி ஆலை" வேலை நிறுத்தம்தான். இம்மண்ணில் முதன்முதலில் ஒழுங்கானமுறையில் நடைபெற்ற வேலைநிறுத்தம் அதுவேயாகும்.

தங்கள் குறைகளை அதிகாரிகள் அறிவதற்காகப் பின்னர்த் தொழிலாளர்கள் தனியானதோர் அமைப்பை நிறுவத்தலைப்பட்டனர். 1918-ல் சென்னையில் அவ் வகையில் "சென்னைத் தொழிலாளர் சங்கம்" என்றதோர் சங்கம் நிறுவப்பட்டது. அப்பணியில் பங்கு கொண்டவர்களுள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், குந்தி கேசவப் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமுதாயத் துறை

ஆங்கிலேயரது ஆளுகையின்கீழ் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்காலம் வாழ நேரிட்ட தமிழர்கள் சமுதாயத் துறையில் புரட்சிகரமானதோர் மாறுதலை யடைந்துள்ளனர் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் அரசாங்கத்தார் தேவையென்று கருதிச் செய்த சில சட்டங்கள் இந்நாட்டவர் தொன்றுதொட்டுப் பின்பற்றி வந்த சில சம்பிரதாயங்களை வழக்கிலிருந்து ஒழித்து விட்டன. இவ்வகையில் இயற்றப்பட்ட சட்டங்களுள் [1]இனத்தடைச் சட்டம் (1850) [2]ஒப்பு வயது மசோதா (1892) [3]சாரதாச் சட்டம் (1928) ஆகியவை முக்கியமானவை.

இந்துமத வழக்கப்படி அம் மதத்தைவிட்டு வேற்று மதத்தைத் தழுவியவர்கள் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டும் மரபுவழிச் சொத்திற்குத் தங்கள் உரிமையை இழந்தவர்களாகக் கருதப்பட்டும் வந்தனர் ஒருகாலத்தில். ஆகவே இந்த வழக்கத்தினால் பிற மதந் தழுவ மனங்

1. Caste Disabilities Act. 2. Age of Consent Bill.
3. Sarda Act.

கொள்பவர்களின் எண்ணிக்கை அருகியே காணப்பட்டது. 1850-ல் இயற்றப்பட்ட இனத்தடைச் சட்டம் பிறமதம் மாறிய இந்துக்கள் அவர்களது மரபுவழிச் சொத்தைப் பெறுவதற்கு உரிமைப்பட்டவர்களே என்ற நியதியை உணர்த்தியது. சமய நிலையைப் பாதித்த சட்டங்களுள் இது முக்கியமானது. 1856-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டம் இந்து விதவைகளின் மறுமணத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரித்தது. 1892-ல் செய்யப்பட்ட ஒப்புவயது மசோதா, பெண்களின் திருமண வயதைத் தீர்மானித்தது. பெண்கள் திருமணத்தின்போது குறைந்தது 12 வயதையாவது அடைந்திருக்கவேண்டும் என்பது அச்சட்டத்தின் சாரம். அதன் பின்னர் 1928-ல் அமுலுக்கு வந்த சாரதா சட்டம் மணம்செய்துகொள்ள விரும்பும் ஆண்மகன் 18 வயதையும் பெண்மகள் 14 வயதையும் எய்தியிருக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. வாழையடி வாழையாகச் சில வழிமுறைகளைப் பின்பற்றிவந்த நமது சமுதாயத்தை இச் சட்டங்கள் புதியதோர் பாதையில் திருப்பின. ஆலய நுழைவு, தீண்டாமை முதலியன பற்றிப் பின்னர் எழுந்த சட்டங்களும் இத்துறையில் முக்கியமானவையே. மக்களது புறவாழ்வை மாற்றியமைக்கச் சட்டங்கள் தோன்றிய காலத்தில் அவர்களது அகவாழ்வைப் பாதிக்கும்படியான சில இயக்கங்களும் தோன்றின. அத்தகைய இயக்கங்களுள் பிரம்மஞான சங்கம், சேவா சதன கழகம், அரிஜன சேவா சங்கம், திராவிடர் கழகம் ஆகியவை முக்கியமானவை.

அரசியல்துறை தல சுயாட்சிமுறை

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தமிழகத்தில் தல சுயாட்சிமுறை செயலுக்கு வந்தது என்றாலும், பரந்த அளவில் அம்முறை பிற்காலத்திலேயே பின்பற்றப்பட்டது. மேயோ பிரபுவின் ஆட்சிக்காலத்தில் நகராண்மைக் கழகங்கள் சில செயற்படத் துவங்கின. ஆனால், இவை அரசாங்க அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவையாகவே இருந்தன. அவற்றைக் கூடியவரை அரசாங்கச் சார்பிலிருந்து விலக்கி, ஒரு புதுநிலைக்குக் கொண்டு வந்தவர்

ரிப்பன் பிரபுவே. அவரது முயற்சியால் நகராண்மைக் கழகங்கள் பல புதிய அதிகாரங்களைப் பெற்றன. அவை சுகாதாரம், சாக்கடை நீக்கம், தண்ணீர் வசதி, துவக்கக் கல்வி முதலியவற்றைக் கவனிக்கலாயின. ரிப்பன் பிரபு ஆங்கிலேய முறையில் [1]மாவட்டக் கழகங்களையும் தாலூகாக் கழகங்களையும் நிறுவினர். அவற்றின் உறுப்பினர்கள் தேர்வுமுறையில் பொறுக்கப்பட்டார்கள். மாவட்டக் கழகங்கள் முக்கியமாகச் சாலைகளமைத்தல், சுகாதாரம், கல்வி முறை, பஞ்ச நிவாரணம் முதலியவற்றைக் கவனித்து நாட்டுமக்களுக்கு நல்லதோர் பணியைச் செய்தன.

ஆட்சிமுறை

ஆங்கிலேயரது காலத்தில் தமிழகம் ஒரு மாகாணம் என்ற அளவில் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட ஓர் ஆள்வாரின் ஆட்சியின்கீழ் அமைந்திருந்தது. அவரது உதவிக்கென ஒரு [2]நிர்வாகக் குழுவும் செயற்பட்டது. மாவட்டங்களில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். வரிவசூலித்தல், நியாயம் வழங்குதல், அமைதியை நிலைநாட்டுதல் ஆகிய பணிகளை அவர்கள் கவனித்துவந்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டிருந்த நீதிமன்றங்கள், அந்தந்த அலுவலர்களின் உதவியுடன் முறை செலுத்திவந்தன. மாவட்ட நீதிமன்றங்களின் முறையீடுகளை ஆய்வதற்காகச் சென்னையில் சதர் நீதிமன்றம் என்ற பெயரில் ஒரு நீதி மன்றம் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1874-ல் சென்னை இராசதானியில் ஒரு [3]பெரு நீதிமன்றம் நிறுவப்பட்டது. சென்னை மாகாண அரசாங்கத்தைப் பொறுத்தவரை அந்நாட்களில் அதன் நிர்வாகக் குழு நல்ல அதிகாரத்தை வகித்து வந்தது. நிர்வாகக் குழுவின் பெரும்பான்மை முடிவை எதிர்த்து மாகாணத்தின் ஆள்வாரோ அல்லது இந்திய நாட்டின் தலைமை அரசாங்கமோ எதுவும் செய்ய இயலாதவர்களாயிருந்தனர். எனவே, மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண ஆள்வாருக்கும்

1. District Board. 2. Executive Council. 3. Supreme Court.

முறையே 1786-லும் 1793-லும் சில புதிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. மத்திய அரசாங்கத்தையோ அல்லது மாகாணஆள்வாரையோ மீறி நிர்வாகக்குழு அதன்பின் தனது அதிகாரங்கொண்டு ஏதுவும் செய்ய முடியாது போயிற்று.

சட்டங்கள் செய்வதற்கு மாகாண அரசாங்கம் அனுபவித்துவந்த இந்த அதிகாரம் 1833-ல் பறிக்கப்பட்டது. அந்த வருடம்முதல் சட்டங்கள் இயற்றுதல் மத்திய அரசாங்கத்தின் தனியுரிமையாயிற்று. இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்தின் அரசியிடம் ஒப்படைக்கப் பட்ட பின்னர் சென்னைமாகாண அரசாங்கம் சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் மறுபடியும் அடைந்தது. 1861-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி சென்னை மாகாணத்தில் நியமன முறைப்பட்ட ஒரு சட்டசபை நிறுவப்பட்டது. அந்த வருடத்தில் செய்யப்பட்ட மற்றொரு சட்டத்தின்படி சென்னையில் பணி செய்துவந்த சதர் நீதி மன்றமும் பெரு நீதிமன்றமும் ஒன்று சேர்க்கப்பட்டு ஓர் [1]உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

அரசியலில் பங்கு கொள்ளவேண்டும் என்ற ஆர்வத் தீ நம்மவரை மெல்ல மெல்லப் பற்றத் துவங்கியது. அந்நிய ஆதிக்கத்திற்கு அழிவுதேடவேண்டும் என்ற ஆசைப்புயல் வீசியபோது, அந்தத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. எனவே, நாட்டை விடுதலைபெறச் செய்து அதில் உரிமை ஆட்சியை நிறுவுவதற்காகத் தேசிய மாசபை துரைத்தனத்தாரை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடத்தியபோது, அரசாங்கத்தின் அமைப்பில் சிறிது மாற்றம் செய்யப்பட்டது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை அதன் நிர்வாகக்குழு உறுப்பினரின் எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. மக்களின் விடுதலைவேட்கை இச்சிறு மாறுதல்களால் தணியவில்லை. மாறாக அது பெருகியது.

1. High Court.

எனவே, 1919-ல் அரசாங்கத்தார் மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தை ஆக்கித்தந்தனர். பொறுப்பான நிர்வாக உரிமை முதன்முதல் மாகாணங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றுகூறி, துரைத்தனத்தார் மாகாண அதிகாரங்களை இரு கூறாகப் பிரித்து, இவற்றுள் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களிலிருந்து ஆள்வார் அமைத்த அமைச்சரவைக்கும், மற்றொரு பகுதியை மாகாண நிர்வாகக் குழுவினரிடமும் ஈந்தது. அமைச்சரவையின் பொறுப்பில் தல சுயாட்சிமுறை, பொதுச் சுகாதாரம், கல்வி, பொது மராமத்து ஆகியவை விடப்பட்டன. இந்தச் சீர்திருத்தத்தையாவது தேசிய மா சபையினர் ஏற்பர் என்று துரைத்தனத்தார் எண்ணினார்கள். ஆனால், அவர்கள் ஏமாற்றமடைந்தார்கள்.

1916-ல் சென்னையில் டாக்டர். டி. எம். நாயர், வி. தியாகராசச் செட்டியார் ஆகியோரது முயற்சியில் உருப்பெற்ற தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எனும் [1]நியாயக்கட்சி இந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்தைக் கைப்பற்ற முனைந்தது. தேர்தலில் இலகுவில் வெற்றிபெற்ற அக்கட்சி சென்னை மாகாணத்தில் பனகல் அரசரின் தலைமையின்கீழ் 1920-ல் பதவி ஏற்றது. பனகல் அரசரின் அமைச்சரவை ஐந்தாண்டுகள் நிலைத்தது. அக்காலத்தில் அவர்கள் செய்த சீர்திருத்தங்களுள் சில: [2]அறநிலையப் பாதுகாப்புச்சட்டம் (1925) [2]சென்னை மாகாண நகராண்மைக் கழகச் சட்டம் (1920) ஆகிய இவை குறிப்பிடத்தக்கவை. பார்ப்பனரல்லாதாரின் நலம் பேணுவதற்கெனத் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் சார்பில் அமைந்த இந்த அமைச்சரவை கல்வித்துறையிலும் அரசாங்க அலுவல்களிலும் பார்ப்பனரல்லாதாருக்கு அவர்களது உரிமைகளையளிப்பதில் ஊக்கம் காட்டியது என்பது பிறர் சொல்லி நாமறிய வேண்டுவதன்று. தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பனகல் அரசரின் அமைச்சரவை செய்த சேவை பாராட்டற்குரியது.

---

1. Justice Party. 2. Hindu Religious Endowments Act.
2. Madras District Municipalities Act.

பனகல் அரசரின் அமைச்சரவைக்குப் பின்னர் டாக்டர் சுப்பராயன் தலைமையில் கட்சிச் சார்பற்ற ஒரு அமைச்சரவை சுமார் ஈராண்டுகள் பதவி வகித்தது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை இந்தியா எவ்வாறு பயன்படுத்தியுள்ளது, அதைத் தொடர்ந்து இன்னும் என்ன செய்வதென்றறிய இங்கிலாந்து அனுப்பி வைத்த சைமன் குழு இந்தச் சமயம் சென்னை வந்தது.

சுப்பராயனின் அமைச்சரவைக்குப் பின்னர்ச் சுமார் ஈராண்டுக்காலம் நியாயக்கட்சியின் சார்பில் முனிசாமி நாயுடு பதவி வகித்தார். அதன்பின்னர் நான்கு ஆண்டுகள் பொப்பிலி அரசரின் தலைமையில் நியாயக்கட்சி ஆளுகை செலுத்தியது. அவரது ஆட்சிக்காலத்தில் தாலுகாக் கழகங்கள் அவற்றின் பண நெருக்கடி காரணமாக ஒழிக்கப்பட்டன. சைமன்குழு இந்தியா வந்து போனபின்னர் இங்கிலாந்து ஒரு [1]வெள்ளை முடங்கலை வெளியிட்டது. அதன்பின் இருமுறை வட்டமேசை மாநாடுகள் கூட்டப்பட்டன. இரண்டாவதுமுறை மாநாடு கூடுவதற்குள் காந்தி - இர்வின் உடன்பாடு ஏற்பட்டதால் அம்மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். அம்மாநாட்டின் பயனாக இந்திய அரசியல் சீர்திருத்தம் (1935) சட்டமாக நிறைவேறியது. அச்சட்டம் ஒருவித மாகாண சுயாட்சியை வழங்கியது. அதன்படி சென்னை மாகாணத்தில் மேல்சபை எனவும் கீழ்சபை எனவும் இரண்டு சட்டசபைகள் நிறுவப்பட்டன. கீழ்சபை உறுப்பினர்களனைவரும் தேர்வு முறைப்படி பொதுமக்களால் பொறுக்கப்பட்டனர். மேல்சபையில் சில இடங்களுக்கு ஆள்வார் உரியவரை நியமித்தார். ஒரு பகுதியைப்பற்றிய எல்லா அதிகாரங்களும் இச்சட்டத்தின்படி ஒரு மாகாணத்திற்கு வழங்கப்பட்டதால், ஒருவித சுயாட்சியை இச் சட்டம் வழங்கியது என்று சொல்லலாம்.

1937-ல் புதிய அரசியல் சீர்திருத்தத்தையொட்டி சென்னை மாகாணத்தில் தேர்தல் நடைபெற்றது. அதில்

1. White Paper.

தேசீய மாசபையினர் வெற்றிபெற்றனர். ஆனால், ஆள்வாருடைய தனிப்பட்ட அதிகாரம் அமைச்சர்களை அலுவல் மேற்கொள்ளாது தடுக்கக்கூடியதாயிருந்ததால், ஆட்சிப் பொறுப்பை ஏற்பதா வேண்டாமா எனத் தேசீய மாசபையினர் தயங்கினர். பின்னர் ஆள்வாருடைய அந்த நச்சுப் பல் கடிப்பதற்கு உதவாது என்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டு சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் சென்னை முதலமைச்சரானார். அவரது ஆட்சிக்காலத்தில் அவர் சிறப்பான சில சீர்திருத்தங்களைச்செய்து முடித்துப் பிற மாகாணங்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆண்டவனைக் காணமுடியாமல் தடுக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். நாட்டில் அட்டகாசம் செய்து கொண்டிருந்த கள் அரக்கனை ஆழக் குழிதோண்டி அதனடியில் புதைத்தார். அவனோடு போய்விட்ட அரசாங்கத்தின் வருவாயை மீட்பதற்கு விற்பனைவரி என்னும் ஆயுதத்தைக் கண்டுபிடித்தார். இந்நாட்டின் உயிர்நாடியான உழவர்களின் முதுகெலும்பு ஒடியும்படி அவர்களை அழுத்திக்கொண்டிருந்த கடன் சுமையைக் கடன் நிவாரணச் சட்டத்தின்மூலம் அகற்றி அவர்களை நெஞ்சு தூக்கி நிமிர்ந்து நிற்கச்செய்தார். இவ்வளவையும் செய்த அவர் இரண்டரை ஆண்டுகளே பதவியிலிருந்தார். தேசீய மாசபையின் கட்டளைக்கிணங்க 1939-ல் பதவியைத் துறந்தார்.

அதன்பின்னர் ஆலோசகர் அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ்ச் சென்னை மாகாணம் வந்தது. 1946 வரை ஆலோசகர் அரசாங்கம் நீடித்திருந்தது. ஆட்சிப் பொறுப்பை இந்தியரிடம் ஒப்படைத்துவிட்டு வெளிபேறிவிட வெள்ளையர் இணங்கியதின்பேரில் தேசீய மாசபையினர் இடைக்கால் அரசாங்கம் அமைக்கச் சம்மதித்தனர். அதேசமயம் சென்னை மாகாணத்தில் ஆந்திரத் தலைவர் பிரகாசம் தலைமையில் ஓர் அமைச்சரவை பதவி ஏற்றது. இந்த நாட்டின் விடுதலைச்சங்கு முழங்கியவரை அந்த அமைச்சரவை ஆளுகை நடத்தியது.

இலக்கிய மறுமலர்ச்சி

நாடறிந்த தமிழின் புகழ் உலகறியப் பரவியது தமிழ் நாட்டிற்கு ஆங்கிலேயர் வந்தபின்னர்த்தான் எனலாம். அவர்கள் காலத்தில், தமிழ் இலக்கியங்கள் பல பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. பிற நூல்கள் பல தமிழ் மொழியில் ஆக்கப்பட்டன. பிறமொழி வல்லுநர்களாலும் தமிழ்மொழி அறிஞர்களாலும், செந்தமிழில் கவிதைகளும் காவியங்களும் இயற்றப்பட்டன. முதன்முறையாக உரை நடை நூற்கள் நாடகநூற்கள் நவீனங்கள் முதலியன தமிழ்மொழியில் எழுதப்பட்டன. அச்சுப்பொறியின் தோற்றத்தின்பின்னரே பழைய நூற்கள் பல புதிய புத்தகங்களாக அச்சிட்டு வெளியிடப்பட்டன. மக்களின் அன்றாட அறிவை வளர்க்கும் செய்தித்தாள்களும் நடமாடத் துவங்கின. எனவே, இக்காலத்தைத் தமிழின் மறுமலர்ச்சிக்காலம் என்று கூறுவது சிறப்பாகப் பொருந்தும்.

தமிழ்வளர்த்த பிறநாட்டார்களுள் கிறித்துவ மதப் பாதிரிமார்கள் முக்கியமானவர்கள். தந்நலம் துறந்து, தங்கள் உற்றார் உறவினரை மறந்து, தொலைதூரத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த இவர்கள் இடர்களையும் இன்னல்களையும் பொருட்படுத்தாமல் இடையறாது உழைத்துவந்தார்கள். அகவிருளை நீக்க அறிவொளி வேண்டும் என்பதை நன்குணர்ந்து, தமிழ்நாட்டிலே பல கல்விநிலையங்களை இவர்கள் அமைத்தார்கள். பொதுக் கல்வியைமட்டும் வளர்க்கும் முயற்சியுடன் இப்பாதிரிகள் நின்றுவிடாமல், தமிழ்மொழியைப் போற்றுதலிலும் மிக்க ஊக்கம் காட்டினார்கள். தமிழ் கிறித்துசமயப் பாதிரிகளுள் வீரமாமுனிவர், போப் ஐயர், அறிஞர் கால்டுவெல் ஆகியோர் தனியாகக் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவராவர். தம் வாழ்நாளில் பல்லாண்டுகளைத் தமிழகத்திற்கழித்த வீரமாமுனிவர், 1724-ல் தேம்பாவணி எனும் அரியநூலை இயற்றித்தந்தார். அவர் எழுதிய வேதியர் ஒழுக்கமும், அவிவேக பூரணகுரு கதையும் உரை நடை நூல்களின் முன்னோடிகள். சதுரகராதியை அவர் இயற்றித்தந்து தமிழுக்குத் தனியானதோர் பணியைச்

செய்துமுடித்தார். போப் ஐயர் திருக்குறள், நாலடியார் போன்ற நீதிநூல்களைப் பிறநாட்டினரும் அறியும்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அறிஞர் கால்டுவெல் தமிழ் மொழியையும் பிற திராவிடமொழிகளையும் கற்றுத்தேர்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் ஒன்றை எழுதி முடித்தார். விவிலியம் போன்ற கிறித்துவநூல்களை வேறு சில பாதிரிமார்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஆக்கினார்கள். மற்றும் சிலர் பழைய முறையிலிருந்து வேறுபட்டு இலக்கணநூல் முதலியவற்றைப் புதிதாக எழுதினார்கள்.

[illegible] அறிவெனும் நீர் காட்டாற்று வெள்ளம்போலக் கரைபுரண்டோடுவதற்கு முக்கிய காரணமான கண்டுபிடிப்பு அச்சுப்பொறி யுதவியாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இம் மாயவித்தையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்திற்குக் கொண்டு வந்த கிறித்துவப் பாதிரிமார்கள், தமிழுலகத்திற்கே ஒரு பேருதவியைச் செய்தவராவார்கள். அச்சுப்பொறி தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டவுடன் பெரியோர் பலர் ஏட்டுச்சுவடிகளிலிருந்த தமிழ்நாட்டுப் பண்டைப் பெருநூல்களை அவை இறந்துபடாதபடி புதிய நூல்களாக இயற்றிக் காத்தனர். வித்துவான் தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர், மழவை மகாலிங்கையர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலானவர்கள் இத்துறையில் துவக்கத்தில் ஊக்கங்காட்டிய பெரியோர்களாவர். திருக்குறள், நாலடியார், தாயுமானசுவாமிகள் பாடல், திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர புராணம், கம்பராமாயணம், பாரதம், நைடதம், சூடாமணி நிகண்டு, திவாகரம், நன்னூல் முதலியன பதிப்பிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறந்து விளங்கிய பதிப்பாசிரியர்களுள் ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, மகா மகோபாத்தியாய சாமிநாதையர் ஆகியோர் முதன்மையானவர்கள். சைவ சமய நூற்களையும், புராணங்களையும் அச்சிட்டு வெளியிடுதலில் ஆறுமுக நாவலர் அக்கறை காட்டினார். தொல்காப்

பியம், கலித்தொகை, சூளாமணி ஆகியவற்றைப் பதிப்பதில் தாமோதரம் பிள்ளை ஆர்வம் செலுத்தினர். மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் சங்கநூற்களையும், இலக்கணங்களையும், ஐம்பெருங் காப்பியங்களையும் புராணங்களையும், பிரபந்தங்களையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப்பித்துத் தமிழுலகத்திற்குப் பெரியதோர் சேவையைச் செய்துமுடித்தார்.

19-ஆம் நூற்றாண்டில் புதுநூல்கள் இயற்றியவர்களுள் பெரும்பாலோர், பழைய முறைப்படியே தங்கள் நூற்களை அமைத்தனர். அவர்களுள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், சோதி இராமலிங்க வள்ளலாரும் முதன்மையானவர்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பல தலபுராணங்களையும், அந்தாதிகளையும், பிள்ளைத்தமிழ்களையும், மாலைகளையும் இயற்றினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்களுள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஒருவர். சோதி இராமலிங்க வள்ளலார் தேவார முறையைப் பின்பற்றிப் பல அருட்பாக்களைச் செய்தருளினர். 1894-ல் கிருஷ்ண பிள்ளை என்பவர் "இரட்சணிய யாத்திரிகம்" என்ற கிறித்துவ காவியத்தை இயற்றினர். ஆங்கிலத்தில் [1]ஜான் பன்யன் இயற்றிய [2]பில்கிரிம்ஸ் புரோக்ரஸ் என்ற நூலின் தழுவல் இக்காவியம். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த நூலாசிரியர்களுள் முன்சீபு வேதநாயகம் பிள்ளை, இராஜம் ஐயர், சூரிய நாராயண சாத்திரியார், மாதவையர் ஆகியோர் உரைநடையில் கற்பனைக் கதைகள் புனைந்தவகையில் தனிச்சிறப்புப்பெறுகின்றனர். வேதநாயகம் பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரம் என்ற அற்புத நவீனத்தை எழுதினர். கமலாம்பாள் என்ற கற்பனைக்கதையை இராஜம் ஐயர் இயற்றினர். மதிவாணன் என்ற வியப்பிற்குரிய நிகழ்ச்சிக் கதையை சூரியநாராயண சாத்திரியார் ஆக்கினர். பத்மாவதி சரித்திரத்தை மாதவையர் எழுதினர். அரசாங்கத்தின் ஆதரவினாலும், பொதுக் கல்வியின் இயல்பினாலும்

---

1. John Bunyan. 2. Pilgrim's Progress.

கிறித்துவ சமயத்தாரின் தூண்டுதலினாலும் உரைநடை நூல்கள் சென்ற நூற்றாண்டில் பெருகின. தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உரைநடை நூல்கள் இன்றியமையாதன என்ற கருத்து வலுப்பெறவும், இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் முதலிய நூற்கள் உரைநடையில் தோன்ற லாயின. பின்னர் அரிச்சந்திரன் கதை, நளன் கதை முதலிய செவிவழிக்கேட்ட கதைகளும், பஞ்சதந்திரக் கதைகளும் உரைநடையில் வெளிவந்தன.

அச்சுப்பொறியின் எழுச்சிக்குப்பின்னர்த் தமிழகத்தில் பல்வகைப்பட்ட செய்தித்தாள்கள் உலாவத் துவங்கின. அன்றாடச் செய்திகளைத்தரும் நாளிதழ்களையும், கலை இலக்கியம் விஞ்ஞானம் முதலிய பொருள்பற்றிக் கட்டுரை களைத் தாங்கிவந்த மாதஇதழ்களையும் இந்த நூற்றாண்டு முதல் மக்கள் நாடிப் படிக்கலாயினர். முதன்முதலில் தோன்றிய செய்தித்தாட்களுள் முதன்மையானது தின வர்த்தமானியாகும். சென்னையிலிருந்து 1856-ல் வாரஇதழாக வெளிவந்தது. மாதஇதழாக வந்த இதழ்களுள் சென்னைக் கல்வி இலாகாவினர் 1870 முதல் வெளியிட்ட ஜன விநோதினி முதன்மையானதாகும். பின்னர் நாள், வார, மாதஇதழ்களாகப் பல செய்தித்தாள்கள் முளைத்தன. உணர்ச்சி பெருகிய காலத்தும் மேலைநாடுகளிலே போர்கள் நிகழ்ந்த காலத்தும் இச் செய்தித்தாட்களின் பயன் மக்க ளால் வெகுவாக உணரப்பட்டது.

மக்கள் கற்றறிந்து பயன் பெறும்வகையில் நாம் இது வரை கண்ட இலக்கியங்கள் உதவின. கண்டறிவதால், கேட்டறிவதால் மக்களுக்குப் பயன் நல்கும் இலக்கியங் களையும் படைத்த பெருமை பத்தொன்பதாம் நூற்றாண் டின் தனியுரிமையாகும். பாமர மக்கள் கேட்டுப் பயன் துய்த்தற்குரிய எளிய இனிய 'கீர்த்தனைகள்' இந்நூற் றாண்டில் இயற்றப்பட்டன. அவைகளுள் சிறப்பானதோர் இடத்தை வகிப்பது கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையாகும். பொதுவாக இவை 'கதா காலட்சேபங்களி'லேயே பாடப்பட்டுவந்தன.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலும், இடைப் பகுதியிலும் நாடகங்கள் சில எழுதப்பட்டன. அவற்றுள் சில படித்துப் பயன் துய்ப்பதற்காகவே எழுதப்பட்டன. பேராசிரியர் சுந்நரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணீயம்' எனும் இலக்கிய நாடகம் இவ்வகையில் அமைந்ததாகும். இந்நாடகம் ஆங்கிலக் கதையொன்றின் தழுவல். வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் பின்னர் எழுதிய 'ரூபாவதி,' 'கலாவதி' ஆகிய நாடகங்கள் ஆங்கிலமுறையும் வடமொழி முறையும் கலந்து எழுதப்பட்டவை. இவை நடிக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை என்று கூறமுடியாது. அரங்கு ஏறி ஆடப்பட்ட சில நாடகங்களும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றின. இவ்வகையான நாடகங்களில் முக்கியமானவை சகுந்தலை விலாசம், பாரத விலாசம், அரிச்சந்திர நாடகம், சாவித்திரி நாடகம் ஆகியவையாகும். முதலிரண்டு நாடகங்களை இராமச்சந்திரக் கவிராயரும், அடுத்த நாடகத்தை ரங்கப்பிள்ளையும், கடைசி நாடகத்தைக் கோவிந்தசாமிராவும் முறையே இயற்றினார்கள். இந்நாடகங்கள் பாட்டுருவத்திலேயே அமையப் பெற்று நடிக்கப்பட்டதால் பொதுமக்களின் பேராதரவைப் பெற்றன. இக்காலத்தில் தோன்றிய மொழிபெயர்ப்பு நாடகங்களுள், 1870-ல் கள்ளபிரான் பிள்ளை ஆக்கிய 'வெனிஸ் வர்த்தகன்' எனும் நாடகம் குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற நூற்றாண்டில் வேறு புதிய துறைகளிலும் சில சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மொழி இயல் பற்றிய முயற்சியைத் துவக்கி வைத்து அப்பெருமைக்குப் பாத்திரமானவர், சேஷகிரி சாத்திரியாராவார். அகராதி வெளியிடும் முயற்சியை மேற்கொண்டவர்களுள் ராட்லரும் வின்ஸ்லோவும் பாராட்டிற் குரியவர்களாகின்றார்கள். தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றை இயற்றி 1862-ல் வின்ஸ்லோ வெளியிட்டார். சிறந்த முறையில் அமையப் பெற்ற அகராதிகளுள் அதுவும் ஒன்று.

பாரதியுகம்

தமிழிலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்நூற்றூண்டைப் பாரதியுகம் என்று சொல்வது மிகையாகாது எனக் கருதுகின்றேன். இந்நூற்றூண்டின் துவக்கத்தில் மக்களின் மனத்திலே எழுந்த நாட்டுப்பற்றெனும் சுடருக்கு நெய்யிட்டுத் தூண்டியவர் சுப்பிரமணிய பாரதியாராவார். நமது விடுதலைப் பாதையை அமைத்துத் தந்த தேசபக்தர்களுள் பாரதியும் ஒருவர் என்று சொல்வது சிறப்பாகப் பொருந்தும். பாரதி வருங்காலமுணர்ந்த ஒரு வரகவி; தேச விடுதலைக்கு முன்னரே "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே" என்று பள்ளுப் பாடியவரல்லவா அவர்?

நாட்டு விடுதலைக்காகப் பாடியதோடு நின்றுவிடாமல், தொழில்வளர்ச்சி, பெண்கள்முன்னேற்றம், சமத்துவ உணர்ச்சி, தமிழ்வளர்ச்சி ஆகிய பல பொருட்கள்பற்றியும் பாரதியார் பாடினுர். ஆகவேதான், பொதுமக்கள் அவரை ஒரு 'புரட்சிக் கவிஞர்' என்று போற்றுகின்றூர்கள். அவர் செய்த இலக்கியங்களுள் பாஞ்சாலியின் சபதம் முதன்மையானதாகும். கவிதை இயற்றியதோடு பாரதி நல்ல கட்டுரைகளையும் இயற்றினுர்.

பாரதி துவக்கிவைத்த இந்தப் புது யுகத்தில் பாட்டுப் பாடி நமது பாராட்டைப் பெறும் வேறு கவிகள் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, பாரதிதாசன், நாமக்கல்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை ஆகியோராவர். தேசிகவிநாயகம் பிள்ளை தேர்ந்த புலவர். எளிய நடையில் எல்லோரும் படித்துப் பயன் துய்க்கும் வண்ணம் அவர் பல பாட்டுக்கள் இயற்றியுள்ளார். பாரசீகக் கவி உமர்கய்யாமின் பாடல்களை அவர் தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். அவருடைய தனிப் பாடல்கள் 'மலரும் மாலையும்' என்ற தொகுப்பில் வெளிவந்துள்ளன. பாரதிதாசன், பாரதியாரின் மரபைச் சேர்ந்தவர். அவரது பெயரே இவ் உண்மையை விளக்கும். சமுதாய மறுமலர்ச்சியை மனத்திற்

கொண்டு இவர் இயற்றியுள்ள கவிதைகள் பல. இவை தவிர இலக்கிய நயம் தோன்ற இவர் சில சிறு நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் 'பாண்டியன் பரிசு' குறிப்பிடத்தக்கது. நாமக்கல் கவிஞரின் கவிதைகள் நாட்டுப் பற்றில் ஊறியவை. எளிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும் அவற்றில் இத்தன்மையை நாம் எளிதில் உணரலாம். கவிதைகள் பல இயற்றியதோடு இக்கவிஞர் சில உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள நவீனங்களுள் 'மலைக்கள்ளன்' குறிப்பிடத் தக்கது. உரைநடை நூற்கள் பல இந்த நூற்றாண்டில் சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளன. உரைநடை நூல்களின் எண்ணிக்கை அவற்றின் ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மொழி பெயர்ப்புத் துறையிலும் இந்நாட்களில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது.

இந் நூற்றாண்டில் நடிப்பதற்கேற்ற நல்ல நாடகங்களை இயற்றி நமது பெரும் மதிப்புரைக்கு உரியவராகும் பெரியார் பம்மல் சம்பந்தமுதலியாராவர். அறுபதுக்கு மேற்பட்ட நாடகங்களின் ஆசிரியரான அவர் தமிழ்நாட்டின் நாடக வளர்ச்சிக்குப் பெரிய தொண்டாற்றியவராவர்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பத்திரிகைத் தொழில் இந்த நூற்றாண்டில் செழித்து வளர்ந்துள்ளது. அரசியல் கட்சிகள் சார்பிலும் அமைப்புக்களின் கொள்கையை விளக்கியும் பொழுதுபோக்குக்காகவும் இந்நாளில் வெளியாகும் பத்திரிகைகள் பல. பொழுதுபோக்கிற்கு உதவும் சஞ்சிகைகள் சிறுகதை இலக்கியத்தை வளர்ப்பதில் சிறப்பான பணியைச் செய்கின்றன.

விடுதலைப் போரில் தமிழகம்

1884-ம் ஆண்டு இறுதியில் சென்னை பிரம்மஞான சங்கக் கூட்டத்திற்காக இந்தியாவின் பல்வேறிடங்களிலிருந்து வந்திருந்த சிலர் திவான் பகதூர், இரகுநாத ராவ்

வீட்டில் கூடியிருந்தனர். தங்கள் கடமை முடிந்து கலைப் பாறிய அவர்கள் அகில இந்தியாவிற்குத் தேவையான ஒரு பெரும் அரசியலமைப்பைப்பற்றி ஆராய்ந்தனர். அந்த ஆராய்வின் முடிவு ஏறத்தாழ ஓராண்டுக் காலத்திற்குப் பின்னர்ப் பம்பாய்நகரில் 1885 டிசம்பர்த் திங்கள் 28-ஆம் நாள் [1] இந்திய நேசீய மாசபையாக மலர்ந்தது. அன்று கூடியிருந்த தேசபக்தர்கள் இந்நாட்டு விடுதலையைப்பற்றித் தங்கள் கற்பனையில்கூடக் கண்டாரில்லை. தாங்கள் கூடும் சமயமெல்லாம் அரசவாழ்த்தைப் பாட மறக்காத அவர்கள் காருண்ய துரைத்தனத்தாருக்குத் தங்கள் குறைகளை யெடுத்துரைப்பதிலும், அரசாங்க அலுவல்களில் பங்கு கேட்டு வேண்டுகோள் விடுப்பதிலுமே தங்கள் பொழுதைப் போக்கினர். நமக்கு இனி வேண்டியது உரிமை நாடே. போரிட்டேனும் அதை நாம் பெறுவோம் என 1906-ல் தாதாபாய் நவுரோஜி முழங்கிய பின்னரே மாசபைக்குப் புத்துயிர் வந்தது. அது ஒரு புதுப் பாதையில் சென்றது. வடநாட்டில் கல்கத்தாவிலே தாதாபாய் போர்க் குரலெழுப்பிய அதே நேரத்தில் தமிழகத்தில் தூத்துக்குடியில் அதன் எதிரொலி கேட்டது. 'கப்பலேறுவாயோ, அடிமை, கடலைத் தாண்டுவாயோ' என்று தன்னிடம் கேட்ட வெள்ளை விஞ்ச் துரையிடம் 'சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம். இனி யஞ்சிடோம்' என வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிற்குரலெழுப்பியதே அந்த எதிரொலி. வாணிகஞ் செய்யவந்த வெள்ளையர் இந்நாட்டின் வளத்தைச் சுரண்டுவதைக் காண மனம் பொறுக்கவில்லை வீரர் சிதம்பரம் பிள்ளையால். எனவே தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல்வாணிகக்கூட்டத்தைத் துவக்கி வெள்ளை வாணிகக் கூட்டத்தின் செல்வாக்கைச் சீரழிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

அக் காலத்தில் தேசப்பணியில் ஈடுபட்டவர்கள் இரு பிரிவினராய் நின்றனர். பாலகங்காதர திலகர், விபின சந்திர பாலர், அரவிந்த கோஷ் முதலியோர் தீவிரவாதிகளாகக்

1. Indian National Congress.

கருதப்பட்டனர். மேத்தா, இராஷ்பிகாரி கோஷ், கோகலே ஆகியவர்கள் மிதவாதிகளெனக் கொள்ளப்பட்டனர். தீவிர வாதிகள், "ஆங்கிலத் தொடர்பற்ற அரசுரிமையே வேண்டும்; அதுவும் உடனடியாக வேண்டும்," என்று ஆரவாரித்தனர். மிதவாதிகள், "ஆங்கிலத் தொடர்பற்ற அரசுரிமையா? அதுவும், உடனடியாகவா?" என்று அலறினர். தீரர் சிதம்பரம் பிள்ளைக்குத் திலகரின் தீவிரவாதம் சிறந்ததெனப் பட்டது. எனவே, அவர் தென்னுடு முழுவதும் திலகரின் முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பினுர். 'சுதந்தரம் நமது பிறப்புரிமை' என்று முழங்கினுர். அவ்வகையில், அச்சமயம் அவருக்குத் தமிழ்நாட்டில் துணைநின்றவர்கள் சுப்பிரமணிய பாரதியும், சுப்பிரமணிய சிவாவுமாவர்.

இம்மென்ருல் சிறைவாசம், ஏனென்ருல் வனவாசம் என்றிருந்த அந்நாளில் சிதம்பரம் பிள்ளை செய்த பிரசாரம் போற்றத்தக்கது. ஊர் ஊராகச் சென்று வெறி கொண்ட வெள்ளைய அரசாங்கம் இழைத்த கொடுமைகளையும் அநீதிகளையும் அவர் மக்களுக்கு எடுத்துச் சொன்னதன் காரணமாய் ஆங்கிலேய அரசாங்கம் அவர்மீது தன் பருந்துக்கண்களைப் பாய்ச்சியது. எப்பொழுது அவரைக் கொத்திக் கொண்டுபோய் சிறைக்குள் தள்ளலாம் என்று வாய்ப்பு நோக்கிக் காத்திருந்தனர் வஞ்சக வெள்ளையர். அவர்கள் எதிர்நோக்கியிருந்த வாய்ப்பு அவர்களுக்கு விரைவில் கிடைத்தது.

அடக்குமுறை ஆட்சியின் வாய்ப்பூட்டுச் சட்டத்தை மீறி விபின சந்திரபாலரின் விடுதலைத் திருநாளன்று திருநெல்வேலியில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிதம்பரம்பிள்ளை பேசினுர். அவ்வளவுதான்; அந்தப் பேச்சு அரசியல் குற்றத்தின் பாற்பட்டது என்று குற்றம் சாட்டி, கருணைமிக்க துரைத்தனத்தார் அவருக்கு இருபதாண்டுகள் சிறைத்தண்டனை விதித்தனர். அவரைத் தொடர்ந்து சுப்பிரமணிய சிவாவும் சிறையிலடைக்கப் பட்டார். சுப்பிரமணிய பாரதியார் உள்ளிட்ட சிலர் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்கள். எல்லாரும் தேசபக்தர்

இந்நாளில். எனவே, எத்தனையோ சிறைவாசம் இனி தாய்க் காண்பார். ஆனால் சொல்லாலும் எழுத்தாலும் விளக்கவொண்ணாத துன்பமெல்லாம் சிறைவாசம் அந்நாளில். ஆகவே, சிதம்பரம்பிள்ளையும் பிறரும் சிறையிற் பட்ட இன்னல்களை விளக்குவதானால் 'கல்மனத்தவரும் கண்ணீர்கொட்டிக் கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார்', என்று கவிஞர் கூறுவது போல்தான் ஆகும். சிதம்பரம் பிள்ளை சிறையில்பட்ட துன்பத்தை யறிந்த பாரதியார் "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ" என்று உள்ளம் வெதும்பிப் பாடினார். இவற்றையெல்லா மறிந்த தமிழகத்து இளஞ்சிங்கங்கள் அதன் பின்னரும் வாளாவிருக்கவில்லை. அவர்கள் வெறியர்களாக மாறினார்கள். வெடிகுண்டு தாங்கினார்கள். இதன் விளைவாகத் தூத்துக்குடியில் வாழ்ந்த ஆங்கிலேயர் எந்த நேரத்தில் தங்கள் உயிருக்கு உலைவைக்கப்படுமோ என்று ஏக்கங்கொண்டனர். சிதம்பரம்பிள்ளை சிறையினுள் செக்கிழுக்கின்றார் என்ற துயரச்செய்தியை வாஞ்சி எனும் இளைஞனால் தாழமுடியவில்லை. சிதம்பரம் பிள்ளையைச் சிறைப்படுத்தக் காரணமாயிருந்த திருநெல்வேலி மாவட்ட அதிகாரி ஆஷ் துரையை மணியாச்சியில் சுட்டுக்கொன்று வாஞ்சி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான்; அஃதோடு சிதம்பரம்பிள்ளை மீது தனக்கிருந்த பேரன்பையும் வாஞ்சி இவ்வையகத்திற்குத் தெரிவித்துக் கொண்டான்.

துரைத்தனத்தாரின் கருணையால் சிறைத்தண்டனை முடியு முன்னரே 1912-ல் விடுதலை பெற்று வெளியேவந்த சிதம்பரம்பிள்ளையை மகிழ்ச்சியுடன் வரவேற்றவர் அவருடைய நண்பர் சுப்பிரமணிய சிவா ஒருவர்தான். 1920-ல் கல்கத்தாவிற் கூடிய மாசபைக்குச் சிதம்பரம்பிள்ளை சென்றிருந்தார். காந்தியடிகள் அரசியல் உலகில் செல்வாக்குப் பெறத்துவங்கிய காலம் அது. காந்தியடிகளின் போக்கு சிதம்பரம்பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. எனவே, கருத்து

வேற்றுமை காரணமாய் அவர் அரசியல் வாழ்விலிருந்து விலகிக் கொண்டார்.

தமிழகத்தில் நடந்த விடுதலைப்போரின் அடுத்த கட்டம் ஐரிஷ் மாது அன்னிபெசன்ட் அம்மையார் துவக்கி வைத்த [1]சுய ஆட்சி இயக்கமாகும். 1914-ல் சென்னையில் கூடிய மாசபையில் சுய ஆட்சித் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி மக்களுக்கு எழுச்சியூட்டினார். "காமன்வீல்" "நியூ இந்தியா" என்ற இரண்டு பத்திரிகைகளாலும், சுய ஆட்சிச் சங்கத்தாலும், பிறவகையாலும் இந்நாட்டு விடுதலையை விரும்பிச் செய்த பெருங் கிளர்ச்சி சொல்லுந் தரமன்று. அவரது பெருமுயற்சியின் பயனாய்ப் பம்பாயில் கூடிய முப்பதாவது மாசபையில் மிதவாதக் கொள்கை வீழ்ந்தது. தீவிரக்கொள்கை மீண்டும் எழுந்தது. அன்னி பெசன்ட் அம்மையாரின் அறக்கிளர்ச்சி ஆங்கிலேயர் ஆட்சியைக் கதிகலங்கவைத்து விட்டது. ஆகவே, 1917-ஜூனின் மத்தியில் அன்னிபெசன்ட் அம்மையாரை சென்னை அரசாங்கம் [1]காப்பில் வைத்தது.

அக்காலத்தில் சென்னை உயர்மன்ற நீதிபதியாயிருந்து ஓய்வு பெற்றுவந்த டாக்டர் சுப்பிரமணிய ஐயர் ஒரு வியக்கத்தக்க செயலைத் தமது பழுத்த பருவத்தில் செய்து முடித்தார். அவர் மறுபடியும் இளைஞரானார். தேசபக்தி கொண்ட அவர் சொல்லரிய தொண்டாற்றினார். அந்நாளில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த வில்சனுக்கு ஒரு முடங்கல் தீட்டி மூன்று மாதங்களுக்குள் அம்மையாரின் விடுதலையை ஆற்றித்தந்தார். தமது விடுதலைக்குப் பின்னரும் அன்னிபெசன்ட் அம்மையார் விடுதலைப்போரில் பணிசெய்து வந்தார்.

1920-ல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிவைத்தார். பட்டங்களைத் துறத்தல், சட்டசபைகளையும் கல்லூரிகளையும் விலக்கல், அந்நியநாட்டுத் துணிகளைத் தவிர்த்துக் கதர் அணிதல், தீண்டாமை ஒழித்தல் ஆகியவை ஒத்துழையாமை இயக்கத்தின் முதன்மை

1. Internment.

வாய்ந்த கொள்கைகளாக இருந்தன. எப்போதும் முன் நிற்கும் தமிழ்மக்கள் அந்த இயக்கத்திலும் முன்னணியில் நின்றனர். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் போன்றூர் அதுசமயம் வழக்கறிஞர் தொழிலைவிட்டுச் சிறைபுகுந்தது பிறருக்கு நல்லதோர் எடுத்துக்காட்டா யமைந்தது.

1930-ல் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போரிலும் தமிழகம் எல்லோருக்கும் முதன்மையாக இருந்தது. வடநாட்டில் காந்தியடிகளின் தலைமையில் தண்டியில் உப்பளமுற்றுகை நடந்தபோது தமிழகத்தில் இராச கோபாலாச்சாரியார் தலைமையில் வேதாரண்யத்தில் உப்பள முற்றுகை நடைபெற்றது. கத்தியின்றி இரத்த மின்றி வந்த இந்தப் போரில் சத்தியத்தின் நித்தியத்தை நம்புவோர் அனைவரும் சளைக்காமல் சேர்ந்தனர். போரின் முடிவில் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். தேசிய மாசபையினருக்கு இது திகைப்பை யளிக்கவில்லை. அவர் கள் தங்கள் போரை ஒரு புது முகாமிலிருந்து நடத்துவா ராயினர். கள்ளுக்கடை மறியல், வரிகொடாமை, அந்நியத் துணியைக் கொளுத்தல் ஆகியவற்றிற்கு அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இந்த ஒத்துழையாமைப் போரில் உயிர்ப் பலியாகி தமிழனின் வீரத்திற்கு விளக்கமாயமைந்தவன் **திருப்பூர்க் குமரன்**. கையிலிருக்கும் மூவண்ணக் கொடியைத் தருகிறாயா அல்லது உயிரை விடுகிறாயா என்று ஏவலாளர் கேட்டபோது கொடியைக் கொடுக்க மறுத்துத் தன் உயிரை ஈந்தான் அந்த உத்தமன்.

1942-ல் ஆகஸ்டுப் புரட்சி எனப்படும் சுதந்தரப் போரின் இறுதிக்கட்டத்தில் தமிழகம் தனியானதோர் வீரத்தின் விளைநிலமாயிற்று. இராமநாதபுரம் தேவ கோட்டைப் பகுதிகளிலே இராணுவத்தார் இழைத்த அநீதியைப் பேச வாய்கூசும். இரத்த வெள்ளமும் கண்ணீர் வெள்ளமும் கலந்தோடிய அந்தக் காட்சி....! அம்மம்மா! கொடுமை! கொடுமை!

நாம் கண்ட இவர்களைத் தவிர விடுதலைப்போரில் தமிழகத்தின் சார்பில் நின்று போரிட்ட வீரர்களும் வீராங்கனைகளும் அநேகர் உண்டு. அவர்களுள் சாத்தூர்ச் சுப்பிரமணிய நயினூர், பத்மாசினி அம்மாள், தோழர் சிங்காரவேலுச் செட்டியார், வ. வெ. சு. ஐயர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, சத்தியமூர்த்தி ஐயர், சீனிவாச ஐயங்கார், தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் ஆகியோரின் அரும்பணியை நாம் மறக்கவே முடியாது.

ஆயிரமாயிரம் வீரரைத் தந்தோம். ஆற்றுவெள்ளம் போல இரத்தத்தை ஈந்தோம். சொல்லரிய கொடுமைகள் பொறுத்தோம். இவ்வளவும் எதற்காக? 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளுக்காக. வெறியாட்டம் நடத்திய வெள்ளையர் அன்று வெளியேறினர். போராட்டம் நடத்திய நாம் புதுவாழ்வு பெற்றோம். அன்றே நாம் ஆனந்த சுதந்தரத்தை அடைந்தோம்.

தமிழ் வாழ்க

கழக வெளியீடு: கூ௪௫

3.50

பதிப்பாளர்:

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:

24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

அப்பர் அச்சகம், சென்னை-1.